

திருவள்ளுவர் அருளிய

# திருக்குறள்

நுண்ணுரை

முனைவர் தமிழண்ணல்



# திருவள்ளுவர் அருளிய திருக்குறள்

நுண்பொருளுரை

**தமிழண்ணல்**

சுருக்கமாகவே எழுதப் பெறும் சூழலில் முழுமையாகத்
தெளிவுபட விளங்கவேண்டுமென்று விரிவுபடுத்தி,
அனைவருக்கும் பயன்படும் வகையில் எழுதப்பெற்ற
திருக்குறள் தெளிவுரை விளக்கம்.

**அன்னை முத்தமிழ்ப் பதிப்பகம்**
சென்னை - 19.




நூலின் பெயர் : திருவள்ளுவர் அருளிய திருக்குறள்

உரையாசிரியர் : தமிழண்ணல்

உரிமை : உரையாசிரியர் மக்களுக்கு

நூலின் தன்மை : அறநூல்

அன்னை முத்தமிழ்ப் பதிப்பகத்தின் முதற்பதிப்பு : நவம்பர் 2009

தாளின் தன்மை : வெள்ளைத்தாள்

நூலின் அளவு : டெமி 1/8

அச்சு எழுத்து : 11 புள்ளி

மொத்தப் பக்கங்கள் : 400

நூல் கட்டுமானம் : சாதாரணம்

ஒளி அச்சு : பிரிட்டோ கிராபிக்ஸ், தரமணி

அச்சிடல் : பிரிண்டெக் இந்தியா, சென்னை - 5

வெளியீடு : அன்னை முத்தமிழ்ப் பதிப்பகம்,
28/21, டாக்டர் கலைஞர் நகர்
4ஆம் தெரு, திருவொற்றியூர்,
சென்னை - 600 019.

மக்கள் பதிப்பு: விலை : ரூ.150

விற்பனை உரிமை: விழிகள் பதிப்பகம், சென்னை - 41.

## Albert Schweitzer

### Indian thought and its development

That the idea of active love did arise in the popular ethics of India in fairly ancient times we know from many stories we meet in her literature and especially through the ethical maxims found in the Kural, a work which probably belongs to the 2nd century A.D.

The Kural is a collection of 1330 maxims in distich form, attributed to the weaver Tiruvalluvar. In the matter of authorship it is probable that not all the maxims are Tiruvalluvar's own, but that he also versified some which were ancient possessions of the people.

Kural means short strophe. Tiruvalluvar is really not a name, but a title borne by the religious teachers who work among the lower castes in the south of India.

What a difference between the Kural and the Laws of Manu, which originated some four centuries before it! In the latter, under the dominance of the Brahmanic spirit, world and life affirmation is still just tolerated alongside world and life negation. In the Kural world and life negation is only like a distant cloud in the sky. In 250 maxims-they form the concluding part of the work - earthly love is lauded.

In the ethics of the Kural, as in those of the Laws of Manu, the idea of reward has a place. The way of virtue is recommended because it leads to a better reincarnation or to liberation from re-birth. Along-side of this is found also

the naive view which is so conspicuous in Chinese eithics that moral behaviour results in earthly welfare and immoral in misfortune. Nevertheless, ethics in the Kural are not so entirely dominated by the idea of reward as in Brahmanism, Buddhism and the Bhagavad-Gita. We already find here the knowledge that good must be done for its own sake. It shines out from various maxims.

According to the Kural, duty is not confined, as in the Bhagavad-Gita, to what the caste calling involves, but consists in general in "all that is good."

Maxims about joy in activity, such as one would not expect from Indian lips, bear witness to the strength of the world and life affirmation present in the Kural.

With sure strokes the Kural draws the ideal of simple ethical humanity. On the most varied questions concerning the conduct of man to himself and to the world its utterances are characterised by nobility and good sense. There hardly exists in the literature of the world a collection of maxims in which we find so much lofty wisdom.

So a natural and ethical world and life affirmation of this kind was present among the people of India at the beginning of our era, although nothing of it can be found in Brahmanism, Buddhism and Bhagavad-Gita Hinduism. It gradually penetrates into Hindu thought through the great religious teachers who had sprung from the lower castes and lived among and felt with the people.

## வான்புகழ் வள்ளுவர்

### தேசத்தந்தை காந்தியடிகள்

திருவள்ளுவர் ஒரு தமிழ் முனிவர். கிறித்தவ நூற்றாண்டு வரிசையில் முதல் நூற்றாண்டில் அவர் வாழ்ந்ததாகக் கூறுவர். புனிதமான பொய்யாமொழிகளைக் கொண்ட திருக்குறளை, அவர் நமக்கு வழங்கியுள்ளார். தங்களுடைய வேதமாகத் தமிழர்கள் இந்நூலைப் போற்றுகின்றனர்.

### ருஷியப் பேரறிஞர் தால்ஸ்தாய்

கி.பி. 1906இல், தால்ஸ்தாய் 'இந்து ஒருவருக்கு எழுதப்படும் கடிதம்' என்பதை எழுதியுள்ளார். அதில் 'இந்துக்களின் குறள்' (The Hindu Kural) காட்டும் வாழ்க்கை நெறியை விளக்கியுள்ளார். அதில், பெரிதும் தம்முடைய உள்ளத்தைக் கவர்ந்த திருக்குறட்பாக்கள் சிலவற்றை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அவை 'இன்னா செய்யாமை' (அதி. 32) எனும் அதிகாரத்திலுள்ள ஆறு குறட்பாக்கள் ஆகும்.

**க.த. திருநாவுக்கரசு**
(சான்றோர் கண்ட திருவள்ளுவர்)

### Rev. G.U. Pope
### Sacred Kural Translation

"...Yet, all things changing, dieth not thy fame
for thou art bard of Universal man."

## திருவள்ளுவமாலை

கடுகைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். - *இடைக்காடர்*

அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். - *ஔவையார்*

மணற்கிளைக்க நீர்ஊறும்; மைந்தர்கள் வாய்வைத்து
உணச் சுரக்கும் தாய்முலை ஒண்பால் - பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்கு
ஆய்தொறும் ஊறும் அறிவு. - *உருத்திரசன்ம கண்ணர்*

எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் - சொல்லால்
பரந்தபா வால்என் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை. - *மதுரைத் தமிழ்நாகனார்*

அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து;
உருவல் அரண் இரண்டு;ஒன்று ஒண்கூழ்; - இருஇயல்
திண்படை; நட்புப் பதினேழ்; குடிபதின்மூன்று
எண்பொருள் ஏழாம் இவை. - *போக்கியார்*

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் - மனைஅளகு
வள்ளைக்கு உறங்கும் வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி. - *கபிலர்*

என்றும் புலராது, யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க் - குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர் போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.
- *இறையனார்*

சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவன்.

*- கல்லாடனார்*

வள்ளுவர் செய் திருக்குறளை
மறுவற நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுஆதி
ஒரு குலத்துக்கு ஒருநீதி.

*- மனோன்மணீயம்*
*பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை*

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.

திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகு கருதியும்.

*- தேசியக் கவிஞர்*
*சி. சுப்பிரமணிய பாரதியார்*

வள்ளுவர் தந்த திருமறையைத் - தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே - என்றும்
உத்தமராகி ஒழுகுவமே.

*- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை*

வானுக்குச் செங்கதிர் ஒன்று - புனல்
வண்மைக்குக் காவிரி ஒன்றுண்டு - நல்ல
மானத்தைக் காத்து வாழ - என்றுமிந்த
வையத்துக்கு ஒன்று திருக்குறள்!

*- புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்*

## ஒளி பிலிற்றும் உரை...

பெருந்தமிழறிஞர்
பேராசிரியர் முனைவர் தமிழண்ணல்
அவர்களின்
தண்ணார் தமிழில் திருக்குறளுக்கு
நுண்பொருள் உரை ஒன்று கிடைத்துள்ளது.

கற்றும் கற்பித்தும் வாழ்நாள் தவமாய்த்
திருவள்ளுவரில் திளைத்துக் களித்த
அவர் உள்ளம், எளிமையும் இனிமையும்
பழுத்துக் கனிந்த நடையில், வள்ளுவ
மெய்ம்மைகளை வழங்கும் அழகு
ஒவ்வொரு பக்கத்திலும் - இந்நூலுள்
ஒளி பிலிற்றுகிறது.

மெய்ப்பொருள் தேடித் திருவள்ளுவத்துள்
புறப்பட்டுப் போகிறவர்களுக்கு - உற்றுழி
உதவியும் 'உறு பொருள்' கொடுத்தும்
என் போற்றுதலுக்குரிய அண்ணன்
பேராசிரியர் தமிழண்ணல்
அரும்பணி புரிந்துள்ளார்.

அன்னை முத்தமிழ்ப் பதிப்பகம் இந்நூலை
அக்கறையோடும் ஆசையோடும்
வெளியிட்டுள்ளது.
பதிப்பக வளர்ச்சிக்குப் படிக்கட்டுகள்
போட்டுக் கொண்டிருக்கும்
திரு தி. வேணுகோபாலின்
வெல்லும் முயற்சிகளுக்கு இந்த நூல்
அர்த்த அடர்த்திமிக்க அடையாளம் என்பேன்.

8.12.2009

**தமிழன்பன்**

## நடுநிலை போற்றும்
## விரிவுரைப் பதிப்பு

பேராசிரியர் மு. வரதராசனார் என் வாழ்க்கை வெற்றிக்கு வழிவகுத்தவர். என்னைக் கண்டுகொண்டு, போற்றிப் புறந்தந்த தனியொரு பெருமகனார். அவர் முதன் முதல் சுருக்கமான 'திருக்குறள் தெளிவுரை' எழுதி, திருக்குறள் பதிப்பில் ஒரு வரலாறு படைத்தார். அதன்பின் சுருக்கவுரைப் பதிப்புக்கள் நூற்றுக்கணக்கில் வெளிவந்துள. இது ஒரு 'விரிவுரைப் பதிப்பு'.

இந்நுண்பொருளுரை, எல்லோர்க்கும் எல்லாக் குறளும் நன்றாக விளங்க வேண்டும் - வள்ளுவர் உள்ளம் புலனாக வேண்டும் - குறள் வாழ்வு நூலாக வேண்டும் - தமிழனை அடையாளம் காட்டும் நூலென்பது தெளிவுபட வேண்டும் - இந்தியத் தேசிய நூலாகும் தகுதி உடையதென்பது உணர்த்தப் படவேண்டும். இவற்றைக் கருதி விரிவான தெளிவுரைப் பதிப்பாக எழுதப்பெற்றது. நயம் காணும் போக்கிலும் நம் காலக் கருத்தை ஏற்றிப் பார்க்கும் நோக்கிலும் இவ்வுரை எழுதப்படவில்லை.

இதனை அழகுற வெளியிடும் அன்னை முத்தமிழ்ப் பதிப்பகத்தார்க்கு என் வாழ்த்துக்கள். இதற்குத் தூண்டுகோலாக அமைந்த என் இனிய இளவல், பேராசிரியர் ஈரோடு தமிழன்பனுக்கு என் மனம் நிறைந்த நன்றி.

தமிழண்ணல்

'ஏரகம்'
சதாசிவ நகர்
வண்டியூர்ச் சாலை
மதுரை - 625 020

## பதிப்புரை

நூற்றுக்கணக்கான பதிப்பகங்கள், ஆயிரக்கணக்கான அளவில் திருக்குறள் மூலத்தையும், உரையையும் வெளியிட்டிருக்கிறார்கள்; பல்லாயிரவர் அவரவர் கோணத்தில் உரை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். எவர்க்கும் எக்காலத்துக்கும் பொருந்தும் கருத்துச் சுரங்கத்தைப் பெற்ற நூல் திருக்குறள் மட்டுமே. ஆட்சியாளர் மாறினாலும் அரசு கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைத் தெளிவுபடக் கூறியுள்ளது திருக்குறள்.

வருமுன்னர்க் காக்கும் 'நன்னெறி'களையும், அனைத்துத் தரப்பினருக்குமான குடும்ப வாழ்க்கை முறை, மனித வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கமுறை போன்ற அறிவுரைகளையும் புகட்டும் 'நன்னூல்' - தமிழர்களின் 'வேத நூல்' திருக்குறள்தான். குறள் ஒரு வாழ்வியல் நூல்.

இல்வாழ்க்கையையும் - துறவு வாழ்க்கையையும்; நட்பையும் - தீ நட்பையும்; நிலையாமையையும் - நீத்தார் பெருமையையும்; பண்புடைமையையும் - பயனில சொல்லாமையையும்; காதற் சிறப்பையும் - கனவு நிலையையும்; ஒற்றாடலையும் - ஒப்புரவையும்; கல்லாமையையும் - கள்ளுண்ணாமையையும் எனத் தொடரும் எல்லா அதிகாரங்களையும், விரிவான கண்ணோட்டத்தில் 'வள்ளுவ வழி' மாறாமல் 'நுண்ணுரை'யால் நிறைவு செய்திருக்கிறார் முனைவர் தமிழண்ணல் அவர்கள்; இந்நூலை எங்கள் பதிப்பகம் வெளியிடுவதற்கு மனமுவந்து கொடுத்துதவிய அறிஞர், முனைவர் தமிழண்ணல் அவர்களுக்குப் பதிப்பகம் சார்பில் நன்றி பாராட்டுகிறோம்; இந்நூல் வெளிவருவதற்குத் துணை புரிந்தும், வாழ்த்துரை வழங்கியும் பெருமைப்படுத்திய - 'வணக்கம் வள்ளுவ' என்ற அரிய நூலைப் படைத்து, 'சாகித்திய அகாதெமி விருது' பெற்ற கவிஞர் தமிழன்பன் அவர்களுக்கும் நன்றி பாராட்டுகிறோம்.

**தி. வேணுகோபால்**

## திருக்குறள் கற்கும் நெறிமுறைகள்

உலகிற்குத் தமிழனின் கொடை திருக்குறள். உலக மானுட வாழ்வுக்கு நெறிமுறை வகுத்த மாமறை அது. இந்தியத் தேசிய நூலாகும் தகுதியுடைய நூல் திருக்குறள் ஒன்றேயாகும். முதலில் அது தமிழ்ப் பண்பாட்டின் பிழிவு என்பதையும், தமிழர்தம் பண்பாடு உலகளாவிய பொது நோக்குடையதென்பதையும், அதனாலேயே அது உலகப் பொதுமறையாகும தகுதியும் பெற்றுளதென்பதையும் நாம் அறிதல் வேண்டும்.

திருக்குறள் தமிழனின் அடையாளம் காட்டும் நூல் என்பதைத் தமிழராகிய அனைவரும் ஒப்புதல் வேண்டும். நாம் எக்குலம், சமயம், நாடு சார்ந்து வாழ்பவராயினும், திருக்குறள் நம் பொதுமறை என ஏற்றலும் குறள்நெறி வாழ்வைப் பேணுதலும் வேண்டும். திருக்குறளை நம் நீதிமன்ற உறுதிமொழி நூலாக - பிரமாண நூலாக ஏற்றல் வேண்டும். அதற்கு முன்னோடியாக, நம் நிகழ்வுகள், சடங்குகள், கூட்டங்களில் திருக்குறளை வைத்து, உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் பழக்கம் தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் பரவ வேண்டும்.

திருக்குறள் மூலத்தை முக்கிய நாட்களில், வழிபாட்டு நேரங்களில், காலை மாலையில், குழந்தைப் பருவம் முதல் முதுமை முடிய ஓதும் பழக்கம் வேண்டும். திருக்குறள் முற்றோதுதல், திருமறை முற்றோதுதல், திவ்வியப் பிரபந்தம் முற்றோதுதல் மூன்றும் அடிக்கடி கூட்டு வழிபாடாக நடத்த வேண்டும்.

நயம் காணும் முயற்சியில் இறங்குதல் தவறன்று. ஆர்வ மிகுதியால் நம் கருத்தைத் திருக்குறளில் ஏற்றிப் பார்க்கும் போக்கு தவறாகும். புதுமையுடன் உரை எழுதி, படிப்பவரை வியக்க வைக்க வேண்டுமென்று, இல்லாதவற்றையும் வள்ளுவத்தில் ஏற்றிப் பார்க்கும் கற்பனை முயற்சியிலும் ஈடுபடலாகாது.

'திருக்குறள் மூலம்' முதலில் அனைவருக்கும் நன்கு விளங்க வேண்டும். மாணவர்கள் பாடநூல்போலப் படிக்க இடம் தரவேண்டும். மக்கள் குறளில் என்னதான் சொல்லியிருக்கிறதென்பதை, முற்றும் உணருமாறு விளக்கங்கள் அமைய வேண்டும். அதற்காக விரித்தெழுதி, ஆய்வுரை போலாகி, ஓரளவு படிக்க ஆசைப்படுவாரையும், அயர்ச்சியடைய வைக்கவும் கூடாது.

'சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல்' என்ற உத்தி பயன்படுத்தப்பட வேண்டும்.

## திருக்குறளின் உள்ளார்ந்த கருத்து:

**எடுத்துப் படிப்பவர் எவர்க்கும் விளங்கிவிட வேண்டும். வள்ளுவர் உள்ளம் - உட்கிடை - உள்ளொளி யாதெனத் தெள்ளத் தெளிவுற வேண்டும்.**

இவையே ஒரு நுண்பொருளுரையின் குறிக்கோளாகும்.

திருக்குறளில் முழுமைப் பார்வை தேவை. அதாவது ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளையும், முழுவதும் பயில்வார்க்கே, தனி ஒரு குறளின் உண்மைப் பொருள் விளங்கும். இதற்குக் குறள் மூலங்களையே திரும்பத் திரும்பப் படிக்கவேண்டும். மூலத்தை இவ்வாறு படித்துணர நுண்பொருளுரைகளை, ஒரு கைவிளக்காக மட்டுமே பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

குறளுக்குள்ளேயே குறளுக்கு உரை தேட வேண்டும். இயலுமானால், குறள்கள் வழியாகவே குறள் உரை விளக்கம் அமைய வேண்டும். 'ஒழுக்கத்து நீத்தார்' *(21)* என்பதற்கு உரை, 'பொய்தீர் ஒழுக்க நெறி' *(6)* என்பதில்தான் உளது. நூல் முழுவதும் இவ்வாறு தேடலாம். பொய்தீர் ஒழுக்கநெறி நின்று நீத்தாரென்பதே பொருந்தும் உரை. 'தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கம்' எனப் பரிமேலழகரும் பிறரும் எழுதி இருப்பன பொருந்தா உரைகளாகும்.

சங்க இலக்கியப் பின்னணியில் எழுந்தது குறள். தொல்காப்பியம், சங்க இலக்கியம், இரட்டைக் காப்பியம் (சிலப்பதிகாரம், மணிமேகலை) ஆகியவை, திருக்குறளை விளங்கிக் கொள்ள உதவுமிடங்கள் பலவுள. 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று' *(236)* என்ற குறளுக்கு விளக்கம்பெற, புறநானூற்று ஔவையின் பாடல் ஒன்று உதவுகிறது.

**... இல்இறைச் செரீஇய ஞெலிகோல் போல**
**தோன்றாது இருக்கவும் வல்லன்; மற்றதன்**
**கான்றுபடு கனைஎரி போலத்**
**தோன்றவும் வல்லன்,தான் தோன்றுங் காலே. *(315)***

வீட்டு இறப்பிலே செருகிய தீக்கடைக்கோல் போல அமைதியாய் இருக்கும் இயல்பும் அதியமானிடம் உண்டு. கடைந்ததும் அது பற்றி எரிவது போலப் போரில் இறங்கிவிட்டால் விளங்கித்தோன்றும் வீரமும் அவனிடம் உண்டு. எதிலும் எங்கும் தோன்றுங்கால், விளங்கிப் புகழுடன் தோன்றவேண்டும் என்பதே இதன் பொருள் என்பது இதனால் விளங்கும். முன்னைய உரையாசிரியர்கள், 'பிறந்தால் புகழோடு பிறக்க வேண்டும்; இன்றேல் விலங்காகப் பிறந்திருக்கலாம்' என எழுதுவன பொருந்தா.

தொல்காப்பியம் முதலாய பழந்தமிழ் நூல்கள் உணர்த்தும் சமுதாயப் பின்புலமும், குறளுக்கு உரைகாணத் துணை செய்யும். 'தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழுது எழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' (55) என்பதற்கு உரைகாணச் சங்கப் பாடல்கள் உணர்த்தும் சமுதாயப் பின்புலம் பற்றிய அறிவே உறுதுணையாகும். 'ஒள்ளிழை மகளிர் உயர் பிறை தொழூஉம், புல்லென் மாலை' (239) என்பது அகநானூறு. கன்னிப் பெண்கள் நல்ல கணவன் வாய்க்க, பிறை தொழுதல், ஒரு சடங்காக நடந்த காலம் அது. 'பிறை தொழுக என்றல்' என்பது ஓர் அகத்துறை. தோழி அவ்வாறு சொல்லியும், தலைவி மற்ற பெண்களுடன் சேர்ந்து பிறை தொழாது நின்றால், அவள் யாரையோ மனத்தினுள் வரித்துவிட்டாள் என்பது பொருள். இவ்வாறு தோழி, தலைவியின் களவொழுக்க இரகசியத்தைக் கண்டுகொள்வாள். எனவே 'தெய்வம் தொழாது, கணவனைத் தொழுதெழுவாள்' என்பது பிறை தொழாது, திருமணம் செய்துகொண்டு, மங்கல மடந்தையாய் வாழ்பவள் என்றே பொருள்படும். 'பெய்யெனப் பெய்யும் மழை' என்பதற்கும், விளக்கம் பெறக் கலித்தொகை உதவுகிறது. 'அருமழை தரல் வேண்டின், தருகிற்கும் பெருமையளே' (39) 'கில்' ஆற்றலை உணர்த்தும் இடைச் சொல் என்பது இலக்கணம். மழையைப் பெய்விக்க வேண்டுமென்றால், அவ்வாறு தரவும் வல்லவள் என்பது குறிப்பு. 'இவன் ஊரையே விற்றுவிடுவான்; மணலைக் கயிறாகத் திரிப்பான்' என்பன போலும் உலக வழக்குகள். அவ்வாறு செய்துவிடுவர் என்பதை நேரே உணர்த்துவன அல்ல. எல்லாத் திறமையும் ஆற்றலும் உள்ளவர் என்பது கருத்து. 'மழையையும் பெய்விக்கக்கூடிய அவ்வளவு சிறந்த ஆற்றலைக் கற்புவாழ்வு தரும்' என்பதே குறிப்பு. இவைபோல, திருக்குறள் உரைகாண, அன்றைய சமுதாயச் சூழல், வாழ்க்கை நடைமுறைகளையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

அக்காலச் சமயப் பின்னணி பற்றியும் முழுவதும் தெரிந்திருந்தாலன்றிப் பொருள்காணலில் தடுமாற்றம் ஏற்படும்.

அன்று வைதிகம், சமணம், பௌத்தம் மூன்றும் நன்கு பரவி, ஒன்றுடன் ஒன்று பகைத்து, சமயப் பூசல்களால் ஒன்று ஓங்கிய காலத்தில் மற்றவை தாழ்ந்து இவ்வாறு ஊசலாடிய காலம் அது. திருவள்ளுவர் இம்மூன்றனையும் நன்கு அறிந்த நிலையில், தமது நூலைப் படைத்ததால்தான், தமது கோட்பாடுகளை ஒரு நிறுவனச் சமயமாக்காது, பொதுமை போற்றிக் கூறிச் சென்றார். அவர் மட்டும், தாமும் ஒரு நிறுவனச் சமயத்தைத் தோற்றுவித்திருந்தால், இன்று நாடெங்கும் 'வள்ளுவ மடங்கள்' தோன்றி, வளர்ந்திருக்கும். கல்லாடர் "சமயக் கணக்கர் மதிவழிகூறாது, உலகியல் கூறி, பொருள் இது என்ற வள்ளுவன்" எனக் கூறி இருப்பது முற்றிலும் பொருந்தும்.

சமண, புத்த சமயங்கள் வேள்விகளை மறுத்தன. அவைபோல உயிர்க்கொலை செய்யும் யாகங்கள், வேள்விகளை இவரும்

மறுக்கின்றார். பிறப்பால் சாதி என்பதை மறுத்து, ஒழுக்கமே குலம், குடிக்கு அளவுகோல் என அறுதியிடுகிறார். புத்த, சமண சமயங்கள் கடுந்துறவைப் போதித்தன. எனினும் நாட்டில், போலித்துறவே, இன்று போல் அன்றும் பரவிக் கிடந்ததால், இல்லறம் ஒன்றே அறமாகுமென்றும் துறவும் பிறரால் பழிக்கப்படாத நிலையில் ஏற்கப்படலாம் என்றும் கூறுகிறார். போலித்துறவு, தவம் போன்றவற்றை மிகவும் கடிந்து கூறுகின்றார். இத்தகைய, அவரது காலத்துப் பின்னணியை வைத்தே, குறளுக்கு உரைகாண வேண்டும். 'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை' *(41)* என்ற குறள், அன்றைய வைதிகப் பின்னணியில் எழுந்தது. பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்ற நான்கு நிலைகள் அன்று விரிவாகப் பேசப்பட்டன. இல்லறம் பெருமைப்படுத்தப்படவில்லை. வாழ்க்கையில் 'வெறுப்பு நோக்கையே' சமயங்கள் போதித்தன. திருவள்ளுவர் அதை மாற்றி, இயல்பாக உண்மையாகத் தத்தம் நிலையில் வாழும் ஏனைய மூவர்க்கும் இல்லறத்தானே துணை எனக் கூறி, இல்லறத்தானுக்கு ஏற்றம் தருகிறார். இவ்வாறு அன்றைய சமயப் பின்புலத்தை அறிந்து, பொருள் காண்பதே நெறியும் முறையுமாகும்.

திருவள்ளுவர் ஒன்றே முக்கால் அடியில், சுருங்கக் கூற எடுத்துக் கொண்டதால், அதற்கெனப் பல உத்திகளைக் கையாள வேண்டியிருந்தது. சொல், தொடர், குறிப்புப் பொருள் எனப் பலவற்றில், நுட்பமான உத்திகளைக் கையாள்கிறார். இன்று ஒரு மிகப்பெரிய ஆய்வுநூலாக விரிக்கக் கூடியன அதிலுள. 'வரைவின் மகளிர்' அதிகாரத்தில் 'பரத்தையர்' எனக் குலப்பெயரைக் குறிக்கவே இல்லை. இன்று 'பாலியல் தொழிலினர்' என, வேறு விதமாகக் குறிப்பதுபோல், அவர் திருமணமாகாத மகளிர் என ஆள்வது மிகுந்த தொலைநோக்குடைய சிந்தனையாகும்.

சிலவற்றை வரையறை விதிகளாகத் தருகிறார். அதனை ஒரு வாய்பாடாகக் கொண்டு, எதனுடனும் பொருத்திப் பார்க்கலாம். 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்' *(517)* என்பது, எச்சூழலுக்கும் பொருத்திப் பார்க்கக்கூடியதல்லவா? இதுபோல இன்னும் நுட்பமாய்க் கூறுமிடங்கள் பல உள. அவற்றைத் தேடிக் காண்பதே திருக்குறட் கல்வியாகும்.

சில குறள்கள் அதிகாரப் பொருளுடன் பொதுப் பொருளும் தருகின்றன. ஒரு அதிகாரத்திற்கு 10 குறள் என்னும்போது அவ்வவ்வதிகாரத்திற்கு அவை அவை உரியன என்பது மறுக்கவியலாது. வைப்பு முறை மாறினும் குறள் அதற்குரியதேயாம். 'குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்ககொளல்' *(504)* என்ற குறள் தெரிந்து தெளிதலில் வருகிறது. ஒருவரை வேலைக்கு

அமர்த்தும் பொழுது இவ்வாறு குணம் நாடி குற்றமும் நாட வேண்டும் என்பது முதற் கருத்து. ஒரு நூலைத் திறனாயும்போதுகூட நாம் குணம் நாடிக் குற்றமும் நாட வேண்டுமென உரை காண்பன துணைப் பொருள்களே. அதிகாரத்தை நினைவிற் கொள்ளாது பொருள்கூற முற்படுதல் அத்துணைச் சிறப்புடையதாகாது.

திருக்குறள் மனிதன் எவ்வகையிலேனும் உலக வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்பதற்கே எழுதப்பட்டதாகும். இன்று மேனாட்டார் தன் முயற்சி, தன்னம்பிக்கை, தன்முன்னேற்றம் என்ற கருத்தில் எழுதும் நூல்கள் மிகப்பல. அவை தமிழிலும் மொழியாக்கம் பெற்று வருகின்றன. முன்னரே பலர் எழுதியிருந்தாலும் தமிழில் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி இதன் வழி பல நூல்களை எழுதி மக்களிடையே ஓர் எழுச்சியை ஏற்படுத்த முயல்கிறார். உலகில் முதன்முதலாகத் தன் முன்னேற்ற நூல் எழுதிய பெருமை திருவள்ளுவரையே சேரும். இந் நோக்கிலும் பொருள் காண வேண்டும். 'தன்னைத்தான் காதலனாயின்' (209); 'தன்னைத்தான் காக்கின்' (305); 'வகை அறிந்து, தற்செய்து, தற்காப்ப' (878) என்றிவ்வாறு வரும் நூற்றுக்கணக்கான குறள்கள் தன்னம்பிக்கை ஊட்டுவன; தன் முன்னேற்றத்திற்கு வழி காட்டுவன.

திருவள்ளுவர் 'தேடல்' உத்திக்கு வழிவகுத்துத் தம் நூலை யாத்துள்ளார். 'நவில் தொறும் நூல் நயம்' காணுமாறு குறள் எழுதப்பட்டுளது. அதனால் ஆயிரக்கணக்கானவர் உரை எழுதியும், பொழிவாற்றியும் ஆராய்ந்தும் குறள் நுண் பொருளைத் தேடுகின்றனர். 'குறுகத் தறித்த குறளாக' இருப்பதால், இது தேவைப்படுகிறது. இவை அனைத்தும், வள்ளுவர் உள்ளத்தைக் கண்டு மகிழவே முனைகின்றன. அதனால் திருக்குறளும் நிலைபேறடைகிறது.

வள்ளுவப் பெருமகன் 'இயைபு' உத்தியைப் பயன்படுத்துகிறார். ஒரு குறளோடு இயைபுபடுத்திப் பார்க்குமாறு, பிறிதொரு குறளைப் பிறிதோரிடத்தில் வைத்துள்ளார். 'செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர் செயற்கரிய செய்கலாதார்' (26) என்ற குறள் பெரியவர் பற்றிப் பேசுகிறது. 'பெருமை' அதிகாரத்தில், 'பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல்' (975) என வரும் குறளுடன், முன்சுட்டிய குறள் இயைபுடையதாகிறது. இக் குறள் முன்னைய குறளுக்கு உரைபோலவும் உளது. இத்தகைய, இயைபுபடுத்தி நோக்க வேண்டிய குறள்கள் பலவுள.

நடையை வைத்தும் உத்திகளை வைத்தும், திருக்குறளுக்கு உரை தேட வேண்டுமென மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் சுட்டிக் காட்டியுள்ளார். 'அறத்தாறு இதுவென வேண்டா, சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை' (37) என்ற குறளில், 'இதை அறநெறி என்று காட்ட வேண்டாம்' என்பதே பொருளாகும். இதை நிறுவ, 'மழித்தலும் நீட்டலும் வேண்டா' (280) 'அஞ்சாமை அல்லால்

துணைவேண்டா' (497) என வரும், இதே நடையுடைய பல குறள்களும் வேண்டாம் என்றே பொருள்படுதலை மூதறிஞர் எடுத்துக் காட்டுகின்றார்.

மேலைச் சிவபுரி இராம. முத்தப்பன் தம் தந்தையார் கூறியதாக ஒரு குறளுக்கு வாழ்க்கையொடு பொருந்திய உரை ஒன்றைக் கூறினார். அக்குறள், 'குற்றம் இலனாய், குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் உலகு' (1025) என்பதாகும். நம் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடி ஓர் ஊருக்குப் போகிறோம். "அந்தப் பையனா, அவனுடைய அப்பா ஒரு கொலைமட்டும் செய்தவர், இப்போது விடுதலையாகி வந்துவிட்டார். பையன் ஒவ்வொருக்கால் குடிப்பான். மற்றபடி ஒரு குற்றமும் இல்லை" என்று ஊரார் சொன்னால், அந்தப் பையனுக்கு நம் பொண்ணைக் கொடுப்போமா? சம்பந்தம் வைத்துக்கொள்வோமா? 'சுற்றமாச் சுற்ற' நம் மனம் ஒப்புமா? குற்றமில்லாத குடிவழியா, பையனா என்றுதானே தேடுவோம்.

வேறு ஓர் ஊருக்குப் போகிறோம். "பையனுக்கு அப்பா இல்லை. இரண்டு தங்கைகள். அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்துவைக்கவே இத்தனை நாளாய்ப் பாடுபட்டான். இப்போது, அவர்கள் இருவருக்கும் திருமணம் முடித்துவிட்டதால், இவனுக்குப் பெண் பார்க்கிறார்கள்" என்று ஊரார் சொன்னால், பொறுப்பு மிக்க, கடமையுணர்வுடைய அவனுக்கு நம் பெண்ணைத் தர நாம் மனம் ஒப்புவோம். அக் குடும்பத்தில் சம்பந்தம்-உறவு வைத்துக் கொள்வோம். அதுதான் 'சுற்றமாச் சுற்றுதல்' ஆகும். இங்ஙனம் அன்றாட வாழ்வொடும், வரலாற்று நிகழ்ச்சிகளொடும், கதைகளொடும், சிறுசிறு பொருத்தமான உலக நிகழ்ச்சிகளொடும் பொருத்தி உரைவிளக்கம் காண்பதால் குழந்தைகள், பள்ளி மாணவர்களைத் திருக்குறட் செயலூக்கிகளாக்க இயலும்.

நூலை முழுமையாக உணர்வோருக்கே, அந்நூலுள் 'மணியில் திகழ்தரும் நூல்போல்' (1273) உள்ளோட்டமாக ஓடும் கருத்து நீரோட்டம் புலப்படும். "இந்தியச் சமயங்கள், தத்துவங்கள், அனைத்தும் உலக வாழ்க்கையை வெறுப்பு நோக்குடன் அணுகவே பெரிதும் முயல்கின்றன. திருக்குறள் ஒன்றே உலக வாழ்க்கையை முழுவதும் விருப்பு நோக்கோடு அணுகச் செய்கின்றது." திருக்குறளில் வானமிழ்தம் (தேவாமிர்தம்) இந்திரன், தாமரைக் கண்ணான் உலகு, அளறு போலும் புராண மரபுக் கூறுகளாம் தொன்மங்கள் மிகக் குறைவாக ஆங்காங்கு இடம் பெறுகின்றன. ஆனால், "தூரத்து மேகங்கள் போல் காணப்படும் அவை இவ்வுலக வாழ்வு பற்றிய நெறிகளை வலியுறுத்த உதவியாக வருகின்றனவே தவிர, அவை பற்றிய கற்பனைகளை விளக்கவோ, விரிக்கவோ முனையவில்லை." நாமும் குறள் முழுதும் ஓடும் பொது நீரோட்டமனைய கொள்கைகளைக் கண்டு கொண்டுதான் குறள்களுக்கு விளக்கம் காணவேண்டும். திருவள்ளுவர் மேலுலகம் பற்றி

அக்கறைப்படவில்லை, அவர் கவலையெல்லாம் இவ்வுலகைப் பற்றியேயாம்.

உண்மையான துறவறத்தை அவர் வெறுக்கவில்லை. மறுக்கவில்லை. ஆனால் போலிகளை மிகக் கடிந்து கூறுகிறார். இல்லறமே அறம்-வாழ்வுநெறி என்பது அவர் கோட்பாடு. இல்லறத் துறவு, இல்லற வேள்வி என்பனவே அவர் போற்றுவன. ஏழு பிறப்பு என, மறுபிறப்பை, பிறவிச்சுழற்சியை ஒப்பும் அவர், அதிலிருந்து விடுபடுவது ஒன்றையே கூறி முடிக்கின்றார். ஊழ் பற்றி, அது முன்வினைப் பயன் என்பது மட்டுமன்றி, பருவக் கால சுழற்சி போல அமைகின்ற உலகச் சூழல் திருப்பங்களே ஆகும் என்னுமாறு அவர் விளக்கம் புதுமையாய்ச் செல்கிறது.

சில குறள்கள் பழைமையை மாற்றிப் புதுவிளக்கம் தருகின்றன. "அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்" (30) என்பது அந்தணர் என்ற சொல்லுக்குப் புதுவிளக்கம். அச்சொல் குலம்பற்றியதன்று என்பது கருத்து.

'இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம் செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்' (91) என்பது இன்சொல்லுக்கு இலக்கணம் கூறுகிறது. தவம், துறவு, வாய்மை போன்ற பல அதிகார முதற்குறள்கள், அவ்வவ் அதிகாரத் தலைப்புக்கு இலக்கணம் கூறுவதுபோல் அமைந்துள்ளமை காண்க.

மடைமாற்று என்பது ஓர் உளவியல். பல இடங்களில் அவை மக்களைப் புதிய பயனுள்ள நெறிகளில் செலுத்தி, பயனற்ற, வேண்டாத நெறிகளைத் தாமே கைவிடுமாறு செய்ய முயல்கிறார். அவியுணவு என்பது வேள்வியில் தீ வளர்த்து, அதில் உயிரினங்களைப் போட்டு, தேவர்களுக்கு 'அர்ப்பணம்' செய்வதாகக் கூறுவதில், அவருக்குச் சற்றும் உடன்பாடில்லை. "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலை" விட, உயிரைக் கொல்லாமையே நன்று என்பது அவர் கருத்து.

விருந்து படைப்பதை ஒரு வேள்வியாக அவர் விளக்குகிறார். கண்கண்ட உலக விருந்தினர்க்கு விருந்து படைப்பது, கண் காணாத தேவர்களுக்கு உணவுதரச் செய்யும் வேள்வியின் பயனைத் தருமென்று, மாந்தன் கருத்தைத் திசை திருப்புகிறார். மடை மாற்றுகிறார். நல்வழிக்குச் செலுத்துகிறார். இத்தகைய இடங்கள் நீரோட்டம் போல, நூல் முழுவதும் பரந்து, ஆழ்ந்து, நிறைந்து கிடக்கின்றன. பிராயச்சித்தம், கழுவாய் என்பதை அவர் குறிப்பிடவில்லை. பிற சமயங்கள் யாவும், இன்றைய அரசியல் கட்சிகள் போல, "எங்களிடம் வாருங்கள்! எல்லாப் பாவத்துக்கும் மன்னிப்பு வாங்கித் தருகிறோம். இன்ன இன்ன பாவத்துக்கு, இவையிவை பிராயச்சித்தச் சடங்குகளாகும். கொஞ்சம் பணம் செலவழித்து, பரிகாரம் செய்தால் போதும். செய்த பாவத்துக்கும், செய்யப் போகிற பாவத்துக்கும்

பரிகாரம் கிடைக்கும்" என்று நாளும் நூல்களை எழுதி, பேசி, விளம்பரம் செய்ய வேண்டியவை ஆயின. திருவள்ளுவர் ஒருவரே, இந்தியச் சிந்தனையில், செய்த பாவத்தை அனுபவித்தே தீர வேண்டும் என்றவர். பரிகாரத்துக்கும் மன்னிப்புக்கும் வழி சொல்லாதவர். நல்லதைச் செய்வதன் மூலமே அல்லதைப் போக்க முடியுமென்றவர்.

இன்றைய இந்தியா கெட்டுக் குட்டிச் சுவரானதற்கு, இப் பாவ விமோசன, பரிகார, பிராயச்சித்த, கழுவாய் தேடும் சடங்குகளையும் நம்பிக்கைகளையும் பரப்பியதே அடிப்படைக் காரணமாகும்.

திருக்குறளில் பண்புருவ இறைவழிபாடு, தலைமைப் பண்பை அடைதல், ஆளுமை மேம்பாடு, திறமைகளின் உச்சத்தைத் தொடுதல், காதல் வாழ்வு, பழகும் பண்பாடு, குடும்பநலம், ஆட்சித்திறன், தன்னம்பிக்கை, தன்முயற்சித்தவம், துன்பத்திற்குத் துன்பம், வினைக் கோட்பாடு, நட்புறவு, அயல்நாட்டுறவு, மனிதரைக் கொண்டு ஆளுதல், குடிமைப் பயிற்சி என மிகப் பல துறைகளாகத் தனித்தனியே பிரித்து நோக்கக்கூடிய கூறுகள் உள. இவை அனைத்தையும் விளங்கிக் கொள்ளவும், இவற்றின்வழி பயிற்சி பெறவும் முனைந்தால்தான் குறள்வழி வாழ்வும், ஆட்சியும் பிறவும் அமையும்.

திருக்குறளின் உள்ளொளியைத் 'தேடல்' நடந்து கொண்டே இருக்கிறது; இன்னும் நடக்கும்.

திருவள்ளுவரின் உட்கிடையை அறிந்து பெரிதும் அருகிற் செல்லுதல், ஓரளவு சென்று தடுமாறுதல், மிக விலகிப் போய்விடுதல், திரும்பி விடுதலெனப் பலவாறு இம்முயற்சி நடந்து வருகிறது.

நாமனைவரும் ஒவ்வொரு வகையில் திருவள்ளுவரை அணுகவே முயல்கிறோம்.

இங்குக் கூறிய, 'கற்கும் நெறி முறைகளை'யும், இன்ன பிறவற்றையும் அளவு கோல்களாகக் கொண்டு, அறிவியல் முறையில் அணுகினால், வள்ளுவத்தின் உள்ளொளி தெள்ளிதிற் புலனாகும். அதை நாமும் உணர்ந்து, பிறர்க்கும் உணர்த்தி, நம் உள்ளொளியைப் பெருக்கினால், 'உலப்பிலா ஆனந்தமாய, தேனினைச் சொரியும்' குறள் நுண்பொருளைச் சிக்கெனப் பற்றிக் கொள்ளலாம். அங்ஙனம் முயன்று முழு வெற்றி பெறும் நாளே, திருக்குறளைத் தமிழன் தன் அடையாள நூலாகக் காட்டிக் கொள்ளும் நன்னாளாகும்.

## பொருளடக்கம்


1. அறத்துப்பால் 20

1. பாயிரவியல் 22
2. இல்லறவியல் 36
3. துறவறவியல் 93
4. ஊழியல் 129

2. பொருட்பால் 134

1. அரசியல் 135
2. அமைச்சியல் 203
3. அரணியல் 230
4. கூழியல் 236
5. படையியல் 240
6. நட்பியல் 246
7. குடியியல் 286

3. காமத்துப்பால் 318

1. களவியல் 319
2. கற்பியல் 338

அதிகார நிரல் 383

குறள் முதற்குறிப்பு நிரல் 385

# அறத்துப்பால்

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனவும் அதிகாரத்திற்குப் பத்துக்குறள் எனவும் வகுத்தவர் திருவள்ளுவரே. அதிகாரத் தலைப்புக்களும் வள்ளுவர் எழுதி வைத்தவை போலத்தான் தோன்றுகின்றன. ஓரதிகாரத்துக்குள் குறள் வைப்பு முறையில் மிகச் சில மாற்றங்களை உரையாசிரியர்கள் செய்துள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுப் பழைமையுடைய திருக்குறளும், மூவாயிரம் ஆண்டுக்கும் முற்பட்டதான தொல்காப்பியமும் சங்ககாலச் சிலப்பதிகாரமும் உலக இலக்கியங்கள் எதிலும் காணமுடியாத, அத்துணை நிகரற்ற கட்டமைப்பு உடையவை. இதுபற்றி இதுநாள்வரை தெளிவான ஆய்வுகள் வெளிவராததால், இதன் பெருமையும் சிறப்பும் இன்றும் பலரால் உணரப்படவில்லை. திருக்குறளும் இதனால்தான் இவ்வளவு காலத்திற்குப் பிறகும் சிறிதும் சிதைவின்றி நம் கைகளில் கிடைத்துள்ளது. இது உலக வியப்புக்களில் ஒன்றாகும்.

திருக்குறள் கூறும் 'அறம்' ஒரு தனிச்சிறப்புடைய கோட்பாடு. கண்ணுக்குத் தெரியாத, அருவ நுண்பொருளான 'அறம்' மின்னாற்றல் போல இயங்கிக்கொண்டே இருக்கும் ஒரு பேராற்றலாகும். வெயில் போல ஒளிவீசும். நீராவி போலச் செயற்படுத்தும் ஓர் இயற்கை ஆற்றல் அது. அது நல்லதையே ஏற்றுக் கொள்ளும். அல்லதைப் புறந்தள்ளி அழித்துவிடும். உலகில் நல்லதும் அல்லதும் கலந்துகிடப்பதால் அறம் பற்றிய தெளிவு கிடைக்கவில்லை. அறம் வாழும் உயிர்களுக்கு ஆக்கமாகும். அது உயிரை வலுப்படுத்தும் ஊட்டச்சத்து. உலகில் அறவழிப்பட்டன நிலைக்கின்றது; அல்லன அழிகின்றன. இதைத் தெளிவுபடுத்த 'வினைக் கோட்பாடு' பற்றிய அறிவும் தேவை. செய்த வினைக்குப் பயன் உறுதியாகவுண்டு. பாவம் தீரப் பரிகாரம் உண்டு; பிராயச்சித்தம் உண்டு; பாவ மன்னிப்பு உண்டு என்பன, அரசியல் கட்சிகள் போல, மக்களை ஈர்க்க மதங்கள் செய்த விளம்பரங்களாகும். அதனால்தான் திருவள்ளுவர், 'சமயக் கணக்கர் மதி வழி' கூறவில்லை. அறம் என்ற ஒன்றை, ஒழுக்க அடிப்படையில், திருவள்ளுவர் வற்புறுத்தி, விளக்கி எழுதியிருப்பதுபோல, உலகில் எவரும் எழுதி வழிகாட்டவில்லை.

அது ஓர் உலகப் பொதுநூல்; இந்தியத் தேசிய நூல், தமிழர் பண்பாட்டு நூல், தமிழ்மறை ஆகும்.

'அறம்' என்பது திருவள்ளுவர் கருத்துப்படி 'இல்லறம்' ஒன்றே ஆகும். துறவறம் என்பது இல்லறத்தின் வளர்ச்சியும் முதிர்ச்சியுமேயாகும். திருக்குறளில் இல்லறவியலின் தொடர்ச்சியாக வரும் துறவறவியல் இல்லறத்தைச் சார்ந்த துறவறமே. அவர் கூறும் இல்லறத் துறவு, இல்லறத்தவம், இல்லற வேள்வி மூன்றும் புதுமையானவை; புரட்சிகரமானவை. வடநாட்டு வைதிக, சமண, புத்த சமயங்கள் கூறிய பல செய்திகளும், கருத்துகளும் திருவள்ளுவர்க்கு உடன்பாடில்லை. உடன்படாதவற்றை மறுத்துக் கூறுகிறார். மடைமாற்றுகிறார்; புதுவிளக்கம் தருகிறார். துறவு என்றதும் நினைவுக்கு வரும் காவியுடை, காட்டுக்குப் போதல், கண்மூடித் தவம் செய்தல், வேள்விகள் ஹோமங்கள் செய்தல் இவை எதையும் அவர் கூறவுமில்லை; ஏற்கவுமில்லை.

திருவள்ளுவர் இல்லறமே இயற்கைக்குப் பொருந்திய வாழ்வாதலால், அஃதொன்றையே 'அறம்' - வாழும் நெறி என்ற கருத்துடையவர். அவர் கூறும் துறவும் தவமும்கூட இல்லறத்திலிருந்தே செய்யக்கூடிய, செய்யவேண்டிய அறங்களாகும். நன்கு வாழ்ந்து கொண்டிருந்த இல்லற நிலையிலே 'நிலையாமை' உணர்வும் வேண்டும்; ஐந்தன் புலத்தைப் பக்குவப்படுத்தல் வேண்டும்; 'ஒன்றும் இன்மையே துறவு' - துறத்தார்க்கு 'உடம்பும் மிகை' - 'தீரத் துறந்தாரே துறவியராவார்'; மாந்தர் செம்பொருள் உண்மை கண்டு 'பிறப்பு' எனும் பேதைமை நீங்க வேண்டும். அவாவை அறவே நீக்கி, 'பேரா இயற்கை நிலை' எய்த வேண்டும். பிறப்பறுத்தல் எனும் இதைத் தவிர்த்து, மேலுலக வாழ்வு பற்றி வேறு எதுவும் அவர் கூறவில்லை.

இல்லற நெறி வேறு; துறவற நெறி வேறு அன்று. ஒன்றன் தொடர்ச்சியே மற்றது.

*காமம் சான்ற கடைக் கோட் காலை*
*ஏமம் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே* (1138)

என்ற தொல்காப்பிய நெறிவழிப்பட்ட திருக்குறள், காமத்தை முழுவதும் அனுபவித்து முடிந்தபின், பாதுகாவலான மக்கள் பேரன் பேர்த்தி சூழ (துவன்றி - பொருந்தி, சூழ) அறம் செய்யும் சுற்றத்தை உருவாக்கி, அதனுடன் சேர்ந்து 'சிறந்தது' பயிற்றல்தான், இவ்வளவு நாள் வாழ்ந்ததன் பயனாகும் (இறந்தது - வாழ்ந்து முடிந்தது) சிறந்தது என்றார். துறவு, தவமேயன்றிப் பிற சிறந்தன அனைத்தையும் இறுதிக்காலத்தில் கைக்கொண்டு வாழ வேண்டும் என்பதை நினைவூட்ட அறத்துப்பாலின் நீரோட்டம் போன்ற இக்கருத்தனைத்தையும் உணர்ந்தாலன்றித் தனிக் குறளின் பொருள் விளங்காது.

# பாயிரவியல்

பாயிரம் முன்னுரைப் பகுதி. இறைவன் பண்புருவானவன். இறை வழிபாட்டின்வழி. அப்பண்புகளை உயிர் அடைய வேண்டும். மழை என்பது இயற்கையின் ஊற்று. அதன் வழியேதான் உலகம் நடைபெற இயலும். இறைவழிபாடு போல, மழையாம் இயற்கை வழிபாடும் முக்கியம். வழிபடல் அதன்வழி வாழ்தல். இயற்கைக்கு முரண்பட்ட விஞ்ஞானமும் உலகை அழிக்கும். தந்நலம் நீத்தாரே, உலகை உய்விப்பார். தந்நலம் நீத்த பெரியோரும் உலகை வாழ்விக்கும் இறைக்குச் சமமானவரே. அறம் ஓர் நுண்ணாற்றல்; பேராற்றல்; இயங்காற்றல்; இறைமை வகுத்த விதி அது. அதனுடனான உடன்பாடு வாழ்வு தரும்; முரண்பாடு அழிவு தரும். ஓர் அறநூலின் நான்கு அடிப்படைகள், இங்ஙனம் எடுத்ததும் முன்பகுதியில் விளக்கப் படுகின்றன.

# 1. கடவுள் வாழ்த்து

1. **அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

எழுத்துக்கள் எல்லாம் அகர ஒலியை முதலாகவும் அடிப்படையாகவும் உடையன. காணப்படும் இவ்வுலகமும் 'ஆதிபகவனாம் இறையை முதலாகவும் அடிப்படையாகவும் உடையது.

இவ்வுலகத் தோற்றத்துக்குக் காரணமாய், உடனுறையும் பேராற்றலை ஒப்புமை அளவையால் நிறுவுகிறது. ஒலிபோல நுண்பொருளாய் உள்ள இறைவன் உலகைப் படைத்து, இயக்குகின்றான். தம்மைப் பெற்ற தாய் தந்தையைப் போற்றுவதுபோல, தம்மைப் படைத்த இறையை உணர்ந்து போற்றுதல் ஆறறிவுள்ள உயிர்களின் கடமையாகும்.

2. **கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

தூய பேரறிவினனாம் இறைவனது நல்ல தாள்களைத் தொழாவிடின், கற்றதனால் பயன் யாது? தொழுது தாமும் அத்தூய அறிவைப் பெற முயல வேண்டும்.

கார் அறிவு (287) புல்லறிவு (846) உள என்பது வள்ளுவம். அறிவு தீயதற்குப் பயன்படவும் கூடுமாதலால், தூய பேரறிவு வடிவான இறையை நினைந்து நினைந்து, தாமும் தூய அறிவு பெறுதலே கல்வியின் பயனாம்.

3. **மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

நினைப்பவர்தம் நெஞ்சத் தாமரையை விரைந்தடையும் இறைவனை, இடைவிடாது நினைப்பவர்கள் இந்நிலவுலகில் நீண்டநாள் வாழ்வார்கள்.

இறை வழிபாடு மன இறுக்கத்தை நீக்கும்; நீண்டநாள் வாழ வழிவகுக்கும். சேர்தல் - இடைவிடாது நினைத்தல்: பரிமேலழகர். இறைவழிபாடு, ஒரு மனப்பயிற்சி. அதனால் பக்குவமும் வலிமையும் பெறும் மனம் உடலைக் காக்கும்.

4. **வேண்டுதல்வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.**

இயல்பாகவே விருப்பு வெறுப்பற்ற இறைவனை இடைவிடாது நினைப்பவர்க்கு, என்றும் கடுந்துன்பங்கள் ஏற்படா; தமக்கும் அம் மனப்பக்குவம் வாய்த்தலால், துன்பங்கள் விலகிப்போகும்.

இதுதான் மனப்பக்குவம். விருப்பால் இன்பமும் வெறுப்பால் துன்பமும் உளவாகும். இவற்றில் சமநிலைப்பட்ட மனம், கடுந்துன்பத்தால் தாக்கப்படாது.

5. **இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
   **பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

நற்குணங்கள் அனைத்தையும் பெற்ற இறைவன் புகழே மெய்யான புகழாகும். அதனை எப்பொழுதும் விரும்பிச் செல்வாரிடம், அறியாமையொடு கூடிய நல்வினை, தீவினை இரண்டும் சென்றடையா.

இறைமைப் பண்புகளை முற்றப் பெறாத மனிதர்களைப் புகழ்வன புனைந்துரைகளே; பொருளுரை ஆகா. இருளுள்ள இடத்தில் ஒளியும் ஒளியுள்ள இடத்தில் இருளும் கலந்து நிற்கக் காண்பது இவ்வுலகம். இவற்றிற்கு அப்பாற்பட்ட பேரொளி நிலையை எய்துதற்கு - இருவினையுமற்ற தனிநிலை ஒன்றை எய்துதற்கு உயிர்கள் முயல வேண்டும். அதற்கு இறைவனின் உயரிய இறைமைப் பண்புகளைச் சொல்லிச் சொல்லிப் பாடிப்பாடி உருவேற்றி, நாமும் அந்நிலை நோக்கி உயர்தல் வேண்டும்.

6. **பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
   **நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளின் வழி எழும் ஐந்து ஆசைகளையும் அடக்கி இயல்பாகவே பக்குவம் கொண்டவன் இறைவன். பொய்ம்மையை அறவே நீக்கிய அவனது ஒழுக்க நெறியில் நிற்பவர்கள் உலகில் நீடு வாழ்வார்கள்

புலனடக்கம் பொய்ம்மையற்ற ஒழுக்கத்தைத் தரும்; அது நீண்ட வாழ்வைத் தரும். உலகில் வெளித்தோற்றத்திற்கு மட்டும் ஒழுக்கமுடையார் போலக் காட்டுபவரே மிகப்பலர். இறைவன் உள்ளும் புறமும் 'பொய்ம்மை தீர்ந்த ஒழுக்க நெறியினன்'. நாமும் அவ்வாறு வாழ்தலே வழிபாடாகும்.

7. **தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
   **மனக்கவலை மாற்றல் அரிது.**

தனக்கு உவமையில்லாத பேராற்றலுடைய இறைவனைத் தேடி அடைந்தவர்களுக்கு அல்லாமல் மற்றவர்களால் தம் மனக்கவலையை நீக்க இயலாது. இறைவழிபாடே மனக்கவலை நீக்கும் மாமருந்து.

நமது மனக்கவலையைப் போக்க, உலகில் அவர் இவர் எனத் தேடி அலைதலால் பயனில்லை. உண்மையும், பண்புடைமையும் பெருமிதத்தைத் தரும். இத்தகைய பெருமிதத்தை, இறைவழிபாட்டால் அடைந்தவரிடம், மனக்கவலைகள் ஒளிகண்ட பனிபோல் ஓடிவிடும்.

8. **அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது.**

உலகில் நம் வாழ்வில் தடைகளாய் வரும் எத்தனை கடல்களைத் தாண்ட வேண்டி உளது. அறக்கடலாய் அழகிய தண்ணளியை உடையானது தாள்களாகிய புணையைப் பற்றிக் கொண்டால், அவற்றைக் கடக்கலாம்; இன்றேல் கரைகாண மாட்டாது மூழ்கிப்போவோம்.

பிற ஆழி என்னும் பொதுச்சொல், இம்மை மறுமை எனப் பிரிக்காது, அனைத்துத் துன்பக் கடல்களையும் குறிக்கிறது. அற ஆழி அந்தணன் தாள் சேர்தலாவது, தாமும் அறப்பேராற்றலுடையராய், அருள் பெருக்கி வாழ்தல்.

9. **கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை.**

கண் காணாமலும் காது கேட்காமலும் இவ்வாறு ஐம்பொறிகளும் தத்தமக்குரிய புலன்களைப் பற்றாமல் விட்டால் பயன் என்ன? அதுபோல் நமக்குத் தலை முதலியன இருந்தும், மேலே கூறியது போல் எண்ணப்படும் அனைத்து நற்பெருங்குணங்களையுடைய இறைவனது தாளை வணங்காவிட்டால், அவை பயனிலவாம்.

தாளை வணங்குதல் அவன் வழி நிற்றல்; இன்றேல் பயனில்லை. உருவ வழிபாட்டை நினைவூட்டுகிறது. மன ஓர்மை, பாடிப் பரவுதலைச் சொல்லி வந்த திருவள்ளுவர், திருவுருவின் திருமுன் வீழ்ந்து வணங்குதலாகிய செய்கையையும் இதில் குறிப்பிடுகிறார்.

10. **பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.**

பிறவியாகிய பெருங்கடலை நீந்த, இறைவன் அடியாகிய புணையைச் சேர்தல் வேண்டும்; சேராதவர் நீந்த மாட்டாராய் அதனுள் மூழ்கிப்போவர்.

புணை-தெப்பம். மேலே ஒன்பது குறள்களிலும் உலகியல் சார்ந்த இறைவழிபாட்டுப் பயன்களைச் சொல்லி வந்தவர், இவ்விறுதிக் குறளில் 'பிறவி' விடுதலையைச் சுட்டுகிறார். மீண்டும் மீண்டும் பிறந்து பிறவித்துன்பங்களில் சுழலாது, பேரா இயற்கை பெறும் வீடு-விடுதலை-பெறுதலை இது குறிக்கிறது.

# 2. வான் சிறப்பு

இயற்கை வாழ்த்து. உலகம் நல்வழியில் நிலைபெற மழையின் இன்றியமையாமை. மழை இயற்கையின் குறியீடு. இறையின் பருப்பொருட்தோற்றமே இயற்கை.

11. வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுஉணரற் பாற்று.

வானத்து மழை இடையறாது பெய்தலால், உலகம் தொடர்ந்து நடைபெறுகிறது. அதனால் அதுதானும் 'அமிழ்தம்' என உணரத் தக்கதாகும்.

அமிழ்தம் - ஒரு கற்பனை, சாவா மருந்து. வான் உலகத்தது, கண்காணாதது. அதைத் 'தேவாமிர்தம்' என்றனர். தண்ணீரும் அமிழ்தமே. சாவா மருந்தே இவ்வுலகத்திற்கு. இது கண் கண்டது. திருவள்ளுவர் இவ்வுலகியலில் வைக்கும் அழுத்தம் காண்க. அதாவது மழையும் ஒரு வானமிழ்தமாம். உலகோர் நம்பும் அமிழ்தத்தை நினைப்பூட்டி 'இதோ பார், கண் கண்ட அமிழ்தம்' என்பது, ஒரு மடைமாற்று உளவியலாகும்.

12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

மழையானது உண்பார்க்குப் பிற உணவுகளையும் விளைவித்துத் தருகிறது; தானும் இன்றியமையா உணவாகிறது.

துப்பு-உணவு. நடையழகே மழையின் பயனை உணர்த்திவிடுகிறது. உயிரை உடலில் தக்க வைக்கும் உணவு மழை. இயற்கை இன்றேல் எங்ஙனம் உயிர் உளதாகும்? இறையின் காத்தல் தொழில் இங்ஙனம் நடைபெறுகிறது.

13. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து
உண்ணின்று உடற்றும் பசி.

உரிய காலத்தில் மழை பெய்யாது பொய்க்குமானால், விரிந்த கடல் நீரால் சூழப்பட்டிருப்பினும், பரந்த இவ்வுலகத்தில், பசி உள்ளெழுந்து உயிர்களை வாட்டி வருத்தும்.

கடல்நீர் ஆவியாகி மீண்டும் தூயநீராகப் பொழிந்து உலகைக் காக்க வேண்டியுள்ளது. இயற்கை இடையறாது இயங்காவிடில், உயிர்களுக்கு வாழ்வில்லை.

14. **ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்.**

தரையில் மழைநீர் பொழிந்ததும் உழவர் ஏர் தூக்கி நடப்பர், உழுதல் எளிதாகலின். புயல் என்னும் வாரி, அடித்துப் பெய்யும் புதுவருவாயாம் பருவமழை வளங்குறைந்தால் உழவர் ஏர் பிடித்து உழமாட்டார்.

மழையின்றேல் உழவும் தொழிலும் வாழ்வும் குன்றிப் போகும்.

15. **கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை.**

பருவ காலத்தில் பெய்யாது கெடுப்பதும், அங்ஙனம் தன்னால் கெட்டார்க்குத் துணையாய் மாறிப் பெய்து அவர்களை அப்பொழுதே வாழ வைப்பதும் ஆகிய எல்லாம் மழையால் ஆகும்.

ஆக்கவும் அழிக்கவும் வல்லது மழை. எடுப்பதும் எனத் தொடங்காது. கெடுப்பதும் எனத் தொடங்கியிருப்பது அதனாலாம் துன்பத்தை அழுத்தமாய் உணர்த்துகிறது.

16. **விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே**
**பசும்புல் தலைகாண்பது அரிது.**

வானத்திலிருந்து மழைத் துளி கீழே விழக்காணினல்லாது, வீழாதாயின் அப்பொழுதே பசும்புல்லின் தலையையும் காணுதல் அரிது.

மழை பெய்யாவிட்டால் தரையில் புல்லும் தலைகாட்டாது. இயற்கை செழித்து, உணவுப் பயிர்கள் தழைக்காதென்பதை நெஞ்சிற்பதியும்படி சொல்கிறது.

17. **நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்துஎழிலி**
**தான்நல்காது ஆகி விடின்.**

தடிந்து எழிலி தான்நல்குதல் - மேகம் கடல்நீரை முகந்து மீண்டும் அக்கடலிலேயே மழையாகப் பெய்து உதவுதல். அங்ஙனம் உதவாவிடின் மிகப்பெரிய கடலும் தன் வளம் குறையும். மணி பவளம் விளையா; கடல் உயிர்கள் வாழா.

நீரால் நிறைந்த கடல்வளமும் குறையும். அதாவது கடலுக்குள்ளும் மழை பெய்ய வேண்டுமாம்.

18. **சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.**

வானுலகத் தேவர்கட்கும் இங்கு வழிபாடுகள் நடைபெற மழை வேண்டும். மழை பெய்யாதுவிடின் வானோர்க்குச் செய்யும் சிறப்பு விழாக்களும் அன்றாட நாட்பூசைகளும் நடைபெறா.

தெய்வ வழிபாடுகளுக்கும் மழையே உதவுகிறது. இவ்வுலக வாழ்வில் அழுத்தம் வைக்கும் குறள்களில் இதுவும் ஒன்று. வானோர்க்கும் சிறப்பின்றிப் போகுமாம்.

19. **தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்**
**வானம் வழங்காது எனின்.**

இவ்வுலகம் அகன்று பெரிதாய் இருக்கலாம். ஆனால் இங்கு மழை பெய்யாவிட்டால், பிறர்க்குச் செய்யும் தானமும் தமக்குச் செய்யும் தவமும் உளவாகா.

பிறர் கருத்தை வைத்துச் சொல்லும் அறம் இது. தானம், தவத்தை வற்புறுத்துவோர் பலர். தானம்-பிறர்க்கு அளிப்பது; தவம்-தான்உய்யச் செய்வது. நீங்கள் சொல்லும் இவை இரண்டும் நிலைபெற நடைபெறவும் மழை இன்றியமையாதது என்பது இது. 'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு தானம் செய்வாரின் தலை' (295) என்ற குறளில் எதை வற்புறுத்துகிறார் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

20. **நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு.**

உலகம் நீரை இன்றி வாழாது என்பது உண்மையாயின், இவ்வுலகில் யாராயினும் ஒழுக்கத்தில் நிலைபெறுதலும் மழையின்றி அமையாது.

மழையின்றி, வறுமையும் பசியும் மிகுமாயின், மக்கள் ஒழுக்கமாய்க் காட்டுப்பாட்டுடன் வாழ்தல் இயலாது.

## 3. நீத்தார் பெருமை

ஒப்பற்ற சான்றோராய் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்ந்து உலகிற்கு வழிகாட்டும், தந்நலம் நீத்தார் பெருமை. தாமரை இலைத் தண்ணீர்போல், உலகப் பற்றுக்களில் ஒட்டாது நின்று தத்தம் அரிய முயற்சிகளில் ஈடுபடும் பெரியவர்களே நீத்தார் எனப்படுவர்.

21. **ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு.**

ஒழுக்கத்தில் தவறாது, நீத்தாராய் இருப்பவரது பெருமையை விழுப்பத்துள் சிறந்த விழுப்பமென வேண்டுவது அற நூல்களின் துணிபாகும்.

உலகப்பற்றை நீத்து வாழ்வது கடினம். துறவியரைக் 'கூடா ஒழுக்கம்' கூடாதென்று வள்ளுவம் எச்சரிக்கும். விழுப்பம்-மானுடமதிப்பு. 'பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார்' (6) என்று முன்பு கூறப் பெற்றவர் எவரோ, அவரே இங்கு 'ஒழுக்கத்து நீத்தார்' எனப்பட்டார்.

**22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.**

மனத்துறவு பூண்டாரது பெருமையை அளந்துகூறின் இவ்வுலகில் ஒரு பயனுமின்றிப் பிறந்து இறந்தவர் தொகை இத்தனை என எண்ணிப் பார்ப்பதற்கு ஒப்பாகும். வையகத்தில் பிறந்தார், இறந்தார் என எண்ணப் படுபவர்க்கு எல்லை இல்லை. மனத்துறவு கொண்டு, காரியம் சாதித்தவர் பெருமையே பெருமை என்பதாம்.

புற்றீசல்போல் பிறந்திறத்தலினும், ஏதேனும் பயன்பட வாழ்ந்து சாதல் சிறப்பென்ற கருத்தும் தொனிக்கின்றது.

**23. இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு.**

உலகில் இருமைகள் பல. நன்மை தீமை; இனிமை கடுமை; அறம் மறம்; இன்பம் துன்பம் என. இவ்விரு வகைகளின் தன்மைகளை ஆராய்ந்து, முற்பட்ட அறநெறிகளை நல்லன என்று கைக்கொண்டவர்தம் பெருமை உலகில் விளங்கித் தோன்றும்.

இருமைகள் கலந்திருப்பதால் அன்னப் பறவை பாலையும் நீரையும் பகுப்பது போல், 'வகை தெரிய' வேண்டியுள்ளது.

**24. உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து.**

அறிவுத் திண்மை என்னும் தோட்டியால் ஐம்பொறிகளாகிய யானைகள் ஐந்தையும், கண்டபடி புலன்கள் மேற்சென்று மேயாமல், அடக்கிக்காக்க வேண்டும். அங்ஙனம் காப்பவன், உயர்ந்த இடத்திற்கென்று விதைக்கப்பட்ட வித்தாவான்.

'வரன் என்னும் வைப்பு' - உயர்ந்தவை எனப்படும் அனைத்துப் பதவிகளையும் குறிக்கும். வானுலகம் உட்பட.

25. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி.

ஒருவன் தன் தவ வலிமையால் இந்திரபதவி அடைவானென்பது சமயம் சார்ந்த புராணவழி நம்பிக்கை. ஐம்பொறிகளின் வேகத்தை அடக்கி ஆள்பவனது பேராற்றலுக்கு, அகன்ற வானுலகில் உள்ளார்க்குத் தலைவனாகிய இந்திரனே சான்று; அவன் அத்தவ வலிமையால் அப்பதவியை அடைந்தானாகலின்.

புத்த சமயத்தில் இந்நம்பிக்கை இருந்தது. ஐந்து பொறி, புலன்களைப் பக்குவப்படுத்தினால், இந்திர பதவியையும் அடையலாம். மேன்மேல் உயரலாம் என்பது கருத்து.

26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

செய்வதற்கு எளியவற்றைச் செய்து, எல்லோரையும்போல் இருந்தொழியாது, அரியவற்றைச் செய்பவரே பெரியராவர்; செய்தற்கரியவற்றைச் செய்யமாட்டாதவர் சிறியராவர்.

வெறுமனே நீத்தாரெல்லோரும் பெரியராகார் என்பதாகும். இக்குறள்வழியும் இவ்வதிகாரம் உலகியல் சார்ந்த நீத்தலே என்பதை அறியலாம். உலகை விட்டு ஓடுதலாயின் இக்குறள் இங்கு இடம்பெற்றிராது. 'பெருமை' அதிகாரத்தில் வரும் 'பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின், அருமை யுடைய செயல்' (975) என்ற குறளுடன் ஒப்பிடுக. இடைக் காலத்தவர் இதற்கு இயமம் நியமம் முதலாயின செய்தல் எனக் கூறுவது பொருந்தாது.

27. சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்பன ஐம்பொறிகளால் நுகரப்படும் ஐந்து புலன்கள். இவ்ஐந்தின் கூறுபாட்டை ஆராய்ந்து அறிந்து, அளவோடு ஆள்பவன் கண்ணதே இவ்வுலகம்.

ஆசைகளுக்கு அடிப்படை இவை. இவற்றை அடக்கி ஆள்பவன் உலகை ஆள்பவன் ஆவான். வசதி வாய்ப்புகள் இருப்பினும் ஐம்புல இன்பங்களை எங்கு, எந்த அளவு, எவ்வாறு நுகர்தல் வேண்டுமென அறிதலே, 'வகை தெரிதலாம்'.

28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

சான்றோர் பயனை விளைவிக்கும் பொருள் நிறைந்த மொழிகளையே வெளிப்படுத்துவர். அவர்தம் பெருமையை, நிலவுலகில் அவர்கள் தம் ஆணையாற் சொல்லிய மறைமொழிகளாம் மந்திரங்களே கண்கூடாகக் காட்டிவிடும்.

திருக்குறள், திருமந்திரம், திருமறை, திவ்வியப்பிரபந்தமனைய அனைத்துக்கும் இது பொருந்தும். உலகச் சான்றோர் சொற்கள் வேதமாகும். தேவரருளிய வடநூல் வேதங்களின் வேறுபடுத்தலே நிலத்து மறைமொழி என்றார். தமிழிலும் மறைமொழி-வேதம்-உண்டு; மந்திரம் உண்டு என்பது இது. திருஞானசம்பந்தர் 'ஆணை நமதே' எனக் கூறுதல் காண்க.

29. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

நீத்தாராம் சான்றோர்தம் சினத்திற்கு ஆளாதல் கூடாது. நீத்தாராவார் நற்குணங்களாம் குன்றின்மேல் ஏறி நிற்பவர். அந் நல்லவர்க்குக் கோபம் வராது; வரினும் கணப்பொழுதுதான் நிற்கும். அது நிற்கும் நேரம் கணப்பொழுதேயாயினும் வெகுளப்பட்டார் அதைத் தடுத்துத் தம்மைக் காத்துக் கொள்ளுதல் அரிது.

30. அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டுஒழுக லான்.

அந்தணர் என்போர் யார்? மற்றைய உயிர்கட்கெல்லாம் செவ்விய தண்ணளியைப் பூண்டு ஒழுகுதலால், அந்தணர் என்போர் அறவழிப்பட்டோர் ஆவர்.

அந்தணர் என்பது குலப்பெயராகவும் ஆளப்படும். திருவள்ளுவர் அச்சொல்லுக்குப் புதுவிளக்கம் தருவதிலிருந்து அவருக்குப் பிறப்பால் வரும் குலத்தில் நம்பிக்கையின்மை வெளிப்படுகிறது. இதுபோல் சொற்பொருள் விளக்கமாக, இலக்கணமாகக் கூறுமிடங்கள் சிலவுள. அவை பழைமையை மாற்றிப் புதுப்பார்வை தருவன.

## 4. அறன் வலியுறுத்தல்

அறநெறி நேர்மைநெறி, அன்புநெறி, பண்புநெறி; மறநெறி, நேர்மை தவறிய நெறி. வன்முறை நெறி, பண்பற்ற நெறி. இரண்டுமே உலகிற்

காணப்படுவன. இவற்றுள் அறநெறியே மன்பதையின் நல்வாழ்வுக்கு என்றும் உகந்தது என வலியுறுத்திக் கூறுவது. அறம் என்பது ஒரு பேராற்றல்; இயங்காற்றல்; நுண்ணாற்றல். அது உலகை இயக்கிக் கொண்டிருக்கிறது. அஃதோர் இயற்கை விதி; சட்டம்; மாற்ற இயலாதது.

31. சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தின்ஊங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

உலகில் மறநெறி, வன்முறைநெறிகளே விரைவில் பயன் தருவன என எண்ணி எளிதில் எல்லோராலும் கைக்கொள்ளப்படுகின்றன. ஆனாலும் அறநெறியே பலராலும் மதிக்கப்படும் சிறப்பைத் தரும்; பயன்மிகுந்த செல்வத்தையும் தரும். அறநெறியைவிட உயிர்களுக்கு ஆக்கம் தருவது எதுவுளது?

'அறம் உயிருக்கு ஆக்கம்' என்பது, உயிரைக் காக்கும் ஆற்றல் தருவது. 'அறத்தினூஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு' என்று வினவி அடுத்த குறளில் 'அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை' என விடை கூறுவது மிகவும் வற்புறுத்துவதற்காகும். 'ஆக்கம் அதனினூஉங்கில்லை உயிர்க்கு' (122) என்றும் 'மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' (457) என்றும் வருமிடங்கள் பல இவ் அறம் மானுட உயிர்க்கு ஆற்றலும் ஆக்கமும் தரும் என்பதை அழுத்தமாய்க் கூறுகின்றமை சிந்திக்கத் தூண்டுகிறது.

32. அறத்தின்ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறந்தலின் ஊங்குஇல்லை கேடு.

மன்பதைக்கு அறநெறியைக் கைக் கொள்வதன் மேற்பட்ட ஆக்கமும் இல்லை; அதை மறந்து கைவிடுதலை விடக் கேடும் இல்லை.

உலகம் அறநெறியை எளிதிற் கைக்கொள்வதில்லை யாதலால் அதைப் பலபட வற்புறுத்துகிறார் திருவள்ளுவர். மறநெறி முதலில் பயன்தருவதுபோல் காட்டி, அழிவில் போய் முடியும். அறநெறியே ஆக்கத்தில் கொண்டு சேர்க்கும். ஆயினும் அதன் உண்மை உணராத மக்கள் வன்முறை வலையில் எளிதில் சிக்கிக் கொள்வர். அதனால் நேர்முகமாகவும் எதிர்முகமாகவும் அறநெறி இங்கு வற்புறுத்தப்படுகிறது.

33. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.

அறநெறி நடப்பதை, இடைவிடாமல் இயன்ற வழி வகைகளில் எங்கெல்லாம் செய்ய முடியுமோ அங்கெல்லாம் கொண்டு செலுத்துக; அறவழியிலேயே நடக்க முயல்க.

அறம் என்றதும் தருமம் செய்வது என்று மட்டும் உணர்வது அடிப்பிழை; நேரிய வழியில் நடப்பது அது. வாழ்வில் அறம் மறம் இரண்டும் நாள்தோறும் நூறுமுறை எதிர்ப்படும். அங்கெல்லாம் இயன்ற வகையாலும் எய்தும் இடத்தாலும் அறவழிப்பட்ட செயல்களைக் கடைப்பிடிக்கவே முயல்க என்பதாம்.

34. மனத்துக்கண் மாசிலன்ஆதல்; அனைத்து அறன்;
ஆகுல நீர பிற.

மனத்தில் மாசிருந்தால், வெளியில் பேசுவன செய்வன எல்லாம் நடிப்பாகிவிடும். அவை தம்மை அறநெறியாளராகக் காட்டிக்கொள்ள என்று செய்யப்படுவன; அதனால் வெளிப்பாடென்ற ஆரவாரத் தன்மை ஒன்றே உடையன. அதனினும் மனத்துக்கண் மாசின்றி இருத்தலே அடிப்படை அறமாகும்.

உலகில் பலர் அறநெறி நடப்பதாகக் காட்டிக்கொண்டு மனத்தில் மாசுடன் இருப்பர். அவரை நோக்கியது இக்குறள். அனைத்து அறன் என்றது. மாசு நீக்கமே அதனளவில் முழுமையான அறமாகிவிடும் என்றுணர்த்துகிறது. மாசு இருப்பின், பிற யாவும் அறமாகாமையின் அதனை நீக்குதலே 'அனைத்து அறனும்' ஆகுமென வற்புறுத்தியவாறு.

35. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

பொறாமை, அவா, வெகுளி, பிறர்க்குத் தீங்குதரும் தீய சொல் நான்கும் சிறிதும் பற்றாது அமைவதே அறமாகும்.

பிற தீமைகளும் இவற்றால் வருதலின், இவற்றைத் தொகுத்துக் கூறினார். ஒழுக்கத்திற்கு எதிர்ச்சொல் இழுக்கம். இழுக்குதல் - வழுக்குதல், தவறுதல். சிறிது தவறுதலும் கூடாதாம்.

36. அன்றறிவாம் என்னாது அறம்செய்க; மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

கடைசிக் காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்னாது, இன்றே இப்பொழுதே அறச்செயல்களில் ஈடுபடுக. மனிதனுக்கு இறப்பு என்று வரும் என்று தெரியாது. அறிநெறி ஒருவன் இறக்குங்காலத்து அழியாத் துணையாகும்.

அகவை முதிர்ந்த காலத்தில்தான் மனிதர்கள் அறநெறி பற்றிப் பெரிதாகப் பேசுவர்; அறநெறியில் நடக்க முயல்வர். இளமையில் கண்டபடி நடப்பர்; கடைசி காலத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்பர். அவர்களை நோக்கியது இக்குறள். அவனது உயிர் உய்திபெறும் என்பது மட்டுமன்று; அவனுக்குப் பிறகும் அவன் கால்வழியினர்க்குத் துணையாகும்; அவன் பெயரும் புகழும் நிலைபெறும்.

37. அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

பல்லக்கைத் தூக்குகின்றவன் பாவத்தாலும் மேலமர்ந்து ஊர்கின்றவன் புண்ணியத்தாலும் அங்ஙனம் முன்செய்த வினைப்பயனை நுகர்வதாக வேறுபாடு காட்டி, அறவழி இதுதான் என உணர்த்தல் வேண்டாம்.

அங்ஙனம் கூறுவாரை மறுத்தது இது. மனமாசின்மையும் நற்குண நற்செயல்களுமே அறவழி எனக்காட்டற்குரியன. 'புணர்ச்சி பழகுதல் வேண்டா' (785), 'அஞ்சாமை அல்லால் துணைவேண்டா' (497), 'மழித்தலும் நீட்டலும் வேண்டா' (280), 'கைம்மாறு வேண்டா கடப்பாடு' (211) என்னும் இடமனைத்திலும் 'வேண்டாம்' என்றே வருதலை ஒப்புமை காட்டுவார் மூதறிஞர் வ.சுப.மா.

38. வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதுஒருவன்
வாழ்நாள் வழிஅடைக்கும் கல்.

நல்லது செய்வதற்கு நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டியதில்லை. நல்லதைச் செய்யும் நாளெல்லாம் வாழும் நாளாகும்; செய்யாதுவிடின் அது வீழ்நாளாகிப்போகும். வீழ்நாளாகி விடாதவாறு, மிகக் கருத்தோடு நல்லவற்றைச் செய்து வருவானாயின், அஃது ஒருவனது வாழ்நாள் எனப்படும் வழியில் வீழ்நாளாகிய இடைவெளிகள் ஏற்படாது அடைக்கும் கல்லாகும். அது வாழும் நாள்களின் தொடர்ச்சியைக் காக்கும் என்பதாம்.

வாழ்நாள் வழியடைத்தல் - வாழும் நாளுக்கு வழியமைக்கும் கல் என்பார் திரு.வி.க. வீழ்நாள்படாது காத்தால் எல்லா நாளும் வாழ்நாளாகும்.

39. அறத்தான் வருவதே இன்பம்மற்று எல்லாம்
புறத்த புகழும் இல.

உண்மையான, நிலைத்த இன்பம் அறத்தால் வருவதேயாம். பிற யாவும் இன்பத்திற்குப் புறம்பானவை, இன்பப் போலிகள், இறுதியில் துன்பம்

தருபவை. அவை புகழ் தருவனவும் அல்ல; இகழுடன் கூடியன; எள்ளி நகையாட வைப்பன.

பாவ வழிகளில் பணம் சேர்கிறது. ஊழல் புரிபவன் உயரப் பறக்கின்றான். எனவே பிற குறுக்கு வழிகளே இன்பம் தருமென உலகம் எண்ணி நடக்கிறது. அது பலூனை மேன்மேலும் ஊதிய கதைதான். வன்முறைகளால் வருவன வன்முறைக்கே இலக்காகும்.

40. செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.

ஒருவன் செய்யத்தகுவன யாவும் அறநெறிப்பட்ட நல்வினைகளே; அவன் கைவிடத் தகுவன யாவும் பழியொடுபட்ட தீவினைகளே.

உலகின் தடுமாற்றம் பெரிது. அறநெறி பணம் தருமா? மகிழ்ச்சி தருமா? மறநெறிகள்தானே அவற்றை எளிதில் தருகின்றன. இம்மனத்தடுமாற்றம் ஒவ்வொரு கணமும் ஏற்படுகிறது. நேர்முகமாகவும் எதிர்முகமாகவும் மீண்டும் மீண்டும் திருவள்ளுவர் அறநெறியையே வற்புறுத்துவதன் காரணம் மனத்தடுமாற்றத்தைப் போக்கவே. காரணமெல்லாம் காட்ட விரும்பாமல் திருவள்ளுவர் அடித்துச்சொல்லும் இடம் இது.

# இல்லறவியல்

திருவள்ளுவர் 'அறம்' என்றால், அஃது இல்லறம் ஒன்றையே குறிக்கும் என்ற கருத்துடையவர். அவர் புத்தர்போலத் தூய துறவை மேற்கொள்வதை மதித்தவர். ஆயினும் அஃது உலக இயற்கைக்குப் புறம்பாகவிருப்பதால், அதில் போலிகளே நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பதின்மர் இருப்பர் என அன்றே மிகமிக வலியுறுத்திக் கூறி, அக் 'கூடா ஒழுக்கத்தைக்' கண்டிக்கின்றார். அவர் காலத்தில் பௌத்தமும், சமணமும் துறவையே மிகவும் வலியுறுத்தின. எனவே தவம், துறவு போன்றவற்றை மடைமாற்றி இல்லறத்தவம், இல்லறத்துறவு என்பவற்றையே விளக்குகின்றார். இல்லறத்திலிருந்து கொண்டே காக்கும் பொறுமை, விருந்தோம்பல் முதலியவற்றை, வைதிக சமண பௌத்த நெறியினர் பெரிதாக வற்புறுத்திய துறவு, தவம் வேள்விகளைவிடச் சிறந்தவை என்று புதுவிளக்கம் தருகிறார். இவ்வாறு அவர் இல்லறம் ஒன்றற்கே சிறப்புத் தந்து, 'அதுவும் பிறன் பழிப்பதில்லையாயின் நன்று' எனத் துறவைப் பிறர் கருத்தாக மட்டுமே கூறுகிறார். இவ் இல்லறவியல் இல்லறதிற்கேயுரிய சிறந்த பண்புகளை விளக்குகிறது; துறவறவியல் இல்லறத்தில் வாழ்ந்துகொண்டே மனத்துறவு பூண்டு வாழ வேண்டிய மாண்புகளை விளக்குகிறது.

# 5. இல்வாழ்க்கை

இல்லற வாழ்வே பிறவாழ்வுநெறிகட்கு மேலானது என விளக்குவது. திருவள்ளுவர் காலத்தில் வைதிகம், சமணம், புத்தம் மூன்றும் வட நாட்டில் தழைத்து, தென்னாட்டிலும் புகுந்து விளங்கின. வடநூலார் கூறும் நான்கு வாழ்வு நிலைகளும் மக்களிடையே சிறப்பித்துக் குறிக்கப்பட்டன. அச்சூழலில், 'இல்வாழ்க்கை'யின் சிறப்பைத் திருவள்ளுவர் இவ்வியலில் வலியுறுத்துவதை உணர்ந்தால், அவருள்ளம் தெள்ளிதிற் புலனாகும்.

41. **இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை.**

இல்வாழ்வான் என்று சிறப்பித்துக் கூறப்படுபவன், இயல்பாக அந்நெறிகளில் வாழும் மூவர்க்கும், நன்னெறிப்பட நின்றுதவும் துணையாவான். அவர்களை நெறிக்கண்செலுத்தித் தானும் நெறிப்படி வாழ்பவன் என்பதாம்.

வள்ளுவர் காலத்திலேயே பிரமச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்ற நான்கு நிலைகள் இங்கும் நன்கு அறியப்பட்டிருந்தன. இவற்றுள் இல்லறமே பிறவற்றிற்கு மேம்பட்டது; அவற்றுக்குத் துணையாவது என வலியுறுத்துவது இது. வட நாட்டுச் சமயங்கள் ஏனைய மூன்றுக்குமே உயர்வு பேசும். 'இயல்புடைய மூவர்' என்றது, போலிகளல்லாமல் இயல்பாக நெறிப்பட வாழும் மூவர்க்கே, இல்வாழ்வான் துணையாவான் என்பதாகும்.

42. **துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை.**

எல்லோராலும் கைவிடப்பட்டுப் பற்றுக்கோடு அற்றவருக்கும் பசியால் வாடும் நல்கூர்ந்தார்க்கும் நீர்க்கடன் செய்வாரின்றி இறந்து போனார்க்கும் இல்லற வாழ்வினன் எனப்படுபவனே துணையாவான்.

முன்காலத்தில் அகதிகள், யாருமே உறவின்றி இறந்தவர் போல்வாரை, இல்லறத்தானே ஆவன செய்துதவும் சூழல் இருந்தமையால் இதற்குக் காரணம்.

43. **தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றுஆங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.**

தன்குல முன்னோர், வழிபடுதெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்திடத்துச் செய்யும் அறத்தையும் பேணுதல் இல்லறத்தானுக்குத் தலையாய கடமையாம்.

தன்னைப் போற்றிக் காத்தலும் அறமென்றது. தான் இன்றிப் பிற அறங்களைச் செய்தல் இயலாதென்பதை நினைவூட்டுகிறது. நடுகல் நட்டும், பிறவாறும் ஆண்டுதோறும் முன்னோர் நினைவைக் கொண்டாடினர். இன்று 'திவசம்' என்பது அதைச் சமற்கிருத மயமாக்கிய சடங்காகும். விருந்தினர்-முன் அறிமுகமில்லாத புதியவர்கள், உணவுக் கடை, சத்திரம் சாவடி இல்லாத காலம் அது.

44. **பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.**

உலகில் மனிதன் பழி வருமாறு வாழத்தூண்டும் சூழல்களே பலவாகும். இல்லறத்தான் பழி வருமோ என அஞ்சி, அது நிகழாவாறு காக்க வேண்டும். தான் தேடியதைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு வாழ வேண்டும். அங்ஙனம் வாழ்வானாபின் அவன் கால்வழி உலகில் நிலைபெறுமேயன்றிக் குறைப்பட்டு எக்காலத்தும் அழியாது.

பழி வருமோ என அஞ்சியஞ்சி வாழவேண்டும். செல்வத்தைக் குவிக்காமல் பதுக்காமல் பகுத்துக்கொடுத்துப் பின் தான் உண்ண வேண்டும்.

45. **அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**

இல்வாழ்வு இருவர் கொள்ளும் அன்பும் மற்றவருடன் கலந்து வாழும் அறமும் உடையதாயின், அவையே இல்லறத்தின் பண்பும் பயனும் ஆம்.

இருவர் அன்பு கொள்ளுதல் பண்பு; பிறருடன் கலந்து வாழ்தலில் பேணும் அறம் பயன்.

46. **அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்**
**போஒய்ப் பெறுவது எவன்?**

அறநெறியில் இல்வாழ்க்கையை ஒருவன் நடத்த வல்லவனாயின், அதற்குப் புறம்பான பிரமச்சரியம் முதலிய நெறிகளில், மிக முயன்று போய்ப் பெறும் பயன் யாது? எதுவுமில்லை.

'போஒய்' - அளபெடையில் ஏளனக் குறிப்புள்ளது. 'புறத்தாறு' என்ற சொல்லாட்சியும், இல்லறம் இருக்கும்போது அப் புறநெறிகள் எதற்கு என்ற வினாவும் வள்ளுவர் உள்ளம் யாதெனக் காட்டுகின்றன.

47. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

இல்வாழ்க்கையை அதற்குரிய இயல்போடு வாழ்பவன் என்பவன், வாழ்க்கையில் ஈடேறப் பிரமச்சரியம் முதலிய பலநெறிகளில் முயல்வார் அனைவருள்ளும் தலையானவன் ஆவான்.

வாழ்வில் முன்னேறவும் உயிர் உய்தியடையவும் என மானுடர் முயலும் துறைகள் பலவாகும். அவற்றுள் தலையாயது இல்லறமே. 'இயல்பினால்' வாழ்தல், அதற்குரிய அன்பும் பண்பும் கொண்டு வாழும் நெறிப்படி வாழ்தல்.

48. ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

துறவியர் முதலாகிய அனைவரையும் அவரவர் நெறிக்கண்ணே ஒழுகுமாறு செய்து, தானும் அறநெறியில் சிறிதும் வழுவாது வாழ்பவனது இல்வாழ்க்கை, துன்பங்களைத் தாங்கித் தவம் செய்வார்தம் தவ வலிமையிலும் மிக்க வலிமையுடையதாகும்.

பிறவாறு முயல்வாரைப் பேணிக்காப்பதும் இல்லறத்தானேயாம். முன்பு, துறவியர்களிடம் எச்செல்வமும் இல்லை. ஆகவே அவர்களைப் பேணி அவர்கள் தத்தம் நெறியில் நின்று வாழ இவனே துணையானான். இல்லறத்தான் தாங்கும் இடர்கள், துன்பங்கள் தவம் செய்வார் தாங்குவனவற்றிலும் கடுமையானவை; கூடுதலானவை என்று திருவள்ளுவர் கருதுகிறார்.

49. அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்வாழ்க்கையேயாகும். ஏனைய அத்துறவறமோ என்னில், அதுவும் பிறரால் பழிக்கப்படாது கைக்கொள்ளப்படுமாயின் நல்லதேயாம்.

'கூடா ஒழுக்கமே' மிகுதி எனப் பின்னரும் கண்டித்துக் கூறுதல் கருதத் தக்கது. 'அஃதும்' என்பதால், பிறர்கூறும் அதுவும் என்பதே கருத்து. திருவள்ளுவர்க்கு இல்லறமே உடன்பாடு; ஏனையதும் பழக்கப்படாத நிலையில் ஏற்கப்படலாம் என்பது அவர் எண்ணம்.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

வையகத்துள் இயற்கை படைத்த நியதிப்படி, இல்லறத்தில் வாழ்வாங்கு வாழ்பவன், வானின் உறையும் தெய்வங்கட்கு நிகராக வைத்துப் போற்றப்படுவான்.

பிற சமயவாதிகள் துறவறம் தவங்கட்குத் தரும் சிறப்பையெல்லாம் வள்ளுவர் இல்லறத்திற்குத் தரும் நுட்பம் காண்க. வாழ்வாங்கு வாழ்பவனைத் 'தெய்வம்' என்றே கூறுவது, அவர் கருத்தின் மணிமுடியாகத் திகழ்கிறது. பிறரெல்லாம் துறவியர் முன் மக்களை மண்டியிட வைத்தனர். அதற்கு நேர் எதிரான கருத்து இது.

## 6. வாழ்க்கைத் துணைநலம்

உலகில் இல்வாழ்க்கைக்குத் தலைவியும் துணையும் 'மனைவி'யே. வாழ்வின் அச்சாணியாய் இயக்கும் பெண்ணின் பெருமை, இல்வாழ்க்கை இருவருக்கும் உரிமையுடையது. ஆயினும் அவளது துணை இன்றியமையாதென்பது இதன் கருத்து.

51. **மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**

மனையறத்திற்குத் தகுந்த மாட்சிகள் உடையவளாய், தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக வாழ்க்கையை நடத்துபவள் அதற்குத் துணை ஆவாள்.

'தற்கொண்டான் வளம்' என்பதால் செல்வம் சம்பாரித்தற்குரியவன் அவன் என்பதும் அதற்கேற்ப வாழவேண்டும் என்பதால் அவளது துணைச்சிறப்பும் புலனாகின்றன. இன்றைய நம் குடும்ப அமைப்பு இது.

52. **மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித்து ஆயினும் இல்.**

மனையறத்திற்கு ஏற்ற மாட்சிமைகள் மனைவியிடம் இல்லையானால், வாழ்க்கை செல்வம் முதலியவற்றால் எத்துணை மாட்சிமை யுடையாயினும் பயனில்லை.

மாட்சிமைகள் நற்குண நற்செயல்கள் என்பார் பரிமேலழகர். பெண் செவ்வியளானால் வீடும் நாடும் செவ்வியதாகுமென்பது வள்ளுவர் கருத்து.

53. **இல்லதுஎன் இல்லவள் மாண்பானால், உள்ளதுஎன்**
**இல்லவள் மாணாக் கடை.**

இல்லறத்தில் இல்லவள் மாண்பே முக்கியம். அவள் மாண்புடையவளானால், இல்லாதது என்று எதுவுமில்லை. அவளிடம் மாட்சிமை இல்லையேல், உள்ளது என்று எதுவுமில்லை.

54. **பெண்ணின் பெருந்தக்க யாவுள? கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.**

கற்பு என்பது மனத்திண்மை, சலனமற்ற மனம், அசைவற்ற உறுதி, அவ்வுறுதி வாய்க்கப்பெற்ற இல்லாளைக் காட்டிலும் பெருமையுடையவை எவையுமில்லை.

ஆண் நல்லவனாவதும் பெண்ணின் கையிலிருக்கிறது என்னும் கருத்துத் தொனிக்கிறது.

55. **தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை.**

முன்பு கன்னியர் நல்ல கணவன் வாய்க்க இரவில் பிறை தொழுவர்; தெய்வம் தொழுவர். அங்ஙனம் தொழுதலால் நல்ல கணவனைப் பெற்று, மேற்கொண்டு தொழ வேண்டாமல், கணவனைத் தொழுதெழும் இல்லற நெறியைப் பெற்றவள் திருமணமான கற்புடைப் பெண். அவள் பெய் என்று சொன்னால் மழையும் பெய்யும்.

'பெண்ணின் திருமண வாழ்க்கை வற்புறுத்துவது இது. 'ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம், புல்லென் மாலை' (அகம் 239). மணம் செய்யாதும் வாழலாம் என்பது, வள்ளுவர்க்கு உடன்பாடன்று. அதை மறுக்க வந்த குறள் இது. பெண் எனப் பிறந்தவள் மணம் பெறுதல் வேண்டுமாம். 'மிக நலம் பெற்றாள் தமியள் மூத்தற்று' (1007) குறளை ஒப்புநோக்குக. 'அருமழை தரல்வேண்டின் தருகிற்கும் பெருமையளே' (கலி 39) என்பதால், மழையைக் கூடப் பெய்விக்கக் கூடியவள் என்பதே கருத்து. 'அவர் நினைத்தால் எதுவும் நடக்கும்' என்பது போன்ற உலக நடை இது.

56. **தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.**

தன்னைக் காத்து, தன்னைக் கொண்டவனைப் பேணி, பெருமை மிக்க குடும்பப் புகழைக் காத்து, தனது குடும்பக் கடமைகளை ஆற்றுதலில் சோர்விலாதவளே 'பெண்' எனச் சிறப்பித்துச் சொல்லப்படுபவள் ஆவாள்.

இக்குறள் கண்ணகியை நினைவூட்டுகிறது. இறுதியில் 'தகை சான்ற சொல்லைக் காத்தாள்' அல்லவா?

57. **சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.**

பெண் தன்னைத்தான் காத்துக் கொள்ளவேண்டும். அவளைச் 'சிறை' வைத்துக் காக்கும் காப்பு பயன்படாது; தன் மனத்தை ஒருவழி நிறுத்தும். 'நிறை காக்கும் காப்பே' சிறப்புடையது.

நிறைகாத்தல் - நிறுத்திக்காத்தல். தன்மனத்தைக் கண்டபடி ஓடவிடாது ஒருவழி நிறுத்துதலே நிறை.

58. பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

தன்னைத் தனக்குரிய மனைவியாகப் பெற்ற கணவனை, தான் தனக்குரிய கணவனாகவும் பெற்று இணைந்து வாழும் வாழ்வு பெற்றால், அப்பெண்டிர் இவ்வுலகில் மட்டுமன்று, தேவர்கள் வாழும் உலகிலும் பெருஞ்சிறப்புப் பெறுவர்.

உரியராகப் பெறுதல் அத்துணை ஒருவருக்கொருவர் உறவுரிமையுடையராதல். இங்கு மட்டுமென்ன; தேவருலகிலும் சிறப்புண்டாகும் என்ற உலகியல் நடை இது.

59. புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

தன்னை உலகம் புகழ்ந்து போற்ற வேண்டுமென்ற விருப்பமிக்க மனைவியைப் பெறாதார்க்குத் தம்மை இகழ்பவர்முன் ஏறுபோல் பெருமித நடை நடத்தல் இயலாது.

தலைவனின் பெருமிதம், சிறப்புக்கெல்லாம் அவளே காரணமெனக் கூறுகிறது, இக்குறள்.

60. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

உலகில் மக்களுக்கு மனையறமாட்சியே மங்கலமான வாழ்வாகும். அம் மங்கல வாழ்வின் நன்கலம் - அணிகலம் நல்ல மக்களைப் பெறுவதாகும்.

இங்குக் கூறியவை ஆணுக்கும் பொருந்தும். ஆயினும் மனத்திண்மை, ஒருமை மனம், பொறுப்பு யாவும் மிக்கவள் பெண். அவளைத் திருத்துதல் எளிது. அதனால் குடும்பத்தை அவள் கையில் ஒப்படைப்பது நம் பண்பாடு.

பெண் திருந்தினால் ஆண் திருந்துவான். இருவரும் திருந்தக் குடும்பமும் குடும்பம் திருந்த மன்பதையும் மன்பதையெல்லாம் திருந்த உலகமும் திருந்துமென முன்னோர் எண்ணினர். தமிழ்ப் பண்பாடு மட்டுமன்றி, ஆசியப் பண்பாட்டிலும் இதன் வீச்சைக் காணலாம்.

# 7. மக்கட் பேறு

பெறுவது பேறு, பேறுகளுள் சிறந்தது பிள்ளைப்பேறு. நாம் நாமாக உலகறிய விட்டுச் செல்வது பிள்ளைச் செல்வமே. 'என்றும் பதினாறு' என்பது உண்மையில் வழிவழிப் பிள்ளைச் செல்வத்தையே குறிக்கும்.

61. **பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற.**

அறிய வேண்டியவற்றை அறியும் அறிவுள்ள மக்களைப் பெறுவதைத் தவிர, உலகில் நாம் பெறக்கூடிய சிறந்த பேறென்று, வேறெதையும் யாம் அறியவில்லை.

முதற்குறளில் அறிவுள்ள பிள்ளையென்றவர், அடுத்ததில் பண்புள்ள பிள்ளையைக் கூறுகிறார். 'யாம்' என வள்ளுவர் தம் நேர்கூற்றாகத் தன்மைப் பன்மையில் கூறுமிடம் இது.

62. **எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின்.**

அறிவுள்ள மக்களைப் பெறுவது பெறற்கரிய பேறு. அதனினும் பழியொடு படாத, பண்புள்ள மக்களைப் பெற்றால், பெற்றவர்க்கு ஏழுபிறப்பிலும் தீயவை வந்து தொடா

தாம் பண்பிற் சிறந்து விளங்கினாலன்றிப் பண்புள்ள மக்களைப் பெறுதல் இயலாது. பிள்ளைகளின் அறிவுக்கூர்மை, பண்புடைமை எல்லாம் பெற்றவர் வழியேதான் தொடர்கின்றன.

63. **தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்**
**தம்தம் வினையான் வரும்.**

தாம் பெற்றுத்தரும் தமது மக்களை தமக்குரிய செல்வம் அவர்தம் பொருட்செல்வம் அவரவர்தம் வினைமுயற்சிகளுக்கு ஏற்ப வரும். அவை அவர் படைப்பன அல்ல.

தாமே படைக்கும் தமது செல்வமாதலால், உயர்ந்த மக்கட்பேற்றை உருவாக்குமாறு அறிவும் பண்பும் நிறைந்த வாழ்வு வாழ்க என்பது கருத்து.

64. **அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்.**

தாம் பெற்ற மக்கள் தம் மழஇளங் கைகளினால் தொட்டுத் துழாவிய உணவைத் தாம் உண்ணுங்கால் அது அமிழ்தத்தைவிட மிகவும் இனிதாயிருக்கும்.

'தம் மக்கள்' எனக் கூறுவதில் தமக்குரிய மக்கள் அளாவினால் அது இனிதாக இருக்குமென, உரிமை பற்றிய உளவியல் உளது.

65. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்; மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

தோள்மீதும் மார்மீதும் தூக்கி அணைக்குங்கால், தம் குழந்தைகளின் மெய்யைத் தீண்டுதல் தம் உடலுக்கு இன்பம் தரும். அவர்தம் மழலைச் சிறுகுதலைச் சொற்களைக் கேட்பது செவிக்கு இன்பம் தரும்.

66. குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

தாம் பெற்ற மக்களின் மழலைப் பேச்சைக் கேட்காதவர்கள்தான், குழல் இனிதென்றும் யாழ் இனிதென்றும் சொல்வார்கள்.

இவை பெற்றவர்தம் அனுபவ வெளிப்பாடுகள், பிள்ளை பெற்றவர் எல்லாம் இவ் அருமையை அறிவர்.

67. தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்யக்கூடிய நன்மை, கற்றோரவைக்கண் முந்தி அமருமாறு, அவனைக் கல்வித் தகுதியுடையவனாக்குவதாகும்.

குழந்தை வளர்ப்புப் பற்றியது இது. மகனுக்குச் சொத்து, சுகம், செல்வம் சேர்த்து வைக்க வேண்டும் என்னாமல், நன்கு படிக்க வைத்து அவையில் முந்தியிருப்பச் செய்ய வேண்டும் என்று கூறுகிறார்.

68. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.

தம்மைவிடத் தம் மக்கள் கூடுதல் அறிவு பெறுமாறு வளர்ப்பதே சமுதாய வளர்ச்சிக்கு அறிகுறி. அங்ஙனம் ஆதல் உலகத்தில் நிலைபெற்ற உயிர்கட்கெல்லாம் இனிதாகும்.

தம் மக்கள் அறிவுடையரானால், அது தனக்கன்றோ இனிதாகும். உலகிற்கு எவ்வாறு இனிதாகும்? உலகம் அதைப் போற்றும்; மதிக்கும்; அதன்வழி நடக்கும்; ஆகவே அஃது உலகிற்கும் இனிதாகிறது.

69. **ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தம்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்.**

தன் மகனைக் கல்வி கேள்வி பண்புகளால் நிறைந்த சான்றோன் என ஊரார் பேசக்கேட்ட தாய், அவனைத் தான் ஈன்ற ஞான்றினும் பெரிது உவப்பாள்!

உலகம் புகழும்போது, கேட்கும் பெற்றவர் மனம் மகிழ்ச்சியில் துள்ளும். முன்பு பெற்றவர் கடமையைக் கூறியவர், இங்கு மகன் தான் உலகம் புகழுமாறு வாழ்ந்து பெற்றவரை மகிழ்விக்க வேண்டும் என்கிறார்.

70. **மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்எனும் சொல்.**

தன்னைக் கல்வித் தகுதியால் கற்றோரவைக்கண் முந்தி இருக்கச்செய்த தன் தந்தைக்கு மகன் செய்யக்கூடிய கைம்மாறான உதவி, 'இவனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவம் செய்தானோ' என ஊரார் சொல்லும் சொல்லாகும்.

## 8. அன்புடைமை

அன்பு ஊற்றுப்போல் பெருக்கெடுக்கும் உணர்வு; உயிரிருப்பதைக் காட்டும் புறத்தோற்றம். அன்பினால் கண், முகம், கை அசைவுகள் - சைகைகள் தாமே வெளிப்படும். அதனால் உயிருண்மை புலப்படும்.

71. **அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
**புன்கண்நீர் பூசல் தரும்.**

அன்பு அருவப்பொருள் அது எவ்வாறு புலப்படும்? அன்பை அடைத்துத் தாழிட முடியாது. தனது அன்புக்குரியாரின் துன்பம் கண்டுழி, ஆர்வலராம் அன்புடையாரது புல்லிய கண்களில் வழியும் கண்ணீரே 'நான்தான் அன்பு நான்தான் அன்பு' எனப் பூசலிடுவதுபோல் வெளிப்படுத்திவிடும்.

அன்புள்ளம் துன்பம் கண்டவிடத்துத் தன்னையறியாது கண்ணீராய் வெளிப்பட்டுவிடும். அன்பு என்ற நுண்பொருளை அக்கண்ணீர் என்ற பருப்பொருளால் கண்ணாற் காணலாம்.

72. **அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

அன்பு உள்ளத்துள் ஊறிவிட்டால், அது எதையும் கொடுத்துவிட முந்தும் மனத்தைத் தரும். அன்பில்லாதார் எல்லாம் தமக்கு தமக்கு எனக் கொள்வர்; அன்புடையாரோ தமது உடல் எலும்பையும் பிறர்க்குத் தருவர்.

புத்தர் அம்பினால் அடிப்பட்ட புறாவுக்காகத் தமது உடலையும் அரிந்துதர முன்வந்தமையை நினைவு கொள்க.

73. அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

ஆருயிர் கண்ணுக்குத் தெரியாது. அது எலும்புக்கூடான உடலுடன் கூடிய வழியே தெரியும். அங்ஙனம் உயிர் உடம்பொடு கூடிய தொடர்பை நமக்கு வெளிப்படக் காட்டுவன அன்பொடு கூடிய செயல்களேயாகும்.

என்னிடம் அன்புளது அன்புளது என்று ஒருவர் சொன்னால் போதுமா? அன்புடைமை, செயல்களின் வழியேதான் வெளிப்பட வேண்டும். மேலும் உயிருக்கு உடம்போடு தொடர்பு உள்ளதென்பதை, அன்பு வழிப்பட்ட செயல்கள் மூலமே வெளிப்பட அறியலாம்.

74. அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.

நாம் அன்புடையவராக இருந்தால், மற்றவர்கள் பலருக்கு நம்மொடு பழகும் ஆர்வத்தை அது உண்டாக்கும். அது நட்பு எனும் சிறப்பை, நாம் தேடிப்போகாது தானே நம்மை வந்தடையச் செய்யும்.

75. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

வையகத்தில் இன்புற்று வாழ்பவர்கள் எய்தும் சிறப்பினை, அன்பொடு பொருந்தி வாழ்தலால் வந்ததென்று கூறுவர்.

அன்புற்று வாழ்வாரே இன்புற்று வாழ்வர் என்பதாம்.

76. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

அறச்செயல்களுக்கு மட்டுமே அன்பு துணையாகும் என்பர், அறியார்; தீமையை எதிர்க்கும் வீரச்செயல்களுக்கும்கூட அந்த அன்பே துணையாகும்.

கோழி தன் குஞ்சுகளைக் காக்கப் பருந்தினை எதிர்ப்பது போன்றது அது.

77. **என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்.**

எலும்பில்லாத புழுக்களின் உடலை வெயில் காய்ந்து வருத்தும். அதுபோல அன்பு இல்லாத உயிரை அறமெனும் பேராற்றல் காய்ந்து நலியச் செய்யும்.

அன்பு உயிரது ஆற்றலை வளர்க்கும்; துன்பத்தைத் தாங்கும். ஆற்றலைத் தரும். 'அறம் உயிர்க்கு ஆக்கம்' என்ற கருத்தை ஒப்பிடுக. வெயில், மழை, காற்று முதலியன போல அறமும் ஓர் நுண்பொருள் ஆற்றல் - கண்ணுக்குத் தெரியாத பேராற்றல்.

78. **அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரம்தளிர்த் தற்று.**

அன்பு என்ற ஈரம் உள்ளே இல்லாது உயிர்வாழ்ந்தால் அவ்வாழ்வு, ஈரமே இல்லாத வலிய மேட்டுநிலத்தில் ஏற்கெனவே வற்றிப்போய் நிற்கும் மரம் தளிர்க்க முயல்வது போலாகும்; தளிர்க்க மாட்டாது தவிக்கும் என்பதாம்.

நிலமும் வலிய பாறை; மரமும் வற்றிப் போயுளது. அன்பில்லாத மனத்துடன் வாழ முயல்வதும் அது போன்றதே.

79. **புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும்? யாக்கை**
**அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.**

புறத்துறுப்புக்கள் கை கால் முதலியன; அகத்துறுப்பு அன்பு. உறுப்புக்களால் யாக்கப்பட்ட இவ்வுடலில், அகத்துறுப்பாகிய அன்பு இல்லையேல், புற உறுப்புக்கள் என்ன பயனை விளைவிக்கப் போகின்றன? புற உறுப்புக்கள் அன்பால் இயக்கப்பட்டால்தான் பயனுண்டு.

80. **அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு.**

உடலில் உயிர் நிலைபெறுவது, அன்பின் வழிப்பட்டதேயாகும் எனவே ஒருவருக்கு உயிர் இருக்கிறது என்பதற்கு அடையாளமே அவ் அன்புதான். அன்பு இல்லாதாரது உடம்பு, எலும்பும் தோலும் போர்த்த உடலேயன்றி, உயிருடையதாகாது.

மாந்தர்தம் உயிரிருப்பைக் காட்டும் புற அடையாளம் அன்பே என்பதைப் பல கோணங்களில், திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார்.

# 9. விருந்தோம்பல்

சத்திரம், சாவடி, உணவு விடுதி என எதுவுமில்லாத அக்காலத்தில், ஊருக்குப் புதியராய் வந்தாரைப் பார்த்து, அழைத்துச் சென்று, விருந்து படைப்பது இல்லறத்தார் கடமையாயிருந்தது. சங்க காலச் சமுதாயத்தில், புதியவர் (விருந்தினர்) 'யாரும் உளீரோ' எனக் கேட்டுவிட்டுப் பிறகே கதவடைப்பர். அந்த அளவு விருந்தினரைப் பேணுதல் இல்லறத்தார் கடமையாயிருந்தது.

81. **இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

வீட்டிலிருந்து இல்லறம் பேணி வாழ்வதனைத்தும் எதற்காக? நாளும் விருந்தினரைப் பேணவும் பிறர்க்கு உதவிகள் செய்தற்பொருட்டுமேயாம்.

வேளாண்மை செய்தல் - பிறர்க்கு உபகாரம் செய்தல்; வேண்டியன உதவுதல்.

82. **விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று.**

விருந்தினர் வீட்டின் புறத்தே இருக்கத் தானுண்பது சாவா மருந்தாகிய அமிழ்தமேயாயினும் விரும்புத் தக்கதன்று.

முன்பு வீட்டின்முன் புறத்திண்ணை உண்டு. ஊருக்குப் புதியவர் அதில் வந்து அமருவர்; உண்ணப் போகும்போதும் உறங்கப் போகும்போதும் வெளியில் எட்டிப் பார்த்துக் கதவைத் தாழிடுவது வழக்கம்.

83. **வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று.**

நாள்தோறும் தன்னிடம் வரும் விருந்தைப் பேணுவானது வாழ்க்கை, வறுமைப்படுமோ என அஞ்சுவது இயல்பு. வள்ளுவர் அவ்வாழ்வு, வறுமையால் வாடிப் பாழ்படாது என்று வற்புறுத்துகிறார்.

விருந்தைப் பேணும் உள்ளம் முயற்சியுடையதாயிருக்கும். எனவே அது வறுமைப்பட விடாது.

84. **அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்.**

பாழ்படாது என்பது மட்டுமன்று; செல்வமும் பெருகுமாம். முகம் மலர்ந்து தக்க விருந்தினரைப் பேணுவானது இல்லத்தில், உள்ளம் மகிழ்ந்து திருமகள் வந்து உறைவாள். 'நல்விருந்து' எனும் தொடர், விருந்து படைத்தற்குத் தகுதியுடையாரையும் குறிக்கிறது.

85. **வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்துஓம்பி**
**மிச்சில் மிசைவான் புலம்.**

விருந்தை முன்னதாகப் பேணிப் பின்பு மீதமிருப்பதனைத் தான் உண்ணுவானது நிலத்தில், விதை விதைத்தலும் வேண்டுமோ? வேண்டா; தானாக விளையும் என்றவாறு.

"அவன் செய்த நல்லதுக்கு நிலம் தானாக விளையுமப்பா!" என்று பேசும் உலக வழக்கை ஒப்பிடுக. 'விதைக்கவும் வேண்டுமோ? தானே விளையாதோ?' என வியந்து கூறுமிது ஓர் உலகநடை.

86. **செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு.**

உண்டு செல்லும் விருந்தை உபசரித்து அனுப்பி, பின்னும் விருந்து வருகிறதா என்று எதிர்பார்த்துக் காத்திருப்பவன் வானுலகத்தவர்க்கு நல்ல விருந்தாய், அங்கு வரவேற்கப்படுவான்.

வரவு பார்த்தல் விருந்தின்றி உண்ணாமை என்பர் மடணக்குடவர். மறுமையிலும் பயனுண்டென ஊக்கப்படுத்தியவாறு. இங்கு விருந்து படைத்தலை வற்புறுத்தவே, மேலுலகில் நீ வரவேற்கப்படுவாய் என்ற தொடர் வருகிறது. அழுத்தம் இவ்வுலகின் மேலதே என்ற கருத்தை செருமானியப் பேரறிஞர் ஆல்பர்ட்டு சுவைட்சர் சுட்டிக் காட்டுவர்.

87. **இனைத்துணைத்து என்பது ஒன்றில்லை விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன்.**

விருந்தின் பயன் இத்துணை அளவினது என அளப்பதற்கோர் அளவுகோல் இல்லை. இங்கு செய்யும் விருந்தின் அளவு எவ்வளவோ, அதன் அளவு வேள்வி செய்ததன் பயன் உண்டு.

தேவர்களுக்கு 'விருந்து' படைப்பது 'வேள்வி'. திருவள்ளுவர் உலகில் வைக்கப்படும் 'விருந்தும்' ஒரு வேள்வியே எனக் கருத்துடையவர். மேலும் கண்காணாத தேவர்களுக்குச் செய்யும் வேள்வியைவிடக் கண்கண்ட மானிடர்க்குச் செய்யும் விருந்தாம் வேள்வி சிறந்ததென்பது அவர் கருத்து.

வேள்வியின் பயன் விருந்திலேயே கிடைக்குமென்பது, அவ்வேள்வியை மறுக்காமல் மறுப்பது. நுட்பமாய்ச் சிந்திக்கச் சிந்திக்க இவ்வுண்மை புலனாகாமற் போகாது.

88. **பரிந்துஓம்பிப் பற்றுஅற்றேம் என்பர் விருந்துஓம்பி
வேள்வி தலைப்படா தார்.**

உலக விருந்தினரைப் பேணுதலாகிய இவ் வேள்வியை மேற்கொள்ளாதவர்களே, மிக வருந்திக் கட்டப்பட்டுப் 'பற்றற்றேம்' என்ற துறவு பூண்டு இடர்ப்படுவர்.

அவ்வேள்வியினும் இவ்வேள்வி (விருந்து) எளிது, சிறந்தது. 'பரிந்து ஓம்பிப் பற்றை விட்டோம்' என்பது எதற்காக என்ற கேள்வியல்லவா தொனிக்கிறது? 'விருந்தோம்பும் வேள்வி' என்னும்போது உயிர்க்கொலை செய்தும் உலகோர்க்குப் பயன்படும் உணவு, பிற விலை மதிப்புள்ள பொருள்களனைத்தையும் அக்கினியில் போட்டும் செய்யும் வேள்வியை மறுக்காமல் மறுக்கவில்லையா?

89. **உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.**

தன்னிடமிருக்கும் செல்வத்தைப் பயன்படுத்தவில்லையென்றால் அதுவும் ஒரு வறுமைதான். அதற்கு 'உடைமையுள் இன்மை' (செல்வத்துள் வறுமை) என்று பெயர். விருந்தைப் பேணாது இகழும் மடமை, அவ்வறுமையே ஆகும். அது அறிவிலிகளிடம் காணப்படும்.

90. **மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.**

அனிச்ச மலர் முகர்ந்த அளவில் வாடிவிடும்; அதுபோல முகத்தைச் சற்றே மாறவைத்துக் கொண்டு நோக்கினாலும், விருந்தினர் வாட்டமுறுவர்.

உள்ளன்போடு செய்யும் விருந்தே சிறந்தது. 'விருந்து பேணுதல்' நல்லது என்று சொல்லப்படுகிறதே என்பதற்காக, அதை ஒரு சடங்குபோல் செய்வது பயன்படாது.

## 10. இனியவை கூறல்

இன்னாத கடுஞ்சொற்களை நீக்கி, இனிய சொற்களைப் பேசப் பழகுதல்.

91. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

இன்சொலாவது யாதெனில் நெஞ்சில் உள்ள ஈரம் (அன்பு) கலந்து, வஞ்சனையற்ற சொற்களாயிருக்க வேண்டும்; மெய்ம்மைப் பொருளை உணர்ந்த சான்றோர் வாயிற் பிறந்தவையாகவும் இருத்தல் வேண்டும்; அவையே இன்சொல்லாகும்.

ஏமாற்றும் பொய்யர்களின் வஞ்சகப் பேச்சும் இனிதாக இருக்கும்; அது இன்சொல் ஆகாது. இம் முதற்குறள் இன்சொல்லின் இலக்கணம் கூறுகிறது. சொல்லை வைத்து, இன்சொல் என நம்பிவிடாதே; சொல்பவரும் நல்லவரா என்று பார்த்துக்கொள் என்பது, எத்துணை உலகியல் சார்ந்த உண்மை என எண்ணிப் பார்க்கவேண்டும். இவ்வாறு சில அதிகார முதற்குறள்கள், அல்லது இறுதிக்குறள்கள் புதிய இலக்கணம் கூறும் குறள்களாக இருப்பதைத் தொகுத்து நோக்க வேண்டும்.

92. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலீ னாகப் பெறின்.

ஒரு வழக்காடு மன்றம்: முகம் மலர்ந்து இன்சொல் பேசுவது நல்லதா? மனம் மகிழ்ந்து ஒரு பொருளை ஈவது நல்லதா? மனம் உவந்து ஒரு பொருளைக் கேட்டார்க்கு ஈவதைக் காட்டிலும், முகம் மலர்ந்து இன்சொற்பேசுபவன் ஆகப் பெற்றால் அதுவே நல்லது.

ஈவது பொருள் இருப்பதைப் பொறுத்தது. இன்சொல் இயல்பாக அமைய வேண்டிய குணம். பின்னது அமைவதன் அருமை நோக்கி, முன்னதிலும் நல்லதென்றார் இரண்டையும் ஒப்பிட்டு வள்ளுவர் சொல்லும் தீர்ப்பு நம்மைச் சிந்திக்க வைக்கிறது.

93. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.

மனிதனிடம் அறவெளிப்பாடுகள் பல. அதில் ஒன்று இது. முகத்தால் விருப்பத்தைப் புலப்படுத்தி மலர்ந்து, இனிதாகப் பார்த்து உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஓடிவரும் இன்சொற்களைப் பேசுவதே அறமாகும்.

இன்சொல் பேசும் மெய்ப்பாடு இக் குறளில் படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

94. துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

எல்லோரிடத்திலும் அவர்கள் இன்புறுமாறு இனிய சொற்களைப் பேசுபவர்களைத் தொழிலில், வணிகத்தில், அலுவல்களில் பார்க்கிறோம். அங்ஙனம் பழகும் அவர்களுக்குத் துன்பத்தைத் தரும் வறுமை என்றும் ஏற்படாது.

இன்சொல் பேசுதலால் வணிகம் வளர்வதை அமெரிக்கப் பேரறிஞர் டேனியல் கார்னல்கி எடுத்துக்காட்டியுள்ளார். அலுவலகத்தில் கூட, அத்தகையவர்களையே வாடிக்கையாளர்கள் நாடுகின்றனர்.

95. **பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணியல்ல மற்றுப் பிற.**

பணிவும் இன்சொல்லும் ஒருசேர வாய்க்கப்பெற்ற ஒருவன் பலரிடையே பழகும்போது விளங்கித் தோன்றுவான். அவனுக்கு அவை அணிகலன்களாய் அவன் தோற்றத்தை, ஆளுமையை மேம்படுத்திக் காட்டும். பிற உடம்பில் அணிவன அத்துணைச் சிறந்த அணிகலன்கள் அல்ல.

எத்துணைச் செல்வனாயினும் அறிஞனாயினும் இவை இரண்டும் ஒருவனது ஆளுமையை மேம்படுத்தும் என்பது வள்ளுவர் கருத்து.

96. **அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்.**

நல்லவற்றையே ஆராய்ந்து, சிந்தித்து அவற்றை இனிதாகச் சொல்ல வேண்டும். அங்ஙனம் பேசினால் அல்லவை - பாவங்கள் தேயுமாறு அறவலிமை பெருகும்.

'அறம் வளரவளரவே அறமல்லாதவை தேயும்.' ஒரு வரையறை விதி. அல்லவற்றை அழிக்க அவற்றொடு போராடுவது மட்டும் போதாது; நல்லவற்றை வளர்க்க வளர்க்கவே அல்லாதவை தாமாய்த் தேய்ந்து அழியும். ஒளி கூடக் கூட இருள் குறைந்து, மறைவதுபோல, நல்லவற்றை வளர்க்க வளர்க்கவே அல்லன தேய்ந்து குறைந்து மறையும்.

97. **நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**
**பண்பின் தலைப்பிரியாச் சொல்.**

பிறர்க்கும் தனக்கும் நல்ல பயனைக் கொடுத்து, பண்பை விட்டு விலகாத இனியசொல், பேசுபவனுக்கு விரும்பத் தகுந்த சிறப்பைக் கொடுத்து, நன்மையையும் விளைவிக்கும்.

98. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

சிறுமைக் குணங்களின் நீங்கிய இன்சொல் அதனைப் பேசுபவனுக்கு மறுபிறப்பிலும் இப்பிறப்பிலும் இன்பம் தரும்.

சில்லரைக் குணங்களுடன் கூடியும் இன்சொல் பேசப்படும். அது இரண்டு பக்கமும் துன்பம் தரும். இன்சொற் போலிகள் பலவுள. அவை இன்சொல் போல இனிதாகப் பேசப்பட்டு வஞ்சனைக்குப் பயன்படுத்தப்படும். அதனால் விழிப்புணர்த்துகிறார்.

99. இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

பிறர் கூறும் இன்சொல்லால் தனக்கு இன்பம் பிறத்தலை அறிகின்றவன், பிறரிடத்து வன்சொற்களைப் பேசுவது ஏனோ? 'இது கூடவா விளங்காது?' எனக் கேட்பது இது.

100. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

நல்ல இனிய கனிகள் கைவசம் இருக்கவும், யாரேனும் காய்களை விரும்பித் தேடிப் போய்க் கைப்பற்றி உண்பார்களா? இனிய சொற்கள் நிரம்ப இருக்கவும் இன்னாத துன்பம் தரும் கடுஞ்சொற்களைப் பேசுவது காய்களைத் தேடி உண்பதற்கு ஒப்பாகும்.

## 11. செய்ந்நன்றி அறிதல்

ஒருவர் செய்த உதவியை, நன்மையை நினைத்துக் கொள்ளுதல். உலகில் பலருக்குத் தாம் பிறர்க்குச் செய்த நன்மையே நினைவில் நிற்கும்; பிறர் தமக்குச் செய்த உதவி மறந்துபோகும். கைம்மாறு கருதாதது செய்ந்நன்றி. அந் நன்மையைச் செய்து கொண்டவன்தான் நினைந்து போற்ற வேண்டும்.

101. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

தான் முன்னதாக எவ்வித உதவியும் செய்யாதிருக்கவும் தனக்கு ஒருவர் உதவி செய்வாராயின், அவ்வுதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.

காரணமின்றியும் செய்யும் உதவிகள் ஒப்பற்றவை. எதிர்பார்ப்பிலாது அன்பு செலுத்துதல், எதிர்பார்ப்பிலாது உதவுதல் ஆகிய இவை செய்து கொண்டவரைப் பொறுத்தவரை, அவர்க்கு உலக வாழ்வே இவற்றால்தான் உளதாகின்றது. அதனால் இவை உலகைவிட ஒப்பற்றவை ஆகின்றன.

102. காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

உதவி தேவைப்படும் காலத்துச் செய்த உதவி, ஆபத்துக் காலத்தில் செய்த உதவி, இறுதி நேரும் சமயத்தில் காப்பாற்றச் செய்த உதவி என்பன தக்க காலத்தால் செய்த உதவிகளாகும். அது அளவால் சிறிதாயினும் அக்காலத்தை நோக்க இந்த ஞாலத்தை விட மிகப்பெரியதாகும்.

அவ்வுதவியின்றேல், அவர் இஞ்ஞாலத்தை இழக்க நேருமல்லவா? எனவே அவரைப் பொறுத்தவரை அது இஞ்ஞாலத்தைவிடப் பெரிதுதானே?

103. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

.லகியலில் உதவி செய்வாரில் பெரும்பான்மையினர் அதில் ஏதும் பனுண்டா என்று கருதியே உதவுவர். பயன் எவ்வளவு கிடைக்குமென்று ஆராயாமல் ஒருவர் செய்த உதவியின் நன்மையை அளந்து பார்த்தால் அது கடலைவிடப் பெரிதாகும்.

அளந்து பார்த்தால் பயன் கருதாது உதவும் உதவிகளாலேதான் உலகில் மிகுதியான பயன் விளைகிறது. மானுட நேயம் அது. அத்தகைய உதவிகள் மிகச் சிலவேயாயினும், அவற்றின் பயன் அளப்பரியது.

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

உதவி பெற்றவர், 'இது என்ன பெரிய உதவி' என்று உதவியை சிறுமைப் படுத்தக்கூடாது. உதவியின் பயனை அறிந்தவர்கள், பிறர் தமக்குத் தினையளவு நன்மை செயினும் அதைப் பனையளவிற்றாகப் பெருமைப்படுத்திக் கொள்வர்.

எப்பொழுதும் பிறர் செய்யும் சிறு உதவியையும் பெரிதாக மதிக்க வேண்டும். உடனே நன்றி சொல்ல வேண்டும்.

105. **உதவி வரைத்துஅன்று உதவி உதவி**
**செயப்பட்டார் சால்பின் வரைத்து.**

ஓர் உதவி அந்த உதவியின் அளவைப் பொறுத்தன்று; அவ்வுதவி யாருக்குச் செய்யப்பட்டதோ, அவரது சால்புடைமையையே தனக்கு அளவாகவுடையது.

உதவியைப் பெற்றுக்கொண்டவரால், உதவி பெருமை பெறும். எனவே தக்கார்க்கு உதவுக என்பதாம். உதவும் பண்பே சிறந்தது என்பதற்காகக் கண்டபடி உதவுதல் எனல் தவறு. தக்கார்க்கு, தகுந்த சமயத்தில், தக்கபடி உதவுதல் வேண்டும். அவ்வுதவியே சிறந்த உதவி.

106. **மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**
**துன்பத்துள் துப்பாயார் நட்பு.**

உதவியால் நட்பும் நட்பால் உதவியும் தொடரும் தன்மையன. துன்பம் வந்தபோது பற்றுக்கோடாய் நின்று உதவியவர் நட்பினைக் கைவிடாதீர்! எல்லா வகையாலும் குற்றமற்றவர் உறவை மறவாதீர்! அவை காலமெல்லாம் பயன்தர வல்லன. நட்பை விடாதிருத்தல் நன்றியறிதலாகும்.

107. **எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விழுமம் துடைத்தவர் நட்பு.**

தம்மிடம் நேர்ந்த கடுந்துன்பங்களைப் போக்கியவர் நட்பினை, ஏழேழு பிறப்பிற்கும் நல்லோர் நினைத்துக்கொள்வர்.

என்றென்றும் மறக்கக்கூடாது என்பதை இங்ஙனம் கூறுவது ஒரு மொழிநடை மரபு.

108. **நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று.**

ஒருவர் செய்த நன்மையை மறப்பது நன்றன்று; என்றும் நினைவிற் கொள்ளவேண்டும். அவர் செய்த தீமையை, அது நிகழ்ந்த அப்பொழுதே மறந்துவிட வேண்டும். அதுவே நல்லது.

பிறர் செய்த தீங்கை நினைவிற் கொள்வதும் நன்மையை மறந்துவிடுவதும் காழ்ப்பேறிய மனத்தின் செயலாகும். அது தவறு. தீமையை என்னாது, 'நன்று அல்லது' என்று சொல்லும் முறையே தீமையை மறக்கடிக்கும் சொல் நடைதானே?

109. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

முன்பு நமக்கு நன்மை செய்த ஒருவர், பின்பு கொன்றால் எப்படியோ அத்தகைய கொடிய தீங்குகளைச் செய்தாராயினும், அவர் முன்பு செய்த அந்நன்மை ஒன்றனையும் நினைக்க, அவையெல்லாம் நீங்கும்

முற்கூறிய குறளின்படி மறக்கப் பழக வேண்டிய முறையைக் கூறுகிறது.

110. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

உலகில் எந்த நன்மையைச் சிதைத்தவர்க்கும் அதிலிருந்து உய்யும் வழியுண்டு; ஆனால் பிறர் செய்த நன்றியைக் கொன்றவர்க்கு உய்யும் வழியே கிடையாது.

செய்ந்நன்றி கொல்லுதல், செய்த நன்மைக்குப் பதிலாகத் தீங்கு செய்தல் 'நன்றி மறந்தவர்' என்னாது, 'கொன்றவர்' என்ற சொல்லாட்சி கருதத்தக்கது. உலகியலில் 'நன்றி கொன்றவர்' எனுமாறு நடந்து கொள்பவரே பலராவார்.

## 12. நடுவுநிலைமை

ஒரு சார்பு படாது நட்பு, பகை இரண்டிடத்தும் ஒப்ப நிற்கும் நிலைமை. கருத்து வேறுபாடுகளில், செல்வம் சேர்த்தலில் ஒருவரத் செயற்பாடுகளில், நீதி கூறுதலில், வாணிகத்தில் என அனைத்து நிலைகளிலும் நடுவுநிலையைப் போற்றி நடத்தல் இதில் விளக்கப்படுகிறது.

111. தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

நட்பு, பகை முதலிய பிரிவுகளில், ஒன்றன்பாற் சாராமல், அவரவர்க்குரிய முறைமைப்படி செய்து, நடுவுநிலைமையோடு ஒழுகப்பெற்றால், தகுதி எனப்படும் அவ் ஓரறமுமே நல்லதாகும்.

பகுதி-பிரிவுகள். ஒரு பிரிவின்பால் சாராமல் நடுநிலை வகிப்பது தகுதி எனப்படுகிறது.

112. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

செப்பம் எனப்படும் நடுவுநிலைமையுடையவனது செல்வம், செல்வாக்கு முதலிய ஆக்கம் அனைத்தும், சிறிதும் சிதைவின்றி அவன் கால்வழியில் வருவார்க்குப் பாதுகாப்பைத் தரும்.

ஆக்கம்-மேன்மேல் ஆவன, வளர்வன, உயர்வன அனைத்தும் ஆக்கம். அதாவது செல்வம், பதவி, கல்வி, செல்வாக்கு யாவற்றையும் உணர்த்தும் சொல் இது.

113. நன்றே தரினும் நடுஇகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

நடுவுநிலைமை தவறிச் செல்வம் சேர்ப்பது எளிதாய்த் தோன்றும். நன்மையே தருமாயினும் நடுவுநிலை நீங்குதலால் வரும் ஆக்கத்தை, அப்பொழுதே கைவிடுதல் நல்லது. ஏனெனில் அதனால் வரும் தீமை பிறகுதான் வெளிப்படும்.

இன்றும் நடுவு நிலைமை தவறியவர்களே செல்வர்களாகின்றனர். எல்லோரும் அதே வழியைப் பின்பற்றப் பின்பற்ற உலகம் குழம்பிக் கொண்டிருக்கிறது.

114. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

நடுவு நிலைமையுடையாரே ஊரில் போற்றப் பெறுவர். இவர் தக்கார். இவர் தகவில்லார் என்பன அவரவர் மக்கள் அல்லது அவர் விட்டுச் சென்றவை, அவர் பற்றிப் பேசப்படும் புகழ், இகழ் போன்றவற்றால் அறியப்படும்.

'எழு பிறப்பும் தீயவை தீண்டா; பழிபிறங்காப் பண்புடை மக்கட்பெறின்' (62) என்ற குறளை நோக்குக. பண்புடையார்க்கே நற்பண்புள்ள மக்கள் பிறப்பர். நடுவுநிலை எனும் பண்பே நல்ல கால்வழியினரைத் தரும். எஞ்சி நிற்பது ஏதேனும் ஒன்றால் - புகழ் இகழ் மட்டுமன்றி - அவர் விட்டுச் சென்றதும் அவர் நினைவை உண்டாகக்கூடியதுமான ஒன்றாலும் அவரது தன்மை அறியப்படும் என்பது அதிகாரப் பொருளுக்கு அடுத்த துணைப் பொருளாகும்.

115. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி.

செல்வக்கேடும் செல்வப் பெருக்கும் இல்லாதனவல்ல; நிலையாக இருப்பனவுமல்ல. அவை வரும் போகும். அவை கருதி மனங்கோடுதல் தவறு. செல்வம் வந்தாலும் போனாலும் மனத்தளவில் எப்பக்கமும் வளையாதிருப்பதே சான்றோர்க்கு அழகாகும்.

மனம் கோடுவதற்குச் செல்வம் ஒரு பெருங் காரணமாதலால் இங்ஙனம் தனித்தெடுத்துக் கூறுகிறார்.

116. **கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்**
**நடுஒரீஇ அல்ல செயின்.**

நெஞ்சம் நடுவுநிற்றலினின்றும் நீங்கி நடுவல்லாதனவற்றைச் செய்ய நினைக்குமாயின், அக்கணமே, 'இனியான் கெடப்போகின்றேன்; அதற்கான அறிகுறி தோன்றிவிட்டது' என நீ அறிவாயாக.

117. **கெடுவாக வையாது உலகம் நடுவாக**
**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.**

நடுவு நிலைக்கண் நின்று, நல்லற நெறிக்கண் தங்கியவனது தாழ்வை, உலகம் ஒரு கேடாக எண்ணாது.

அவனுக்கு ஏற்பட்ட அச்சோதனையும் பெருமையாகவே கருதப்படும். நடுவுநிலைமையால் செல்வத்தாழ்வு வரலாம். வருதல் இயல்பே. அதை உலகம் இகழாது; இகழின் அங்ஙனம் இகழ்பவர்க்கே அது இழிவாக முடியும்.

118. **சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி.**

முன்னே தான் சமமாக நின்று பிறகு தன்கண் வைக்கப்பட்ட பொருளின் எடையை வரையறுத்துக் காட்டுவது துலாக்கோல். அதுபோல் மனத்திலுள்ள நடுவு நிலைமையால் சமமாக நின்று, ஒரு பக்கமும் சாயாமல் தீர்ப்புக் கூறுதல் நீதி கூறும் அவையத்துச் சான்றோர்க்கு அழகாகும்.

முன்பு நீதிமன்றம் 'அறங்கூறு அவையம்' எனப்பட்டது. அவ் அவையத்துச் சான்றோரை நோக்கிய குறள் இது.

119. **சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா**
**உட்கோட்டம் இன்மை பெறின்.**

ஒரு வழக்கைத் தீர்க்கும்போது, பேச்சில் ஒருபக்கம் வளையாதிருப்பதே செப்பம் எனப்படும்; அப்பேச்சும் அசையா உறுதியுடன் மனத்தினுள் கோட்டமின்மையைப் பெற்றிருத்தல் வேண்டும். மனத்தினுள் கோட்டம் வைத்து, நடுவு நிற்பதுபோல் பேசுவது செப்பமாகாது.

பேச்சில் ஒருபக்கம் சாய்ந்து வாதிடுவது தவறு; மனத்தினுள் ஒருபக்கச் சார்பை வைத்துக்கொண்டு, வெளியில் நடுநிலையாளர்போல் பேசுவதும் தவறு. இரண்டுமில்லாததே செப்பம்.

120. **வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோல் செயின்.**

பிறர் பொருளையும் தம் பொருள்போல் மதித்துக் கூட்டாமலும் குறைக்காமலும் நடுவுநிலைமையோடு செய்யப்படுமாயின், அதுவே 'வாணிகம்' இதுவெனச் சிறப்பித்துக் கூறக்கூடியதாகும்.

பிறர் பொருளைக் கூடுதலாகப் பெறவும், தம் பொருளைக் குறைத்துக் கொடுக்கவுமே சிலர் மனம் முந்தும். ஆனால் அது நல்ல வாணிகம் ஆகாது. அவை வாணிகமெனப் பெயர் பெறினும் வாணிகமாகா. நடுவுநிலைமை வணிகர்க்கும் முக்கியமாதலின் அவரை நோக்கியது இக்குறள்.

## 13. அடக்கமுடைமை

ஆடம்பரமின்றி அடங்குதல், புலன்களை அடக்குதல், நாவடக்கம், கற்றறிந்தடங்குதல் யாவும் இதில் அடங்கும்.

121. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

அடக்கம் என்றால் அடங்கி ஒடுங்கிவிடுவதன்று. அடக்கமாய் வாழ்தல் ஓர் அறம். அடக்கம் உடைமை ஒருவரைத் தேவருலகத்துக் கொண்டு செலுத்தும். அடங்காது திரிதல், வெளிவருவதற்கரிய இருள் சூழ்ந்த உலகத்தில் செலுத்திவிடும்.

அடக்கம் சிலர் நினைப்பதுபோல் கீழ்மைப்படுத்தாது; மேன்மேல் உயர்த்தும். இன்னும் சொன்னால் தேவருலகத்தும் கொண்டு செலுத்தும். அடங்காமைதான் கீழே கீழே கொண்டு போகும்.

122. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு.

அடக்கத்தை விட உயிர்களுக்கு ஆக்கமாவது பிறதொன்றில்லை. அதனால் அதனை உயிருக்குதவும் உறுதிப் பொருளாகக் கொண்டு கடைப்பிடிக்க வேண்டும்.

அடக்கம் அடிமையாவதன்று. பெருமைகளை மிகையாய்த் தாமே வெளிப்படுத்தலைவிட, அடக்கமாய் இருப்பின் அவை ஒளி வீசித்திகழும். அதனால் வரும் நன்மைகள் பலவாதலின் 'உயிருக்கு ஆக்கம்' என்றார். அறங்களை 'உயிருக்கு ஆக்கம்' எனத் திருவள்ளுவர் திரும்பத் திரும்பக் கூறுவது, உலகம் இன்னும் அறிய வேண்டிய புதிய சிந்தனையாகும்.

123. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்.

அறிய வேண்டுவன அனைத்தும் அறிந்து, அடக்கமாய் வாழு நெறியின்படி அடங்கப்பெற்றால், அவ் அடக்கம் பிறரால் நுட்பமா அறியப்பட்டுச் சிறப்பைத் தரும்.

அறிவுடைமையைத் தாமே ஆடம்பரமாய் வெளிப்படுத்துவர் பல அடக்கத்துடன் கூடிய அறிவுடைமையைப் பிறர் பலரும் அறிந்து போற்ற தொடங்குவர். ஆடம்பரங்கண்டால் வெறுக்கவே தோன்றும்.

124. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

தனது பெருமித நிலையினின்றும் சிறிதும் திரிவுபடாது அடங் நடப்பவரது ஆளுமை, மலையின் உயர்ச்சியைவிட மிகப்பெரியதாகும்

வள்ளுவர் கருத்துப்படி அடக்கம் என்பது தற்கட்டுப்பாடுமாம். பெருமையை விடுவதன்று அடக்கம், பெருமை விளங்கித் தோன்ற தற்கட்டுப்பாடாயிருப்பதே அது. அடக்கம் என்பதற்காகத் தன்னையே தாழ்மைப் படுத்திக்கொள்வதுமன்று இது. அதற்காகவே 'நிலையில் திரியாது என்றார்.

125. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

பணிவுடையராதல் எல்லோர்க்கும் பொதுவாக நல்லது. ஆயினு அவர்களுள்ளும் செல்வம் உடையவர்களுக்கே பிறிதொரு செல்வமாகு சிறப்பினை உடையது.

செல்வச் செழிப்புக் கூடக்கூட அடக்கம் காணுதல் அரிது. கண்டால் அ செல்வத்துட் செல்வமாகும்.

126. ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஐம்பொறிகளையும், இவ் ஒரு பிறப்பின்கண் ஆமைபோ அடக்கவல்லவராயின் அவருக்கு அது ஏழுபிறப்பிலும் பாதுகாவலாகு

இப்பிறப்பில் பாதுகாப்பாதல் உறுதி என்பதை நிறுவ வந்த நடை இது காந்தியடிகளின் மூன்று குரங்குப் பொம்மைகள் கண், காது, வா அடக்கத்தைக் காட்டும்; அவற்றுடன் மூக்கும் உடம்பும் சேர்த்து ஐந்து தீயவற்றைக் கண்டால், தம்மைத்தாமே, ஆமைபோல் அடக்கிக் கொள் வேண்டும்.

127. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

ஐம்பொறிகளில் அடங்காத தன்மை நாவிற்கே அதிகம். தாம் காக்க வேண்டிய அனைத்தையும் காவாது போனாலும், நா ஒன்றனையாவது அடக்கிக் காக்க; காவாதுவிடின் சொற்குற்றத்திற் குட்பட்டுத் துன்பப்படுவர்.

ஐம்பொறிகளில் கண் கண்டதில் மேயும். அதைவிட நா எதையாவது பேசிக் காரியத்தைக் கெடுத்துவிடும். நாவைக் காப்பவன், பிறவற்றில் இயல்பாக அடங்குவானாதலின், அஃதொன்றனையாவது காத்தால் போதும் என்றார்.

128. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.

ஒருவரின் பேச்சில் சொற்களெல்லாம் நன்றாய் அமைந்து, அவற்றுள் ஒரே ஒரு சொல் மட்டும் தீய சொல்லின் பொருளால் வரும் துன்பத்தை உண்டாக்கி விடுமானால், அவரது பேச்சு முழுவதுமே நல்லதன்றித் தீதாய்விடும்.

நாஅடக்கம் உடையார்க்கு, ஒரு தீச்சொல்கூடப் பிறவாது; பிறக்கக் கூடாது. ஒரே ஒரு சொல்தானாயினும் அதனால் எல்லாமே கெட்டுப்போக வாய்ப்புண்டு.

129. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

ஒருவரது உடம்பில் தீயினால் சுட்ட புண் வெளியில் ஆறாது கிடப்பினும் உள்ளத்துள் ஆறிவிடும்; நாவினால் கடுஞ்சொற்கூறிச் சுட்ட வடு மனத்தினுள் எப்பொழுதும் ஆறாது கிடக்கும்.

தீயைவிடக் கடுஞ்சொல் கொடிதென்பது கருத்து. "ஆறிப் போதலால் தீயினால் சுட்டதனைப் 'புண்' என்றும் ஆறாது கிடத்தலால் நாவினால் சுட்டதனை 'வடு' என்றும் கூறினார்" என்பார் பரிமேலழகர்.

130. கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

கடுங்கோபத்தை வாராது தடுத்து, கற்க வேண்டியவற்றைக் கற்று, அதனால் வரும் ஒருவிதத் தற்பெருமைப் போக்கையும் அடக்கவல்லனாயின், அறப்பேராற்றல் அவன் வரும் வழிக்கண் சென்று, அவனை அடையும் செவ்வி பார்த்து நிற்கும்.

அறிய வேண்டுவன அனைத்தும் அறிந்து, அடக்கமாய் வாழும் நெறியின்படி அடங்கப்பெற்றால், அவ் அடக்கம் பிறரால் நுட்பமாய் அறியப்பட்டுச் சிறப்பைத் தரும்.

அறிவுடைமையைத் தாமே ஆடம்பரமாய் வெளிப்படுத்துவர் பலர். அடக்கத்துடன் கூடிய அறிவுடைமையைப் பிறர் பலரும் அறிந்து போற்றத் தொடங்குவர். ஆடம்பரங்கண்டால் வெறுக்கவே தோன்றும்.

124. **நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.**

தனது பெருமித நிலையினின்றும் சிறிதும் திரிவுபடாது அடங்கி நடப்பவரது ஆளுமை, மலையின் உயர்ச்சியைவிட மிகப்பெரியதாகும்.

வள்ளுவர் கருத்துப்படி அடக்கம் என்பது தற்கட்டுப்பாடுமாம். பெருமையை விடுவதன்று அடக்கம், பெருமை விளங்கித் தோன்றத் தற்கட்டுப்பாடாயிருப்பதே அது. அடக்கம் என்பதற்காகத் தன்னையே தாழ்மைப் படுத்திக்கொள்வதுமன்று இது. அதற்காகவே 'நிலையில் திரியாது' என்றார்.

125. **எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து.**

பணிவுடையராதல் எல்லோர்க்கும் பொதுவாக நல்லது. ஆயினும் அவர்களுள்ளும் செல்வம் உடையவர்களுக்கே பிறிதொரு செல்வமாகும் சிறப்பினை உடையது.

செல்வச் செழிப்புக் கூடக்கூட அடக்கம் காணுதல் அரிது. கண்டால் அது செல்வத்துட் செல்வமாகும்.

126. **ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

ஐம்பொறிகளையும், இவ் ஒரு பிறப்பின்கண் ஆமைபோல் அடக்கவல்லவராயின் அவருக்கு அது ஏழுபிறப்பிலும் பாதுகாவலாகும்.

இப்பிறப்பில் பாதுகாப்பாதல் உறுதி என்பதை நிறுவ வந்த நடை இது. காந்தியடிகளின் மூன்று குரங்குப் பொம்மைகள் கண், காது, வாய் அடக்கத்தைக் காட்டும்; அவற்றுடன் மூக்கும் உடம்பும் சேர்த்து ஐந்தும் தீயவற்றைக் கண்டால், தம்மைத்தாமே, ஆமைபோல் அடக்கிக் கொள்ள வேண்டும்.

127. **யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**

ஐம்பொறிகளில் அடங்காத தன்மை நாவிற்கே அதிகம். தாம் காக்க வேண்டிய அனைத்தையும் காவாது போனாலும், நா ஒன்றனையாவது அடக்கிக் காக்க; காவாதுவிடின் சொற்குற்றத்திற் குட்பட்டுத் துன்பப்படுவர்.

ஐம்பொறிகளில் கண் கண்டதில் மேயும். அதைவிட நா எதையாவது பேசிக் காரியத்தைக் கெடுத்துவிடும். நாவைக் காப்பவன், பிறவற்றில் இயல்பாக அடங்குவானாதலின், அஃதொன்றனையாவது காத்தால் போதும் என்றார்.

128. **ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்**
**நன்றாகா தாகி விடும்.**

ஒருவரின் பேச்சில் சொற்களெல்லாம் நன்றாய் அமைந்து, அவற்றுள் ஒரே ஒரு சொல் மட்டும் தீய சொல்லின் பொருளால் வரும் துன்பத்தை உண்டாக்கி விடுமானால், அவரது பேச்சு முழுவதுமே நல்லதன்றித் தீதாய்விடும்.

நாஅடக்கம் உடையார்க்கு, ஒரு தீச்சொல்கூடப் பிறவாது; பிறக்கக் கூடாது. ஒரே ஒரு சொல்தானாயினும் அதனால் எல்லாமே கெட்டுப்போக வாய்ப்புண்டு.

129. **தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு.**

ஒருவரது உடம்பில் தீயினால் சுட்ட புண் வெளியில் ஆறாது கிடப்பினும் உள்ளத்துள் ஆறிவிடும்; நாவினால் கடுஞ்சொற்கூறிச் சுட்ட வடு மனத்தினுள் எப்பொழுதும் ஆறாது கிடக்கும்.

தீயைவிடக் கடுஞ்சொல் கொடிதென்பது கருத்து. "ஆறிப் போதலால் தீயினால் சுட்டதனைப் 'புண்' என்றும் ஆறாது கிடத்தலால் நாவினால் சுட்டதனை 'வடு' என்றும் கூறினார்' என்பார் பரிமேலழகர்.

130. **கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.**

கடுங்கோபத்தை வாராது தடுத்து, கற்க வேண்டியவற்றைக் கற்று, அதனால் வரும் ஒருவிதத் தற்பெருமைப் போக்கையும் அடக்கவல்லனாயின், அறப்பேராற்றல் அவன் வரும் வழிக்கண் சென்று, அவனை அடையும் செவ்வி பார்த்து நிற்கும்.

உயிர்க்கு ஆக்கமாம். அறம் தானே வந்து சேருமாம். நீராவி, மின்னாற்றல் போல, அறமும் தனித்தியங்கும் ஓர் இயக்காற்றல் - நுண்ணாற்றல் என உணர்த்துகிறார், திருவள்ளுவர்.

## 14. ஒழுக்கமுடைமை

இடையறாது நன்னெறியில் ஒழுகுதல், ஒரு சீராய்த் தொடர்ந்த நல்வழியில் நடப்பதுதான் ஒழுக்கம். ஒரே சீராக நடப்பன யாவும் ஒழுகுதலேயாம். சாலை விதியில் இடப்புறமே போவதுகூட ஓர் ஒழுக்கமே. சிலையோ, இசையோ எதுவும் ஒழுங்குபட அமையின் அது அவற்றின் ஒழுக்கமே. எனவே ஒழுக்கத்திற்கு கற்பனை பல கற்பிக்க அவசியமில்லை. அன்றாடச் சிறு நடைமுறை யாவும் அதுவே.

131. **ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

உயிர் சிறந்தது. உயிரைக் காட்டிலும் ஒழுக்கம் சிறந்தது. ஏனெனில் ஒழுக்கமே இவ்வுயிரொடு கூடிய வாழ்க்கைக்கு விழுப்பத்தைத் தருகிறது. (விழுப்பம் - நிலைத்த நன்மதிப்பு, சிறப்பு) எனவே ஒழுக்கத்தை உயிரைக்காட்டிலும் கருத்தாகப் பாதுகாக்க வேண்டும்.

ஒழுக்கச் சிறப்பில்லாத உயிர் மதிக்கப்படாது. ஒழுக்கம் தவறியும் கழுவாய் தேடி வாழலாம் என்பர் சிலர். ஒழுக்கமா, உயிரா என்று வரும்போது, ஒழுக்கத்தைக் காக்க உயிரையும் விட்டுவிடலாமென்பதே வள்ளுவர் கருத்து.

132. **பரிந்துஓம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்துஓம்பித்**
**தேரினும் அஃதே துணை.**

கண்டபடி அலைவது எளிது; ஒழுக்கத்தைக் காப்பது கடினம். எனினும் ஒழுக்கத்தைச் சற்றும் குறைபடாமல் மிக வருந்திப் பேணிக் காப்பாற்றுக. மிகவும் ஆராய்ந்து, கருத்தோடு தேடினாலும், அறநெறி பலவற்றிலும் அஃதொன்றே நீங்காத் துணையாகும்.

திருவள்ளுவரைப் போல ஒழுக்கத்தை வறுபுறுத்தினார் உலகில் எவருமிலர். ஒழுக்கம் வேண்டுமெனப் பலரும் பலவாறு கூறியுள்ளனர். எனினும் வள்ளுவர் போல் பல கோணங்களில் மிக அழுத்தமாய் வலியுறுத்தியவர்கள் மிகச் சிலரே. மற்றவர்கள் ஒழுக்கத்தையும் கூறி, ஒழுக்கத் தவறுகளுக்குப் பிராயச்சித்தங்களையும் விவரித்துள்ளனர்.

133. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

ஒழுக்கமுடைமையே உயர்குடியாகும் தன்மையைத் தரும்; ஒழுக்கத்தில் தவறுதல் இழிந்த பிறப்பாகிவிடும்.

ஒழுக்கத்தினாலேதான் குலத்தாழ்ச்சி, உயர்ச்சிகள் ஏற்படும். மனு முதலிய நூல்கள் விதிப்பதுபோல் பிறப்பினால் உயர்வுதாழ்வுகள் அமைவதில்லை. பிறப்பு அடிப்படை ஆகாது; ஒழுக்கமே உயர்வுக்கும் தாழ்வுக்கும் அளவுகோலாகும் என்பது கருத்து. 'இழிந்த பிறப்பாகி விடும்' என்ற சொல்லாட்சி உற்றுநோக்கற்பாலது. கடவுள் விதித்ததால் அன்று; ஒழுக்கத்தில் தவறுதலாலேதான் இழிந்த பிறப்பாகிறது. பகவத் கீதைகூட முன்வினைப் பயனால் ஒருவன் உயர்குலத்தினனாகவோ, கீழ்க்குலத்தினனாகவோ அவ்வவற்றுக்குரிய குணத்துடன் பிறக்கிறான்; அவை யாராலும் மாற்ற முடியாதவை என்று கூறுகிறது. திருவள்ளுவர் ஒழுக்கம் என்ற அளவுகோலை மட்டும் வைத்துத்தான் உயர்குலம், தாழ்குலம் என்பன பிரிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார்.

134. மறப்பினும் ஓத்துக் கொளல்ஆகும் பார்ப்பான்
பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும்.

பார்ப்பான் தனக்கே உரியதெனப்படும் வேதம் ஓதுதலை மறந்தானாயினும் பின்னரும் ஓதிக் கொள்ளலாம். ஆனால் அவன் ஒழுக்கங்கெட்டானாயின் பிறப்பும் கெட்டுப்போகும்; அதைத் திரும்பப் பெற முடியாது.

இறைவன் படைத்த படைப்பினால் பார்ப்பான் பூசுரன் ஆனான். பிறப்பினாலான இது மாற்றுதற்கு இயலாதது என்ற கருத்தை மறுக்குமிடம் இது. வேதம் ஓதுதற்கே பிறந்தவன்; அங்ஙனம் ஓதுவதாலேயே உயர்ந்தவன் என்பவற்றை மனங்கொண்டு அதை மறந்தால் திரும்ப நினைவுபடுத்திக் கொள்ளலாம்; ஒழுக்கம் குன்றினால் திரும்ப வராது என அறிவுரை கூறுகிறார். ஓதப்படுவதால் வேதம் 'ஓத்து' எனப்படும். எழுதாக் கிளவியாம் சுருதி ஓதப்படுவதாதலின் தமிழில் ஓத்து எனப்பட்டது. பிறப்பால் உயர்ந்த சாதி என்பது வைதிக மரபு. அதனை, இக்குறள் வெளிப்படையாக மறுக்கிறது. அன்றே வைதிக, சமண, புத்த மதத் தாக்கங்கள் தொடங்கிவிட்டன. இவற்றை மறுத்தும், மடைமாற்றியும், புதுமை படைத்தும் தமிழர் பண்பாட்டை நிலைநிறுத்தத் தோன்றியதே திருக்குறள்.

135. அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

பொறாமை உடையவனிடம் செல்வம் முதலிய ஆக்கம் இல்லை; அதுபோல ஒழுக்கமில்லாதவனிடம் உயர்ச்சி இல்லை

136. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

ஒழுக்கத்தில் தவறுதலால் இழிவு, பழி முதலான குற்றங்கள் உண்டாகும். அதை அறிந்து, மனவலிமை உடையார், ஒழுக்கத்தில் சிறிதும் சுருங்கமாட்டார்கள்.

ஒழுக்கத்தில் தவறாதிருக்க மிகுந்த மனவுரமும் உறுதியும் வேண்டுமாதலின் 'உரவோர்' என்றார். ஒழுக்கக் கேட்டால் இழிவு நேரும். மேன்மேலும் குற்றம் செய்ய நேரும்; சான்றோர்களும் உறவினர்களும் புறக்கணிப்பர்.

137. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

ஒழுக்கத்தோடு வாழ்வதால் மானுடர் மேன்மை அடைவர். அதில் தவறுதலால் தாம் அடையக்கூடாத பழியையும் அடைவர்.

அடாப்பழி கூறியவழி, இவனது இழுக்கம் காரணமாக உலகம் அதனையும் அடுக்குமென்று கொள்ளும்.

138. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

நல்லொழுக்கம் பின்விளையும் நன்மைக்கெல்லாம் விதையாகும்; தீயொழுக்கம் எக்காலத்திலும் கடுந்துன்பத்தையே தரும்.

139. ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

ஒழுக்கமுடையவர்களுக்குத் தீய சொற்களை மறந்தும் வாய் தவறிச் சொல்லுதல் இயலாது.

பழக்கம் காரணமாக வாய்க்கு அது இயலாதாம். கூடாது என்னாமல் இயலாது என்பதன் காரணம். தீயசொற்களைச் சொல்ல முயன்றாலும் நல்லதைப் பேசிப் பழகிய வாய்க்கு அது இயலாது என்பதாலேயாம்.

140. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

உலகநடையை அறிந்து அதனொடு பொருந்த ஒழுக வேண்டும். பல நூல்களைக் கற்றிருந்தும், இவ்வுலக நடப்பைக் கல்லாதவர் அறிவிலாதவராவர்.

தன் தனித்தன்மையை விடாமல் தன் காலச் சூழ்நிலையுடன் ஒத்துப்போதலை இது குறிக்கிறது. சில ஒழுகலாறுகள் நாட்டுக்கு நாடு வேறுபடக்கூடும்; சில காலத்திற்குக் காலம் வேறுபடவும் கூடும். எனவே அவ்வந் நடைமுறையறிந்து நடப்பது நலம்.

புத்தகத்தைப் பார்த்துப் பார்த்து மருத்துவம் செய்தல் இயலாது. அறநூல்களில் சொல்வன பல இக்காலத்தில் காணப்படா; சொல்லாதவை பல நடைமுறையில் இருக்கும். எனவே அறங்கள் என்பன நூல்களால் மட்டும் அறியப்படுவன அல்ல. அவை கூறுவன சில முன்னுதாரணங்களே.

## 15. பிறன்இல் விழையாமை

மற்றவன் மனைவியை விரும்பாமை. முன்பு பருவமிடையிட்டும் ஆண்டுகளிடையிட்டும் கணவன் மனைவியைப் பிரிந்து அயல் நிலங்களுக்கும் அயல் நாடுகளுக்கும் சென்றதால், மனைவி பிறர் பாதுகாப்பில் இருக்க வேண்டியவளானாள். அதனால் இத்தவறுகளுக்கு இடமிருந்ததுபோலும். இன்றும் செல்வச் செருக்குமிக்க நாடுகளிலும் குடும்பங்களிலும் இத்தவறு நேர்வதாகக் கூறுவர். மேலும் நகர்ப்புறங்களில் இருவரும் வேலை வாய்ப்புக்காக வெவ்வேறு இடங்களுக்குச் செல்வதாலும் இத்தீய பழக்கம் ஏற்படாமல் காக்க வேண்டியிருக்கிறது.

141. பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்.

மற்றவனுக்கு உரிமையுடையாளை, ஆசைப்பட்டு ஒழுகும் அறியாமை உலகத்தில் அறமும் பொருளுமாய் அடிப்படை மானுட மதிப்புக்களை ஆராய்ந்து அறிந்தவர்களிடம் இல்லை. இன்பம் ஒன்றே விழைவார் இம்மதிப்புகளை இழப்பர் என்பதாம்.

கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உரிமையுடையவர்கள். அதனால் மனைவியைப் பிறன் 'பொருள்' என்றார்.

142. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்.

அறத்தைக் கடந்து பாவத்தின்கண் சேர்ந்தார் அனைவருள்ளும், காமத்தால் பிறனுடைய மனைவிமீது ஆசைப்பட்டு அவனது வாயிலில் சென்று நின்றாரைப் போலப் பேதையர் யாருமிலர்.

143. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்துஒழுகு வார்.

தம்மை நம்பினவர் மனைவியிடம் பாவம் செய்தலை விரும்பி நடப்பவர்கள், உயிருடையரென்றாலும் நிச்சயமாகச் செத்தாரேயாவர்.

ஒருவரை நம்பி ஒப்படைத்துச் சென்றிருக்கவும், அவரே தீங்கு நினைத்தால் தாங்குமா உலகம்? வள்ளுவர் சினந்து திட்டுமிடங்களில் இது ஒன்று

காமம் அறிவைக் கெடுத்துவிட்டதால் 'பேதையார்' என்றும், காமத்திற்குத் தம்மை ஒப்படைத்துவிட்டால் 'செத்தவர்க்குச் சமம்' என்றும் கடிந்து கூறுகிறார்.

144. எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல்.

பிறன்மனை நயத்தலால் வரும் இழிவைத் தினையளவும் சிந்தியாமல், பிறன் மனைவியை விரும்பி அவன் மனைக்கண் புகுவரேல், அவர் எத்துணைப் பெரியவராய் இருந்தாலும் என்ன பயன்? பெருமை அனைத்தும் இழப்பர் என்பதாம்.

செல்வம் செல்வாக்கு பதவி கல்வியறிவு உடைய உயர்ந்தவர்களிடையே காமத்தால் இது மிகுந்து காணப்படுதலின், 'எனைத் துணையாராயினும்' பயன் என்ன என்று வினவுகின்றார்.

145. எளிதென இல்இறப்பான் எய்தும் எஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

எளிதாக வாய்க்கின்றது எனப் பிறனது வீட்டின்கண் எல்லைகடந்து செல்பவன், (பிறன் மனைவியைப் பெண்டாள்பவன்), எக்காலத்தும் அழியாது நிற்கும் பழியை அடைவான்.

எளிதாகத் தானே வந்து எய்தும் சூழலிலும் தான் தடுமாறாது நிற்றல் வேண்டும். தவறினால், அழியாத பழியையே அடைய நேரும்.

146. பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.

பிறன் மனையாளிடம் எல்லை கடந்து நடந்து கொள்பவனிடம் பகை, பாவம், அச்சம், பழி நான்கும் அவனைவிட்டு நீங்காவாம்.

அவள்தன் கணவன், சுற்றத்தால் பகை நேரும். தீய செயலாதலின் பாவம் சேரும். செய்யத்தகாததைச் செய்ததால் அச்சத்தால் மனம் தடுமாறும். ஊராரால் பழிக்கப்படுவான்.

147. அறன்இயலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

பிறன் மனைவியாய்க் கூடி வாழ்பவளது பெண்மையை விரும்பாதவனே, அறமாகிய இயல்போடு கூடி இல்லறத்தில் வாழ்பவனெனக் கூறப்படுவான்.

இயல்பாக வாழ்தல் - அவ்வவ் இயற்கைப்படி, இயல்புடன் பொருந்தி, அவ்வந் நிலைக்கேற்ப வாழ்தல், இயல்புடைய, இயல்பினான், இயலான் என இச்சொல்லாட்சி பல இடத்தும் வருகிறது.

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.

பிறன் மனைவியை ஆசைப்பட்டு நோக்காதிருத்தல் பேராண்மையாகும். இது சான்றோர்க்கு அறநெறி வாழ்வு மட்டுமன்று; நிறைந்த ஒழுக்கமுமாகும்.

மனத்தை அடக்குதல், மதங்கொண்ட யானையை அடக்குதல் போறலின் இது 'பேராண்மை' எனப்பட்டது. சிறந்த ஆண்மகனாவார் பிறன்மனை நோக்கார் என்பதாம்.

149. நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறற்குரியாள் தோள்தோயா தார்.

அச்சத்தைத் தரும் கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில், பிறனொருவனுக்கு உரிமையுடையாளது தோளைச் சேராதவர்களே, எல்லா நன்மைகளும் எய்துதற்குரிவர் ஆவர்.

150. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

அற எல்லைக்கண் நிற்காது, பாவங்களை ஒருவன் செய்தானாயினும், பிறனது எல்லைக்கண் நிற்பாளது பெண்மையை விரும்பாதிருத்தலே நல்லது. பிற பாவங்களைவிடவும் இது கொடிய பாவம் ஆகும்.

## 16. பொறையுடைமை

கீழானவர், அறிவிலாதார், பகைவர் போல்வார் செருக்குடன் மிகையாகத் தம்மிடத்து நடந்தவழி, தாம் தம் பெருந்தன்மையால் பொறுத்துக்கொள்ளுதல்.

151. **அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

நிலம் தன்னை அகழ்வாரையும் வீழ்ந்துவிடாமல் காப்பாற்றுகிறது அதுபோலத் தம்மை அவமதித்து இகழ்பவர்களையும் பொறுத்துக் கொள்ளுதல் தலையாய பண்பாகும்.

நிலம் பெரிது; வலிது. அகழ்வாரையும் 'தாங்குகிறது'. இன்றேல் மனிதனுக்கு நிலை ஏது? அதுபோல் பொறுமை காட்டுபவர் பெருமை மிக்கவராவர். ஆற்றாமையால் அடங்கிப் போகும் பொறுமை அன்று இது.

152. **பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று.**

ஒருவர் நமக்குத் தீங்குசெய்த காலத்து ஒறுத்தல், பொறுத்தல், மறத்தல் என மூன்று நிலைகள் உள. ஒருவர் செருக்கால் மிகையாக நடந்தபொழுது, அவரைத் தண்டித்தல் இயலுமாயினும் அதுசெய்யாது பொறுத்தல் வேண்டும். அத்தீங்கை அப்பொழுதே மறந்துவிடுதல் பொறுமையைவிட இன்னும் நல்லது.

153. **இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை.**

விருந்தைப் புறக்கணித்தல் வறுமையுள் வைத்து வறுமையாகும் அதுபோல அறிவிலாதார் செய்யும் சிறுமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல் வலிமையுள் மிக்க வலிமையாகும்.

பொறுத்துக்கொள்ளுதலுக்கு மனவலிமை, பக்குவம், பெருமிதம் பேராற்றல் யாவும் வேண்டும். பொறுத்தல் மென்மையாலன்று; வலிமையால் என்பதாம் அச்சத்தால் அடங்கிப் போய், அதைப் 'பொறுமை' காப்பதாகச் சொன்னா

நகைப்பிற்கு இடமாகும் அதனால்தான் பொறுமையை 'வன்மையுள் வன்மை' என்றார்.

154. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

நிறையுடைமை - மனத்தை ஒருவழி நிறுத்தும் ஆற்றல். நிறை எனும் பண்புடைமை தன்னைவிட்டு நீங்காதிருக்க வேண்டின், பொறையுடைமையைப் பேணிக்காத்து ஒழுக வேண்டும்.

அச்சத்தாலோ, ஆற்றலின்றியோ பொறுத்துப்போதலன்று இது பொறையுடைமை குறையுடைமை அன்று; அது நிறையுடைமை என்றவாறு. பொறுமையின்றிச் சீற்றம் பொங்கியெழும் பொழுது மனத்தில் அதைத் தடுத்து நிறுத்தலால், அந்நிறையுடைமையாம் நற்பண்பு நிலைபெறுகிறது.

155. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

சிறியர் செய்த சிறுபிழைக்காகத் தண்டித்தவரை ஒரு பொருட்டாக யாரும் மதிக்க மாட்டார்கள், அவரொடு சமமாய் விடுதலின்; ஆனால் அதைப் பெருந்தன்மையால் பொறுத்துக் கொண்டவரைப் பொன்னைப் பொதிந்து வைத்துக்கொள்வதுபோலக் கொள்வர்.

156. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டித்தவர்க்கு, அவ்வொரு நாளை இன்பமே, தண்டித்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியே அப்பொழுதைக்கு உளதாவது. அவ்வாறன்றி அத்தீங்கைப் பொறுத்தவர்க்கு வாழ்நாள் முடியும் காலம் வரைக்கும் புகழுண்டாம்.

அவரைப் பற்றிப் புகழ்ந்துபேசும் பெருமையைப் பொறுமை தரும். ஒரு நாள் மட்டுமே இன்பம்; வாழ்நாள் முழுவதும் புகழ் என இணைத்துப் பார்க்க வேண்டும்.

157. திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறன்அல்ல செய்யாமை நன்று.

தன்னிடம் பிறர் செய்யத் தகாத தீங்குகளைச் செய்தாராயின் அங்ஙனம் தீமை செய்தார்க்குத் துன்பம் வருதல் உறுதி. அவ்வாறு அவர் அடையும் அந்நோவுக்குத் தாம் நொந்து, அறனல்லாதவற்றைச் செய்யாதிருத்தலே நல்லது.

பழிக்குப் பழி தேடுவது பொறுமையை அழித்துவிடும். தீயவை தீய பயக்குமாதலால், தீமை செய்த அவர் துன்புற நேருமே என்பதற்காகத் தாம் துன்புறுவது பொறுமையின் உச்சமாகும்.

158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

செருக்கால் மிகையானவற்றைத் தம்மிடம் செய்தவரைத் தாம் அவரினும் மேம்பட்ட தம் தகுதியை (பொறுமை) வெளிப்படுத்தி, அதனால் வென்று விடுக என்பதாம்.

மிகுதி (மிகை செருக்கு) செய்தார்க்குத் தாமும் மிகுதி செய்யலாம். அது சமமாகிவிடும். நாம் நம் தகுதியை வளர்த்துக்கொண்டால், அம்மிகை அல்லது செருக்கு தானே அழிந்துவிடும். மிகுதிக்கு (மிகையாக நடந்து கொள்ளுதல்) மிகுதி என எதிர்த்து நிற்பதைவிட, நாம் நம் தகுதியை வளர்க்க வளர்க்க அவர்தம் மிகுதிதேய்ந்து அழியும் என்பது ஒரு வரையறை விதிபோல் எங்கும் என்றும் பயன்படக் கூடியதாகும்.

159. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

செருக்கால் எல்லை கடந்து நடந்து கொள்பவர்தம் வாயிலிருந்து வரும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர், உலகப் பற்றைத் துறந்தாரைவிடத் தூய்மை உடையவர் ஆவர்

உலகைத் துறப்பதைவிட, இன்னாத கடுஞ்சொல்லைப் பொறுப்பதற்கு, மிகுந்த மனவலிமை வேண்டும். 'நோற்கிற்பவர்' என்ற சொல், தீய சொல்லைப் பொறுப்பதும் ஒரு தவமே துறவே என்று தொனிக்கிறது.

160. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

உண்ணாமல் உலகைத் துறந்து தவம் செய்பவர் பெரியவர்கள்; ஆயினும் அவர்கள் பெரியவராவது பிறர் சொல்லும் கடுஞ் சொல்லைப் பொறுப்பவர்களுக்குப் பின்பேயாம்.

திருவள்ளுவர் 'இன்னாச்சொல்லைப்' பொறுப்பவர்க்கே முதலிடம் தருவது கருதற்பாலது. இவரையும் 'நோற்பார்' என்பது, இவைபோல்வன இல்லத்திலிருந்தே செய்யும் துறவு, தவம், வேள்வி என அவர் தொடர்ந்து கூறுவனவற்றை உறுதிப்படுத்துகிறது.

# 17. அழுக்காறாமை

அழுக்கு-மனஅழுக்கு-அழுக்காறு-அழுக்காக்கிக் கொள்ளுதல், பொறாமை, அழுக்காறாமை - பொறாமைப்படாதிருத்தல், புற உடல் அழுக்கைப் போல், இவை மனத்தில் படியும் அழுக்கு எனும் வள்ளுவக் கருத்து புதுமையானது.

161. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

செயலுக்கு முன், மனத்திலேதான் முதலில் பொறாமை தோன்றும். தன் மனத்தில் அழுக்காறு எனும் குற்றமில்லாத இயல்பினை, ஒருவன் இடையறவுபடாத ஒழுக்க நெறியாகக் கொள்க.

மனம் மாசு படரும் இயல்புடையது. எனவே பொறாமை மாசு படியாமல் மனத்தைப் பழக்கவேண்டும்.

162. விழுப்பேற்றின் அஃதுஒப்பது இல்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

பகைவர் உட்பட யாரிடத்திலும் பொறாமையை நீக்கிவிடும் மனவலிமையைப் பெற்றால், ஒருவர் பெறக்கூடிய சீரிய நன்மதிப்புக்களில், அதனை ஒப்பது பிறிதில்லை.

விழுப்பேறு - மானுட நன்மதிப்பு. அழுக்கை நீக்குவதற்கு மிகுந்த முயற்சி வேண்டும்.

163. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்
பேணாது அழுக்கறுப் பான்.

மற்றவருடைய ஆக்கம் கண்டு மகிழாது, பொறாமைப்படுகிறவன் தனக்கு அறமாகிய ஆக்கம் வேண்டாமென்பவன் ஆவான்.

செல்வம் மட்டுமன்று; ஆகுவன எல்லாம் ஆக்கமே. அது செல்வம் செல்வாக்கு பதவி முன்னேற்றம் அனைத்தையும் குறிக்கும். இவற்றில் பிறர் மேம்படக் கண்டு பொறாமைப்படின், தன்முன்னேற்றமே தடைப்படும். தானும் முயன்று ஆக்கமடைதலைப் பொறாமை கெடுத்துவிடும்.

164. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

அழுக்காற்றின் அல்லவை செய்தல் - பொறாமையினால் தம்மைவிடக் கல்வி, செல்வம் மிக்கவர்கட்குத் தீங்கு விளைவித்தல். அறத்தில் தவறுதலால் ஏற்படும் கடும் விளைவுகளை எண்ணிப் பார்த்து அத்தீயவற்றைச் செய்யார் அறிவுடையோர்.

பொறாமையால், பொறாமைப்படுபவனுக்கே தீங்குகள் - ஏதம் - உண்டாகும்.

**165. அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்**
**வழுக்கியும் கேடீன் பது.**

அழுக்காறுடையவர்களுக்குப் பகைவர்கள் கேடுசெய்யத் தவறினாலும், அவர்களுக்குக் கேடு விளைவிக்க அப்பொறாமைக் குணமே போதுமானது.

பொறாமைக்குணம் அதனை உடையவர்களுக்கே முதலில் தீங்கு விளைவிக்கும். பகைவர்கள் தீங்கு விளைவிக்க மறந்தாலும், பொறாமை தன்னைக் கைக் கொண்டவனை அழிக்கத் தவறாதாம்.

**166. கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்**
**உண்பதூஉம் இன்றிக் கெடும்.**

ஒருவர் மற்றவர்க்குக் கொடுப்பதைக் கண்டு பொறாமைப்படுபவன் கெட்டுப் போவதேயன்றி, அவன் சுற்றமும் உடுப்பனவும் உண்பனவும் இன்றிக் கெட்டழியும்.

ஒருவன் செய்யும் குற்றம் அவனை மட்டுமன்றி அவனைச் சார்ந்த சுற்றம், குலம், சமுதாயம் அனைத்தையும் கெடுக்கும். செய்தவினை செய்தவனை விடாது தொடர்ந்து பயனை விளைவிக்கும் என்பது முன்னைய சிந்தனை. அவ்வினை செய்தவனை மட்டுமன்றி, அவனைச் சார்ந்த அனைவரையும் - சமுதாயத்தையும் கெடுக்கும் என்பது வள்ளுவர் எச்சரிக்கும் புதிய சிந்தனை.

**167. அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்**
**தவ்வையைக் காட்டி விடும்.**

மனங்கோணிப் பொறாமை வழிப்பட்டவனை, திருமகள் தன் மூத்தவளாகிய மூதேவிக்குக் காட்டிவிட்டுத் தான் நீங்கிவிடுவாள்.

அவ்வித்து - நல்ல மனத்தைக் கோணச் செய்தல்; அதாவது தீமையின் பக்கம் வளைத்தல்.

**168. அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி உய்த்து விடும்.**

அழுக்காறு என்னும் கொடிய பாவி, தன்னை உடையவனது செல்வத்தை முற்றிலும் அழித்து அவனைத் தீய வழிகளில் செலுத்திவிடும்.

169. **அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்.**

உலகில் பொறாமை மிக்க மனமுடையவனுக்கு ஆக்கமும் செவ்விய மனமுடையவனுக்குக் கேடும் காணப்படுமாயின் அதற்குக் காரணம் யாதென்று ஆராயப்படும். தீமை தீமைதான் பயக்குமென்பதில் ஐயமில்லை. இதற்கு வேறு காரணங்கள் உளவோ என ஆராய வேண்டும்.

'நினைக்கப்படும்' என்பதால், வேறு நல்வினைகள் ஈவையும் உளவோ என்று நினைத்துப் பார்க்கப்படும் என்பதே கருத்து.

170. **அழுக்கற்று அகன்றாரும் இல்லைஅஃது இல்லார்**
**பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.**

பொறாமைப்பட்டுச் செல்வம் செல்வாக்கில் பெரியவர் ஆனவரும் இல்லை; பொறாமைக்குணம் இல்லாதார் செல்வப்பெருக்கத்தில் குறைந்தாரும் இல்லை.

முந்தைய குறளுக்கு இதில் விடையுளது. நன்மை தீமை என்பன உலகில் தெளிவாகப் பிரிந்து கிடக்கவில்லை. மிகவும் தேடி ஆராய்ந்தே உண்மை காண வேண்டும்.

## 18. வெஃகாமை

பேராசைப்படாதிருத்தல், பிறர் பொருளுக்கு ஆசைப்படுவது சிறுமை மனத்தின் போக்கு. அதைக் கட்டுப்படுத்திச் செவ்விய வழியில் செலுத்த வேண்டும்.

171. **நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்**
**குற்றமும் ஆங்கே தரும்.**

பிறர் பொருள் மீது ஆசை வைத்தல் தவறு எனும் நடுவுநிலைமை இல்லாமல், பிறர்தம் நல்ல செல்வத்தைக் கவர நினைத்தால், அவ் ஆசை அவனது குடியைக் கெடுத்துப் பல குற்றங்களையும் உண்டாக்கும்.

யாரும் உதவமாட்டார்கள்; மதிக்கமாட்டார்கள்; நம்பவும் மாட்டார்கள்; குற்றவாளி என்ற பழிதான் மிஞ்சும்.

172. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

பிறர்பொருளை வெளவ நினைப்பது நடுவுநிலை ஆகாது. நடுவுநிலைமை தவற வெட்கப்படுபவர்கள், பிறர் பொருளை எடுத்துக்கொண்டாற் கிடைக்கும் பயனுக்கு ஆசைப்பட்டு, அதன் காரணமாகப் பழியின் பாற்படும் தீச்செயல்களைச் செய்யமாட்டார்கள். பிறர் பொருளைக் கவர நினைப்பது நடுவுநிலை ஆகாது. உழைக்காமல் கிடைப்பதால் தோன்றும் ஆசையையே 'படுபயன் வெஃகி (ஆசைப்பட்டு)' என்றார்.

173. சிற்றின்பம் வெஃகி அறன்அல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

பிறருக்குரிய பொருளைக் கவர்ந்து கொள்வதால் கிடைக்குமின்பம் சிறிய, நிலையற்ற இன்பமே. அறநெறியில் வரும் நிலையான இன்பத்தை விரும்புவர், அச்சிற்றின்பத்திற்கு ஆசைப்பட்டு அறமல்லாத செயல்களைச் செய்யமாட்டார்.

174. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

கையில் பொருள் இல்லை, வறியரானோம் என்ற எண்ணம்தான் பலசமயம் பிறர் பொருளை வெளவத் தூண்டுகிறது. ஐம்புலன்களென்பன, ஐந்து அவாவாகும். ஐந்து ஆசைகளையும் வென்று அடக்கிய குற்றமற்ற தெளிந்த அறிவுடையவர்கள், தாம் வறியர் என எண்ணிப் பிறர் பொருளுக்கு ஆசைப்பட மாட்டார்கள்.

175. அஃகி அகன்ற அறிவுஎன்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

பிறர் எல்லோரிடத்திலும் உள்ள பொருளுக்கு ஆசைப்பட்டு அவரால் வெறுக்கத்தக்க செயல்களை ஒருவன் செய்தால், நுண்ணிதாய்ப் பரந்த , அறிவினால் பயன் யாது?

கூர்மையுடையதாய் விரிந்து பரந்த அறிவினை 'அஃகி அகன்ற அறிவு' என்றார். அகன்ற அறிவு - அனுபவப்பட்ட அறிவு.

176. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

அருளை விரும்பி அறநெறியில் வாழ்பவன் பிறர்க்குரிய பொருட் செல்வத்திற்கு ஆசைப்பட்டு, அதனை அடையுமாறு பொல்லாத தீயசெயல்களைச் செய்யத் திட்டமிடுவானாயின், கெட்டுப் போவான்.

177. **வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.**

பிறர்பொருள் மீது பேராசைப்பட்டு அதனால் அடைகின்ற செல்வத்தை விரும்ப வேண்டாம். பின்பு அதனை அனுபவிக்கும் காலத்து, அதன் பயன் மாட்சிமையுடையதாகாது.

கேவலமான நிலையில் அனுபவித்துப் பயன் என்ன என்பதாம். இன்று ஊழல்வழி பிறர் பொருளையும் பொதுமக்கள் செல்வத்தையும் சூழ்ச்சியால் கவர்ந்து குவித்து வாழ்பவர்கள் மிகக் கேவலமான நிலையிலேயே அதை அனுபவிக்கின்றனர். பன்றி சேற்றில் கிடந்து இன்புறுகிறதன்றோ?

178. **அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.**

ஒருவரிடமுள்ள செல்வம் சுருங்காதிருக்க வழி என்ன என்றால், பிறன் கைப்பொருளுக்கு ஆசைப்படாதிருத்தலேயாகும்.

பிறன் பொருளுக்கு ஆசை வைப்பதென்பது ஒரு மனப் பழக்கமாகிவிடும். பிறகு தன்முயற்சி அற்றுப் போதலால், தனது செல்வமென்பது சுருங்கிப்போகும்.

179. **அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந்து ஆங்கே திரு.**

பிறர் பொருளுக்கு ஆசைப்படாமையே அறமென அறிந்து, ஆசை வையாதிருக்கும் அறிவுடையவர்களிடம், அவர்களது நேர்மையை அறிந்து, திருவானது அவர்களைத் தானே சென்று சேரும்.

'திருச்செற்று' என (168) முன்பு வந்ததை ஒப்பு நோக்குக. திரு (செல்வம்) அதிக முயற்சியின்றி, உழைப்புக்கும் கூடுதலாகச் செல்வம் சேர்தலைத் 'தானே வந்தடையும்' என்றார்.

180. **இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னும் செருக்கு.**

பின் விளைவதைச் சிந்தியாமல், ஒருவன் மற்றவர் பொருளை வெளவக் கருதினால் அது அவனுக்கு இறுதியைக் கொடுத்துவிடும். அப்பொருளை வேண்டாம் என்று எண்ணும் மனத்திண்மை வாழ்க்கையில் வெற்றியைத் தரும்.

ஓடும் மனத்தைத் தடுத்து நிறுத்துதலால், ஆசைப்படாத மனத்தை வேண்டாமை என்னும் செருக்கு (மனத்திண்மை) என்றார்.

## 19. புறங்கூறாமை

ஒருவர் இல்லாத இடத்தில், அவரைப் பற்றிய பழிச்சொற்களைக் கூறாமை. இருவர் கூடினால் அங்கு இல்லாத அயலார், உறவினர்தம் குற்றங்குறைகளைப் பெரிதுப்படுத்திப் பேசுவதில் சிலர் தனி இன்பம் காண்பர்.

181. அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது.

ஒருவன் அறமானவற்றைப் பேசாது, தீமைகளையே செய்தானாயினும் மற்றவர் மீது புறங்கூறான் எனப்படுதல் இனிது.

ங்கூறாமை ஒன்று இருந்தால் பிற யாவும் நல்லதாகவே அமையுமாதலின், அதன் சிறப்பு நோக்கி இங்ஙனம் கூறப்பட்டது. சொல்லவந்த அறத்தை வற்புறுத்த இங்ஙனம் கூறுதல் ஒரு மொழி நடையாகும். எனவே பிற பாவங்கள் செய்யலாம் என்பது கருத்தன்று.

182. அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

ஒருவரைக் காணாத இடத்துப் பழிப்புரையால் அழித்துப் பேசி கண்டவிடத்துப் பொய்யாய்ச் சிரித்துப் பேசுதல், அறத்தையே இல்லையென அழித்துக்கூறிப் பாவங்களைச் செய்தலைவிடத் தீதாகும்.

183. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்.

ஒருவனைக் காணாதபோது அவனைப்பற்றி இகழ்ந்து பேசிக் கண்டபோது நல்லவன்போல் பொய்யாக நடித்து வாழ்வதைவிடச் சாகலாம். அங்ஙனம் சாவது அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும்.

திருவள்ளுவர் மிகக் கடிந்து கூறுமிடங்களில் இதுவும் ஒன்று. இங்கும் சாக வேண்டுமென்பது கருத்தன்று; திருந்த வேண்டுமென்பதே உட்கிடை.

184. கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல்.

ஒருவனுக்கு நேரே எதிர்நின்று, கண்ணோட்டமின்றிப் பேசினும் பேசலாம். அவன் எதிரில் இல்லாதபொழுது பின்னர் அவன் முகத்தை எதிர்நோக்கவியலாத சொற்களைக் கூறற்க.

185. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையால் காணப் படும்.

சிலர் அறம் பற்றி வெகுவாகப் புகழ்ந்து பேசுவர். அவர்கள் மனத்தில் உணர்ந்து அவ்வாறு பேசவில்லை என்பது, அவர்கள் புறங்கூறித் திரியும் புல்லிய குணத்தால் அறியப்படும்.

இன்றும் உலகநிலை இதுதான். வாய்கிழிய அறம்பற்றிப் பலபடப் பேசுபவர்கள் செயலில் நேர்மாறாக நடப்பர்; அறத்தைக் குழி தோண்டிப் புதைப்பர்.

186. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

பிறர் பற்றிப் பழிச்சொற்களைத் தூற்றித் திரிவானாயின் அவனைப் பற்றிய குற்றங்களுள் மனம் உளையும் திறத்தவாகிய பழிகளைத் தேர்ந்தெடுத்துப் பிறரால் அவனும் தூற்றப்படுவான்.

தாமும் பிறரால் எளிதில் தூற்றப்படுவோம் என்ற நினைவிருந்தால், யாரும் பிறர் பழியைத் தூற்றத் துணிய மாட்டார்கள்.

187. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

சிரித்து மகிழுமாறு பேசிப் பலருடன் நட்பாடலைத் தெளியாதவர், ஒருவரை ஒருவர் மனவேற்றுமை கொண்டு பிரியுமாறு புறம்பேசி, நெருங்கிய உறவுடையவர்களையும் பிரித்துவிடுவர்.

188. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு.

தம்முடன் நெருங்கிப் பழகுபவர் குற்றங்களையும் பலரறியப் புறத்தே தூற்றும் இயல்புடையார், மற்றவர்கள் பற்றி என்ன செய்வார்களோ?

பழி தூற்றும் பழக்கம் பற்றிக் கொண்டால் போகாது; இன்னார் இனியாரென்று பார்க்காது; நெருங்கிப் பழகியவர்தம் குறைகள் தமக்குத் தெரியுமாதலின், அவற்றையும் பிறரிடம் தூற்றிப் பேசி மகிழவே முந்துவர்.

189. அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

ஒருவர் இல்லாத சமயம் பார்த்து, அவர் பற்றி இழிந்த சொற்களைப் பேசுபவனது உடற்பாரத்தை, இப்பூமி பொறுமை எனும் அறம்பற்றித் தாங்கிக் கொள்கிறது போலும்!

190. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

அயலார்தம் குற்றங்களைக் கண்டுபிடித்துப் புறங்கூறுவார், அதுபோல் தம்மிடமுள்ள குற்றங்களையும் கண்டு உணர வல்லராயின் புறங்கூறார். அதனால் நிலைபெற்ற அவர் உயிருக்குத் தீங்கு எதுவும் உண்டாகாது.

'தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின், என் குற்றமாகும் இறைக்கு' என அரசின் குற்றங்கடிதலில் வரும் குறள் (436) ஒப்புநோக்கற்பாலது.

## 20. பயனில சொல்லாமை

தமக்கும் பிறர்க்கும் பயன்படாத சொற்களைப் பேசுதல், இது. பொய் பேசுதல், புறங்கூறுதல், குற்றமெனினும் பயன்றற வீண்பேச்சும் அவற்றைவிடக் கடுங்குற்றமெனப் பலர் உணர்வதில்லை. உலகில் இது பெருவழக்கு. பலர் இதைக் குற்றமென்றே நினைப்பதில்லை. முன்னேறிய நாடுகளில் பிறரைப் பற்றிப் பேசவோ, பயனின்றிப் பேசித் திரியவோ நேரமும் பழக்கமும் இன்மை எண்ணத்தக்கது.

191. பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

பலரும் வெறுக்கும்படி எப்பொழுதும் பயனற்றவற்றையே பேசுபவன் எல்லோராலும் இகழப்படுவான்.

சேய்மையில் வரும்போதே, பொழுதை வீணாக்கிவிடுவான் என அஞ்சி பலரும் ஒதுங்குவர்.

192. பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது.

நற்பயனற்ற செயல்களை நண்பர்களிடத்துச் செய்வதைவிட, பலர் முன்பு பயனற்றவற்றைப் பேசுதல் தீதாகும்.

நண்பர்கள் பொறுத்துக் கொள்வர். பலர்முன் பேசும் பயனற்ற பேச்சு பல தீய விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

193. நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை.

பயனற்றவற்றை மிக விரித்துப் பெரிதாகப் பேசும் ஒருவனது பேச்சே அவன் பழகுதற்குத் தகுதியற்றவன் என்பதை உலகிற்கு உணர்த்திவிடும்.

இத்தகையவர்கள் ஒரு பயனுமற்றவற்றை, மிக விரித்துப் பேசப் பழகியிருப்பதை உலகிற் கண்கூடாகக் காணலாம். கேட்பவர்க்கு அலுத்துப் போகும்.

194. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லார் அகத்து.

பலரிடம் பயனற்ற பண்பில்லாத சொற்களைப் பேசினால் அது அவனை விரும்பத் தகாதவனாக்கி அவனுடைய வேண்டிய நன்மைகளையும் நீக்கும்.

இத்தகையவனை ஒரு தொழிலில் அமர்த்தினால், மற்றவர்களையும் கெடுத்துவிடுவான் என அஞ்சுவார்கள் அல்லவா?

195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

நற்பண்புடையார் பயனற்றவற்றைப் பேசினால், அவரது சீர்மையும் நன்கு மதிக்கற்பாடும் அவரை விட்டு நீங்கும்.

இதிலிருந்து நீர்மை (பண்பு) உடையாரும் சிலசமயம் சீர்மைகெடப் பேசுவர் எனத் தெரிகிறது. இது பலரையும் எளிதிற் பற்றிக் கொள்ளும் ஒரு பழக்கம்.

196. பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்.

பயனில்லாத சொற்களைப் பேசுவது மட்டுமன்று, அதைப் பலபடப் பாராட்டியும் விடாது கொண்டாடுவானாகில், அவனை மனிதன் எனல் தகாது; மனிதருள் உள்ளீடற்ற பதர் என்று சொல்ல வேண்டும்.

197. நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

சான்றோர் இனிமை இல்லாத, நயமற்ற சொற்களைப் பேசினும் பேசலாம்; ஆனால் தீமைதரும் பயனற்றவற்றைப் பேசாதிருப்பதே நல்லது. முன்னதும் கூடாது என்பதே கருத்து, சான்றோரையும் பற்றும் பழக்கம் இது.

198. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

அரிய பயனையே ஆராய்ந்து தேடும் கூர்த்த அறிவுடைய பெருமக்கள், பெரும்பயன் இல்லாத சொற்களைப் பேச மாட்டார்கள்.

மேலும் மேலும் பயனுடையவற்றை ஆய்ந்து தேடிப் பேசிப் பழக வேண்டும் அதுவே அறிவுடையார் செயலாகும்.

199. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.

மயக்கமற்ற தூய மெய்யறிவினையுடையவர்கள் பொருளற்ற சொற்களை மறந்தும் பேசமாட்டார்கள்.

பொச்சாத்தல் - ஏதோ மறதியில் பேசிவிடுதல்; தன்னை மறந்து பேசிவிடுதல். மனமாசற்ற ஞானிகள் பழக்கம் காரணமாக மறந்து பயனற்றவற்றைப் பேசார் என்பதாம்.

200. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

சொற்களில் பயனுடைய சொற்களையே ஆராய்ந்து தேர்ந்தெடுத்துப் பேசுக; சொற்களில் பயனற்ற சொற்களைப் பேசற்க. ஒரு சொல்கூடப் பயனுடையதாய் இருக்க வேண்டுமாம்.

பயனுடையவற்றையே பேசு பேசு என அடித்துச் சொல்வது போன்ற அணி நடை இது. மேலும் சொற்களைப் பயனுடையனவா என ஆராய்ந்து தேர்ந்தெடுத்துப் பேசுவோர், மிகுந்த நற்பழக்கமுடையவராவர்.

## 21. தீவினை அச்சம்

தீய செயல்களைச் செய்ய அஞ்சுதல், தீயைப் போல் தீவினையும் தீமையையே விளைவிக்கும். தீவினைக்கு மாற்று இல்லை. கழுவாய் கிடையாது. எந்தத் தீவினையையும் நல்வினையாக மாற்றவே முடியாது என விளக்கப்படுகிறது.

201. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு.

தீவினை என்னும் செருக்கொடு கூடிய செயலுக்குத் தீயனவே செய்யும் தீயவர்கள் அஞ்சமாட்டார்கள்; நன்மதிப்புடைய சான்றோர்கள் அஞ்சுவர்.

இது ஒரு மனப்பழக்கமே. கடவுளுக்குக் காணிக்கை செலுத்திவிடலாம்; கழுவாய் தேடிவிடலாம்; யாராலும் எதனாலும் அசைக்கமுடியாது என்ற செருக்கு - ஆணவம் ஏற்படின், தீவினை செய்வோர் அஞ்சாது செய்வர்.

'என்னை யார் என்ன செய்யமுடியும்' என்ற செருக்கே தீமை செய்யத் தூண்டுகிறது.

202. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

தீயசெயல்கள் தீய பயன்களையே விளைத்தலால், அத்தீயவை தீயைவிடக் கொடுமையுடையவை என அஞ்சப்படும்.

தீ நன்மையும் பயக்கும்; தீயவை தீமை ஒன்றே பயக்கும்; அதனால்தான் அவை தீயைவிடக் கூடுதலாக அஞ்சப்படுகின்றன. காற்றில் தூற்றிய தூசி போலத் தீமை செய்தவனையும் தானே வந்து தாக்கும். தீயவை தீமையைத்தான் பயக்கும் நாம் தீயவழியினால் நன்மையும் கிடைப்பதால் அதைத் தீயதென்று எண்ணுவதில்லை. ஆனால் இன்பம் தருவதாக எண்ணி நாம் செய்வன பின்பு நமக்குத் துன்பமே தருவது உறுதி.

203. அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.

தீயவற்றைப் பகைமையால் தமக்குச் செய்வார்க்கும், தாம் திருப்பிச் செய்யாமல் விடுதல், உறுதி தரும் அறிவுகளனைத்திலும் தலையாய அறிவென்று கூறுவர்.

தீமை தீமையையே பயக்குமென்பது ஒரு விதி. அதனை ஒப்பினால் நாம் திருப்பிச் செய்யும் தீமையும் நமக்குத் தீமை பயந்தே தீருமல்லவா?

204. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.

பிறனுக்குக் கேடு தரும் தீவினைகளை மறந்தும் மனத்தால் திட்டமிடாது விடுக; திட்டமிட்டு எண்ணுவானாயின் அவ்வாறு எண்ணிய அவனது கேட்டை, அறக்கடவுள் உடனே திட்டமிடும்.

மனத்திற்குள் திட்டமிட்டாலும் அறமெனும் ஆற்றலுக்குத் தெரிந்துவிடுமாதலின், இவன் 'சூழும்'போதே அதுவும் உடன் சூழுமாம். அறம் ஒரு 'விதி', இறைச்சட்டம்; மாற்றமுடியாதது; மேல் முறையீட்டிற்கு இடமில்லாதது. ஒருவன் மற்றவருக்குக் கேடு 'சூழும்'போதே, அவனது கேட்டை அறம் 'சூழ்வது' இவ்விதிப்படியேயாம்.

205. இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.

சிலர் வறுமையால் தீயன செய்ய முற்படுவர். தீயவை செய்தேனும் வறுமையை ஒழிக்கலாம் என்று தீயவற்றைச் செய்யாதே; செய்தால் மீண்டும் மீண்டும் வறியவனாக நேரும்.

செய்த தீதிற்காக வரும் தீதால் வளரும் தீதே வறுமை.

206. தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

தீமை சுவரில் எறிந்த பந்துபோன்றது; திரும்பத் தன்னிடமே வந்துசேரும். துன்பம் தருவன தன்னை வந்து வருத்துதலை வேண்டாதவன், தீமையின்பாற்பட்ட செயல்களைத் தான் பிறரிடம் செய்யாதிருக்க வேண்டும்.

207. எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்.

எத்துணைப் பெரிய பகையை அடைந்தாரும் அதனின்று ஒருவாற்றால் தப்புவர்; ஆனால் தீவினையாகிய பகை அழியவே அழியாது; பின்னாற்சென்று புக்குழிப்புக்குக் கொல்லும்.

சில சமய நூல்கள், சாத்திரங்கள் கூறுவதுபோல் தீமைக்குக் கழுவாய் செய்தவனைக் காப்பாற்றும் சடங்கு, மந்திர தந்திரம் எதுவுமில்லை.

208. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று.

பிறர்க்குத் தீயவற்றைச் செய்தவர் தாம் கெடுதல் உறுதி. அது எத்தகையது என்றால், ஒருவனது நிழல் மறைந்திருந்து சமயம் நேரும்போது வெளிப்படுவது போன்றது. அதாவது அவனைவிட்டு நீங்காது, அவன் பாதங்களின் கீழேயே தங்கிய தன்மையது ஆகும்.

தீயவை செய்தார் தப்பிக்க வழிகூறும் உலக நூல்களிடையே, வள்ளுவக்குரல் தீமையை நன்மையால் போக்க முடியுமே தவிர, வேறெவ்வகையாலும் போக்க முடியாது எனப் பறை அறைகிறது. சமயங்கள் எல்லாம் நிறுவனங்கள் ஆனதால், மக்களை ஈர்க்கக் கழுவாய்களை விவரித்தன; பாவத்திற்கு மன்னிப்புக் கிடைக்கும் என்றன. இப்போக்கு பாவம் செய்யவே தூண்டியது, பாவத்திற்குக் கழுவாய் தேடிவிடலாம் என்ற துணிவால்.

209. தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

ஒருவன் தன்னைத் தான் காதலிப்பது உண்மையானால், தீவினைப்பாற்பட்டவற்றுள் ஏதேனும் ஒன்றுடனும் சிறிதளவுகூட நெருங்காது தவிர்ப்பானாக.

'தன்னைத் தான் காதலிப்பது' என்ற தொடர் மிகவும் புதுமையானது. வேண்டாத உணவை, உறவை, உணர்வைக் காதலிப்பவன், தன்னைக் காதலிப்பதில்லை எனலாம்தானே?

210. **அருங்கேடன் என்பது அறிக மருங்குஓடித்**
**தீவினை செய்யான் எனின்.**

ஒருவன் எக்காரணத்தைக் கொண்டும் தீய பக்கம் சாய்ந்து, தீய செயல்களைச் செய்யானாயின் அவனுக்கு எந்நாளும் கேடு வரவே வராது.

தீமை தீமையையே பயக்கும் என்ற வரையறை விதி - இறைச்சட்டம் - இயற்கை நியதி இன்று மிகப் பெரும்பாலோரால் நம்பப் படவில்லை. இவ்வுண்மையை நிறுவ, உலக நடப்புக்களை வைத்துக் கதையாக, புதினமாக, நாடகமாக, ஆய்வுரையாக எழுதுவோர், உலகை உய்விப்பர்.

## 22. ஒப்புரவறிதல்

ஒப்பு-ஒப்புரவு, இது நல்குரவு, தாக்குரவு போல ஒரு சொல். ஒப்பு - சமம். வள்ளுவர் கண்ட சமதருமம் இது. உலக நடையுடன் ஒத்துவாழ்தல், தனது செல்வத்தைப் பகிர்ந்துண்டு வாழும் நெறிகள். கல்விக்கூடம், மருத்துவமனை அமைத்தல் போலப் பொது நன்மைகள் உதவுதல் ஒப்புரவாகும். தேடிய செல்வத்தைப் பதுக்காது, ஒதுக்காது உலகிற்கே உதவிவிடுவது ஒப்புரவு.

ஈகை வேறு. இது வறியவர்க்குக் கொடுப்பது. ஒன்று தேவைப்பட்டவர் இரந்து கேட்க அதை அவர்க்குக் கொடுத்தல். அடிப்படைத் தேவை பசி; அதனைக் களைதலே ஈகை எனப்பட்டது. ஒப்புரவு ஈகை அன்று. இரப்பவர் அற்ற நிலையை உண்டாக்குவது ஒப்புரவு. தனக்கென்றும் தன் குடும்பத்திற் கென்றும் பரம்பரைக்கென்றும் பதுக்குகிற நாடு, தேங்குகிறது - முடங்குகிறது. அங்ஙனம் பதுக்காத நாடு, செல்வ வளத்தில் செழிக்கிறது.

211. **கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
**என்ஆற்றுங் கொல்லோ உலகு.**

ஒப்புரவுகள் கைம்மாறு கருதிச் செய்யப்படுவன அல்ல; அவை உலகிற்கு மனிதன் செய்யவேண்டிய கடப்பாடு - கடமை ஆகும். மழை பொழியும் மேகத்திற்கு உலகம் என்ன கைம்மாறு செய்கிறது?

ஒப்புரவு - கடப்பாடு, கடமை, கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியது ஒப்புரவாவது கைம்மாறு கருதாத கொடை - மணக்குடவர். 'பொதுநல அறங்கள் எல்லாம் ஒப்புரவு எனப்படும் - வ.சுப.மாணிக்கம்.

212. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

செல்வம் சேர்ந்தால் ஒப்புரவு செய்யவேண்டும். தான் முயற்சி செய்து ஈட்டிய செல்வமனைத்தும் தகுதியுடையவர்க்கு ஒப்புரவாகிய உதவிகள் செய்தற்பொருட்டேயாம்.

தாளாற்றித தந்தது என்பதால் தான் ஈட்டியது; 'தக்கார்க்கு' என்பதால், வீணே அள்ளிவிடாமல் பயன் தருமாறு செய்வது. குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லம், கல்வி நிலையம் போல்வன பல உதவி செய்தற்குத் தகுந்தவையாகும்.

213. புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

எல்லோர்க்கும் பயன்படுமாறு பொது நன்மைகளுக்குச் செய்யும் ஒப்புரவு மிகவும் நல்ல செயலாகும். அதுபோன்ற நன்மை தரும் பிறிதொன்றைத் தேவருலகத்திலும் பெறுதல் இயலாது; இவ்வுலகிலும் இதுபோல ஒன்றைப் பெறுதலரிது. பொதுலம் பேணுதலால் பெறும் மகிழ்ச்சி நோக்கியது இது.

214. ஒத்த தறிவோன் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

உயிர் வாழ்கிறவன் எனப்படுபவன் உலக நடையை அறிந்து உதவிகள் செய்து பலரொடு கூடி வாழ்கிறவன் ஆவான். அவ்வாறு வாழாதவன் உயிருடையவனானாலும் செத்தவருள் ஒருவனாகவே கருதப்படுவான்.

ஒத்தது - ஒப்புரவு; உலக நடையை அறிந்து எல்லோர்க்கும் பயன்படுவனவற்றைச் செய்தல். தனித்து வாழ்தலென்பது இல்லை. இயலாது; கூடி வாழ்தலே சிறந்தது.

உயிர் வாழ்கிறான் என்பதற்குரிய அடையாளம் போய்விடுதலின் நடைப்பிணம் எனச் செத்தாருள் வைக்கப்படுகின்றான். செஞ்சிலுவைச்சங்கம், சாரணரியக்கம் போன்றவை உலகில் அன்றன்று சமுதாயத் தேவையறிந்து

உதவுகின்றன. அதுபோல உதவுதலே 'ஒத்தது அறிதல்' அல்லது உலக நடையை அறிந்து செய்தல்.

215. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

உலகொடு ஒத்துவாழும் ஒப்புரவை விரும்பும் பேரறிவாளனது செல்வம் ஊரினர் பருகும் குளம் நீர் நிறைந்ததற்குச் சமமாகும்.

வேண்டியவர் வேண்டியவாறு வேண்டிய அளவு முகந்து பயன்படுத்துவதுபோல, இவனது செல்வம் உலகப் பொது நன்மைக்குப் பயன்படும்.

216. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

பலரும் விரும்பும் நற்பண்புடையானிடம் சேரும் செல்வம், பயன்படும் மரம் நடுவூருள் பழுத்து நிற்பதற்குச் சமமாகும்.

இனிய கனிகள் எளிதிற் கிடைப்பதுபோல, இப் பண்பாளனது செல்வமும் எளிதாகப் பயன்படும்.

217. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

பெருங் கொடைக்குணம் உடையவனிடம் சேர்ந்த செல்வம் தன்னிடமுள்ள தளிர், இலை, நரம்பு, பட்டை, வேர் முதலிய எல்லாமே பிணிக்கு மருந்தாகப் பயன்படும் மரத்திற்குச் சமமாகும்.

மரத்தை வருத்திப் பயன்கொள்வர். தன் வருத்தம் நோக்காது தன்னை அழித்துக் கொண்டும் உலகிற்கு உதவுபவன் செல்வம் இது போன்றது. மேல் உள்ள ஊருணி, பழமரம், மருந்துமரம் பற்றிய மூன்றுக்கும் இயைபுள்ளமை, ஒரு படிநிலை வளர்ச்சியைக் காட்டுகிறது.

218. இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்.

ஒப்புரவைத் தம் கடமை என அறிந்து தெளிந்த ஞானமுடையவர், தம்மிடம் செல்வம் சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தலைச் சுருக்க மாட்டார்கள்.

219. நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு.

ஒப்புரவு செய்யும் நல்லியல்பு உடையான் வறுமையாளனாவது தனக்கொன்று இல்லாத போதன்று; உலகத்திற்குத் தவிர்க்காமல் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்யப் பெறாது வருந்துகின்றமையே அவனுக்கு வறுமை ஆகும்.

தான் நுகரப் பெறாதது நல்குரவன்று; உலகிற்கு உதவப் பெறாததே நல்குரவாய்த் தோன்றும்.

220. ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

ஒப்புரவு செய்வதால் கேடு வராது; அங்ஙனம் கேடு வருமென்று சொன்னால், அக்கேடு ஒருவன் தன்னை விற்றாவது கொள்ளும் தகுதி உடையதாகும்.

உலகிற்குக் கொடுத்துவிடின் பொருள் கரைந்துவிடும். அதனால் சிலர் கருமியாய்ச் சேமிப்பே கருத்தாய்ச் செல்வத்தை இறுக்கிப் பிடிப்பர். ஒப்புரவினால் கேடு வராது; வரினும் அது கேடாகாது; உலகம் அதைக் கேடாகக் கருதாது.

## 23. ஈகை

வறியவர்க்கு அவர் வேண்டுமொன்றைக் கொடுப்பதே ஈகையாகும். கொடிய வறுமைக்கண் பசி தீர்க்கும் உணவை அதாவது கொடுப்பதே ஈகை. அதாவது அடிப்படைத் தேவைகளை இல்லார்க்கு ஈவது ஈகை. ஒப்புரவு உலக நடையை அறிந்து, அனைவர்க்கும் பயன்படும் 'தருமங்களைச்' செய்வது; ஈகை தனி ஒருவர், வறுமையால் வருந்துவதைப் பார்த்துக் கொடுப்பது. இவை தம்முள் வேறுபாடு.

221. வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

'குறி' எதிர்ப்பு என்பது உலக வழக்கு. அளவு குறித்துக் கொடுத்துத் திரும்ப வாங்கிக் கொள்வது. அவ்வாறன்றி ஈவது ஈகை. ஒன்றுமற்ற வறியவர்களுக்கு அவர்கள் வேண்டியதொன்றைக் கொடுப்பதே ஈகையாகும். ஒரு பயன் கருதிக் கொடுக்கும் மற்றையன எல்லாம் 'குறி எதிர்ப்பு' என்னும் தன்மையினை உடையனவாகும்.

222. நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

சிலர் தானம் பெறுதல் நல்ல நெறிதான் என்று கூறினாலும் பிறரிடம் கையேந்திப் பெற்றுக் கொள்ளுதல் தீதேயாகும். மேலுலகமே இல்லை; அதனால் மறுமைப் பயன் என எதுவுமில்லை என்று கூறினாலும் பிறர்க்கு ஈவதே நல்ல நெறியாகும்.

தானம் பெறுதலையும் ஒரு வாழ்க்கை நெறியாகக் கூறுவாரை மறுப்பது இது.

223. இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள.

வறியவன் தனது வறுமையை 'யான் எதுவும் அற்ற ஏழை' என்று வாய்விட்டுச் சொல்வது பெருந்துன்பம் தரும் செயலாகும். அங்ஙனம் அவன் உரையாத விதத்தில் அல்லது உரைப்பதற்கு முன்பாகவே, குறிப்பறிந்து கொடுத்தல் என்பது அங்ஙனம் கொடுத்துப் பழகிய குலத்தில் பிறந்தவனிடமே காணப்படும் பண்பாகும்.

குலம் குடிவழி மரபு; சாதியன்று. சாதி பிறப்பினால் வரும் வருணாசிரமச் சார்புடையது. குலம் முன்னோர் வழிவரும் குடிச்சிறப்பு.

224. இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு.

ஒருவர் தம்மிடம் இரந்து நிற்க நேர்ந்தால், அதுவே ஒருவர்க்கு மிகவும் துன்பம் தருவதாக இருக்கும். அங்ஙனம் இரந்து நின்றவர்க்கு ஒன்றை ஈந்து, அதனால் அவர் முகம் இனிதாக மலர்தலைக் காணும்போதுதான் அத்துன்பம் நீங்கும். அதுவரை அங்ஙனம் இரந்து நிற்கப் பார்த்துக் கொண்டிருத்தல் துன்பமேயாம்.

கொடுக்க இயலாமலிருந்தால் இரந்து நிற்பாரைப் பார்த்துக் கொண்டிருத்தல் துன்பமே.

225. ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

தன் பசியை அடக்கி, வயிற்றைச் சிறிது சிறிதாகப் பசியாவாறு செய்யும் துறவிகளின் ஆற்றலே அவர் தம் ஆற்றல்களில் சிறந்த ஆற்றலாகும். ஆயினும் அது, அப்பசியுடையார் இரந்து நிற்கும்போது, உணவு தந்து அதைத் தீர்க்கின்றவர்தம் ஆற்றலுக்குப் பிற்பட்டதேயாகும்.

பசியை ஆற்றுதல் - அடக்கிக் கொள்ளுதல், பசியை மாற்றுதல் பிறர் பசியைத் தீர்த்தல், தன் பசியை அடக்கிக் கொள்ளப் பழகியவரை விடவும், பிறர் பசியைத் தீர்ப்பவர்தம் ஆற்றலே பெரிது. இங்கும் இல்லறத்தானை உயர்த்திக் காட்டும் வள்ளுவர் மனப்போக்கு, யாருக்கும் விளங்கிவிடும்.

226. **அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி.**

எதுவும் அற்றவராய் வாடுவாரது, கொன்றழிப்பது போன்ற கொடிய பசியைத் தீர்த்தலே, செல்வம் பெற்றான் ஒருவன் அச்செல்வத்தைத் தனக்கும் பிற்பாடு உதவுமாறு சேமித்து வைக்குமிடமாகும்.

செல்வத்தை ஈட்டுபவர்கள் அதைச் சேமிக்கும் வழிகளையே தேடுகிறார்கள். அவர்களுக்குத் திருவள்ளுவர் பொருத்தமான சேமிக்கும் இடம் ஒன்று சொல்கிறார். பொருள்வைப்புழி - செல்வத்தைச் சேமித்து வைக்குமிடம். 'பாடுபட்டுத் தேடிப் பணத்தை எங்கெங்கோ நிலத்தடியில் புதைத்து வைத்த காலம்' அது. அதுவன்று சேமிக்குமிடம்; பசித்தவர் வயிறுகளே சேமிக்கத் தக்க இடமென்ற கருத்து மிக ஆழமானது.

227. **பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்**
**தீப்பிணி தீண்டல் அரிது.**

தன்னிடம் உள்ளதைப் பிறர்க்கும் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்ணுதலைப் பழகியவனைப் பசி என்ற தீயநோய் எக்காலத்தும் அணுகாது.

பிறர்க்குப் பகுத்தலால் தான் பசிக்க நேருமோ என ஐயுறுவாரை, அங்ஙனம் ஆகாது என ஊக்கப்படுத்தும் விதம் இது.

228. **ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை**
**வைத்திழக்கும் வன்க ணவர்.**

தமது செல்வத்தைச் சேமித்துக் காத்திருப்பவரும் ஒருநாள் அதைவிட்டுப் போக நேரும். அவ்வாறு தமது செல்வத்தை ஈயாது பதுக்கி வைத்துக் காத்து, பின் இழக்கும் வன்கண்மையை உடையார், வறியார்க்குக் கொடுத்து அவ்வாறு கொடுப்பதனால் தமக்கு ஏற்படும் இன்பத்தை ஒருபொழுதும் அறியார் போலும்.

கொடுப்பதனால் பெறும் இன்பத்தைப் பழகினால் அதைக் கைவிட மாட்டார்கள். வன்கணவர் - ஈயாது இறுகிப்போன மனமுடையவர்.

229. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

தாம் சேர்த்து நிரப்பிய செல்வத்தைத் தாமே தனித்து, யார்க்கும் எதுவும் கொடாது நுகர்வது, யாசித்தலைவிட மிகவும் கொடியதாகும்.

230. சாதலின் இன்னாத தில்லை இனிதுஅதூஉம்
ஈதல் இயையாக் கடை.

ஒருவருக்குத் தம் உயிரை இழத்தலைப் போல் துன்பம் தருவது பிறிதில்லை. ஈதல் இயையாத நிலை என்ற ஒன்று வரும்போது இறத்தலும் இனிதாகும்.

மான உணர்வைத் தூண்டுவதிது. ஈத்து உவந்து வாழும் வகையில் முயற்சி உடையவராக வேண்டுமாம். சாக வேண்டுமென்பது கருத்தன்று. 'இதைச் செய்ய முடியாவிட்டால் சாகலாம்' என்றால் எவ்வாறாவது செய்து முடிக்க வேண்டுமென்பதே கருத்து. திருவள்ளுவர் மொழிநடை, உலகப் பேச்சு மொழிநடையை ஒட்டியிருக்கும்.

## 24. புகழ்

புகழொடு வாழும் வாழ்வே வாழ்வு; இகழொடு வாழ்தல் வாழ்வாகாது. அது விலங்கின வாழ்க்கைக்குச் சமம்; மானுடம் ஆகாது. ஈதலே பெரிதும் புகழுக்கு அடிப்படையாகும்; இன்னாரெனப் பேரொடு சேர்த்துச் சொல்லப்படுதலே புகழ். 'பேரும் புகழும்' என்பது ஓர் இணைத்தொடர். நல்லவர் என்று உலகம் சொல்ல வேண்டும். 'பேரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்' என்பர்.

231. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

வறியவர்க்கு ஈதல் வேண்டும்; அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும். அப் புகழல்லது வாழும் உயிராகிய மாந்தர்க்கு வேறு ஊதியம் - இலாபம் எதுவுமில்லை.

மக்கள் உயிர் வாழ்க்கைக்குப் பயன் யாது? நிகர ஊதியம் எது? எல்லாவற்றையும் கூட்டிக் கழித்தால் எஞ்சி நிற்பது, நாம் விட்டுப்போகும் நற்பெயர் ஒன்றேயாகும்.

232. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.

உலகத்தில் புகழ்ந்து பேசுவார் அங்ஙனம் பேசுவன எல்லாம், வறியவராக இரப்பார்க்கு அவர் வேண்டியது ஒன்றை ஈபவர்மேல் நிற்கும் புகழேயாகும்.

பிறர்க்கு ஈந்து, உதவி வாழ்பவர்க்கே புகழுண்டாகும். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' இவர்கள்.

233. ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.

நிலையற்ற இவ்வுலகத்தில் அழியாமல் நிலைபெற்று விளங்குவது, சிறந்த புகழ் ஒன்றேயல்லாமல், பிறிதொன்றுமில்லை.

234. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

இந்நிலவுலக எல்லைக்கண்ணே நிலைநிற்கும் புகழைச் செய்வானாகில், தேவருலகமும் அவனையே போற்றும்; தன்னிடமுள்ள தேவரைப் போற்றாது.

தேவர்கள் வருந்தி ஈட்டிக்கொடுத்து வாழ்ந்து புகழ் பொறாமையின், மானுடப் புகழே அங்கும் மன்னு புகழாகுமாம். அதுதான் 'நத்தம் போல் கேடு'. கெடுவது போல் தோன்றினாலும் உண்மையில் சிறப்புறுவது அது (நத்தம் - ஆக்கம், சிறப்பு)

235. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது.

சிலர்தம் கேடு புகழைத் தரும் கேடு. அதுதான் 'நத்தம் போல் கேடு'. கெடுவதுபோல் தோன்றினாலும் உண்மையில் சிறப்புறுவது அது. (நத்தம் - ஆக்கம் - சிறப்பு) மற்றவர்க்காக, நாட்டுக்காகத் தியாகம் செய்து, அழிபவரெல்லாம் நிச்சயம் அழிபவரல்லர். அவர்கள் செத்தாலும் வாழ்வர்; அதுதான் உளதாகும் சாக்காடு. அவர் புகழுடம்பால் வாழ்பவரே ஆவர். இவை இரண்டும் - அழிவது போல் தோன்றினும் ஆக்கமாவதும், சாக்காடு எய்தினும் புகழால் உலகில் உளராதலும் அறிவுச் சதுரப்பாடு உடையவர்க்கே அல்லாமல் மற்றவர்க்கு வாய்க்காவாம்.

நிலையற்ற உடலையும் இன்பங்களையும் இழந்தாலும், புகழால் நிலைபெறுதலின் இத்தகையார் சாதுரியம் மிக்கவர் எனப் போற்றப்படுகின்றனர்.

236. **தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

உலகில் ஒரு தொழில், கலை, புதுமுயற்சியில் பலருமறிய விளங்கித் தோன்றினால், புகழோடு அங்ஙனம் தோன்ற வேண்டும்; அஃது வாய்க்காதவர் அங்ஙனம் உலகிடைப் பலருமறியத் தோன்றுவதை விட, தோன்றாதிருப்பதே நல்லது.

இகழொடும் பழியொடும் உலகெலாம் அறிய வாழ்வார் பலர்; அவரை நோக்கியது இது. ஒரு காரியத்தை, குறிக்கோளை, முயற்சியை மேற்கொண்டவர் அதில் விளங்கித் தோன்ற வேண்டும். அங்ஙனம் தோன்றுதல் இயலாவிடின், அவற்றில் ஈடுபடாமையே நல்லது. அரசியல் தலைவர் சிலர் உலகறிய இகழொடு வாழ்கின்றனர். அது தவறாக உலகிற்கு வழிகாட்டி, அழிவு தரும்.

237. **புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை**
**இகழ்வாரை நோவது எவன்?**

தமக்குப் புகழ் உண்டாகுமாறு, அதற்கேற்ற செயல்களைச் செய்து வாழமாட்டாதவர்கள், அதுபற்றித் தம்மைத் தாமே நொந்துகொள்ள வேண்டும். அல்லாமல் தம்மை இகழ்பவரை நோவது எதற்காக?

புகழும் இகழும் தாமே தேடிக்கொள்வன. பிறர் வலிந்து சூட்டுவன அல்ல. மற்றவர் தம்மைப் பற்றித் திறனாய்வதைத் தாங்க மாட்டாதவர்கள் கோபப்படுவர். அது தவறு. பிறர் தம்மை உயர்வாக மதிக்குமாறு, முயன்று தம்மை உயர்த்திக் கொள்வது அவரவர் கடமையேயாகும்.

238. **வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசையென்னும்**
**எச்சம் பெறாஅ விடின்.**

புகழ்பட வாழ்வதே வாழும் உயிரின் கடமை; புகழ் இல்லாவிட்டால் போகிறது என்பது மடமை; அதனால் புகழ்பெற வாழாதவனை உலகம் பழிக்கும். இசை எனப்படும், தமக்குப் பிறகும் எஞ்சி நிற்பதாகிய புகழைப் பெறாவிட்டால், உலகத்தார் யாராயிருப்பினும் அவர்கள் அனைவருக்கும் அது வசையாகும் என்பர் பெரியோர். இசை பெறாமையே வசையாகிவிடும்.

239. **வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா**
**யாக்கை பொறுத்த நிலம்.**

புகழ் இல்லாத உடலைச் சுமந்த நிலத்தில் பழியொடு படாத வளம் தரும் பயனான விளைவு குறைந்து போகும். புகழுடையார் இருக்கும் நிலம்

வளத்தால் கொழிக்கும். தமக்கென எதையும் வைத்துக் கொள்ளாது கொடுத்துப் புகழ் பெறுவதால், அவர் வாழும் உலகம் மேன்மேலும் செழிக்குமாம்.

240. வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்.

இசை (புகழ்) பெற்று அதனால் வசை ஏற்படாமல் வாழ்பவரே உயிர் வாழ்பவர் ஆவார்; இசை பெறாமல் வாழ்பவர்கள் உண்மையில் உயிரோடிருந்தாலும் வாழாதவர்கள் என்றே கருதப்படுவர்.

வாழ்வது என்பதற்கு அடையாளமே நற்குண, நற்செயல்களாலும் ஈகை முதலியவற்றாலும் பயனுண்டாக நடந்து புகழ்பெறுதல் ஆகும்.

# துறவறவியல்

திருவள்ளுவர் தூய துறவை; 'பொய்தீர் ஒழுக்க நெறி'யாகிய துறவை மறுக்கவில்லை. ஆனால் அவர் கருத்துப்படி துறவு என்பது இல்லறத்திலிருந்து, மனத்தால் 'வேண்டாமை' என்னும் விழுச்செல்வம் பெற்று வாழ்வதேயாகும். அவர் கூறும் துறவறவியலில் புலால் மறுத்தல், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை போலும் அதிகாரங்கள் இடம் பெறுகின்றன. இவை பரிமேலழகர் கூறுவதுபோல் துறவறத்திற்கே சிறப்பாக உரியன எனில், இல்லறத்தார் இவற்றில் தவறினும் குற்றமில்லை என்றாகிவிடும். அதுபோல இல்லறவியலில் வரும் ஒழுக்கமுடைமை, தீவினையச்சம் போல்வன துறவிகளுக்கு வற்புறுத்தப்படவில்லை என்றாகிவிடும். அறத்துப் பாலில் வரும் தனிமனித அறங்கள் மாந்தர்க்கு எல்லோர்க்கும் உரியனவே. இல்லறவியல் போலவே வள்ளுவர் கூறும் துறவறவியலும் இல்லறத்தார்க்கே உரியதாகும். அறத்துப்பால் 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்றபடி இல்லறத்திற்கே உரிமையுடையது. இல்லறத்தான் மனத்தளவில் உலகைவிட்டு விலகியும், உலகிற்கே தன்னை ஒப்படைத்தும், வேண்டாமை என்னும் அவாவின்மையை வளர்த்துக்கொண்டும், பிறவிச் சுழற்சியினின்றும் விடுபட்டுப் பேரா இயற்கையில் கலந்தும் வாழ வேண்டிய இயல்புகள் இத்துறவியலில் கூறப்படுகின்றன.

# 25. அருளுடைமை

அன்பின் முதிர்ச்சியே அருள். மேலும் அன்பு ஈன்ற குழந்தையே அருள் என்பார் திருவள்ளுவர். அவர் தனித்துறவறம் பற்றிக் கூறவில்லை. இல்லறத்தின் தொடர்ச்சியே துறவறம். இல்லறத்திலிருந்து செய்வதே அது. அவர் காலத்திலேயே வடநாட்டுப் புறச் சமயத் தாக்கங்கள் கூடுதலாகி விட்டன. எனினும் அவற்றின் நற்கூறுகளை மட்டுமே ஏற்றுத் தமிழர் பண்பாட்டுவழி மரபையே அவர் எடுத்துரைக்கின்றார். அவற்றுள் ஏலாதவற்றைப் புதுவிளக்கம் தந்து மடைமாற்றியும், நேரே மறுத்தும், தம் கருத்தை அழுத்தம் பெறச் செய்வதன் மூலம் அவற்றைப் புறக்கணித்தும் அவர் வழிகாட்டும் அறநெறிகள் தமிழர்க்கும், தமிழர்க்கு மட்டுமன்றி உலகோர் அனைவருக்கும் பயன்படுவன.

241. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

அருளாகிய செல்வமே செல்வங்களுள் எல்லாம் சிறந்த செல்வம்; ஏனைய பொருட்செல்வமோ எனின், அது பண்பற்ற இழிந்தவர்களிடமும் உளதாகும்.

அருள் மனிதப் பண்பு. உயர்ந்த மனிதர்களிடமே உளதாவது பொருட்செல்வங்கள் யாரிடத்தும் கைமாறும்.

242. நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான்
தேரினும் அஃதே துணை.

நல்ல நெறியில் ஆராய்ந்து, அருளைக் கைக்கொள்க. ஏனெனில் பல்வேறு உய்தி தரும் நெறிகளை எல்லாம் ஆராய்ந்து தேடினாலும் அருளாகிய அறமே நீங்காத் துணையாகும்.

அருள் எல்லாவுயிர்களிடத்தும் செல்வது. அஃதொன்றே தன்னைக் கைக்கொண்டார்க்கு உய்தி தருவதாகும். நல்லபடியாக ஆராய்ந்தால் இம் முடிவுக்கே வரநேரும்.

243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

அருள் நிறைந்த மனத்தினை உடையவர்களுக்கு இருள் மிகுந்த துன்பவுலகத்துள் - நரகத்துள் சென்று புகும் இடர்ப்பாடு இல்லை.

அருளை வலியுறுத்தவே இப்புராணக் கருத்துப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது.

244. மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

உலகத்திலுள்ள நிலைபெற்ற உயிர்களையெல்லாம் பேணிக் காத்து அருள் நிறைந்த செயல்களைச் செய்பவனுக்கு, தனது உயிர் 'எக்கதியிற் புகுமோ' என அஞ்சுவதற்குக் காரணமான தீவினைகள் உளவாகா.

245. அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி.

அருட்செயல்களைச் செய்து வாழ்கின்றவர்களுக்குத் துன்பம் இல்லை; இதற்கு உயிர் காக்கும் வளி (காற்று) இயங்குகின்ற, வளப்பத்தையுடைய பெரிய உலகமே சான்று.

காற்று உலகைக் காப்பது போல, அருள் தன்னை உடையவரைக் காக்கும். மேலும் உலகில் அருளுடையவர் துன்பப்படுவதை யாண்டும் கண்டதில்லையாதலால், இவ்வுலகமே சான்று ஆகும்.

246. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.

பிற உயிர்களிடத்துச் செய்யத் தகுவனவாகிய அருட் செயல்களைக் கைவிட்டு, பாவச் செயல்களைச் செய்து ஒழுகுபவர் எத்தகையவரென்றால், பொருட் செல்வத்தையும் இழந்து அதனால் செய்ய வேண்டிய கடமைகளையும் மறந்தவராவார்.

அடிக்கடி அருளையும், பொருளையும் இணைத்து நோக்குகிறார் திருவள்ளுவர். பொருட்செல்வம் அருட்செல்வத்தைத் தேடவே பயன்பட வேண்டும்.

247. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

கையில் பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகில் வாழ்வு இல்லை; அதுபோல அருள் இல்லாதவர்க்கு மறுமையில் வீட்டுலகம் இல்லை.

இரண்டையும் வற்புறுத்தும் திறம் இது. அருள் ஆள்வார்க்கும் இவ்வுலகில் அல்லல் இல்லை என்றார். இங்கு அருளில்லார்க்கு மறுமையின்பம் இல்லை என்று கூறுகிறார். அருளை வலியுறுத்துவோர் பலர், பொருளை வெறுக்கத் தூண்டுவர். வள்ளுவர் இவை முரண்பட்டவை என்று கருதவில்லை.

248. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது.

பொருட்செல்வம் இழந்தவர் பின்பு ஒருகால் அதைப் பெற்றுப் பொலிவடைவார்; அதற்கு வாய்ப்பு உண்டு. அருட்செல்வத்தை இழந்தவர் இழந்தவரே; பிற்பாடு அவ்வருளைத் திரும்ப அடைதலென்பது மிக அரிது.

பொருட்செல்வமும் இன்றியமையாதது. ஆயினும் அருட்செல்வம் உயிரியல்பாதலின், பழக்கத்தைக் கைவிட்டால் திரும்பப் பெறுதல் இயலாது என்பதாம்.

**249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்**
**அருளாதான் செய்யும் அறம்.**

அருள் இல்லாதவன் தவறிப் போய்ச் சிலசமயம் தானதருமமென்று அறத்தைச் செய்தல் கூடும். ஆனால் அது தெளிந்த ஞானமில்லாதவன் உண்மைப்பொருளைக் கண்டதாகக் கூறுவதற்கு ஒப்பாகும்.

இரண்டும் நடவாதன; நடந்ததாகக் கூறினால் பொய்ம்மைப் பாற்படுவன.

**250. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்**
**மெலியார்மேல் செல்லும் இடத்து.**

தன்னைவிட மெலியவர்களைக் கண்டால் அருளின்றி நடக்கத் தோன்றும்; எளிதாகத் துன்புறுத்தத் தோன்றும். இது உலக இயல்பு. தான் தன்னைவிட மெலியவர்களைத் துன்புறுத்த முந்தும்பொழுது, அவ் அருளில்லாதவன் தன்னைவிட வலியவர் தன்னைத் துன்புறுத்த வரும்பொழுது தனது நிலை யாதாகும் என நினைத்துப் பார்க்க வேண்டும். சிந்தித்துப் பார்த்தால் எல்லோரிடத்தும் அருள் கொள்ள வேண்டியதன் அருமை புலப்படும்.

## 26. புலால் மறுத்தல்

புலால் உண்பதை அறவே விலக்குதல். கொல்வதும் கொன்றதைத் தின்பதும் அருவருக்கத்தக்கவை. புலாலுண்பாரும், இவ்வதிகாரத்தை நன்கு விளங்கிக் கொண்டு, திரும்பத் திரும்பப் படித்தால், அவ்வுணவைக் கண்டதும் அருவருப்புண்டாகும்.

சமயவாதிகள் சிலர் புலால் உண்பதில் தவறில்லை என்றனர். கொன்றால்தான் பாவம், யாரோ கொன்றதை தானாகச் செத்து வீழ்ந்ததைத் தின்பதில் பாவம் இல்லை என்றனர். புலால் உண்பதற்கும் அருளுக்கும் தொடர்பில்லை; புலாலுண்பவன் அருளாளனாக இருக்கலாம் என்றனர். அந்நாளில் பெரும் விவாதச் சூழலில் எழுந்தது திருக்குறள்.

251. **தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்.**

தன் உடலிலுள்ள ஊனைப் பெருக்குவதற்குத் தான் பிற உயிர்களின் உடம்பிலுள்ள ஊனைத் தின்பவன், எங்ஙனம் அருட்செயல்களை மேற்கொள்ள இயலும்?

ஊனைச் சுவைப்பதால் ஆழ்மனம் திரிபுறுவதைத் தடுத்தல் இயலாது.

252. **பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி**
**ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.**

பொருட் செல்வத்தைப் போற்றி, அதனாலாம் பயனைக் கொள்ளுதல், அதைப் பேணிப் பாதுகாவாதார்க்கு இல்லை. அதுபோல அருளைக் கைக்கொண்டு அதனாலாம் பயனை அடைதல், ஊன் உணவு தின்பவர்க்கு இல்லை.

பொருளும் வேண்டும்; அருளும் வேண்டுமென்பது புலனாகவில்லையா?

253. **படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்**
**உடல்சுவை உண்டார் மனம்.**

கையில் படைக்கலம் ஏந்தியவர் நெஞ்சம் சும்மா இராது. அதைச் சுழற்றும்; பயன்படுத்த முந்தும்; ஏதாவது செய்துகொண்டே இருக்கும். அதுபோல ஓருயிரினது உடலைத் தின்று சுவை கண்டவர் மனமும் அருளை நோக்காது; நல்லதை எண்ணாது.

ஊன் தின்னும் மனிதனது உள்ளம் மரத்துப்போகும்; கொலைக்கும் அஞ்சாத இயல்பை அடையும்.

254. **அருளல்லது யாதெனின் கொல்லாமை கோறல்**
**பொருளல்லது அவ்வூன் தினல்.**

அருள் என்பது கொல்லா நோன்பு; அருளல்லது கொலை செய்தல். அங்ஙனம் கொன்றதன் ஊனைத் தின்பதோ உறுதிப்பொருளாகாது; அது பாவம்.

ஊன் தின்பது எவ்வகையிலும், ஒருவன் கைக் கொள்ளக்கூடிய சிறந்த கோட்பாடாகாது.

255. **உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண**
**அண்ணாத்தல் செய்யாது அளறு.**

உலகில் வாழும் உயிர்கள் உடம்பொடு பொருந்தி அழியாமல் நிலைபெறுவது மனிதர்கள் ஊன் உண்ணாமையைப் பொறுத்துள்ளது. அதனை எண்ணாது ஒருவன் ஊன் உண்பானாயின் அவனை விழுங்கிய நரகம் பின் வாயைத் திறந்து அவனை வெளிவிடவே விடாது.

ஊன் உண்பவனை, இருளுலகம் உண்டு செரித்துக் கொண்டுவிடுமாம்.

256. **தினற்பொருட்டால் கொள்ளாது உலகெனின் யாரும்**
**விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.**

உலகில் தின்பதற்காக ஊனை வாங்குவாரின்றேல், விற்பதற்காக உயிர்களைக் .கொன்று விலைக்குக் கொடுப்பவர் யாரும் இருக்க மாட்டார்கள்.

கொல்லுதல் தானே கூடாது; விலைக்கு வாங்கி உண்டால் பாவமில்லை என்பாரை நோக்கியது இது.

257. **உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்**
**புண்ணது உணர்வார்ப் பெறின்.**

ஊன் என்பது பிறிதோர் உடலை அறுத்தெடுத்த புண்; அதைத் தூய்மையில்லாத புண்ணெனவே உணர்வாராயின், அது அப்புலாலை உண்ணாதிருக்கத் தூண்டும். உண்ண மனம் வராது; அருவருப்பு ஏற்படும்.

258. **செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்**
**உயிரின் தலைப்பிரிந்த ஊன்.**

ஒருயிரினை விட்டு நீக்கிய ஊனைப் பிணம் என உணர்ந்தால் மயக்கத்திலிருந்து நீங்கிய தெளிந்த அறிவுடையார் அதை உண்ண மாட்டார்கள்.

259. **அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத்து உண்ணாமை நன்று.**

ஆடு, பசு முதலிய உயிரினங்களை அவியாகச் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதைக் காட்டிலும், ஓர் உயிரைக் கொன்று அதன் இறைச்சியைத் தின்னாதிருத்தல் நல்லது.

குறளின் நடைப்போக்கு ஆயிரம் உயிர்க்கொலை யாகங்களைவிட ஒருயிரையும் கொன்று தின்னாமையே நன்று எனப் பொருள்படுதலை நன்கு உணர்தல் வேண்டும். அவி - நெருப்பிலிடும் யாகப் பொருள்கள். இன்று உயிர்களைப் போடாமல், விலை மதிப்புள்ள பொருள்களைப் போடுகின்றனர்.

260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

ஒருயிரையும் கொல்லாமல், புலாலுணவையும் உண்ணாதவனை உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் கைகூப்பி வணங்கும்.

## 27. தவம்

சமயவாதிகள் சொல்லும் தவம் உண்ணா நோன்பும், வெயில் மழை பனி தாங்குதலும், நீரில் மூழ்குதலும், நெருப்பில் நிற்றலும் போல்வன என்பர். இயமம் நியமம் முதலியனவாக விரித்துச் சொல்வர். திருவள்ளுவர் உலகில் முயற்சியான் வரும் துன்பங்களைப் பொறுத்தலும் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவம் எனப் புதுவிளக்கம் தருகிறார். அவர் கருத்துப்படி, தன் முயற்சித் தவமே, இல்லறத் தவமே தவமெனப்படும்.

இல்லறத் துறவு, இல்லறவேள்வி, இல்லறத்தவம் மூன்றும் வள்ளுவரின் புரட்சிச் சிந்தனைகள்.

261. உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.

தன் முயற்சியுடைமையால் நேர்ந்த துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுதலும் பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாமையுமாகிய இரண்டுமே தவத்திற்கு 'உரு' ஆகும்.

துறந்து காட்டிற்குப் போய்க் கண்மூடித் தியானிக்கும் 'உரு' அன்று என்பதற்காகவே, அற்றே தவம் என நிறுத்தாது. 'தவத்திற்கு உரு' என்றார். வேள்வி எனப் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்தலையும் மறுக்கவே 'உயிர்க்கு உறுகண்' செய்யாமை தவம் என்று கூறப்பட்டது, ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை கொலை வழிப்படும் வேள்வியிலும் நன்று என்ற கருத்தின் தொடர்ச்சி இது.

262. தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது.

பிற சமயவாதிகள் கூறும் 'தவமும்' அத்தவத்தை முழுவதும் தம் கடமையாகக் கொள்பவர்களுக்கே பொருந்தும். அஃதாவது முற்கூறியாங்கு அத்தவத்தால், தனக்கு வரும் துன்பங்களைத் தாங்கிக்கொண்டு, பிறவுயிர்களுக்குத் தீங்கு செய்யாதிருப்பதாகிய

உண்மையான தவமுடையார்க்கே பொருந்துவதாகும் அந்நல்லொழுக்கம் இல்லாதார் 'தவ' வேடம் புனைந்து கொள்வது அவமாகும். அது தவமன்று.

துறவைப் 'பிறன்பழிப்பது இல்லாயின் நன்று' என்றதனோடு ஒக்கும் இது. 'தவம் மறைந்து அல்லவை செய்வார்' உளராதலின் அஃதிலார் தவத்தை மேற்கொள்வது அவம் என்றார்.

**263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்**
**மற்றை யவர்கள் தவம்.**

சமயவாதிகள் கூறும் தவமே சிறந்ததெனில் உலகில் எல்லோருமே அதைக் கைக்கொண்டிருக்கலாமே? பிறகு அனைவரும் உணவுக்கு என்ன செய்வது? காய்கனி கிழங்கைத் தின்னலாமா? வள்ளுவர் நகைச்சுவைபட, இல்லறத் தவ மேன்மையை மனத்தில் பதிய வைக்கும் இடம் இது. துறவிகளுக்கு உணவு, உடை, உறையுள் தருவதற்காக, உலகில் மற்றவர்கள் எல்லாம் தவம் செய்யாது அதை மறந்தார்கள் போலும்!

'துறந்தார்க்கும் - இல்வாழ்வான் துணை' (42) என்பதனோடு கருத்துத் தொடர்புடையது இது.

**264. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்**
**எண்ணின் தவத்தான் வரும்.**

வள்ளுவர் கூறிய இல்லறத் தவம் மிக வலிமையுடையது. இத்தன்முயற்சித் தவமுடையவர் முன்னேற்றத்தை யாரும் தடுத்தல் இயலாது. பகைவரை அழித்தலும் தமக்கு விருப்பமுடையாரை உயர்த்தலும் ஆகிய இரண்டும், நன்கு சிந்தித்தால் தன்முயற்சித் தவம் செய்யும் இல்லறத் தவத்தார்க்குக் கைகூடும். துறவுத் தவமுடையார்க்கு ஒன்னாரும் உவந்தாரும் இருத்தல் இயலாது; கூடாது.

**265. வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்**
**ஈண்டு முயலப் படும்.**

தாம் விரும்பியவற்றை விரும்பியவாறே அடைய முடியுமாதலால் செய்யப்படுவதாகிய தவம் இல்லறத்திலேயே அறிவுடையோரால் முயலப்படும்.

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' (666) 'உள்ளியது எல்லாம் உடனெய்தும்' (309) 'உள்ளியது எய்தல் எளிதுமன்' (540) என்பன ஒப்பிடப்பாலன. 'போக நுகர்ச்சியும் இதனானே வரும்' என்ற மணக்குடவர் கருத்தும்; 'தான் வேண்டின

காமியத்தைத் தவம் தருகையினாலே' என்ற பரிதியார் கருத்தும் எண்ணிப்பார்க்க வேண்டியன.

266. தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு.

தமது கடமையைச் செய்பவரே தவம் செய்பவர் ஆவார்; அவ்வாறல்லாமல் பிறவாறு முயல்பவரெல்லாம் தத்தமது ஆசைகளுக்கு ஆட்பட்டு, அவற்றையடைவான் வேண்டி வீண்வேலை செய்பவரே ஆவார்.

யோகத்திலமர்ந்து தவம் செய்வோரேயாயினும் அதைத் தம் கடமையாகக் கருதிச் செய்தல் வேண்டும். 'தவம் செய்பவர் மட்டுமே தம் கடமையைச் செய்பவர்' என்று பொருள் சொல்வது 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை', 'முயல்வாருள் எல்லாம் தலை' போலும் வள்ளுவக் கருத்துக்களுக்கு முரணாகும்.

267. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

தங்கத்தை நெருப்பிலிட்டுச் சுடச்சுட அது மாசு நீங்கி ஒளிவிடும். அதுபோல் துன்பமானது சுடச்சுட அதைத் தாங்கிக் கொள்பவர்களுக்கு வாழ்க்கை ஒளிவீசித் திகழும்.

'உற்ற நோய் (துன்பம்) நோன்றல் (பொறுத்தல்) என்பதன் விளக்கம் இது. 'இன்னாச்சொல் நோற்கிற்பவர்' (159) நோற்பாரின் நோன்மை உடைத்து' (48) என வரும் பகுதிகளை ஒப்பிடுக.

268. தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.

தன் உயிரைத் தானே தனக்கு முழுஉரிமையாகப் பெற்றவனை, ஏனைய நிலைபெற்ற உலக உயிர்கள் எல்லாம் தொழும்.

தன் உயிர்தான் அறப் பெறுதல் தன் உயிர்ப்பண்புகளை வளர்த்துத்தான் முழுமை அடைதல். ஓவியத்திறனோடு பிறந்தான் ஓவியத்திலும் இசையியல்புடன் பிறந்தான் இசையிலும் தொழில் செய்தற்காம் சிறப்புப் பண்புடன் பிறந்தவன் தொழிலிலும் வளர்ந்து வளர்ந்து மேம்படுதலே 'தன் உயிர் தான் அறப் பெறுதல்'. அறப் பெறுதல் - முழுமையாகப் பெறுதல். 'வகை அறச் சூழாது' (465) என்ற இடத்தும் அறச்சூழ்தல் - முழுமையாகச் சூழ்தல் என்பதே பொருள். கலைத்துறையில் முழுமை பெற வளர்ந்து சிறந்தவனை,

உலகம் ஏன் பாராட்ட வேண்டும்? அவனுக்கே அச் சிறப்பெனினும் உலகம் அதனால் மகிழ்ந்து போற்றுவதைக் காண்கின்றோமல்லவா?

269. **கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.**

துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுதலாகிய ஆற்றல் கைகூடியவர்களுக்கு. கூற்றத்தை வெற்றிகொள்வதும் கைகூடும்.

ஊழையும் உப்பக்கம் காண்பதுபோல், கூற்றத்தையும் எதிர்நின்று போராடி வென்று மேற்செல்வர் என்பதாம். முயற்சியால் சிலர் சாவையும் வென்று வாழ்தல் கண்கூடு.

270. **இலர்பல ராகிய காரணம் நோற்பார்**
**சிலர்பலர் நோலா தவர்.**

உலகில் பலர் செல்வம் இல்லாதவர்களாய் இடர்ப்படுகின்றனர். காரணம் என்ன? துன்பங்களைத் தாங்கிக் கொண்டு, தம் கடமையைத் தவமாகச் செய்வார் சிலர்; அங்ஙனம் தாங்கிக் கொள்ளாதவர்களே பலர் ஆவர். அதனால்தான் பலர் வறுமையில் வாடுகின்றனர்.

தவ அதிகார முதற்குறள்போல், இவ்இறுதிக்குறளும் இது இல்லறத்தவம் பற்றியதென்பதை நிறுவுகின்றது. இதற்கு வேறு பொருள்கூற, பழைய உரையாசிரியர்களாலும் இயலவில்லை.

## 28. கூடா ஒழுக்கம்

பொதுவாக ஒழுக்கமுடைமை கூறியவர் துறவறத்தார்க்கு மட்டும் கூடா ஒழுக்கம் எனத் தனியே கூறுதல் கருதத் தக்கது. 'அஃதும் பிறன்பழிப்பது இல்லாயின் நன்று' என்று துறவறத்தைச் சுட்டியவர், அங்ஙனம் பழிக்கும்படியான கூடா ஒழுக்கத்தை இதில் விளக்குகின்றார். அது வைதிக, சமண, புத்த மதங்கள் துறவுக்கே பேரிடம் தந்தன; தலைமையும் சிறப்பும் அளித்தன. ஆனால் அன்றும் இன்றும், சன்னியாசம் எனும் துறவு பூண்டவர்கள் பெரும்பாலும் போலித் துறவிகளாகவே மாறிவிட நேர்கிறது. இன்று பெரும்பான்மையான துறவிகள் பெண் பித்தவர்களாகவும் இல்லறத்தாரைவிடச் சுக போகிகளாகவும் விளங்க, தமது புறப் போர்வையைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இயற்கைக்கு மாறான துறவைத் திருவள்ளுவம் ஏற்கவில்லை.

271. **வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்.**

வஞ்சம் பொருந்திய மனத்தையுடையவனின் மறைவான தீய ஒழுக்கத்தை, ஐம்பெரும் பூதங்களாகிய அவனது உடம்பின் உள்ளே கலந்து நிற்கின்ற ஐந்தும் கண்டு சிரிக்கும்.

நிலம், நீர், தீ, காற்று, வானம் - ஐம்பூதம். ஐம்பூதச் சேர்க்கையே இவ்வுடம்பு. எல்லோரும் வெளியே 'சாமியாராய்' நடிக்கப் பயன்படுவது உடம்பேயாதலால், அவ்வுடம்பின் உருவாக்கத்திற்கு அடிப்படையான பூதம் ஐந்தும், அவனுள்ளேயிருந்து 'அட கயவனே' எனச் சிரிக்குமாம். இதைவிட இடித்துக் கூற வார்த்தை இல்லை.

272. **வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்**
**தான்அறி குற்றப் படின்.**

தன் நெஞ்சம் குற்றமென்று நன்கு அறிந்து ஒன்றில் ஈடுபடுவானாகில், துறவியின் வான்போல் உயர்ந்த தவவேடத் தோற்றம் என்னை பயனைச் செய்யும்? துறவியர் மிக உயர்ந்த புறத்தோற்றம் காட்டுவர். அவ்வேடத்தால் ஒரு பயனுமில்லை. மேலும் அவ்வேடம் மதிக்கத்தக்கதுமன்று.

273. **வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.**

பசுத்தோல் போர்த்த புலி என்பது பழமொழி. திருவள்ளுவர் புலித்தோல் போர்த்த பசுவைப் பற்றிக் கூறுகிறார். மனத்தை அடக்கும் வலிமையில்லாத இயல்புடையவன், மிகுந்த ஆற்றலுடையது போன்ற தவவேடம் புனைந்து ஏமாற்றுவது, பசு புலியின் தோலைப் போர்த்துக் கொண்டு, பிறரை மருளச் செய்து பயிரை மேய்வதற்கு ஒப்பாகும்.

ஊரை மேயும் இக்கயவர்களைப் பயிரை மேயும் பசு என்கின்ற உவமை கருத்தாழமுடையது. சாமியார்கள் பலர் பொன்னும் பொருளும் குவித்து, பெண்களை ஏமாற்றிச் சமுதாயக் கேடர்களாக வாழ்வதைப் பார்க்கிறோம்.

274. **தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து**
**வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.**

தவ வேடத்தில் மறைந்துகொண்டு அவ்வேடத்திற்குப் பொருந்தாத பாவங்களைச்செய்து, புதரில் மறைந்திருந்து கொண்டு வேடன் ஒருவன் பறவைகளைக் கண்ணி வைத்துப் பிடிப்பதைப் போன்றது. புள் சிமிழ்த்தல் - பறவைபோல் ஒலிசெய்து பிடித்தலுமாம்.

275. **பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றுஎன்று**
**ஏதம் பலவுந் தரும்.**

சிலர் 'யாம் எல்லாப்பற்றையும் விட்டுவிட்டேம்' என்று வெளியே பேசிக்கொண்டு, மறைவாகத் தீய ஒழுக்கங்களில் ஈடுபடுவர். அது முதலில் வாய்ப்பாகத் தோன்றினாலும் பிற்பாடு "என்ன செய்தோம்" என்று திரும்பத்திரும்ப வருந்தும்படியாகப் பல துன்பங்களை அவர்களுக்குக் கொடுக்கும்.

**276. நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**
**வாழ்வாரின் வன்கணார் இல்.**

மனத் துறவே முழுத்துறவு. மனத்தால் துறவு கொள்ளாது, துறந்தவர்போல் வஞ்சித்து வாழ்பவர்களைவிடக் கொடியவர்கள் வேறு யாருமிலர்.

**277. புறம்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி**
**மூக்கிற் கரியார் உடைத்து.**

வெளித் தோற்றத்தால் குன்றி மணியின் புறத்தோற்றத்தைக் கண்டாற் போலச் செம்மை (செந்நிற உடை) உடையராயினும், அக் குன்றி மணியின் மூக்குக் கருப்பாக இருப்பதுபோல. உள்ளம் இருண்டவர்களையும் உடையது இவ்வுலகம்.

துவராடை செந்நிறமாக இருப்பதையும் நினைப்பூட்டுமிது. துறவு வேடம் மனத்தோடு பொருந்தாவிட்டால் மிகக் கேவலம் என இடித்துரைக்கிறது.

**278. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி**
**மறைந்தொழுகு மாந்தர் பலர்.**

மனத்தின்கண் மாசு வைத்துக்கொண்டு மாட்சிமைப்பட்டார் போலக்காட்டித் தீர்த்தங்கள் எனப்படும் புனித நீராடி, தாம் அவ்வாற்றால் மறைந்தொழுகும் மாந்தர்கள் உலகத்துப் பலராவர்.

'புறம் தூய்மை நீரான் அமையும்' (298) என்ற வாய்மைக் குறளை ஒப்பு நோக்குக. சிலப்பதிகாரத்தில் மாடலமறையவனும் மாங்காட்டு மறையவனும் கண்ணகியின் தோழியும் கூறிய, தீர்த்தமாடுதல் பற்றிய உரையாடல்களை நோக்கினால், அக்காலச் சூழல் புலனாகும்.

**279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன**
**வினைபடு பாலால் கொளல்.**

அம்பு வடித்தால் நேரே செவ்விதாயிருப்பினும் செயலால் கொடிது; யாழினது தண்டு வடித்தால் வளைந்ததாயினும் செயலால் செவ்வியது. அது போல மாந்தர்களையும் புறவேடம், வடிவங்களை வைத்து மயங்காமல், அவரவர் செயல்களை வைத்துக் கொடியவர், செவ்வியர்

என அறிந்து கொள்ளவேண்டும் புறவேடம் பலவற்றாலும் நல்லவர்போல் நடித்து ஏமாற்றும் அனைவரையும் இக்குறள் சாடுகிறது.

280. **மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தது ஒழித்து விடின்.**

உலகம் கூடா எனப்பழித்த செயல்களை ஒழித்து விட்டால், தலையை மொட்டை அடிப்பதோ, சடைமுடி வைப்பதோ தேவையில்லை.

துறவுக்கோலம் வேண்டா; உலகம் பழிக்கும் செயல்களைத் துறந்தாற்போதும். மயிரை மழிப்பதைவிட, உலகம் பழித்ததை ஒழிப்பது நல்லது.

## 29. கள்ளாமை

பிறர் உடைமைகளை ஏமாற்றித் திருடிக்கொள்ளவோ, எதனையும் களவுவழியில் கைக்கொள்ளவோ எண்ணாதிருத்தலும் அங்ஙனம் செய்யாதிருத்தலும் கள்ளாமை ஆகும்.

பிறர் பொருள்கள் மீது கொள்ளும் ஆசையே களவுகளுக்குக் காரணம். முயற்சியிலா ஒருவரின் வறுமையும் அதற்குத் தூண்டுகோலாகும். துறவறவியலில் மனத்துறவு பற்றிய அடிப்படை அறங்களே கூறப்படுகின்றன. கள்ளாமையும் இதற்குச் சான்றாகும். பற்றுவிட்ட மனம் களவுக்கு ஒருப்படாது.

281. **எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு.**

உலகோரால் எள்ளி இகழப்படாமையை விரும்புகின்றவன் எந்த ஒரு பொருளையும் பிறரை வஞ்சித்துத் திருட நினையாது தன் நெஞ்சத்தைக் காப்பானாக.

282. **உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வேம் எனல்.**

பிறன் பொருளைத் திருட்டுத்தனத்தால் அவனறியாமல் களவாடிக்கொள்வோம் என, மனத்தால் நினைப்பதும் தீதாகும்.

283. **களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து**
**ஆவது போலக் கெடும்.**

உலகில் சிலர் பல்வேறு திருட்டு வழியில் செல்வத்தைக் குவிப்பர். களவால் ஒருவன் சேர்க்கின்ற செல்வம் அளவு கடந்து பெருகுவது போலக் காட்டி, இறுதியில் கெட்டழியும்.

284. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

களவில் அடிப்படப் பழகிய மறைமுக ஆசை ஒருவனுக்கு ஏற்படின், அது பின்னைய விளைவில் நீங்காத பெருங்கேட்டைத் தரும்.

களவு அத்துணை மறைமுகமான ஆசைப் பெருக்கத்தை உண்டாக்குமாதலின் அதைக் 'காதல்' என்று கூறியுள்ளார். ஒருமுறை திருடிவிட்டால் பிறகு கையும் மனமும் நிற்கவே மாட்டா. களவு வழியில் மனம் சென்று பழகிவிட்டால் அது பிறகு திருந்துவது கடினம்.

285. அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

பிறர்தம் பொருளைக் கவர்தலைக் கருதி, அவர்கள் எப்போது சோர்ந்து மறதியடையவார்கள் என நேரத்தை எதிர்பார்த்திருப்பவர்களிடம், உலக உயிர்களிடம் அருள் செய்தலைக் கருத்திற் கொண்டு, அன்புடையவராய் ஆகுதல் இல்லை. அன்பும் அருளும் களவு செய்வாரிடம் காணப்படா.

286. அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

களவாடுதலில் ஊறிப்போன ஆசையுடையவர்கள் உயிரியல்பை அளவை முறைப்படி அளந்து அதன்படி அறிந்து நடக்கமாட்டார்கள்.

களவால் உயிராற்றல் குறையுமாம். அறத்தை உயிருக்கு ஆக்கம் என்றவர் களவு உயிரினது ஆக்கத்தைக் குறைக்கும் என்று கூறுகிறார்.

287. களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

களவு என்று சொல்லப்படும் இருண்ட அறிவினை ஆள்வது, உயிர் முதலியவற்றை அளந்தறிதல் என்னும் ஆற்றலை விரும்பிப் பயன்படுத்துபவர்களிடம் . காணப்பெறாது.

அளவு என்னும் ஆற்றல் - அளவை நூல் (தருக்கம்) முறைகளால் அளந்தறியும் ஆற்றல்.

288. அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு.

உயிரை அளந்தறிந்தவர்கள் அறமே உயிரது ஆற்றல் என அறிவதால், அவர் நெஞ்சில் அறம் நிலைபெற்று நிற்கும். அது போலக் களவு செய்து

செய்து பழகியவர் நெஞ்சில் ஏமாற்றும் வஞ்சனை நிலையாக இருக்கும். கரவுள்ளத்தை மாற்றுவது கடினம்.

289. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

களவாடுதலைத் தவிர பிற நல்வழிகளையே பழகாதவர், தருக்கமெனப்படும் அளவை நூலுக்கு ஒவ்வாத தீயசெயல்களையே மேன்மேலும் செய்து, இறுதியில் கெட்டழிவர்.

அளவைநூல் தருக்கநூல். காட்சி முதலிய அளவைகளால் உண்மை அறிவது. காரண காரியம் பற்றியது அது. இதனால் இக்கேடு விளையுமென ஆராயாதவர், அவர்கள்.

290. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு.

பிறர் பொருளைத் திருடுவார்க்கு உயிர் நிலைபெறாது.. உடம்பைவிட்டுத் தவறிப்போகும். களவு தீதென அது செய்யாதவர்களுக்குத் தேவருலகமும் தவறாது கிடைக்கும்.

உயிர்க்கு ஆக்கமின்மையால், களவாடுவார்க்கு உயிர் உடம்பை விட்டு வெளியே தள்ளப்படுமாம்.

## 30. வாய்மை

உண்மை வாய்மை மெய்ம்மை என மனம் வாக்குக் காயத்தால் பொய்யின்றி இருக்க வேண்டும். இவற்றுள் வாய்மை எனப்படுவது பொய் பேசாதிருத்தல்.

291. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

'வாய்மை' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்றால், பிற உயிர்களுக்குச் சிறிதளவும் எவ்விதத் தீங்கும் பயவாத சொற்களைச் சொல்வதாகும்.

'தன் நெஞ்சு அறிவது பொய்யற்க' என்பதைச் சேர்த்துப் பார்க்க வேண்டும். வாயால் பேசும்பொழுது, உண்மையுடன் தீங்கு பயவாமையும் வேண்டும். வ்ாய்மைக்கு இது புதிய இலக்கணம். அடுத்த குறளையும் சேர்த்து நோக்க வேண்டிய குறள் இது. 'இன்சொலால்' (இன்சொல்லாவது), எனப்படுவது

யாதெனின் என்று தொடங்கினால், புதிய விளக்கம் அல்லது இலக்கணம் கூறப் போகிறார் என்று கொள்ள வேண்டும்.

**292. பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்.**

குற்றத்தின் நீங்கிய நன்மை பயக்குமானால் பொய்ம்மையுள்ள பேச்சும் வாய்மையின்பாற்பட்ட சொற்களாகக் கொள்ளப்படும்.

தனக்கு நன்மை தருவது என்பதன்று; பிறர்க்கும் உலகிற்கும் நன்மை தருவது என்பதே முக்கியம். 'புரை தீர்ந்த நன்மை' அதுவேயாம். 'வாய்மையின் இடத்த' என்ற தொடரையும் உற்று நோக்க வேண்டும். வாய்மை அன்று; ஆனால் வாய்மையின் இடத்தில் வைத்து எண்ணத்தக்கது என்பதே கருத்து.

**293. தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்னெஞ்சே தன்னைச் சுடும்.**

தனது நெஞ்சம் அறிந்த ஒன்றை, மற்றவர் அறியார் என்பதற்காக மறைத்துப் பொய் கூறாதீர்; அங்ஙனம் பொய் பேசினால், பின்னர் அப்பொய்யை நன்கறிந்த தனது நெஞ்சே தன்னைச் சுட்டு வருத்தும். மெய்யும் பொய்யும் தன் நெஞ்சிற்கு மட்டுமே மிகத் துள்ளிதமாய்த் தெரியும்.

**294. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்.**

ஒருவன் தன் உள்ளத்தால் பொய்படாது வாழ்வானானால் அவன் உலக மக்கள் அனைவரது உள்ளத்திலும் இடம்பெறும் சிறப்பைப் பெறுவான்.

தமது வாழ்வைச் 'சத்திய சோதனை' எனக் கொண்டொழுகிய காந்தியடிகள் இக்குறளுக்குத் தக்க எடுத்துக் காட்டாவார்.

**295. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானம்செய் வாரின் தலை.**

தன் மனத்தோடு பொருந்துமாறு வாய்மையுள்ள சொற்களையே ஒருவன் பேசுவானாயின், தவமும் தானமும் செய்பவர்களைவிட மேலானவன் ஆவான்.

தன் மனமறிந்த வாய்மையைப் பேசுதல் வேண்டும். தவம் தானம் இரண்டும் பெரிதாகலாம். ஆயினும் மனமும் தூயராய் வாய்மையே பேசுவார் அவரினும் தலையாயவர் ஆவர். தவம், தானம் என்று புகழ்ந்து பேசியோரிடையே

ஒழுக்கமே அவற்றினும் மேம்பட்டதெனத் திரும்பத் திரும்ப வள்ளுவர் பேசியதை நன்கு நினைவு கொள்ளவேண்டும்.

**296. பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை**
**எல்லா அறமும் தரும்.**

பொய்யாமையால் புகழுண்டாகும். அதற்கு இணையான வேறு புகழ் இல்லை. மேலும் மெய் பேசுவதொன்றே அவன் அறியாமல் அவனுக்கு ஏனைய நல்லறப் பயன்களையெல்லாம் தரும்.

**297. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று.**

பொய்யாமையை இடைவிடாது கடைப்பிடித்தால், பிற அறங்களைச் செய்யவே இல்லையென்றாலும் நன்மை விளையும்.

வாய்மையை மிக வலியுறுத்தும் விதம் இது. எல்லா அறங்களும் பொய்யாமை போகும் வழியிலேயே தொடருமாதலால் இங்ஙனம் கூறினார். பிற அறங்களைச் செய்ய வேண்டாமென்பதன்று. அவை யாவும் பொய்யாமையுடையானிடம் தாமாகவே வந்தடையும்.

**298. புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்.**

புறவுடல் தூய்தாதல் மட்டுமே நீராடுவதால் அமையும். அகம் தூய்தாதல் வாய்மை பேசுவதாலேயே உண்டாகும்.

தீர்த்தமாடுதல் புனிதம் என்றும் அதனால் பாவங்கள் தீருமென்றும் புகல்வாரை மறுப்பது இது. ஒழுக்கத்தைப் போற்றாமல், தீர்த்தமாடினால் பிராயச்சித்தம் - வேள்வி - ஹோமம் செய்தால் பாவங்கள் கழுவப்படுமென்பதைத் திருவள்ளுவர் மறுத்து அடித்தடித்துச் சொல்கிறார்; அறிவில் உறைக்க வேண்டுமென்று திரும்பத் திரும்பச் சொல்கிறார்.

**299. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு.**

உலகில் உள்ள இருளைப் போக்கும் விளக்குகள் எல்லாம் 'விளக்கு' என்பதற்கு முழுமையான பொருத்தம் உடையன அல்ல; சான்றோர்களுக்குப் பொய்யாமையாகிய விளக்கே சிறந்த விளக்காகும். ஏனெனில் வாய்மைதான் அகத்து இருளையும் போக்கும்.

300. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

யாம் மெய்ம்மையுடையனவாக உலகில் அறிந்தனவற்றுள், வாய்மையைவிட நல்லன என்று கூறக்கூடிய பிறிதொன்று எதுவும் இல்லை.

திருவள்ளுவர் 'யாம்' என்று தன்மைப் பன்மையில் அழுத்திக் கூறுமிடங்களில் இது ஒன்று (ஏனைய இடங்கள்: 61, 1071).

## 31. வெகுளாமை

கடுஞ்சினம் கொள்ளாதிருத்தல், பொருளற்றதும் எல்லை மீறியதும் வெகுளுதலாகும். கோபம் கொள்ளுதற்கு ஒரு காரணமுள்ள இடத்திலும்கூட, சீற்றம் கொள்ளாதிருக்க வேண்டும்.

301. செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்.

எங்கு தன் சினம் செல்லுமோ, அங்கு சினங்கொள்ளாதிருப்பவனே சினத்தைக் காப்பவனாவான்; சினங்கொள்ள முடியாத இடத்தில் காத்தால்தான் என்ன; காவாவிட்டால்தான் என்ன? அது வெகுளாமை ஆகாது.

302. செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற.

சினங்கொள்ள முடியாத வலியவரிடத்தில் கோபங் கொண்டால், அது தனக்குத் தீதாய் முடியும்; கோபம் செல்லக்கூடிய எளியவரிடத்தில் அது தோன்றினாலும் அதைவிடத் தீமை தருவன பிற எதுவும் இல்லை.

303. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

வலியார், மெலியார் என்பதன்று; யாரிடத்திலும் கோபங்கொள்வதை மறந்துவிடுக. ஏனெனில் அதன் காரணமாகத் தீயன எல்லாம் தொடர்ந்து தோன்ற வாய்ப்புண்டாகும்.

சினம் மேன்மேலும் மாறிமாறி இருவரிடத்திலும் சினத்தையே தூண்டும். அது பல கேடுகளில் முடியும்.

304. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

சிரித்துப் பேசுவதையும் மகிழ்ந்து உறவாடுவதையும் சினம் கெடுத்துவிடும். எனவே சினத்தைப் போல ஒருவருக்குப் பகையாவன வேறு எவையும் இல. பலருடன் கூடி இன்பமாய் வாழ அது விடாது.

305. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

ஒருவன் தனக்குத் துன்பம் வராமல் தன்னைக் காத்துக்கொள்ள எண்ணுவானாயின், சினம் வராமல் தடுத்துக் காத்துக் கொள்ளவேண்டும். காவாவிட்டால் அச்சினம் தன்னையே அழித்துவிடுவது போன்ற கேடுகளைத் தனக்குத் தரும்.

தனக்கு உயிர்க்கேடும் தரும். 'தன்னைத்தான் காக்கின்' என்ற தொடர் 'தன்னைத்தான் காதலனாயின்' (209) என்பதுபோல, தன்னை ஒருவன் முதலில் பேணவேண்டும் என்று வற்புறுத்துகின்றது.

306. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

'சினம்' என்பது யாருக்கு ஏற்படுகிறதோ, அவரையே கொன்றழிக்கவல்ல நெருப்பாகும். இச் 'சேர்ந்தாரைக் கொல்லி' எனும் நெருப்பு தனக்கு இடமளித்தவனை மட்டுமன்றி, அவனுக்கு உற்ற பாதுகாப்பான துணையாயிருக்கின்ற இனத்தையும் சுட்டழிக்கும்.

சினம் தன்னைக் கொண்டவர்களை மட்டுமன்றி, அவர்களுக்குத் துணையாயிருப்பவர்களையும் துன்புறுத்துமாம். 'சேர்ந்தாரைக் கொல்லி' - நெருப்பு. சினத்திற்கும் அப்பெயரைச் சுட்டுகிறார் நம் திருவள்ளுவர். ஒரு குற்றம் அக்குற்றவாளியை மட்டுமன்றி, சுற்றுச் சூழலால் சமுதாயத்தையும் கெடுக்கும் என்ற வள்ளுவச் சிந்தனை பல இடத்தும் காணப்படுகிறது.

307. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

சினத்தைத் தன் ஆற்றலை மற்றவர்க்குக் காட்டக்கூடிய சிறந்ததொரு குணமெனக் கொண்டவன் நிச்சயம் அவ்வாற்றல் கெட்டுப்போவான். அது பூமியிலே ஒருவன் தன் கையால் அறைந்தால், அக்கை நிலத்திற்பட்டுத் துன்புறுதல் தப்பாதவாறு போல ஆகும்.

இது காட்சியளவை மட்டுமன்றி, பட்டறிவு அளவையுமாகும். தீமை செய்தவனுக்கே தீமைபயக்குமென்பதையும் இதைக்கொண்டு நிறுவலாம்.

308. **இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று.**

ஒருவருடன் நெருங்கிய நட்புடன் கூடி வாழும்பொழுது, அவர் சுடர் பலவாக எரிகின்ற நெருப்பில் தோய்ந்தாற் போன்ற துன்பம் தருவனவற்றைச் செய்தாராயினும் அவர் மீது கடுஞ்சினம் கொள்ளாதிருத்தலே நல்லது.

பண்புடைமையின் உச்சத்தைத் தொடும் இடங்களில் ஒன்று இது. வள்ளுவர் இத்தகைய உச்சநிலையைக் காட்டி, அந்த அளவு மனிதனை உயர்த்த முயல்கிறார்.

309. **உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்**
**உள்ளான் வெகுளி எனின்.**

ஒருவன் தன் மனத்தாலும் வெகுளியை எண்ணாதிருப்பானாயின், அவன் தான் நினைத்த நன்மையனைத்தையும் ஒருங்கே பெறுவான்.

சொல்லும் பொருளும் பின்னரும் வரும் இத்தகைய மொழிநடையே சொல்லவந்த கருத்தை மிக அழுத்தமாய் வற்புறுத்துகிறது. வள்ளுவர் உள்ளங்கவர்ந்த இந்நடையழகைப் பல குறள்களில் காணலாம்.

310. **இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை.**

எல்லை கடந்த கோபம் கொண்டவர், செத்தவர்க்குச் சமமாவர்; சினத்தைக் கைவிட்டவர் உண்மைத் துறவியர்க்குச் சமமாவர்.

சினத்தைத் துறந்தவரே உண்மைத் துறவியர் என்ற கருத்தும் தொனிக்கிறது.

## 32. இன்னா செய்யாமை

பிற உயிர்களுக்கு ஏதேனும் ஒரு காரணம் பற்றித் துன்பம் தரும் இன்னாத செயல்களைச் செய்யாதிருத்தல். காந்தியடிகள் 'அகிம்சை' என்பர். உருசியப் பேரறிஞர் தால்ஸ்டாய் மனங்கவர்ந்த குறள்களிவை; "The Hindu Kural" என்ற தம் கட்டுரையில், அவர் இக்குறள்களை விளக்கியுள்ளார். இதைப் பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு சான்றுடன் எழுதியுள்ளார்.

311. **சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா**
**செய்யாமை மாசற்றார் கோள்.**

பிறர்க்குத் துன்பந்தரும் செய்கைகளை மேற்கொள்வதால், மேன்மையைத் தரும் செல்வம் பெறலாமாயினும் அவ் இன்னாதவற்றைச் செய்யாதிருத்தலே மனம் தூயாரது கொள்கையாகும்.

312. **கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா**
**செய்யாமை மாசற்றார் கோள்.**

தம்மீது கடுஞ்சீற்றம் கொண்டு துன்பந்தருவனவற்றை ஒருவர் செய்தபோதும், தாம் திரும்பவும் அவருக்கு அத்துன்பச் செயல்களைச் செய்யாதிருக்கவேண்டுமென்பது மனமாசற்ற தூயாரது கொள்கையாகும்.

பிறர்க்கின்னா செய்யாமை, மறுத்தின்னா செய்யாமை இவை; அடுத்து வருவது செற்றார்க்கும் இன்னாத் செய்யாமை.

313. **செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்**
**உய்யா விழுமம் தரும்.**

தான் முன்பொரு தீமை செய்யாதிருக்கவும் காரணமின்றித் தம்மீது கோபங்கொண்டு துன்பம் தரும் தீயவற்றைச் செய்தவர்களுக்கும் தாம் தீங்கு செய்யாதிருப்பதே நல்லது. அங்ஙனமின்றிச் செய்தால், அது பிற்பாடு கடக்கவியலாத துன்பத்தைத் தரும். பழிக்குப் பழி என்பது தீது.

314. **இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்.**

தம்மிடம் துன்பந்தரும் தீமைகளைச் செய்தவர்களைத் தண்டிக்கும் விதம் யாதெனில், அவர்களே வெட்கப்படும்படி, அவர்களுக்கு நன்மை தருவனவற்றைச் செய்து அவர்களினும் மேலாகி வென்று விடுவதாகும்.

தோற்றுப்பணிந்து அச்சத்தால் நன்மை செய்வதன்று; பெருமிதமாய் மேம்பட்டு நின்று நல்லன செய்துகாட்டி வெல்லுதல் இது.

315. **அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போல் போற்றாக் கடை.**

பிற உயிர்களுக்கு வரும் துன்பங்களைத் தம் உயிருக்கு வந்தனபோல் கருதி அவற்றைக் காவாதுவிடின் உயிர்களின் இயல்பை அறிந்த அறிவினால் ஏதும் பயனுண்டோ?

316. **இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை**
**வேண்டும் பிறன்கண் செயல்.**

இன்னாதது - துன்பம் தருவது - தீயது எனத்தான் உணர்ந்தவற்றை அதாவது தனக்கு வரும்போது துன்பந் தருவன எனத் தான் நன்கு அறிந்தவற்றை மற்றவனிடம் தான் செய்யாதிருக்க வேண்டும். துன்னாமை - பொருந்தாமை; செய்யாமை.

எது இன்னாதது என்று யார் சொல்வது? சிலர் தீமை செய்துவிட்டு, நன்மை தானே செய்தேன் என வாதிப்பர்; ஒரே ஒரு அளவுகோல்தான் உண்டு. அது தன்னை வைத்து அளப்பது.

317. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணாசெய் யாமை தலை.

யாருக்கும் எப்பொழுதும் சிறிதளவாயினும் மாட்சிமைப்படாத இன்னாத செயல்களை, தன் மனத்தாலும் எண்ணிச் செய்யாதிருப்பதே தலையாய அறமாகும்.

318. தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்.

மற்றவர் செய்யும் இன்னாத தீய செயல்கள் தன் உயிருக்குத் துன்பம் தருவதைத்தான் அனுபவித்து அறிந்தவன், நிலைபெற்ற பிற உயிர்களுக்கு அவ் இன்னாதவற்றைத் தான் செய்வது என்ன காரணம் கருதியோ?

இவ்வாறு தன்னையே சான்றாக்கிக் கூறுவன, துன்புறுத்துவான் துன்புறுதலின் கொடுமையை உணர்ந்து திருந்துவான் என்பதற்காகவேயாம்.

319. பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

ஒருவர் மற்றவர்களுக்கு முற்பகலிலே இன்னாத துன்பந்தரும் செயல்களைச் செய்தாராயின், அவருக்கு அத்துன்ப்ந்தரும் தீச்செயல்களின் பயன், பிற்பகலிலே பிறர் யாரும் செய்யாமல் அவை தாமே வந்து சேரும்.

தீமை எறிந்த பந்துபோல் தானே திரும்பவந்து பயனை விளைவிக்கும் நீர்மையுடையது. தீமை தீமையையே விளைவித்துத் தீரும் என்பதை இங்ஙனம் திருவள்ளுவர் திரும்பத்திரும்பக் கூறுகிறார். உலகமோ தீமைசெய்தும் நன்மையை அடையலாம் என வேறு திசையில் போய்க்கொண்டிருக்கிறது. இம் முரண்பாட்டை ஆராய்ந்து உண்மையை அறிந்து கூறுதல் அறிவியல் ஆய்வாளர் கடனாகும். விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் யாவற்றையும் விட இந்த நல்ஞானம் மிக முக்கியமாகும்.

320. நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

துன்பங்கள் எல்லாம் பிறர்க்குத் துன்பம் செய்தவர் மேலேயே தொடர்வனவாம். அதனால் துன்பமின்றி வாழ விரும்புபவர் பிறர்க்குத் துன்பம் தரும் செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

துன்பங்கள் அத்துன்பங்களைச் செய்தவர் மேலேயே தொடரும்; படரும். இந்நம்பிக்கையை உறுதிப்படுத்தும் உலகச் சான்றுகளைத் தொகுக்க வேண்டும். நோய் முன்பு துன்பம் எனும் பொருளில் வழங்கியது.

## 33. கொல்லாமை

உயிர்களைக் கொல்லுதலாகிய மிகக்கொடிய பாவத்தைச் செய்யாமை.

321. அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

அறச்செயல் என்று குறிப்பிட்டுச் சொல்லக் கூடியது ஒருயிரையும் கொல்லா நோன்பேயாகும். கொல்லுதல் பிற பாவச் செயல்கள் அனைத்தையும் ஒருசேரத் தரும். அத்துணைக் கொடியது கொலைப்பாவம்.

322. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

தனது உடைமையைக் கொண்டு, பசித்தோர்க்குப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு, இவ்வாறு உலகிலுள்ள பலவகை உயிர்களையும் சாவாது பாதுகாத்தல், அறநூலுடையார் தொகுத்தவற்றுளெல்லாம் தலையாய அறமாகும்.

பசித்து உயிர்கள் சாதல் கூடாது. செல்வம் உடையவன் தனது உடைமையைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்பானாயின், உலகம் பசியால் சாகாது. எனவே அங்ஙனம் கொடாது தவிர்த்தலைக் 'கொலைப்பாவம்' என்றே திருவள்ளுவர் கருதுவது புலனாகிறது. இன்றேல் கொல்லாமை அதிகாரத்தில் இக்குறள் இடம்பெறுவானேன்?

323. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

ஒப்பும் உயர்வுமின்றித் தான் ஒன்றே முதன்மையாய் நல்லது கொல்லாமையாகிய அறமே ஆகும். அதற்கு அடுத்தபடியாகப் 'பொய்யாமை' அறம் நல்லது. இவை இரண்டும் தலையாயவை என்பது பெற்றாம்.

ஏனெனில் இவை இரண்டின் வழிப்பட்டனவே ஏனைய அறங்கள் எல்லாம். 'பொய்யாமை பொய்யாமை ஆற்றின்' என்ற குறளையும் ஒப்பிடுக.

324. நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

நல்ல வழி என்று உலகில் சிறப்பித்துச் சொல்லப்படுவதொரு வழி யாதெனில், அது உலக உயிர்கள் எதனையும் கொல்லாதிருப்பது பற்றிச் சிந்திப்பதேயாகும்.

325. நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

கொல்லாமை துறவைவிடவும் சிறந்த அறமாகும். வாழ்வின் தன்மையை அறிந்து அஞ்சி, உலகப்பற்றை விட்டவர் அனைவருள்ளும் கொலைசெய்தலை அஞ்சிக் 'கொல்லாமை'யாகிய அறத்தைச் சிந்திப்பவனே தலையானவன் ஆவான்.

துறவு, தவம், வேள்விப் பெயர்களாலும் கொல்லாமையை எண்ணாதிருப்பது நல்லது. உலக நிலையை அஞ்சி, நீத்தாருள் எல்லாம் கொலை அஞ்சுவானே தலையானவன் என்பதிலிருந்து, வள்ளுவர் உள்ளம் யாதெனத் தெளியலாம்.

326. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணும் கூற்று.

கொல்லாமையைக் கைக்கொண்டு ஒழுகுபவன் வாழ்நாளில், உயிரை இடைமறித்து உண்ணும் கூற்றுச் சென்று தாக்காது.

அவனது வாழ்நாளில் இடைமுறிவு ஏதும் ஆபத்துக்களால் ஏற்படாது.

327. தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

சிலபோது மருந்துக்கு என்றும், கழுவாய் தேட என்றும் இவ்வாறு கொலை செய்தல் உண்டு. கொலை செய்யாவிட்டால் தன்னுயிர் நீங்கும் என்றாலும் தான் பிறிது ஒன்றின் இனிய உயிரைக் கொல்லும் செயலைச் செய்யற்க.

328. **நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்**
**கொன்றாகும் ஆக்கம் கடை.**

வேள்விக்கண் கொலைசெய்தல் போல்வனவற்றால் நன்மை தரும் ஆக்கங்கள் பெரிதென்று கூறப்பெறுதலுண்டு. அங்ஙனமாயினும், சான்றாண்மையுடையார்க்குக் கொலை செய்தல் மூலம் கிடைக்கும் செல்வம் கடைப்பட்டதாகும். அதைத் தவிர்த்தலே நலம்.

329. **கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்**
**புன்மை தெரிவா ரகத்து.**

கொலையையே தொழிலாகவுடையவராகிய மாக்கள், அத்தொழிலின் இழிதகவை அறிவாரிடத்து, மிகக் கீழ்ப்பட்ட புலைத்தொழிலினர் எனக் கருதப்படுவர்.

சிலர் கொலைசெய்து, ஊன் விற்பதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். அவர்களை நோக்கியது இக்குறள்.

330. **உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்**
**செல்லாத்தீ வாழ்க்கை யவர்.**

கொலை செய்து, உயிர்களை அவற்றின் உடம்பினின்றும் நீக்கியவர்கள், வெறுக்கத்தக்க நோய்வாய்ப்பட்ட உடம்போடு, தப்பமாட்டாத தீய வாழ்க்கையில் உழல்பவர் ஆவார்கள். இவர்கள் உடம்பு கெட்டுப் போகுமாம்.

இறைச்சி உண்பதால் நீங்காத நோய் உண்டாகும். தீமையுடன் கூடிய இழிந்த வாழ்வுமாகும்.

## 34. நிலையாமை

நிலையாமையை நிலைபேறாக உடையது இவ்வுலகம். உயிர்கள் பிறந்து இறந்தாலும் உயிரினத் தொடர்ச்சி என்றுமுளது. இயற்கை தோன்றி மறையும் தன்மையுடையதெனினும் இயற்கை எனும் ஒன்று நிலையாகவுளது. மனிதனுடைய வாழ்நாளும் இளமையும் செல்வமும் எல்லைக்குட்பட்டவை யெனினும், வாழும்போது மனிதர்கள் என்றும் நிலையாக இருக்கப் போகின்றவர் போலவே எண்ணுகிறார்கள். ஆயினும் நிலையாமை பற்றிய உணர்வும் மனத்தின் ஆழமான அடிப்படையில் இருந்தால்தான் மனிதவாழ்வும் மன்பதையுலகும் சீர்படும்.

331. நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மைக் கடை.

நிலைநில்லாதவற்றை நிலையாக இருப்பனபோல் எண்ணும் கீழ்ப்பட்ட அறிவுடையவராயிருத்தல் கடைப்பட்ட இழிவாகும்.

புல்லறிவாண்மை - புல்லிய அறிவை மேலானதாகக் கருதி ஒழுகுதல்.

332. கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

ஒருவனிடம் பெருஞ்செல்வம் சேர்தல், கூத்தாடுகின்ற அரங்கின்கண் கூட்டம் சிறிது சிறிதாகக் கூடி அவ்வவை நிறைவது போலும்; அச்செல்வமனைத்தும் கைவிட்டுப் போவதும், அக்கூட்டம் கூத்து முடிந்தவழிக் கலைந்து ஒருவர் கூட இன்றி, ஒருசேரப் போவதைப் போலும்.

விளிந்தற்று - ஒருவர் இன்றி உயிர்ப்பற்ற காட்சியாய் வெறிச்சோடிக் கிடப்பது, செல்வமிழந்தார் நிலையும் அதுபோலாகும்.

333. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

செல்வம் நிலைநில்லாத இயல்பினையுடையது. எனவே அச்செல்வத்தைப் பெற்றால், நிலைபேறுடைய நற்செயல்களை, பெற்ற அப்பொழுதே செய்க.

நிலை நில்லாச் செல்வம் கைமாறுமுன் அதை நன்மைக்குப் பயன்படுத்திவிட வேண்டும்.

334. நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின்.

நன்குணரவல்ல அறிவுடையாராய் இருந்தால், வெளியே 'நாள்' எனும் ஒரு தோற்றத்தைக் காட்டுவது நாளன்று; நம் உயிரைச் சிறிது சிறிதாக அறுக்கும் 'வாள்' அதுவென்று அறியப்படும்.

நேற்று ஒருநாள், இன்று ஒருநாள் என நாள்களை எண்ணும் நாம், அந்த நாள் எனும் ஒன்று நம் வாழ்நாளில் ஒவ்வொன்றாய்க் கழிகிறது என்பதை எண்ணுவதில்லை.

335. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

அறச்செயல்களைப் பிறகு செய்யலாம்; கடைசிக் காலத்தில் பார்த்துக் கொள்ளலாமெனத் தள்ளிப்போடுவது ஒரு மன இயல்பு.

நா பேசவராது அடங்கி, விக்குள் மேலெழுந்து தோன்றுவது உயிர்பிரியும் கடைசிநேரமாகும். அதுவரை காத்திராமல் அந்நிலை வருமுன்பே நல்வினைகளை உடனே விரைந்து முயன்று செய்ய வேண்டும்.

336. **நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு.**

நேற்றுப் பார்த்தேனே என அதிர்ந்து வருந்துமாறு, 'நேற்று இருந்தார் எனப்பட்ட ஒருவர் இன்று இல்லாது போனார்' என்னும்படியான பெரிய நிலையாமையை உடையதாயிருக்கிறது, இவ்வுலகம்.

தொல்காப்பியம் இதனைப் 'பெருங்காஞ்சி' எனக் குறிப்பிடும் 'மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமையும்' (1025) என்று பெருமை என்றே இடம் பெறுகிறது. உலகம் பெற்ற பெருமைகளுள் எல்லாம் இது மிகப்பெரிய பெருமையன்றோ என்ற தொனியுமுளது.

337. **ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல.**

ஒரு கணப்பொழுதுகூட வாழ வழியறியாத மனிதர்கள், கற்பனையில் மிதப்பதோ கோடி எண்ணிக்கை மட்டுமல்ல; அதனிலும் கூடுதலாகும்.

நிலையாமையை உணராதார் வெற்று ஆசைகளில் மிதப்பது இது.

338. **குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே**
**உடம்பொடு உயிரிடை நட்பு.**

இவ்வுடம்புக்கும் உயிருக்குமுள்ள நட்பு, கூடு தனித்துக் கிடக்க அதனுள்ளிருந்த பறவை பறந்து போய்விட்ட தன்மையினையுடையது.

உயிர் எந்த நேரத்திலும் பிரியலாம் என்பது கருத்து. அதனால், நிலையாமையை உணர்ந்து, நிலையான பணிகளை உடனுக்குடன் செய்து வாழ வேண்டும் என்பது குறிப்பு. இயற்கையும் அதுவே.

339. **உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு.**

சாவு என்பது ஒன்றும் புதுமையுடையதன்று; நாளும் நடப்பது அது. ஓய்வு கொள்ள உறங்குவது போன்றது சாவு; உறங்கிய பின் கிளர்ந்து செயல்பட விழித்தெழுவது போன்றது பிறப்பு.

340. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.

இந்த உடம்பினுள் உயிர் வாடகை வீட்டில் குடியிருப்பது போல், ஒதுக்கிடம் பெற்று இருக்கிறது. அதற்கு, எப்பொழுதும் நிலையாக இருக்கவல்ல போக்கிடம் ஒன்று - புகும் வீடு ஒன்று அமைந்திலது போலும்!

செல்வம், யாக்கை, இளமை முதலானவற்றின் நிலையாமை பற்றிய உணர்வு வாழ்வைப் பயனுடையதாக்கும். அதாவது திருவள்ளுவர் கூறும் நிலையாமை, வாழ்வை வெறுப்பதற்கு அன்று; உலகை விட்டு ஓடுவதற்கும் அன்று. நிலையாமையை உணர்ந்து, மேன்மேலும் சிறப்பாகப் பயன்பட வாழவே இவை வழிகாட்டுகின்றன.

## 35. துறவு

துவராடை, காடு தேடிப்போதல், இல்லறத்தைவிடுதல் என எதனையும் சுட்டிக்கூறவில்லை. மனத்தளவில் அனைத்தையும் முற்றத்துறந்து பற்றின்றி வாழும் துறவே இங்கு விளக்கப்படும் துறவாகும். அப்பழுக்கற்ற தூய துறவு போற்றுதற்குரியது. திருவள்ளுவர் அறத்துப்பாலின் இறுதி அதிகாரத்தில் 'பிறன் பழிப்பதில்லாத' தூய துறவு நெறிகளை விளக்குகிறார்.

341. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

ஒருவன் எதிலிருந்து எதிலிருந்து பற்று நீங்கப்பெறுகின்றானோ, அதிலிருந்து அதிலிருந்து துன்பம் நீங்கப் பெறுவான்.

துறவின் இலக்கணம் இது. மனத்தளவில் படிப்படியாய்ப் பற்றைவிட்டு, உலகிடைத் தாமரை இலைத் தண்ணீராய் வாழும் துறவு இது. இல்லறத்திலிருந்து தீயன பலவற்றினின்றும் விடுபட்டும், ஆசைகளை அடக்கியும், தன்னீகமாய்ப் பிறர்க்கென வாழ்வன அனைத்தும் துறவு நிலைகளேயாகும். ஒவ்வொருவரிடத்தும் துறவுள்ளம் இத்தனை விழுக்காடுளது எனக் கணக்கிடலாம்.

342. வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டுஇயற் பால பல.

துறக்க விரும்பினால், காலத்தே இளமையிலேயே செல்வம் வாய்ப்பு வசதி யாவும் இருக்கும்போதே, அவை பற்றிய மனப்பற்றை நீக்கி

உலகிடை வாழவேண்டும். அங்ஙனம் மனப்பற்று நீங்கியபின், இவ்வுலக வாழ்வில் ஒருவன் அடையக்கூடிய நன்மைகளும் இன்பங்களும் பலவாகும்.

துறவுள்ளம் கொண்டால் 'ஈண்டு நடக்கக்கூடிய இன்பங்கள் பல' என்ற கருத்தை எண்ணுக. உலக இன்பங்களைத் துய்த்து வாழும்போதே, அதில் பற்றின்றி ஒட்டாமல் வாழ்ந்தால், துன்பமென ஒன்று வராது; அதனால் இன்பங்களும் உளவாகும் என்பது கருத்து. ஒன்றுமற்றவர் துறவியரானோமெனல் பெரிதன்று. வாய்ப்பெலாம் இருந்தும் துறப்பதே, உண்மைத் துறவுள்ளம். 'வேண்டின் உண்டாகத் துறக்க' என்பது அதுவே.

343. **அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்**
**வேண்டிய எல்லாம் ஒருங்கு.**

துறவு என்றால் ஐம்பொறிகளால் நுகரும் புலன்கள் (ஆசைகள்) ஐந்தையும் வென்று அடக்கியாள வேண்டும். நாம் விரும்புகிற அனைத்திலும் ஒருசேரப் பற்றுவிட வேண்டும்.

அடல் - போர்க்களச் சொல். கொல்லுதல் என்பதனிலும் வெல்லுதல் என்பதே பொருந்தும். பொறிகள் ஐந்தாலும் நுகரும் புலன்கள் ஐந்தாவன. சுவை (வாய்), ஒளி (கண்), ஊறு (உடம்பு), ஓசை (செவி), நாற்றம் (மூக்கு) இவை ஐந்தையும் வெல்லுதல், அவை இழுக்கும் திசைகளில் போகாமல் அவற்றைத் தன் ஆளுமையால் அடக்கியாளுதல்.

344. **இயல்பாகும் நோன்பிற்குஒன்று இன்மை உடைமை**
**மயலாகும் மற்றும் பெயர்த்து.**

துறவுத் தவத்திற்குப் பற்று வைக்கத்தக்க பொருள் ஒன்றுகூட இன்மையே இயல்பாகும்; அல்லாமல் பற்றுவைக்கும் உடைமை என ஒன்றாயினும் இருக்குமாயின், அதன்வழிப் பற்றுத் தொடர்ந்து மீண்டும் மயங்குதற்கு ஏதுவாகும்.

பற்றுத் துறத்தல் என்பது மனத்தகத்தே முற்றுத் துறப்பதாக அமைய வேண்டும். ஒன்றுகூடத் தன்னது என்று இருக்கக் கூடாதாம். இன்றைய துறவிகள் பலரும் மிகப்பெரிய செல்வர்கள்; முதலாளிகள்; இவர்களுக்கு வேறுபெயர் தேடவேண்டும்.

345. **மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்**
**உற்றார்க்கு உடம்பும் மிகை.**

பிறவித் துன்பத்தை முற்ற நீக்க முயல்பவர்கட்கு, பற்றுக்களுக்குக் காரணமான உடம்பும் மிகையாம்; அவ்வாறிருக்க மேலும் சில தொடர்ப்பாடுகள் எதற்காக?

இந்த உடம்பே மிகையான உடைமையெனில், அதற்கு மேலும் உடைமைகள் இருக்கலாமா?

346. யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

யான், எனது எனத் தன் உடலையும் உடைமைகளையும் கருதி, அவற்றின்கண் பற்றுவைக்கும் மனச்செருக்கை முற்றக்கெடுப்பவன் வானோர்க்கும் மேலான உயர்ந்த உலகத்தைச் சென்றடைவான்.

வானுலகமென்ன? அதைவிட உயர்ந்த உலகத்தையே அடைவான் என்ற நடைப்போக்கு. இவ்வுலகில் பற்றுவிடுதலின் சிறப்பை அழுத்தமாய் உணர்த்துவதாகும். பற்றுவிடுதலால் எழும் மனப்பெருமிதம், ஒருவரது ஆளுமையை மிகவுயர்த்திக் காட்டும் உண்மைத் துறவோர்க்கே அஃது அமையும்.

347. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

உலகப் பொருள்களைப் பற்றிக்கொள்ளும் பற்றினை முற்றிலும் விடாதவர்களுக்கு, கடுந்துன்பங்கள் பற்றிக்கொண்டு இடைவிடாது தொடரும்.

உலகத் துன்பங்களினின்றும் விடுபடுதலே துறவின் முதற்பயன் என்பது இதனால் விளங்கவில்லையா? இடும்பைகள் - உலகத் துன்பங்கள்.

348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

முற்றத் துறந்த மனமுடையார் வீடு பேற்றைத் தலைப்படுவர். அங்ஙனம் முழுவதும் துறவாது தடுமாறுகிறவர் மயங்கித் துன்பங்களென்ற வலையுள் மீண்டும் அகப்படுவர்.

மனத்துறவின் விளக்கங்கள் இவை. அத்துறவால் இம்மையில் பெறும் நன்மைகளைக்கூறி, பிறவி அறுதலாகிய வீடு பேற்றையும் இறுதிக் குறள்களில் கூறுகிறார். திருவள்ளுவரைப் பொறுத்தவரை பிறவித் துன்பங்களினின்றும் விடுபடுதல் - பேரா இயற்கை நிலையை எய்துதல் என்பதுடன் மறுமை பற்றிய குறிப்புகளை முடித்துக் கொள்கிறார். அதற்குமேல் 'கண்டவர் விண்டிலர்;

விண்டவர் (சொன்னவர்) கண்டிலர் அல்லவா? அதனால் அதனுள் அவர் புகுவதில்லை.

349. **பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று**
**நிலையாமை காணப் படும்.**

பற்று முழுதும் அற்ற அப்பொழுதே ஒருவன் பிறப்புத் துன்பத்தினின்றும் நீங்கப்பெறுவான். அஃதின்றேல், பிறவித் துன்பங்களைத் தருகின்ற நிலையாமையையுடைய வாழ்வே முன்வந்து காணப்படும்.

350. **பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு.**

இயல்பாகவே பற்றுக்களின் நீங்கிய இறைவன்மீது கொள்ளும் பற்றினைப் பற்றிக் கொள்க; எதற்காக என்றால், உலகப் பொருள்கள்மீது கொண்ட பற்றினை விடுவதற்காக அவ் இறைப்பற்றினைப் பற்றுக!

மனித மனம் சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது. அது எதையேனும் பற்றிக்கொண்டுதான் நிற்கும். எனவே பற்றற்ற இறைவனைப் பற்றிக் கொள்ளுதல், ஏனைய உலகப் பற்றுக்களை விடத் துணையாகும் என்பதாம்.

## 36. மெய்யுணர்தல்

மெய்யுணர்தல் என்பது உலகப் பொருள்களின் மெய்ம்மையை அறிதல். மெய்ப்பொருள் அழியாது நிற்கும் செம்பொருள். உலகில் மெய்ப்பொருள் இதுவெனவும் பொய்ப்பொருள் இதுவெனவும் வேறுபடுத்தியறிவதே மெய்யுணர்தலாகும். மெய்ஞ்ஞானத்திற்கேயன்றிப் பகுத்தறியும் விஞ்ஞானத்திற்கும் பொருந்துமாறு மெய்யுணர்தல் விளக்கப்படுகிறது.

351. **பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்**
**மருளானாம் மாணாப் பிறப்பு.**

மெய்ப்பொருளல்லாத, அழியும் தன்மையினவாகிய பொய்ப்பொருளை அழியாத மெய்ப்பொருளென உணரும் அறியாமையால், மாட்சிமையற்ற பிறப்பு உண்டாகும்.

352. **இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
**மாசறு காட்சி யவர்க்கு.**

மெய்யைப் பொய்யென்றும் பொய்யை மெய்யென்றும் திரிபுபட உணரும் மயக்கத்தினின்றும் நீங்கி, குற்றமற்ற ஞானத்தையுடையவராயினார்க்கு, அம் மெய்யுணர்வு அறியாமையாகிய இருளை நீக்கி, இன்பத்தைக் கொடுக்கும்.

**353. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணிய துடைத்து.**

மெய்ப்பொருளைத் தெளிவுபட, ஐயமின்றித் துணிவாக அறிந்தவர்க்கு, எய்திநின்ற இவ்வுலகத்தைவிட மிகச்சிறப்புடையதெனப் போற்றப்படுகின்ற வானுலகம் அண்மையிலுள்ளதாகும்.

"துணிந்த அறிவின்கண்ணது எல்லாவுலகும் ஆதலின், அவ்வறிவுடையார்க்கு உலகம் ஒருங்கு தோற்றுதலின் நணித்தாம் என்றவாறு" என மணக்குடவர் கூறுவது கருதத்தக்கது.

**354. ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே**
**மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.**

மெய்வாய் கண் மூக்கு செவி எனும் ஐம்பொறிகளால் அறியத்தக்க அனைத்தையும் ஒருவன் அறிந்திருந்தாலும் அதனால் எப்பயனுமில்லை, அவற்றிற்கு அப்பாற்பட்ட உண்மைப்பொருளாம் மெய்ம்மையை அறியும் உணர்வில்லாதவருக்கு.

ஐம்பொறி அறிவுகள் மட்டும் போதா; ஆறாவதாகிய மெய்ம்மையை அறியும் அறிவு வேண்டும்.

**355. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

உலகத்தில் எந்தப் பொருள் எவ்வியல்பினையுடையதாய்த் தோன்றினும், அதனை அவ்வாறே கொள்ளாது, அப்பொருளின் உண்மைத் தன்மையைக் கண்டறிவதே அறிவாகும்.

பொருள்களின் தோற்றத்தை வைத்து மதியாது, அவற்றின் உண்மைத் தன்மையைக் கண்டறிவதே மெய்யுணர்தலென்பது பொதுக்கருத்து. இதனை அறிவியலுக்கும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

**356. கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றுஈண்டு வாரா நெறி.**

இப்பிறப்பின்கண் அற நூல்களைக் கற்று, உண்மைப்பொருளிதுவெனக் கண்டு தெளிந்தவர், மீண்டும் இப்பிறவியின்கண் வாராத வீட்டுநெறியை எய்துவர்.

பிறப்பறுத்தல் என்பது வீடு பெறுதலாம். பிறவிச் சுழற்சியினின்றும் விடுதலை பெறுவதே வீடு. அவ்வீட்டு நெறியை அறிதல் மெய்யுணர்தலாகும்

**357. ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்**
**பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.**

தெளிவுபட ஆராய்ந்து ஒருவனது உள்ளம் உண்மைப் பொருள் இதுவென உணருமாயின், உறுதியாக அவனுக்கு மீண்டும் பிறப்புளதென எண்ண வேண்டாம்.

**358. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு.**

பிறப்பினால் அறியாமைதான் இயல்பாக அமைகிறது. அவ்வறியாமை நீங்குமாறு, உலகத்தார் சிறப்பெனக் கருதுகின்ற யாவையினும் சிறந்ததும் தன்னில் சிறந்தது பிறிதொன்றில்லாததுமான செம்பொருளாம் இறைமையைக் காணவல்லதே அறிவாகும்.

தன் பிறப்பைப்பற்றியுள்ள அறியாமை நீங்குமாறு தன்னுள்ளிருக்கும் இறைமையைக் காணவேண்டும் என்பதாம்.

**359. சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்**
**சார்தரா சார்தரு நோய்.**

தான் சாரக் கடவதாய செம்பொருளையறிந்து, யான் எனது எனப் பற்றும் பொய்யான சார்புகள் தன்னைவிட்டு நீங்குமாறு ஒருவன் ஒழுகுவானாயின், அவனைச் சாரநின்ற துன்பங்கள், அந்நல்லுணர்வு ஒழுக்கங்களை அழித்துச் சாரமாட்டா; அவை தாமே விலகிப்போகும்.

பற்றற்றான் பற்றினைப் பற்றுவது போன்றதிது. மனிதமனம் எதையேனும் சாரும் இயல்புடையது. அது செம்பொருளைச் சாரச் சார, ஏனைய சார்புகள் தாமே நீங்கிப்போம்; அவற்றால் வரும் துன்பங்களும் நீங்கும்.

**360. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய்.**

விழைவெனும் ஆசை, கடுங்கோபம், அறியாமையாகிய மயக்கம் ஆகிய இவை மூன்றினது பெயர் தானுமின்றிக் கெட்டொழியுமாயின், அவற்றால் விளையும் துன்பங்களும் நீங்கிப்போம்.

இறை வாழ்த்திடல் 'பிறவிக்கடல் நீந்துதல்' பற்றிக் கூறியதன் விளக்கமே இவை யாவும். இப்பிறவியைப் பயன்பட வாழ்ந்து, இதன் முதிர்ச்சியாக இதனின்றும் விடுபடுதலாகிய மெய்யுணர்வையும் எய்துதல் வேண்டும்.

## 37. அவா அறுத்தல்

எத்துணை முயன்றாலும் மனம் மீண்டும் புலன்கள் மேல் செலுத்துமாதலின், அதனை முற்றிலும் வேரறக் களைதல் வேண்டுமென்பார் அவா 'அறுத்தல்' என்றார். நிலையில்லாத, பொய்யான பொருள்கள்மேல் செல்லும் ஆசையைத் தவிர்த்தல் வேண்டும்.

361. அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து.

எல்லா உயிர்களுக்கும், எப்பொழுதும் இடையீடின்றித் தொடர்கின்ற பிறப்பினை விளைவிக்கும் விதை, அவா என்று பெரியோர் சொல்லுவர்.

ஆசையால் வினையும் வினையால் பிறப்புத் தொடர்ச்சியும் உண்டாதலின் அதனை விதை என்றார்.

362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

பிறப்பினால் துன்பமே உளதாகுமென அறிந்தவன், ஏதேனும் விரும்புவானாயின் பிறவாமையையே விரும்புவான்; அப் பிறவாமைதானும் எதையும் விரும்பாமையை விரும்ப உண்டாகும்

363. வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல்.

எதையும் விரும்பாமை போன்ற விழுமிய செல்வம் இவ்வுலகில் பிறிதில்லை. இங்கு மட்டுமன்று, எங்கும் - மேலுலகிலும்கூட அஃதொப்பது இல்லை.

வேண்டாமையை விழுச்செல்வம் என்ற கருத்து, ஆழ்ந்த சிந்தனையின் வெளிப்பாடு.

364. தூஉய்மை என்பது அவாஇன்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

ஒருவருக்கு மனத்தூய்மை என்பது அவா இன்மை; வாய்மையை விரும்ப அவா இன்மை தானே உண்டாகும்.

ஆசையுள்ள இடம்தான் அழுக்குப்படும். வாய்மையை விரும்புபவனிடம் ஆசை தோன்றாது. ஆசை இல்லாத இடத்தில் பொய் பொறாமை முதலிய எவ்வித அழுக்கும் தோன்றாது.

365. **அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்**
**அற்றாக அற்றது இலர்.**

பற்றற்ற துறவிகள் என்பார் அவா அற்றவரே; ஆசை அறாத மற்றவர்கள், பிறவற்றைத் துறந்தாலும் முழுமையாகப் பற்றற்றவர் ஆகார்.

366. **அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை**
**வஞ்சிப்ப தோரும் அவா.**

ஒருவன் எத்துணை விழிப்பாயிருந்தாலும், ஆசை அவனை வஞ்சித்து ஏதேனும் ஒரு வகையில் அகப்படுத்தவே முயலும். ஆதலின் அதனை அஞ்சியஞ்சி அதற்கு அகப்படாதவாறு காப்பதே அறமாகும்.

367. **அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை**
**தான்வேண்டு மாற்றான் வரும்.**

ஆசையினை முழுவதுமாய் அறுத்து ஒழிப்பானாயின், அவனுக்குக் கெடாத நல்வினைகள் எல்லாம் அவன் விரும்பும் வழியானே எவ்விதத் துன்பமுமின்றி வரும்.

"அவாவினை முற்ற அறுத்தானுக்கு வேறு அறஞ்செய்ய வேண்டா. செய்தன எல்லாம் அறமாகும் என்பது கருத்து" என்பர் பரிமேலழகர்.

368. **அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம்அஃ துண்டேல்**
**தவாஅது மேன்மேல் வரும்.**

ஆசை இல்லாதவர்களுக்குத் துன்பமில்லை. வேறு காரணங்கள் இன்றேனும், ஆசை ஒன்றே உண்டாகுமானால், அதனால் எல்லாத் துன்பங்களும் முடிவின்றி, இடைவிடாமல் மேன்மேலும் வரும்.

369. **இன்பம் இடையறாது ஈண்டும் அவாஎன்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்.**

ஆசை என்னும் துன்பத்துள் கொடிய துன்பம் கெடுமாயின், இன்பமானது இடையறாது வந்து சேரும்.

ஆசை இன்றேல் துன்பமில்லை என்பது மட்டுமன்றி, இன்பமும் ஆகும் என்பதாம்.

370. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

ஒருபோதும் நிரம்பாத இயல்பினையுடைய ஆசையை ஒருவன் நீக்குமாயின், அவ் ஆசை நீக்கம் அவனுக்கு அப்பொழுதே எப்பொழுதும் அழியாத இயல்பினைத் தரும்.

ஆசை நீக்கத்தால் குலையாத, நிலைபேறுள்ள இயல்புடையராவரென்றும், வீடு பேற்றைத் தருமென்றும் இம்மை மறுமை இரண்டற்கும் கொள்ளுமாறு வள்ளுவ நடைப்போக்குளது.

பிறவிச் சுழற்சியுளதென்பதும், உயிர் பிறந்துபிறந்து துன்பத்தில் உழலாது அதிலிருந்து விடுதலை பெற்று, நிலைபெறுதல் வேண்டுமென்பதும் வள்ளுவர் தரும் செய்திகளாகும்.

## ஊழியல்

ஊழ் பற்றிய இதனை ஓர் அதிகாரம் மட்டும் கொண்ட இயலாகத் தொன்றுதொட்டுப் பகுத்துள்ளனர்.

ஊழ் என்பது சிறந்ததொரு தமிழ்ச்சொல். அதற்குப் பால், முறை என்ற பொருள்களுண்டு. பால் - பகுத்த நெறி, முறை - ஒரு நெறிக்குட்பட்டு இயங்குவனவே முறை எனப்படும். காலையில் ஞாயிறும் இரவில் மதியமும் இலங்குவது முதலாகப் பருவங்கள் ஈராக அனைத்தும் ஏதோ ஒரு முறைப்படி, நெறிப்படி இயங்குகின்றன. ஊழ் பிறர் கூறும் 'விதி' அன்று. அது இறைவன் ஒவ்வொருவரின் தலையிலும் எழுதுவதாகக் கூறப்படும். ஒருவன் புலையனாகப் பிறந்ததற்கு அவன் தலைவிதி காரணமென்று கூறும். காரியத்திற்கு ஒரு காரணம் காட்டும். ஊழ்-வினைப் பயனை நுகர்வதாகிய ஒரு முறைமை. மனிதச் செயலின் விளைவும் தாக்கமும் இது. காரணத்திற்கு ஏற்பக் காரியம் அமையுமென்றும் காரணத்தை மாற்ற முடியும். மாற்றினால் காரியமும் மாறும் என்றும் கூறுவது இது. இரண்டுக்கும் ஒற்றுமை இருப்பதுபோல் தோன்றினாலும் அடிப்படை வேற்றுமையுடையவை இவை.

## 38. ஊழ்

ஊழ் என்பது இயற்கையின் சுழற்சி. காற்று மண்டலம் போன்றது அது. ஆடிக்காற்று வேகம் மிக்கது. தென்றலாய் வீசும் காற்றுப் புயலாக மாறுவதுண்டு.

வான மண்டலச் சுழற்சியால் மழை, பனி, கோடைக் காலங்கள், ஒரு முறைக்குட்பட்டு மாறி மாறி வருகின்றன. சிலபோது வானம் பொய்க்கிறது; சில சமயம் கூடுதலாகப் பொழிகிறது.

மழையுள்ளபோது விதைக்கவேண்டும்; காற்றுள்ளபோது தூற்றிக்கொள்ள வேண்டும். வெயிலுள்ளபோது உலர்த்திக்கொள்ள வேண்டும். ஊழையும் அவ்வாறுதான் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

வினைச்சுழற்சியே ஊழ். ஒருவன் செய்தவினை அவனைப் ாதிக்கும். பெற்றோர் வினை பிள்ளைகளைச் சாரும்; தனிமனிதன் வினை அவன் குலத்தை, சமுதாயத்தை, உலகத்தைப் பாதிக்கக்கூடும். இங்ஙனமாகிய பல்லாயிரங்கோடி உயிர்களின் செயல்களாலான வினைகளின் சுழற்சியே ஊழ். அவை யாவும் இயற்கையைப்போல, ஒரு முறைக்குட்பட்டே இயங்குகின்றன. இதனால் ஒருவன் தனக்குச் சாதகமான சூழல் வரும்போது பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இச்சுழற்சியில் பலரது வினைத் தொடர்ச்சிகளும் அடங்கும். வினைகள் ஒன்றையொன்று குறுக்கிடுவதால் சாதகமான சூழல் அல்லது பாதகமான சூழல் மாறிமாறி அமையும்போது, அதன் அழுத்தம் மிகும். சமயத்தில் 'ஊழ்' பற்றிப்பேசுகிறோம். நம் செயல்களுக்கு உலகச் செயல்களும் ஏற்படுத்தும் வினைப் பயனாம் விளைவுகளின் ஒட்டுமொத்தமான சுழற்சியே 'ஊழ்' எனப்படுகிறது.

நான்கு தெருமுனைச் சந்திப்பிற்கு ஊழை ஒப்பிடலாம். எல்லோரும் நெறிப்பட ஊர்திகளை ஓட்டினால் அஃது ஆகூழாகும். ஒருவர் நெறி தவறுவதும் - அவர்தாம் தவறினாலும் அவரைச் சார்ந்தவர் தவறினாலும் போகூழாகும். ஊழ் தனி ஒருவரை மட்டுமன்றி, மன்பதையையே பாதிப்பதாகும். பருவகாலங்களின் பாதிப்புப் போன்றது இது.

371. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.

ஒருவனுக்கு ஆகூழ் தோன்றும் சூழலால் மனச் சோர்வின்மை தோன்றும்; கையிலுள்ள செல்வம் கைவிட்டுப் போகக்கூடிய போகூழால் சோம்பலாகிய மனச்சோர்வு தோன்றும்.

மனச்சோர்வின்மையும் சோர்வும் ஆகூழ், போகூழை முன்கூட்டித் தெரிவிக்கும் அறிகுறியாகும் என்னுமிது, அசைவில்லா மனத்தால் போகூழை ஆகூழாக மாற்றமுடியும் என்ற குறிப்பையும் தருகிறது.

372. பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை.

கைப்பொருளை இழக்கச்செய்யும் ஊழ்ச்சூழல் வருமிடத்து, அது அறிவைப் பேதைப்படுத்தும்; அதுவே செல்வத்தை ஆக்கும் ஊழ்ச்சூழலாகுமிடத்து அறிவை விரிவுபடுத்தும்.

பெரிதும் செல்வத்தை அழிக்கவும் ஆக்கவும் வல்ல ஊழ்ச் சூழலையே குறிப்பிடுகிறார்.

373. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.

ஒருவனது உண்மையான அறிவு பரம்பரைக் குடி வழியால் பிறவியில் அமைவதாகும். அவன் நுண்ணிய நூல்கள் பலவற்றைக் கற்றானாயினும், அக்கல்வியால் பெறும் அறிவைவிட, அவனுக்குளதாகிப் பிறவியிலமைந்த அறிவே மேற்பட்டுத் தோன்றும்.

கல்வியறிவு கைகொடாவாறு பிறவியிலமைந்த இயல்பான அறிவு கெடுத்துவிடக்கூடுமென எச்சரிப்பதாகக் கொள்ளவேண்டும்.

374. இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

உலகத்தில் ஊழினாலாகிய இயற்கைச் சூழல் இரண்டு வகைப்படும். ஒருவர் செல்வமுடையராதற்கான ஊழ்ச்சூழல் வேறு; அறிவுத் தெளிவுடையராதற்கான ஊழ்ச்சூழல் வேறு.

அதனால்தான் உலகில் பெரும்பகுதி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவும் காண்கிறோம். 'செல்வம் செய்யுங்கால் அறிவாகிய துணைக்காரணமும் வேண்டா என்பது பெற்றாம்' என்பது பரிமேலழகர் விளக்கம்.

375. நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

செல்வம் படைத்தற்கு நல்லன என்று கருதும் சூழலெல்லாம் தீயனவாய் மாறும்; தீயன என்று கருதும் சூழலெல்லாம் நல்லனவாய் மாறும்.

காலம், இடம், கருவி, முயற்சி எல்லாம் உதவியாய் மாறவும் கூடும்; எதிராக மாறி அழிக்கவும் கூடும்.

376. பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

ஒருவனது ஊழ்ச்சூழல் காரணமாக அவனுக்குரித்தல்லாதனவற்றை எத்துணை வருந்திக் காப்பினும் அவனிடம் அவை தங்கா; அவனுக்கு ஊழால் உரித்தாகக் கூடியவற்றைப் புறத்தே கொண்டு போய்ச் சொரிந்தாலும் அவை அவனைவிட்டுப் போகா.

செல்வம் நிலைபெறுதலும் கைவிட்டுப் போதலும் ஊழ்ச்சூழலால் பெரிதும் நிகழ்வதை இது வற்புறுத்துகிறது.

377. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

ஊழ் என்னும் ஒரு நெறி முறையை இறைவன் வகுத்துள்ளான். அங்ஙனம் வகுத்த அவ் ஊழ்படிதான் செல்வத்தைத் துய்க்க முடியுமே தவிரக் கோடி கோடியாய்ப் பொருள்களைத் தேடிச் சேர்த்தவர்களுக்கும் அவற்றை நுகர்தல் இயலாது.

கைக்கு எட்டியது, ஊழ்ச் சூழலால் வாய்க்கு எட்டாது போகக்கூடும். அஃதாவது செல்வம் பெற்றாலும் அதை நுகர்தற்கான ஊழ் அமைய வேண்டும்.

378. துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

ஊழானது அடையவேண்டிய துன்பங்களை அடையவியலாது நீங்குமானால், நுகர்ச்சி சிறிதுமில்லாது வறுமைப்பட்டவர்கள் துறவை மேற்கொள்வார்கள். ஆனால் ஆசை துறக்கவிடாது.

ஊழ் ஆசையைக் காட்டி, வறுமையிலும் உழல வைக்குமே தவிர அதிலிருந்து விடுபட வழிகாட்டாது.

379. **நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்**
**அல்லற் படுவது எவன்?**

ஊழ்ச்சூழல் நன்றாக அமையும்போது அதனால் வரும் இன்பங்களை, அவை நல்லன என இசைந்து அனுபவிக்கின்றவர்கள், ஏனைய தீய ஊழ்ச்சூழல் வரும்போது அதனால் வரும் துன்பங்களையும் அவ்வாறு அனுபவியாது, நொந்து அல்லற்படுவது என்ன பயன் கருதி?

சூழல் மாறும்போது காத்திருக்க வேண்டும் அல்லது சூழலை மாற்ற முயல வேண்டும். வெறுமனே அல்லற்பட்டுப் பயனென்ன?

380. **ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும்.**

தீய ஊழை நீக்குதற்பொருட்டு அதற்கு மறுதலையான வழியொன்றைச் சிந்தித்தாலும், அவ்வூழ் அதன் வழியாகவோ பிறிதொன்றன் வழியாகவோ அதனிலும் முற்பட்டு வந்து நிற்கும்.

இவ்வூழைவிட வலிமையுடையது பிறிதில்லை. இறுதிக் குறளில் மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட ஊழைக் கூறுகிறார்.

# பொருட்பால்

பொருள் என்பது உலக வாழ்வியல். அது நாடு, அரசு, அமைச்சு, படை, குடி, செல்வம், உணவு, இவற்றுடன் மனித வாழ்வு நெறிகள் அனைத்தையும் உள்ளிட்டதாகும். அகத்திணையுள் முதற்பொருள் (உலகம்), கருப்பொருள் (அதில் தோன்றிய இயற்கை முதலியவை), உரிப்பொருள் (மக்கள் வாழ்வியல்) எனப் பகுக்கப்படுவன எல்லாம் 'பொருள்' எனப்படுதல் காண்க.

புறத்திணை கூறுவன புறப்பொருள் எனப்படுதலாலும் 'பொருள்' என்பதன் பொருள் விளங்கும். அறத்துப்பால் பெரிதும் தனிமனித அறமும் தனிமனிதன் சமுதாயத்தைச் சார்ந்து வாழ்தலும் கூறும். காமத்துப்பால் தனிப்பட்ட காதலர் இருவர்தம் உறவுகள் பற்றியது. பொருட்பால் சமுதாயமாகக் கூடிவாழ்கின்ற நெறிமுறைகளையும் சமுதாயத்தில் இணைந்து வாழவேண்டிய தனிமனிதனின் திறன்களையும் கூறுகிறது.

திருவள்ளுவ மாலையில் போக்கியார் என்ற புலவர், இப்பொருட்பாலை ஏழு பிரிவாகப் பகுத்துப் பாடியுள்ளார். பொருட்பாலின் முதற்குறள் 'படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் உடையான் அரசு' என்பதாகும். அதன்படி அரசியல் 25, அமைச்சியல் 10, அரணியல் 2, கூழியல் 1, படையியல் 2, நட்பியல் 17, குடியியல் 13 எனப் பகுப்பதே முறையெனப்படுகிறது. போக்கியார் பாடற்கருத்துப்படி இவ்வுரையில் இயல்கள் பகுக்கப்பட்டுள்ளன.

# அரசியல்

வள்ளுவர் கால உலக நூல்கள் பலவும் 'அரசன்' இயல் என அரசனுக்கு முக்கிய இடம் தந்து கூறியிருக்கவும், 'அரசு' என்று ஆளும் தகவுடைய ஒன்றனைச் சுட்டி, அரசாளுதலின் இயல்புகளைக் கூறியது, காலந்தோறும் நீட்டிக்கவல்ல சிந்தனை யாகும். இன்றைய குடிமக்கள் அரசுக்கும் பொருந்துமாறு தொடரமைப்பு உளது.

அரசியலில் அரசனுக்கு எனக் குறிப்பிட்டுச் சொல்லும் இடங்களும் உள. பொதுவாக ஆட்சி செய்வார், நிருவாகி எனப்படும் ஆள்வினைஞர்கட்கும் பொருந்துமாறு பொதுப்படக் கூறுமிடங்களும் உள. அரசியலில் வரும் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, ஊக்கமுடைமை, மடி இன்மை, ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை போல்வன அரசர்க்கும் ஆள்வோர்க்கும் மட்டுமன்றி அனைவருக்கும் பொருந்துவனவே. அன்று அரசராவாரும் மனிதர்தானே என்பதால், இவை பொதுவாக அமைகின்றன. அரசரைத் தெய்வ அவதாரம் எனும் கருத்து, திருவள்ளுவர்க்கு உடன்பாடில்லை.

இறைமாட்சி, குற்றங்கடிதல் பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினம் சேராமை முதலியன அரசர்கள் அல்லது ஆட்சியாளர்க்குச் சிறப்பாக உரியன. தெரிந்து செயல்வகை நிருவாகத்தினருக்கு மட்டுமன்றி, ஒரு தொழில் தொடங்குவோருக்கும் பொருந்தும்.

வலி, காலம், இடமறிதல் சிறப்பாக அரசாள்வோருக்கும் பொதுவாக அனைவருக்கும் ஏற்புடையனவாகும்.

தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், சுற்றந்தழால் என்பன அதிகாரிகளை, அலுவலர்களைத் தமக்குப் பதிலாக வைத்து, வேலை வாங்கும் 'மனித மேலாண்மை' பற்றியவை.

பொச்சாவாமை, செங்கோன்மை, கொடுங் கோன்மை, வெருவந்த செய்யாமை, கண்ணோட்டம், ஒற்றாடல் யாவும் சிறப்பாக அரசர்க்கும் ஆள்வோர்க்கும் உரியன.

பொருட்பாலிலேதான் அதிகாரப் பொருள்தரும் பல குறள்கள் வேறொரு பொதுவான துணைப் பொருளும் கொள்ளுமாறு பாடப்பெற்றுள்ளன. அதற்குக் காரணம் இவ் அறங்களை அரசர் அல்லது ஆள்வோர்க்கு மட்டுமன்றி, அனைவருக்கும் பொருந்துமாறும் கூற எண்ணியதன் விளைவே யாகும். இன்றைக்கு அரசர்கள் இல்லை. ஆள்வோரே உள்ளனர். இக்குடியாட்சி முறைக்கும் பொருந்துமாறு இவை அமைந்துள்ளன.

## 39. இறைமாட்சி

இறைமை - தலைமை ஆட்சியுரிமை. அவ்வுரிமையுடையான் அரசன். இன்று இறையாண்மை சட்டத்தால் உருவகிக்கப்பட்ட அரசிடம் இருக்கிறது. அரசனாயினும் ஆள்பவனாயினும் அவர்களிடமிருக்க வேண்டிய நற்பண்புகளையும் நல்திறன்களையும் கூறி, ஆளுதலின் மாட்சிமை இதில் விளக்கப்படுகிறது. அரசியலில் கூறப்படுவன எல்லாம் அரசர்க்கே கூறப்படுவன அல்ல; ஆள்வோர்க்கும் ஆள நினைப்போர்க்கும் இவை பொருந்துவன.

381. **படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு.**

படையும் குடியும் உணவும் அமைச்சும் நட்பும் அரணும் ஆகிய ஆறு பகுதிகளையும் முழுமையாக உடையவனே அரசர்களுள் தலைமை வாய்ந்தவனாவான்.

ஏறு-காளை. இங்கு தலைமைப் பண்புணர்த்தும் படிமம். ஆள்பவர் இவ்வாறு பகுதிகளையும் முற்றப் பெற்றிருக்கவேண்டும். படை-ஓர் அரசுக்கும் நாட்டுக்கும் முதன்மை வாய்ந்தது. குடி-குடிமக்களும் அவர்களுடைய நாடும். நற்குடி மக்களையுடையதாதல் முக்கியம். கூழ் - உணவும் பொருட்செல்வமும். மிக இன்றியமையாத உணவின் மேலிட்டுப் பொருட்செல்வம் கூறப்படுகிறது. அமைச்சு - அரசுக்குத் துணையாய் நாட்டை ஆள்பவர். நட்பு - உதவும் நண்பர்கள் வெளியுறவுத் தொடர்பு; நட்பு நாடுகள். அரண்-பாதுகாப்புத்தரும் கோட்டைக் கொத்தளதங்கள். நாட்டை ஆளும் அரசுக்கு இவை ஆறும் அடிப்படையானவை.

382. **அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தர்க் கியல்பு.**

அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்ற இவை நான்கும் வேந்தர்களுக்குச் சிறிதும் குறைவின்றிப் பிறவி இயல்பாக அமைந்திருக்க வேண்டும்.

இடர்கள், சிக்கல்கள், பிரச்சினைகள், பகைமை எனும் எதனையும் அஞ்சாது எதிர்கொள்ளும் மனம் வேண்டும். ஈகை - படை, குடி, அதிகாரிகள், நட்பு நாடுகள் போல்வார்க்குக் கொடுக்கவேண்டிய சூழல்களில் நிரம்பக்கொடுத்து. யாவரையும் தன்வயப்படுத்திக் கொள்ளும் ஈகைக் குணம்.

அறிவு - நன்மை தீமையை உடனுக்குடன் முன்கூட்டி அறியும் அறிவு.

ஊக்கம் - எதற்கும் தளராத மனக்கிளர்ச்சியுடைமை. பொதுவான மனிதர்களைவிட மேம்பட்ட திறம்பெற்று ஆளும் ஆற்றல். இவற்றை இயல்பாகப் பெற்றவர்களுக்கே கைகூடும். இவையுடைமையே ஆளுமையாகும்.

**383. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலனாள் பவர்க்கு.**

காரியமாற்றலில் காலத்தாழ்வு செய்யாமை, ஆட்சி செய்வதற்கான நூல்களைப் பயின்ற கல்வி, எதிலும் தெளிவான முடிவெடுக்கும் திறமை இவை மூன்றும் நிலத்தை ஆள்பவர்களிடமிருந்து நீங்காது, என்றுமிருக்க வேண்டிய செயற்பாடுகளாகும்.

ஆட்சி செய்யும்போது விரைந்து நடத்தவேண்டிய செயல்களை உடனுக்குடன் முடிக்கவேண்டும். காலத்தாழ்வு ஊழலுக்கு வழிவகுக்கும். ஆள்வதற்கேற்ற நூல்களையும் சட்ட நுணுக்கங்களையும் கற்றுக்கொள்ளுதலே இங்கு கல்வி எனப்பட்டது. குடியாட்சி நாட்டில் ஆளுமாறு தேர்ந்தெடுக்கப்படுவோர் எவ்வித 'ஆட்சியியல்' அறிவுமின்றியிருத்தலே, பல கேடுகளுக்குக் காரணம். எச்சிக்கலிலும் தெளிவான உறுதியான முடிவெடுத்தல் வேண்டும். ஒருபக்கமும் துணியாது ஊசலாடுவோரால் ஆட்சி செய்ய இயலாது. துணிவுடைமை - இரண்டில் ஒன்றைத் துணியும் தெளிவுடைமை.

**384. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா**
**மானம் உடைய தரசு.**

தான் அறத்தின் வழுவாமலும் தன் நாட்டில் மற்றவர்களால் எவ்விதத் தீங்கும் நேராமலும் தடுத்தும் வீரத்தின் வழுவாத மானமுடையவனே அரசனாவான்.

ஆள்பவன் அறநெறி தவறினால் நாடு கெடும். முதலில் அவன் தன்னைக் களங்கமற்றவனாய்க் காப்பாற்றி ஒழுக வேண்டும். அடுத்துத் தன் நாட்டில் அல்லாதவை - தீயவை எதுவும் யாராலும் நடவாமல் அவற்றை அறவே ஒழிக்க வேண்டும். மறன் இழுக்கா மானம் - தனது வீரப் பெருமிதம் குன்றாத பெருமையுணர்வு வேண்டும். மானம் உடையவர் தம்மைப் பிறர் இழித்துப் பேசுமாறு நடக்கக் கூசுவர்.

**385. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு.**

பொருள்கள் வரும் வழிகளைக் கண்டறிந்து உண்டாக்க வேண்டும். அவ்வழிகளில் பொருட்செல்வத்தை ஈட்டுதல் வேண்டும். ஈட்டியதை ஒரு வழித்தொகுத்துக் காத்தல் வேண்டும். காத்த செல்வத்தைக் காலம் இடம் சூழல் அறிந்து துறைதோறும் பகுத்துத் தரவேண்டும். இவை அனைத்தும் வல்லதே நல்லரசாகும்.

உற்பத்தியே இல்லாத - அதற்கு இடமில்லாத ஒரு நாடு, உலகின் சந்திப்பு மையமாய், கப்பல்கள் வானூர்திகள் கணக்கின்றி வந்துபோகும் இடமாய் மாறிப் பொருள் வருவாய்க்கு வழிதேடுகிறது. தன் நாட்டைச் சுற்றுலா மையமாக்கி உலகை ஈர்க்கிறது. பொருள் வருவதற்கான வழிகளை அறிகின்ற திறமையே 'இயற்றலும்' எனப்பட்டது. இதன் பொருளியல் நுட்பம் விரித்தற்குரியது. அரசுகளின் நிதி நிலையறிக்கையின் சுருக்கமான சூத்திரம்போல் உளது.

386. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

ஆள்பவன் குடி மக்களால் காண்பதற்கு எளியனாக இருக்க வேண்டும். எவர் மாட்டும் கடுஞ்சொற்களைப் பேசாது அவர்களை நடத்திச் செல்பவனாக விளங்க வேண்டும். அத்தகையவனது நாட்டைப் பிற நாடுகளிலும் மேம்பட்டதென உலகம் உயர்த்திப் பேசும்.

387. இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.

படைகள், அதிகாரிகள், மக்கள், நட்பு நாடுகள் - எல்லோரிடத்தும் இன்சொல் பேசுவதோடு, அவரவர்க்கு வேண்டியனவற்றைச் செய்து கொடுத்துப் பரிவோடு காக்க வல்லவர்க்கு, நாடு முழுவதும் அவர் ஏவிய சொல்லைக் கேட்டு அவர் கருதியவாறு நடக்கும்.

தன்சொலால் - தன்சொற்படி நடப்பது. தான்கண்ட அனைத்து - தான் கருதியவாறே யாவும் நடப்பது.

சிறுதொழிலகத்திற்கூட இதைப் பார்க்கலாம். தங்கட்குக் காப்பும் வசதியும் கிடைப்பதுறுதியென மனம் நம்பும்படி யாவும் நடந்தால், மேலுள்ளவர் சொற்படி நடக்கவும் கருத்தை நிறைவேற்றவும் அனைவரும் ஆயத்தமாயிருப்பர். ஓர் அடிப்படை நிருவாக நெறி இது.

388. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.

இன்னார் இனியாரென்று பாராது, நடுவுநிலைமையோடு வழக்குகளில் முறை வழங்கிக் காக்கும் மன்னவன் அம் மக்கட்கு இறை என்று போற்றப்படுவான்.

பிறப்பினால் அரசன் கடவுளாவான் என்ற கருத்திற்கு மாறாக, முறைசெய்து காப்பாற்றுபவனே இறையாவான் எனக் கூறுகிறார். இப்பண்பு அமையாவிட்டால் அவன் கடவுளாகான் என்பதால், பிறப்பினாலன்று; பண்பினாலேயே இறைமையமையும் என்றாகிறது. திருவுடை மன்னரெல்லாம் திருமாலே என்ற கருத்து உலகெலாம் விளங்கிய காலத்தில், திருவள்ளுவர் அதை மாற்றிப் பிறப்பாலன்று உயர்வு; செயற்படும் முறையாலேயே திருமாலாக முடியும் என அழுத்தமாய்க் கூறியுள்ளார்.

389. **செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்**
**கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.**

தன் செவி கசக்கும்படி, தன் குற்றங்குறைகள் அமைச்சர், மக்கள் முதலியோரால் இடித்துக் கூறப்படுமானாலும் அவற்றைப் பொறுமையோடு கேட்கக்கூடிய பண்புள்ள வேந்தனின் ஆட்சியின் கீழ் இவ்வுலகம் நெடிது நாள் விளங்கும்.

கசப்பான சொற்களையும் கேட்கும் பண்புள்ளவன் குற்றம் நீக்கிக் குணம் பெருக்கி ஆள்வானாதலால் - அவன் ஆட்சி உலகில் நிலைபெறும் - நீண்ட காலம் நடைபெறும். கவிகைக்கீழ் தங்குதல் - அவனது கொற்றக் குடைக்கீழ் இருத்தல்; ஆட்சிக்குக் கீழ்ப்படுதல்

390. **கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி.**

ஆளுங்கால் கொடை கொடுத்தலும் அளிசெய்தலும் செங்கோல் காத்தலும் குடிகளைப் பேணலும் ஆகிய இந்நான்கு செயல்களையும் உடையவன், வேந்தர்கள் இனத்திற்கே ஒளிதரும் விளக்கென விளங்குவான்.

'ஈகை' என்றும் 'ஈத்தளிக்க வல்லாற்கு' என்றும் முன்பே இவ்வதிகாரத்திற் கூறியவர், இங்கும் 'கொடை' என்று கூறுகிறார். மக்கட்கு வசதி செய்து கொடுத்தல், அவரவர்க்கு வேண்டியன அறிந்து செய்தலால்தான் ஆள்பவன், ஆளப்படுவோரால் போற்றப்படும் நிலை உருவாகும். அளி-தலையளி; உபசரித்தல் என்பர். மதிப்புக் கொடுத்துப் பேணுதலும் இரக்கப்பட்டு உதவுதலும் அடங்கும். செங்கோல் - தனக்கு வேண்டியவர் என்னாது, வேண்டாதவர் என வெறுக்காது சமமாய் நடக்கும் ஆட்சிப் பண்டு; ஒருபக்கம்

வளையாமை. குடிஓம்பல் - தளர்ந்த குடிகளைப் பேணுதல்; பொதுவாகக் குடிமக்களைப் போற்றிக் காத்துப் புறந்தருதல்.

## 40. கல்வி

கற்றற்குரிய நூல்களை ஐயம் திரிபின்றிக் கற்றலும் அங்ஙனம் கற்பதன் சிறப்பும் பயன்களும்.

391. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

கற்க வேண்டிய நூல்களை ஐயம் திரிபின்றிக் கற்க! அங்ஙனம் கற்றால், அக்கல்விக்கு ஏற்ப நற்குண நற்செயல்களை வாழ்க்கையில் கடைப்பிடிப்பீர்களாக!

கசடு-குற்றம். ஐயமும் திரிபும். இதுவோ அதுவோ என ஐயம்; ஒன்றை மற்றொன்றாக மாற்றி உணர்வது திரிபு. இக்குற்றங்களின் நீங்கியதே சிறந்த கல்வி.

392. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

எண்ணை அடிப்படையாகக் கொண்டனவும் ஏனைய எழுத்தை அடிப்படையாகக் கொண்டனவுமான இருவகை நூல்களையும், வாழும் உயிர்களாகிய மக்களுக்கு இரு கண்கள் என்று கூறுவார்கள்.

பிற உயிர்கள் வாழ்வதாகக் கூறுவதில்லை; சிறப்பாக வாழ்வதால் மக்கள் உயிர் 'வாழும் உயிர்' எனப்பட்டது. எண் வழிப்பட்டவை கணிதம், வானநூல், அறிவியல் என விரியும். எழுத்து வழிப்பட்டவை இலக்கிய இலக்கணமாக விரியும்.

393. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

கற்றவர்களே கண்களுடையவர் என்று மதிக்கப்படுவார்கள். கல்லாதவர்களுக்கு ஊனக் கண்களிருந்தாலும் முகத்தில் இரண்டு புண்களை உடையவர் என்றே கருதப்படுவார்கள்.

பொருள்களின் உண்மைத் தன்மையை அறிவதற்குக் கல்வி தேவை; கல்விக்கண் இல்லாதபொழுது தவறாகவுணர்ந்து தீமையும் பயத்தலால் கல்வியறிவற்ற கண்களைப் புண்கள் என்றார்.

394. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

நூற்கல்வி மிக்க புலவர்கள் தாம் உவகை கொள்ளுமாறு ஒருங்குகூடுதலும், மீண்டும் எப்பொழுது இவ்வாறு கூடப் பெறுவோமெனப் பரிவு கொள்ளுமாறு பிரிதலுமாகிய இவற்றையே முழுவதும் தமது தொழிலாக உடையவராவர்.

புலம், புலமை என்பன நூற்கல்வியால் பெற்ற அறிவைக் குறிக்கும். நிரம்ப, நன்கு கற்றவர்களுக்கு அக்கல்வித் தொடர்பானவற்றை உரையாடுவதிலேயே இன்பமாகப் பொழுதுபோகுமென்பதால் 'அனைத்தே புலவர் தொழில்' என்றார்.

395. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

செல்வம் உடையவர்களிடம் அஃதில்லாதவர்கள் உதவி கருதிப் போகுங்கால், ஆசையால் தாழ்ந்து நின்று அவ்வுதவிபெறக் காண்கிறோம். அதுபோல்; கற்றறிந்த ஆசிரியர்களிடம் பணிந்து நின்று கற்றுக் கொண்டவர்களே தலையாயவர் ஆவர்; அங்ஙனம் பணிந்து கற்பதற்கு வெட்கப்பட்டுக் கல்லாதவர்கள் கடையரே ஆவர்.

396. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

மணற் பாங்காகவுள்ள இடத்திலுள்ள கேணியில் தோண்டத் தோண்டத் தோண்டிய அளவினதாக நீர் ஊறும்; அதுபோல உலக மக்களுக்குக் கல்வியைக் கற்கக்கற்கக் கற்ற அளவினதாக அறிவு கூடும்.

கல்வி உளவியலார் உள்ளத்தின் உள்ளிருக்கும் அறிவை மேன்மேலும் மலரச் செய்வதே கல்வி என இன்று கூறுவதை, இதனுடன் ஒப்பு நோக்குக. அதாவது அறிவு என்பது வெளியிலிருந்து பெறப்படுவதன்று. ஒவ்வொருவரிடமும் அறிவு உள்ளுள் உளது. அதை மலரச் செய்வதே கல்வி என்பர் உளவியலார். 'மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்' (373) என்ற இடத்தில், உள்ளிருந்து ஊறிப்பெருகும் அவ்வறிவில், அவரவர் குடிவழிப் பிறவி இயல்பும் படிந்திருக்கும்; அது அவரது வெற்றி தோல்விக்குக் காரணமான ஊழாக அமையும் எனக் கூறியிருப்பதுடன் இது பொருந்திவருதல் காணலாம்.

397. யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

கற்றவர்களுக்கு எந்நாடும் தம் நாடாகும்; எவ்வூரும் தம் ஊராகும். அவ்வாறிருக்க ஒருவன் தான் சாகும் வரையிலும் கல்லாதிருப்பது ஏன்?

உலகளாவிய மனிதம் கல்வியாலேயே உருவாகிறது. கல்வி ஒன்றுதான் சாதி மத இன மொழி கடந்த உலகப் பொதுமையைத் தருகிறது. இத்தகைய கல்வி பட்டங்கள் பெறுவதோடு முடிவதில்லை.

398. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

ஒருவன் ஒருபிறப்பின்கண் கற்ற கல்வி அவனுக்கு ஏழு பிறப்பிலும் சென்று உதவும் துணையாகும்.

ஏமாப்பு - பாதுகாப்பான துணை. இந்தப் பிறப்பில் உதவுதல் சொல்லாமலே அமையும். 'ஏழு' என்பது பொதுவாகப் பல என்னும் பொருளுடையது. 'இதைச் செய்; இது உனக்கு ஏழுபிறப்புக்கு நன்மை தரும்' என அன்றாடம் பேசுவதுபோன்றதே இது. கல்வியால் நீங்காத பயனுண்டு என்பதை அழுத்தமாய்ச் சொல்வதற்குப் பயன்படும் மொழிநடை இது. மேலும் கல்வி உயிரோடு ஒன்றி, ஒருவனது உயிர்ப் பண்பாகி விடுவதையும் இது விளக்குகிறது.

399. தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்பமடையக் கண்டு, கற்றறிந்தவர்கள் மேலும் மேலும் அக் கல்வியின் மேலேயே காதல் கொள்வர்.

செல்வர்கள் ஆடம்பரமாய்த் திரியக் கண்டால், காண்பவர் மனம் மகிழ்வதில்லை. பொறாமைப்படுகிறது. கற்றவர்கள் வாக்கு வன்மையோடு பேசினால், எழுதினால் உலகம் அதில் மகிழ்ச்சி காண்கிறது.

400. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

கல்வியே அழிவில்லாத சிறந்த செல்வமாகும்; ஒருவனுக்கு மற்றவை எல்லாம் அதுபோன்ற சிறந்த செல்வம் ஆகா.

கல்விச் செல்வம் பிறரால் கொள்ளை கொள்ள முடியாதது; கொடுத்தால் குறையாதது; மேலும் உயிரோடு ஒட்டியதாகும். ஏனைய பிரிக்கக்கூடிய செல்வங்களைவிட, இது ஒருவனுக்கேயுரிய அவனுடைய சொந்த செல்வமாகி விடுவதால், 'மற்றையவை மாடல்ல' என்றார் (மாடு-செல்வம்).

## 41. கல்லாமை

உடன்பாட்டுமுகத்தால் கல்வியின் இன்றியமையாமையை வற்புறுத்தியவர், எதிர்மறைமுகமாகவும் அதை வலியுறுத்திக் கூறுகிறார். கல்லாதார் கற்றோரவையில் உரையாட இயலாதவராய், உலகோரால் மதிக்கப்படமாட்டார்.

401. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

தன் அறிவு நிரம்புதற்குரிய நூல்களை முழுமையாகக் கல்லாது, கற்றோரவைக்கண் கூடியிருந்து பேச நினைப்பது, அரங்கம் அமைத்துக் கொள்ளாது வட்டு விளையாட நினைப்பது போலாகும். மிகுதியாகக் கற்றிருப்பவனே பிறருடன் சிறப்பாகப் பேசிப் பழக முடியும்.

சுவரை வைத்துத்தானே சித்திரம் தீட்டவேண்டும். முதலில் அரங்கம் - கோடு கிழித்துக் கொண்டுதானே, காய்களை வைத்து சதுரங்கம் ஆடமுடியும். அவையில் பேச, விவாதிக்க, உரையாட அடிப்படையான நூலறிவு வேண்டும்.

402. கல்லாதான் சொற்கா முறுதல் முலைஇரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.

கல்லாதவன் கற்றோரவைக்கண், ஒன்றைப்பற்றிப் பேச ஆசைப்படுதல், மார்பு இரண்டும் இல்லாத பேடி ஒருத்தி பெண் தன்மைக்கு ஆசைப்பட்டுப் பெண்போல ஒப்பனை செய்துகொள்வதற்கு ஒப்பாகும்.

பெண்போலவே நடை உடை மாற்றிக்கொண்டாலும், பெண்ணென மதிக்கப்பட மாட்டாள்; கல்லாதவன் பேச்சும் அதுபோல எடுபடாது.

403. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

கற்றோர் அவைமுன் நின்று, எல்லாம் தெரிந்தவர்போல் பேசாதிருக்கப் பெறுவார்களானால், கல்லாதவர்களும் மிக நல்லவர்கள் ஆவர்.

தம் குறையுணர்ந்தவர்களாதலின் தமக்கும் பிறர்க்கும் தீங்கற்றவராவர். எவ்விதக் கல்வியறிவுமின்றி, சட்டமன்றம் சென்றும் அவைகளில் பேசியும் வீண் விதண்டாவாதம் செய்தும் சிலர் படுத்தும்பாடு அனைவரும் அறிந்ததே.

404. கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்
கொள்ளார் அறிவுடை யார்.

கல்லாதவன் தன்னை அறியாமல் சிலசமயம் வெளிப்படுத்தும் ஒளிவீச்சுப் போன்ற அறிவுடைமை, மிகவும் சிறந்ததுபோல் தோன்றினாலும், அதனை அறிவுடையார் நுண்ணறிவு என்று ஏற்றுக்கொள்ளார்.

ஒட்பம் - நுண்ணறிவு. கல்வியின்றி இயல்பாயுள்ள அறிவு பண்படுத்தாத நிலம் போலப் பயன்தராது. படிக்காத அறிவும் பயிற்சி செய்யாத இசையும் பழகாத நாட்டியமும் அங்ஙனம் பயின்று பழகியவர்முன் எடுபடா.

405. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

கல்லாத ஒருவன் தானும் அறிவுடையான் போலத் தன்னை எண்ணிக் கொள்ளும் மதிக்கற்பாடு, கற்ற ஒருவனை அணுகி உரையாடத் தொடங்கியதும் நிலை நிற்கமாட்டாது கெட்டுப்போகும்.

406. உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர்.

கல்லாதவர்கள் 'உயிருடன் உள்ளனர்' என்பதொன்று மட்டுமே உண்மை. அதைத் தவிர அவர்கள் எதுவும் விளையாத களர்நிலம்போலத் தமக்கும் உலகிற்கும் பயன்படமாட்டார்கள்.

407. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று.

நுண்மையும் மாட்சிமையும் உடையதும் பல நூல்களில் நுழைந்து ஆராய்ந்து கற்றதுமான புலமையறிவு இல்லாதவனுடைய எழுச்சிமிக்க அழகு, மண்ணால் சிறப்பாகச் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட்ட பொம்மையைப் போன்றதாகும்.

புறஅழகு ஆளுமை தராது; கல்வியாகிய உள்ளொளி இல்லையென்றால், பொம்மைகளைப் பார்த்ததுபோலவே இருக்கும். சிலரது முகத்தில் தோன்றும் அறிவுக்களை, உயிர்ப்பொலிவு தருவதைப் பார்க்கிறோம். அஃதில்லாத, அழகிய தோல் போர்த்த உடம்பு, பொம்மைகளின் அசைவு போலவே உணரப்படும்.

408. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

கற்றறிந்த நல்லவர்களிடம் உண்டான வறுமையைவிடக் கல்லாதவர்களிடம் சேர்ந்த செல்வம் துன்பம் தரும். கற்றவர் வறுமையால் மற்றவர்க்குத் தீங்கில்லை; கல்லாதவர் செல்வத்தால் அவர்க்கும் மற்றவர்க்கும் தீங்குண்டாகும்.

409. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

கல்லாதவர்கள் உயர்குடியில் பிறந்தவராக இருக்கலாம். ஆனாலும் தாழ்ந்த குடியில் பிறந்துவைத்தும் கற்றவர் பெருமைக்கு அவர்கள் ஈடாக மாட்டார்கள்.

குடி வழிவழி வரும் குலம். சாதி, குலம், செல்வத்தரம் என எதனால் மேல்நிலையினராய்ப் பிறந்திருப்பினும் கல்லாதவர்க்குப் பெருமையுண்டாகாது. அவற்றில் கீழ்நிலையில், பிறந்த ஒருவர் சிறப்புறக் கற்றிருந்தால், அவர்கள் யாவரையும் விட மேம்படுவர்.

410. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

தம் அறிவு துலங்குதற்குக் காரணமான சிறந்த நூல்களைக் கற்றவர்களுடன் அங்ஙனம் கல்லாத ஏனையவர்களை ஒப்பிட்டுப் பார்த்தால், ஆறறிவுடைய மக்களும் ஐயறிவேயுடைய விலங்குகளும் போன்றவர்கள் ஆவார்கள்.

கல்விதான் ஆறாவது அறிவைத் துலக்கும். விலங்குகட்கு ஐந்து பொது அறிவு உண்டு. ஆனால் அவை கற்று, அறிவைப் பெருக்குவதில்லை. மனிதனாய்ப் பிறந்தும், கல்வியால் அறிவைப் பெருக்கிக்கொள்ளாதவன் அவ்விலங்குகளுடன்தான் வைத்து எண்ணப்படுவான்.

## 42. கேள்வி

அறிவு பெறுவதற்குக் கேள்வியும் ஒரு வழியாதலின், கல்விச் செல்வம் போலக் கேள்வியும் ஒரு செல்வமாகும். கற்றலைப்போலக் கற்றறிந்தார்வாய்க் கேட்பதனாலும் அறிவு நிரம்பும். கேள்வியறிவு தளர்ச்சி வந்தவிடத்து, அதனை நீக்குந்துணையாகும். அஃதாவது தனக்குத் தெரியாவிட்டாலும், கற்றறிந்தவர் சொற்கேட்டு நடந்து துன்பம் நீங்கப் பெறலாம்.

411. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

செல்வம் பலவற்றுள்ளும் சிறந்த செல்வம் செவிச் செல்வமே. அச்செல்வம் செல்வங்கள் அனைத்துள்ளும் தலையாயதும் ஆகும்.

412. செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

செவிக்கு உணவு எனத்தகும் கேள்வியில்லாத பொழுது, சிறிதளவு உணவு வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்கும் கொடுக்கப்படும்.

பலரும் உணவுண்பதிலேயே ஆர்வம் காட்டுவராதலின், அறிவுப்பசியைத் தீர்ப்பதற்கே முதலிடம் தருகிறார்.

413. **செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்**
**ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து.**

செவியுணவாகிய கேள்வியறிவினைப் பெற்றவர்கள், வேள்வித் தீயிலிடப்படும் 'அவி' எனும் உணவினைப் பெறுகின்ற, இவ்வுலகில் வாழும் தேவர்களுக்கு ஒப்பாவார்கள்.

தாம் நேரே நூல்களைப் பயிலாதே, கற்றவர் வாய்க்கேட்டு அந்நூல்களாலாம் அறிவினைப் பெறுதலால் இவர்கள் கண்கண்ட தேவர்கள் ஆகின்றனர். வேள்வியை ஏற்காதவராகிய திருவள்ளுவர் (259) கேள்விப் பயனை வற்புறுத்தவே, இதனைப் பயன்படுத்திக் கொள்கின்றார்.

414. **கற்றிலன் ஆயினும் கேட்க அஃதுஒருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை.**

வாய்ப்பின்மையின், ஒருவன் கற்க வேண்டிய நூல்களைக் கற்றிலனாயினும், கற்றறிந்தார் சொல்லக் கேட்டறிக; அக்கேள்வியறிவு ஒருவனுக்குத் தளர்ச்சி வந்தவிடத்துத் தாங்குந் துணையாய் உதவும்.

ஊற்றாம் துணை - ஊன்று கோல்போல் பற்றுக்கோடாய் நிற்றல். 'தன்னாலும் தெரியாது; சொன்னாலும் தெரியாது' என்னும் பழமொழியை ஒப்பிடுக.

415. **இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.**

வழுக்குதலையுடைய நிலத்தின்கண் விழுந்து விடாதபடி கடக்க ஊன்று கோல் உதவுவது போல, ஒழுக்கமுடையவர்தம் வாயிலிருந்து வரும் சொற்கள் வாழ்வில் தளரும் இடங்களில் கைகொடுத்துதவும்.

கற்றறிந்திருந்தாலும் ஒழுக்கமுடையவர்தம் வாய்ச் சொற்களை வழிகாட்டியாய்க் கொள்ள வேண்டும். அவையே தவறுசெய்து வாழ்வை இழந்துவிடாதபடி தக்க சமயத்தில் காக்கும்.

416. **எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**

எந்த அளவு முடியுமோ, அந்த அளவிற்குக் கற்றவர் கூறும் நல்ல கருத்துக்களைக் கேட்டு அறிக; ஏனெனில் அந்த அளவிற்கு அது நிறைந்த பெருமையைத் தரும்.

எல்லாரும் எல்லா நூல்களையும் கற்றல் இயலாது. அதனால் நல்லனவாம் நூல்களைப் பற்றி, எந்த அளவு அவற்றைக் கற்றவர்களிடமிருந்து கேட்க முடியுமோ அந்த அளவு தேடித்தேடி மேன்மேலும் கேள்விச் செல்வம் பெற முயல்க என்பதாம்.

417. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர்.

கேட்கத் தக்கனவற்றையெல்லாம் கேட்டு, நுண்ணிதாய் ஆராய்ந்து பெருக்கிய கேள்வியறிவினையுடையவர்கள், ஒருக்கால் ஒரு பொருளைப் பற்றித் தவறாக உணர்ந்தாலும், தம்மை அறிவிலியாக்கும் சொற்களை மறந்தும் பேசிவிட மாட்டார்கள்.

'கற்பவை கற்க' என்பதுபோல, இழைத்து உணர்ந்து - நுண்ணியதாய் ஆராய்ந்து கேட்கத் தக்கனவற்றையே கேட்க வேண்டும். அவர்களை அறியாமலும் பேதைமை பயக்கும் சொற்கள் அவர்கள் வாயிலிருந்து வெளிப்படா.

418. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

ஓசை மாத்திரத்தில் நன்கு கேட்கும் செவிகளேயாயினும், அவை கற்றறிந்தார் கூறுவனவற்றைக் கேட்டுக் கேட்டுத் துளைக்கப்பட வில்லையென்றால், செவிடாம் தன்மையுடையனவே.

கேளாத செவியினர்க்குக் கேள்வியே நுழையாது; கேட்கும் செவிகளேயாயினும், கேட்கும் பழக்கமே இல்லையாயின், அவை செவியினுட் புக வாய்ப்பில்லை. எனவே செவிடும் கேள்வி கேளாச் செவியும் ஒன்றேயாம். கற்ற அளவிற்றாக அறிவு ஊறும் என்றதற்கு ஒப்பக் கேள்வியின் அளவிற்கு ஏற்ப அறிவு வளரும் என்பதும் 'துளைக்கப்படுதல்' என்பதால் பெறப்படுகிறது.

419. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

மிக நுட்பமான கேள்வியறிவையுடையவரல்லாதார், பணிவு கலந்த சொற்களைப் பேசும் வாயினராதல் இயலாது.

நுட்பமான கேள்வியறிவைப் பெறப்பெற அவ்வறிவது பெருமையும் அதை அறிந்தவர் பெருமையும் தம்மால் அறியப்படுலின், தம்மை வியந்துகொண்டு செருக்குடன் பேசத் தயங்குவர்; மற்றவர்களோ தாமறிந்திருப்பதே பெரிதென்றெண்ணிச் செம்மாந்து பேசித் திரிவர்.

420. **செவியிற் சுவைஉணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்?**

செவியினால் கேட்டறியும் கல்வியறிவில் சுவைகண்டு, அதில் ஆர்வம் காட்டாது, வாயால் உண்ணப்படும் உணவிலேயே ஆர்வம் காட்டும் மக்கள் செத்தால் என்ன? வாழ்ந்தால் என்ன?

செத்தாலும் வாழ்ந்தாலும் அவர்க்கும் உலகிற்கும் ஒரு பயனும் இல்லை. மக்களை மாக்கள் என்றார், ஐயறிவிற்குமேல் இல்லை என்பது கருதி.

## 43. அறிவுடைமை

கல்வி, கேள்விகளால் துலக்கப்பட்டு, கூர்மையும் சீர்மையுமுடையதாகப்படும் இயல்பான அறிவுடைமை.

421. **அறிவுஅற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்அழிக்கல் ஆகா அரண்.**

அறிவு என்பது ஒருவனுக்கு இடையே ஓர் அழிவு வந்துவிடத்து அதனைத் தடுத்துக் காக்கவல்ல கருவியாகும். அழிக்க நினைக்கின்ற பகைவர்களாலும் உட்புகுந்து அழிக்கமுடியாதபடி உள்ளேயுள்ள கோட்டையும் அதுவேயாகும்.

ஏனைய கருவிகளிருப்பினும் அறிவாகிய கருவியே அவற்றை இயக்குவதாம். அறிவு ஒருவனது உடம்பு சார்ந்த உயிரோடு ஒட்டியது; அவனுக்கு உள்ளேயுள்ள கோட்டை; அதனைப் புறக்கருவிகளால் எதுவும் செய்ய இயலாது. அறிவு தான் ஒரு சிறந்த கருவியாக இருப்பதுடன், ஏனைய புறக்கருவிகளால் அழிக்க முடியாத அரணாகவும் இருக்கிறது! ஒருவன் கையிலிருக்கிற தற்காப்புக் கருவியைப் பறித்துக்கொண்டு விடலாம்; அறிவை அங்ஙனம் பறித்தல் இயலாது.

422. **சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

நமது ஐம்பொறிகளையும் மனம்போன போக்கில் போக விடாது, தீயவற்றினின்றும் தடுத்து நீக்கி, நல்லவற்றில் செலுத்துவது அறிவாகும்.

ஐம்பொறிகளின் வழி ஓடுவது மனம்; அதைத் தடுத்து நிறுத்தி, நல்வழி பார்த்துச் செலுத்துவது அறிவு.

423. **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

எந்தப் பொருளை யார் ஒருவர் சொல்லக் கேட்டாலும்; அங்ஙனம் கேட்டபடியே கொள்ளாமல், அப்பொருளின் மெய்ம்மைத் தன்மையை ஆராய்ந்தறிவது அறிவாகும்.

கேள்வியறிவை வற்புறுத்தியவர், ஒருவர் தாம் கேட்டதையெல்லாம் அவ்வாறே ஏற்காது, தமது அறிவால் ஆராய்ந்து அதிலுள்ள மெய்ம்மையைப் பகுத்தறிந்தே ஏற்க வேண்டும் என்று கூறுகிறார்.

424. **எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.**

தான் சொல்வன அரிய பொருள்களேயாயினும் அவற்றை எளிதாக அறியும்படி, எளிமைப்படுத்திக் கேட்பவர்க்குச் சென்று சேருமாறு சொல்லி; பிறர் வாயினின்றும் வெளிப்படுவன நுட்பமான அரிய பொருள்களேயாயினும் தான் எளிதாக, அதனை அறிய வல்லதே அறிவாகும்.

தான் சொல்வன அரியனவாயினும் எளிதாய்ப் பிறரைச் சென்றடைய வேண்டும்; பிறர் கூறுவன அரியனவாயினும் அவற்றின் நுண்பொருளைத் தான் கண்டறிய வேண்டும். எண்பொருள் - எளிமைப்படுத்தியவை. நுண்பொருள் - நுட்பமாய் அறிதற்கு அரியவை. 'செலச்சொல்லுதல்' - நாம் சொல்வன கேட்பவர்க்குச் சென்று சேருமாறு திறமையுடன் சொல்லுதல். பேச்சாளரும் ஆசிரியரும் கருதவேண்டிய திறமை இது.

425. **உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு.**

உலக மக்களைத் தழுவி, அவர்களுடன் கொண்டும் கொடுத்தும் உறவாடி வாழ்வதே ஒளிபொருந்திய அறிவாகும். அங்ஙனம் தழுவி வாழும்போது, சிலபோது மிக மகிழ்தலும் சிலசமயம் மனம் சுருங்கிச் சோர்தலுமின்றி, ஒரே சீராகத் தொடர்பு கொண்டு வாழ்வது அறிவாகும்.

தனி மரம் தோப்பாகாது. மனிதன் உலகில் தனித்து வாழ முடியாது; உலக மக்களுடன் இசைந்து வாழ்வதை இது குறிக்கிறது. உலக மானுட நேயம், சகோதரத்துவம், பழகும் பண்பாடு எனத்தகும் இது அறிவுடைமையால் வருவது.

426. **எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு.**

உலகம் எத்தகைய சிறந்த நடை உடை பாவனையுடன் வாழ்கிறது என அறிந்து, உலகத்துடன் நாமும் கூடி அத்தகைய சிறந்த தன்மைகளுடன் வாழ்வதே அறிவாகும்.

உலக நடையை அறிந்து நாமும் அதற்கு இசைய வாழ வேண்டும். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'. உலகில் சான்றோர், பண்பாளர், நல்லவர், உயர்ந்தோர் செல்லும் - சென்ற நெறியே, நாம் பின்பற்றவேண்டிய வழியாகும். அவ்வுலகம் ஒவ்வாத வழியில் நடக்கக் கூடாது. நூல்கள் காட்டும் வழியில் மட்டுமன்று, உலகைப் பார்த்தும் அதனை ஒட்டி நடக்க வேண்டும். அதுவே அறிவு.

427. **அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**
**அஃதறி கல்லா தவர்.**

அறிவுடையார் என்பவர் எதிர்காலத்தில் வரக்கூடியவற்றை முன்கூட்டி அறியவல்லவரே; அங்ஙனம் அறிய மாட்டாதவர் அறிவில்லாதவர் ஆவர். அறிவிருந்தும் பயனின்றிப் போகும்.

428. **அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்.**

அஞ்சாமை வேண்டுமெனினும், அஞ்சத் தக்கனவற்றிற்கு அஞ்சாதிருப்பது அறிவின்மையாகும். எனவே அஞ்சத் தக்கனவற்றிற்கு அஞ்சுவதே அறிவுடையார் செயலாகும்.

ஆள்பவன் பகையின் படைகண்டு அஞ்சக்கூடாது. தீராத சிக்கல்கள் கண்டும் அஞ்சக்கூடாது. ஆனால் பழிபாவங்களுக்கு அஞ்ச வேண்டும். அஞ்ச வேண்டிய சூழல்களில் அஞ்சித் தவிர்ப்பதே அறிவின் பயன்.

429. **எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவதோர் நோய்.**

வரக்கூடியொரு துன்பத்தையோ, சிக்கலையோ முன்கூட்டி அறிந்து தீர்க்கவல்ல அறிவுடையார்க்கு, அவர் அதிர்ச்சியடையும்படியாக வருவதொரு துன்பம் இல்லை. முன்னரே அறிந்திருத்தலால் அதிர்ச்சி ஏற்படாது; அதனை மாற்றவும் பொறுத்துக் கொள்ளவுமான பக்குவ மேற்படும். அத்துன்பம், அத்தகையானால் முன்னறிந்து வெல்லப்படும்.

430. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

பிறிதெதுவும் இல்லாதவராயினும் அறிவுடையார், எல்லா வுடைமைகளையும் உடையவராவார்; அறிவில்லாதார் எல்லாம் உடையவர்களேயாயினும் யாதொன்றும் இல்லாதவர் ஆவர்.

அறிவினால் எதனையும் படைத்துக்கொள்ளவும் காத்துக் கொள்ளவும் முடியும்; அறிவின்றேல் அவை இரண்டும் இயலா. மேலும் அறிவுடைமை எல்லாவற்றையும் உடைய தன்மைபோல மன எழுச்சி தரும். அறிவின்மை எல்லாமிருந்தும் இல்லாதவர் போன்று பயன் தராது ஒழியும்.

## 44. குற்றங்கடிதல்

தம்மிடம் தோன்றும் குற்றங்களை ஒருவர் அறவே கடிந்து நீக்குதல் வேண்டும். ஆள்வோர்க்கு இது மிக முக்கியமானது. தம் குற்றம் நீக்குவார்க்கு அல்லாமல், பிறர் குற்றம் நீக்குதலை நடைமுறைப்படுத்த முடியாது.

431. செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

செல்வச் செருக்கும் கடுங்கோபமும் சிறுமைப் பண்பும் இல்லாதவர்தம் பெருக்கம் பெருமிதமாய்ச் சிறக்கும் தன்மையினையுடையது.

பெருக்கம் - செல்வம், பதவி, புகழ் போல ஆக்கமாய் அமைவன. சிறுமை - பெரியோர்க்கு ஆகாதன; காமம் போல்வன. அரசர், ஆள்பவர்களிடம் இக்குற்றங்கள் எளிதில் அமையுமாதலின், இவற்றை முதலில் நீக்குக என்பதாம். பெருமித நீர்மை - ஆளுமை மேம்பாடு. குற்றமற்றவர்க்கு இயல்பாக ஒரு பெருமித உணர்வு தலைப்படும். குற்றத்துடன் வரும் பெருக்கத்தில் பெருமிதம் இராது.

432. இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.

செலவு செய்ய வேண்டுமிடங்களிலும் செலவு செய்யாமல் செல்வத்தின் மீது பற்று வைக்கும் கருமித்தனமும் பெருமைதராத, எல்லைமீறிய மான உணர்ச்சியும் மாண்பற்ற, தகுதியில்லாத மகிழ்ச்சியும் அரசர்க்குக் குற்றமாகும்.

இவை அறவே நீக்க வேண்டியன. மாண்பு இறந்த மானம் - எல்லை கடந்து, மானவுணர்ச்சி பேசுவது. மாணா உவகை - காமம் போல்வனவற்றில் எல்லைகடந்த, பெருமகிழ்ச்சியில் திளைப்பது, அதிகாரம் இருந்தால் வரக்கூடியவை இவை. இவற்றை அறிந்து நீக்குதல் ஆள்வோர் கடமையாகும்.

433. **தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பழிநாணு வார்.**

தமக்கு வரும் பழிசொற்களுக்கு வெட்கப்படும் பண்பாளர்கள், தினை அளவினதாகிய மிகச்சிறிய குற்றமே தம்மிடம் ஏற்பட்டதாயினும், அதனைச் சிறிதுதானே என்று கருதாது, பனை அளவினதாகக் கருதி நீக்கத் துடிப்பர்.

பொதுவாகப் பிறருடன் ஒப்பிட்டு 'நான்' என்ன தவறு செய்து விட்டேன்; 'பெரிதாக நான் ஒன்றும் தவறு செய்துவிடவில்லையே' என்று வாதிடுவது மாந்தர் இயல்பு. பண்பாளர் அங்ஙனம் கருதார்.

434. **குற்றமே காக்க பொருளாகக் குற்றமே**
**அற்றம் தரூஉம் பகை.**

ஒருவருக்கு அழிவு பயக்கும் பகை அவர் செய்யும் குற்றமே. அதனால் அவர் தம்மிடம் சிறு குற்றமும் ஏற்படாதிருப்பதையே குறிக்கோளாகக் கொண்டு காக்க வேண்டும்.

ஒருவருக்குப் புறத்தேயிருந்து பகை வருகிறதென்பதைவிட, அவர்தம் குற்றங்களினாலேயே அவரது அழிவு தொடங்குகிறது. 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பது இதனாலேயே.

435. **வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்.**

குற்றம் ஒன்று தன்பால் உண்டாகுமுன்பே, அதனை வராமல் தடுத்துத் தன்னைக் காத்துக்கொள்ளாதவன் வாழ்க்கை எரியும் நெருப்பின்முன் இட்ட வைக்கோல் போர்போலக் கெடும்.

குற்றமொன்று ஏற்பட்டபின் காப்பது என்பது, வைக்கோல் போரில் நெருப்புப் பற்றியபின் அதைக் காப்பது போன்றதாகும். சிறுகுற்றங்கூடத் தன்பால் ஏற்படாதவாறு முன்கூட்டியே ஒருவர் தம்மைக் கண்காணித்துக் கொள்வதுதான் நல்லது.

436. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

முதலில் அரசன் அல்லது ஆள்வோன் தன் குற்றத்தைக் கண்டு அதனை நீக்கிவிட்டுப் பிறகு, பிறரிடம் உள்ள குற்றங்களைக் கண்டு நீக்க வல்லவனானால், அவ் அரசனது ஆட்சிக்கு எவ்விதக் குற்றமும் உண்டாகாது.

ஆள்பவனே குற்றமுடையவனானால், மக்களின் குற்றம் களைதல் கைகூடாது. அவன் குற்றமற்றவனானால், தனது ஆட்சியில் எவ்விதக் குற்றமும் நேராது காக்க முடியும்.

437. செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்.

தனக்கும் பிறர்க்கும் செய்து கொள்ளக்கூடிய நன்மைகளைச் செய்து கொள்ளாது, மிகுந்த பற்றுள்ளம் கொண்ட கருமி சேர்த்த செல்வம், பின்னர் காக்கக் கூடியதாகாமல், வீணாகத் தானே அழிந்து கெடும்.

438. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று.

செல்வத்தைச் செலவிட வேண்டியவற்றில் செலவிடாது, அதில் அதிக ஆசை வைக்கும் கருமித்தனம், குற்றங்கள் எதனுள்ளும் உடன்வைத்து எண்ணக் கூடியதன்று; குற்றத்தில் பெரிய குற்றம் ஆகும் அது.

ஆளும் மேலதிகாரதிலிருப்பவர்க்குச் செல்வத்தில் ஆசையும் அதைப் பயன்படுத்தாது, தமக்கெனப் பதுக்குதலும் இயல்பாக ஏற்படும் குற்றங்களாகும்.

439. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

ஒருவன் எத்துணை உயர்ந்தாலும், எப்பொழுதும் தன்னைத் தானே வியந்து, பெரிதுபடுத்திப் பேசாதிருப்பானாக! அச்செருக்கினால் தனக்கும் பிறர்க்கும் நன்மை தராத செயல்களைச் செய்ய, ஆசை கொள்ளாதிருப்பானாக!

மிகவுயர்ந்த நிலைகளையடைந்தாலும் தன்னை மிகப்பெரிதாக மதித்துக்கொள்ளாமலும், அந்நிலையில் செருக்கினால் நன்மை பயவாத செயல்களைச் செய்துவிடாமலும் ஒருவன் அடக்கமாய் இருக்க வேண்டும்

440. காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.

தான் ஆர்வத்தோடு விழைவனற்றில் தனக்குள்ள ஆர்வக் காதலை யாரும் அறியாமல், ஒருவன் செயற்படுத்த வல்லவனானால், பகைவர்கள் அவனை வஞ்சிக்குமாறு சிந்திக்கும் சூழ்ச்சிகள் பயனற்றுப் போகும்.

அவனுக்கு எதில் ஆசையுள்ளதென அறிந்து அதன்மூலம் அவனை வஞ்சிக்கச் சதி செய்பவர்களுக்கு, ஆர்வ வெளிப்பாடு வழிவகுக்கும். ஏதிலார் நூல் - பகைவர் சிந்தனை, திட்டமிடுதலின் அச்சிந்தனையை நூலென்றார். தன் காதலை - ஆர்வத்தை - ஆசையைப் பலரறிய வெளிப்படுத்துவதும் ஆள்பவர்க்குக் குற்றமேயாம்.

## 45. பெரியாரைத் துணைக்கோடல்

கல்வி, கேள்வி, அறிவுடைமைகளால் ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்ள முடியுமென்றாலும், அறிவு அகவை திறமை பண்புகளில் முதிர்ச்சியுற்ற பெரியவர்களின் துணையையும் தேடிப் பெற்றுக்கொள்ள வேண்டும். அரசர்க்கு மிக இன்றியமையாததாகிய இது, அனைவருக்கும் பொருந்துவதாகும்.

441. அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல்.

அறநெறிகளை அறிந்து முதிர்ந்த அறிவுடைய மூத்தவர்களின் ஆழ்ந்த நட்பைக் கொள்ளும் வழியறிந்து, ஆராய்ந்து தழுவிக் கொள்ளுதல் வேண்டும்.

442. உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

தமக்கு நேர்ந்த துன்பங்களை நீக்கி, இனி நேரக்கூடிய துன்பங்களையும் முன்னதாக அறிந்து வராமல் காக்கவல்ல திறமையுடைய பெரியவர்களைப் போற்றி அவர்க்கு வேண்டுவன செய்து, நட்பாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

443. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பெரியர்களாம் சான்றோர்களைப் போற்றித் தமக்கு வேண்டியவர்களாக ஆக்கிக் கொள்ளுதல், உலகில் அரியன என்று கருதப்படுவனவற்றுள் எல்லாம் அரிய செயலாகும்.

444. தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

தம்மைவிட அறிவிலும் திறமையிலும் முதிர்ந்த மூத்த பெரியவர்களைத் தமக்கு வேண்டியவர்களாகக் கொண்டு வாழ்தல், ஒருவருக்குரிய வலிமைகள் எல்லாவற்றிலும் தலையாய வலிமையாகும்.

445. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

அரசன் தனக்காகச் சிந்தனைசெய்து, ஆலோசனை கூறுபவர்களேயே தன் கண்களாகக் கொண்டு ஆட்சி நடத்த வேண்டியிருப்பதால், அங்ஙனம் சிந்திக்கும் திறன் மிக்கவர்களை, நன்கு ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்வானாக! சூழ்தல் - சிந்தித்தல், ஆலோசனை செய்தல்.

446. தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல்.

அறிவு. ஆற்றல், ஒழுக்கம் என எல்லா வகையாலும் தகுதியுடையவர்களைத் தனக்கு இனமாகக் கொண்டு தானும் ஆராய்ந்து அறிந்து நடக்கவல்ல திறமையாளனைப் பகைவர்கள் செய்யக்கூடிய துன்பம் எதுவுமில்லை.

447. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்.

குற்றங்குறை கண்டவிடத்துத் தம்மை இடித்துக் கூறித் திருத்தவல்ல தகுதியுடைய பெரியவர்களைத் துணையாகக் கொண்டவர்களைக் கெடுக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள் உலகில் யார் உளர்? எவராலும் இயலாது.

448. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

தன்னை இடித்துக் கூறித் திருத்தவல்ல பெரியவர்களின் துணை இல்லாத, பாதுகாவலற்ற மன்னன், பகையாய்த் தன்னைக் கெடுப்பார் யாரும் இல்லாவிட்டாலும் தானே கெட்டழிவான்.

449. முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாஞ்
சார்பிலார்க்கு இல்லை நிலை.

முதல் போட வழியில்லாத வணிகர்களுக்கு, அதனாலாம் ஊதியம் இல்லை. அதுபோலத் தம்மைத் தாங்கவல்ல பெரியவர்களின் சார்பில்லாதவர்களுக்கு அதனாலாம் நிலையான வாழ்வும் இல்லை.

மதலையாம் சார்பு - பெரியவர்களின் தாங்கவல்ல துணை. மதலை - கட்டிடத்தைத் தாங்கும் உத்தரம். வாழ்வில் நிலைபெறுதலும் முன்னேறுவதும் பெரியவர்களின் துணையால் எளிதில் நிறைவேறும். என்னதான் திறமையிருந்தாலும் பெரியவர்களின் நற்சான்றும் பரிந்துரையும் தேவைப்படுகின்றனவே!

450. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

துணையாகக் கூடிய நல்லவர்களோடு மனம் வேறுபட்டு, அவர் நட்பைக் கைவிடல், பலரோடு பகை கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமையாய் முடியும்.

## 46. சிற்றினம் சேராமை

கீழ்மக்களுடன் சேராதிருத்தல். ஒருவனது அறிவு அவன் மனத்துளதா? சாரும் இனத்துளதா? இவ்வாறு ஆராயின், மனத்திலுள்ளதுபோல் தோன்றினாலும், சாரும் இனத்தினால் அது மாறும் தன்மையுடையதென்பது புலப்படும். அதனால் கீழ்மக்களோடு சேராதே என எச்சரிக்கப்படுகிறது.

451. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

பெருமைமிக்க பெரியோரது மனம் சிறியார் இனத்தோடு நட்புக் கொள்ள அஞ்சும். சிறுமைமிக்க சிறியோர் மனமோ, சிறியாரைக் கண்டவுடன், அவர்களைத் தன் சுற்றமாக நினைத்து, உடனே அவர்களுடன் சேர்ந்து விடும்.

452. நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்பது ஆகும் அறிவு.

தான் சேர்ந்த நிலத்தின் இயல்பாக, நீர் திரிந்து அந்நிலத்தின் நிறமும் சுவையும் உடையதாய் மாறும். அதுபோல, மாந்தர்க்குத் தாம் சேர்ந்த இனத்தினது இயல்பால் தம் அறிவு திரிந்து, அவ்வினத்தினது தன்மைத்தாகும். சிற்றினத்தைச் சேர்ந்தால் சிறுமைப் பண்பே உண்டாகும். நல்லவனும் கெட்டுப்போவான் என்பது கருத்து.

453. மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல்.

மக்களுக்குப் பொதுவான 'உணர்ச்சி' என்பது அவரவர் மனத்தால் அமைவதாகும். ஆனால் அவர்களை, இத்தகையவர் என்று சொல்லும் சொல், அவர்தம் இனத்தாலேயே அமைவதாகும். ஒருவரை அவர் சேர்ந்திருக்கிற பழகுகின்ற, அடிக்கடி உறவாடுகின்றவர்களை வைத்துத்தான், உலகம் மதிப்பிடும்.

454. மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துளது ஆகும் அறிவு.

ஒருவனது அறிவு அவனது மனத்திலுள்ளது போல வெளியே தோன்றி, அவன் சார்ந்துள்ள இனத்துக்கு ஏற்ப அமையும்.

அவரவர் மனத்திலிருந்துதான் அறிவு வெளிப்படுகிறதென்பது உண்மையே. ஆனால் அவன் பலருடன் பழகப்பழக அந்த இனத்துக்குளதாகிய அறிவே அவனதறிவாகும். 'உன் நண்பன் யாரென்று சொல், உன்னைப்பற்றித் தெரிந்து கொள்கிறேன்' என்ற ஆங்கிலப் பழமொழியை ஒப்பிடுக. இனத்ததறிவே இயல்பான அறிவாகிவிடும்.

455. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

ஒருவன் மனம் தூயவனாதலும், செய்யும் செயல் தூயவனாதலும் ஆகிய இவை இரண்டும், அவன் சாரும் இனம் தூயதாக அமைதலைப் பொறுத்தே உண்டாகும்.

மனம் சார்ந்ததன் வண்ணமாகும் இயல்பினது. ஆதலால் இனம் தூயதானால் மனம் தூயதாகும். மனம் தூயதானால் செயல் தூயதாகும்.

456. மனந்தூயார்க்கு எச்சம் நன்றுஆகும் இனந்தூயார்க்கு
இல்லைநன்று ஆகா வினை.

மனம் தூயவரானவர்க்கு மக்கள் நல்லவர்களாக அமைவர்; இனம் தூயவரானவர்களுக்கு அவர்கள் செய்யும் செயலெல்லாம் நல்ல பயனுடையனவாகவே முடியும்.

முன்னைய குறளுடன் நெருங்கிய தொடர்புடையது இக்குறள். இனம் தூயதானால் செயலும் தூயதாகுமென்றார். தூயதாதல் மட்டுமன்றி எல்லா முயற்சியும் நன்மை பயக்குமாறு வெற்றியாய் முடியும் என்று இங்கு கூறுகிறார். அதுபோல இனந் தூயதானால், மனம் தூயதாதல் மட்டுமன்றி,

நன்மக்கட்பேறும் வாய்க்குமென்று இங்கு கூறுகிறார். மனம் தூயவர்களுக்கு மக்கள் நல்லவர்களாக அமைவது, இயற்கை விதிக்குட்பட்டது.

457. **மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்.**

மனம் நல்லதாயின் நிலைபெற்ற மக்களுயிர்க்கு ஆக்கத்தைக் கொடுக்கும்: இனம் நல்லதாயின் நற்பெயர் புகழனைத்தையும் கொடுக்கும்.

மனநலத்தால் அறவழி நிலைக்க உயிர் ஆக்கம் பெறும். இனநலம் நற்பெயர் தருதலால், அதன்வழி புகழனைத்தும் வாய்க்கும். 'உயிர்க்கு ஆக்கம்' - அறம் உயிர்க்கு வலு, ஆற்றல், ஆக்கம் தரும் என்பது வள்ளுவம்.

458. **மனநலம் நன்குஉடையர் ஆயினும் சான்றோர்க்கு**
**இனநலம் ஏமாப்பு உடைத்து.**

மனநலம் இயல்பாக மிகவுடையராயினும் சான்றோர்களுக்கு இனநலமும் அமைவது அதற்குப் பாதுகாப்பான துணையாகும். மனநலம் இயல்பாகவே வாய்த்துளது என்றாலும் இனநலமும் அமைந்தால், அம்மனநலம் காக்கப்படும்.

459. **மனநலத்தின் ஆகும் மறுமைமற்று அஃதும்**
**இனநலத்தின் ஏமாப்பு உடைத்து.**

இயல்பாய் அமைந்த மனநலத்தினால் மறுமையிலும் நன்மை உண்டாகும். அம்மனத்தின் நன்மையும் இனநலத்தினாலேதான் பாதுகாவலாய்க் கட்டிக் காக்கப்படுவதாகும்.

மனநலமும் இனநலமும் தொடர்ந்து பரம்பரைக்கும், மறுமைக்கும் பயன் தருவன.

460. **நல்லினத்தின் ஊங்குந் துணைஇல்லை தீயினத்தின்**
**அல்லல் படுப்பதூஉம் இல்.**

நல்லவர் இனத்தைக் காட்டிலும் ஒருவனுக்குத் துணையாவது பிறிதில்லை; தீயவர் இனத்தைவிடத் துன்பப்படுத்துவதும் வேறொன்றில்லை.

மனநலத்தை, இனநலம் பாதிக்கும்; ஆக்கும்; காக்கும்; மாற்றவும் செய்யும். இரண்டும் ஒன்றையொன்றும் பாதிப்பன. அதனால் மனமும் இனமும் பற்றியே இவ்வதிகாரம் முழுவதும் பேசப்படுகிறது.

## 47. தெரிந்து செயல்வகை

ஓர் அரசன் அல்லது அரசு ஒரு காலத்தில் நன்கு அனுபவப்பட்டுத் திட்டமிட்டுச் செயலில் இறங்க வேண்டும். ஒரு செயலை - தொழிலோ, வணிகமோ, பிறவோ எதுவாயினும் அதை முதலில் நன்கு தெரிந்து கொண்டு அதாவது நன்கு ஆராய்ந்து, செய்யும் நெறிமுறையறிந்து செய்ய வேண்டும். திட்டமிட்டுக் கொண்டு ஒன்றைத் தொடங்கும் இன்றைய சூழலை இதனுடன் ஒப்பிடலாம்.

461. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

ஒரு செயலைத் தொடங்குங்கால் அதற்காகும் பொருட்செலவையும், அதனால் கிடைக்கும் பொருள் வருவாயையும் கணக்கிட்டுக் கொண்டு, இறுதியில் அவற்றை ஒன்றினொன்று கழித்த வழிக்கிடைக்கும் நிகர ஊதியத்தையும் நன்கு சீர்தூக்கிப் பார்ப்பது, நன்மை மிகுதியாகக் கிடைக்குமெனில், அச் செயலைத் தொடங்குக. எச்செயலுக்கும் பொருந்துமாறு குறள் நடை உளது.

462. தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.

ஒரு காரியத்தைத் தொடங்குங்கால், அதை முன்பே நன்கு தெரிந்தவராய், அதற்குத் துணையாகத் தக்கவரென்று தான் சேர்த்துக்கொண்ட குழுவுடன், செய்யப்போகும் வினையை ஆராய்ந்து தாமாகவும் எண்ணிச் செய்யவல்லவர்களுக்கு, எய்துதற்கு அரிய பொருளென்று எதுவுமில்லை.

463. ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

சில சமயம் பெரிதாக ஊதியம் கிடைப்பதுபோல முதலில் தோன்றி, பிறகு கையிலிருந்த முதலையும் இழக்க நேரும். அத்தகைய காரியங்களைச் செய்ய அறிவுடையவர்கள் ஊக்கம் காட்டமாட்டார்கள். வரப்போகிற ஊதியத்தைக் கற்பனை செய்துகொண்டு, இருப்பதையும் இழப்பது, அதனை நன்கு ஆராயாமல் செய்வதன் விளைவாகும்.

464. தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்.

தமக்குத் தெரியாத பழக்கமில்லாத, அதில் தெளிந்த அறிவில்லாத ஒரு செயலை, பிறரால் இகழப்படுதல் என்ற குற்றத்திற்கு அஞ்சுபவர்கள்

தொடங்க மாட்டார்கள். தொடங்கிவிடின் இழப்பு வேறு; அதனால் உலகோரால் பழித்துப் பேசப்படும் இழிவு வேறு.

465. வகையறச் சூழாது எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு.

பகையரசர் மீது படையெடுக்க எண்ணும் மன்னன், அங்ஙனம் படையெடுத்தால் ஏற்படக்கூடிய விளைவுகள் அனைத்தையும், ஒன்று விடாமல் சிந்தித்தே புறப்பட வேண்டும். அங்ஙனம் தீர ஆராயாது புறப்படுதல், பகைவரை எச்சரிக்கை செய்து, அவர்கள் தங்களை மேன்மேலும் வலிமைப்படுத்திக்கொள்ள உதவும் ஒரு வழியாகும்.

'பாத்திப்படுத்தல்' ஒரு மரபுத்தொடர். தண்ணீர் பாயும் பாத்தியருகே விதையை ஊன்றினால், அது எளிதில் வளர்வது போல, பகைவர் எளிதில் வளர வழி வகுப்பதாகும்.

466. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

ஒரு செயலில் செய்யத் தகாதனவற்றைச் செய்தாலும் அக்காரியம் கெடும்; செய்யத் தக்கனவற்றைச் செய்யாமையாலும் கெடும்.

ஆராய்ந்து தொடங்குதற்குரிய அனைத்தையும் தொகுத்துப் பொதுப்படக் கூறி, எக்காரியத்திற்கும் பொருந்துமாறு சொல்கிறார். ஆட்சி, தொழில், வணிகம், பிற முயற்சிகள் எது செய்யத்தகும், எது தகாது எனும் இரண்டையும் நுட்பமாய் அறிந்து செயற்பட வேண்டும்.

467. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

செய்யத்தகும் எக்காரியத்தையும் தொடங்கும் முன், நன்கு சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து அதன்பின் தொடங்குக! அவ்வாறல்லாமல் முடிவு செய்து தொடங்கியபின், அதுபற்றிச் சிந்தித்துக் கொள்ளலாம் என்பது தப்பாகும்.

திருவள்ளுவர் எதனையும் ஒரு வரையறை விதிபோல, சூத்திரம்போல, செயலாற்றுதலுக்கான இலக்கணமாகச் சொல்வதால், எச் சூழலிலும் அது கைகொடுத்துதவும் வழிகாட்டியாகிறது.

468. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

வெற்றிதரும் வழி அறிந்து முயலாமல் தப்பான வழியில் கடும் முயற்சி செய்து வருந்துகிற வருத்தம் பலரும் துணையாக நின்று காப்பாற்ற முயன்றாலும் கெட்டழியும்.

ஊற்றுள்ள இடத்தில் தோண்டாமல், கடும்பாறைப் பகுதியை மிக முயன்று தோண்டிப் பயனென்ன? பலர் வெற்றி கிடைக்கும் வழி தெரியாமல், வேறு இடத்தில் மிக முயன்று தோற்று, முயற்சியைப் பழிக்கின்றனர். சிலர் விரைந்து செல்வராதற்குக் காரணம் அவர்கள் தமக்கு வெற்றிதரும் துறையை, வழியை, தொழிலைக் கண்டு கொண்டு, முயல்வதிலேதான் இருக்கிறது.

469. நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை.

யாருக்கு நன்மை செய்ய நினைத்தாலும் அவரவர் பண்பை ஆராய்ந்துதான், நன்மை செய்ய வேண்டும். அங்ஙனம் அவரவர் குணங்களுக்கு ஏற்பச் செய்யாதவிடத்து, நன்மை செய்வதனாலும் தவறுண்டாகும்.

ஒரு தன்னலக்காரனுக்குப் பதவி உயர்வு எளிதில் கிடைக்கச் செய்தால், அங்ஙனம் உதவியவனையே அவன்கீழே தள்ளிவிட முயலக்கூடும் அல்லவா? எந்த ஓர் ஊழியருக்கும் அவரது ஊழியம், கடமையுணர்ச்சி, வேலைத்திறன், வாடிக்கையாளர்களிடம் பரிவும் பண்பும் காட்டுதல் போன்றவற்றை அளவுகோலாக வைத்து ஊதிய உயர்வு அளிக்கும் நாடுகள் செல்வத்தில் கொழிக்கின்றன. அதைக் கருத்திற் கொள்ளாது பதவி ஆசையால் நன்மைகளைச் செய்வதால், நம்நாட்டுப் பொதுத்துறை நிறுவனங்கள் சீரழிந்து, இழப்பில் நடக்கின்றன.

470. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மோடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

காரியங்களைத் தொடங்கும்போது உலகம் தன்னை இகழாத வகையில், தன் தகுதிக்கு ஏற்றவற்றையே ஒருவன் நன்கு எண்ணிச் செய்தல் வேண்டும். தன் தகுதிக்குப் பொருந்தாதவற்றை ஒருவன் செய்ய முற்பட்டால், உலகம் அதை ஏற்றுக் கொள்ளாது.

கைவசம் பணமெதுவும் இல்லாதவன் நிதித்துறை நிறுவனம் எனத் தொடங்கி, கோடிக்கணக்கில் செல்வம் சேர்த்துவிடலாம். முடிவு என்ன ஆகிறது?

# 48. வலியறிதல்

போர் செய்யக் கருதினாலும் தொழில் தொடங்க எண்ணினாலும் கொடை செய்ய நினைத்தாலும் தன் வலிமை, மாற்றார் வலிமை, தன்னிடமுள்ள பொருள் வலிமை என எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்து, அளந்து அறிதல்.

471. **வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்.**

போர் செய்யக் கருதும் அரசன் தன் வினையினது வலிமையையும் அதனைச் செய்து முடிக்க வேண்டிய தனது வலிமையையும் தன்னை எதிர்த்து நிற்கும் பகைவனது வலிமையையும் இருவர்க்கும் துணையாவார் வலிமையையும் சீர்தூக்கிப் பார்த்துத் தன் வலிமை கூடுதலாக இருக்குமாயின் அவ்வினையைச் செய்ய வேண்டும்.

'வினை' என்பது போரை மட்டுமே குறித்த காலம் உண்டு. ஆயினும் போர் பற்றிய செரு, ஞாட்பு போலும் சொற்களை ஆளாது, 'வினை' எனப் பொதுப் பொருள் தரும் சொல்லையே ஆள்வதால், இது எவ்வினைக்கும் பொருந்துகிறது.

472. **ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்.**

தனக்குச் செய்ய இயலும் காரியத்தையும் காரியத்திற்கு அறிய வேண்டுவனவாகிய திறன்களையும் அறிந்து, பிறகு அச்செயலிலேயே தன் கவனம் முழுவதையும் வைத்து, அதுவே கண்ணும் கருத்துமாய் நடப்பார்க்கு வெற்றியாய் முடியாத காரியம் இல்லை.

473. **உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்.**

தமக்கு இவ்வளவுதான் வலிமையென்று அதனை அளந்தறியாராய், மன எழுச்சி தூண்ட ஒரு காரியத்தைத் தொடங்கி, அதனை முற்றச் செய்து முடிக்க மாட்டாமல் இடையே கெட்டொழிந்தவர் பலராவர்.

போர் பற்றியவையாயினும் ஏனைய செயல்களுக்கும் பொருந்துமாறு, குறள்நடை யாவும் உள. ஊக்கமுடைமையை மிக வற்புறுத்தும் திருவள்ளுவர், தமது உடல் வலிமை, பொருள் வலிமை, பிற வலிமைகளுக்கு ஏலாதவற்றில் தவறாக முனைந்து செயற்படுவதை இதில் தடுத்து மொழிகின்றார்.

474. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

தனக்குரிய ஆற்றலுக்குள் அடங்கி, மற்றவர்களோடு பொருந்திக்கூடி வாழாமல், தனக்குரிய வலிமையது அளவையும் அறியாமல் தன்னையும் மிகப் பெரிதாக எண்ணி வியந்து, செருக்குக் கொள்பவன் விரைந்து கெட்டுப் போவான்.

475. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

மயில் தோகை மிக நொய்ம்மையானது; கனமே இல்லாதது. அத்தகைய பீலியாகிய பண்டத்தை அளவின்றி மிகுதியாக ஏற்றினால், அதனை ஏற்றிய வண்டியும் அச்சு முறிந்து போகும்.

தான் மிக வலியவனாகவும் தனக்குப் பகையாவார் வலிமையற்ற எளியவர்களாகவும் இருக்கலாம். ஆயினும் அவர்கள் தொகை கூடிக்கொண்டே போனாலும், தனக்கு எதிரானவை மிக வலிதாக வளர்ந்து கொண்டே போனாலும் தான் நிலைபெறுதல் அரிது. இதைப் 'பிறிதுமொழிதல் அணி' என்பது இலக்கணம். எக்காலத்திற்கும் எச்சூழலுக்கும் ஏற்றிப் பார்க்க, இவ்வாறு கூறுவது பயன்படுகிறது. திருக்குறள் எக் காலத்திற்கும் பொருந்துவது இதுபோன்ற உத்திகளாலேயாம்.

476. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதுஇறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்.

ஒரு மரத்தினது உச்சிக்கு ஏறியவர், அது தாங்கும் அளவறிந்து நில்லாது, அதன் சிறிய பலமற்ற உச்சிக் கொம்பற்கே, மேன்மேலும் ஏறிச் சென்றால், அது ஒடிந்து விழ, உயிருக்கு இறுதியாய் முடிந்துவிடும்.

எதிலும் தாம் செல்லலாம் எல்லையளவும் செல்வதே நல்லது. அவரவர் தத்தமக்குரிய எல்லைகளைத் தெரிந்து செயற்பட வேண்டும். இது மரமேறுவதைப் பற்றிச் சொல்லவந்ததன்று. அதை உவமையாக்கி, அதன்மூலம் எல்லைகடந்து ஒருவன் நடந்துகொண்டு அழியலாகாது என்பது இது. இவ்வாறு பிறிதொன்றை உணர்த்துவதால் இதுவும் பிறிதுமொழிதலணி.

477. ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

ஈதலைப் போற்றும் அறநெறியின்படி, தனக்குரிய பொருளினது அளவை அறிந்து அதற்கேற்ப ஈக; அது பொருட்செல்வத்தைப் பேணிக்காத்து, மேன்மேலும் ஈந்து வாழ்வதற்கான நெறியாகும்!

இதுகாறும் போர் கருதியும் அதனையே பொதுமைப்படுத்தியும் கூறியவர், இனிப் பொருள் அடிப்படையில் வலியறிய வேண்டியதன் அவசியத்தைக் கூறுகிறார். அளவறிந்து ஈந்தால், பொருட்செல்வத்தைக் காத்துக் கொள்ளலாமாதலால், மேன்மேலும் கொடுத்துதவ அது ஏற்புடையதாகும். ஈயாதவரும் ஈயும் மன உந்துதல் பெறுமாறு ஈகை அதிகாரம் பேசுகிறது. இங்கு மேன்மேலும் ஈயவேண்டுமேல், பொருட்செல்வம் வளர வேண்டும். அதற்கு ஏற்ப அளவறிந்து கொடுத்து, தானும் வளர்ந்து, மேலும் ஈய வழி சொல்கிறார்.

478. **ஆகாறு அளவிட்டிது ஆயினும் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை.**

பொருள் வரும் வழியினது அளவு சிறிதாயினும், அது போகும் வழி, அதனைவிட அகலமாக ஆகாதவரை கேடு இல்லை.

வருமானத்திற்குக் குறைவாகவோ அல்லது வருமானத்திற்கு அளவாகவோ செலவு அமையின் கேடில்லை; செலவு வரவைவிடக் கூடுமாயின் கேடாகும்.

479. **அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்.**

தனக்குள்ள வருமானத்தின் அளவை அறிந்து அதற்கேற்ப வாழாதவனின் வாழ்க்கை வசதிகள், முதலில் மிகச்சிறப்பாக உள்ளனபோல ஆடம்பரமாய் வெளியே தோன்றி, பிறகு உண்மையில் அவைகள் எவையும் இல்லை என அறியப்பட்டு, இறுதியில் எவ்விதச் சிறப்புமின்றிக் கெடும்.

முதலில் ஆடம்பரமாய்ச் செலவு செய்தலால் 'உளபோல'த் தோன்றும். கைப்பொருள் கரைந்து கடன்தொகை பெருகிய பின்பு வெளிப்படும்போது 'உளபோல'த் தோன்றியவை பொய் என்பது தெரியவரும்.

480. **உளவரை தூக்காத ஒப்புர வாண்மை**
**வளவரை வல்லைக் கெடும்.**

தன்னிடமுள்ள செல்வத்தினது எல்லையை அளந்தறியாது செய்யும் ஒப்புரவுச் செய்கையால், ஒருவனது செல்வத்தின் அளவு மிக விரைந்து கெடும்.

ஈகையும் ஒப்புரவும் மேலானாலும் அளவறிந்து செய்வனவே தனக்கும் பிறர்க்கும் நெடுங்காலத்திற்குப் பயன்படும். முன்பு 'ஈதல் இயையாத போது சாதல் இனிது' (230) எனவும் 'தன்னை விற்றாயினும் ஒப்புரவு செய்க' எனவும் (220) அவ்வறச் செய்கையின்பால் தூண்டுதற்கு வற்புறுத்தினார். இங்கு

அளவறிதலை வற்புறுத்துகிறார். இதுவே மேன்மேலும் ஈவதற்கும் ஒப்புரவுப் பொதுநலம் செய்தற்கும் பயன்படும் நெறியாகும்.

## 49. காலமறிதல்

எவ்வளவு வலிமை, ஆற்றல், வசதி படைத்தவரானாலும் காலமறிந்து ஒரு காரியம் செய்யாவிட்டால் பயன்படாது. இது போர்த்தொழிலுக்கு மட்டுமன்றிப் பொதுவாகவும் கருதப்படவேண்டியதாகும். 'ஆடிப்பட்டம் தேடிவிதை', 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்', 'வெயிலுள்ள போதே உலர்த்திக் கொள்' எல்லாம் காலமறிதல் அல்லவா?

481. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

தன்னைவிட வலிமையுள்ளதாகிய கோட்டானைப் பகற்போதில், காக்கை வென்று விடும். அதுபோலத் தமது பகையை வெல்ல விரும்பும் வேந்தர்களுக்குக் காலம் பார்த்துப் போரிடுதல் இன்றியமையாதது.

வலிமை குறைந்தவராயினும், காலம் கைகொடுத்தால் வெல்லுதல் எளிது. கோட்டானுக்குப் பகலில் கண்தெரியாது; அதனால் காக்கை அதை வெல்லுதல் எளிதாகும்.

482. பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.

எக்காரியத்தையும் அவ்வவற்றிற்குரிய தக்க காலத்தொடு பொருந்தச் செய்து முடிக்க வேண்டும். அங்ஙனம் காரியமாற்றுதல், ஓரிடத்தும் நில்லாத செல்வத்தைத் தன்னிடமிருந்து நீங்கிப் போய்விடாமல் கட்டி வைக்கும் கயிறாகும்.

483. அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

ஒரு செயலை முடித்தற்குரிய கருவிகளோடு, தக்க காலமும் அறிந்து செய்தால், செய்து முடித்தற்கியலாத அரிய செயல்கள் என்று உலகில் எவையும் உளவோ? இல்லை; எக்காரியத்தையும் முடிக்கலாம்.

484. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

செய்தற்குரிய காலத்தை ஆராய்ந்து அறிந்து, அதனைத் தகுந்த இடத்தொடும் பொருந்தச் செய்ய வல்லனாயின், அவன் உலகம் முழுவதையும் தானே ஆளக் கருதினாலும் அது அவனுக்குக் கைகூடும்.

ஞாலம் கைகூடுதல் - உலகில் எல்லோரினும் மேம்பட்டு வாழ்தல். தக்க சமயம் என்பது போனால் திரும்ப வராது; பிறகும் அதுபோல் அமையாது.

485. காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.

உலகையே வெல்லக் கருதுபவர், மனம் அசையாது தக்க காலம் வருமளவும் அதனையே எதிர்பார்த்துப் பொறுமையாய்க் காத்திருப்பர்.

பகையை வெல்லுதலில், அரசியலில் எல்லாம் இது நடைமுறையாகும். ஞாலம் கருதுதல் - எதனையும் வென்றுவிட எண்ணுதல்.

486. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து.

வலிமையால் மன எழுச்சிமிக்கவன் காலம் பார்த்து ஒடுங்கியிருக்கும் இருப்பு, போரிடும் இயல்புடைய ஆட்டுக்கடா தன் பகைமீது தாக்குதற்பொருட்டுச் சிறிது பின்னே கால்வாங்கும் தன்மைத்தாகும். பின்னே கால்வாங்குதல் அதிக வேகமாக வலுவுடன் முன்னே பாய்ந்து தாக்குதற்கேயாம்.

487. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

நுண்ணிய அறிவுடையவர்கள், பகைவர்கள் தங்களிடம் மிகைப்பட நடந்து கொண்டால், அப்பொழுதே விரைந்து தம் சினத்தை வெளிக்காட்டிப் புறத்தே வியர்க்கமாட்டார்; அவர்களை வெல்லுதற்கான காலத்தினை எதிர்பார்த்து, அது வருந்துணையும் மனத்துக்குள்ளே வெகுண்டு கொண்டிருப்பர். வியர்த்தல் - புழுங்குதல்.

488. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.

வலிமை குறைந்தவழி, பகைவரை நேரில் கண்டால், அவர்களைத் தலையில் சுமக்க (அவர்களுக்குப் பணிந்து செல்க); அவர்களுக்கு வலிமைகுன்றி, அழித்துவிடத் தக்க காலம் நெருங்கும்போது, கொன்று தலைகீழாக அவர்களை உருட்டிவிடுக!

அரச தந்திரங்களும் ஆள்வோர்க்கு வேண்டுமாம். அறத்துப்பாலினின்றும் வேறுபடுமிவை. தனிமனித அறங்களின் வேறுபட்டு, ஆள்வோர்க்கும் ஆள்வினைஞர்க்கும் தேவைப்படுபவை. 'தலையில் தூக்கிக் கொண்டாடுகிறான்' 'தலை உருளப் போகிறது' என்ற உலக வழக்குகளை ஒப்பிடுக. மக்கள் வழக்கைத் தழுவுதலை, வள்ளுவநடையிற் காணலாம்.

489. **எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற்கு அரிய செயல்.**

தமக்கு எய்துதற்கு அரிய காலம் வந்து அமையுமானால், அங்ஙனம் கைகூடிய அப்பொழுதே, அது நீங்குவதற்கு முன்பாகத் தம்மால் செய்தற்கு அரிய காரியங்களைச் செய்து முடித்துவிடுக!

நாட்டு ஆட்சியே கைவரப்பெறுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். தாம் நினைக்கிற நற்செயல்களை, குறிக்கோளை உடனே நிறைவேற்றிவிட வேண்டும்.

490. **கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்**
**குத்துஒக்க சீர்த்த இடத்து.**

காலம் பார்த்து அமைதியாய்க் காத்திருக்க வேண்டிய காலத்தில், மடைவாயில் கொக்குப் போல ஒடுங்கிக் காரியமே கண்ணாக இருந்திடுக! வினை செய்தற்கு வாய்ப்பான காலம் வந்தபோது, அக்கொக்கு மீனைக் குத்துமாறு போலத் தப்பாமல் விரைந்து செயலாற்றுக!

## 50. இடனறிதல்

வலிமையும், காலமும் அறிந்தமை போல, வெற்றியடைதற்குத் தக்க இடமும் அறிந்து செயலாற்றுதல். இடம் என்பது தகுந்த நிலத்தை மட்டுமன்றி, தக்க சூழ்நிலையையும் குறிக்கும்.

491. **தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**
**இடங்கண்ட பின்அல் லது.**

முழுவதும் வெற்றியாக முடித்தற்குத் தக்க இடங்கண்ட பிறகல்லது, முன்னதாக எச்செயலையும் தொடங்காதீர்! அவ்வாறல்லாமல் தொடங்கினால் என்ன ஆகிவிடும் என்று இகழாதீர்.

492. **முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்**
**ஆக்கம் பலவும் தரும்.**

பகையை வெல்லக் கருதும் வலிமையினையுடைய அரசர்களுக்கும், தங்களுக்குரிய அரண்களை நன்கு அமைத்துக் கொள்ளுதலால் ஆகின்ற ஆக்கம் பல பயன்களைக் கொடுக்கும்.

வலிமையிருந்தாலும், அரணும் முக்கியம். எதிரியை வெல்லுதற்காம் இடமறிதலேயல்லாமல், தமக்குக் காப்பாக அமையும் இடனறிதலும் வேண்டும்.

493. ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.

பகைவர்களை வெல்லக்கூடிய இடமறிந்து, அவர்களிடமிருந்து தம்மைக் காத்துக் கொண்டு, பக்குவமாய்ச் செயற்படுவார்களானால், வலிமை இல்லாதாரும் வலிமை பெற்றுப் பகைவரை வெல்வர்!

494. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

பகைவரைச் சூழ்ந்து முற்றுகையிடுதற்குத் தகுந்த இடத்தை அறிந்ததும், அவர்களும் எதிர்பாராத நிலையில் மிக விரைந்து நெருங்கி நின்று முற்றுகை இடுவாராயின், வெல்லலாம் என எண்ணி உள்ளே இருந்தவர்கள் தம்மைக் காத்துக்கொள்ள இயலாமல் தம் எண்ணத்தை இழப்பர்!

495. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

ஆழமான நீர்நிலையுள் இருக்கும் முதலை அந்நீரினுட் புகும் பிற உயிர்களையெல்லாம் வெல்லும்; அந்நீரினின்றும் அது நீங்கித் தரைக்கு வந்தால், பிற உயிர்கள் யாவும் அதனை வெல்லும்! அதுபோலத் தமக்குப் பொருந்திய இடமாயின் பகைவரை எளிதில் வெல்வர்; பொருந்தாத இடத்துச் சென்றால் பகைவரால் எளிதில் வெல்லப்படுவர்.

496. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

வலிமைமிக்க சக்கரங்களையுடையதாயினும் பெரிய தேர்கள் கடலின் கண் ஓடமாட்டா; கடலில் ஓடவல்ல நாவாய்களும் நிலத்தின்கண் ஓடமாட்டா! இடமறிதலோடு, இடத்திற்கேற்ற கருவிகளுமறிந்து செயற்படவேண்டும்.

497. **அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை எண்ணி இடத்தால் செயின்.**

பகைவரை வெல்லுதற்காம் வழிகளைக் குறைவறச் சிந்தித்து, தக்க இடமும் அறிந்து அதனோடு பொருந்தச் செய்வாராயின், அஞ்சாமை ஒன்றே போதும் வெல்வதற்கு; அஃதல்லாமல் வேறு துணை வேண்டுவதில்லை.

498. **சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான் ஊக்கம் அழிந்து விடும்.**

பெரிய படையையுடைய அரசனேயாயினும், சிறிய படையையுடைவனுக்குப் பாதுகாப்பான இடத்திலே சென்று போர் செய்வானானால், தன் மன எழுச்சி குன்றிப் பெருமை கெடுவான். பெரிய படையினனாயினும், இடமறியாது சென்றால் தோற்க நேரும்.

499. **சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர் உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.**

பாதுகாப்பான அரண்களும் பெருமையும் இல்லாதவராயினும் பகைவர்கள் வசிக்கின்ற அவர்களது நிலத்தின்கண் சென்று தாக்கி வெல்லுதல் அரிதாகும். தம் நிலத்தைக் காக்க உயிரைவிட்டுப் போராடுவராதலின், பெரும் படையும் உடைய நேரிடும். மேலும் அது அவர்களுக்குப் பழக்கப்பட்ட பொருந்திய இடமென்பதை நினைவில் கொள்க என்பதாம்.

500. **காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா வேலாள் முகத்த களிறு.**

நேர் நிற்றலை அஞ்சாத, வேல்கள் பலவற்றால் அழுத்தப்பட்ட முகத்தையுடைய களிறுகளேயாயினும், அவை கால்கள் உள்ளே அமிழும் தன்மையுடைய சேற்று நிலத்தில் அகப்பட்டால், சிறு நரிகளால்கூடக் கொல்லப்படும்.

எவ்வளவு வலிமையுடையாரும் தமக்குப் பொருந்தாத இடத்திற்குச் சென்றால், தம்மைவிட மிக எளியராலும் தோற்க நேரும். 495, 496, 500 ஆகிய குறள்கள் பிறிதுமொழிதல் அணியின. இவ் உவமைகளை வைத்து இவற்றால் உவமிக்கத்தக்க பொருள்கள் என்று எதனையும் ஒப்பிடலாம். பொதுமைப் படக் கூறப் பயன்படுதலால், வள்ளுவர்க்கு இவ்வணிபடக் கூறுவதில் ஈடுபாடு உண்டு.

# 51. தெரிந்து தெளிதல்

தெரிந்து தெளிதலும் இதற்கடுத்த தெரிந்து வினையாடலும் தொடர்புடையன. தெரிந்து தெளிதல் -/தனக்குக் கீழே பணிசெய்யக் கூடிய அமைச்சர், தூதுவர் முதலானோரை, அரசன் அவர்தம் பண்பு, அறிவு, திறமை முதலியவற்றால் ஆராய்ந்து அவர்பால் நம்பிக்கை வைத்துப் பணியில் அமர்த்துதல், தெரிந்து வினையாடல் - அவர்களின் பணியினது நன்மை தீமைகளைத் தொடர்ந்து ஆராய்தலும், அவர்களை அவரவர் திறமை, தகுதியறிந்து வேலை வாங்குதலும் ஆம்.

ஒரு செயலை முன்கூட்டி நன்கு ஆராய்ந்து திட்டமிட்டுக் கொண்டு தொடங்குதல் தெரிந்து செயல்வகையில் கூறப்பட்டது. பின்னர் வலிமை, காலம், இடமறிந்து செயற்படும் வகைகள் கூறப்பட்டன. பெரியாரைத் துணைகோடலும் சிற்றினம் சேராமையும் இங்ஙனம் ஆள்வினைகளை மேற்கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டியனவே. தொடர்ந்து வினை செயல்வகை வரை வருவன யாவும் ஆட்சி, பொது நிருவாகம், மனிதர்களைக் கொண்டு ஆளுதல் (General Management, Public Administration, Man management etc.); என அரசர்க்கு மட்டுமன்றி அனைவர்க்கும் பயன்படுமாறமைந்தவையே. இன்றைய 'ஆள்வினை இயலில்' (B.B.A., M.B.A.) பாடமாக வைத்து, இளைஞர்கட்குக் கற்பிக்குமாறு அமைந்தவை இவை.

501. **அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்**
**திறம்தெரிந்து தேறப் படும்.**

ஆள்வோர் தமக்குக் கீழே பணியில் அமர்த்துபவர்களை நான்கு வகை உத்திகளின் அடிப்படையில் ஆராய்ந்து தெளிதல் வேண்டும். அறம் தவறுபவனா, பொருளாசை உள்ளவனா, இன்பத்தில் ஆசைமிக்கவனா, தன் உயிருக்காக அஞ்சுபவனா என ஆராய்ந்து, இவற்றால் எவன் சற்றும் மனம் திரியாதிருக்கின்றானோ, அவனையே ஆட்சிப் பணிகளில் அமர்த்த வேண்டும். அரசனுக்கோ அல்லது மேலாண்மையருக்கோ அல்லது தான் பணிசெய்யும் நிறுவனத்துக்கோ நம்பிக்கைக்குரியவனா என ஆராயும் திறம் இது.

502. **குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்**
**நாணுடையான் கட்டே தெளிவு.**

உயர்குடியில் பிறந்து, இயல்பாகக் குற்றங்களின் நீங்கி, தன்னை அறியாது பழி எதுவும் தன் மீது பட்டுவிடுமோ என அஞ்சுகின்ற, நாணமுடையவன் மீதே நம்பிக்கை வைக்க வேண்டும்.

ஆளும் அரசன் உயர்பதவிகளில் பிறரைப் பணியமர்த்தும்போது யாரைத் தெளியலாம்? யார் மீது நம்பிக்கை வைக்கலாம்? என ஆராயும் முறை இது. நாணமுடையவன் குற்றம் செய்யமாட்டான்.

**503. அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்**
**இன்மை அரிதே வெளிறு.**

கற்பதற்கு அருமையுடைய நூல்களையெல்லாம் கற்று, இயல்பாகக் குற்றங்களினின்றும் முற்றிலும் நீங்கியவர்களிடத்திலும் நுண்ணிதாய் ஆராயுமிடத்து, அறியாமை என்பது சிறிதளவும் இல்லாதிருப்பது மிக அரிதாகும்.

உலகில் அறியாமை என்பது முழுவதும் இல்லாதவரைத் தேடுதல் அரிது. கூடியவரை அறியாமையின் நீங்கியவரா என்றே ஆராய்தல் வேண்டும். மிக வல்லவரைவிட, நல்லவரைத் தேறுக என்ற குறிப்பு, 'ஆசற்றார் கண்ணும்' என்பதால் பெறப்படுகிறது.

**504. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்.**

ஒருவனது நற்குணங்களை முதலில் ஆராய்ந்து, பிறகு அவனிடம் காணப்படும் குற்றங்களையும் ஆராய்ந்து இறுதியாக அவ்விரண்டினுள்ளும் எது மிகுதியாக உளதென எண்ணிப்பார்த்து மிகுதியாய் உள்ளதன் அடிப்படையில் அவனை ஏற்கவோ, தள்ளவோ செய்க.

மனிதரைத் தேர்ந்தெடுப்பது பற்றியதாயினும், எந்த ஒரு பொருள் பற்றியும் குணமும் குற்றமும் நாடி, மிக்கது கொள்ளுமாறு குறளின் நடைப்போக்கு பொதுப்பட அமைந்துளது.

**505. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்.**

ஒருவரைப் பணியிலமர்த்துவதற்கு முன், அவரது பெருமை, சிறுமைகளை ஆராய வேண்டுமேல், அவ்விரண்டுக்கும் அவரவர்தம் செயல்களே, தரம் உரைத்துப் பார்க்கும் கல்லாகும்.

பொன்னை உரைத்து, மாற்றுப் பார்க்கும் உரைகல் கட்டளைக்கல் எனப்படும். வாய்ப்பேச்சு, திறமை, அறிவு போன்றவற்றைவிட, அவற்றை நடைமுறையில் கையாளும் செயல்களை வைத்தே ஒருவரை மதிப்பிட வேண்டும். வாய்நிறையப் பேசுவோர் சிலர், மிகுந்த திறமை காட்டுவோர் சிலர். அவற்றை நம்பி விடலாகாது. அவர்களுடைய செயல்களைக் கண்காணித்து உண்மை தெளியவேண்டும்.

506. **அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்றுஅவர்
பற்றிலர் நாணார் பழி.**

ஒருவர் வீடு, மனைவி, மக்கள் என எதுவும் அற்றவராயின் அவரை அரசுப் பணிக்கோ, ஆளும் பிற பணிகளுக்கோ தெரிவு செய்தலைத் தவிர்க்க. ஏனெனில் அவர் உலகத்தோடு எவ்விதத் தொடர்பும் உடையவரல்லர். அதனால் பழி வருமென்று வெட்கப்படமாட்டார். எதுவுமற்றவராதலின் பழிக்கஞ்சும் கட்டாயமோ, சூழலோ இன்றி, எளிதில் தவறுகள் செய்ய ஏதுவாகக் கூடும்.

507. **காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும்.**

அமர்த்தும் பணியில் அறியவேண்டுவன எதனையும் அறியாத ஒருவரை, அவர்மீது நாம் வைத்திருக்கும் பாசத்தையும் அடிப்படையாகக் கொண்டு அமர்த்துதல் நம்மை உலகம் அறிவில்லாதவர் எனத் தூற்றும்படியான எல்லாத் தீமைகளையும் கொடுக்கும்.

உறவுடையார், நண்பர் வேண்டியவர் என்று பொருந்தாத ஒருவரைப் பணியில் அமர்த்துவது முட்டாள்தனமாகும்.

508. **தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.**

முன்தொடர்பு எதுவும் இல்லாத அயலானை ஆராயாமல் தெளிந்து பணியை ஒப்படைப்பின் அவ்வாறு ஒப்படைப்பவனுக்கு மட்டுமன்றி அவன்வழிவரும் பரம்பரைக்கும் தீராத பெருந்துன்பமாய் முடியும்.

அவனைத் தொடவும் முடியாமல் விடவும் முடியாமல் காலங்காலத்திற்குத் துன்பம் தொடருமாம். முன்னைய குறளில் தொடர்புடையாரைப் பாசம், பற்றுக் காரணமாக, அவர்க்குத் தகுதியில்லாத பெரிய பதவிகளில் அமர்த்துவது தவறென்றார். இதில் முன்பின் தெரியாதவரை ஆராயாமல் நம்புவதால் கேடு வரும் எனக் கூறுகிறார்.

509. தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

ஆராயாமல், யாரையும் தேர்ந்தெடுத்தல் கூடாது. அங்ஙனம், நன்கு ஆராந்து தேர்ந்தெடுத்தபிறகு, அவர்பால் ஒப்படைக்கக்கூடிய பணிகளைத் தெளிவாய் அறிந்து செயற்படும்.

அவரிடம் ஒப்படைப்பனவற்றை நம்பிக்கையாய் விட்டுவிட வேண்டும். தான் தலையிடுதல் தவறு. விலகி நின்று கண்காணிக்க வேண்டும்.

510. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

ஒருவனை ஆராயாது தேர்ந்தெடுப்பதும் தேர்ந்தெடுத்த பிற்பாடு, அவன்மீது ஐயப்படுதலுமாகிய இவை இரண்டுமே, மேலாண்மையனுக்குத் தீராத பெருந்துன்பத்தைக் கொடுக்கும்.

## 52. தெரிந்து வினையாடல்

ஆராய்ந்து ஒருவரை வேலைக்குத் தெரிவு செய்தபின், அவரவர்க்குரிய பணியை ஆராய்ந்து அறிந்து, ஒப்படைத்து ஆள்கின்ற திறமை, வினையாடல் - வினை ஆளுதல்; செயற்பட வைத்தல்.

511. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்.

ஒருவனிடம் முதலில் ஒரு பணியை ஒப்படைத்துச் சோதிக்க வேண்டும். அதில் அவன் நல்லனவற்றையும் தீயனவற்றையும் ஆராய்ந்து, அவற்றுள் நல்லனவற்றையே அரசனுக்குகந்தன என எண்ணி விரும்பிச் செய்கிறானா என்பதைக் கண்டுகொண்டு, பின்பு சிறந்த பணிகளிலே வைத்து ஆளப்படுவான்.

வெள்ளோட்டம் பார்ப்பது போன்றது இது. ஒரு பணியை ஒப்படைத்து, அதன்வழி அவன் நல்லவனாக உண்மையிலேயே நடந்துகொள்கிறானா என்று பார்த்து, பிறகு மிகுந்த நம்பிக்கைக்குரிய பணிகளில் அமர்த்தவேண்டும்.

512. வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.

பொருள் வருவாய் தரும் துறைகளை முன்னிலும் கூடுதலாகப்பெருக்கி, அவற்றாலாம் செல்வ வளத்தை வளர்த்து, இடையூறுகளை நாள்தோறும் ஆராய்ந்து நீக்க வல்லவ்ன் அரசனுக்குப் பணி செய்தற்குரியனாவான்.

513. **அன்புஅறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்**
**நன்குடையான் கட்டே தெளிவு.**

பணி செய்யுங்கால் அரசன் மாட்டு அன்பை வெளிப்படுத்த வேண்டும்; கொடுத்ததை நிறைவேற்றும் துறைசார்ந்த அறிவுடையவனாக இருக்க வேண்டும்; இதுதான் செயற்பாலது என ஒன்றைத் துணியும் தெளிவு வேண்டும்; காரியமாற்றுங்கால் பொருளில் ஆசையற்றவனாக இருத்தல் வேண்டும். இவை நான்கையும் உறுதியாக உடையவனிடமே பணியை நம்பி ஒப்படைக்க வேண்டும்.

514. **எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்**
**வேறாகும் மாந்தர் பலர்.**

எல்லாவகையாலும் ஆராய்ந்து தெளிந்து பணிகளை ஒப்படைத்த பின்பும், தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளின் இயல்பு காரணமாக, முன்பு நடந்துகொண்ட முறைகட்கு மாறாக நடந்து கொள்ளும் மாந்தர்கள் உலகத்துப் பலராவர்.

தெளிந்தோம் என்று அலட்சியமாக இராமல், இடையில் இவ்வாறு நம்பிக்கையை வீணாக்குபவர்களைப்பற்றி விழிப்பாயிருக்க வேண்டும். பதவி கிடைக்கும் வரை நல்லவர்போல் நடித்து, மிகப் பொறுப்பான மேற்பதவியைப் பிடித்துக்கொண்டு, அதன் பிறகு முற்றிலும் மாறாக நடப்பவர்கள் பலர். பதவியால் மனம் வேறுபடுபவர்கள் இவர்கள்.

515. **அறிந்துஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்**
**சிறந்தான்என்று ஏவற்பாற் றன்று.**

ஒரு காரியத்தைச் செய்யும் நெறி முறைகளைக் கண்டு செயலில் ஈடுபடும்போது வரக்கூடிய இடையூறுகளைத் தாங்கிக் கொண்டு, செய்து முடிக்கவல்ல ஆற்றலுடையவர்களிடமே அதனை ஒப்படைக்க வேண்டும். அல்லாமல் வேறு வகைகளில் சிறப்புற்றவன் என்பதற்காக ஒருவனை அவனுக்குப் பொருத்தமற்ற ஒன்றில் விடக்கூடாது. பிற ஆடம்பர வகைகளால் மேம்பட்டிருந்தால் போதாது.

516. **செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு**
**எய்த உணர்ந்து செயல்.**

செயலைச் செய்து முடிக்கவல்ல திறமையாளனைத் தேடிப்பிடித்து, பின்பு அவன் செய்யவிருக்கும் காரியத்தின் இயல்பையும் ஆராய்ந்து அவ்வக் காலத்திற்குத்தக அவையிரண்டும் பொருந்தி வருதலையும் நன்கு அறிந்து அவனை அச்செயலில் ஈடுபடுத்துக.

ஒவ்வொருவனுக்கு ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு செயல் பொருந்திவரலாம்.

517. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

இச்செயலை இக் கருவியால் அல்லது இக்காரணத்தால் இவன் முடிக்கவல்லவன் என்று கண்டு அவனிடம் அச்செயலைச் செய்யுமாறு ஒப்படைக்க வேண்டும்.

இக்காரியத்தை இவன் முடித்துவிடுவான் எனத் தோன்றினால் அதாவது செயல், கருவி, செய்பவன் மூன்றும் இயைபுபடப் பொருந்திவரின் அவனிடம் அதை ஒப்படைக்கலாம். எந்த இடத்து, எச்செயலுக்கும் பொருந்துமாறான ஒரு சூத்திரம் - வரையறை விதிபோல இக்குறள் அமைகிறது. காலத்தால் மாறாத திருக்குறளின் 'பொதுமைகள்' இவை.

518. வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரியன் ஆகச் செயல்.

ஒருவனை ஒரு செயலுக்குப் பொருத்தமானவன் என்று அதைச் செய்தற்காம் உரிமையை ஒப்படைத்த பின்பு, அவனை அச்செயலுக்குரிய எல்லா வசதிகளும் உரிமைகளும் உடையவனாக உயரச் செய்தல் வேண்டும். வினை ஒப்படைத்தானபின் அதற்குரிய தகுதிகளையும் ஒப்படைத்துவிட்டுத் தாம் விலகி நிற்க வேண்டும்.

519. வினைக்கண் வினையுடையான் கேண்மைவேறு ஆக
நினைப்பானை நீங்கும் திரு.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட காரியத்திலேயே கருத்தாக இருந்து, அதை முடிப்பதிலேயே கண்ணாக இருப்பவன், தம்மிடம் நட்புரிமையோடு பழகுவதை, பொறாமையாளர்கள் கூறும் சொற்கேட்டுத் தவறாக எடுத்துக் கொள்பவனைத் திருமகள் கைவிட்டு நீங்கி விடுவாள்.

சிலர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட காரியமே கண்ணாக இருப்பர். காக்கை பிடிக்க அறியார். மற்றவர்கள் பொறாமைப்பட்டு அவர்கள் மீது அவதூறு கிளப்புவதை நம்பிவிடாதே என்பதாம்.

520. நாள்தோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு.

அரசு அதிகாரிகள் போலும் வினைமேற் கொண்டு செயலாற்றுபவர்கள் எவ்விதத் தப்பும் செய்யாது நடுநிலையுடன் செவ்விய முறையில் நடந்து கொள்வார்களாயின், உலகமும் எவ்விதத் தவறும் செய்யாது செவ்வையாய் இருக்கும். எனவே மன்னவன் நாள்தோறும் அதிகாரிகளது செயல்களை ஆராய்ந்த வண்ணம் இருக்கவேண்டும்.

இது தலையிடுவதாகாமல், விலகி நின்று கண்காணிப்பதாகும்.

## 53. சுற்றம்தழால்

அமைச்சர், படைத்தலைவர் உள்ளிட்ட சூழஇருக்கும் சுற்றத்தாரை அரசன் அவருக்கு வேண்டுவன கொடுத்தும் வசதிவாய்ப்புகள் செய்தும் தன்பால் அன்பு செலுத்துமாறு தழுவிக் கொள்ளுதல் வேண்டும். பொதுவாகச் செல்வர்கள் தம் செல்வத்தைச் சுற்றத்தார்க்குப் பயன்படுத்தி அணைத்துக் கொண்டு வாழ்தலையும் இது குறிக்கும். அமைச்சர் முதலான அதிகாரிகளைச் 'சுற்றம்' எனல் பழம் மரபு. 'மந்திரி பிரதானியர்' என்பது இடைக்கால வழக்கு.

521. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

ஒருவன் செல்வமனைத்தும் இழந்து வறியவனான காலத்திலும் அவனிடம் பழைய உறவை விடாது கொண்டாடும் இயல்புகள் சுற்றத்தாரிடமே உளவாம். எனவே அத்தகைய சுற்றத்தைத் தழுவிக் கொள்க என்பதாம்.

522. விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும்.

அன்பால் இணையும் விருப்பம் நீங்காத சுற்றம் ஒருவனுக்கு அமையுமானால், அவனுக்கு மேலும் மேலும் கிளைத்துப் பெருகும் செல்வம் முதலாய ஆக்கங்கள் பலவற்றையும் அதுதரும்.

பலர் கூடி வளர்த்தலால் செல்வம் பல்கிப்பெருகும். அரும்புதல் அறாத ஆக்கம் - கிளைத்துப் போகும் செல்வங்கள்.

523. அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

சுற்றத்தோடு அளவளாவி - நெஞ்சு கலந்து வாழ வேண்டும். ஏனெனில் சுற்றத்தார் குளத்திற்குக் கரைபோல் நின்று காப்பவர்கள். அங்ஙனம் மனமொன்றி வாழாதான் செல்வவாழ்க்கை குளப்பரப்புக் கரையின்றி நீர் நிறைந்தாற் போலாகும். உள்ளன்புடைய சுற்றமில்லாதவன் செல்வம் காக்கப்படாது அழிய நேரும்.

524. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வம்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

சுற்றமானது அன்போடு தன்னைச் சூழ வருமாறு பரிவுகாட்டி உதவிகள் செய்து வாழ்தல் ஒருவன் செல்வத்தைப் பெற்றதனால் பெற்ற சிறந்த பயனாகும். செல்வத்தைப் பயன்படுத்திச் சுற்றத்தைத் தழுவிக் கொள்ளுதல் செல்வமுடைமையின் பயனாகும்.

525. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

ஒருவன் தன் சுற்றத்தார்க்கு வேண்டுவன கொடுத்தலையும் இன்சொல் பேசுதலையும் கைக்கொள்வானாயின், அவன் அடுக்கப்பட்ட சுற்றங்கள் அனைத்தாலும் சூழப்படுவான்.

526. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்.

ஒருவன் சுற்றத்தவர்க்கு மிகுதியாக அள்ளிக்கொடுக்கும் கொடைஞனாகவும் அதிகார பலத்தால் தோன்றும் வெகுளியைச் சிறிதும் கைக்கொள்ளாதவனுமாக இருப்பானேல், அவனுக்குப் பக்கத்துணை அமைவது போல் வேறு யாருக்கும் அமையாது.

527. காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

காக்கைகள் தமக்கு இரை கிடைத்தால் அதை மறைக்காமல் தம் இனத்தைக் கரைந்து அழைத்து அவற்றோடும் கூட உண்ணும். அஃதேபோலச் சுற்றத்தவரோடு நுகர்வோருக்கே செல்வங்கள் பலவும் உளவாகும்.

528. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.

நாட்டை ஆளும் வேந்தன், தன் கீழ்ப் பணிசெய்யும் அதிகாரிகளையும் அமைச்சர்களையும் 'எல்லோரும் சமம்' என்பதுபோலப் பொதுவாகப் பாராமல் அவரவர் தகுதி திறமைகட்கு ஏற்ப வரிசைப்படப் பார்த்து

அதற்கேற்ப நடத்துவானாகில், அச்சிறப்பினைத் தாமும் உயர்வு பெற்று அடைதலை நோக்கி, அதற்கேற்ற திறமையைக் காட்டி வாழ்வோர் பலராவர்.

529. **தமராகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்**
**காரணம் இன்றி வரும்.**

தனக்குச் சுற்றமாயிருந்து பிறகு ஒரு காரணத்தால் தன்னைவிட்டுப் பிரிந்து சென்றவர் மீண்டு வந்து சுற்றமாதல், அங்ஙனம் அவர் பிறியக் காரணமாயிருந்ததை அரசன் கைவிடத் தானே உளதாகும்.

சுற்றத்தவர் மனம் வேறுபட்டுப் பிரிய நேர்ந்தால், அங்ஙனம் பிரிய நேர்ந்த காரணத்தைக் கண்டுபிடித்து விலக்கிக் கொண்டு, மீண்டும் அவனால் சுற்றமாக்கிக் கொள்க என்பதாம். தன்பால் அன்புள்ளவர் பிரிய நேர்ந்தால், போகட்டும் என விட்டுவிடக் கூடாது.

530. **உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்**
**இழைத்திருந்து எண்ணிக் கொளல்.**

தன்னிடத்தினின்றும் பிரிந்து போன ஒருவன் பின்பு தனக்கு ஒரு காரியம் ஆகவேண்டும் என்பதற்காகத் திரும்பத் தன்னிடம் வருவானாகில், அவனுக்கு வேந்தன் அவ்வாறு அவன் தன்னிடம் வேண்டியதைச் செய்து கொடுத்து. பின்பு ஆற அமர நன்கு ஆராய்ந்து தழுவிக்கொள்ள வேண்டும்.

இவன் முன்னைய குறளில் சொன்னவன் போன்றவன் அல்லன். தனக்கு ஒரு காரியம் ஆகவேண்டுமென்பதற்காக வருபவன், அவன் மனம் மாறிவிட்டானா என்று நன்கு ஆராய்ந்தல்லது ஏற்றுக் கொள்ளக்கூடாது.

## 54. பொச்சாவாமை

பொச்சாத்தல் - கடமையை மறத்தல், செல்வம், பதவி முதலியவற்றால் மகிழ்ச்சியில் மிதக்கும்போது, கடமையை அலட்சியப் படுத்தி மறக்கத் தோன்றும். கொண்ட குறிக்கோளை இடையில் கைவிடக் காரணமான இம்மனச்சோர்வாம் அலட்சியப் புத்தி நீங்கியவழியே ஆட்சி சிறக்கும். குடியாட்சியில், வாக்குறுதிகளைத் தந்து, மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வருபவர்கள், பிறகு தாம் தந்த வாக்குறுதிகளை மறந்துவிடுவதும் பொச்சாத்தலேயாகும்.

531. இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியில் சோர்வு.

மிகக் கூடுதலான உவகைக் களிப்பினால் ஏற்படும் கடமை மறதி, அளவு கடந்த வெகுளியைவிடத் தீதாகும்.

அளவு மீறிய கோபம் தன்னையே கொல்லவல்லது. அளவுகடந்த மகிழ்ச்சியில் மிதந்து, கடமைகளை அலட்சியப்படுத்தி மறப்பதும் தனக்கே தீதாய் முடியும். இன்று தேர்தலில் வெற்றிபெற்ற அக்கணமே, அளவு கடந்த மகிழ்ச்சியடைந்து, அனைத்துக் கடமையையும் மறப்போரை நினைவு கொள்க.

532. பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

நாள்தோறும் இரந்துண்ணும்படியான வறுமை ஒருவனது அறிவை மழுங்கடித்துவிடுவதுபோல், ஒருவனது புகழை அவனது கடமை மறதி கெடுத்துவிடும். நிச்சம் - நாள்தோறும் நிரப்பு - வறுமை. ஒன்றுமே இல்லாத நிலையை, நிரப்பு என்பது மங்கலவழக்கு.

533. பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு.

செய்ய வேண்டியவற்றை அலட்சியப்படுத்தும் கடமை மறதி யுடையார்க்குப் புகழுக்குரிய தன்மைகள் எவையும் அமையா. இது உலகத்தில் அனைத்துத் துறைசார்ந்த எல்லாவகைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்ப முடிந்த முடிபாகும்.

எல்லாத் துறைகளிலுமே பொச்சாப்பு என்னும் கடமை மறதி உளதாதலின் இங்ஙனம் கூறுகிறார்.

534. அச்சம் உடையார்க்கு அரண்இல்லை ஆங்குஇல்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.

எத்தனை கோட்டைகளுக்குள்ளேயிருந்தாலும் மனத்தில் அச்சம் உடையவர்களுக்கு அவற்றால் பயனில்லை; அதுபோல ஆக்கம் அனைத்தும் உடையவர்களேயாயினும் கடமை மறதியுடைவர்களுக்கு அவற்றால் வரும் நன்மை இல்லை.

535. முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை
பின்ஊறு இரங்கி விடும்.

வரக்கூடிய துன்பங்களை முன்னதாக அறிந்து, உரிய காலத்தே காக்காமல் அலட்சியப்படுத்தி நழுவ விட்டவன், பிறகு அவை வந்து தன்னைத்

தாக்குகின்ற காலத்தில், தன்னால் அவற்றைத் தடுக்கலாகாமையால், தான் முன் செய்துவிட்ட பிழைக்காக இரங்கி அழ நேரும்.

536. **இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை**
**வாயின் அதுஒப்பது இல்.**

யாரிடத்திலும் எக்காலத்திலும் அவரவர்க்குச் செய்யவேண்டிய கடமைகளையோ, உதவிகளையோ அலட்சியப்படுத்தி மறவாதிருக்கும் தன்மை, ஒருவனிடம் சிறிதும் தப்பாமல் வாய்க்குமானால், அதனைப்போல அவனுக்கு நன்மை செய்வது பிறிதொன்றில்லை.

537. **அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்**
**கருவியால் போற்றிச் செயின்.**

எதனையும் மறவாது சிந்திக்கும் தப்பாத சிந்தனை என்ற கருவியால் நன்கு எண்ணிப் பேணிச் செய்வானாயின், ஒருவனுக்கு 'இவை செய்தற்கு அரியன' என்று சொல்லிக் கைகூடாத காரியங்கள் எதுவுமில்லை.

538. **புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது**
**இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.**

ஒருவன் தான் மிகவும் உயர்த்திப் புகழ்ந்து பேசியவற்றை, பேசியவாறே கடைப்பிடித்துச் செயலில் செய்தாக வேண்டும். அங்ஙனம் செய்யாது, மறந்து விட்டவர்களுக்கு ஏழு பிறப்பிலும் நன்மை இல்லை. இப்பிறப்பில் நன்மையில்லை என்பதை உறுதிப்படுத்தும் இது, ஒரு மொழி நடை.

எதையும் வாய்கிழிய, மிகவுயர்த்திப் பேசுகின்றவர்கள் அதைத் தம் வாழ்வில் கடைப்பிடிப்பதில்லை.

539. **இகழ்ச்சியிற் கெட்டாரை எண்ணுக தாம்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.**

மக்கள் வெற்றிக் களிப்பினால் வலுவுற்று, மகிழ்ச்சியில் மூழ்கி மயங்கி அதில் தம்மை மறக்கும்பொழுது, அவ்வாறு முன்பு மயங்கிக் கடமைகளை மறந்து இகழ்ந்ததனால் கெட்டழிந்தவர்களை நினைத்துப் பார்ப்பார்களாக!

540. **உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்.**

ஒருவர் தாம் நினைத்ததை அடைதல் என்பது எளிது. எப்பொழுது எனில், மேலும்மேலும் தான் செய்ய எண்ணியதையே எண்ணி எண்ணி,

அதற்கானவற்றிலேயே மனம்தோயப் பெறுவார்களாயின். குறிக்கோளைக் கணப்பொழுதும் மறவாதவர்கள் அதை அடைதல் உறுதி.

## 55. செங்கோன்மை

நடுவுநிலைமை தவறாது ஆட்சி புரியும் தன்மை ஆட்சியாளனாம் அரசனை மையமிடாது, அவனால் ஆளப்படும் ஆட்சிச் சிறப்பே பேசப்படுகிறது. அரசனது நேரிய ஆட்சியின் சின்னம் செங்கோல். செங்கோன்மை - நேரிய ஆட்சியின் தன்மை.

541. ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

குற்றங் கண்டவிடத்து ஆராய்ந்து, தனக்கு வேண்டியவர் எனத் தயவு காட்டாது தன் ஆட்சியதிகாரத்தைச் செலுத்திக் குற்றம் செய்தவர் யாராயிருந்தாலும் குற்றத்திற்கு ஏற்ற தண்டனையை நீதிநூல் வல்லாருடன் சிந்தித்து அதன்படி செய்வதுதான் 'முறை' என்று சொல்லப்படும். முறை - நீதி செய்யும் முறைமை; ஆள்பவர்க்கு இது முதற்கடமை.

542. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

உலகமெல்லாம் வானத்து மழையை எதிர்நோக்கி அது தப்பாது பெய்தலால் உயிர் வாழும். அதுபோலக் குடிமக்கள் அனைவரும் அரசனது நேரிய ஆட்சியை எதிர்நோக்கி, அவ் ஆட்சிச் சிறப்பால் வாழ்வர். நேரிய அரசாட்சி இன்றேல் குடிமக்கள் பாதுகாப்பாக வாழ்தல் இயலாது.

543. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

அந்தணர்களது வேதங்களுக்கும் அறத்திற்கும் அடிப்படையாய் நிலைபெற்றது அரசனது செங்கோலாட்சியேயாகும்.

அரசாட்சிக்கே தலைமையிடம் என்பதை வற்புறுத்துகிறது. அந்தணர்தம் வேதங்கள், அனைத்திற்கும் மேலானவை என்பர். அவற்றிற்கும் அருளாளர்தம் நூல்களுக்கும் அறத்திற்கும் காவலாய் நிலைபெற்றது மன்னவனது ஆட்சியே என வற்புறுத்துவது இது. சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று இன்று சொல்லுவர். அரசின் கட்டுப்பாடான ஆட்சியின்றேல், பிற எவையும் நிலைபெறா.

544. குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

குடிகளை அரவணைத்து, வேண்டுவன செய்து ஆட்சி செலுத்தும் உலகை ஆளும் மன்னனது அடியைப் பொருந்தி இவ்வுலம் அவனுக்குத் துணையாக நிற்கும். அவன் ஏவியவழி உலகம் நடக்கும் என்பது கருத்து.

545. இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

ஆடம்பரம் ஆரவாரமெல்லாம் இல்லாமல் கடமையென்று கருதி மிக இயல்பாக அறவழியில் ஆட்சி செலுத்தும் மன்னவனது நாட்டின்கண்ணே பருவ மழையும் குறையாத விளைவும் ஒருங்குகூடிச் சிறக்கும்.

546. வேலன்று வென்றி தருவது ·மன்னவன்
கோலதூஉம் கோடாது எனின்.

மன்னவனுக்கு வெற்றியைத் தருவது அவன் கையிலுள்ள வேல் அன்று; செங்கோலே அவ்வெற்றிக்கு அடிப்படையாகும்; அதுவும் எக்காலத்தும் ஒருபாற் கோடாது செவ்விதாய் இருக்குமாயின்.

ஆயுத பலம் மட்டுமன்று, ஒரு நாட்டைக் காப்பது; நேரிய ஆட்சியே காக்கும்.

547. இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

உலகம் முழுவதையும் அரசன் காப்பான்; அவனை, அவன் செய்யும் நீதி தவறாத ஆட்சி முறையே காக்கும்; அவ் ஆட்சியானது தப்புமாறு வந்தவிடத்தும் தப்பாமல் செலுத்துவானாயின் அங்ஙனம் அவன் காக்கப் பெறுதல் உறுதியாகும்.

548. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும்.

வந்தவர் தம் குறைசொல்லுதற்கு எளியனாய் உடனே செவிமடுத்து, தன் அமைச்சர்களுடன் ஆலோசித்து விரைந்து முறைசெய்யாத மன்னவன், காலந்தாழ்த்துகின்ற காரணத்தால் கெடுப்பாரின்றியும் தானே கெட்டுப் போவான். காலந்தாழ்த்துவதால் நீதிமுறை தவறக்கூடும்.

549. குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று வேந்தன் தொழில்.

குடிகளைப் பிறர் துன்புறுத்தாமல் காத்து, தானும் துன்பம் செய்யாது பேணிக் காக்கும் அதே சமயத்தில், அவரிடம் குற்றம் கண்டால் தண்டித்து அதனை நீக்குதல் வேந்தனுக்குக் குற்றமன்று; அதுவே அரசனது தொழிலாகும்.

550. கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

அரசன் கொலை செய்யும் குற்றம்போல் பெரும் பெரும் குற்றங்களைச் செய்யும் கொடியவர்களுக்குக் கடுஞ்தண்டனை கொடுத்துத் தண்டிக்கத் தக்கவர்களைத் 'தண்டித்தல்', உழவன் பயிர் வளர்வதற்காகக் களைகளை வெட்டி நீக்குவதற்குச் சமமாகும்; அது குற்றமாகாது.

## 56. கொடுங்கோன்மை

மிக இன்றியமையாதவற்றை எதிர்மறை முகத்தாலும் வற்புறுத்துவார் திருவள்ளுவர். நடுவுநிலை பிறழ்ந்து நீதி தவறிய ஆட்சியின் தன்மை இங்கு விளக்கப்படுகிறது.

551. கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து.

குடிமக்களைப் பலவாறு அலைத்துத் துன்புறுத்தலையே தொழிலாக மேற்கொண்டு, பொருள் இன்பங்களை விரும்பி முறையல்லாதவற்றைச் செய்து ஒழுகுகின்ற மன்னவன், கொல்லுதலையே தொழிலாக மேற்கொண்டு ஒழுகுவாரினும் கொடியவன் ஆவான்.

கொலைகாரரைவிடக் கொடியவரென்று மக்களைத் துன்புறுத்தி ஆள்பவரைக் கடிந்து சொல்கிறார்.

552. வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

தனியிடத்தே வேலைக் கையிலேந்தி நின்ற கள்வன் ஒருவன், வழிப் போவானை அச்சுறுத்தி, 'நின்னிடமுள்ள பொருளை வெளியே எடுத்துவை' என்று மருட்டுவதைப் போன்றது; ஆட்சி செய்யச் செங்கோலைத் தாங்கிய அரசன் குடிமக்களிடம் மேன்மேலும் பொருளை இரந்து நிற்பது.

பொருள் தராவிடில் தண்டிப்பேன் என்று குறிப்புளதாதலின், இரந்து கேட்பதும் கொடுங்கோன்மை ஆயிற்று. திருடனைவிடக் கொடியவன் எனத் தீய ஆட்சியாளனைச் சொல்வதும் காண்க. கொலைகாரர்களாகவும் திருடர்களாகவும் மாறும் ஆட்சியாளர்களுக்கு இது உள்ளத்தில் போய் உறைத்தால் நாட்டுக்கு நல்லது.

553. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்.

தன் நாட்டில் நடக்கும் நன்மை தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து அதற்கேற்ப நீதி வழங்கி ஆட்சி செய்யாத மன்னவனது நாடு சிறிது சிறிதாக நாள்தோறும் கெட்டுப்போகும்.

கணப்பொழுதும் சோராமல் நாள்தோறும் கருத்துச் செலுத்தி ஆளாவிட்டால், அவன் ஆளும் நாடு நாள்தோறும் கெட்டுப்போகுமாம். 'அரசு கட்டில் சொகுசாக அமரவும் தூங்கவும்' என எண்ணும் ஆட்சியாளர்கள் கருத வேண்டிய குறள் இது.

554. கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.

ஆட்சி முறை தவறி, அமைச்சர்களுடன் கலந்தெண்ணாது, தப்புச் செய்யும் அரசு, தன்னிடமுள்ள பொருட் செல்வத்தையும் மேன்மேலும் வருவாய் தரும் குடிமக்களையும் ஒருங்கிழந்து கெடும். குடிமக்கள் அவனைப் புறக்கணிப்பார்கள் என்பதுமாம்.

555. அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

அரசன் நீதிமுறை தவறியமையால் துன்பப்பட்டுப் பொறுக்கமாட்டாது அழுத மக்களின் கண்ணீர், அரசனது ஆட்சிச் செல்வத்தைத் தேய்த்து ஒழிக்கும் கருவியாகும்.

அல்லற்பட்டு ஆற்றாது ஒருவரை அழவைத்தால், அவ்வாறு அழவைப்பவன் யாராயிருந்தாலும் செல்வமழிந்து கெடுவான் என்ற பொருளும் தருவதாலன்றோ, குறள் பொதுமையுடையதாகிறது.

556. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதுஇன்றேல்
மன்னாவாம் மன்னர்க் கொளி.

மன்னர்களுக்கு நாட்டை ஆளுங் காலத்தே ஒளி நிலைபெறுதல் என்பது செங்கோலாட்சியாலாகும். அச்செங்கோலாட்சி இல்லையானால், அவர்களுக்கு வாழுங்காலத்துப் புகழாகிய ஒளி நிலைபெறாது.

ஒருவர் வாழுங்காலத்தில் உலகோரால் மதிக்கப்படுதலும் போற்றப்படுதலும் முதலாயின அவர்தம் 'ஒளி' எனப்படும். பிற்பட எக்காலத்தும் உளதாவது 'புகழ்' எனப்படும். ஒளி, புகழ் என்பன இவ்வேறுபாடுடையன.

557. துளிஇன்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
அளிஇன்மை வாழும் உயிர்க்கு.

உலகிற்கு மழை இல்லாமை எத்தகைய துன்பங்களை விளைவிக்குமோ, அதைப்போன்ற துன்பங்களை அரசனது தண்ணளியாம் கருணையின்மை உலகில் வாழும் குடிமக்களுக்கு விளைவிக்கும்.

558. இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோல்கீழ்ப் படின்.

நீதிமுறையில் ஆட்சி செய்யாத அரசனது கொடுங்கோலாட்சியின் கீழ் வாழ நேர்ந்தால், செல்வமில்லாத வறுமையைவிடச் செல்வமுடைமை துன்பந்தரும்.

559. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

நீதிமுறை தவறி அரசன் கொடுங்கோலாட்சி செய்வானாயின், அவனது நாட்டில் ஓரிரு மழைத்துளி கூட இல்லையாம்படி வானம் மழை பெய்தலைத் தவிர்த்துவிடும்.

வள்ளுவர்க்குத்தான் இந்த மழைத்துளி மீது எத்துணை ஆர்வம். அவருக்கு ஒவ்வொரு மழைத்துளியும் அமிழ்தம்; கருணையின் படிமம். ஆள்பவன் முறைகோடினால், உறை (மழைத்துளி பெய்யாது) கோடுமாம்.

560. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.

காத்தற்குரிய அரசன் உலகைக் காவாது கைவிடுவானாயின், பசுக்கள் பால் முதலாம் வளம் தருவது குறையும்; ஆறு தொழிலுக்குரிய அந்தணர்கள் தாம் கற்றற்குரிய வேதங்களைக் கல்லாது மறந்துவிடுவர்.

ஆறு தொழில்: ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், ஈதல், ஏற்றல். எல்லாவற்றுக்கும் நல்லாட்சி செய்யும் அரசனே தலைமை வாய்ந்தவன்.

அவனது ஆட்சியே உலகை வாழ்விக்கும் என்பது கருத்து. 'இறைஞ்சுக பெரும நின் சென்னி, சிறந்த நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே' என்பது புறநானூறு (6). அந்தணர், வேதம், பசுக்கள் எல்லாம் தெய்வமாக மதிக்கப்பட்ட சூழலில், அவை அனைத்துக்கும் அரசனது ஆட்சியே காவலாகும் என்று அரசின் முக்கியத்துவத்தைக் குறள் பேசுகிறது. 'அறுதொழிலோர் நூன்மறப்பர்' என்பதை 'மறப்பினும் ஓத்துக்கொளலாகும்' (134) என்பதோடு ஒப்பிடுக.

## 57. வெருவந்த செய்யாமை

அரசன் அதிகாரத்தைச் செலுத்தும்பொழுது, மக்களும் சுற்றமும் துணுக்குற்று அஞ்சும்படியான செயல்களைச் செய்யாமை.

561. **தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.**

குற்றத்திற்குத் தக்க தண்டனையை ஆராய்ந்து அக்குற்றத்தைச் செய்தவன் தொடர்ந்து அதைச் செய்யாதவகையில், உலகமும் ஏற்கும் வண்ணம் குற்றத்திற்கு ஏற்றவாறு அவனைத் தண்டிப்பவனே அரசானாவான்.

தண்டனையைப் பார்த்த உலகம் 'அது முறையே' என ஒப்புமாறும் தண்டிக்க வேண்டும்.

562. **கடிதுஓச்சி மெல்ல எறிக நெடிதுஆக்கம்**
**நீங்காமை வேண்டு பவர்.**

தமது ஆட்சிச் செல்வம் தம்மைவிட்டு நெடுங்காலம் நீங்காது நிலைபெறுதலை விரும்புகின்ற அரசர்கள் தண்டனையை நிறைவேற்றத் தொடங்கும்போது அளவு கடந்து தண்டிக்கப் போகின்றவர் போலக் கடிதாக ஓங்கி, தண்டிக்கும்போது அடி மெல்ல விழுமாறு, அளவு கடவாமல் தண்டிப்பார்களாக.

மிகச் சிறந்த ஆட்சியியல் இதுவென்று கூறவேண்டியதில்லை.

563. **வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்**
**ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.**

குடிமக்கள் துணுக்குற்று வெருவும்படியான செயல்களைச் செய்யும் வெங்கோலனாக இருந்தால், அவ்வரசன் உறுதியாக விரைந்து கெட்டுப்போவான்.

செங்கோலன் கொடுங்கோலன் போல, வெங்கோலன் என்றார். எந்நேரமும் கடும் சினத்தையுடையவன் என்பதை உணர்த்துவதற்காக 'என்ன வரி போடுவார்களோ, என்ன கேடு செய்வார்களோ, எப்படியெல்லாம் கொள்ளையடிப்பார்களோ' என்று மக்கள் நாளும் வெருவும்படி செய்யும் ஆட்சி நிலைக்காது.

564. இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.

தனது குடிமக்களால் 'நம் அரசன் கடுமையானவன்' என்று பேசும்படியான இன்னாத பழிச் சொல்லையுடைய மன்னன், தான் உறையும் நாட்டையும் இழந்து தானும் விரைந்து கெடுவான்.

உறைகடுகி - தான் உறையும் தன் நிலத்தை இழந்து, 'உறைநிலத்தோடு' (449) என்பதை ஒப்பிடுக. நாட்டை விட்டே ஓடவும் நேருமாம்.

565. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்னது உடைத்து.

தன்னைக் காண விழைவார்க்கு எளிதில் காண மாட்டாதவனாய், கண்டவழி கடுகடுவென இன்னாத முகத்தையும் உடையவனாய் இருப்பவனது பெருஞ்செல்வம், பேயைக் கண்டாற்போல, அச்சந்தரும் தன்மையுடையதாகும்.

பேயைக் கண்டு அஞ்சுவதுபோல, அவனது பெருஞ்செல்வத்தைக் கண்டு உலகம் அஞ்சும். ஏனென்றால் அதனால் கேடே விளையும்.

566. கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும்.

அரசன் கடுமொழிகளையே பேசுபவனாய், கண்ணோட்டமும் இல்லாதவனாயின், வழிவழியாக வருகின்ற அவனது பெருஞ்செல்வம் நிலைபெறுதலின்றி அப்பொழுதே கெட்டொழியும்.

567. கடுமொழியும் கைஇகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.

கடுஞ்சொற்களும் குற்றத்தைவிடக் கூடுதலாகச் செய்யும் எல்லைக்கடந்த தண்டனையும் அரசனது பகையை வெல்லும் வலிமையாகிய இரும்பினைத் தேய்க்கும் அரம். ஆகும்.

அரசனது ஆளும் வலிமையைச் சிறிது சிறிதாகக் குறைத்து அழிப்பதால் இரும்பைத் தேய்த்து அறுக்கும் அரம் என்றார்.

568. **இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்**
**சீறின் சிறுகும் திரு.**

முன்னதாக ஒரு காரியம் பற்றித் தன் சுற்றமாகிய அமைச்சர் முதலானவர்களோடு கலந்து ஆலோசிக்காது காரியத்தில் இறங்கிவிட்ட மன்னன், பின்பு அது பிழைபடக் கண்டு, சினத்திற்கு ஆட்பட்டு அவர்களைக் கோபித்துச் சீறுவானாகில் அவனது ஆட்சிச் செல்வம் சுருங்கும்.

569. **செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்**
**வெருவந்து வெய்து கெடும்.**

தனக்குப் பற்றுக்கோடாகக் கூடிய பாதுகாப்புக்களை முன் கூட்டியே செய்து கொள்ளாத வேந்தன், திடீரெனப் போர்வந்த காலத்தில் துணுக்குற்று அஞ்சி நொந்து கெட நேரும். தான் அஞ்சி வெருவும்படியான செயல்களையும் செய்துகொள்ளுதல் கூடாது.

570. **கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது**
**இல்லை நிலக்குப் பொறை.**

அரசியலில் கற்க வேண்டியவற்றைக் கல்லாத, பண்பற்றவர்களைத் தனக்கேற்ற அமைச்சர்கள், அதிகாரிகள் முதலானவர்களாகச் சேர்த்துக் கொள்ளும் கொடுங்கோலாட்சியல்லது, இந்தப் பூமிக்குப் பாரமாவது பிறிதொன்றில்லை.

கல்லா என்பதற்குப் பழந்தமிழில் பயன்படாத என்றும் பொருள். மக்களைத் துன்புறுத்தித் தொல்லைப்படுத்தும் அதிகாரிகளாகிய சுற்றத்தை நம்பி, அவர்களைத் தனக்கு வேண்டியவர்களாகக் கொண்டு ஆளும் ஆட்சியைக் 'கடுங்கோல்' ஆட்சி எனப் புது அடைமொழி தந்து கூறுகிறார்.

## 58. கண்ணோட்டம்

தண்டிக்க வேண்டிய சமயங்களில் சிறிது கருணை காட்டுதலும் இரக்கவுணர்வும் தயவு செய்தலும் கண்ணோட்டமெனப்படும். மனம் நெகிழ்தலைக் கண்காட்டும்போது, கண்ணோட்டம் என்ற மெய்ப்பாடு உளதாகிறது.

571. கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டுஇவ் வுலகு.

கண்ணோட்டம் எனும் சிறப்புடைய பேரழகு இருக்கின்ற காரணத்தினாலேதான் இவ்வுலக நடையும் இயங்கி உளதாகின்றது.

கண்ணோட்டம் உள்ளவர்க்கு அதுவே ஒருமுகப் பொலிவான அழகு தருவதால், அதைச் சிறப்புடைய பேரழகு - கழிபெரும் காரிகை என்று கூறுகிறார்.

572. கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அஃதுஇலார்
உண்மை நிலக்குப் பொறை.

உலக நடை இயங்குவது கண்ணோட்டம் காரணமாக நிகழ்கிறது. அவ் இரக்கவுணர்வு இல்லாதவர் உலகிலிருப்பது இவ்வுலகத்திற்குப் பாரமாதற்கே அல்லாமல் வேறொரு பயனும் இல்லை.

573. பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

பாட்டுக்கு இயைபுபடாத பண்ணால் பயன் என்ன? அதுபோலக் கண்ணோட்டம் இல்லாத கண்ணாக இருந்தால், அக்கண்ணால் என்ன பயன்? கண்ணிருந்தும் பயனில்லை.

கண்ணை இறைவன் படைத்திருப்பது, இடரோ, துன்பமோ கண்டவிடத்துக் கருணை காட்டுவதற்கேயாகும் என்பது கருத்து.

574. உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.

அளவான, ஓர் எல்லைக்குட்பட்ட கண்ணோட்டம் இல்லாத கண்கள் முகத்தின்கண் உள்ளனபோலத் தோன்றினும் வேறு என்ன பயனைச் செய்யப் போகின்றன? கண்ணிருந்தும் குருடாகின்றன என்பதாம்.

அளவினால் கண்ணோடுதல் - வேண்டுமளவு மட்டும் இரக்கம் காட்டுதல். கொலைக் குற்றம் செய்தவன்மீது கண்ணோட்டம் காட்டக்கூடாதா என்பது தவறு.

575. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதுஇன்றேல்
புண்என்று உணரப் படும்

கண்களுக்கு வேறு அணிகலன் இல்லை; கண்ணோட்டமே கண்களுக்கு அழகு தரும் அணிகலமாகும். அக் கண்ணோட்டமில்லையாயின்

அவை கண்களல்ல புண்களென்று அறியப்படும். அழகை இழப்பதன்றித் துன்பமும் தருமாதலால் புண்கள் என்கிறார்.

576. **மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ஓடா தவர்.**

ஓடுவதற்குரிய கருவிழியாம் கண்ணோடு பொருந்தியும் கண்ணோடாதவர்கள், மண்ணில் பொருந்தி நிற்கின்ற பார்வையற்ற கண்களையுடைய (கணுக்களையுடைய) மரத்திற்கு ஒப்பாவார்கள். மரங்களுக்கும் கண் (கணு) உண்டு. அக் கண்ணும் கண்ணோட்டமில்லாத கண்ணும் ஒன்றேயாம்.

577. **கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர்; கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்.**

கண்ணோட்டம் இல்லாதவர் கண்ணற்றவரேயாவர்; கண்ணுடையவர்கள் கண்ணோட்டம் இலராதலும் இல்லை.

ஒரு துன்பத்தை, கண் காண நேர்ந்தால் தானே இரக்கப்பட்டுவிடும். மனிதன் வேண்டுமென்று அதைத் தவிர்க்காதிருந்தால் என்பது குறிப்பு.

578. **கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்துஇவ் வுலகு.**

நிருவாக நடைமுறை கெடாத அளவில் கண்ணோட வல்லவர்க்கு இவ்வுலகமே உரிமையுடையதாய் அவர் வழி நடக்கும்.

கண்ணோடுவதால் கருமமும் சிதையக்கூடாது. அங்ஙனம் காரியத்தையும் காப்பாற்றி, அதனளவினதாகக் கண்ணோட்டமும் உடையராயின் உலகமே அவர்க்கு வசப்படும். ஓர் அலுவலகத்தில், குற்றம் செய்தவரை, அளவாகவேனும் கண்டிக்காமலும் தண்டிக்காமலும் விட்டுவிட்டால், அலுவலகம் பாதிக்கப்படும். எனவே காரியம் கெடாதவகையில், கண்ணோட்டமிருக்க வேண்டும்

579. **ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.**

தம்மைப் பகைத்து வேண்டுமென்று துன்புறுத்தும் இயல்பினாரிடத்திலும், தாம் கண்ணோட்டமுடையவராய் அவரது குற்றத்தைப் பொறுக்கும் இயல்புடையவராதலே தலையாய பண்பாகும்.

580. பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

எல்லோராலும் போற்றத்தக்க நாகரிகத்தை விரும்புகின்றவர்கள், தம்மொடு பழகியவர்கள் தம் எதிரே தமக்கு நஞ்சுபெய்து தருதலை நேரில் கண்டு வைத்தும், கண்ணோட்டமுடைமையால் மறுக்காமல் அதனை உண்டு அமைதி கொள்வர்.

நன்கு பழகியவர்கள் நஞ்சனைய தீங்கு பல, நேரிடையாகவே செய்தாலும் அதைப் பொறுத்து அமைதி பூண்பது, பண்பின் உச்சமாகும்.

## 59. ஒற்றாடல்

ஒற்றர்களை ஆளுந்திறன். ஆடல் - ஆளுதல்.

581. ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.

ஒற்றும் புகழமைந்த ஆட்சிமுறை பற்றிய நூலும் ஆகிய இவை இரண்டையும் அரசன் தன் இருகண்களெனத் தெளிவானாக

தன் கண்களால் அறிய முடியாதவற்றையும் இவை காட்டுமாதலின், கண்கள் எனத் தெளிந்து பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

582. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்.

ஆள்பவனாகிய வேந்தன் பகை, அயலார், நண்பர் ஆகிய எல்லாரிடத்திலும் நிகழ்பவை எல்லாவற்றையும் எல்லாக் காலத்திலும் விரைந்தறிதல் வேண்டும். அங்ஙனம் ஒற்றர்மூலம் நடப்பன யாவற்றையும் அறிந்தபடி இருத்தலே வேந்தனது தொழிலாகும்.

583. ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்தது இல்.

ஒற்றர்களைக் கொண்டு உளவறிந்து, உலகில் நடப்பனவற்றை ஆராய்ந்து அதன்படி செயற்படத் தெரியாத அரசன் வெற்றியடைவதற்கான வழி பிறிதொன்று இல்லை.

கொற்றம் - ஆட்சிச் சிறப்பும் வெற்றியுமாகும்.

584. வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று.

அரச காரியங்களைச் செய்வார், அரசர் தம் சுற்றத்தார், பகைவர் என்று கூறப்பட்ட இவர்கள் அனைவரையும் ஒற்றனாவான் ஆராய வேண்டும்.

அதிகாரிகள், அரசனின் சுற்றத்தார், பகைவர்கள் என்னும் அனைவரையும், அவர்களில் சிலர் அரசர்க்குரியவரேயாயினும் ஒற்றர்கள் ஆராய வேண்டும்.

585. கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

எதிர்ப்பட்ட பொழுது யாரும் ஐயுறாத வடிவத்துடனும் யாரும் ஐயப்பட்டு அறிந்துகொண்டால் அவர்களின் எதிரே அச்சத்தைச் சிறிதும் வெளிப்படுத்தாமலும்; அங்ஙனம் அகப்பட்டுக்கொள்ள நேர்ந்தால் எந்த நிலையிலும் தன் மனத்துள்ள மறை பொருள்களை அவர்கள் துன்புறுத்துதலால் சோர்ந்து வெளிப்படுத்தாமலும் இருக்க வல்லவனே ஒற்றனெனப்படுவான்.

586. துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று.

துறவியர் வேடத்தை உடையவனாய், உள்ளே புகுதற்கரிய இடங்களிலும் உட்புகுந்து உளவறிந்து, எவ்வெவ்வாறு துன்புறுத்திக் கேட்டாலும் தன் மனத்திலுள்ளதை வெளிவிடாதவனே ஒற்றனாவான்.

துறவியர் அன்று ஐயப்படாமல் அரண்மனை முதல் எங்கும் செல்லுமளவு செல்வாக்குப் பெற்றிருந்தமை இதனால் புலனாகிறது.

587. மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று.

மறைவாக நடக்கும் இரகசியங்களைத் துருவித் துருவிக் கேட்டறிய வல்லவனாகி, அங்ஙனம் அறிந்தவற்றில் ஐயப்பாடு இல்லாது, தன் அரசனுக்குத் தெளிவாகச் சொல்பவனே ஒற்றனாவான். ஐயுற்றுச் சொன்னால் அரசன் அதற்கேற்பச் செயற்பட முடியாது.

588. ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

ஓர் ஒற்றன் உளவறிந்து வந்து சொன்ன செய்தியை மற்றொரு ஒற்றனாலும் உளவறியச் செய்து ஒப்பிட்டு உண்மையைக் கண்டு கொள்க.

தன் ஒற்றன் செயலையே அவனறியாமல் ஒற்றறியும் திறமையிருந்தால், ஒற்றர்கள் யாரும் காட்டிக்கொடுக்க அஞ்சுவர்.

589. ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்.

ஒற்றர்களை ஆளுமிடத்து, அவ் வொற்றர்கள் தமக்குள் ஒருவரை ஒருவர் அறியாதவாறு, தனித்தனியே ஆள்க. அவ்வாறு ஒரு பொருள் மேல் மூவரை ஏவி, மூவர் கொணரும் செய்தியும் ஒன்றுபோலிருக்குமாயின் அஃது உண்மையென்று தெளியப்படும்.

590. சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை.

உளவுகளைத் திறம்பட அறிந்து கூறிய உளவாளிகளுக்குச் சிறப்புச் செய்ய விரும்பினால், அதைப் பிறர் அறியுமாறு செய்யற்க. அங்ஙனம் பலரறியச் செய்தானாயின் தன் மறைவுச் செய்திகளைத் தானே வெளிப்படுத்தியவன் ஆவான்.

## 60. ஊக்கமுடைமை

காரியமாற்றுதலில் தளராது, மேன்மேலும் மன எழுச்சியுடையராதல்.

591. உடைமை எனப்படுவது ஊக்கம் அஃதுஇல்லார்
உடையது உடையரோ மற்று.

ஒருவர் உடைமை பல உடையராயினும், 'உடையவர்' எனச் சிறப்பித்துக் கூறத் தகுதியுடையது ஊக்கமுடைமையேயாகும். அவ்வூக்கம் ஒன்றைப் பெற்றிலரேல், மற்று எவ்வெவற்றை உடையவராயிருந்தாலும், அவ்வுடைமைகளை உடையவராவாரோ? ஆகமாட்டார்.

அறிவுடைமை போல ஊக்கமுடைமையும் தன்னுடன் - தன் உயிருணர்வுடன் ஒன்றியது; தன்னைவிட்டுப் பிரிக்க முடியாதது. ஏனைய செல்வ உடைமைகள் பிரிக்கக் கூடியன. எனவேதான் உடைமை எனத் தகுவது ஊக்கம் உடைமையேயாயிற்று.

592. உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

ஊக்கமுடைமை தன் உள்ளத்துடன் ஒட்டியதாகலின், பிரிக்க முடியாத அதுவே ஒருவனுக்கு நிலையான உடைமையாகும். ஏனைய பொருளுடைமை தன்னின் வேறுபட்டு இருப்பதாகலின் நிலையில்லாது நீங்கிப்போகும் தன்மையுடையதாகும்.

593. ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்.

ஊக்கமென்னும் மன எழுச்சியை உறுதியாகத் தம்மிடம் கைப்பொருளெனப் பெற்றிருப்பவர்கள் தம் செல்வம் முதலாய ஆக்கங்களை இழந்தாராயினும் அதற்காக அலமந்து வருந்த மாட்டார்கள். ஏனெனில் ஊக்கமுடையவனால் இழந்ததை எளிதில் மீட்டுக் கொள்ள முடியும்.

594. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.

சிறிதும் அசைவில்லாத ஊக்கமுடையவனிடம், செல்வம் முதலிய ஆக்கங்கள் தாமே அவனிருக்கும் இடம் தேடி, வழி விசாரித்துக்கொண்டு செல்லும்.

595. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

அல்லி, தாமரை போலும் நீர்ப்பூக்களின் தண்டினது நீளங்கள், அவை நிற்கும் குளத்தில் வந்து சேரும் நீர் மட்டத்தின் உயரத்திற்கேற்பத் தாமும் உயர்ந்து நிற்கும். அதுபோல மக்களது ஊக்கத்தின் அளவாக அவர்தம் உயர்ச்சியும் அமையும். உள்ளம் உயர உயர அதனளவு வாழ்வு உயரும்.

596. உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

ஒருவர் தம் உள்ளத்தால் அடைய நினைப்பன அனைத்தையும் உயர்ந்தவையாகவே நினைக்க! அது பிறகு முடியாமல் தப்பினாலும் முயன்று பெற்றதனோடு ஒக்குமேயல்லாமல், தப்பிப் போனதாகாது. உயர்ந்த குறிக்கோள்களை எண்ண எண்ண வாழ்வு உயரும். முதலில் தப்பினும் பிறகு அதைவிடக் கூடுதலாக வாய்க்கும்.

597. சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதைஅம்பிற்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு.

முகத்தில் புதையுண்ட அம்புகளால் அடிபட்டும் களிறு அதனால் தளராது எதிர்த்து நின்று தன் பெருமையை நிலைநிறுத்தும். அதுபோலத் தமது முயற்சிக்கு ஊறு வந்தவிடத்தும், ஊக்கமுடையார் தளராது நின்று, தமது பெருமையை நிலைபெறச் செய்வர்.

யானை பகை கண்டவிடத்து, நேரே எதிர்த்து நிற்கும். தன் முகத்தில் புதையுண்ட அம்புகளைத் தாங்கிக் கொண்டும் நேரே தாக்கும். அதுபோல ஊக்கமுடையார் தளராது, எப் பகையையும் நேரே எதிர்கொள்வர்.

598. உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு.

ஊக்கமிகுதி இல்லாதவர்கள், உலகத்தின்கண் பொருள் தேடிப் பிறர்க்கு உதவி வாழ மாட்டாராதலின், 'யாம் வண்மையுடையேம்' எனப் பெருமைப்படும் நிலையை அடையமாட்டார்கள். பொருள் சேர்த்துப் பிறர்க்கு வழங்கிப் புகழ் பெற ஊக்கம் வேண்டும்.

599. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

விலங்குகளிலெல்லாம் பருத்த உடம்பினையும் கூரிய தந்தங்களையும் உடையது யானை. இருப்பினும் யானை, தன்னைவிட ஊக்கம் மிக்க புலி தாக்குமாயின், அதற்கு அஞ்சும் படைபலம் முதலியன இருப்பினும் ஊக்கம் மிகுதியுடையாரை எதிர்த்து நிற்க இயலாது. யானை ஊக்க முடையதென்றார் (597). தன்னைவிட ஊக்கம் மிக்கதற்கு யானை அஞ்சுமென்று இங்கு கூறுகிறார். ஊக்கமுடைமைக்கு எல்லையில்லை; மேலும் மேலும் வளர்த்துக் கொள்க என்பது குறிப்பு.

600. உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதுஇல்லார்
மரம்மக்கள் ஆதலே வேறு.

ஒருவருக்கு ஊக்கமிகுதி என்பது அறிவுடைமையாகும். அவ்வூக்கம் இல்லாதவர் மரத்திற்குச் சமமாவர். இவர்கள் மக்கள் வடிவாகத் தோன்றுதல் ஒன்றே மரத்திற்கும் இவர்களுக்கும் உள்ள வேறுபாடாகும்.

## 61. மடியின்மை

எண்ணியதை முடிக்கும் காலத்துச் சோம்பலின்றி உழைத்தல், மடியினால் சோம்பலுற்றவன் தான் கெடுதல் மட்டுமல்லாமல், அவன் குடும்பமும் குடியும் அழியுமெனத் திருவள்ளுவர் திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறார்.

601. குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்.

ஒருவன் பிறந்த குடியாகிய நந்தா விளக்கு, சோம்பல் என்னும் மாசு படரப் பரடச் சிறிது சிறிதாக ஒளி குறைந்து அணைந்து போகும்.

602. மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

தாம் பிறந்த குடியை உயர்ந்த குடியாக மேன்மேலும் உயர்த்த விரும்புகின்றவர், சோம்பலை அது சோர்ந்து ஒழியுமாறு செய்து சுறுசுறுப்பாக முயல்வார்களாக. இவர் சுறுசுறுப்பினால் மடி தானே மடியுமாம்.

துன்பத்திற்குத் துன்பம் செய்வது போன்றது இது (623).

603. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து.

சோம்பலைத் தன்னுடையதாக்கிக் கொண்டு வாழும் அறிவிலி பிறந்த குடி, அவன் அழிவதன் முன்னே தான் முன்னதாக அழியும். மடியிற் கொண்டொழுகுதல் - தன்னதாக்கிக் கொண்டு நடத்தல்.

ஒருவன் செய்யும் குற்றம், பாவம் அவனை மட்டுமல்லாமல், அவன் சார்ந்துள்ள குடி, சுற்றம், சமுதாயம், நாடு அனைத்தையும் பாதிக்கும் என்று திரும்பத் திரும்பக் கூறுகிறார்.

604. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு.

சோம்பலில் வீழ்ந்து அதன் வயமாகி, மாட்சிமைப்பட்ட நல்லுழைப்பைக் கைவிட்டவர்களுக்கு, அவர் பிறந்த குடியும் அழிந்து, குற்றங்களும் பெருகும்.

605. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

விரைந்து செய்ய வேண்டியவற்றைக் காலம் நீட்டித்துச் செய்யும் இயல்பும், செய்ய நினைத்ததை மறத்தலும், அதனைச் செய்யாது சோம்புதலும், எந்த நேரமும் உறங்கிக் கழித்தலுமாகிய இவை நான்கும் கெட்டழியும் இயல்புடையவர்கள் ஆசைப்பட்டு அணியும் அணிகலன்களாகும்.

606. படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது.

உலக முழுதுமுடையாராய் ஆள்பவர்களது துணையே பற்றுக்கோடாக அமைந்தாலும், சோம்பலுடையார் அதனால் மாட்சிமைப்பட்ட எப்பயனையும் அடைதல் இயலாது. சோம்பலுடையார்க்கு எவ்வளவு பெரிய துணையிருந்தாலும் பயனில்லை.

607. இடிபுரிந்து எள்ளும்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர்.

சோம்பலை விரும்பி மாட்சிமிக்க கடும் உழைப்பைக் கைவிட்டவர்கள், பிறரால் இழித்துரைக்கப்பட்டு எள்ளி நகையாடி இழிவாகப் பேசுதலைக் கேட்டுக் கொண்டிருக்க நேரும்.

608. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்.

குடிமைச் சிறப்பு உடையவனிடம் மடிமையாம் சோம்பல் தன்மை தங்கிவிடுமானால், அஃது அவனைத் தன் பகைவர்களுக்கு மீளாத அடிமையாகும்படி செய்துவிடும்.

609. குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

தன் குடிக்கு வேண்டுவன செய்யாமையால் குடியாளுந் தன்மையில் ஒருவனுக்கு வந்த குற்றங்கள் யாவும், அவன் மடிக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததை மாற்றி, முயற்சியுடையவனாகவே, அவனை விட்டு நீங்கும்.

610. மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு.

தன் அடியினால் எல்லா உலகையும் அளந்தவன் அங்ஙனம் அளந்துகாட்டிய உலகப் பரப்பு முழுவதையும் ஒருசேர, சோம்பலில்லாத அரசன் தனக்குரித்தாகப் பெறுவான். சோம்பலின்றேல் உலகையே வெல்லலாம் என்பது கருத்து.

மாவலி மன்னனிடம் மூன்றடி மண் கேட்டுத் திருமால் அளந்த உலகம் முழுவதையும், சோம்பலற்ற அரசன் பெறுவானாம். மடியின்மையை வற்புறுத்த, இப்புராணச் செய்தி பயன்படுத்தப்படுகிறது.

## 62. ஆள்வினையுடைமை

ஒரு காரியத்தை இடைவிடாது உழைத்து நிறைவேற்றும் நிருவாகத் திறமையுடைமை.

ஆள்வினை - ஆட்சி செய்தல்.

611. அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

நமக்கு இக்காரியம் செய்தற்கருமையுடையதென்று, தமது எளிமை கருதி மனந்தளராதிருத்தல் வேண்டும். ஏன் எனில், முயற்சியுடைமை அதற்கேற்ற பெருமையைத் தரும்.

612. **வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.**

ஒரு செயலைச் செய்யுங்காலத்தில் அரைகுறையாக நிறுத்தி இடையே அச்செயலைக் கைவிடுதலைத் தவிர்க, ஏன் எனில் ஒரு காரியத்தின் குறையைச் செய்யாது விட்டவர்களை உலகு கைவிட்டு விடும்.

613. **தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னும் செருக்கு.**

எல்லோருக்கும் கொடுத்து வண்மை செய்தல் என்னும் பெருமித மேம்பாடு, முயற்சியுடைமை என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த இயல்பின்கண்ணே நிலைபெற்றுளது.

614. **தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாளாண்மை போலக் கெடும்.**

முயற்சியில்லாதவன் பிறர்க்கு உதவி வண்மை செய்வதென்பது பகை கண்டதும் அஞ்சும் பேடி ஒருவன் தன் கையிலே வாளை ஏந்தி அதைக் கையாள முயல்வது போல் ஆகும்.

615. **இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்தூன்றும் தூண்.**

இன்பம் வேண்டுமென்று அதில் ஆசை வைக்க மாட்டான். எப்பொழுதும் ஏதாவது காரியமாற்ற விரும்பி அதிலேயே ஆசை வைப்பான். அவன் தன் உறவினர்களின் துன்பத்தை நீக்கி அவர்களைத் தாங்கும் தூணாக விளங்குவான்.

இன்பம் விழைதல், வினை விழைதல் இருவேறு மனநிலைகள் இன்பமே விழைபவன் வினையைத் (முயற்சியை) தள்ளிப் போடுவான். வினை செய்தலை விரும்புபவன் இன்பத்தை நினைக்க மாட்டான். இவை ஒரு மனப்பழக்கம்.

616. **முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**

முயற்சியுடைமையே செல்வத்தை உண்டாக்கும்; முயற்சியின்மை தடுக்கவியலாதபடி வறுமையை ஏற்படுத்திவிடும்.

617. **மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்**
**தாளுளாள் தாமரையி னாள்.**

காரியமாற்றும்போது அதில் ஈடுபடாது சோம்பியிருப்பவனின் மடியில் கரியநிற மூதேவி குடியிருப்பாள்; அதில் ஈடுபட்டுச் சோம்பலின்றிப் பாடுபடுவனது அடியின் கண்ணே தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி வந்து தங்கியிருப்பாள்.

மாமுகடி (மூதேவி), தாமரையினாள் (திருமகள்) இரண்டும் வறுமை, செல்வமாகிய இரண்டின் படிமங்களாகும்.

618. **பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து**
**ஆள்வினை இன்மை பழி.**

மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஐம்பொறிகளில் குறைபாடுடைமை யாருக்கும் பழியன்று; அறிய வேண்டுவனவற்றை அறிந்து முயற்சி எதுவும் செய்யாதிருத்தலே பழியாகும்.

பொறி-ஐம்பொறிகள். 'பொறிவாயில்' (6) 'கோள்இல் பொறியில்' (9) என்னுமிடங்களை ஒப்பு நோக்குக.

619. **தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.**

எடுத்த காரியம் தெய்வத்தின் துணையால் ஆகாவிட்டாலும், அதற்காக எடுக்கும் முயற்சி தன் உடம்பை வருத்திய வருத்தத்தின் அளவு கூலி தரும். உழைப்புக்குப் பயனுண்டு என்பதும் ஒரு தெய்வ நியதியே; இயற்கையின் விதியே; எனவே அவ்விதியைத் தெய்வமும் மீறவியலாது

620. **ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்.**

தடை வந்தபோது மனம் குலையாது, தடுக்கும் ஊழிற்குத் தான் கீழ்ப்படாது, எடுத்த காரியத்தில் கடும் உழைப்பை மேற்கொள்பவர், அங்ஙனம் தடுக்கும் ஊழையும் புறமுதுகுகாட்டி ஓடச் செய்து வெல்வர்.

தாழாது உஞற்றுதல் - அவ்வூழின் மேற்படுமாறு, அதற்குத் தாழ்வுபடாது மிகுந்த முயற்சியை, வருந்திச் செய்தால், வந்த ஊழை விரட்டியடிக்கலாம்.

# ௬௩. இடுக்கண் அழியாமை

வெளிவர முடியாது தவிக்கும்படியான கடுந்துன்பம் வரினும் அதற்கு மனம் அழியாது உறுதியுடனிருத்தல்.

621. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.

ஒருவன் பெருந்துன்பம் ஒன்று வரும்போது, அதனை எதிர்நோக்கிப் புன்னகை கொள்க. அத்துன்பத்தை, வென்று ஓட்ட வல்லது, அம்மகிழ்ச்சி போல்வது பிறிதொன்றில்லை.

அடுத்து ஊர்தல் - வெற்றி கொண்டு அடக்கி ஓட்டுதல், இது ஒரு போர்க்களச் சொல். இன்ப துன்பங்கள் மனநிலை மாற்றங்களே எதிர்கொள்ளத் தயக்கமில்லை என்பதைக் காட்டுவதே. நகுதல், அம்மனநிலையைக் கண்டால் துன்பம் ஓடிவிடும்.

622. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

வெள்ளம்போல் பெருகிவரும் இடும்பைகளெல்லாம் அறிவுடைய ஒருவன், அவற்றைக் கடத்தல் எளிதே என்று தன் உள்ளத்தில் உரத்தோடு நினைத்த அளவில் கெடும். மனத்தளவில் திண்மையுடன் எண்ணும் எண்ணமே துன்பத்தை வெல்லும்.

623. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

கடுந்துன்பம் வந்தவிடத்தும் சிறிதளவும் துன்பமே படாது கடைசிவரை உறுதியோடிருப்பவர்கள், அத்துன்பத்திற்குத் துன்பத்தை உண்டாக்குவர். துன்பத்தைத் துன்பப்பட வைக்கலாமென்பது, வள்ளுவர் காட்டும் உளவியலுண்மைகளில் ஒன்று.

624. மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.

தடை ஏற்பட்ட இடங்களிலெல்லாம், அவற்றைக் கடந்து பார வண்டியை இழுத்துச் செல்லும் எருதுபோலக் காரியத்தைக் கைவிடாது இறுதிவரை முயலக்கூடியவனை அடைந்த துன்பம், அவனைத் துன்புறுத்த மாட்டாமையால், தான் துன்புற்று வருந்த நேரும்

625. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்.

ஒன்றன்மேல் ஒன்றாய்த் துன்பங்கள் அடுக்கி வரினும் அது கண்டு நெஞ்சம் அழியாதானை அடைந்த துன்பம் தான் துன்பப்படும்.

துன்பத்தை ஒரு தனிப் பொருளாக்கி, அதைத் துன்பப்பட வை, துன்புறுத்து, துன்பம் துன்பப்படும் என இவ்வாறு, உள்ளத்திற்கு உரமூட்டுகிறது வள்ளுவம்.

626. **அற்றேம்என்று அல்லற் படுபவோ பெற்றேம்என்று**
**ஓம்புதல் தேற்றா தவர்.**

செல்வம் வந்தபோது அதனைப் பெற்றோமென்று, பாதுகாத்துச் சேமித்து வைத்தலை அறியாதவர்கள், அவை நீங்கி வறுமை வந்த காலத்தில், 'ஐயோ, வறுமைப்பட்டுவிட்டோமே' என்று துயரத்தில் உழல்வது ஏனோ?

இடுக்கண் வராமல் முன்கூட்டிக் காக்க வேண்டும். அவ்வாறு காக்காமல் பிறகு அல்லற்படுவதால் பயனேது?

627. **இலக்கம் உடம்பிடும்பைக்கு என்று கலக்கத்தைக்**
**கையாறாக் கொள்ளாதாம் மேல்.**

கடுந்துன்பத்தால் வரும் மனக்கலக்கம் உடம்பையே குறிவைத்துத் தாக்குமென்பதை அறிந்த மேன்மக்கள் அத்துன்பம் வந்தபோது, அது கண்டு மனங்கலங்குவதை, அதை நீக்கும் வழியாகக் கொள்ள மாட்டார்கள்.

628. **இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்**
**துன்பம் உறுதல் இலன்.**

இன்பமுறுதலை விரும்ப மாட்டான், காரியமாற்றுங்கால் துன்பங்கள் வருதல் இயல்பே என உணர்வான். அவன் துன்பங்களைக் கண்டு துன்பமுற மாட்டான்.

முயற்சித் துன்பங்களை எதிர்பார்ப்பவன் அதனால் துன்பமுற மாட்டான்.

629. **இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**
**துன்பம் உறுதல் இலன்.**

இன்பத்துள்ளிருந்து கொண்டு, அதை அனுபவிக்கும்போதே மனத்தால் அதை விரும்பாதவன் (அதனோடு ஒட்டாதவன்) தனக்கு வரும் துன்பத்துள்ளும் அதை அனுபவித்துக் கொண்டே மனத்தால் வருந்தமாட்டான். இரண்டிலும் விடுபட்டு நிற்கும் மனநிலை இது.

630. **இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்**
**ஒன்னார் விழையும் சிறப்பு.**

ஒரு காரியமாற்றும்போது முயற்சித் துன்பங்கள் வரும் தன் காரியம் முடித்தல் கருதி வருதலின், அவையும் இன்பமே எனக்கொள்ளும் மனப்பக்குவம் ஒருவனுக்கு வாய்த்தால் தன் பகைவரும் விரும்பும்படியான சிறப்பை அடைவான்.

# அமைச்சியல்

தலைமை வாய்ந்த அரசியல் முற்பட இருபத்தைந்து அதிகாரங்களால் கூறப்பெற்றது. இனி ஆட்சியின் பகுதிகளாக, இறைமாட்சியில் கூறிய ஆறினையும் முறையே தனித்தனியாகக் கூறுகிறார். முதலில் அமைச்சியல் 10 அதிகாரங்களில் கூறப்பெறுகிறது.

அமைச்சராவார் அரசனுக்குக் கருத்துரை கூறி வழிகாட்டி ஆட்சியை நடத்துபவர். அமைச்சு என்ற முதல் அதிகாரம் அமைச்சருக்கே உரியது. தூது அமைச்சின் ஒரு பாகமாகவே கூறப்படுகிறது.

மன்னரைச் சேர்ந்தொழுகல், குறிப்பறிதல் இரண்டும் அரசரை, ஆள்வோரை, அதிகாரிகளை, மேலாண்மையினரை அணுகிக்கலந்து, கீழே பணி செய்பவர்கள் பழக வேண்டிய முறைகளை விளக்குகின்றன. தெரிந்து தெளிதல் முதலியன மேலே உள்ளவர்கள் தம்கீழ்ப் பணிசெய்பவர்கள் பற்றியன என்றால், இவை கீழே பணியாற்றுபவர்கள் மேலாட்சி செய்பவர்களுடன் பழகும் முறையைக் கூறுகின்றன.

சொல்வன்மை, அவை அறிதல், அவை அஞ்சாமை அமைச்சருக்கும் மற்றும் அனைவருக்கும் பயன்படுவனவே.

வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல்வகை மூன்றும் அமைச்சர்க்கும், அரசியல் அதிகாரிகட்கும், அலுவலக மேலாண்மையர் அனைவருக்கும் பொருந்துவனவாம். பொதுவாக ஆள்வினையியல் அல்லது நிர்வாகவியலில் பாடமாக வைக்கவேண்டியவை இவை.

# 64. அமைச்சு

அமைச்சராவார் இலக்கணத்தையும் அவர்தம் ஆட்சித் திறன்களையும் விளக்கும் பகுதி இது.

631. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.

செய்தற்கரியன என்றெண்ணும் ஆள் வினைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றைச் செய்வதற்கு வேண்டிய கருவிகள், தக்க காலம் ஆகியவற்றைச் சிந்தித்துச் செய்து முடிக்கும் திறன்களும் பெற்று மாட்சிமைப்பட்டதே அமைச்சாகும்.

632. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.

குற்றம் கண்டவிடத்துத் தண்டிக்கும் மனவுறுதியும், குடிமக்களைப் பேணிக் காத்தலும் ஆட்சி முறைகளைக் கற்பிக்கும் நூல்களைக் கற்றலும் ஆட்சியில் செய்வன தவிர்வன. இவை என அறிதலும் அவற்றைச் செய்வதில் முயற்சியுடைமையும் ஆகிய இவ்வைந்திலும் மாட்சிமைப்பட்டதே அமைச்சாகும்.

633. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு.

பகைவருக்குத் துணையாயினாரைப் பிரித்தலும் தம் துணையாயினாரைப் பகைவர் பிரித்துவிடாமல் கொடை, இன்சொல், நட்பினால் தம்முடன் பேணிக் காத்துக் கொள்ளுதலும் முன்பு தம்மிடனிருந்து பிறகு பிரிந்து போயினாரை மீண்டும் சேர்த்துக் கொள்ள வேண்டின் அவ்வாறு சேர்த்துக் கொள்ளுதலும் ஆகிய இவற்றின் வல்லவனே அமைச்சனாவான்.

எல்லா வகையாலும் தங்களிடம் சேர்த்துக் கொள்ளுதலே வலிமை என்ற அரசவுத்தியைக் கருத்திற் கொள்க.

634. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு.

பலவாறு சிந்திக்கும் சூழலில், எக்காரியம் செய்தற்குரியதென ஒன்றை நன்கு ஆராய்ந்து தெளிதலும், அதனைச் செய்து முடிக்கும் வகையறிந்து திறமையோடு செய்து முடித்தலும், கருத்துரை கூறுங்கால் இவ்வாறும் செய்யலாம் அவ்வாறும் முடிக்கலாம் எனக் குழப்பாது இதுவே செய்யத்

தகுந்தது என ஒரே உறுதிபடச் சொல்லுதலும் ஆகிய வல்லமையுடையது அமைச்சாகும்.

635. **அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்**
**திறனறிந்தான் தேர்ச்சித் துணை.**

அரச அறங்களை அறிந்து, தனக்குரிய கல்வி நிரம்பி, அதற்குத்தக அமைந்த சொல்வன்மையுடையவனாய் எக்காலத்திலும் நாட்டை ஆளும் திறன் அனைத்தையும் அறிந்தவனே அரசர்கட்கேற்ற கலந்தாலோசிக்க வல்ல நல்ல துணையாவான்.

636. **மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்**
**யாஉள முன்னிற் பவை.**

தமக்கு இயல்பாயமைந்த நுண்ணிய அறிவுடன் தமக்குரியவாய ஆட்சிமுறை பறறிய நூற்கல்வியையும் பெற்றிருப்பவர்கட்கு, மிக நுட்பமுடையனவாய் முன்னிற்கும் ஆட்சி வினைகள் யாவை உள?

மதி நுட்பம் வேறு; நூற்கல்வி வேறு. 'நுண்ணிய நூல்பல கற்றாலும் தம் உண்மையறிவே மிகும்' (373) என்ற குறளை ஒப்பிடுக.

637. **செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல்.**

ஆட்சி செய்யுங் காலத்தில், அன்றையதல்லாததும் முன்பே எழுதி வைக்கப்பட்டதுமான நூற்கல்வி முதலியவற்றால் ஆட்சி செய்யும் சட்ட திட்டங்களை அறிந்திருந்தாலும், அன்றைய உலக நடையினை அறிந்து அவ்வக் காலத்திற்குரிய உலக இயற்கைக்கு ஏற்பவே செயற்படுதல் வேண்டும்.

காலத்துக்குக் காலம், நாட்டுக்கு நாடு பற்பல நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் மாறுவதால், 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்பது போன்ற நிலை ஏற்படும்.

638. **அறிகொன்று அறியான் எனினும் உறுதி**
**உழையிருந்தான் கூறல் கடன்.**

அறிந்து, ஆலோசனை கூறுபவரது அறிவை ஏற்காது அவரை இகழ்வதுடன் தானும் நல்லது தீயது அறியான் எனினும் அவ்வரசனுக்கு உறுதிபயக்கும் கருத்துரைகளை, பக்கத்திலிருந்து வழிகாட்டும் அமைச்சன் கூறுதலே கடமையாகும். தன் சொல்லைக் கேட்காமல் இகழ்வான் எனத் தெரிந்தாலும், அமைச்சன் அரசனுக்கு, உறுதி பயக்கும் அறிவுரையைக் கூறாது விடுதல் கூடாது.

639. பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்ஓர்
எழுபது கோடி உறும்.

அரசனின் பக்கத்திலிருந்தே அவனுக்குக் கேடு கருதும் மந்திரியை விட, அவனைப் பகைப்பவர்கள் எழுபது கோடிப்பேர் எனினும் அமையும்.

மிகப்பலவாய பகைவர்கள் என்ற கருத்தில் எழுபது கோடி எனப்பட்டது நல்லவன்போல் கூடயிருந்தே கெடுப்பவனைவிட, பகைப்பவன் எவ்வளவோ மேல். ஏனெனில் இவனிடம் விழிப்பாயிருக்கலாம்.

640. முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்.

ஒரு காரியத்தைப்பற்றி முன்னதாக நன்றாகத் திட்டமிட்டுச் சிந்தித்து வைத்தாலும், பிறகு செய்யும்போது அதை முடித்தற்கேற்ற திறமை சிறிதும் இல்லாதவர், வெற்றியாக முடிக்குமாறு செய்யாமல் தோல்வியுறுமாறே செய்வர்.

திட்டமிடுதல் முதற்படி; அதைச் செய்து முடித்தல் அடுத்தபடி. இரண்டிலும் திறமையுள்ளவனே ஒரு காரியத்தை முற்றமுடிய வெற்றியாக முடிப்பான்.

## 65. சொல்வன்மை

தான் கருதிய காரியத்தை வெற்றியாக முடிக்கும் வகையில் பேசும் வன்மை, ஆள்வோர்க்கு நிருவாக நடைமுறையில் இப்பேச்சு வன்மையின் உதவி பெரிது. சொற்களை ஆளும் திறமை பற்றியது இது மேடையிற் பேசுவது மட்டுமன்றி, உரையாடலில், ஒரு தொழிலில் மேலாண்மையில் எல்லாம் எவ்வாறு பேசவேண்டும்; எத்தகைய சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதை இது விளக்குகிறது. செய்தியாளர்களிடம் பேசும்போது அரசியல் தலைவர்களும் நேர்காணலில் போட்டிக்குச் செல்பவர்களும் திறமையாகப் பேசித் தப்பிக்கவோ, வெற்றி பெறவோ முயல்வதைப் பார்க்கிறோம்.

641. நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று.

நாநலம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற நலமே, ஒருவனுக்குச் சிறந்த உடைமையாகும். அந்நன்மை, பிற எந்த நலத்துள்ளும் அடங்குவது அன்று; அவை யாவற்றினும் மிக்கது.

ஐ.நா. மன்றம் போலும் உலக அரங்குகளில் ஒரு நாட்டுச் சார்பாளர் தன் நாவன்மையினால், பெரும்பாலானவரைக் கவர்ந்துவிடுகிறார். ஒரு தொழிலில், வாணிகத்தில் ஒரு பேரம் பேசுதலில் இந் நாநலம் எவ்வளவு பயன்படுகிறது என்பதை எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கும்.

642. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.

மேன்மேலும் உயரும் ஆக்கமும் அல்லது அழிவும் ஒருவனுக்கு அவனது வாய்ச் சொல்லினால் வருமாதலால், தன்னிடம் அத்தகையதாகிய சொல்லில் சோர்வு ஏற்பட்டுவிடாமல், கவனமாகப் போற்றிக் காத்துக்கொள்ள வேண்டும். சொல்லில் சோர்வுபடுதல் - மறதியாலோ அயர்ச்சியாலோ தவறுபடச் சொல்லிக் காரியக்கேட்டை உண்டாக்குதல்.

ஒரு மாணவன் பதவி ஒன்றுக்கான நேர்காணலில் பயன்படுத்தும் சொற்களும் பேசும் முறையும் அவனுக்கு வாழ்நாள் முழுவதற்குமான வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கின்றன.

643. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

தன் சொல்லை விரும்பிக் கேட்டாரைத் தன்பால் ஈர்த்துக் கொள்ளவல்ல நல்ல திறன்களை உடையவாய், தன் பேச்சைக் கேளாது புறக்கணிக்க எண்ணுவாரும், 'இவர் சொல்வதைக் கேட்க வேண்டுமென' உள்ளுள் விரும்பும்படியாகப் பேசப்படுவதே சிறந்த சொல்வன்மையாகும்.

644. திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல்.

கேட்பவருடைய தன்மையையும் காரியத்தின் நிலைமையையும் அறிந்து, அதற்கேற்ற சொற்களைப் பயன்படுத்திப் பேசுக. அதைக்காட்டிலும் ஒருவனுக்கு நன்மை தரும் அறநெறியும் இல்லை; காரியத்தை வெற்றியாக முடித்துதவும் பொருள்நெறியும் பிறிதில்லை.

அறநெறி வாழ்வையும் செல்வ வளத்தையும் சொல்லாற்றல் தருவதுபோல், தரக்கூடியது பிறிதொன்றில்லை.

645. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.

ஒருவன் தேர்ந்தெடுத்த சொற்களைக் கொண்டே பேச வேண்டும். 'பிறிதொரு சொல்லை இந்த இடத்தில் பயன்படுத்தியிருந்தால், இன்னும் சிறப்பாக இருந்திருக்குமே' எனத் தான் சொன்ன சொல்லை வெல்லும்படியான சிறப்புடைய பிறிதொரு சொல் இல்லை என்பதை அறிந்து, அத்தகைய சொற்களைப் பயன்படுத்திப் பேசுக.

சொற்பொழியும்போது அல்லது எழுதும்போது கையாளும் திறமை இது.

646. வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.

தான் சொல்வதைப் பிறர் தொடர்ந்து கேட்க விரும்புமாறு அவர் மனங்கொள இனிதாகச் சொல்லி, பிறர் தமக்குச் சொல்லும் சொற்களின் பயனைத் தம் கருத்திற் கொள்ளுதல் தமக்குரிய மாட்சிமைப் பண்புகளில் சிறுமாசும் இல்லாதவரது கோட்பாடாகும்.

உரையாடல் திறன் இது பிறர் பேச்சின் உட்கருத்தை உடனே விளங்கிக் கொள்ள வேண்டும். தான் சொல்வதை அவர் விரும்புமாறு மிகத் திறம்பட இனிதாகச் சொல்லவேண்டும்.

647. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

பேசும் சொல்வன்மையுடையவன்; மறந்தும் தவறிப்பேசிவிடாத திறமையாளன்; தன் கருத்தை அஞ்சாது எடுத்துரைக்க வல்லவன் மனவேறுபாடு வந்தவிடத்து அவனை வாதத்தில் வெல்லுதல் யாராலும் இயலாது.

வாதிடும் திறமை இது.

648. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

தான் பேச நினைப்பனவற்றை வரிசைப்படுத்தி, முறை மாறாமல் இனிமைபொருந்த எடுத்துச்சொல்ல வல்லவரைப் பெற்றால், இவ்வுலகம் அவரது பேச்சைக்கேட்டு, விரைந்து அவர்தம் ஏவல் வழி நடக்கும்.

மக்களிடையே சொற்பொழிவு, மேடைப்பேச்சு, தலைவர்களின் அறைகூவல், நாடாளுமன்ற உரைகளில் பயன்படும் திறமை இது.

649. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.

தாம் கருதியவற்றைக் குற்றமற்ற, சுருங்கிய சில சொற்களால் கூற வழியறியாதவரே, பலவாய சொற்களால் பயனின்றி விரித்துப் பேசுதலில் ஆசை கொள்வர்.

650. **இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது**
**உணர விரித்துரையா தார்.**

தாம் கற்றவற்றைப் பிறர் மனங்கொள விரித்துரைக்க மாட்டாதவர்கள், கொத்தாக மலர்ந்து வைத்தும் மணக்காத பூக்களைப் போல்வர்.

பொதுவாக ஆசிரியர்கள் கருத்திற்கொள்ள வேண்டிய குறள் இது. ஒரு கருத்தரங்கில் ஆய்வுரை படிப்பார்க்கும் இது வேண்டும்.

## ௬௭. வினைத்தூய்மை

ஆட்சி செய்வோர் தம் செயலில் அப்பழுக்கற்ற தூயவராதல் வேண்டும் என்பது முதலாவதும் முதன்மையானதுமாகும். வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல் வகை மூன்றும் பொது மேலாண்மை (Public Administration) பற்றியவை. இதில் ஊழல் இல்லாத, கறைபடாத ஆள்வினையை - ஆட்சித்திறத்தை முதலிற் கூறுவது கருதத்தக்கது. முதலில் வினை - செயல் தூயராயிருந்தால்தான் மற்றைய இரண்டுக்கும் மதிப்பும் பயனுமுண்டென்பதை உலக அரசியல் தலைவர்கள் எல்லோரும் உணர வேண்டும்.

651. **துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்**
**வேண்டிய எல்லாம் தரும்.**

ஆள்பவனுக்கு நல்ல துணை அமைவது, ஆக்கமாவன பலவற்றையும் தரும். அதுபோலச் செய்யும் செயலில் களங்கமற்ற தூய்மை அமையின், அது அவன் விரும்பிய நலன்கள் எல்லாவற்றையும் கொடுக்கும்.

652. **என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவா வினை.**

ஒருவன் தனக்குப் புகழோடுகூடிய நன்மையைத் தராத செயல்களை எக்காலத்தும் தன்னிடம் நிகழாதவாறு முற்றிலும் நீக்குதல் வேண்டும்.

நன்மை வருவது முக்கியமன்று; அது புகழோடு வர வேண்டுமாம்.

653. **ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
**ஆஅதும் என்னு மவர்.**

ஆட்சி அதிகாரத்தில் மேலும்மேலும் உயர்வோம் என முயலுபவர்கள், தமக்குளதாகிய ஒளியை அழிக்கும் களங்கமுள்ள வினைகளைச் செய்தலை முற்றும் தவிர்தல் வேண்டும்.

'ஒளி' ஒருவர் வாழுங்காலத்தே விளங்கும் ஆட்சி அதிகாரச் செல்வாக்கால் விளையும் ஆளுமை. புகழ் - வாழும்போதும் பிறகும் ஏற்றிப் பேசப்படுதல். ஒளி பதவி போனதும் போய்விடும். புகழ் நிலைத்திருக்கும்.

654. **இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்**
**நடுக்கற்ற காட்சி யவர்.**

தாம் வெளிவர முடியாத பெருந்துன்பத்திலே அகப்பட நேரினும், அதிலிருந்து தப்புவதற்காகத் தமக்கு இழிவு தரும் செயல்களை ஒருபோதும் செய்ய மாட்டார்கள், அசைவற்ற உறுதியான தெளிவினையுடையவர்கள். வினைத் தூய்மையுடையவர்களும் சில போது இக்கட்டான சூழலில் தமக்கு இழிவு தரும் செயல்களைச் செய்தேனும் தப்பிக்க முயல்வர் அது கூடாது.

655. **எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்**
**மற்றன்ன செய்யாமை நன்று.**

ஒருவன் பிற்பாடு 'ஐயோ! இதை யான் ஏன் செய்தேன்' எனத் தானே இரங்கும்படியான செயல்களைச் செய்யாதிருப்பானாக. ஒருவேளை அங்ஙனம் இரங்கும்படியானவற்றைத் தவறிப்போய்ச் செய்து விடுவானேல், அதற்காக வருந்துவது மட்டுமல்லாமல், மீண்டும் அவ்வாறு இரங்கும்படியான செயல்களைச் செய்யாதிருத்தலே நன்று.

இரங்கும்படியானதைச் செய்வதென்பது தவறிப் போய்ச் செய்துவிடுவது. நல்லவனாக இருந்தும், அவ்வாறு தவறிவிட நேர்ந்தால், மீண்டும் அத்தவறு வராது காக்க முயலவேண்டும்.

656. **ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை.**

ஒருவன் தன்னைப் பெற்ற தாயே பசியால் வாடக் கண்டானாயினும் அதைக் காரணமாகக் காட்டி, சான்றோர்கள் பழி தூற்றும்படியான தீய செயல்களைச் செய்யாது தவிர்த்தல் வேண்டும்.

தாய் பசித்திருத்தல் போலும் இக்கட்டான சூழல்களில் தீயன செய்தேனும் காப்பாற்றலாம் என்று வடநூல்கள் கூறுவதுடன் வேறுபடுவது இது. பரிமேலழகர் 'இறந்த மூப்பினராய இருமுது குரவரும் (தாய் தந்தையர்) கற்புடை மனைவியும் குழவியும் (குழந்தையும்) பசியான் வருந்தும் எல்லைக்கண் தீயன

பலவும் செய்தாயினும் புறந்தருக (பாதுகாக்க) என்னும் அறநூற் பொதுவிதி'. நன்கு மதிக்கப்படும் அமைச்சர்க்குப் பொருந்தாது என்பதால், திருவள்ளுவர் இங்ஙனம் கூறினார் என விளக்கியுள்ளார். இதிலிருந்து வடநூற் பொதுவிதியுடன் வேறுபடுவது மட்டுமல்லாமல், அமைச்சர்கள் மட்டுமன்றி அறவழி நடக்கும் எவரும் 'சான்றோர் பழிக்கும் தீய செயல்களைச் செய்யக் கூடாது' என்பதே வள்ளுவர் கருத்தெனவும் உணர்தல் வேண்டும். திருவள்ளுவர் தீயன செய்வதற்கு இம்மியும் இடம் கொடுக்கவில்லை. கழுவாயும் கூறவில்லை என்பதுதான் பிற சமய நூல்களுக்கும் திருக்குறளுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு.

657. **பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்**
**கழிநல் குரவே தலை.**

பழிச்சொற்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு சேர்க்கும் செல்வம், செல்வாக்கு, பதவி போலும் பல ஆக்கங்களைவிடச் சான்றோராய் வாழ்ந்து அனுபவிக்கும் மிகுந்த வறுமையே மிகவுயர்ந்ததாகும்.

658. **கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்**
**முடிந்தாலும் பீழை தரும்.**

பெரியவர்கள் கடிந்து ஒதுக்கிய தீமைகளைத் தாமும் கடிந்து நீக்காது அவற்றைச் செய்பவர்கட்கு, அக்காரியங்கள் ஒருவேளை அச்சமயத்தில் அவர் கருதியபடி முடிந்தாலும், பிற்பாடு நீக்கவொண்ணாத பெருங்கேட்டினையே தரும்.

659. **அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்**
**பிற்பயக்கும் நற்பா லவை.**

பிறர் அழுமாறு தீய வினைகளைச் செய்து அவரிடமிருந்து கொண்ட செல்வமனைத்தும் பிற்பாடு தான் அழுது புலம்புமாறு கைவிட்டுப்போகும். நல்ல வழிகளில் பெற்ற செல்வத்தை இழந்துவிட நேர்ந்தாலும் பிற்பாடு அவை திரும்ப வந்து, உரிய நன்மையைப் பயக்கும்.

தீய வழிகளால் நன்மைகள் கிடைக்கின்றன. நல்ல வழிகளால் பெரும்பாலும் துன்பப்படவே நேர்கிறது. இதுபோன்ற ஒரு தோற்றம் உலகிடைக் காணப்படுகிறது. ஆயினும், அவை முடிவில் துன்பமே தருமெனத் தெளிவுபடுத்துகின்றன இக்குறள்கள்.

660. **சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமண்**
**கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று.**

தீய ஊழல் மலிந்த வஞ்சகச் செயல்களால் ஒருவன் செல்வத்தைச் சேர்த்து, அதனை நெடுங்காலம் கட்டிக்காக்கலாம் என எண்ணுதல், பசுமண் பானையில் நீரைப் பெய்து நிலைபெறுமாறு வைத்த தன்மையதாகும். பச்சைமண் பானையில் நீரைப் பெய்து வைத்தால், பானையும் கரைந்து நீரும் ஒழுகிப் போகும். அதுபோலத் தீவினைகளால் செல்வம் சேர்த்தால், சேர்த்தவனும் அழிந்து செல்வமும் ஒழிந்து போகும்.

## 67. வினைத்திட்பம்

ஆட்சி நிருவாக நடைமுறைகளை, மன உறுதியுடன் செப்பமுறச் செயலாற்றுவது. 'செய்வன திருந்தச் செய்' என ஔவை வாக்கை எண்ணுக.

661. **வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற.**

உறுதியும் செப்பமும் கூடியதாய் ஒருவனது மனத்திலுண்டாகும் திட்பமே அவனுடைய செயல் திட்பமாக வெளிப்படும்; அதைத் தவிர்த்த பிற யாவும் திட்பமெனக் கூறத்தக்கன அல்ல. புறத்தே பலவாறு முயலப்படினும் அகத்திட்பமின்றேல் அம்முயற்சிகள் பயன்படா

திட்பம் என்பது திருந்திய செயல்வடிவம். ஒரு கட்டிடத்தின் வரைபடமே (Blue Print) பிறகு கட்டிட வடிவமாய் முன் எழுந்து நிற்கிறது. மனத்தில் தீட்டப்படும் வரைபடமே மனத்திட்பம். அம் மனத்திட்பமே, பிறகு வினைத்திட்பமாக வெளிப்படும்.

662. **ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்**
**ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.**

ஒரு காரியத்தில் இடையூறாய் வந்து, பழுதுபடும் செயல்களை வருமுன்பே தவிர்த்தலும், தம்மை மீறி எதிர்பாராது செயல் பழுது படுமானால் அதற்கு மனம் தளராதிருத்தலும் ஆகிய இவ்விரண்டுமே ஆட்சி செய்யும் நெறியென்பது. நிருவாக நடைமுறைகளை ஆராய்ந்தவர்களின் கருத்தாகும்.

663. **கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்**
**எற்றா விழுமம் தரும்.**

ஒரு வினையை அது முற்றமுடியும்வரை தன்னடக்கமாகவும் கமுக்கமாகவும் செய்து முடித்து, இறுதியில் பிறர் அறியுமாறு செய்வதே ஆளும் திறமையாகும்; அவ்வாறன்றி இடையே பலரறிய

வெளிப்படுமாயின், அது அவ்வினை செய்வானுக்கு நீங்காத பெரும் துன்பத்தைக் கொடுக்கும்.

பொறாமைப்படுவோர், கெடுக்க நினைப்போர், சிறுமனமுடையோர் எவராலேனும் ஏதேனும் கெடுதல் நேரலாம். எனவே முக்கியமானவற்றைக் கமுக்கமாய்ச் செய்வதே நலம்.

664. **சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்.**

'யாம் இவ்வினையை இவ்வாறு திட்டமிட்டுச் செய்து முடிப்பேம்' என வாயால் சொல்லிவிடுதல் எல்லோர்க்கும் எளிதாகும்; அங்ஙனம் சொல்லியபடியே செய்து முடிப்பதென்பது அரிய செயலாகும்.

665. **வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்**
**ஊறெய்தி உள்ளப் படும்.**

மற்றவர்க்கில்லாத பெருஞ்சிறப்பைப் பெற்று, மாட்சிமைப்பட்டவர் என்று கூறப்படும் அமைச்சர்களது செயல்திட்டம் எப்போது தெரியவரும் என்றால், தமது வேந்தர்களுக்கு ஓர் இடையூறு ஏற்பட்டபோது, அதை அவர்கள் தீர்க்கும் விதத்தைப் பார்த்து மதிக்கப்படும்.

666. **எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்.**

குறிக்கோள்களை எண்ணிச் சாதிக்க விரும்புகின்றவர்கள், அவ்வாறு தாம் எண்ணியவற்றை நிறைவேற்றும் வழிகளில் அசைவிலா மனத்திண்மை படைத்தவர்களாக இருந்தால், நினைத்தவற்றை நினைத்தவாறே அடைவார்கள்.

'உள்ளியது எய்தல் எளிதுமன்' என்ற குறளையும் (540) ஒப்பு நோக்குக.

667. **உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து.**

உருண்டு ஓடுகின்ற பெரிய தேருக்கு, அச்சு மரத்தினின்றும் உருளையைக் கழன்று ஓடிவிடாமல் தடுக்கும் சின்னஞ்சிறு ஆணியைப்போல, ஆட்சிச் சக்கரத்தைக் காக்கும் மனத்திட்பமுடையாரை உடையது இவ்வுலகம். எனவே சிலபோது அவரது சிறிய வடிவம் கருதி, இகழ்தல் கூடாது. புறத்தோற்றத்தை விட, மனத்திட்பமே முக்கியம்

668. **கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கம் கடிந்து செயல்.**

இதுவா அதுவா என்று கலங்காது, இவ்வினையே செய்யத்தகுவது எனத் துணிந்த செயலின்கண், அதைச் செயற்படுத்தும்போது, இதைத் தம்மால் செய்ய முடியுமோ' என்பது போல மனம் அசைதலின்றி, காலம் நீட்டித்தலை முற்றிலும் தவிர்த்து 'உடனே செயலில் இறங்க வேண்டும்.

669. **துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.**

முதற்கண் முயற்சித் துன்பம் மிகுதியாக வருமாயினும் அதற்காக மனம் தளராமல், முடிவில் இன்பத்தைத் தரும் அரிய காரியத்தைத் துணிவுடன் உழைத்துச் செய்க.

670. **எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.**

சிந்தனை, வாய்ப்பேச்சு முதலாய பிறபல திட்பங்களெல்லாம் வாய்க்கப் பெற்றவர்களாக இருந்தாலும், செம்மையாய்ச் செய்து முடிக்கும் மன உறுதியான வினைத் திட்பத்தை விரும்பிப் பெறாதாரை, உலகு விரும்பாது.

## 68. வினைசெயல்வகை

வினை என்பது ஆட்சி செய்தல், நிருவகித்தல், காரியங்களாற்றுதல் எனப்படும். அதில் தூய்மை வேண்டும் என்றார். மனத் திட்பமும் செயலாற்ற வேண்டுமென்றார்; இங்கு அதைச் செய்யும் நெறிமுறைகளை விளக்குகின்றார்

671. **சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.**

ஒன்றைப் பற்றிச் சிந்திப்பதின் விளைவு ஏதேனும் ஒரு தெளிந்த முடிவிற்கு வருவதற்காகும். அங்ஙனம் தெளிந்து முடிவு செய்த பிறகு, அக்காரியத்தை உடனே செய்யாது, காலம் தாழ்த்தி ஆறப்போடுவது தீதாய் முடியும்.

672. **தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.**

காலம் தாழ்த்தி மெதுவாகச் செய்யக்கூடிய வினைகளைக் காலம் நீட்டித்துச் செய்யலாம்; காலம் தாழ்த்தாது உடனே செய்ய வேண்டியவற்றையும் அங்ஙனம் தாழ்த்தி விடாது விரைந்து செய்க.

இன்று மேசைமுன் வைக்கப்படும் கோப்புகளுக்கும் இது பொருந்தும். விரைந்து முடிக்க வேண்டிய கோப்புகளை மேலே எடுத்து, உடனே செய்தல் வேண்டும்.

673. **ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்**
**செல்லும்வாய் நோக்கிச் செயல்.**

எந்த வழிகளிலெல்லாம் தன்னால் ஒரு வினையைச் செய்ய இயலுமோ அந்த வழிகளிலெல்லாம் முயலுதல் நன்று; அவ்வாறு தான் முயன்ற வழிகளில் இயலாதவிடத்து, அந்த வினையின் போக்கை ஆராய்ந்து, அதற்கேற்ற வேறு எவ்வழியில் முடியுமோ அதன் மூலம் காரியத்தைச் செய்து முடித்தல் வேண்டும்.

நாம் நினைக்கிற வழியிலேயே வெற்றி கிடைத்தால் நல்லதுதான். இல்லையென்றால், வெற்றி கிடைக்கக்கூடிய வழியை அறிந்து அதற்கு நாம் மாறிக் கொள்ள வேண்டும். நாம் ஒரு எழுதுபொருள் அங்காடி - தாள், பேனா, பென்சில் என்று தொடங்குகிறோம். வருபவர்கள் பலரும் உப்பு, புளி, அரிசி எனக் கேட்டு வந்தால், நம் கடையைப் பலசரக்குக் கடையாக மாற்றிக் கொள்வதே நல்லது.

674. **வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்**
**தீயெச்சம் போலத் தெறும்.**

தீயினை முழுவதும் அணைக்காமல், சிறிது எஞ்சிக் கிடந்தால் என்ன செய்யப் போகிறது என விட்டுவிட்டால் அது பிறகு பெரிதாகி அழிவைத் தர நேரும். அதுபோல ஒரு வினையை முழுவதும் செய்து முடிக்காமலும் பகையை முழுவதும் அடியோடு ஒழிக்காமலும் எஞ்சி நிற்குமாறு இடையில் விட்டுவிடின் அங்ஙனம் எஞ்சி நிற்பவை தீயினது எச்சம்போலப் பிறகு வளர்ந்து அழிவைத் தரும். ஒரு செயலைத் தொடங்கி இடையில் கைவிடுவதும், பகையை ஒழிக்கத் தொடங்கி இடையில் கைவிடுவதும் தீயை அணைக்கத் தொடங்கி முற்றிலும் அணைக்காமல் விடுவதற்கு ஒப்பாகும்.

675. **பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்**
**இருள்தீர எண்ணிச் செயல்.**

ஒரு காரியமாற்றத் தொடங்குங்கால் அதற்கு வேண்டிய பொருட்செல்வமும், கருவிகளும், தக்க காலமும், அச்செயலின் அளவும், ஏற்ற இடமும் ஆகிய இவ்வைந்தினைப் பற்றியும், மயக்கமறத் தெளிவாகச் சிந்தித்துப் பிறகு அச்செயலைத் தொடங்குக.

இவற்றில் காலம் - காலமறிதல், வினை - வலியறிதல், இடம் - இடனறிதல், இவற்றுடன் வேண்டிய அளவு பொருளும் கருவியும் வேண்டும்.

676. முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

ஒரு தொழிலோ, வாணிகமோ, பிறிதொரு காரியமோ எதுவாயினும் தொடங்குமுன், அது எவ்வாறு செய்து முடிக்கப்படும் எனக் காரியம் முடியுமாற்றையும், இடையே வரும் இடையூறுகள் எவையெவை எந்த அளவு வந்து பாதிக்கும் என்பதையும், இவற்றைக் கடந்து முழுவதும் செய்து முடித்த பிற்பாடு இறுதியில் கிடைக்கும் நிகர ஊதியத்தையும் சீர்தூக்கிப் பார்த்து, நன்மை உண்டேல் அதனைத் தொடங்குக.

677. செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.

செய்யப்படும் ஒரு தொழிலைச் செய்யப் புகுகின்றவன் அதனைச் செய்யும் செயல்முறைகள் யாவை என்றால், அத்தொழிலை முன்பே செய்து பழகியவன், அதன் உள்ளார்ந்த திறன்களை எல்லாம் அறிந்திருப்பானாதலால், அவனிடமிருந்து அவ்வறிவைத் தான் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அவனுடன் கலந்து பேசி, நன்கு மனங்கொண்ட பிறகு செயலில் இறங்க வேண்டும்.

678. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

ஒரு காரியத்தைச் செய்து முடித்துக் கொள்கிறபோதே, அதனோடு சேர்ந்து பிறிதொரு வினையையும் முடித்துக் கொள்ளுதல் ஓர் அரிய செயல் திறமையாகும். அது மதம் பொழியும் கன்னத்தையுடைய யானை ஒன்றைக்காட்டி அதைப்போன்ற பிறிதொரு யானையைப் பிடித்துக் கொள்வது போன்றதாகும்.

பார்வை யானையைக் காட்டினால், காட்டு யானை பின்தொடரும். அதைப் பிடிக்க இது ஒருவழி. 'கம்புக்குக் களையெடுத்தாற் போலவும் இருக்கும்; தம்பிக்குப் பெண்பார்த்தாற் போலவும் இருக்கும்' என்ற பழமொழி போன்றது இது.

679. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்.

தம் நண்பர்களுக்கு நல்லனவற்றைச் செய்தல் வேண்டும். ஆயினும் அதனிலும் விரைந்து செய்ய வேண்டியது யாதெனில், தம்மோடு

ஒட்டாது விலகி நிற்பாரைத் தமக்கு நட்பாக்கிக் கொள்ளுதலாகும். அரசியல் தந்திரங்களில் ஒன்று இது.

680. **உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்**
**கொள்வர் பெரியார்ப் பணிந்து.**

தாம் ஆளும் நாடு சிறியதாகிய அமைச்சர்கள், தம்மைவிட வலியவர்கள் எதிர்த்து நிற்குமிடத்து, தம் குடிமக்கள் நடுங்குவதை உணர்ந்து, அதற்கு அஞ்சித் தம்மினும் பெரியராகிய அவ்வரசர்களிடம் நட்புச் செய்து கொள்வதால் தமது குறை நீங்கப் பெறுமாயின், அதைப் பணிந்து ஏற்றுக் கொள்வர். நட்புச் செய்தல் - தூதனுப்பிச் சமாதானம் செய்து கொள்ளுதல்; அதற்கு வாய்ப்பிருந்தால் நழுவ விடக்கூடாதாம்.

## 69. தூது

மன்னர்களிடையே கருத்துப் பரிமாறிக் கொள்ளத் தூது செல்வாரது இலக்கணமும் செயல்திறனும். இவர்கள் அமைச்சர்களுக்கு நிகராக மதிக்கப்பட்டனர். போரில் அதை நிறுத்தி ஒற்றுமைப்படுத்தத் தூதனுப்பிப் பார்ப்பதுண்டு.

681. **அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்**
**பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.**

தூது சென்று மாற்றரசரிடம் தன் அரசனுக்காகச் செய்தி சொல்பவனது இயல்பான பண்புகள் பொதுவாக அன்புள்ளவனாதல், சிறந்த குடியில் பிறந்தவன் ஆதல், வேந்தர் விரும்பும் நற்பண்புகளைப் பெற்றிருத்தல் ஆகிய மூன்றுமாம்.

682. **அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு**
**இன்றி யமையாத மூன்று.**

தூதுரைப்பவனிடம் சிறப்பாக அமைந்திருக்க வேண்டிய, இன்றியமையாத தன்மைகள்: தம் அரசனிடம் அன்புடையவனாதல், தன் அரசனுக்கு வேண்டிய யாவை என அறியும் அறிவுடையனாதல், வேற்றரசர்களிடம் தன் அரசனுக்காக நன்கு சிந்தித்துப் பேசும் சொல்வன்மை பெற்றிருத்தல் ஆகிய மூன்றுமாம்.

முன்னைய மூன்றும் இயல்பாக அமைந்திருக்க வேண்டியவை; பின்னைய மூன்றும் தூதுவன் தன்னிடம் வளர்த்துக் கொள்ள வேண்டியவை. இவற்றுள் அன்பு இயல்பாகவும் இருக்க வேண்டும்; மேன்மேலும் வளர்த்துக் கொள்ளவும் வேண்டுமென்பதால் இரண்டு முறை கூறப்பட்டுள்ளது.

683. நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

வேலைத் தாங்கிய மன்னரிடைச் சென்று, தன் மன்னனுக்கு வெற்றிதரும் காரியங்களை எடுத்துரைக்கவல்ல தூதுவனின் பண்பு, ஆட்சிமுறை நூல்களைக் கற்றவர் நடுவே, தான் அவரினும் சிறந்த அந்நூற் கல்வியுடையவனாகத் திகழ்தல் ஆகும்.

நூற்கல்விச் சிறப்பால், கொல்லவல்ல வேலையுடையவராகிய பகையரசர் அவையில் திறமையாகப் பேசித் தன் மன்னவனுக்குச் சார்பாக நிலையை உருவாக்க வல்லவனாதல், தூதனுக்கு வேண்டிய இன்றியமையாத இயல்பாகும். 'வேலாருள்' என்பது, அச்சம் தரும் படைகளையுடைய அரசவை நடுவே, தன் அரசனுக்காக வாதிட அஞ்சாமை வேண்டுமென்ற குறிப்பைத் தருகிறது. 'நூல்' என்பதைத் தந்திரம், சூழ்ச்சித் திறம் என்ற பொருளிலும் (ஏதில ஏதிலார் நூல் 440) வள்ளுவர் ஆள்வதால், தந்திரமிக்கவர்களிடையே அவர்களைவிடத் தந்திரம் மிக்கவனாகத் தூதுவன் விளங்க வேண்டும் என்ற குறிப்புமுளது.

684. அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

இயற்கையிலமைந்த கூர்மையான அறிவும் கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும் ஆட்சி நெறிமுறைகளை நன்கு ஆராய்ந்த கல்வியறிவும் ஆகிய இம்மூன்றையும் முழுமைபெறப் பெற்றவன், தூது செல்வதற்குத் தகுதியுடையவனாவான்.

மூன்று மூன்று என்று மூன்று முறை தூதுரைப்பானிடமிருக்க வேண்டிய பண்பு நலன்களைப் பட்டியலிடுவதை நினைவு கொள்க.

685. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது.

வேற்றரசர்களிடம் வழவழ என்று பேசாமல், தான் சொல்ல வந்ததை நிரல்படக் காரண காரியத்தோடு தொகுத்துச் சுருக்கமாச் சொல்லி, கருத்து வேறுபாட்டை வளர்த்துத் தங்கட்குத் தீமை தரும் பொருந்தாத சொற்களைப் பேசிவிடாமல் அவற்றைக் கவனமாக நீக்கி, பகையரசர்க்கு வேண்டாதனவே எனினும் அவற்றை அவர் மனம் மகிழுமாறு இனிதாகச் சொல்லி, தன் மன்னனுக்கு நன்மையை விளைவிப்பவனே நல்ல தூதுவன்.

686. கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது.

அரசியல் நூல்களைப் படித்து நன்கு கைவரப் பெற்றிருப்பதால், பகையரசர் எதிரே, அவர் வெகுளினும் அஞ்சாது நின்று, தான் சொல்ல வந்ததை அவர் மனம் ஏற்குமாறு சொல்லி, அந்தக் கணத்தில் அச்சூழலில் எவ்வாறு பேச வேண்டுமென காலத்திற்குத் தக்கவாறு உடனுக்குடன் பேச அறிந்தவன் சிறந்த தூதுவனாவான்.

காலத்தால் தக்கது அறிவது - அந்தச் சமயத்தில் எப்படிப் பேச வேண்டுமென உடனுக்குடன், அவ்வக் கணத்தில், சூழலுக்கேற்பத் திறமையாகப் பேசிச் சமாளிப்பது.

687. **கடனறிந்து காலம் கருதி இடனறிந்து**
**எண்ணி உரைப்பான் தலை.**

காரியமாற்ற வேண்டிய கடமையின் தன்மையை அறிந்து பகையரசரிடம் சொல்லுதற்குத் தக்க செவ்வி பார்த்து, அப்போதுள்ள இடச் சூழலையும் கருத்திற்கொண்டு அவற்றிற்கேற்பத் தானாகச் சிந்தித்துப் பேச வல்லவனே சிறந்த தூதுவனாவான்.

தூது சென்று பேசுவதற்குக் காலமறிதலும் இடமறிதலும் மிகமிக முக்கியம். அதனால் அவற்றைத் திரும்பவும் வற்புறுத்துகிறார். இன்று உலக நாடுகளில் தூதுவராக நியமிக்கப்படுபவர்களுக்கு இவை அனைத்தும் தேவைப்படும் திறமைகளாகும்.

688. **தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்**
**வாய்மை வழியுரைப்பான் பண்பு.**

பகைவரால் ஆசைகாட்டித் தம் பக்கம் சேர்க்கமுடியாத பொருள், காமம் போன்றவற்றால் ஈர்க்கமுடியாத தூயவனாதலும், பகைவரவைக்கண் சிலரைத் தனக்குத் துணையாக்கிப் பேச வல்ல திறமையுடையவனாதலும் சொல்ல வந்ததைப் பகையரசர் சினங் கொண்டு துன்பம் செய்வரென அஞ்சாமல் துணிந்து சொல்ல வல்லவனாதலும் ஆகிய இம்மூன்றையும் வெளிப்பகட்டாக அல்லாமல் உண்மையாகக் கொண்டிருப்பதே அரசன் சொன்னதை அவன் சொல்லியபடியே வேற்றரசரிடம் சொல்ல வேண்டிய தூதுவனது இலக்கணமாகும்.

689. **விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்**
**வாய்சோரா வன்க ணவன்.**

தன் அரசனுக்குத் தாழ்வுதந்து வடுவையுண்டாக்கக் கூடிய சொற்களை வாய்தவறியும் பேசிவிடாத மனவுறுதியையுடையவனே, அரசன் சொல்லியனுப்பிய மறுமொழியைப் பகையரசர்க்குச் சொல்லுதற்குத்

தகுதியுடைய தூதுவன் ஆவான். மாற்றம் - மறுமொழி,கேட்டதற்கு விடை கூறுதல்.

690. **இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு**
**உறுதி பயப்பதாம் தூது.**

தன் அரசன் கூறியனுப்பியதைப் பகையரசர் முன் சொன்னால், தன்னுயிர்க்கு ஆபத்தையுண்டாக்குமென்று தெரிந்தாலும் அதற்கு அஞ்சி அதனைக் கூறாது விடாமல், தன் அரசனுக்கு நன்மை விளையுமாறு நடந்து கொள்பவனே சிறந்த தூதுவனாவான்.

## 70. மன்னரைச் சேர்ந்தொழுதல்

அமைச்சர் முதலானோர் மன்னர்களைச் சார்ந்து பழகும் நெறிமுறைகள். இதை ஆளப்படுவோர், ஆள்வோரைச் சார்ந்து பழகவேண்டிய நெறிமுறைகளாகவும் கொள்ளலாம்.

691. **அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.**

ஆட்சியதிகாரம் கையிலிருக்கிற காரணத்தினால் எந்த நேரமும் மனம் மாறுபடுதற்குரிய வேந்தர்களைச் சார்ந்து பழகுவோர், அவரைவிட்டு மிக விலகாமலும் மிக நெருங்காமலும் குளிருக்குத் தீக்காய்வார் போலப் பழகுக.

குளிர் காயும்போது நெருப்புப் பக்கத்தில் போனாலும் சுடும்; மிக விலகிப் போனாலும் குளிர் காய முடியாது. அதுபோல் மேலதிகாரிகளுடன் மிக விலகியும் போகாது, மிக நெருங்கவும் செய்யாது அளவாகப் பழகவேண்டும்.

692. **மன்னர் விழைப விழையாமை மன்னரால்**
**மன்னிய ஆக்கம் தரும்.**

மன்னர்கள் அல்லது ஆள்வோர் விரும்பும் ஆடம்பரத் தன்மை, ஒப்பனை, நுகர்வன போன்றவற்றைத் தாமும் விரும்பாதிருத்தல், அம்மன்னர்களால் உணரப்பட்டுத் தமக்கு நிலைபெற்ற ஆக்கம் பலவும் தரும்.

693. **போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்**
**தேற்றுதல் யார்க்கும் அரிது.**

அரசர்களோடு அல்லது மேலாண்மையரோடு பழகுவார் தம்மைக் காத்துக் கொள்ளக் கருதினால், அரிய பிழைகள் எவையும் தம்மிடம் வராமல் காக்க வேண்டும். ஏனெனில், அரசர்கட்கு ஒருமுறை ஐயம் ஏற்பட்டுவிட்டால், பிறகு அவர்களை அவ்வையம் தீர்த்து நம்ப வைத்தல் யாராலும் இயலாது.

694. **செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்**
**ஆன்ற பெரியா ரகத்து.**

கல்வி கேள்விகளால் நிரம்பிய பெரியவர்கள் அருகிலிருக்கும்போது, அவர்கள் பார்க்க ஒருவன் மற்றவன் செவிக்கண் ஏதோ இரகசியம் போல் பேசுவதையும் மற்றவர்களோடு சேர்ந்து சிரிப்பதையும் முற்றிலும் தவிர்க்க வேண்டும். இன்றேல் அவர்கள் தம்மைப்பற்றிய குறைகளைப் பேசுவதாகவும், அங்ஙனம் பேசிச் சிரிப்பதாகவும் எடுத்துக் கொள்ள நேரும்.

சாதாரண நடைமுறை உண்மை இது. பெரியவர்கள் சற்றுத் தள்ளி இருக்கும்போது, தாம் சிலராகக் கூடிச் சிரிப்பது, காதிற்குள் கிசுகிசப்பது எல்லாம் அவர்களுக்கு ஐயத்தை ஏற்படுத்திச் சினம் மூட்டும். இக்குறளில் மன்னர் என்னாது ஆன்ற பெரியவர்களிடம் எனப் பொதுப்படக் கூறுவதைக் கவனியுங்கள். இதுதான் குறளின் சிறப்பு.

695. **எப்பொருளும் ஓரார் தொடரார்மற்று அப்பொருளை**
**விட்டக்கால் கேட்க மறை.**

ஆள்பவர்கள் மறைவாகச் சிலவற்றைக் கையாளக்கூடும். அக்காலத்தில், அவற்றில் யாதொரு செய்தியையும் கூர்ந்து செவி கொடுத்துக் கேட்கலாகாது; அவற்றைப் பற்றித் தோண்டித் துருவி அறியுமாறு தொடரலாகாது; அம்மறைவான செய்திகளை அவர்களே வெளிப்படுத்துங் காலத்தில்தான் கேட்டறிய வேண்டும்.

696. **குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில**
**வேண்டுப வேட்பச் சொலல்.**

அரசர்களிடம் அல்லது தமக்கு மேலேயுள்ளவர்களிடம் ஏதும் காரியமாகப் பேச நினைக்கின்றபொழுது, அவர்தம் மனக் குறிப்பினையறிந்து, சொல்லுதற்கேற்ற காலத்தையும் நோக்கி, அவர்க்கு வெறுப்பை விளைவிக்காதவையும் மிகவும் வேண்டியனவுமானவற்றை மட்டும் அவர் விரும்பும் வகையில் சொல்லுக.

697. **வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்**
**கேட்பினும் சொல்லா விடல்.**

அரசர்கட்கு அல்லது மேலாண்மையினர்க்குப் பயன்படுவனவும் அவர்கள் விரும்புவனவுமானவற்றைச் சொல்லி, அவர்கட்கு வேண்டிய காரியங்களல்லாத பயனற்றவற்றை, எப்பொழுதும் அவர்கள் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தாலும் சொல்லாது விடுக.

**698. இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற**
**ஒளியோடு ஒழுகப் படும்.**

இவர் நமக்கு வயதில் இளையவர்தானே என்றும்; இவர் நமக்குக் கீழே வேலையாளாக, மாணவனாக, ஏழையாக முன்பொருகாலத்தில் இருந்தவர்தானே என்றும் இப்போது உயர் பதவியிலிருக்கும் ஒருவரை இகழாமல் இப்போது அவர் இருக்கும் உயர்ந்த நிலையாகிய சிறப்புக்கேற்ப மதிப்புக் கொடுத்துப் பழக வேண்டும்.

பழகும் மனிதப் பண்பாட்டைக் கற்றுத் தரும் உச்சநிலையை இக்குறளால் அறியலாம். நின்ற ஒளி - இப்போதிருக்கும் உயர்ந்த நிலை, பதவி.

**699. கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்**
**துளக்கற்ற காட்சி யவர்.**

அரசன் அல்லது ஆள்வோர் சிலரை மிகவும் அன்பு பாராட்டி, உறவினர் போல் நடத்தலாம். அதற்காக, அவர்கள் 'நாம் ஆள்வோரால் மிகவும் மதிக்கப்பட்டுத் தம்முடையவராகக் கைக்கொள்ளப்பட்டிருக்கிறோம்; அதாவது 'நாம் ஆள்வோர்க்கு - அரச குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவர்கள்' என்று எண்ணி, அவர்கள் விரும்பாத, உலகம் ஏற்காதவற்றைச் செய்யார், அசைவற்ற உறுதியான அறிவினையுடையவர்கள் சிறிது செய்தாலும் பின்பு அது பெருந்துன்பமாய் முடியும்.

**700. பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்**
**கெழுதகைமை கேடு தரும்.**

அரசனுக்கு அல்லது மேலேயிருந்து தம்மைப் பணிகொள்பவர்களுக்கு, 'நாம் நீண்ட நாளாகப் பழக்கமுடையோம்' என எண்ணி, அந்நட்புரிமை பற்றித் தம் தகுதிக்குப் பொருந்தாத பண்பல்லாதவற்றைச் செய்தால், அம் மிகைப்பட்ட உரிமையுணர்வு பிற்பாடு அழிவைத் தரும்.

மன்னரைச் சேர்ந்து ஒழுகுதல் பற்றிய அதிகாரமாயினும் அரசர் என்ற சொற்பொருள் வருமிடம் இரண்டேயாகும். அதனால் தம் மேலாண்மையரிடம் ஒருவன் நடந்து கொள்ளும் முறையாகவும் கொள்ள இது இடம் தருதல் காணலாம்.

# 71. குறிப்பறிதல்

ஒருவருக்கொருவர் குறிப்பறிந்து பழகுதல். அரசன் குறிப்பறிந்து அமைச்சர் பழகுதலும் அவ்வாறே ஆள்பவன் மற்றவர்களின் குறிப்பறிந்து பழகுதலும் எல்லாம் இதிலடங்கும்.

701. **கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்**
**மாறாநீர் வையக்கு அணி.**

ஒருவர் தம் கருத்தை வாய்விட்டுக் கூறுவதன் முன்பே அவர்தம் உள்ளக்குறிப்பை, முகத்தையும் கண்ணையும் உற்றுநோக்கியே, அறியக்கூடியவன் எக்காலத்திலும் வற்றாத நீரால் சூழப்பட்ட உலகிற்குச் சிறந்த அணிகலன் போன்றவன் ஆவான்.

702. **ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்**
**தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.**

ஒருவர் தம் உள்ளத்தினுள் நினைப்பதை 'இதுதான்' என உறுதியாக உய்த்துச் சிறிதும் ஐயப்படாது அறியவல்லவனைத் தெய்வத்திற்குச் சமமாகக் கருதி மதித்திடுக. மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட தெய்வீக ஆற்றலுடையான் என்பதாம்.

703. **குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்.**

பிறர் முகக் குறிப்பைக்கொண்டு, அவர் மனக்குறிப்பை அறிய வல்லவரை, ஆட்சி செய்பவர்கள் தம் உடல் உறுப்புக்களுள் எதனைக் கொடுத்தும் தம் அவைக்கண் துணையாகக் கொள்க.

704. **குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை**
**உறுப்போர் அனையரால் வேறு.**

ஒருவர் தம் மனத்துக்குள் நினைத்த கருத்தை, அவர் வாய்விட்டுக் கூற வேண்டாமலே அறிந்துகொள்ளக் கூடியவர்களோடு, அங்ஙனம் அறிய மாட்டாதார் உறுப்புகளால் ஒரு தன்மையுடையவர்களாயினும் மதி நுட்பத்தால் வேறுபட்டவர் ஆவார்கள்.

705. **குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்**
**என்ன பயத்தவோ கண்.**

தம் குறிப்புணரும் ஆற்றலைக் கண்டு, பிறரது உள்ளக் குறிப்பை அறியமாட்டாராயின், உறுப்பினுள் சிறந்தது எனப்படும் கண்கள் வேறு

என்ன பயனைத் தரப்போகின்றன? கண்களின் இயல்பே குறிப்பறிதல்தானே என்பது கருத்து.

706. **அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்.**

தன்னை அடுத்திருக்கும் பொருளினது வண்ணத்தை அவ்வாறே தன்னுட் பெற்றுக் காட்டும் பளிங்குபோல, ஒருவனது நெஞ்சத்தில் உணர்ச்சி மிகுந்தெழுந்த கருத்தை, அவனது முகம் தானே வெளிப்படுத்திக் காட்டிவிடும்.

707. **முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்**
**காயினும் தான்முந் துறும்.**

பிறரைப்பற்றி உள்ளத்துள் மகிழ்ந்து நினைத்தாலும் சினந்து எண்ணினாலும் அவை இரண்டையும் முகமானது முந்திக்கொண்டு வெளிக்காட்டிவிடும். இங்ஙனம் முன்னறியவல்ல முகத்தைவிட மிகுந்த அறிவுடையது வேறொன்றுண்டோ?

708. **முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி**
**உற்றது உணர்வார்ப் பெறின்.**

ஒருவரது உள்ளக் கருத்தினைக் குறிப்பால் நோக்கி அவர்கள் உள்ளத்திலுள்ளதை அறிய வல்லவர்களைப் பெற்றால், ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கி நின்றாலே போதும்; வேறு பேச்சு வேண்டாம்

709. **பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்**
**வகைமை உணர்வார்ப் பெறின்.**

கண்ணைக் கொண்டு அதாவது பிறர்தம் பார்வையை வைத்து அவர்தம் உள்ளத்திலுள்ளதை அறியக்கூடிய. கண்ணின் மெய்ப்பாடு போன்ற திறப்பாடுகளை அறியக்கூடியவர்களைப் பெறுதல் அரிது. அத்தகு திறமையாளர்களைப் பெற்றால், அவர்களுக்குப் பிறர் உள்ளத்தினுள்ளிருக்கும் பகையுணர்ச்சியையும் நட்புணர்ச்சியையும், எதிரியின் கண்களே சொல்லிக் கொடுத்துவிடும். கண்ணைக் கொண்டே அறியக்கூடிய திறமைசாலிகளுக்கு எதிரியின் கண்களே விளக்கிச் சொல்லிவிடுமாம்.

710. **நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்**
**கண்ணல்லது இல்லை பிற.**

நுண்ணிய அறிவுடையேம் என்பார் பிறர் கருத்தை அளந்தறியும் அளவுகோல் யாதென ஆராயுமிடத்து அப்பிறரது கண்களல்லது பிறிதில்லை; கண்களே உண்மையை மறைக்காமல் வெளிப்படுத்தும்.

குறிப்பறிதலில் கண்ணுக்குள்ள திறப்பாடுகளும் முகத்திற்குள்ள மெய்ப்பாடுகளும் பற்றி மிக நீள நினையுமாறு குறட்கருத்துக்கள் உள்ளன. கண்களைப் பார்த்துப் படிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ளச் சொல்கிறார்.

## 72. அவையறிதல்

அரசவையாயினும் பிற அவைகளாயினும் அவையினது தரமும் நிலையுமறிந்து, அதற்கேற்பப் பேசுதல், சொற்பொழிவாற்றும் பேச்சுக்கலை பற்றியவை இவை.

711. **அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்**
**தொகையறிந்த தூய்மை யவர்.**

சொற்களின் தொகுதியைக் கற்றறிந்த, உளத் தூய்மையினையுடைய சான்றோர், தாம் பேசும் அவையின் தரம், சூழல், காரியம் ஆகியவற்றை ஆராய்ந்து அதற்கேற்பச் சொல்லுதல் வேண்டும்.

712. **இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்**
**நடைதெரிந்த நன்மை யவர்.**

சொற்களின் இயல்பறிந்து அவற்றின் மொழி நடையில் பழகிய நன்மை கைவரப்பெற்ற சான்றோர், அவைக்கண் பேசப் புகும்போது, அதன் செவ்வியை அறிந்து, குற்றமேற்படாமல் நல்லவனவற்றை ஆழ உணர்ந்து தெளிந்து சொல்வார்களாக. இடை தெரிந்து - சமயம் அறிந்து, செவ்வி பார்த்து.

713. **அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்**
**வகையறியார் வல்லதூஉம் இல்.**

அவையினது நிலையை அறியாராய், தம் மனம் போன போக்கில் பேசிக் கொண்டு போகிறவர், பேச்சின் முறைமையை அறியாதவராவார். அவர் வேறு எதிலும் வல்லவருமாகார்.

சொல்லின் தொகையறிதல் - சொற்கோவையறிதல்; தக்க சொற்களைப் பயன்படுத்துமளவு சொற்களைக் கற்றிருத்தல். சொல்லின் நடை தெரிதல் -

சொற்களை ஆளும் மொழி நடை பற்றிய திறமை. சொல்லின் வகையறிதல் - மேடையிற் பேசும் நெறியறிதல்.

714. **ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்.**

பேசும்போது அறிவாற்றல் மிக்கவர்முன் தானும் அறிவாற்றல் மிக்கவனாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்க; மற்றைய அறிவிலாராம் 'வெள்ளைகள்' கூடிய அவைக்கண்ணே பேச நேரின் அவரினும் வெளிய சுண்ணாம்பின் வண்ணமுடையவனைப் போல, அறிவை வெளிப்படுத்தாது நடந்து கொள்க.

அறிவாளர்முன் அறிவாளி எனக்காட்டிப் பேசலாம்; உரையாடலாம்; பொழிவாற்றலாம். அறிவிலார் முன், தாம் அவரைவிட முட்டாள்போல் நடந்து தப்பித்துக் கொள்ளவேண்டும்.

715. **நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.**

அறிவு, அகவை முதலியவற்றால் தம்மினும் முதிர்ச்சிபெற்றார் இருக்கும் அவைக்கண்ணே, அவரை முந்திக் கொண்டு எதனையும் பேசாதிருக்கும் அடக்கமுடைமை, ஒருவனுக்கு நன்றென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட எல்லாவற்றுள்ளும் நன்றாகும்.

716. **ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு.**

பரந்த நூற் பொருள்களையெல்லாம் கேட்டு உணரவல்ல கற்றறிந்தார் கூடிய அவையின்கண், சொல் வன்மையுடையான் ஒருவன் சொற் குற்றத்திற்காட்படுதல், ஆற்றிலே நீந்துவானொருவன், கரை கடந்த வெள்ளத்தினிடையே அகப்பட்டு நிலைகுலைந்து தளர்ந்ததற்கு ஒப்பாகும்.

717. **கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து.**

குற்றங்களின் நீக்கிச் சொற்பொழிவின் திறத்தை ஆராய்ந்தறிய வல்லார் கூடிய அவையின்கண், பல நூல்களையும் கற்று அவற்றின் நுண்பொருள்களை அறிந்தார் ஒன்றைப் பற்றிப் பேசுவார்களாயின் அவர்களின் கல்வி ஒளி வீசித் திகழும்.

718. **உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்**
**பாத்தியுள் நீர்சொரிந் தற்று.**

எதைப்பற்றியேனும் பேசுங்கால் அதனை நன்கு அறிந்து கொள்ளக் கூடிய அவையினர்முன், கற்றறிந்தவர் ஒன்றைச் சொல்லுதல் இயல்பாக வளரும் பயிர்கள் நின்ற பாத்தியின்கண் நீரினைப் பாய்ச்சியதற்கு ஒப்பாகும்.

719. **புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்**
**நன்கு செலச்சொல்லு வார்.**

நல்லவர்கள் கூடிய அவையின்கண் நல்ல பொருட்களை அவர் மனங்கொள்ளச் சொல்லும் ஆற்றல் பெற்றவர்கள், அறிவற்ற கீழான புல்லர்கள் கூடிய அவைக்கண், அந்நல்லவற்றை மறந்தும் கூடப் பேசுதல் கூடாது.

720. **அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்**
**அல்லார்முன் கோட்டி கொளல்.**

நல்ல சான்றோர்கள் தம் கூட்டத்தவர் அல்லாத புலவர்கள் கூடிய அவையின் முன்னே ஒன்றனைப் பற்றிச் சொற்பொழிதல், தூயதல்லாத சாக்கடைக்கண்ணே அமிழ்தத்தைக் கொட்டியதற்கு ஒக்கும். கோட்டி கொளல் - அவையைக் கூட்டி வைத்துப் பேசுதல்.

## 73. அவையஞ்சாமை

கூச்சத்தாலும் பழக்கமின்மையாலும் அவைமுன் பேசும்போது அச்சம் ஏற்படக்கூடும். அவையைக் கண்டு அஞ்சாமல் நின்று பேசும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

721. **வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்**
**தொகைஅறிந்த தூய்மை யவர்.**

சொற்களின் தொகுதியைக் கற்றறிந்த, மனந்தூயராகிய சான்றோர், கற்றுவல்லார் அவையின்கண்ணே, அவைகளின் வகைகளை அறிவராதலின், அச்சத்தால் சிறுவழு ஏற்படுமாறும் வாய் தவறிப் பேசமாட்டார். வல்ல அவை - கல்விவல்லார் அவை. அவைக்கேற்பப் பேசுவர்.

722. **கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்**
**கற்ற செலச்சொல்லு வார்.**

கற்றறிந்தார் கூடிய அவைக்கண்ணே, தாம் கற்ற அரிய பொருள்களை, அஞ்சாமல், கேட்பார் மனங்கொள்ளுமாறு எடுத்துச்சொல்லுபவர், கற்றவரனைவருள்ளும் இவரே நன்கு கற்றவரென உலகத்தாரால்

சிறப்பித்துப் பேசப்படுவர். அவை அஞ்சாமைக்குக் கல்வியும் ஓர் அடிப்படையாகும். நன்கு கற்றவனே அஞ்சாது பேசவல்லவனாவான்.

723. பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்.

பகைவரிடையே அஞ்சாமல் புகுந்து போரிட்டுச் சாகின்றவர்களை உலகில் எளியர் என்றே சொல்லலாம். ஏனெனில் அவையிடை நின்று அஞ்சாது பேசக் கூடியவர்களோ மிகமிக அரியவர் ஆவர். அவை அஞ்சாமை எளிதன்று. போர் மறவரை விடச் சொல்மறவர் அரியரென்பது கருத்து.

724. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.

கற்றறிந்தார் கூடிய அவை முன்னே தாம் கற்ற அரிய பொருள்களை, அவர்கள் மனங்கொள்ளுமாறு சொல்லி, தம்மிலும் மிகுதியாகக் கற்றவரிடத்திலிருந்து அவர் கற்ற அம்மிகுதியான அரிய பொருள்களைத் தாம் கேட்டு அறிந்து கொள்ளுதல் வேண்டும். தம்மிலும் மேம்பட்டவரை மதித்துக் கேட்பவர்தாம் பிறர் மதிக்குமாறு பேசவல்லவர் ஆவர். அவை அஞ்சாமைக்குக் கேள்வியறிவும் ஓர் அடிப்படையாகும். நல்ல ஆழமான கருத்துக்களைக் கேட்டுக் கேட்டுப் பழகியவனே, அவையஞ்சாமல் பேசவும் வல்லவனாவான்.

725. ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு.

அவையின்கண் அஞ்சாமல் நின்று, தன்னைக் கேள்வி கேட்பவர்கட்கெல்லாம் மறுமொழி கொடுக்கும் பொருட்டு, ஒருவன் அதற்கான நெறிமுறைப்படி அத்தகைய ஆற்றல் தரும் அளவை நூலை நன்கு கற்க வேண்டும். அளவை நூல் - தருக்கம். அவைக்கு அஞ்சாது, உடனுக்குடன் மறுமொழிய, வினா விடைகளாலான அளவை நூலறிவு மிகமிகத் தேவை.

726. வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு.

நெஞ்சில் உரமில்லாதவர்க்குக் கையில் வாளிருந்து என்ன பயன்? அறிவு நுட்பமுடையார் கூடிய அவையைக் கண்டு அஞ்சுபவர்க்கு அவர் கற்ற நூல்களினால் பயன் என்ன?

727. பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சுமவன் கற்ற நூல்.

அவையின் கண்ணே பேச அஞ்சுகின்றவன் கற்ற நூல், பகைவர்நடுவில், போருக்கு அஞ்சும் பேடி தன் கையிலே பிடித்த ஒளிபொருந்திய வாளை ஒக்கும்.

இரண்டும் நகைப்பிற்கிடமாகுமேயல்லாமல் பயன்படா. ஒளிமிக்கது அவ்வாள் என்பது பயன்படுத்தப்படாததென்பதைக் காட்டுகிறது. மேலும் அது பகைவனுக்கு ஒருவேளை பயன்படுமே தவிர, வைத்திருப்பவனுக்குப் பயன்படாது. அதுபோல் அவை அஞ்சுபவன், அவையோர்முன் நகைப்பிற்கிடமாவான்.

728. **பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்**
**நன்கு செலச்சொல்லா தார்.**

நல்லவர்கள் கூடிய அவையின்கண் தாம் கற்றவற்றை, அவர் உள்ளம் ஏற்கும்படி சொல்லமாட்டாதவர், பற்பல நூல்களைக் கற்றிருந்தாரேனும் உலகத்திற்குப் பயன்படமாட்டார்கள்.

729. **கல்லா தவரின் கடைஎன்ப கற்றறிந்தும்**
**நல்லார் அவைஅஞ்சு வார்.**

அரிய நூல்களைக் கற்று, அரும் பொருள்களைத் தெரிந்து வைத்திருந்தும், நல்லோர் கூடிய அவையிலே பேச அஞ்சுகின்றவர்களை, கல்லாதவர்களைவிடக் கடைப்பட்டவரென்று உலகத்தார் பழித்துப் பேசுவர்.

730. **உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்**
**கற்ற செலச்சொல்லா தார்.**

அவைக்களத்தைக் கண்டு அஞ்சி, தாம் கற்றவற்றை அவையோர் உள்ளம் ஏற்குமாறு சொல்லமாட்டாதவர்கள், உயிருடனுள்ளார் என்று சொல்லப்படினும் இறந்தாரோடு ஒப்பர். உலகோரால் எண்ணப்படாமையின் இருந்தும் பயனில்லை.

ஒருவர் தம் கற்றவற்றைச் சொன்னால் போதாது; சொன்னது கேட்பவர் மனத்தில் தங்குமாறு, தைக்குமாறு, சென்று சேருமாறு சொல்ல வேண்டும். ஓர் ஆசிரியர் பாடம் சொன்னாற்போதாது; அவர் சொன்னவை மாணவர் மனத்திற்குள் போய்ச் சேருமாறு சொல்லித் தர வேண்டும். அதைத் திருவள்ளுவர் மிக அழுத்தமாய்க் குறிப்பிடுவதை, நாம் மனங்கொள்ள வேண்டும். இவ்வதிகாரத்தில் 'கற்க செலச் சொல்லுவார்' (722), 'கற்ற செலச் சொல்லி' (724), 'நன்கு செலச் சொல்லாதார்' (728), 'கற்ற செலச் சொல்லாதார்' (730) என்பன காண்க. 'கற்றவை சொல்லுவார்' என்று சொல்லாமல், 'கற்ற செலச் சொல்லுவார்' என்றே, ஒவ்வொரு முறையும் நுட்பமாய் அறிதல் வேண்டும். முன்னரும் 'எண்பொருளவாகச் செலச் சொல்லி' (424), 'கற்றது உணர விரித்துரையாதார்' (650) என வருவன பலவுள.

# அரணியல்

அரசாட்சியின் தலைமை, அரசன். அவனுக்கு அல்லது அரசுக்கு உட்பட்டவை ஆறு பகுதிகள். அவற்றில் அமைச்சு முக்கியமானது; பத்து அதிகாரத்தில் கூறப்பட்டது. இங்கு நாடும், நாட்டைக் காக்கும் கோட்டைகளான அரணும் இரண்டு அதிகாரங்களில் சு.றப்படுகின்றன. நாற்புறமும் இயற்கையும் செயற்கையுமான அரண்களையுடையதே நாடு. அதனால் நாடும் அரணும் சேர்ந்து அரணியல் என்ற பகுப்பில் கூறப்படுகின்றன. ஒரு நாட்டின் எல்லைக் கோட்டை வகுப்பன அரண்கள். எனவே அரணில் நாடும் அடக்கிக் கூறப்படுகிறது.

# 74. நாடு

குடி மக்களுடையதாய் நாற்புறமும் அரண்களைப் பெற்றுத் தனியுரிமையுடன் விளங்கும் நாட்டினது சிறப்புகளைக் கூறும் பகுதி இது.

731. **தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு.**

எந்நாளும் தட்டுப்பாடில்லாத நல்ல விளைச்சல்களையும் எல்லாவகையிலும் தகுதியுடைய சான்றோர்களையும் எவ்வகையிலும் தாழ்வு படாத நல்ல செல்வர்களையும் ஒருசேரக் கொண்டு விளங்குவதே நாடு எனப்படும்.

732. **பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்**
**ஆற்ற விளைவது நாடு.**

அளவு கடந்த இயற்கைப் பெருஞ்செல்வங்களை உடைமையினாலே மக்களால் விரும்பத் தக்கதாகி வேளாண்மையில் கேடுகள் நேராமல் மிகுதியாக விளையும் நீர், நில வளமுடையதே நாடாகும். 'தள்ளா விளையுள்' என்பதன் விளக்கம் இது.

733. **பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு**
**இறைஒருங்கு நேர்வது நாடு.**

நாட்டிற்கு ஏதும் எதிர்பாராத இடர்ப்பாடுகள் வந்தால், அச்சுமையனைத்தையும் தாங்கவல்லதாவதோடு அரசனுக்குத் தாம் செலுத்த வேண்டிய வரிப்பொருள் முழுவதையும் உடம்பட்டு இசைந்து கொடுக்கும் குடிமக்களையுடையதே நாடாகும்.

சிறந்த குடிமக்களையுடையதே நாடு எனச் சிறப்பித்துக் கூறப்படும். 'தாழ்விலாச் செல்வர்' என்பதன் விளக்கம் இது. அவர்கள் நாட்டையும் காத்து, மனமிசைந்து வரியும் தருபவர்களாதல் வேண்டுமாம்.

734. **உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு.**

தீராத மிக்க பசியும் நீங்காத பெரு நோய்களும் எப்பொழுதும் அழிவு தேடும் பகையும் ஆகிய மூன்றும் இல்லாமல் இனிது நடப்பதே நாடாகும்.

735. **பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்**
**கொல்குறும்பும் இல்லது நாடு.**

சாதி சமயம் போலும் காரணங்கள் பற்றித் தம்முள் பிரிந்து நிற்கும் பல குழுக்களும் உடனிருந்தே கேடு செய்யும் உட்பகையும் வேந்தர்களையும் அலைத்துத் துன்புறுத்தும் கொலையையே தொழிலாகவுடைய கீழ்மக்களும் இல்லாததே நாடாகும். கொல்குறும்பு - வலிமை வாய்ந்த. கொடிய சிறு வன்முறைக் கூட்டங்கள்.

736. **கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா**
**நாடென்ப நாட்டின் தலை.**

இயற்கைச் சீரழிவாலோ பகையாலோ கெடுதல் அறியாததும் அரிதாகக் கேடு வந்ததாயினும் தன் வளங்குறையாததுமாகிய நாட்டினை. நாடுகள் வல்லாவற்றினும் தலைமையானது என்பர்.

737. **இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.**

ஊற்று நீர் மழை நீர் எனப்பட்ட இரண்டு நீரும் வளந்தருமாறு வாய்ந்த மலைகளும். மலைகளில் உண்டாகி அருவியாய் ஓடிவரும் ஆற்று நீரும் இவற்றுடன் வலிமை வாய்ந்த இயற்கை மற்றும் செயற்கை அரண்களும் ஒரு நாட்டிற்கு இன்றியமையாத உறுப்புகளாகும். கடல். மலை போல்வன இயற்கையாய் அமைந்த அரண்களாகும்.

738. **பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்**
**அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.**

நோயில்லாமை, செல்வமுடைமை, விளைவுடைமை. இன்பம் உடைமை. பாதுக்காப்பமைந்த காவலுடைமை என்ற இவை ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகு தரும் என்று சொல்வார்கள்.

739. **நாடென்ப நாடா வளத்தன நாடல்ல**
**நாட வளந்தரு நாடு.**

தன்னிடம் வாழ்பவர்கள் தேடி வருந்தாமல் தானே வந்தடையும்படியான வளங்களையுடையதே நாடு என்று கூறுவர். அவ்வாறல்லாமல் தேடி வருந்தியபின்பே பயன்தரும்படியான வளத்தினையுடையவை நாடுகள் எனப்படா. இயற்கை வளம் கொழிக்க வேண்டும். மிக வருந்தியபின்பு பயன் தருபவை சிறப்புடையவை அல்ல.

740. **ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே**
**வேந்தமைவு இல்லாத நாடு.**

ஒரு நாட்டிற்கு வேண்டிய எல்லாவற்றாலும் நிறைந்திருந்தாலும் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் முறைமைச் சிறப்புமிக்க நல்ல வேந்து முழு

உரிமையுள்ள ஆட்சி - அமையப்பெறாத ஒரு நாடு அவற்றால் பயன் பெறாது.

வேந்தன் என்னாது வேந்து என்று சொல்வது, வேந்தனின் தொழிலை மட்டுமே சுட்டி, நல்லாட்சி என்று பொருள்படும். இன்றைக்கும் வேந்தன் இல்லை; ஆயினும் வேந்து வேண்டும்.

## 75. அரண்

ஒரு நாட்டிற்கு இன்றியமையாத அரண்களின் இலக்கணமும் அமைப்பும் சிறப்பும் கூறும் பகுதி.

741. ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.

ஆற்றலுடையவராய் முற்றுகையிட்டுப் போர் செய்ய வல்லவர்க்கும் அரண்களைப் பெற்றிருப்பதே காப்பாகும். அச்சங்கொண்டு உள்ளிருந்து தம்மைக் காத்துக் கொள்பவர்களுக்கும் அரணே சிறந்த பாதுகாப்பாகும்.

742. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்.

என்றும் வற்றாத மணிபோலும் தெளிந்த நிறத்தினையுடைய நீர் அரணும், வெட்ட வெளியான நிலப்பகுதியும், மலையும், குளிர்ந்த நிழலையுடைய காடும் ஆகிய நான்கும் உடையதே இயற்கை அரண் எனப்படும். இவை அமைதல் ஒரு நாட்டிற்கு மிகுந்த பாதுகாப்பு.

743. உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்.

நல்ல உயரமும் அகலமும் இடிக்கவியலாத திண்மையும் கிட்டுவதற்கு அருமையும் எனும் இவை நான்கும் அமைந்ததே மதில் அரண் என்று நூல்கள் விளக்கிக் கூறும்.

744. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண்.

காக்க வேண்டிய வாயில் முதலிய பகுதிகள் சிறிதளவு முயற்சியால் காக்கக் கூடியனவாக இருக்க வேண்டும்; உட்பகுதியோ மிகவும் அகன்ற இடத்ததை உடையதாக இருக்க வேண்டும்; தன்னை வந்து நெருங்கி முற்றுகையிடும் பகைவர்களின் மன எழுச்சியைக் கெடுத்து அஞ்சச் செய்வதாய் அமைய வேண்டும். அத்தகையதே சிறந்த மதிலரணாகும்.

745. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீரது அரண்.

பகைவர் நெருங்கிக் கைக்கொள்ளுவதற்கு முடியாதபடி கருவிகளையுடையதாதல் வேண்டும்; உள்ளிருப்போர் உண்ணுதற்கு வேண்டிய அளவு உணவுடையதாதல் வேண்டும்; மதிலகத்தே உள்ளவர்கள் பாதுகாப்புடன் இருந்து, பகைவர் மீது எளிதில் போர் செய்யும்படி அமைப்பு வேண்டும். இத்தன்மைகளையுடையதே அகழி சூழ்ந்த மதிலரணாகும்.

746. எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடையது அரண்.

மதிலகத்தே உள்ளவர்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் உடையதாய், போர் நேர்ந்தபொழுதில் எதிரியை முறியடித்துக் காத்துதவவல்ல, நல்ல வீரர்களையுமுடையது சிறந்த அரணாகும்.

747. முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற்கு அரியது அரண்.

வெளிவர முடியாதபடி சூழ்ந்து முற்றுகையிட்டும், அங்ஙனம் முற்றுகையிடாமலே வலுவற்ற இடம் பார்த்துப் போரிட்டுத் தகர்த்தும், வஞ்சம் செய்து குறுக்கு வழிகளில் ஏமாற்றி உட்புகுந்தும் இவ்வாறு எவ்வகையாலும் பகைவர்களால் கைப்பற்றுவதற்கு இயலாததே சிறந்த அரணாகும்.

748. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வது அரண்.

முற்றுகையிட வல்லவராகப் பெரும்படையுடன் வந்து சூழ்ந்து நின்று முற்றுகையிட்ட பகைவர்களையும், தம் மதிலகத்தைப் பற்றி நிற்பவர்கள் சிறுபடையினரேயாயினும் தாம் பற்றி நின்ற இடத்தைச் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் நின்று பொருது வெல்லுமாறமைந்ததே சிறந்த அரணெனப்படும்.

749. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.

போரின்கண் பகைவர்கள் கெட்டழியுமாறு மதிலகத்தே உள்ளவர்களின் போர்த்தொழில் சிறப்புற மாட்சிமைப்பட்டதே நல்ல அரணாகும் எவ்வாறேனும் உள்ளே உள்ளவர்கள் போர் செய்ய, வாய்ப்பாக அமைந்திருப்பதே சிறந்த அரணாகும்.

750. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்.

எல்லாவிதமான மாட்சிமைகளையும் உடையதாயினும் போர்த் தொழிலும் பயிற்சியில்லாதவர்களைக் கொண்டிருக்குமானால், அரணால் பயனில்லை. அரண் வலுவாயிருந்தாலும் அதைக் காப்பவர், போர்த் திறமையற்றவராயினும் ஒரு பயனும் இல்லை.

# கூழியல்

பைங்கூழ் என்பது உணவுப் பயிர்கள். கூழ் என்பது உணவு பொருளாதாரம் நுகர்வன பற்றியது என்ற அடிப்படையில் திருவள்ளுவர் ஓர் அரசுக்கு உறுப்பாகக்கூடிய பொருட்செல்வத்தைக் கூழ் என்றே குறிப்பிடுகிறார். "படை,குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்" என்ற ஆறில், கூழ் எனும் பொருள் பற்றிய இது கூழியலெனப்பட்டது. இதனைப் பொருள் இயல், செல்வ இயல் என்று சுட்டியிருக்கலாம். 'கூழியல்' எனக் குறித்திருப்பது மிகுந்த அடிப்படைச் சிந்தனை. மனிதன் தன் ஐம்புலன்களால் நுகர்வன எல்லாம் செல்வமாதலின் 'கூழ்' எனச் செல்வத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

# 76. பொருள் செயல்வகை

பொருட் செல்வம் வரும் வழிகளைக் கண்டறிதலும் அதைத் தேடும் விதமும் பயன்கொள்ளும் முறையும் கூறும் பகுதி.

751. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்.

ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும் மதிக்கத்தக்கவராகச் செய்ய வல்லதாகிய பொருட்செல்வத்தைத் தவிர, ஒருவனுக்குப் 'பொருள்' என்று உயர்த்துச் சொல்லத் தக்கது பிறிதில்லை.

பொருட்செல்வத்தின் இன்றியமையாமையைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துவது போன்ற மொழிநடை இது. இவ்வாறு மிக வற்புறத்த வேண்டிய இடங்களில் சொற்பொருள் பின்வருநிலை அணியைத் திருவள்ளுவர் எடுத்தாள்கின்றார்.

752. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

பொருட்செல்வம் இல்லாதவரை, அவர் பிற எல்லா நலங்களும் உடையவராயினும், எல்லாரும் இகழ்ந்து தாழ்வுபடுத்துவர். செல்வமுடையவரை, அவர் பிற தகுதி எதுவும் இல்லாதவராயினும் எல்லாரும் உயர்வுபடுத்திச் சிறப்புச் செய்வர்.

753. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

பொருட்செல்வம் எனப்படும் அணையாத விளக்கு, அதை உடையவர்கள் நினைத்த இடத்துக்குச் சென்று, அங்குள்ள பகையாகிய இருளைக் கெடுக்கும்.

பொருட்செல்வம் தான் இல்லாத இடத்திற்கும், அதுமிகச் சேய்மையிலுள்ளதாயினும் அங்கும் சென்று, தன் பகையை ஓட்டுமாம்.

754. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

தீய வழியில் தேடாது ஈட்டிய பொருட்செல்வம் அதை ஈட்டியவனுக்கு அறம் செய்வதற்குப் பயன்படுவதுடன் நன்கு துய்க்கப்படுமாதலின் இன்பத்தையும் கொடுக்கும்.

755. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள் விடல்.

பொருட்செல்வத்தைத் தேடும்போது அனைத்துயிர்களிடத்தும் அவற்றின் துன்பங்கண்டு வருந்தும் அருளும் அவற்றின்பால் பரிவு காட்டும் அன்பும் அமையுமாறு ஈட்ட வேண்டும். அங்ஙனம் ஈட்டப்படாத பிறவழியில் வந்த பொருட்செல்வத்தை ஏற்றுக்கொள்ளுதல் கூடாது; தவறி வரினும் அச்செல்வத்தைக் கையைவிட்டுப் போகுமாறு உதறிவிடுதல் வேண்டும்.

756. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

அரசர்களுக்குப் பொருட்செல்வமான, இயல்பாகக் குடிவழியில் வரும் சொந்தப் பொருளும், வரியின் மூலம் கிடைக்கும் பொருளும், தன் பகைவர்களை வென்று திறையாக (கப்பமாகக்) கைக்கொள்ளும் பொருளும் ஆகிய மூன்றுமாகும்.

757. அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு.

பரிவாகிய அன்பினால் பெறப்பட்டு பிறவுயிர்களின் துன்பத்தை நீக்கும் அருள் என்ற குழந்தை, பொருள் என்று சொல்லப்படுகின்ற செல்வமாம் செவிலியால் வளர்க்கப்படுதலால் உலகில் உளதாகிறது.

அன்பு பெற்ற குழந்தைதான் அருள். தொடர்புடையார்மாட்டுச் செலுத்துவது அன்பென்றும் எல்லா உயிர்களிடத்தும் செலுத்துவது அருளென்றும் விளக்குவர்.

758. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை.

தன் கையகத்தே, முதலாக இடுமாறு செல்வமிருக்க, அதனையுடையவன், மேற்கொள்ளும் ஒரு தொழில் யானையும் யானையும் போரிடுங்கால், அப்போரினைக் குன்றின்மேல் ஏறி நின்று வருத்தமோ, அச்சமோ இன்றிக் கண்டு களிப்பதை ஒக்கும்.

செல்வம் செல்வத்தைச் சேர்த்துக் கொள்ளும் என்பார்கள். செல்வமுள்ளவன் எக்காரியதையும் எளிதாக, மகிழ்ச்சியோடு செய்ய முடியும்.

759. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல்.

பொருட் செல்வத்தை ஈட்டும் வழியறிந்து ஈட்டுக. ஏன் எனில் கறுவிக் கொண்டேயிருக்கும் பகைவரின் செருக்கினை அறுக்கும் அரமாகிய கருவி, அச்செல்வத்தைப் போலக் கூர்மையுடையது பிறிதில்லை.

760. **ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்**
**ஏனை இரண்டும் ஒருங்கு.**

சிறந்த செல்வத்தை மிகக் கூடுதலாக ஈட்டும் வழியறிந்து ஈட்டிக் கொண்டவர்களுக்கு, ஏனைய அறம் செய்து வாழ்தலும் நல்லின்பம் துய்த்தலுமாகிய இரண்டும் மிக எளிதாகக் கிடைக்கும்.

பிற நீதி நூல்கள் சில செல்வம் நிலையில்லாதது; அற்பமானது; காமத்தை வளர்ப்பது எனப் பழிப்பதையே பேசும். வேறுசில செல்வம் பிறவி நோயை உண்டாக்கும் என்றும், ஆகவே அதை வெறுக்க வேண்டும் என்றும் தூண்டும். 'உலகியல்' கூறி, மானுட வாழ்வை முன்னேற்ற வந்த திருவள்ளுவர் ஒருவரே, செல்வத்தின் சீர்மையை இவ்வளவு உயர்த்துக் கூறியுள்ளார்.

# படையியல்

அரசனுக்குரியனவாம் ஆறு பகுதிகளில், மிக இன்றியமையாதது என்பதால், 'படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்' என்றபடி முதற்கண் வைத்துக் கூறப்பட்ட படையினது சிறப்பு, இயல்பு ஆகியன கூறுதல். நாடு, அரசு என்று சொல்லும்போது 'படை' தான் முதலிடம் பெறுகிறது.

## 77. படை மாட்சி

படையினது இலக்கணத்தை இரண்டு அதிகாரங்களால் கூறத் தொடங்கி முதலில் படைமாட்சி எனப் படையினது சிறப்புப் பற்றி விளக்குகிறார்.

761. **உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்**
**வெறுக்கையுள் எல்லாம் தலை.**

தனக்கு உறுப்பாகக் கூடிய அனைத்தாலும் நிறைந்து, பகைவரால் இடுக்கண் படுவதற்கு அஞ்சாமல் நின்று, அப்பகையை வெல்ல வல்லதாகிய படை வேந்தனது செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்த செல்வமாகும்.

762. **உலைவிடத்து ஊறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்**
**தொல்படைக் கல்லால் அரிது.**

அரசன் தோற்கும் சமயம் வந்து, படை குலைந்து போகும் சமயத்திலும் தன்மேல் விழும் காயங்களுக்கு அஞ்சாது எதிர்நிற்கும் மனவுறுதி, அவ்வரசனிடம் வழிவழியாக வந்த பழைமைத் தொடர்புடைய படைக்கு அல்லாமல், மற்றவர்க்கு உளதாகாது. தொல்படை - பாட்டன், தந்தை, மகன் என அரச குடும்பத்தோடு வழிவழியாக வரும் படை.

763. **ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை**
**நாகம் உயிர்ப்பக் கெடும்.**

எலிகளாகிய பகை ஒருங்குதிரண்டு கடல்போல ஆரவாரம் செய்வதால் என்ன பயன்? நாகப்பாம்பு மூச்சுவிட்ட அளவிலேயே அவை அனைத்தும் கெட்டு அழிந்து படும் எண்ணிக்கை கூடுவதால் படை வெல்லாது; மிகவும் சிறந்த வீரர்களைக் கொண்ட படைதான் வெல்லும்

764. **அழிவின்றி அறைபோகா தாகி வழிவந்த**
**வன்க ணதுவே படை.**

போரிடுங்கால் தோற்றோடாது எதிர்நிற்க வல்லதாய், பகைவரின் சூழ்ச்சிக்கு இடங்கொடுத்துக் காட்டிக் கொடுக்காத நன்றியறிதலுடையதாய், பாட்டன் தந்தை மகன் என இவ்வாறு வழிவழியாக வந்த வீரத்தினையுடையதே சிறந்த படையாகும்.

765. **கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்**
**ஆற்ற லதுவே படை.**

கூற்றுவனே சினங்கொண்டு தாக்குதற்கு வந்தாலும், எல்லோருமாக மனம் ஒத்து ஒருங்குகூடி, எதிர்த்து நிற்கும் பேராற்றலையுடையதே

படையாகும். எந்த ஒரு பகையை வெல்லவும் 'கூடி எதிர் நிற்க' வேண்டும்; அதுவே பேராற்றலாகும்.

766. மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

பகைவரை எதிர்க்கும் வீரம், தாழ்வு வராமல் காக்கும் மானவுணர்ச்சி, பயிற்சியால் பகைவர் அஞ்சுமாறு நடக்கும் பெருமித நடையுடன் போரிடச் செல்லுதல், போரிடுங்கால் தடுமாறாது திட்டமிட்டுப் போரிடும் தெளிவுடைமை என்ற இந்த நான்கும்தான் படைக்குப் பாதுகாப்புத் தரும் தன்மைகளாகும்.

767. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து.

தங்கள்மேல் வந்த பகைவர்கள் சாதுரியமாகச் செய்யும் போரினைத் தடுக்கும் திறத்தை அறிந்து, அவர்களின் தூசிப்படை தங்கள் மேல் வந்து தாக்காமல் அதற்கு முந்திக் கொண்டு, தங்கள் படையை அப்பகைவர்மேல் செலுத்தி மேற்போவதே படையெனப் பெருமையுடன் கூறப்படும்.

தார்-தூசிப்படை. முதலிற் போவது. கூழை - பின்செல்லும் படை. தூசிப்படை கண்ணை மூடிக்கொண்டு பகைவர் மேல் சென்று விழக் கூடியதாகவும். கூழைப்படை நன்கு பயிற்சி பெற்றதாக, எதிர்த்து வரும் படையைத் தடுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

768. அடல்தகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும்.

பகைவர்கள் மீது பாய்ந்து கொல்லும் வீரமும் அது தன்மேல் பாயும்போது தாங்கிக் கொள்ளும் ஆற்றலும் இல்லையென்றாலும் ஒரு சேனை, தோற்றப் பொலிவுடன் எழுச்சிமிகுக் காணப்படும் தகுதியினால் பெருமை அடையும். படையைப் பார்த்ததும் பகைவர் அஞ்சுமாறு அதன் தோற்றமும் அணிவகுப்பும் ஆடம்பரமாய் இருக்க வேண்டும்.

769. சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை.

அரசனது புறக்கணிப்பால் ஒவ்வொருவராகப் படையை விட்டுப்போக அது சிறிது சிறிதாகக் தேயும் இழிவும், மனத்தினின்று நீங்காத வெறுப்பும். பசித் துன்பத்தால் வாடும் வறுமையும் இல்லாதிருந்தால், அத்தகைய படை வெற்றி கொள்ளும்.

770. நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்.

போரில் அஞ்சாது நிற்கும் நிலையுடைய வீரரை மிகுதியாக உடையதே என்றாலும் ஒரு சேனை தன்னை வழி நடத்தும் தலைவர்களைப் பெற்றிலதேல் பயன்படாது போகும்.

இன்றைய உலகப் போர்களிலும் தலைமை தாங்கும் தளபதிகளின் சூழ்ச்சித் திறன்களாலேயே வெற்றி தோல்விகள் அமைத்தமை யாவரும் அறிந்ததே.

## 78. படைச்செருக்கு

படை வீரர்கள் மறம், மானம் போலும் பண்புகள் உடையவர்களாய்ப் பெருமிதத்துடன் திகழ்தல்.

771. என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்நின்று கல்நின் றவர்.

பகைவர்களே! என் தலைவன் முன் எதிர்த்து நின்று, அவனால் தாக்கப்பட்டு இறந்து கல் நடப்பெற்று, இப்போது கல்லுருவாகி நிற்கும் வீரர்கள் பலராவர்! அதனால் நீங்களும் கல்லுருவாகாது சொந்த உடம்புடன் நிற்கவேண்டினால் என் தலைவனை எதிர்த்துப் போர் செய்ய நினைத்து அவனெதிரே வந்து நிற்காதீர்கள்! படைவீரன் கூற்றாகவே அமைந்தமை, படைஞனின் செருக்கைக் காட்டுதற்கேயாகும். என் ஐ - என் தலைவன்.

772. கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

காட்டிலோடும் முயலைக் குறி தவறாது எய்த அம்பினைக் கையிலேந்துவதை விட, யானையை எய்து குறிதவறிப் போன வேலை ஏந்துவது ஒருவனுக்கு இனிமை தரும் செயலாகும். தம்மைவிட வலிமை குறைந்தவர்களை வெல்வதைவிட, தம்மிலும் பெரிய வீரர்களுடன் பொருதலின் சிறப்பு இவ்வாறு கூறப்படுகிறது.

773. பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

போர்க்காலத்தில் பகைவரைக் கொன்றழிக்கும் வன்கண்மையை ஒரு வீரனுக்குப் பெரிய ஆண்மை என்று உலகினர் சொல்வர். ஆனால்

அப்பகைவருக்கு ஓர் இடையூறு, போர் செய்யும் நேரத்தில் ஏற்பட்டால், அதைத் தவிர்க்க உதவுதல் அப்பெரிய ஆண்மையினது உச்சத்தைக் காட்டும். வயிரம் பாய்ந்த மனவுறுதி என்று சொல்லுவர். போரிடையே எதிரி வாளைத் தவறவிட்டால், அந்த நேரம் பார்த்துக் கொல்லாமல் அவன் வாளையெடுத்துப் போர் செய்ய இடங்கொடுத்து உதவும் மனமே 'ஊராண்மை'யாம்.

774. **கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**
**மெய்வேல் பறியா நகும்.**

தன் கையின்கண்ணிருந்த வேலைத் தன்மேல் தாக்க வந்த களிற்றின் மேலே அதன் உயிர் போகுமாறு வீசிவிட்டு வருகிற வீரன், மேலும் தன்னை நோக்கி வரும் அடுத்த களிற்றுக்கு என்ன செய்வதென்று திகைத்து நிற்கும்போது, தன்மேல் வீசப்பட்டுத் தன் மார்பில் பதிந்து கிடக்கும் வேலைக் கண்டு, தக்க சமயத்தில் கருவி கிடைத்ததென்று அதனைப் பறித்தெடுத்துக் கொண்டு மகிழ்ச்சியடைவான். மாபெரும் வீரனின் மறச்சிறப்பு இது.

775. **விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்**
**ஒட்டன்றோ வன்க ணவர்க்கு.**

பகைவரை வெகுண்டு நோக்கிய கண்கள், அவர்கள் நேரே குறிபார்த்து வேலைக்கொண்டு எறிய, அதற்கு அங்ஙனம் பார்த்த கண்கள் பார்வையை மீட்டுக்கொண்டு, இமைக்குமாயின், அது தறுகண்மை எனப்படும் பெருவீரத்தையுடைய வீரர்கட்குப் புறங்கொடுத்தலாகி விடுமன்றோ? வீரச்சிறப்பை மிகுத்துக் கூறியது. அச்சத்தால் கண்ணை இமைத்தாலே தோல்விக்கு அடையாளமாகிவிடும்.

776. **விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்**
**வைக்கும்தன் நாளை எடுத்து.**

ஒரு வீரன் தன் வாழ்நாட்களை எண்ணி, அவற்றுள் முகத்தினும் மார்பினும் விழுப்புண் படாத நாட்கள் அனைத்தையும் கூட்டி, அவற்றைப் பயன்படாது வீணாகக் கழிந்த நாட்களுக்குள்ளே சேர்ந்தனவாக எண்ணிக் கொள்வான். விழுப்புண் - வீரத்திற்கு அடையாளமான பெருமைக்குரிய காயம்.

777. **சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்**
**கழல்யாப்புக் காரிகை நீர்த்து.**

உலகமெங்கும் விரைந்து பரவும் புகழை விரும்பி, உயிரை விரும்பாது அதனை இழக்கவும் துணிந்து போரிடும் மறவர்கள் தங்கள் கால்களிலே

வீரக்கழல்களைக் கட்டுவது, அக்கழல்களுக்குத் தனியழகைத் தரும் சிறப்புடையதாகும். மற்றவர்கள் வீரக் கழலணிவது கழலுக்கும் அழகு தராது; அணிபவர்க்கும் சிறப்புத் தராது என்பது கருத்து.

778. **உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்**
**செறினும் சீர்குன்றல் இலர்.**

போரில் விழுப்புண்பட்டு ஊறு (துன்பம்) நேர்ந்த நிலையிலும் உயிர்விடுவதற்கு அஞ்சாது போர் செய்யும் மறவர்கள், அரசன் அந்நிலையில் போரிட வேண்டாமென்று தடுத்துக் கோபித்தாலும் தமது வீரச்சிறப்பில் சிறிதும் குறைய மாட்டார்கள். அரசனே தடுக்கும் நிலை வந்தாலும், இவர்கள் தயங்கி நிற்க மாட்டார்கள்.

779. **இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே**
**பிழைத்தது ஒறுக்கிற் பவர்.**

வீரர்கள் போரில் 'இன்னது செய்து முடிப்பேன்' என வஞ்சினம் கூறியது தப்பிப் போகாதபடி, கடும் போர் செய்து அவ்வஞ்சினம் முடிக்கும்முன் இறந்து போனவர்களை 'இவர் வஞ்சினத்தை நிறைவேற்றாமல் இறந்து போனார்' என்று பழித்துப் பேசுதற்குரியார் யார்? வஞ்சினம் முடிப்பதற்காகப் போரிட்டு முன்னே மடிந்தாலும், அது தோல்வியாகாது; அவர் வஞ்சினம் முடித்தவராகவே கருதப்படுவார் என்பது இதன் கருத்து.

780. **புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு**
**இரந்துகோள் தக்கது உடைத்து.**

தம்மை வளர்த்து ஆளாக்கிப் புரந்தவர்களின் கண்களிலே நீர் பெருகும்படி அவர்கட்காகப் போரிட்டுச் சாகப் பெற்றால், அச்சாவு, இரந்து கேட்டு (யாசித்து) பெறும் தகுதியையுடையதாகும்.

கடமைக்காக, நாட்டிற்காக, மொழிக்காகப் போரிட்டு உயிர் நீத்தவர்களை நினைக்கும் போதெல்லாம் கண்களில் நீர்மல்குமல்லவா? எனவே அத்தகைய சாவை வேண்டிக் கேட்டும் பெறலாம்.

# நட்பியல்

அரசர்க்குரியனவாம் ஆறு பகுதிகளுள் 'நட்பு' பற்றிய செய்திகளைக் கூறும் பகுதி. நட்பையும் அதனோடு சேர்த்து எண்ணக்கூடியவற்றையும் பதினேழு அதிகாரங்களில் கூறுகின்றார். நட்பு பொதுவாக ஒருவருக்கொருவர் கொள்ளும் அன்பு வழிப்பட்ட பழக்கத்தையும் அரசுகளுக்குச் சிறப்பாக வெளிநாட்டுறவு முதலியவற்றையும் குறிப்பதாகும். இந்நட்பினது தன்மை பலவிதமான பார்வைகளில் விளக்கப்படுகிறது.

# 79. நட்பு

நட்பினது சிறப்பும் இலக்கணமும் கூறப்படும் பகுதி.

781. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

நட்பினை உண்டாக்கிக் கொள்ளுதல் போலச் செய்தற்கரியன உலகில் யாவை உள? ஒரு காரியத்தைச் செய்யுமிடத்து, அதற்குத் துணையாக நின்று காக்கக்கூடியவை, அந்நட்புப்போல வேறு யாவை உள? செவ்விபார்த்து நட்புக் கொள்ளுதல் எளிதன்று; பலர்க்கு வாய்ப்பதில்லை; வாய்த்தால் அதைப்போன்று காரியமாற்றுதலில் கைகொடுத்துக் காப்பது பிறிதில்லை.

782. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

இனிய பண்புடையவர்களது நட்புகள், பிறையானது நாளும் வளர்ந்து வளர்ந்து நிறைவது போன்ற தன்மையினையுடையனவாகும். அம் முழுமதி பின்பு நாள்தோறும் படிப்படியாகக் குறைவது போல, அறிவிலார்தம் நட்புகள் நாள்தோறும் குறையும் தன்மை உடையனவாகும்.

'பிறைமதிப் பின்நிற' என்பதின் இறுதியில் 'காருவா' (அமாவாசை) ஆகி நட்பு மறையும் என்பதும் அடங்கும். மிகுந்த ஆரவாரமாய்க் கூடிக்குலவுவோர், அதே விரைவில் மனம் மாறுவர்.

783. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

நல்ல நூல்கள் கற்குந்தோறும் புதிய புதிய நயங்களைத் தருவதுபோல, பண்புடையவர்களோடு கொண்ட நட்பு, அவர்களுடன் பழகுந்தோறும் இன்பம் தரும்.

நூலாக்கத்திற்கும் வாசிக்கும் பழக்கத்திற்கும்கூட இதில் இலக்கணம் கூறப்பட்டுளது காண்க.

784. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.

ஒருவரோடு ஒருவர் நட்பு கொள்ளுதல் தம்முள் சிரித்து விளையாட்டாகப் பேசி மகிழ்வதன்று; ஒருவரிடம் மிகையான

வேண்டாத் பிழைபட்ட செய்கை காணப்படும்போது, தாமே முன்னதாகச் சென்று தயங்காமல் கடிந்து கூறித் திருத்துதற் பொருட்டாகும்.

785. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

ஒருவருடன் ஒருவர் நட்புக் கொள்வதற்கு ஓரிடத்துக் கூடி ஒன்றாக இருந்தாலோ, அடிக்கடி கண்டு பழகுதலோ வேண்டுவதில்லை. இருவருக்கும் ஒத்த உணர்ச்சி யிருக்குமானால், அதுவே நட்பாகிய உரிமையை விளைவிக்கும்.

786. முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு.

கண்டவுடன், முகத்துக்கு முகம் வெளியே சிரித்து அகம் ஒன்றாமல் நட்புக் கொள்வது நட்பாகாது; நெஞ்சின்கண் உள்ள அன்பால் அகமும் மலர நட்புக் கொள்வதே உண்மையான நட்பாகும்.

787. அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

நட்புக் கொண்டவர்கள் அழிவுதரும் தீய வழிகளில் சென்றால் அவற்றை விலக்கி, நல்ல வழிகளில் அவர்களைச் செலுத்தி, அங்ஙனம் முயன்றும் விலக்க மாட்டாத பெருந்துன்பம் அவர்களுக்கு வந்தவிடத்துத் தாமும் அவர்களுடன் சேர்ந்து அத்துன்பத்தை அனுபவிப்பதே நட்பு எனப்படும்.

788. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

உடுத்தியிருக்கும் ஆடை குலைந்தவனது கை, அவன் மனம் குறிப்பின்றித் தானே விரைந்து சென்று மானத்தைக் காப்பதுபோல, நண்பனுக்கு ஓர் இடுக்கண் ஏற்பட்டபொழுது, உடனே சென்று உதவி அதனை நீக்குவதே நட்பாகும்.

உடுக்கை அவிழ்ந்த நிலையில், அறிவாராய்ச்சியின்றி, இயல்பூக்கமாய்க் கை ஓடி உதவுவது போல், இன்பதுன்பம் பாராது உடனே உதவ முந்துவது உண்மை நட்பு.

789. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

நட்புக்கு மிக மேம்பட்ட உச்சநிலை யாதெனில் நண்பர்களுக்குத் தளர்ச்சி வந்தபோது, மனம் செய்வோமா வேண்டாமா என்று சுழன்று, திரிபு படாமல், இயலும் வழியாலெல்லாம் அத்தளர்ச்சியை நீக்கித் தாங்கும் நிலையாகும்.

790. **இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று**
**புனையினும் புல்லென்னும் நட்பு.**

'இவர்' எம்மிடம் இத்தகைய அன்புடையவர்; யாம் இவர்க்கு இத்தகைய நட்புடையேம்' என்று ஒருவரை ஒருவர் தம் உள்ளன்பு வெளிப்படுமாறு, புனைந்து சொன்னாலும் பொலிவிழந்த நட்பாய்ப் போய்விடும். உயிருக்குயிராக ஒன்றிய நட்பை அலங்கரித்துப் பேசினும் அது தன் சிறப்பை இழந்துவிடும். உண்மையான உள்ளன்பு நட்புடையவர் அதைப் பிறர்முன் விவரித்துப் பேசவும் கூசுவர்.

## 80. நட்பாராய்தல்

நட்புக் கொள்ளும்போது அதற்குரியாரை நன்கு ஆராய்ந்து நட்புக் கொள்ளுதல் வேண்டும்.

791. **நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்**
**வீடில்லை நட்பாள் பவர்க்கு.**

நட்பினை விரும்பி கைக்கொள்பவர்களுக்கு ஒருவனோடு நட்புக் கொண்டபின், அதனை விடுவதென்பது நாகரிகமாகாது. அதனால் முதலிலேயே அவனது குணம் செய்கைகளை நன்கு ஆராயாமல் தவறாக நட்புக் கொண்டால், அதைப்போலக் கேடு தருவது பிறிதொன்றில்லை.

792. **ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை**
**தான்சாம் துயரம் தரும்.**

ஒருவனது பண்புகளைப் பற்றிப் பலமுறை திரும்பத்திரும்ப ஆராய்ந்து அதன்பின் ஆழ்ந்த நட்புக் கொள்ளாதவனுக்கு முடிவில் தான் சாவதற்குக் காரணமான துன்பத்தை, அந்நட்பே விளைவிக்கும். 'ஆய்ந்து ஆய்ந்து' என்று இரட்டித்துச் சொல்வது மிகவும் நன்றாக ஆராய்ந்தல்லது நட்பது தவறென விளக்குகிறது

793. **குணமும் குடிமையும் குற்றமும் குன்றா**
**இனனும் அறிந்தியாக்க நட்பு.**

ஒருவனது குணத்தையும் குடிப்பிறப்பையும் குற்றத்தையும் குறையில்லாத நல்லவர்களான அவனது நண்பர்களையும் ஆராய்ந்தறிந்து அவனுடன் நட்புச் செய்க. திருடும் பழக்குமுடையவனோடு அல்லது அத்தகையாரை நண்பர்களாகப் பழகுபவனோடு நட்புக்கொண்டால் என்ன ஆகும்?

**794. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்**
**கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.**

உயர்ந்த குடியில் பிறந்து, தன்னைப்பற்றி உலகத்தார் கூறும் பழிச்சொல்லுக்கு அஞ்சி வெட்கப்படுபவனை, அவன் விரும்பியதொன்றைக் கொடுத்தாவது நட்புக்கொள்ளுதல் வேண்டும். பழிக்கு நாணுபவன் பிழை செய்ய அஞ்சுவான். நல்ல குடியில் பிறந்தவனா என்பது திரும்பவும் வற்புறுத்தப்படுகிறது.

**795. அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய**
**வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.**

குற்றங் கண்டபோது அழுமாறு புத்தி சொல்லியும் நெறியல்லாத நெறியில் சென்றால் இடித்துக் கூறித் திருத்தியும் தனது நடப்பை அறிய வல்லவராய் வழிநடத்திச் செல்லக் கூடியவரது நட்பை, நன்கு ஆராய்ந்து கொள்க.

**796. கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை**
**நீட்டி அளப்பதோர் கோல்.**

ஒருவனுக்குக் கேடு வந்த இடத்தும் அக்கேட்டால் ஒரு நல்ல பயன் உளது. அது தன் சுற்றத்தாரை, அவர்கள் எந்த அளவு தன்னிடம் அன்புடையவர்களாக இருக்கின்றார்கள் என நீட்டி அளந்தறிதற்கான ஓர் அளவுகோலாகும். கேடு வந்ததும் ஒருவர் ஒருவராக நீங்குவர்; உண்மையன்புடையாரே இறுதிவரை ஒட்டியிருப்பர். அதனால் கேடு, உள்ளன்பை அளந்தறியப் பயன்படுகிறது. உண்மை நண்பரை இங்ஙனம் அளந்தறியலாம்.

**797. ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்**
**கேண்மை ஒரீஇ விடல்.**

அறவிலாதாருடன் கொண்ட நட்பினை முற்றிலும் கைவிட்டு, அவரின் நீங்கப்பெறுவானாயின், அஃது ஒருவனுக்குக் கிடைத்த ஊதியம் - இலாபம் என்று கருதப்படும்.

**798. உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க**
**அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.**

தனது உள்ளத்தைச் சிறுமைப்படுத்துவனவாகிய செயல்களை மனத்தாலும் நினையாது ஒழித்து விடுக. அதுபோலத் தனக்கொரு துன்பம் வந்தவிடத்து இடைவழியில் கீழறுத்தல் செய்வார் - மறைமுகமாக வஞ்சனை செய்வார், நட்பினைக் கொள்ளாது தவிர்த்திடுக. சிறுமைப் படுத்தும் எண்ணங்களைக் கைவிடுவதுபோலச் சிறுமையுடையார் நட்பையும் கைவிடுக என்பதாம்.

799. **கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை**
**உள்ளினும் உள்ளம் சுடும்.**

ஒருவர் நன்றாக இருக்கும்போதெல்லாம் உடனிருந்து, கேடு வந்த காலத்தில் அவரைக் கைவிட்டு நீங்குவாரது நட்பு, அக்கேடு அவரைக் கொல்வதுபோலத் துன்புறுத்தும் சமயத்தில், முன்பு நிகழ்ந்தவற்றை நினைத்தாலும் நினைத்த உள்ளத்தைச் சுட்டுப்பொசுக்கும்.

800. **மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்**
**ஒருவுக ஒப்பிலார் நட்பு.**

சிறு குற்றமும் இல்லாத சான்றோரது நட்பினையே கைக்கொள்க. தமக்குப் பொருத்தமில்லாத பண்பிலாருடன் எதிர்பாராது நட்புக் கொள்ள நேர்ந்தால் அந்நட்பினை, அவர் விரும்பியதொன்றைக் கொடுத்தாவது தொலைத்துவிடுக!

நல்ல நட்பை ஒன்றைக் 'கொடுத்தும் கொளல்' வேண்டுமாம். தீயநட்பை 'ஒன்று ஈத்தும் (கொடுத்தும்) ஒழித்துவிட வேண்டும்.

## *81. பழைமை*

பல காலமாகப் பழகி வந்ததால் ஒருவருக்கொருவர் ஏற்படும் நட்புரிமை, தொடர்ந்துவரும் நட்பில், ஒருவர் உரிமையோடு செய்வன சில பிழையாகத் தோன்றினும், பழைமை - பழைய நட்புக்காரணமாகப் பொறுத்தல் கடன் என வற்புறுத்தப்படுகிறது.

801. **பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்**
**கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.**

'பழைமை' என்று சொல்லப்படுவது எது என்று கேட்டால், நெடுங்காலமாகப் பழகிவரும் நட்பின் பழைமை காரணமாக உரிமையெடுத்துக்கொண்டு நண்பர்கள் செய்வனவற்றிற்காக, நட்பைச் சிதைக்காமல் உடம்படுவதாகும்.

802. **நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்.**

நட்பின் கூறுபாடுகளில் ஒன்று, நண்பர்கள் நட்புரிமை காரணமாக, சலுகையெடுத்துக்கொண்டு மற்றவர் பொருட்டு அவரைக் கேளாமலும் தாம் நினைத்தபடியும் சில செய்தல். அங்ஙனம் நண்பர்கள் நடந்து கொண்டால், அவ்வுரிமை பற்றிய செயல்கண்டு வெறுக்காமல், உடம்பட்டு இனியவராய் நடந்து கொள்ளுதல் சான்றோர் தம் கடமையாகும். கெழுதகைமை - நட்புரிமை. உப்பு ஆதல் - இனியவராதல்.

803. **பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை.**

தமக்கு உடம்பாடில்லாதவற்றையும் நண்பர் ஒருவர் நட்புரிமையால் செய்து விடுவாரேல், அவற்றைத் தாமே செய்ததுபோலக் கொண்டு அமைதியுறாவிட்டால் அவருடன் பழையதாய்ப் பலநாள் பழகிவந்த நட்பு என்ன பயனைத் தரும்?

804. **விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.**

நட்புரிமை காரணமாக, தம்மைக் கேளாதே தம் காரியம் ஒன்றைத் தம் நண்பர் செய்து விடுவாராயின், அந்நட்பை விரும்பும் தன்மை காரணமாக அதில் குற்றங்காணாதிருப்பர் மேலோர்.

805. **பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.**

ஒருவர் தமக்கு நண்பராயினார் தாம் நொந்து வருந்தத் தக்கவனவற்றைச் செய்தாரென்றால், அதனை வெறுக்காமல் ஒன்று அறியாமையால் மட்டுமன்றி அதைவிட அளவு கடந்த நட்புரிமையால் செய்துவிட்டதாக எண்ணி மன அமைதி கொள்க.

806. **எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.**

தம்முடன் முன்பு தொட்டு, வேறுபடாது பழகி வருபவரது நட்பினை, அவராலே தமக்கொரு இழப்பு வந்தவிடத்தும், நட்புரிமையெனப்படும் வரம்பிற்குள் நிலையாக நிற்பவர், கைவிட மாட்டார். நட்புரிமைக்குக் கட்டுப்பட்டு வாழ்வது இது.

807. **அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்**
**வழிவந்த கேண்மை யவர்.**

அன்புடன் இணைந்து நெடுங்காலமாக வளர்ந்த நட்புரிமையுடையவர், நண்பர் தமக்கு அழிவு தரக்கூடிய காரியங்களைச் செய்தாராயினும், அவரிடத்துத் தாம் கொண்ட அன்பைக் கைவிட மாட்டார்கள்.

முன் குறள் எதிர்பாராது அவரால் நேர்ந்த இழப்பு; இது அவர் வேண்டுமென்று செய்யுந் தீங்கு.

808. **கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு**
**நாளிழுக்கம் நட்டார் செயின்.**

தம் நண்பர்களது பிழையைப் பிறர் வந்து சொன்னாலும் அதைக் கேட்டுக் கொள்ளாத அத்துணையளவு நட்புரிமையைப் போற்றுபவர்களுக்கு, அந்நண்பர்கள் பிழையானவற்றைச் செய்வார்களாயின், அந்த நாள் அவர்க்கு உண்மையன்பைக் காட்டக் கிடைத்த நல்ல நாளாகும்.

809. **கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை**
**விடாஅர் விழையும் உலகு.**

குற்றம் கண்டபோதும் உரிமை கெடாமல் தொடர்ந்து பழகிவரும் நட்பினையுடையாரது உள்ளன்பு மிக்க நட்பினை யார் கைவிட மாட்டார்களோ, அவரோடு தாமும் நட்புக் கொள்ள வேண்டுமென்று உலகம் விரும்பும்.

810. **விழையார் விழையப் படுப பழையார்கண்**
**பண்பின் தலைப்பிரியா தார்.**

பழையராய் நீண்ட காலமாகப் பழகிவரும் நண்பர்கள் பிழை செய்தார்களாயினும் அவர்களிடத்தில் தம் பண்பினின்றும் சற்றும் பின்னடையாதவர்கள், தம் பகைவராலும் விரும்பப்படுவார்கள்.

## 82. தீ நட்பு

தீயவர்களுடன் கொள்ளும் நட்பு தீமையை விளைவிக்கும் என்பதை விளக்குதல்.

811. **பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை**
**பெருகலிற் குன்றல் இனிது.**

கண்ணால் காணும்போதே காதல் மிகுதியால் அப்படியே பருகி விருபவர் போல் காணப்பட்டாலும், பண்பற்றவர்களது நட்பு மேன்மேலும் வளர்வதைவிடத் தேய்வது நல்லது.

812. **உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை**
**பெறினும் இழப்பினும் என்?**

செல்வமுள்ளபோது பயனுண்டென்பதால் நட்புக் கொண்டு, செல்வம் இல்லாதபோது ஒதுங்கிச் செல்லுகின்ற, தமக்குப் பொருத்தமில்லாதவரது நட்பினைப் பெற்றால் கிடைக்கும் பயன் என்ன? இழந்தால் வரும் கேடு என்ன?

813. **உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது**
**கொள்வாரும் கள்வரும் நேர்.**

'நட்பினால் கிடைக்கும் பயன் என்ன' என்று தமக்குக் கிடைக்கும் பயனையே அளந்து பார்த்து நட்புக் கொள்ளும் நண்பர்களும் கொடுப்பவரை விரும்பாது அவர் தரும் பொருளையே விரும்பிப்பெறும் விலைமாதர்களும் பிறர் சோர்வு பார்த்துத் திருடும் கள்வர்களும் தம்முள் சமமானவர்கள். மூவரும் செல்வத்தையே குறியாய்க்கொண்டு வஞ்சித்து நடத்தலின் சமமாகின்றனர்.

814. **அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்**
**தமரின் தனிமை தலை.**

போர்க்களத்தில் போரிட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில், பின்வாங்கிக் கீழே தள்ளிவிட்டோடும் பயிற்சி போதாத குதிரை போல்வாருடன் பழகி, அவரின் நண்பர் ஆவதைவிடத் தனிமையாயிருப்பது தலையாயதாகும். 'ஆற்றறுத்தல்' ஒரு மரபுத்தொடர்; இடையே வஞ்சித்துக் கைவிடுதல்.

815. **செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை**
**எய்தலின் எய்தாமை நன்று.**

நட்புச்செய்து வைத்தும் தனக்குப் பாதுகாவலாகாத சிறியவர்களுடன் கொண்ட கீழான நட்பினைப் பெறுவதை விட, பெறாதிருப்பதே ஒருவருக்கு நல்லதாகும்.

816. **பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்**
**ஏதின்மை கோடி உறும்.**

அறிவில்லாதவருடன் மிக நெருங்கிப் பழகும் நட்பினைவிட, அறிவுடையாருடன் பழகாது விலகியிருக்கும் பகை கோடி மடங்கு

நன்மை தரும். ஏதின்மை - அயன்மை, பகையால் அயலார்போல் விலகியிருத்தல்.

817. **நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்**
**பத்தடுத்த கோடி உறும்.**

எந்த நேரமும் சிரித்து நல்லவர்போல் நடிக்கும் இயல்புடையவர்களுடன் கொண்ட நட்பினைவிட, நேரே பகைக்கும் பகைவரால் பத்துக்கோடி மடங்கு நன்மை உண்டாகும். தீய நட்பாலேற்படும் தீங்குகளுடன் ஒப்பிடும்போது, பகைவரால் ஏற்படும் தீங்கு, பலகோடி மடங்கு நல்லதாகிவிடுகிறது. பகையென வெளிப்படத் தெரிவதால் காத்துக் கொள்ளல் எளிது.

818. **ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை**
**சொல்லாடார் சோர விடல்.**

தம்மால் நமக்கு உதவக்கூடிய - தம்மால் இயலும் ஒரு காரியத்தையும் நமக்குச் செய்யாமல் அதனைச் செய்ய இயலாதவர் போல நடித்து, முடிக்காமல் போட்டுக் குழப்பி வாட்டுபவரது நட்பினை, அவரறிய வெளிப்படச் சொல்லாமலே சிறிதுசிறிதாகக் கைவிடுக.

819. **கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு.**

தாம் செய்வதொன்று சொல்வதொன்றாகச் செயலும் சொல்லும் வேறுபட்டவரது நட்பு, நனவில் மட்டுமன்றிக் கனவிலும் துன்பம் தருவதாகும். வினை வேறு சொல் வேறு - செயலுக்கும் பேச்சுக்கும் எவ்விதத் தொடர்புமின்மை.

820. **எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ**
**மன்றில் பழிப்பார் தொடர்பு.**

தனியே மனைக்குள் இருக்கும்போது அன்புமிகுந்த நண்பராய்க் கூடிக் குலாவி, பலருடன் பொது மன்றத்தில் இருக்கும் போது பழித்துப் பேசுவாரது நட்பினை, சிறிதளவுகூட நெருங்கிப் பழகாது தவிர்க்க முயல்க.

## 83. கூடாநட்பு

தீ நட்பு - தீயவர் நட்பு, கூடா நட்பு - மனம் பொருந்தாத நட்பு.

821. **சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை**
**நேரா நிரந்தவர் நட்பு.**

மனம் ஒன்றாமல், சமயம் வாய்க்கும்போது கெடுதல் செய்யலாமென வஞ்சகமாய் எண்ணிக்கொண்டு, நண்பர்போல் நடித்துக் கூடிப் பழகுபவரது நட்பு, பட்டடை போன்றதாகும். பட்டடை சம்மட்டியால் அடிக்கு முன், ஒருபொருளைத் தாங்குவது போலிருந்து, தக்க சமயம் வாய்த்ததும், ஓங்கி அடிப்பதற்குத் துணையாகும். பட்டடை போல்வாரது மனம் ஒன்றா நட்பே கூடா நட்பென்பது கருத்து. இது கூடா நட்பின் இலக்கணம் கூறுகிறது.

822. **இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்**
**மனம்போல வேறு படும்.**

தமக்கு உற்ற நண்பர்போல வெளியே காட்டிக்கொண்டு உண்மையில் மனமொன்றிய உறவாகாதார் நட்பு, இருமனப் பெண்டிர்தம் மனம்போல வேறுபடும் தன்மைத்தாகும்.

இங்கு மகளிர் என்பது விலைமகளையே குறிக்கும். 'வரைவின் மகளிர் அதிகாரம் காண்க. ஒருவருடன் உறவாடி இருக்கும்போதே, அவருடன் மனம் பொருந்தாது அடுத்துப் பொருள் தருபவரை எண்ணியிருப்பதால் 'இருமனப் பெண்டிர்' என்பர். மனம் பொருந்தாமல் நண்பர்போல் நடித்துச் சமயம் பார்த்து வேறுபடுபவரும் அம்மகளிர் போன்றவரே.

823. **பலநல்ல கற்றக் கடைத்து மனநல்லர்**
**ஆகுதல் மாணார்க் கரிது.**

பல நல்ல நூல்களைக் கற்ற போதிலும் அதனால் திருந்தி, நல்ல மனமுடையராக ஆகுதல் மாண்பற்றவர்க்கு இயலாது. கற்றவரென்பதால் நல்லவரென நம்பி நட்புக்கொள்ளுதல் கூடாது. கெட்ட மனமுடையார் எவ்வளவு கற்றவாராயினும், என்றும் மனம் ஒன்றிப் பழக மாட்டார்கள்.

824. **முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா**
**வஞ்சரை அஞ்சப் படும்.**

முகத்தினால் மலர்ந்து இனியவாகப் பேசிச் சிரித்துப் பழகி, அதே சமயம் மனத்தினுள் தீபவற்றையே நினைக்கும் வஞ்சகர்களைக் கண்டு அஞ்சுதல் வேண்டும். அவர்களுடன் நட்புக் கூடாது. முகம் சிரிக்கும்போதே, அகம் தீங்கு செய்ய நினைக்குமாம்.

825. **மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்**
**சொல்லினால் தேறற்பாற்று அன்று.**

தம்மோடு மனத்தினால் முழுவதும் பொருந்தாதவரை, எந்த ஒரு வகையிலும் அவர் பேசுவதை நம்பித் தெளியும் தன்மையுடையதன்று நட்பு. அவர் நம்ப வைப்பவர் போல் திறம்படப் பேசுவராதலின், அவர் பேச்சை நம்பித் தெளியற்க என்பதாம்.

826. **நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்**
**ஒல்லை உணரப் படும்.**

உற்ற நண்பரைப்போல் நல்லவற்றையே நம்முன் பேசினாலும் நம்முடன் மனம் பொருந்தாதவர் பேச்சே அது என்பது, அவர் பேசிக் கொண்டிருக்கும் அப்பொழுதே அறியப்படும். பேச்சு நடிப்பு என்பது பேசும் முறையிலேயே வெளிப்பட்டு விடும். ஏமாறாமல், உடனே கண்டு கொள்ள வேண்டும் என்பதும் கருத்து.

827. **சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்**
**தீங்கு குறித்தமை யான்.**

வில் வளைவது எதிரே நிற்பவர்மீது அம்பை எய்வதற்கே, எனவே வி வளையும் 'வணக்கம்' தீங்கு செய்வதையே குறித்தமையால், பகைவர்கள் மிகத் தாழ்ந்து, பணிந்து பேசுகின்ற சொல்லினது வணக்கத்தையும் நம்மிடம் நல்லது செய்தலைக் கருதிப் பேசினார் என்று கருதற்க. வணக்கம் - வளைவது; வளைந்து வணங்குவது இரண்டையும் குறிக்கும்.

828. **தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்**
**அழுதகண் ணீரும் அனைத்து.**

பகைவர்கள் தொழுது கூப்புகின்ற கையினுள்ளும் கொல்லத்தக்க கருவி மறைந்திருக்கும்; அவர்கள் அழுது விடுகின்ற கண்ணீரிலும் அதுபோல நம்மையழிக்கும் வஞ்சகம் மறைந்திருக்கும். எனவே குறிப்பறிந்து காத்துக் கொள்க என்பதாம். அவர்கள் தொழுதாலும் அழுதாலும் அதில் ஏமாந்து நண்பரெனத் தெளிதல் கேடு பயக்கும். நம் இரக்கவுணர்வைப் பயன்படுத்தியும் ஏமாற்றப் பார்ப்பர்: விழிப்பாயிருங்கள் என்பதாம்.

829. **மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து**
**நட்பினுள் சாப்புல்லற் பாற்று.**

வெளியே மிகுந்த நட்புடையார் போலக் காட்டி, அகத்தே தம்மை இகழும் வஞ்சகப் பகைவர்களை, தாமும் வெளியே சிரித்துப் பேசி அவர்களையும் மகிழ்ந்து சிரிக்கச் செய்து, அகத்தே அந்நட்பு அடியோடு சாகும் வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். நடித்துப் பழகுவர்களோடு நாமும் நடித்துப்பழகி உள்ளத்தினுள்ளே அந்நட்பை முழுவதும் ஒழித்துவிடவேண்டும். அரசியல் தந்திரம் இது. சாப்புல்லல் - சாவு பொருத்துதல், சிறிது சிறிதாகச் சாகடித்தல்; அழித்தல்.

830. பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல்.

தம் பகைவர் தமக்கு நண்பராய் மாறிப் பழக வேண்டிய சூழ்நிலை ஒன்று வருமானால், அப்போது அவர்களுடன் முகத்தினால் மலர்ந்து நட்புச் செய்து, உள்ளத்து நட்பை முழுவதும் கைவிட்டு, இறுதியில் சூழ்நிலை மாறும்பொழுது புறத்தே நட்பதையும் கைவிடுக. அரசியலிலும் தனிப்பட்ட நிலைகளிலும் உடனே பகைக்கக்கூடாத சமயங்களில் இவ்வாறு மனத்தளவில் விழிப்பாய் இருந்து, பிறகு அதிலிருந்து விடுபட வேண்டும்.

## 84. பேதைமை

சிறிதளவு அறிவும் இல்லாமையே பேதைமை. தன் கேட்டிற்குக் காரணம் யாதெனத் தானே அறியாமை. பெரிதும் பிறரோடு பழகுவதிலுள்ள குற்றங் குறைகளுக்கு, இப்பேதைமையே காரணமாகிறது.

831. பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல்.

பேதைமை என்று குறிப்பிட்டுச் சொல்லப்படுவது எதுவென்றால், தனக்குக் கேடு தருவனவற்றை நல்லனவாகக் கருதிக் கைக்கொண்டு, ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுவதாகும்,

தனக்கு இழப்புத் தருவதை நல்லதென்றும் ஆக்கம் தருவதைக் கேடென்றும் கொண்டு நடக்கும் அறியாமையே பேதைமை என அதன் பொருள் விளக்கம் கூறுகிறார்.

832. பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

தனக்குக் கைவராத - தெரியாத - பழக்கமில்லாத ஒரு காரியத்தின்கண் பெருவிருப்பம் கொள்ளுதல், ஒருவனுக்கு அறியாமை அனைத்தினும் கூடுதலான அறியாமையாகும்.

கை அறியாப் பேதை (936) எனப் பின்வரும் குறளிலும் கைத்திறமை இல்லாத, செய்யும் பழக்கமில்லாத எனப் பொருள்படுதல் காண்க.

833. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்

பழி பாவங்களுக்கு வெட்கப்படாமையும் சிந்தித்துச் செயல்படாமையும் முகம் முறியப் பேசும் அன்பின்மையும் பேண வேண்டிய பொருளெதனையும் பேணாமையும் ஆகிய இவை அறிவிலாப் பேதைகட்கு, இயல்பாக அமைந்த தொழிலாகும். இவை தவிர, நல்லன அறியாராகையால், இவையே அவரது 'தொழில்' எனப்பட்டன. பழகும் பண்பாட்டை ஒட்டியவை இவை.

834. **ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
**பேதையின் பேதையார் இல்.**

நூல்களைக் கற்று அவற்றின் நுண்பொருள்களை அறிந்தும் அங்ஙனம் கற்றவற்றைப் பிறர்க்கு எடுத்துரைத்தும் தான் அப்புலமைக்கேற்ப ஒழுகாத பேதையைப்போல் அறிவிலாப் பேதையர் உலகில் வேறு யாரும் இலர். மற்றவர்க்குப் போதித்துவிட்டு, தாம் மட்டும் அவ்வாறு நடக்காதவர்களே உலகில் பலர்.

835. **ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**
**தான்புக்கு அழுந்தும் அளறு.**

பின்வரும் ஏழுபிறப்பிலும் தான் நரகத்துன்பம் எனப்படும் சேற்றிே புகுந்து அதிலேயே அழுந்திக் கிடக்கும் நிலையை, அறிவில்லாத பேதையாகிய ஒருவன் தனது ஒவ்வொரு பிறப்பிலேயே செய்து கொள்ளும் ஆற்றலுடையவனாவான். காலமெல்லாம் துன்பத்தில் அழுந்திக் கிடப்பதை, தனக்குத் தானே செய்துக்கொள்ள வல்லவன் என எள்ளல்குறிப்புடன் கூறுகிறார். ஏதாவது பெருந்தவறு செய்துவிட்டுக் காலமெல்லாம் வருந்தி உழலுதல்.

836. **பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்**
**பேதை வினைமேற் கொளின்.**

செயலாற்றும் முறைமை அறியாத பேதை ஒருவன், தனக்கு எல்லாம் தெரிந்ததுபோல் மேற்கொள்வானானால், அவன் நிலை பொய்யாகிப் போகும்; அதுமட்டுமா? அவனும் கைகளில் தளை பூட்டப்பட்டுச் சிறைப்படுவான். வெளிவர முடியாத சிக்கலில் மாட்டிக் கொள்வான்.

837 **ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை**
**பெருஞ்செல்வம் உற்றக் கடை.**

அறிவிலாப் பேதையானவன் பெருஞ்செல்வத்தை எதிர்பாராமல் அடைவானானால், அச்செல்வத்தை எவ்வித உறவுமற்ற அயலார் உண்டு வயிறு நிறைய, அவனோடு நெருங்கிய அவனது உறவினர் பசியால் வாடுவர். பேதை பெற்ற செல்வம், தன்னை ஏமாற்றும் ஊருக்குப் பயன்படுமே தவிர, உறவுக்குப் பயன்படாது.

838. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின்.

ஏற்கெனவே அறிவிலியாக இருக்கும் ஒருவன் தன் கைகளில் ஏதேனும் செல்வத்தையும் பெருவானாகில் அது முன்பே பித்துப் பிடித்தவன் அதனோடு கள்ளையும் குடித்து மயங்கினாற் போலாகிவிடும். அச்செல்வம் கண்டபடி அழிக்கப்பட்டு, அவனையும் ஆட்டிப் படைக்கும்.

839. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன்று இல்.

அறிவிலிகளுடன் கொண்ட நட்பு மிகவும் இனிதாகும்; ஏனெனில், பிரிய நேரிடும்போது அந்நட்பு எவ்விதத் துன்பமும் தருவதில்லை.

840. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

சான்றோர்கள் கூடிய அவையில் அறிவிலாப் பேதை ஒருவன் புகுதல், தூயவையல்லாதவற்றை மிதித்த காலைக் கழுவாமல் இன்பம் தரும் படுக்கையில் வைத்ததுபோலாகும்.

அமளியில் படுக்கச் செல்லும்முன், நாள் முழுவதும் நடந்து அழுக்கேறியதும் தூயதல்லாதவற்றை மிதித்ததுமான காலை, நன்கு கழுவிவிட்டுச் செல்லுதல் வேண்டும். பேதையாய் இராதே என்பதை இங்ஙனம் கடிந்து கூறித் திருத்த முயல்கிறார்.

## 85. புல்லறிவாண்மை

கீழான அறிவுடையான் ஒருவன் தன்னைப் பேரறிவு உடையவனாக மதித்து, அறிவுமிக்காரை மதியாது நடத்தல். புல்லிய அறிவு - சிறப்பற்ற, கீழான அறிவுடைமை. புல்+அறிவு+ஆண்மை=புன்மைமிக்க அறிவினைக் கைக்கொண்டு, பெருமையுடையவன்போல் வாழ முயலுதல்.

841. அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு.

ஒருவனுக்கு வறுமைகளுள் எல்லாம் வைத்துப் பெரிய வறுமையாவது தூய நல்லறிவில்லாமையேயாகும். மற்றைய பொருள்கள் இல்லாமையை, உலகோர் அத்துணை வறுமையாகக் கருத மாட்டார்கள்.

842. அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம்.

அறிவில்லாதவன் மனமுவந்து யாருக்கும் எதையும் ஈய மாட்டான். ஒருவேளை அவன் மனம் மகிழ்ந்து எதையேனும் ஈவானாகில் அது அதனைப் பெறுபவன் செய்த தவத்தின் பயனேயாம். அறிவிலானுக்குக் கொடுக்கும் எண்ணமே வராது. செல்வமிருந்தும் ஈயாமை, புல்லிய அறிவின் இயல்பாகும். இங்கு தவம் என்பது பெருபவனது நல்வினையை.

843. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.

அறிவற்றவர்கள் தம்மைத் தாமே செய்து கொள்ளும் கேடுகள், அவர்களுக்கு அவர்களின் பகைவர்களாலும் செய்தற்கு அரியனவாகும்.

844. வெண்மை எனப்படுவ தியாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.

அறிவில்லாத தன்மை எனப்படுவது யாது எனக்கேட்டால், தமக்குத் தாமே 'யாம் ஒள்ளிய அறிவுடையேம்' என எண்ணிக் கொள்ளும் மனச்செருக்காகும். வெண்மை, ஒண்மை எதிர்ச்சொற்கள், வெண்மை - அறிவின்மையைக் குறிக்கும் படிமம், புல்லறிவு. ஒண்மை - ஒள்ளிய நுட்பமான அறிவுடைமை.

845. கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்.

தாம் கல்லாதவற்றையும் கற்றவர்போல் காட்டி நடந்து கொள்ளுதல், உண்மையில் அவர் சிலவற்றைக் கசடறக் கற்றிருந்தாராயினும் அதன்கண்ணும் மற்றவர்க்கு ஐயத்தை விளைவிக்கும். கல்லாததைக் கற்றவர்போல் காட்டினால் கற்றதிலும் ஐயத்தை உண்டாக்கிவிடும்.

846. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி.

தம்மிடம் ஏற்படும் குற்றங்களை நீக்கி அவற்றை மறைக்க வழியறியாதபோது, தம் மறைவிடத்தை மட்டும் ஆடையால் மறைத்துக் கொண்டதாகக் கூறுவது அவர்தம் அற்பமான அறிவாகும். மறைத்தற்குரிய உறுப்பை மறைப்பதுபோலக் குற்றங்களையும் நாணி மறைத்து நீக்குதல் வேண்டும். இன்றேல், தன் மானத்தைக் காத்ததாக ஆகாது என்பதாம்.

847. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெரும்இறை தானே தனக்கு.

மறைக்க வேண்டிய அரிய இரகசியங்களைத் தன்னையறியாமல் வெளிப்படுத்தி விடுகின்ற அறிவில்லாதவன், தனக்குத் தானே பெருந்துன்பத்தைச் செய்து கொள்வான்.

848. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஓம் அளவுமோர் நோய்.

அறிவுடையார் சொல்லி ஏவினாலும் அதனை ஏற்றுக்கொண்டு செய்யமாட்டான்; அதுவன்றித் தானாகவும் சிந்தித்துத் தெளிந்து செய்ய மாட்டான். அப்புல்லறிவு அவனது உயிர் போமளவும் அவனுக்குப் பொறுத்தற்கரியதொரு நோய்போன்று துன்பம் தரும்.

சொன்னாலும் தெரியாது, தன்னாலும் தெரியாது என்ற பழமொழியை எண்ணுக.

849. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.

அறியாதவனை அறிவித்து அறிவுடையவனாக்கி விடலாம் என அறிவு புகட்டப் புகுகின்றவன்தான் அறிவில்லாதவனாகி, அவனாலேயே பழிப்புக்கு ஆளாவான். அவ்வறிவில்லாதவனோ, தான் அறிந்து கொண்டதே அறிவுடைமை என எண்ணிக்கொள்வான். புல்லறிவாளனுக்கு எவ்விதத்திலும் அறிவு கொளுத்த முடியாது. அவன் தன் புல்லறிவே அறிவென்று சாதிப்பான்.

850. உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்.

உலகிலுள்ள உயர்ந்தோர்கள் உண்டு என்று சிந்தித்துக் கூறிய நிலையான உண்மைகளை ஏற்று உலகொடு ஒத்துப்போதலே முறை. அவ்வாறல்லாமல் அவர்கள் உண்டென்று கூறியதை இல்லை எனச் சொல்பவன், உலகத்திலுள்ள பேய் எனக் கருதப்படுவான்; மனிதன் எனக் கருதப் படமாட்டான். உலக மக்களின் நல்ல நடைமுறைகளோடு இயைந்துபோதலே முறை; அவற்றுக்கு மாறாகச் சென்றால் மக்கள் அவனைப் பேயைக் கண்டதுபோல் கருதி அஞ்சி விலகிச்செல்வர்.

## 86. இகல்

ஒருவரை ஒருவர் பகைத்தற்குத் தொடக்கமாக, மனம் மாறுபடுதல். முதலில் மனத்தில் தோன்றும் வெறுப்புணர்ச்சி கருத்து மாறுபாட்டுணர்ச்சிகளே

'இகல்' எனப்படும். மனத்தினுள் தழல்போல் கிடந்து கொதிக்கும். இதுவே பகைத் தீயாய்ப் பிறகு கொழுந்துவிட்டெரியுமாதலால் 'இகல்' தவிர்க என்பது இது.

851. **இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்**
**பண்பின்மை பாரிக்கும் நோய்.**

ஒன்றுபடாமல் பிரித்து வைத்தல் எனப்படும் தீய பண்பைப் பெரிதாக வளர்க்கும் நோய் எல்லா உயிர்களுக்கும் 'இகல்' எனப்படும் மாறுபாட்டுணர்ச்சியே என்பர் பெரியோர்.

பகல் - பிரித்தல், பகைத்தல். நாய்கள் ஒன்றைப் பார்த்து ஒன்று குரைப்பது முதல், மனிதர்கள் ஒருவரை ஒருவர் முறைப்பது வரை பரவிக் கிடத்தலால் 'எல்லா உயிர்க்கும்' என்றார்.

852. **பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி**
**இன்னாசெய் யாமை தலை.**

தம்முடன் பகைத்து, ஒன்றுபடாமல் பிரிவதையே கருதி, ஒருவன் பொருந்தாத தீயவற்றைச் செய்தானாயினும் அவனுக்குத் துன்பம் தருவனவற்றைச் செய்யாதிருத்தல் தலையாய பண்பாகும். இகல் கொள்ளுதற்குக் காரணமுள்ள வழியும் அதைத் தவிர்க்க முயல்வதே நல்லதாகும். பகையுணர்வு கண்டவழித் தாமும் பகையுணர்வு வயப்படுவதே உலக இயல்பு. அதைத் தவிர்ப்பதே நல்லது.

853. **இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்**
**தாவில் விளக்கம் தரும்.**

மனத்தை முறித்துக் கொள்கின்றதாகிய 'இகல்' எனப்படும் கடுந்துன்பத்தைச் செய்யும் நோயை, ஒருவன் தன் மனத்தினின்றும் நீக்குவானாயின், அப்பண்புடைமை கெடுதலில்லாத குற்றமற்ற புகழாகிய ஒளியினை அவனது வாழ்நாளில் தரும்.

854. **இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்**
**துன்பத்துள் துன்பங் கெடின்.**

துன்பங்கள் எல்லாவற்றுள்ளும் மிகுந்த துன்பத்தைத் தரும் இகல் என்னும் மன முரண்பாடுமட்டும் ஒருவனுக்கு இல்லாவிட்டால், அது அவனுக்கு இன்பங்களெல்லாவற்றினும் மிகுந்த இன்பத்தைக் கொடுக்கும்.

855. **இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே**
**மிகலூக்கும் தன்மை யவர்.**

மன மாறுபாடு தோன்றியவழி அதற்கு எதிரே விட்டுக்கொடுத்து உடன்பட்டு வாழக் கூடியவரை, அதற்குத் தாமும் இசையாது அவ்விகலையே மிகப்பெரிதுபடுத்தும் தன்மையுடையார் யார்? ஒருவர் இணங்கி வரும்பொழுது, மற்றவர் எளிதில் இசைந்து வாழ்வர்.

தாம் வலிமையுடைய உயர்நிலையிலிருந்தாலும் வளைந்து கொடுத்து, ஒத்துப்போகக்கூடிய மனஉரம் உடையவர் என்பதற்கே 'சாய்ந்து ஒழுக வல்லார்' என்றார்.

**856. இகலின் மிகலினிது என்பவன் வாழ்க்கை**
**தவலும் கெடலும் நணித்து.**

மன மாறுபாடுற்றவழி, அதனை மேன்மேலும் மிகுதிப்படுத்தி வளர்த்தலை இனிது எனக் கருதுபவனது வாழ்க்கையில், நிலைகுலைதலும் முற்றும் அழிதலும் விரைவில் நடந்துவிடும். இகலுணர்வு தோன்றிவிட்டால் அது நெருப்புப்போல் பற்றி எரியவே முந்தும்.

**857. மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்**
**இன்னா அறிவி னவர்.**

இகலையே விரும்புகின்ற தீய அறிவினையுடையவர்கள் தமக்கு மேன்மை பொருந்துமாறு, ஒரு பொருளின் உண்மைத் தன்மையைத் தம் ஆத்திரம் காரணமாக அறிய மாட்டார்கள். மனமுறிவு ஆத்திரத்தைக் கிளப்பி உண்மையை அறியவிடாமல் மறைத்து விடும். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பது பழமொழி.

**858. இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை**
**மிகலூக்கின் ஊக்குமாம் கேடு.**

மன மாறுபாடு தோன்றியவழி, தான் வலியவனாயினும் அதை வளர்க்காது அதனெதிரே விட்டுக்கொடுத்துப் போய்விடுதல் ஒருவனுக்கு ஆக்கத்தைத் தரும். அவ்வாறன்றி, அவ்விகலையே மேன்மேல் வளர்த்துக் கொண்டு போனால் அவனுக்குக் கேடுகாலமும் அதுபோல் விரைந்து வரும். எதிர் சாய்தல் - எதிரே வளைந்துகொடுத்தல் எனும் இம்மரபுத் தொடர் விட்டுக்கொடுத்து இணங்கிப் போதலைக் குறிக்கும்.

**859. இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை**
**மிகல்காணும் கேடு தரற்கு.**

மனமுறிவுபடுவதற்குக் காரணம் இருந்தாலும் ஒருவனுக்கு ஆக்கத்தைத் தரும் நல்ல சூழல் வரும்பொழுது அவன் அவ் இகலை நினைக்கமாட்டான்; தனக்குக் கேடு தேடிக்கொள்ளும் சூழல்

வரும்பொழுது, காரணமின்றியும் அவ்விகலை மிகுதிப்படுத்தவே தோன்றும். மனத்திலேற்படும் இகல் உணர்வு, கேட்டை முன்னுணர்த்தும் அறிகுறியாகும்.

860. **இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்**
**நன்னயம் என்னும் செருக்கு.**

ஒருவனுக்கு இவ்விகலாலே துன்பங்கள் எல்லாம் உண்டாகும். மகிழ்வுடன் சிரித்துப் பழகுதலால், நல்லியல்புடைமை என்னும் பெருமித நிலை ஏற்படும்.

## 87. பகைமாட்சி

சிலர் தம் அறியாமையால் பகையை மேன்மைப்படுத்திச் சிறப்புறச் செய்வர். அவ்வாறல்லாமல் தனக்கு நன்மை பயக்குமாறு பகையையும் பயன்படுத்திக்கொள்ள வழிகாட்டுவது இது.

861. **வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா**
**மெலியார்மேல் மேக பகை.**

தம்மைவிட வலியார்மீது பகை கொள்ளுதலைத் தவிர்த்திடுக. தம்மை மதியாத மெலியவர் மீது பகைகொள்க. இவை பெரிதும் அரசியலை நோக்கியன.

862. **அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்**
**என்பரியும் ஏதிலான் துப்பு.**

தன் சுற்றத்தாரிடம் அன்புகாட்டி அணைத்துக் கொள்ளாதவன்; வலிமை நிறைந்த துணையுமில்லாதவன்; தன் வலிமையையும் வளர்த்துக் கொள்ளாதவன்; இத்தகையவன் பகைவரது வலிமை கண்டு, நைந்து வருந்துவது ஏன்? துப்பு - வலிமை.

863. **அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்**
**தஞ்சம் எளியன் பகைக்கு.**

அஞ்ச வேண்டாதவற்றிற்கு அஞ்சுவான்; பகையை வெல்லும் வழியறியான்; பிறருடன் நட்புக் கொள்ளும் திறமையாகிய இயல்பமையாதவன்; யாருக்கும் எதையும் ஈயாதவன். இத்தகையவன் தன் பகைக்கு மிகவும் எளியவனாவான்.

864. நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது.

கடுங்கோபத்தைக் கைவிடாதவன்; தன்னைப் பற்றிய மறைவான செய்திகளைத் தன் மனத்தில் நிறுத்தி, மறைத்து வைக்க முடியாதவன்; இத்தகையவனை வெல்லுதல் எப்போதும் எவ்விடத்திலும் யாருக்கும் எளிது.

865. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது.

ஒரு காரியத்தைத் தொடங்கும்போது பின்வரும் விளைவுகளை எண்ணிப் பார்க்க மாட்டான்; அக் காரியத்தை முடித்தற்கு வாய்ப்பானவற்றைத் திட்டமிட்டுச் செய்யமாட்டான்; அதைச் செய்யாவிட்டால் வரும் பழிக்கு அஞ்சமாட்டான்; பண்புடையவனும் அல்லன். இத்தகையவன் வெல்வதற்கு எளியனாதலின் பகைவர்களுக்கு இவனொடு கொண்ட பகை இனிதாகும்.

866. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும்.

எதனையும் எண்ணிப் பாராது கோபங்கொள்ளும் கடுஞ் சினத்தையுடைவன்; மிகப் பெருகிய காம உணர்ச்சியை உடையவன்; இத்தகையவனது பகை பகைவர்களால் விரும்பிக் கைக்கொள்ளப்படும்.

867. கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.

ஒரு காரியத்தைத் தொடங்கிவைத்து, கூடவே இருந்து அதற்கு முற்றிலும் மாறான இடர்ப்பாடுகளை மறைவாகச் செய்பவனது பகையை, மிக உறுதியாக, ஏதேனும் ஒன்றனைக் கொடுத்தாயினும் வலிந்துகொள்ளுதல் வேண்டும். அவன் தொடர்பை விடப் பகையே நன்மை பயக்குமாதலின் எவ்வாறாவது பகைமையாக்கிக் கொள்க என்பதாம்.

868. குணன்இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனன்இலனாம் ஏமாப்பு உடைத்து.

நற்குணம் இல்லாதவனாய், பல குற்றங்களும் உடையவனாய் இருப்பானாகில் யாரும் அவனுக்குத் துணை போக மாட்டார்கள். அதனால் அந்நிலைமை அவன் பகைவர்க்குச் சாதகமான வலிமையைத் தரும்.

869. செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்.

போர் நெறி பற்றிய அறிவில்லாதவரும் போரைக் கண்டு அஞ்சுபவருமாகிய பகைவர்களைப் பெற்றால், அவரோடு பகைப்பவர்களுக்கு இன்பங்கள் சேய்மையில் தள்ளிப்போகா; அணித்ததாகவே வந்து சேரும். அரசியல் நீதி இது; தம்மைப் பாதுகாக்க அறியாதவர்களைப் பகைத்தலால் இன்பமே உண்டாகும். அவ்வாறிருத்தல் கூடாது என்பது குறிப்பு.

870. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா தொளி.

போர் நெறிகளைக் கற்று அறியாதவன்; எப்பொழுதும் வெகுண்டு பகைப்பான்; சிறிதளவாகிய பொருளினையும் வென்று அடைய இயலாதவன். இத்தகையவனை எக்காலத்திலும் வாழுங்காலத்துப் புகழாகிய ஒளி பொருந்தாது. அரசியல் நீதி இது. சிறுமுயற்சிகூட இல்லாதவன் மற்றும் இயலாதவன் அதிகாரத்தை அடைதல் எவ்வாறு?

## 88. பகைத்திறம் தெரிதல்

பகையின் திறன்கள் பலவற்றையும் ஆராய்ந்து அறிதல். வேண்டாத பகையை விடுவதற்கும் வந்த பகையைப் போரிட்டு வெல்வதற்கும் பகைவரைப் பற்றிய அனைத்து விவரமும் தெரிந்திருத்தல் வேண்டும்.

871. பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று.

பகைமை என்னும் பண்பற்ற ஒன்று, ஒருவன் விளையாட்டாகவும் விரும்பும் தன்மையுடையதன்று. பகையுணர்ச்சி பண்பைக் கெடுக்குமாதலின் இங்ஙனம் கூறினார். விளையாட்டாய்த் தொடங்குவன பல வினையாய் முடிவதுண்டு.

872. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

வில்லை ஏராகவுடைய உழவர்களாகிய வீரர்களோடு பகை கொண்டாலும் சொல்லை ஏராகவுடைய உழவர்களாகிய அறிவுடையவர்களுடன் பகை கொள்ளாதிருப்பீர்களாக! அறிஞர் பகை பிற பகைகளிலும் ஆபத்தானது.

வள்ளுவர்க்கு உழவின் மீதிருந்த மதிப்பும் தெரிகிறது. 'ஈட்டியை விட, எழுதுகோல் வலிமையுடையது' என்பர் மேனாட்டவர்.

**873. ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்.**

தான் தனியனாக நின்று, பலருடைய பகையையும் தேடிக் கொள்பவன் பித்துப் பிடித்தவரைவிடக் கீழ்ப்பட்ட முட்டாளாவான்.

**874. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.**

வேண்டிய காலத்தில் பகையையும் நட்பாக்கிக்கொண்டு நடக்கக் கூடிய பண்புடையவனது பெருந்தகைமையின்கீழ் இவ்வுலகம் தங்கியிருக்கும். உலகமே அவன் வயப்படும்.

**875. தன்துணை இன்றால் பகையிரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று.**

தான் ஒருவன் மட்டுமே; தனக்குத் துணை எதுவும் இல்லை; பகையோ இரண்டாக உளது. இந்நிலையில் அவ்விரண்டு பகைகளுள் தனக்குப் பொருந்தியது ஒன்றைப் பிரித்துத் தனக்குத் தக்க, இனிய துணையாகக் கொள்க. அரசியல் திறம் இது.

**876. தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல்.**

நமக்கு ஒருவன் உள்ளூறப் பகையாக உள்ளான் என்று தெரிகிறது. அவனுடன் இது தெரியாமல் நட்புக் கொண்டுவிட்டோம், அவனை முன்பு நம்பி இவ்வாறு சேர்ந்திருந்தாலும் நமக்கு ஓர் அழிவு வந்த சூழ்நிலையில் அதுபோல் முழுவதும் நம்பி விடக்கூடாது. ஒருவேளை அவனை நம்பாமல் முன்பு ஒதுங்கியிருந்தோமானாலும், அச்சூழலில் அவனைப் பிரித்து நீக்குதலும் கூடாது.

நம்பிக் கூடினாலும் நம்பாமல் பிரித்தாலும் அவனால் தீங்கு விளையுமாதலின், அரசியல் தந்திரம் வேண்டும். 'தேறினும் அழிவின்கண் தேறான்விடல்; தேறாவிடினும் அழிவின்கண் பகாஅன்விடல்' என்று கொண்டு கூட்டுக.

**877. நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து.**

தமக்கொரு துன்பம் வந்து நொந்து கொண்டிருப்பதை அறியாதவர்களுக்கு, நாம் அவ்வாறு நொந்து வருந்துவதாக

வெளிப்படுத்தக்கூடாது. அதுபோலப் பகைவர்களிடத்துத் தம் மெலிவை வெளிப்படுத்தவும் கூடாது. நமக்குள் இருக்கும் நோவையும் வலிமையின்மையையும் வெளிப்படுத்தாமல் நடந்துகொண்டு போதலால், பகை தலையெடுக்காது செய்யலாம். வெளிப்படுத்தினால் அதுவே காரணமாக நம்மைத் தாக்க முனைவர்.

878. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு.

பகையை வெல்லும் வழிவகைகளை நன்கு ஆராய்ந்தறிந்து அதனை வெல்லுவதற்கேற்றவாறு தன்னைப் பலவிதத்திலும் வளர்த்துக்கொண்டு, சோர்வுபடாமல் தன்னைக் காத்துக்கொண்டால், தன் பகைவர்களிடம் ஏற்பட்ட இறுமாப்புத் தானாகவே கெட்டு முற்றிலும் ஒழியும். தற்காப்பு வளர வளரப் பகைவர்தம் இறுமாப்புத் தானாகவே தேய்ந்தொழியுமாம்.

தற்செய்தல் - தன்னை வளர்த்துக் கொள்ளுதல்; தன் வலிமையைப் பெருக்கிக் கொள்ளுதல். நீ உன்னை வளர்த்துக்கொள்ள வளர்த்துக்கொள்ள, உன் பகை தானே செருக்கழியும் என்கிறார் திருவள்ளுவர்.

879. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

முள் நிறைந்த மரத்தை அது முதிர்ந்து வளருமுன், இளையதாக இருக்கும் போதே வெட்டி எறிந்து விடுக. இன்றேல் முதிர்ந்து வளர்ந்த நிலையில், வெட்டி எறிய முயல்பவர்தம் கையை அது துன்புறுத்தி வருந்தச்செய்யும். பகைவர் தம் வலிமையைப் பெருக்கிக்கொண்டு வளர்வதன் முன்னே, அவர்களை ஒழித்துவிட வேண்டும்.

880. உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

தம்மிடம் வேண்டாத பகை கொள்ளும் பகைவர்களது தலைமையைச் சிதைத்தொழிக்க மாட்டாதவர்கள், அப்பகைவர்கள் மூச்சு ஒன்று விட்ட அளவில், தாம் இறந்தொழிவர் என்பது உறுதி. வேண்டாப் பகை கொள்வார்தம் செருக்கை அடக்காவிட்டால் அவர்களால் அழிவு நேர்வது உறுதி. செருக்கை அடக்குவதில் முந்திக் கொள்ளவேண்டும். 'ஒரே மூச்சில் அடித்து நொறுக்கினால்' என்னும் உலக வழக்கு நடைபோன்றதிது.

## 89. உட்பகை

வெளியே அன்புடையார்போல் நடித்துக் கூடவேயிருந்து கெடுதல் செய்யும் பகைவரது தன்மையை விளக்கும் பகுதி.

881. நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்.

நிழலிற் கிடக்கும் நீர் பருகுவதற்கு இனிதென்பர். அத்தகைய நீர்நிலைகளேயாயினும், பின்னர் நோயை விளைவிக்கக்கூடியன தீயனவேயாம். அதுபோலச் சுற்றங்கள் சூழ இருப்பதிலும் இனிமையுண்டெனினும், அவர்கள் தீய இயல்புடையவராயிருந்து தீங்கு செய்வாராயின் அவை தீயனவேயாம்.

882. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

வாள்போல் வெளிப்பட்டு நிற்கும் பகைவருக்கும் அஞ்ச வேண்டியதில்லை; ஆனால் உறவுடையவர் போல் வெளியே காட்டிக் கொண்டு மனத்தினுள் பகைத்திருக்கும் உட்பகைஞர் தொடர்புக்கு அஞ்சுக. பகையைவிட உட்பகைக்கு மிகவும் அஞ்சி, விழிப்பாய் இருக்க வேண்டும்.

883. உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

உட்பகையாய் வாழும் பகைவரைக் கண்டு அஞ்சி, விழிப்புடன் தன்னைக் காத்துக் கொள்க. அங்ஙனம் காத்துக்கொள்ளாவிட்டால் கண்ணுக்குத் தெரியாமல் கீழேயிருந்து ஓசையின்றி மட்பாண்டத்தை அறுக்கும் குயவனது கருவிபோல, அவர்கள் உனக்குத் தளர்ச்சி ஒன்று ஏற்படும் சமயம் பார்த்துத் தப்பாமல் அழித்து விடுவர். மட்பகை - மண்பகை - மட்பாண்டத்தை உள்ளிருந்து அறுக்கும் குயவனது கருவி.

884. மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவும் தரும்.

மனம் மாட்சிமைப்படாத உட்பகை ஒருவனுக்கு அவனது ஏனைய சுற்றத்தையும் மாட்சிமைப்படாமல் செய்து, அச்சுற்றத்தாரது பகையை வளர்த்துத் துன்பங்கள் பலவற்றையும் உண்டாக்கும். சுற்றத்தார் அவனை நம்பாமலும் அவன் சுற்றத்தாரை நம்பாமலும் ஆகி, அதனால் பல துன்பங்கள் விளையும்.

885. **உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்**
**ஏதம் பலவும் தரும்.**

கூடி வாழ வேண்டிய உறவு முறையாரிடம் ஒருவனுக்கு உட்பகை தோன்றுமானால், அஃது அவனுக்கு அழிவைத் தரும்படியான துன்பங்கள் பலவற்றையும் தரும். பெரும்பாலும் நண்பர்கள், சுற்றத்தார், உறவினர்களிடமே உட்பகை தோன்றுதலின் திரும்பத் திரும்ப இவர்களிடம் விழிப்பாக இருக்கச் சொல்கிறார். அரசர்களுக்கு இத்துன்பம் மிகுதி. உறவினரிடம் தோன்றும் உட்பகை பற்றியது இது.

886. **ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்**
**பொன்றாமை ஒன்றல் அரிது.**

நம்மோடு ஒன்றிப் பழகுகின்ற, நமக்கு உள்ளந்தரங்கமானவர்களிடமே, நம்மோடு மனம் ஒன்றாத உட்பகை தோன்றுமானால், நாம் எக்காலத்திலும் அதனாலேற்படும் அழிவிலிருந்து தப்பிப் பிழைத்தல் இயலாது. நண்பர்களிடம் தோன்றும் உட்பகை பற்றியது இது.

887. **செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே**
**உட்பகை உற்ற குடி.**

ஒரு செப்பில் அச்செப்பும் அதன் மூடியும் வெளியே வேற்றுமை தெரியாமல் ஒன்றுடன் ஒன்று பொருந்தியிருப்பது போல், புறத்தே வேற்றுமை தோன்றாது கூடிப் பழகினாரானாலும், உட்பகை உண்டான குடியிலுள்ளார் தம்முள் மனம் ஒன்றுபடாது, சமயம் நேரும்போது பிரிந்துவிடுவர். திறக்கப்படும்போது மூடி பிரிவதுபோல, இவர்களும் சமயம் நேரும்போது பிரிந்து பகைமையை வெளிப்படுத்துவர். ஒரு குடிக்குள்ளேயும், உட்பகை தோன்றும் என்பதைச் சொல்லி எச்சரிக்கிறது இது. அரசர்களிடையே இது மிகுதியாகக் காணப்பட்டது.

888. **அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது**
**உட்பகை உற்ற குடி.**

ஒரு குடிகளுக்குள்ளேயே உட்பகை தோன்றுமானால், அங்ஙனம் உட்பகைக்கு ஆளான அக்குடி அரத்தினால் தேய்க்கப்பட்ட பொன் சிறிது சிறிதாக அறுபட்டுத் தேய்வதுபோல, அவ்வுட்பகையால் வலிமை சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு அழிவுறும்.

889. **எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்**
**உட்பகை உள்ளதாம் கேடு.**

எள்ளின் பிளவுபோல் உட்பகை மிகமிகச் சிறிது என எண்ணி அலட்சியப்படுத்துதல் தவறு. அத்துணைச் சிறியதேயாயினும் அதனுள்

பின்னால் விளையக்கூடிய பெருங்கேடு உள்ளடங்கியிருக்கும். உட்பகை சிறிதேனும் கேடு தரும் என்பது இது.

890. உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று.

மனம் ஒன்றுபடாத ஒருவரோடு ஓரிடத்தின்கண் கூடி வாழ்தல், குடம் போலும் குறுகிய ஒரு கூண்டிற்குள்ளே பாம்புடன் சேர்ந்து தங்கினாற்போலும். கணவன் மனைவி, அண்ணன் தம்பி போல இருவருக்குள், ஒருவர் உட்பகையானால் வரும் கேட்டை இது விளக்குகிறது. எக்கணத்திலும் ஆபத்துளதாகும்.

## 90. பெரியாரைப் பிழையாமை

தன்னைவிட வலிமையிலும் திறமையிலும் அறிவிலும் ஆற்றலிலும் அகவையிலும் பெரியவர்களுக்குப் பிழை செய்து, தன்னைத்தானே கெடுத்துக் கொள்ளாதிருத்தல். முன்பு பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டுமென்றார். இங்கு அவர்களுக்குப் பிழை செய்து வருந்தாதீர் என எதிர்மறை முகத்தால் கூறுகிறார்.

891. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை.

எடுத்துக்கொண்ட காரியத்தைச் செய்து முடிக்கவல்லவர்களது துணையை இகழ்ந்து அலட்சியப்படுத்தாதிருத்தல், தம்மிடம் தீங்கு நேராமல் காத்துக்கொள்வார் செய்து கொள்ளும் காவல்கள் அனைத்திலும் தலையாய காவலாகும். பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டுமென்றதின் தொடர்ச்சி இது. 'இவரென்ன பெரிய துணை' என்பது போல, இகழ்ந்து பிழை செய்துவிடக் கூடாது.

892. பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்.

தம்மைவிட வலிமையில் பெரியவர்களையே மதியாது நடந்து கொண்டால், அப்பெரியவர்களால் நீங்காத கடுந்துன்பங்கள் உருவாகி வருந்த நேரும். இங்கு 'பெரியவர்' என்பது வலியவரையே குறிக்கின்றது.

893. கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு.

பகைவரைக் கொன்று வெல்ல நினைத்தால், தனக்குத் துணையாய் அதை முடிக்கவல்லவர்களிடம் பிழை செய்யக் கூடாது. ஒருவேளை தான் கெட்டுப் போக விரும்பினால், அப்பிழையை, யாரையும் கேளாமல் - ஆலோசிக்காமல் செய்து தன் மனம்போல் நடப்பானாக.

894. **கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு**
**ஆற்றாதார் இன்னா செயல்.**

எதனையும் செய்து முடிக்கவல்ல ஆற்றலுடையார்க்கு அவ்வாற்றல் இல்லாதார் துன்பந்தரும் செயல்களைச் செய்தல், தம்மைக் கொல்லும் எமனைக் கைகாட்டித் தம்மிடம் வருமாறு அழைப்பதற்கு ஒப்பாகும்.

895. **யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்**
**வேந்து செறப்பட் டவர்.**

பகைவர்களுக்குக் கொடிதாகிய பெரும் வலிமையினையுடைய சீற்றத்துக்கு ஆளானவர்கள் எங்கே தப்பிச் சென்றாலும் எவ்விதத்தாலும் தப்பிப் பிழைக்க மாட்டார்கள்.

896. **எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்**
**பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.**

ஒருவன் நெருப்பில் அகப்பட்டுச் சுடப்பட்டானாயினும் உயிர்பிழைக்க வழியுண்டு. ஆனால் தம்மிலும் வலிமை மிக்கவர்களுக்குத் தப்புச்செய்து நடப்பவர் எவ்விதத்திலும் உயிர் பிழைக்க மாட்டார்.

897. **வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்**
**தகைமாண்ட தக்கார் செறின்.**

பண்பு நலன்களால் மாட்சிமைப்பட்ட தகுதியுடையார் சினப்பார்களாயின், குடும்பம், நற்பேறு என எல்லா வகையாலும் மாட்சிமைப்பட்ட வாழ்க்கையும் ஈட்டிய பெரும் செல்வமும் என்ன நிலைமையின ஆகும். யாவும் பயனற்றுப் போகும்.

898. **குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு**
**நின்றன்னார் மாய்வர் நிலத்து.**

பண்பால் குன்றுபோல் உயர்ந்த பெரியவர்களைக் குறைவாக எண்ணி, அவமதித்து நடப்பாராயின், இவ்வுலகில் நிலைபெற்றவர்போல் தோன்றுகின்ற செல்வர்கள் தம் குடியோடும் சேர்ந்து அழிவர்.

899. **ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து**
**வேந்தனும் வேந்து கெடும்.**

உயர்ந்த கொள்கையுடைய சான்றோர்கள் சீற்றம் கொண்டால், அச்சீற்றத்திற்கு ஆளானவன் வேந்தனேயாயினும் இடையிலே தன் நிலைமை கெட்டு அரசாட்சியையும் இழப்பான். வேந்து - அரசாட்சியுரிமை, அதிகாரம்.

900. **இறந்தமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்**
**சிறந்தமைந்த சீரார் செறின்.**

எல்லாச் சிறப்பும் மிகுந்தமைந்த சீர்மையினையுடையார் சீறும்படி நடந்து கொண்டால், எல்லை கடந்த சிறப்பமைந்த பெரிய துணையுடையவ ராயினும் தப்பிப் பிழைக்க மாட்டார்.

## 91. பெண்வழிச்சேறல்

எல்லை கடந்த காமம் காரணமாக, கணவன் தன் மனைவி காமக்கிழத்தியர் சொற்கேட்டு நடத்தல். அரசியலில் இவ்வாறு பெண் சொற்கேட்டுக் காமவயப்பட்டுக் கடமை மறந்து அழிந்த பேரரசர்கள் பலர் என்பது வரலாறு புகட்டும் பாடம். கிரேக்க, ரோமானிய வரலாறுகளிலும் இதைக் காணலாம். எல்லை மீறிய காமத்தை இழிவுபடுத்துவதேயன்றி, பெண்ணை இழிவுபடுத்துவதன்று இது.

901. **மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்**
**வேண்டாப் பொருளும் அது.**

இன்ப வயப்பட்டு மனைவியை மிகவும் விழைந்து காம வெறியராய் வாழ்பவர்கள் மாட்சிமைப்பட்ட நற்பயன் எதனையும் அடைய மாட்டார்கள். இனிக் காரியம் ஆற்றுதலையே என்றும் விரும்புகின்றவர்கள் தமக்கு அது இடையூறாகுமென்று விரும்பாமல் புறக்கணிப்பதும் அக்காமமேயாம். மனை விழைவார் - அதே தொழிலாக இருப்பவர்கள். மனைவிழைவார் வினைவிழையார்; வினைவிழைவார் மனையையே விழைந்து, அதில் மூழ்க மாட்டார்.

902. **பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்**
**நாணாக நாணுத் தரும்.**

தன்னைப் பேணிக் காக்காமல் பெண்ணாசை எனப்படும் காமத்தில் உழல்பவனது பெருஞ்செல்வம், 'இவன் காமுகண்' என உலகத்தார் பேசும் வெட்கம் கெட்டபெயர் உலகில் நிலைபெறுமாறு அவனுக்கு நாணத்தைத் தரும். அவனது செல்வம், பதவி, பெருமையாம் ஆக்கமனைத்தும் கேட்பவர் நாணும்படியான கெட்ட பெயரைத் தரவே பயன்படும்.

903. **இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்**
**நல்லாருள் நாணுத் தரும்.**

காமம் காரணமாகத் தன் மனைவியிடம் தாழ்ந்து நடக்கின்ற, ஆண் இயல்பிற்கு முரண்பட்ட தன்மை, நல்லவர் நடுவில் செல்லும்போது, எக்காலத்திலும் அவனை வெட்கப்படும்படி செய்யும்.

904. **மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்**
**வினையாண்மை வீறெய்தல் இன்று.**

தன் மனைவிக்கு அஞ்சுகின்ற, மறுபிறவியிலும் நன்மையிலாதான் தொடங்குகின்ற வினை ஆளும் செயல்திறன் ஒருபோதும் சிறப்புப் பெறாது. காரியத்தை ஆளும் திறமை வெற்றி பெறாதபடி, அவனது காமவுணர்வு அவனைக் கீழ்மைப்படுத்திவிடும். பெரிதும் இவை அரசியலில் அதிகாரத்திலுள்ளவர்களிடம் காணப்படுதலால், வினையாண்மை (ஆட்சித் திறன்) சிறப்புறாது என்றார்.

905. **இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற்று எஞ்ஞான்றும்**
**நல்லார்க்கு நல்ல செயல்.**

தன் மனைவியை அஞ்சுபவன் தான் தேடிய செல்வத்தைக் கொண்டு நல்லவர்களுக்கு நல்லன செய்ய முடியாமல் எக்காலத்திலும் அஞ்சுவான். காமவயப்பட்டவனை மனைவி ஆட்டிப் படைப்பதால், அவன் நல்லவர்க்கு நல்லன செய்யமாட்டாமல் எப்பொழுதும் அஞ்சுவான்.

906. **இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்**
**அமையார்தோள் அஞ்சு பவர்.**

இல்லாளின் மூங்கில்போன்ற தோளின் அழகிலே மயங்கி, காமம் மிக்கு அவளுக்கு அஞ்சி நடப்பவர்கள், தேவர்கள் போல எல்லாச் செல்வமும் எய்தி இன்புற்று வாழ்ந்தாலும் பெருமையில்லாதவர்கள் ஆவார்கள்.

907. **பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்**
**பெண்ணே பெருமை உடைத்து.**

காமத்தால் மனைவி ஏவியதைக் கேட்டு, அதன்படி நடந்து வாழ்கின்ற ஆண் தன்மையைவிட, இயல்பாக நாணத்தையுடைய பெண்மையே பெருமையுடையதாகும். மனைவி கருத்தை அறிந்து, சேர்ந்து வாழ்தல் வேறு. 'ஏவல் செய்து ஒழுகுதல்' ஓர் ஏவலன் போலக் கீழ்ப்படிந்து, அவள் ஏவிய தீய செயல்களையும் செய்து வாழ்தல்.

908. **நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்**
**பெட்டாங்கு ஒழுகு பவர்.**

அழகிய நெற்றியையுடையவளாகிய தம் மனைவி விருப்பத்தைக் கேட்டு அதன்படி நடப்பவர்கள், தம் நண்பர்களது குறைகளைத் தீர்த்து அவர்களுக்கு உதவி வாழ மாட்டார்கள். எந்த நல்ல காரியத்தையும் செய்ய மாட்டார்கள். காம வயப்பட்டவனை, அப்பெண்ணுக்கு ஆட்டிப் படைக்கவே தோன்றும்; அவனும் அதிலேயே மூழ்கிக் கிடப்பதால் நல்லன எதனையும் செய்ய நினையாமல் கெடுவான்.

909. **அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்**
**பெண்ஏவல் செய்வார்கண் இல்.**

அறச் செயல்களும் நிறைந்த பொருட்செல்வத்தைத் தேடிக் கொள்ளுதலும் பிற இன்பச் செயல்களும் யாவும் காமத்தால் பெண்ணின் ஏவலைக் கேட்டு நடக்கும் ஆண் மக்களிடம் காணப்படா. மனைவி சொல்லும் நல்ல யோசனைகளைக் கேட்டு நடப்பது வேறு; காமுகனென அறிந்து, கண்டபடி அவள் ஏவ, அதன்படி நடப்பது வேறு.

910. **எண்சேர்ந்த நெஞ்சத்து இடனுடையார்க்கு எஞ்ஞான்றும்**
**பெண்சேர்ந்தாம் பேதைமை இல்.**

காரியமாற்றும் சிந்தனை நிறைந்த மனத்துடன், அங்ஙனம் சிந்தித்தவற்றை நிறைவேற்றுவதற்கு வேண்டிய செல்வமும் உடையவர்களிடம், மனைவிக்கு அடிமையாகும் மடமைமிக்க பெண்பித்து எக்காலத்தும் உண்டாகாது.

இக்குறள்கள் அனைத்தும் காம வயப்பட்டவனை அழகால் ஆட்டிப் படைக்கும் மனைவியைப் பற்றியே பேசுகின்றன. அரசியலிலும், பெருஞ் செல்வர்களிடமும், பெரும் பதவியிலிருப்பவர்களிடமும் இக்காம நோய் எளிதில் தொற்றிக் கொள்ளும். அதனை இடித்துக் கூறித் தடுப்பதே இவ்வதிகாரத்தின் நோக்கம்.

## 92. வரைவில் மகளிர்

ஒருவருக்கே உரியோர் என வரம்பு - எல்லை வகுத்துக் கொள்வதால் திருமணம் 'வரைவு' எனப்பட்டது. அவ் எல்லை வகுத்துக் கொள்ளாது, பொருள் தருவார் அனைவருக்கும் பயன்படும் மகளிரை வரைவில்லாத மகளிர் என்றனர். இப்பொது மகளிர்தம் தீய குணங்களையும் அவர்களை விரும்புவாரது அழிவையும் இது விளக்குகிறது. 'பரத்தையர்' எனக் குலப்பெயராகக் சுட்டாமை கருதத்தக்கது. வரைந்து கொண்டு வாழாத எனச் செயலில் வைத்துக் கூறுகிறார். இன்று 'பாலியல் தொழிலினர்' என்று கூறுதலை ஒப்பு நோக்கினால், வள்ளுவரின் கருத்து வீச்சுப் புலப்படும்.

911. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.

அன்பு காரணமாக ஒருவர்மீது ஆசை வைக்காமல், அவர் தரும் பொருளின்மீதே ஆசை வைக்கும் அழகிய தொடியணிந்த இளம் பெண்கள் பேசும் இனிய பேச்சு, முதலில் இனிதாகத் தோன்றினாலும், பிறகு தீங்காய் முடிந்து இழிவைத் தரும். இன்சொல் - காதல் பேச்சு.

912. பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.

தாம் அடையும் பொருளாகிய பயனையே அளந்தறிந்து பண்புடையவர்போல் பேசும் பண்பற்ற மகளிரால் பெறும் இன்பம் தீதாதலை ஆராய்ந்தறிந்து அவர்களைப் பொருந்தாது விடுக.

913. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று.

பொருளுக்குத் தம்மை விற்கும் பொதுமகளிரால் மனத்தகத்தே அன்பின்றிப் பொய்யாகத் தழுவிக் கொள்ளப்பெறுதல் இருட்டறைக்குள்ளே கிடக்கும் தொடர்பில்லாத பிணத்தை, தமக்குக் கூலியாகக் கிடைக்கும் சிறு பொருளுக்காகத் தழுவிக் கொள்பவரது தன்மை போன்றதாகும். கன்னிப் பெண்கள் இறந்தால் இவ்வாறு 'கூலிக்கு ஆளமர்த்தி' இரவில் தழுவிக்கொள்ளச் செய்து, கன்னிமை கழிந்ததாகக் கருதிப் பிறகு ஈமச்சடங்கு செய்யும் வழக்கம் சிலரிடம் இருந்துளது. இக்கெட்ட பழக்கத்தில் அருவருப்பை ஏற்படுத்துமாறு சொல்கிறார்.

914. பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர்.

தம்மை விரும்புபவரையல்லாது அவர் தரும் பொருளையே மதிக்கும் பொதுமகளிரின் புல்லிய இழிந்த அழகினை, அருளைப் பொருளாக மதிக்கும் அறிவினையுடைய சான்றோர், தீண்டமாட்டார்கள்.

915. பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்.

இயல்பாகப் பொருந்திய மதி நலத்துடன் மாட்சிமைப்பட்ட கல்வியறிவினையுடையவர்கள், பொருள்கொடுக்கும் அனைவருக்கும் தம் அழகைத் தரும் பொதுமகளிரின் புல்லிய இழிந்த அழகினைத் தீண்ட மாட்டார்கள்.

916. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

ஆடல் பாடல் கலைகளால் தம்மைப் பெருமைப்படுத்திக் காட்டி, தமது புல்லிய இழிந்த அழகைப் பலவகையாலும் பொருள் கொடுப்பார் அனைவரிடத்தும் பரப்பி விற்கும் பொதுமகளிரது தோள்களை, தம் நலத்தை வளர்த்துக்கொண்டு உயர்வடைய விரும்புபவர்கள் தீண்ட மாட்டார்கள். தந்நலம் - உடல் நலம் தொட்டுத் தமது நலம் அனைத்தையும் இது கெடுக்கும்.

917. நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்.

தம்மை விரும்புவாரையல்லாது, அவரால் கிடைக்கும் பிற நம்மைகளைக் கருத்திற்கொண்டு, அவை காரணமாகக் கூடி மகிழும் பொது மகளிரது தோள்களை, தம் நெஞ்சை ஒருபால் நிறுத்தவல்ல 'நிறை'யெனும் அரிய ஆற்றலில்லாதவர்களே தழுவுவர். மனத்தைக் கண்டபடி மேயவிடுபவரே இதில் சிக்கிக்கொள்வர்.

918. ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

தம் போலியழகு, பேச்சுக்களால் ஏமாற்றக்கூடிய, மாயம் வல்ல மகளிருடன் தழுவிக்கொள்ளும் செய்கை அவ்வஞ்சனையை ஆராய்ந்தறிய மாட்டாதவர்க்கு அவர்களை மயக்கும் அணங்காகி விடும் என்பது பெரியோர். நன்கு ஆராய்ந்து பார்த்து நடக்கும் பழக்கமில்லாதவர்களே, இம்மாய முயக்கில் மயங்கித் தொலைவர். அணங்கு - தீண்டி வருத்தும் தெய்வம்.

919. வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.

இன்னார் இனியாரென்ற வரையறையில்லாது, பொருள் கொடுப்பாருக்கெல்லாம் தம் அழகை விற்கும், அழகிய அணிகளைப் பூண்ட இளம் மகளிரின் மெல்லிய தோள்கள் உயர்வில்லாத இழிந்த கீழ்மக்கள் புகுந்து அழுந்தும் நரகமாகும்.

920. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்யும் இருமனப் பெண்டிராம் பொதுமகளிரும் கள்ளும் சூதும் என்ற இவை மூன்றும் திருமகளால் கைவிடப்பட்டு நீக்கி வைக்கப்பட்டாரது தொடர்புகளாகும். திருமகளால் கைவிடப்படுதல் - செல்வம் பறிபோதல்.

## 93. கள்ளுண்ணாமை

கள் குடித்தலால் ஏற்படும் தீங்குகளை விளக்குதல்.

921. உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்.

எப்பொழுதும் கள்ளின்மேல் காதல்கொண்டு, அதனோடு பழகி வாழ்பவர் பகைவரால் அஞ்சப்படாது எளியராவர்; பலராலும் மதிக்கப்படுதலாகிய ஒளியினையும் இழப்பர்.

922. உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.

கள் குடிக்காதீர்! மீறிக் கள்ளைக் குடிக்க விரும்புவீராயின், சான்றோரால் மதிக்கப்படுதலை விரும்பாதவர்கள் வேண்டுமேல் குடிப்பீர்களாக!

923. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

தன் பிள்ளைகள் செய்யும் குறும்புகளனைத்தையும் பொறுத்துக் கொள்ளும் மனமுடைய பெற்ற தாயின் முன்பாகவும், கள்ளுண்டு களித்து நிற்றல் விரும்பத்தகாத தீய செயலாகும். அப்படியிருக்கவும் சான்றோர்கள் முன்பாகக் கள்ளைக் குடித்துச் செல்லுதல் எத்தகைய தீங்காகும்? எண்ணிப் பாரீர்!

924. நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

கள் குடித்தல் என்ற, எல்லோராலும் போற்றப்படாத பெரிய குற்றத்தைச் செய்பவர்களுக்கு நாணம் என்று சொல்லப்படுகின்ற நல்லவள், நேரில் பார்த்தற்கும் அஞ்சிப் புறமுதுகு காட்டி ஓடிவிடுவாள்! கள் குடிப்பவர்கள் அறவே வெட்கத்தை விட்டவர்கள் ஆவர்.

925. கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

பொருள் கொடுத்துக் கள்ளை வாங்கிக் குடித்து, ஒருவன் போதையால் தன்னை மறந்த தன்மையை அடைதல், உலகில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்ற அறிவு இல்லாமையைக் காட்டும் செயலாகும். மெய் அறியாமை - மெய்மறத்தல், தன்னை மறத்தல்.

926. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

கள் குடித்து மயங்கித் தன் நினைவின்றிக் கிடப்பவர்கள் உயிர்ப்பு உடையவரேனும், நினைவை இழத்தலின் அந்த நிலையில் செத்தவர்களின் வேறாகக் கருதப்படமாட்டார்கள். அதனால் கள் குடிப்பவர்கள் நஞ்சினை உண்பவர்களே ஆவர்.

கள் குடிப்பது கொஞ்சம் கொஞ்சமாக உயிரைக் குடித்துவிடும். கள்ளுண்டு மயங்கி, உடை முதலியன அவிழ்வதும் தெரியாமல், தெருவில் மயங்கிக் கிடப்பவர்கள், அந்தச் சமயத்தில் செத்தவர்போலவே காணப்படுவர்.

927. உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

நினைத்தபோதெல்லாம் கள்ளை மறைவாக உண்டு, அறிவு மயங்கிக் கண் சோர்பவர்கள், தம்முடன் உள்ளூரில் வாழ்பவர்களால், தமக்குள் மறைவாக இவர்களது குற்றங்கள் எல்லாம் உளவறியப்பட்டு, நகையாடி இகழப்படுவார்கள். கள் குடித்திருப்பதைச் சிவப்பேறி மயங்கிச் சோர்கின்ற கண் காட்டிவிடும்.

928. களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

மறைவாகக் கள்ளுண்டுவிட்டு, யான் கள் குடித்தறியேன் எனப் பலர் நடுவே கூறி ஒழுக்கமுடையவர்போல் நடித்தலைக் கைவிடுக. ஏனெனில் மனத்தினுள் ஒளித்த அக்குற்றமும், அவ்வாறு ஒளித்த அப்பொழுதே முன்னையளவிலும் மிக்கு வெளிப்படும். கட்குடி பிறரால் அறியப்பட்டுவிடும்; மறைக்க முடியாது.

929. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

கள் குடித்துக் களித்துப் பழகிப் போனவனை, 'அது தீதென்று' சான்றுகாட்டித் தெளிவித்தல், குளத்து நீருக்குள்ளே போய் மூழ்கிக்

குளிக்கின்றவனை தீவட்டியை எடுத்துக் கொண்டுபோய்த் தேடுவதற்கு ஒப்பாகும். கள் பழகிவிட்டால் திருத்துதல் அரிது.

930. கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.

கள்ளைக் குடிக்கும் பழக்கமுள்ள ஒருவன், தான் கள் உண்ணாதிருக்கும் சமயத்தில், தன்னைப்போல் பிறனொருவன் கள் குடித்துக் களித்து மயங்குவதைக் காணும்பொழுது, தானும் முன்பு இவ்வாறுதானே கள்ளுண்ட மயக்கத்தில் இருந்திருப்போமென்பதை நினைத்துப் பார்க்க மாட்டான் போலும். நினைத்துப் பார்த்தால், அதனாலாம் இழிவு உணரப்பட்டுக் கல் குடித்தலைத் தவிர்க்கக் கூடும்.

## 94. சூது

சூதாடுவதன் தீமைகள்.

931. வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி அற்று.

சூதில் ஒருவன் வெற்றி பெற்றானாயினும் அதனை விரும்புதல் கூடாது. ஏனெனில் வென்று பெற்ற அச்சிறு பொருளும், மீன் பிடிக்கும் தூண்டிலில் உள்ள இரும்புக் கொக்கியில் வைக்கப்பட்ட இரையை மீன் விழுங்கி அதனால் அது பிடிக்கப்படுதல் போன்ற தன்மையினையுடையதாகும். மீன் தூண்டிற்புழுவாம் இரையை உண்ணப் போய்த் தூண்டிலில் அகப்பட்டுக் கொள்வதுபோல், இவனும் சூதில் வென்ற சிறுபொருளைக்கொண்டு மேன்மேலும் சூதாடி உள்ளதனைத்தையும் இழக்க நேரும்.

932. ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு.

முதலில் ஒன்றை வென்றெய்தும் சூதில் தொடர்ந்து ஆடி நூறை இழக்க நேரும். இன்னும் வென்றுவிடலாம், இழந்ததை மீட்டுவிடலாம், என்று அதிலேயே மூழ்க வைத்து நூறினை இழக்க வைக்கும் சூதினை ஆடுபவர்களுக்கு, நன்மை எய்தி வாழ்வதொரு வழி உண்டாகுமோ? ஆகாது.

933. உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

சூதாடு களத்தில் கவறு எனும் சூதாடு கருவியை உருட்டி உருட்டி, மேன்மேலும் பணையம் வைத்துப் பனிரண்டு எட்டு என இவ்வாறு இடையீடில்லாமல் கூவி ஆடினால் கைவசமிருந்த பொருட்செல்வக் கூட்டமனைத்தும் அவனைவிட்டு வெகுதூரம் விலகிப் போய்விடும்.

934. **சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்**
**வறுமை தருவதொன்று இல்.**

பலவகை இழிவுகளையும் உண்டாக்கி, முன்பிருந்த சிறப்புக்களையும் அழிக்கும் சூதினைப்போல் ஒருவருக்கு வறுமையைத் தரவல்லது பிறிதொன்றில்லை.

935. **கவறும் கழகமும் கையும் தருக்கி**
**இவறியார் இல்லாகி யார்.**

சூதாடு கருவியாம் கவறும் அதனையாடும் சூதாடு களமும் அதில் ஆடுதற்கு வேண்டிய கைத்திறமும் கொண்டு, அதில் தாம் மேம்பட்டவர் எனத் தருக்குக்கொண்டு அதிலேயே ஈடுபட்டு, வேறு நல்லனவற்றிற்குச் செலவிடாதார் கைப்பொருள் அனைத்தையும் இழந்து இறுதியில் எதுவும் இல்லாதவர்களாய் வறுமையுறுவர் அதனைப் பாடமாகக் கொள்க என்பதாம்.

936. **அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்**
**முகடியால் மூடப்பட் டார்.**

சூது என்று சொல்லப்படுகின்ற மூதேவியால் முழுவதும் கவரப்பட்டவர்கள், வயிறார உணவுண்ணப் பெறாமல் வறுமைப்படுவர்; எல்லாத் துன்பங்களிலும் கிடந்து உழல்வர்.

937. **பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்**
**கழகத்துக் காலை புகின்.**

ஒவ்வொரு நாளும் காலை எழுந்ததும் சூதாடுகின்ற கழகத்தின்கண் புகுவதை, ஒருவன் வழக்கமாகக் கொள்வானாயின், அது அவன் குடியில் வழிவழி வந்த வீடு மனை, காடு கரை முதலாய செல்வங்களையும் குடிவழிவந்த நற்பண்புகளையும் கெடுத்துவிடும்.

938. **பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து**
**அல்லல் உழப்பிக்கும் சூது.**

ஒருவன் சூதில் பழகி விட்டால் அது அவனிடமிருந்த பொருட்செல்வத்தை அழித்து, பொய் சொல்லுதலை

மேற்கொள்ளவைத்து, மனத்தினுள் ஊறும் அருளினையும் கெடுத்து, அல்லற்பட்டு உழலுமாறு செய்யும்.

939. **உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்**
**அடையாவாம் ஆயம் கொளின்.**

சூதாடுகளத்தை ஒருவன் தனக்கு இன்பப்பொழுது போக்குக்குரிய இடம் எனக் கொள்வானானால், உடை, செல்வம், உணவு, கல்வி, மதிப்புடன் திகழுதல் என்ற ஐந்தும் அவனைச் சாராவாய் நீங்கும். கழகம், ஆயம் என்பன முற்காலத்தில் சூது முதலியன ஆடி இன்பப் பொழுது போக்குமிடங்கள்.

940. **இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்**
**உழத்தொறூஉம் காதற்று உயிர்.**

சூது ஒருவன் தன்னை ஆடுங்காலத்தில் பொருளை இழந்தானாயினும் மீண்டும் மீண்டும் இழந்ததை வென்று விடலாமென்று தன்னையே ஆசைப்பட வைக்கும். அதைப்போலத் துன்பத்தில் கிடந்து உழலுந்தோறும், இந்த உயிரானது அவ்வாறு உழலும் உடல் மீதே ஆசை வைக்கும். 'கட்காதல்' கொண்டொழுவது போலச், சூதில் காதல் கொள்வதை இது விளக்குகிறது.

## 95. மருந்து

இயற்கை மருந்துவத்தை வற்புறுத்தும் நெறிமுறை இது. உணவு முறையினாலேயே, நோய்களுக்கான அடிப்படைகளை மாற்றி, நலமுறலாம் என விளக்கப்படுகிறது.

941. **மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று.**

உணவும், உறக்கம், இணைவிழைச்சு முதலாய பழக்கங்களும் ஒருவனது உடல் இயல்புக்கு ஒத்தனவாகாது. அதன் அளவைவிட மிகினும் குறையினும், மருத்துவ நூலுடையார் வாதம் பித்தம் சிலேட்டுமம் என எண்ணிக் கூறியுள்ள மூன்றினாலும் நோயை உண்டாக்கும். வாதம் - காற்று, வளி. பித்தம் - சூடு, பித்தநீர். சிலேட்டுமம் - கபம், குளிர்ச்சி. இவை மூன்றும் நாடிகள். உணவு, பழக்கம் இரண்டும் அளவாகவும் உடல்நிலைக்கு ஏற்பவும் அமைவது நல்லது; இவை கூடுதல் குறைவானால் நாடிகளும் கூடுதல் குறைவாகும். நோய்க்கு அறிகுறி இவை.

942. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

ஒருவன் முன் உண்ட உணவு செரித்ததை அறிகுறிகளால் நன்கு அறிந்து, பின்பு அடுத்து உண்பானானால் அவனுடம்புக்கு மருந்தென்று வேறு எதுவும் வேண்டாம். அறுதல் - உணவு செரித்தல்.

943. அவற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.

முன் உண்ட உணவு செரித்த பிறகு, பசியினதளவும் செரிமானமாகும் தனது உடல் நிலையும் அறிந்து அவ்வளவினதாக உண்ண வேண்டும். அவ்வாறு உண்ணும் நெறி, பெறுதற்கரிய இவ்வுடம்பினைப் பெற்றவன், இதை நீண்ட காலத்திற்குக் காத்து வாழும் வழியாகும்.

944. அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

முன்பு உண்டது நன்கு செரித்துவிட்டதா என்பதை அறிந்து, பின்பு முழுவதுமாக நன்கு பசி எடுத்த பிற்பாடு தன் உடம்புக்கு மாறுபாடுள்ளன அல்லாத உணவுகளைத் தேர்ந்தெடுத்து, உண்பதற்குரிய நெறிகளைக் கட்டாயமாகக் கடைப்பிடித்து உண்ணும் பழக்கத்தைக் கைக்கொள்க. உணவும் உண்ணும் நெறிகளும் இயற்கை மருத்துவம். செரித்த பின்பும் நன்கு பசித்த பின்பும் அளவறிந்து, நெறிமுறைப்படி உண்ணப் பழக வேண்டும்.

945. மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

தன் உடம்பினது இயல்புக்கு மாறுபாடில்லாத உணவுகளைத் தேர்ந்தெடுத்து, தன் விருப்பத்திற்கு ஏற்ப உண்ணாமல் தனக்கேற்ற உணவைப் பொருந்திய அளவினதாக ஒருவன் உண்பானாயின், அவன் உயிர்க்கு நோய்களால் இடையூறுகள் ஏற்படா. மறுத்துண்ணுதல் - உடம்பிற்கு ஒவ்வாததைக் கைவிட்டு உண்ணுதல்.

946. இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்.

தன் பசிக்குரிய உணவினது அளவில் சிறிது குறையவுண்ணுதலே நன்மை தரும் என்பதையறிந்து உண்ணுபவனிடம் இன்பம் நிலைத்து நிற்கும். அதுபோல் ஆசையால் மிக அதிகமாக அளவு கடந்து

இரையைத் தின்பவனிடம் நோய் நிலைத்து நிற்கும். இழிவறிந்துண்ணுதல் - சிறிது குறையவுண்ணுதல், சுவை கருதிக் கண்டபடி, கூடுதலாகவுண்ணுதல், 'கழிபேர்இரை'. ஏனைய உயிரினம் தின்பதையே 'இரை' என்பர். இழிவு - இங்கு குறைவான அளவு.

**947. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்**
**நோயள வின்றிப் படும்.**

தான் உண்ணும் உணவைச் செரிக்கவைக்கும் வயிற்றுத் தீயினது அளவுக்குள் அல்லாமல், தன் உடம்புக்கு ஏற்றன யாவை என்பதும் தெரியாமல், மிகக் கூடுதலாக ஒருவன் உண்ணுமாயின், அவனுக்கு நோய்கள் எல்லையின்றிப் பலவாய் விளையும். தீ - உணவைச் செரிக்க வைக்கும் உடற்கூறு.

**948. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்.**

மருத்துவன் நோயாளியின் நோயை அறிகுறிகளால் முதலில் ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டும்; பிறகு அந்நோய் வந்த காரணத்தை - அடிப்படையை ஆராய்ந்து அறிதல் வேண்டும்; பின்னர் அந்நோயைத் தீர்க்கும் வழிவகைகளை ஆராய்ந்து, அதனை நன்மை பயக்குமாறு செய்யும் முறைகளின்படி செய்ய வேண்டும். நோப் நாடுதல், நோய்முதல் நாடுதல், தீர்க்கும் வழி நாடுதல் மூன்றும் முறைப்படி கண்டபின் அதனை வாய்ப்பச் செய்தலும் இன்றியமையாததாகும்.

**949. உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்.**

மருத்துவத்தைக் கற்றவன் நோயாளியின் நிலை உடம்பின் தன்மை முதலியவற்றையும் நோயினது அளவு, தன்மை முதலியவற்றையும் அன்றைய பருவ நிலைகளையும் தான் கற்ற நூல்நெறியால் ஆராய்ந்து, தன் நுண்ணறிவாலும் சிந்தித்து மருத்துவம் பார்க்க வேண்டும்.

**950. உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று**
**அப்பால்நாற் கூற்றே மருந்து.**

நோய்க்கு மருத்துவம் என்பது நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, பக்கத்திலிருந்து தப்பாமல் மருந்து தருபவன் என்று கூறப்பட்ட நான்கு பகுதிகளையுடையதாகும். இந்நான்கும் சிறப்புற அமைந்தால்தான் மருத்துவம் பயன் தரும். மருத்துவரோடு அருகிருந்து மருந்து தந்து கவனிக்க 'உழைச் செல்வாரும்' (செவிலியர்) வேண்டுமாம்.

# குடியியல்

அரசினது ஆறு பகுதிகளுள் மிக இன்றி யமையாததாகிய குடிமக்களது இயல்புகளைக்கூறும் பகுதி. இது பதின்மூன்று அதிகாரங்களால் கூறப்படுகிறது.

## 96. குடிமை

குடிமக்களாவாரது தன்மைகள், ஒரு நாட்டின் இன்றியமையா உறுப்பாகிய குடிமக்களைப் பொறுத்தே, நாட்டின் பெருமையும் சிறப்பும் பண்பாடும் அமைகின்றன.

951. **இற்பிறந்தார்கண் அல்லது இல்லை இயல்பாகச்**
**செப்பமும் நாணும் ஒருங்கு.**

நற்குடியில் பிறந்தவர்களிடமல்லாமல், மற்றவர்களிடம் எண்ணம் செ செயல்களில் செப்பமும் நாணமும் ஒருசேர இயல்பாக உளவாகா. இவை குடிவழியில் பரம்பரையாய் அமையும் இயல்புகள். ஒரு குலையில் காய்த்தவை போல, உறவுடைய பரம்பரையில் வருபவர்கள் ஒரு குடியினராவர். செப்பம் - எதிலும் செப்பமுடையவராய், நேர்மையாளராய் இருக்கும் பண்பு.

952. **ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந் தார்.**

நற்குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கம் வாய்மை நாணம் ஆகிய இம் மூன்றிலும் இயல்பாகவே ஒருபோதும் தவறுபட மாட்டார்கள்.

953. **நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்**
**வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.**

எக்காலத்திலும் வேறுபாடில்லாத ஒரே நிலையில் சிறப்புடன் திகழும் நற்குடியில் பிறந்தவர்களுக்குப் பிறருடன் பழகும்போது முகமலர்ச்சியுடைமையும் வறுமையால் இரந்து வந்தவர்களுக்கு ஒன்றை ஈதலும் யாரிடத்தும் இன்சொற் பேசுதலும் ஏழை எளியர் என யாரையும் இழிவாகப் பேசாமையும் ஆகிய நான்கும் அவர்க்கேயுரிய பண்புக் கூறுகள் என்பர். வாய்மைக்குடி - ஒழுக்கம் பிறழாது ஒரே சீராக விளங்கி வரும் குடி.

954. **அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்.**

அடுக்கப்பட்ட பல கோடிகள் கொண்ட செல்வத்தைப் பெற்றாலும் நற்குடியில் பிறந்தவர்கள் தம் ஒழுக்கம் குன்றும்படியான செயல்களைச் செய்ய மாட்டார்கள். ஒழுக்கத்தில் குறைதலால், அடுக்கிய பல கோடிகளே கிடைத்தாலும் அச்செல்வத்திற்கு ஆசைப்பட்டு ஒழுக்கத்தைக் கைவிட மாட்டார்கள் என்பது கருத்து.

955. வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று.

தொன்றுதொட்டு விளங்கிவரும் பழங்குடியில் பிறந்தவர்கள்தாம் பிறர்க்கு வழங்கும் பொருட்செல்வம் முந்தைய நிலையிலிருந்து வரவரச் சுருங்கிய விடத்தும், பிறர்க்குதவும் பண்புடைமையிலிருந்து நீங்கமாட்டார்கள்.

956. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார்.

சிறு குற்றமும் இல்லாமல் வருகின்ற குலவழிக்கு ஏற்ப வாழ்வது தம் கடமை என எண்ணி வாழ்பவர்கள் வஞ்சனை பொருந்திய, தம் பெருமைக்குப் பொருந்தாத செயல்களைச் செய்யமாட்டார்கள்.

957. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

நற்குடியில் பிறந்தாரிடம் ஒரு சிறு குற்றமும் ஏற்படக்கூடாது. ஏனெனில் அக்குற்றம் ஆகாயத்தில் மதியிடத்தே காணப்படும் களங்கம் சிறிதேயாயினும் உலகெங்கும் விளங்கித் தோன்றுவதுபோல், அனைவராலும் அறியப்பட்டு ஓங்கித் தோன்றும்.

958. நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

தன் குலநலத்தின்கண் பொருந்தி வாழவேண்டுமென்ற பற்று இன்மை ஒருவனிடம் தோன்றுமானால், அவனை 'நற்குலத்தில் பிறந்தவன்தானா இவன்' என உலகம் ஐயப்படும்.

959. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.

நிலத்தின்கண் அமைந்துகிடக்கும் மண்ணினது தன்மையை அதில் முளைத்த பயிர்முளை காட்டிவிடும். அதுபோல ஒருவர் நற்குலத்தில் பிறந்தவர் என்பதை அவர் பேசும் வாய்ச்சொற்கள் காட்டிவிடும்.

960. நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

ஒருவன் தனக்கு நன்மையை விரும்புவானானால் நாணத்தை விரும்ப வேண்டும். அதனுடன் நற்குலத்தவன் எனும் பெருமையையும் விரும்புவானானால், பணியத் தக்கார் அனைவரிடமும் பணிதலை விரும்புதல் வேண்டும்.

## 97. மானம்

ஒருவர் தம் நிலையில் தாழாதிருத்தலும் வேறு காரணங்களால் தாழ்வு வந்துழி வாழாமையுமே மானம் எனப்படும்.

961. இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்.

மிக இன்றியமையாத சிறப்பினையுடைய காரியங்களேயாயினும் தம் பெருமை குறைபடுமாறு இழிவுதரும் செயல்களைச் செய்யாது கைவிடுக. அதனால் பெருஞ்செல்வம், பெரும்பதவி வருமென்றே தோன்றினும், மானத்தைக் கைவிட்டு அதையடைய விரும்ப மாட்டார்கள்.

962. சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

புகழ்ச்சிறப்புடன் தம் பெருமையையும் நிலைநிறுத்தும் மானத்தை விரும்புகின்றவர், தமக்குச் சிறப்பு வேண்டுமெனத் தேடுமிடத்தும் தம் குடிச்சிறப்புக்கு ஒவ்வாத காரியங்களைச் செய்யமாட்டார். புகழை அடையவும் மானத்தை விடுவது தவறு. மானம் இழந்த புகழ் புகழாகாது

963. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

செல்வம் மிகுந்து நிறைந்திருக்கும் காலத்தில் அச்செல்வமே உயர்வைத் தருதலின், தாம் பணிவு காட்டி நடந்துகொள்ள வேண்டும். அச்செல்வம் குறைந்து சுருங்கிய காலத்தில், அது தாழ்வை உண்டாக்குமாதலின், தாம் தம் உயர்வு தோன்ற நடந்து கொள்ள வேண்டும். செல்வமுடையவர் பணிதலும் அது குறைந்தவர் அதற்காகத் தலைகுனியாமையும் பெருமித உணர்வைத் தரும்.

964. தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

மக்கள் மானவுணர்வைக் கைவிட்டுத் தம் உயர்ந்த நிலையிலிருந்து கீழிறங்கியவழித் தலையைவிட்டுக் கீழே உதிர்ந்த மயிரினை ஒப்பர். மானத்தைவிட்டு வானத்தில் பறக்கின்றவரை, இதைவிடக் கடிந்து, அவர்தம் மானவுணர்வைத் தூண்ட முடியாது.

965. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.

குடிப்பிறப்பு, புகழ் போன்றவற்றால் மலைபோல உயர்ந்தவராயினும் இழிவுபடுவதற்குக் காரணமான செயலை ஒரு குன்றிமணி அளவு செய்வாராயினும் அதனால் தாழ்வுபடுவர். குன்றிமணி அளவுதானே என எண்ணலாகாது.

**966. புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று**
**இகழ்வார்பின் சென்று நிலை.**

தன்னை இகழ்பவர் பின்னே மானத்தைவிட்டு ஒருவன் போய்க் கைகட்டி நிற்பது புகழைத் தராது; ஏனைய உயர்ந்த உலகத்தும் செலுத்தாது. பின் அங்ஙனம் தாழ்ந்து நிற்பது எதற்காக?

**967. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே**
**கெட்டான் எனப்படுதல் நன்று.**

தன் பகைவர் பின்னே பணிந்து சென்று ஒருவன் பொருள் பெற்று உயிர் வாழ்வதைவிட, அவ்வறிய நிலையிலேயே துன்பப்பட்டு மானத்தோடு இறந்து போனான் என்று சொல்லப்படுதல் நன்று.

**968. மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை**
**பீடழிய வந்த இடத்து.**

குடிப்பிறப்பிற்கேற்ற பெருமித வாழ்வின் பெருமையாம் மானம் கெடும் நிலைமை வந்தவிடத்துச் செத்தொழியாமல், பயனற்ற இந்த ஊனாலான உடம்பைப் பாதுகாத்து வாழும் வாழ்க்கை பின்னர் இறவாமல் வாழ உதவும் மருந்தாகுமோ? மானம் பெரிதென்று வற்புறுத்தும் முறை இது. என்றேனும் சாகப்போகிறவன் மானம் அழிய வாழ்வானேன்? இவ்வாறு மானவுணர்ச்சி தூண்டப்பெறுகிறது.

**969. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்.**

தம் உடம்பிலுள்ள மயிர்த்திரளில் ஒரு மயிர் உதிர்ந்தாலும் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர்கள், தங்கள் மானத்திற்குக் கேடொன்று வரின் அக்கணமே தம் உயிரை விட்டு மானத்தைக் காத்துக் கொள்வர்.

**970. இளிவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழுது ஏத்தும் உலகு.**

தமக்கு ஓர் இழிவு வந்தவிடத்து அதைப் பொறுத்துக் கொள்ளாது உயிரைவிட்டுத் தம் மானத்தைக் காத்துக் கொள்ளும் மானமுடையவர்களது புகழை உலகம் வணங்கித் துதித்து நிற்கும். இவை யாவும் உயிரைவிட, மானமே பெரிதென வற்புறுத்துவன.

மானவுணர்ச்சி தூண்டப் பெற்றால், மனிதன் தவறு செய்யக் கூசுவான். மானம் போன பின் உயிர்வாழ்வது ஏன் என வருவன அனைத்தும் மானத்தை வற்புறுத்த அவ்வாறு கூறப்படுகின்றன. உயிரைவிட வேண்டும் என்பது கருத்தன்று.

## 98. பெருமை

மக்கள் தமது உயர்ந்த பெருமையைக் காத்துக்கொள்ளுதல் வேண்டும். பிறர் போற்றும்படியான சீர்மைகள் அனைத்தும் உடைமையே பெருமையாகும்.

971. **ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு**
**அஃதுஇறந்து வாழ்தும் எனல்.**

ஒருவனுக்குச் செயற்கரிய செய்தல் கூடும் என்று தோற்றும் ஊக்க மிகுதியே, பலரிடைச் சிறந்து நிற்கும் ஒளியாகும். அத்தகைய சூழல் வரும்போது, ஊக்கத்துடன் செயற்கரியதைச் செய்யாது, அதைக் கைவிட்டு எளிதாய் வாழ்வோம் என எண்ணுதல் அவனுக்கு இழிவு தருவதாகும்.

972. **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**

பிறப்பினால் ஒரு தன்மையினவாகிய மக்களுயிர்கள் அனைத்திற்கும் அவையவை செய்யும் தொழில்களது வேறுபாட்டால் அவற்றின் சிறப்புகளும் ஒரு தன்மையினவாகா; வெவ்வேறு வகையினவாகும். ஒவ்வொன்றும் அதற்கேற்ற வேறுபட்ட சிறப்புடையதாகும். தொழில்களிலும் உயர்வு தாழ்வு கூறவில்லை; அவ்வவற்றிற்கேற்ற தனிச்சிறப்பு என்பதே வள்ளுவர் கருத்து.

973. **மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர்.**

மேன்மை இல்லாதவர் சிலர் மேலான பதவிகளில் - இடங்களில் போய் அமர்ந்துவிடுவர்; அங்ஙனம் அமரினும் பெரியரல்லாதவர் பெரியராகார். சிலபோது செயற்கரிய, செய்யவல்ல மேன்மக்கள் சூழ்நிலைகளால் கீழ்ப்பட்ட சிறிய பதவிகளில் - இடங்களில் இருக்க நேரலாம்; அங்ஙனம் தாழ்ந்த இடத்திலிருந்தாலும் சிறியவரல்லாத அப்பெருமை மிக்க பெருமக்கள் சிறியவராகார். எங்கிருந்தாலும் பெரியவர் பெரியவரே. சிறியவர் சிறியவரே.

974. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.

அசைவுபடாத, ஒரே உறுதிப்பாடுடைய மனத்தைப் பெற்ற குடும்ப மகளிர் தம்மைத்தாம் காத்துக்கொள்வது போல, பெருமை என்பதும் தம்மைத் தாமே காத்துக் கொண்டு ஒழுகப் பெறுபவர்களுக்கே உண்டு. தற்கட்டுப்பாடே பெருமை தரும்; இது குடும்ப மகளிரிடம் இயல்பாக உண்டு. பிறர் கட்டுப்படுத்தித் தான் கட்டுப்பாடாக வாழ்வதைவிடத் தானே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்வது பெருமையல்லவா?

975. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

பெருமையுடையவர்கள் எனப்படுவோர், மற்றவர்களால் செய்தற்கரியன என்று கருதப்படும் செயல்களை அவற்றைச் செய்யும் நெறிமுறையை அறிந்து அவற்றின்படி செய்து முடிக்கவல்லவராவர்.

'செயற்கரிய செய்வார் பெரியர்' (26) என்பது நீத்தார் பெருமை. இப் 'பெருமை' அதிகாரக் குறளுடன் அதை ஒப்பிடுக.

976. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.

பெருமையுடைய பெரியவர்களைப் போற்றி, அவர்கள் பண்பாட்டை நாமும் பெற்றுக்கொள்வோம் என்னும் குறிக்கோள், மற்றைய சிறியவர்களது உள்ளத்தின்கண் இயல்பாக உளதாகாது. கல்வி, செல்வமெல்லாம் இருந்தாலும் அச்செருக்குக் காரணமாகச் சிறியவர்கள் பெரியவர்களைப் போற்றி, அவர்கள் வழியில் நடந்து பெருமைபெற எண்ண மாட்டார்கள்.

சிறியவர்கள் தம் சிறுமை காரணமாகவே, பெரியவர்களை மதிக்கமாட்டார்கள். சிறியவர் புத்தி, சின்னப்புத்திதான்.

977. இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்.

கல்வி, செல்வம், பதவி முதலியவற்றால் வரும் சிறப்பும் அதற்குத் தகுதியற்றவர்களிடம் போய்ப் பொருந்துமானால் எல்லோரையும் விடத் தாமே பெரியவர் எனும் செருக்குடன் எல்லைமீறிய தாறுமாறான செயல்களையே செய்விக்கும்.

978. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

பெருமையுடைய அதற்குரிய சிறப்புள்ள வழியும் தருக்கின்றிப் பணிவையே வெளிப்படுத்தும்; மற்றைய சிறுமையுடைமை அதற்குரிய சிறப்பில்லாத வழியும் தன்னைத்தானே வியந்து பெரிதுபடுத்திக் கொள்ளும் பெருமை அடக்கமாயிருப்பதும் சிறுமை ஆடம்பரமாய் ஆடுவதும் உலகில் அன்றாடம் காணப்படும்.

979. **பெருமை பெருமிதம் இன்மை சிறுமை**
**பெருமிதம் ஊர்ந்து விடல்.**

பெருமை எனப்படுவது பெருமைப்படுவதற்கு ஏதுவான சிறப்புகள் தம்மிடம் இருந்த போதும் தருக்கின்றி இருத்தலாகும். சிறுமை எனப்படுவது பெருமைப்பட ஒன்றுமில்லாதவிடத்தும் பெருமிதத்தைத் தன்னுடன் இணைத்துக்கொண்டு, செருக்குதலாகும். ஊர்ந்துவிடல் - மரபுத் தொடர். பெருமிதத்தில் ஏறிக்கொண்டு உலா வருதல்; அதில் மிதத்தல்.

980. **அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்**
**குற்றமே கூறி விடும்.**

பெருமைப் பண்பு பிறருடைய குற்றங் குறைகளைக் கூறாது மறைத்து நிறைகளேயே வெளிப்படப் பேசும்; ஏனைய சிறுமைப் பண்போ பிறர் குணத்தை மறைத்துக் குற்றங்களையே தூற்றிப் பேசும். பிறர் குற்றங்களைப் பேசவும் கூசுவதுதான் பெருமை.

## 99. சான்றாண்மை

நற்குணம் நற்செயல்களால் நிறைந்து விளங்கும் தன்மை.

981. **கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.**

தமக்குக் கடமையாவது இதுவே என அறிந்து சான்றாண்மையை மேற்கொண்டு வாழ்பவர்களுக்கு, உலகில் உள்ள நல்லவைகள் எல்லாமே அவர்கள் செய்தற்குரிய கடமைகளாகும். இது அது என இல்லாமல் எதுஎது நல்லதோ அதைச் செய்து வாழ்வது சான்றோர்க்குக் கடமையாகும் என்பது என்றும் பொருந்துமல்லவா?

982. **குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
**எந்நலத்து உள்ளதூஉம் அன்று.**

சான்றோர்க்கு அழகுதரும் நலமாவன அவர்தம் குணநலன்களேயாகும். பிற அணியழகு, தோற்றப் பொலிவு முதலாய நலன்களெல்லாம்

எவ்வகை நலத்தினும் வைத்து எண்ணப்படுவன அல்ல. ஒருவர் அழகாலும் அணிகளாலும் நிறைந்திருந்தாலும் சான்றோராதல் இயலாது; நற்குணங்களால் நிறைந்திருத்தலே சான்றாண்மையாகும்.

பிற நலங்கள் தேவையில்லை என்பதன்று. குணநலமில்லையேல், அவையிருந்தும் பயனில்லை என்பது கருத்து.

**983. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்.**

எல்லோரிடத்தும் அன்பும் பழிபாவங்களுக்கு வெட்கப்படும் நாணமும் மக்கள் அனைவருக்கும் உதவும் ஒப்புரவும் எளியவரிடம் இரக்கம் காட்டும் கண்ணோட்டமும் எப்பொழுதும் தவறாத வாய்மையும் ஆகிய இவை ஐந்தும் சால்பு என்ற மண்டபத்தைத் தாங்கும் தூண்களாகும்.

சால்பு நிறைந்திருக்கும் தன்மை, நற்செய்கைகள் அனைத்தாலும் நிறைந்திருப்பதே சால்பு. இன்றியமையா இவை ஐந்துமிருந்தால், பிற நல்லன யாவும் தாமே அமையும்.

**984. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு.**

தவம் என்பது முதன்மையாக ஓருயிரையும் கொல்லாதிருத்தல் என்ற சிறப்புடையது. அதுபோலச் சால்பு என்பது பிறர்தம் குற்றங்களை வாய்விட்டுச் சொல்லாத நற்குணத்தின்பாற்பட்டதாகும்.

தவம் செய்வார் 'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலையும்' உயிர்களைப் பலியிடும் வேள்வியையும் கடமையாகக் கருதிய காலம் அது. உயிர்க் கொலையின்மையை 'நோன்மை' (தவம்) என்பது வள்ளுவர் கருத்து.

**985. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.**

ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவல்லவரது தலைமையான ஆற்றல் பணிவுடைமையாகும். சால்புடையார் தம் பகைவரைப் பகைமையின் நீங்க வைத்துத் தம்மவராக மாற்றுகின்ற படைக் கருவியும் அதுவேயாகும்.

வலியில்லாதார் பணிந்துபோவது வேறு. வலிமை மிக்கவர் விட்டுக்கொடுத்துப் பிறரை அணைத்து நடந்து காரியம் வெல்வது இது.

**986. சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி**
**துலையல்லார் கண்ணும் கொளல்.**

சால்புடைமை என்னும் பொன்னின் தரத்தை அளந்தறிதற்கு உரைகல்லாகப் பயன்படும் கட்டளைக்கல் யாதென்றால், தமக்கு ஒப்பாக மாட்டாத தாழ்ந்தவரிடத்தும், தம்மிடம் வெல்லும் ஆற்றலிருக்கவும் தோல்வியை ஏற்றுக் கொள்வதாகும். ஆற்றலில் தம்மிலும் தாழ்ந்தாரை வெல்ல வேண்டி, அவருடன் சமமாய்ச் சண்டையிடாமல், தோல்வியைத் தாமே ஏற்று அவரினும் உயர்வாதல் சால்பினது அளவைக் கூட்டும் என்பதாம். பணிந்து போதலேயன்றி, தோல்வியைத் தாமே விரும்பி ஏற்றுக்கொண்டு பெருமையில் மேலும் ஒரு படி உயர்தல். 'துலை'யில் (தராசில்) வைத்துப் பார்த்தால் சமமாக ஆக முடியாதவரே 'துலையல்லார்'.

987. **இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.**

தமக்கு இன்னாத துன்பங்களைச் செய்தவர்களுக்குத் தாமும் திரும்ப, அத்துன்பங்களையே செய்யாமல் அதனை மாற்றி அவர்களுக்கு இனியவற்றையே செய்து காட்டாவிட்டால், சால்பு என்பதன் பயன்தான் வேறு யாதுளது? தோல்வியை ஏற்பதேயன்றி, அவர்களுக்கு இனியவற்றையும் செய்தல், பெருமையை மேலும் உயர்த்துமாம். இம் மூன்று குறள்களும் (985, 986, 987) சால்புடைமையை மேன்மேல் உயர்த்துக் காட்டுகின்றமை சிந்திக்கத்தக்கது.

988. **இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்**
**திண்மை உண் டாகப் பெறின்.**

சால்பு என்று சொல்லப்படும் மனத்திண்மையாம் உறுதி ஒருவனிடம் அமையப்பெற்றால், அவனுக்கு வறுமை இழிவாகாது. சால்புடையான் வறுமையிலும் செம்மையாய் வாழ்ந்து காட்டுவான். சால்பு என்னும் திண்மை - வறுமை. துன்பம், இடர் எனும் வரினும் தடுமாறாத மனவுறுதி.

989. **ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்.**

சான்றாண்மைக்குக் கடல் போன்றவர் என்று சொல்லப்படுகின்ற சான்றோர்கள், ஊழிக் காலத்தே கடலும் கரையுள் நில்லாது உலகமே திரிந்தாலும் தாம் தம் நற்குணங்கள் நற்செய்கைகளிலிருந்து சிறிதும் திரிய மாட்டார்கள்.

990. **சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்**
**தாங்காது மன்னோ பொறை.**

பல நற்குணங்களாலும் நிறைந்த சான்றோர் தமது நிறைவுடைய அத் தன்மையில் குறைவராயின் இப்பெரிய மண்ணுலகம் தான் தாங்கும் சுமையைத் தாங்கமாட்டாது அழிந்து போகும். சான்றோர் உண்மையால்

உண்டு இவ்வுலகமாதலின், அச்சான்றோரே பண்பு நலனிற் குறைவராயின், உலகம் தலைகீழாகி அழியுமாம்.

## 100. பண்புடைமை

நற்குணங்களுடைமை, பிறருடன் பழகும்போதுதான் பெரிதும் பண்பு வெளிப்படுமாதலின், பழகும் பண்பாட்டையும் இது விளக்குகிறது.

**991. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.**

எல்லோரிடத்திலும் எளிய செவ்வியராகப் பழகுவதன் மூலம் பண்பு என்னும் நெறியினை அடைதல் எளிதென்று கூறுவர்.

பண்புடைமை எப்போது வெளிப்படும்? ஒருவரோடு ஒருவர் பழகும்போது தான் வெளிப்படும். எண்பதத்தால் - யாருடனும் எளிதாக, இனிதாக, நன்றாகப் பழகும் தன்மை.

**992. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.**

எல்லோரிடத்திலும் அன்புடையராதலும் சிறந்த குடியிற் பிறந்தார்க்கேற்ற நற்செயல்களையுடையராதலுமாகிய இவை இரண்டும் ஒருவரைப் பற்றி உலகத்தார் பண்புடையவர் என்று சொல்லும் நெறியாகும்.

**993. உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.**

கண், மூக்கு, முகம் முதலான உடம்புறுப்புக்களால் ஒத்திருத்தலால் மட்டும் ஒருவரை இவரும் மனிதரே; மக்களை ஒத்தவரே என்று கூற முடியாது. செறிவு மிக்க நற்பண்புகள் ஒத்திருந்தால்தான் ஒருவரை மக்கள் வரிசையில் வைத்து எண்ண முடியும். வெறுக்கத்தக்க - செறிவாய்ப் பொறுந்தத்தக்க பண்புகள், மக்களைப் போல உடம்பும் உறுப்பும் தோற்றமும் உடையவரெல்லாம் மக்களாகிவிட முடியாது; பொருந்தத்தக்க பண்புகளும் பொருந்தியிருந்தால்தான் மக்கள் என்று கூற இயலும்.

**994. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.**

தாம் பலராலும் விரும்பத்தக்க நல்லவராயும் பிறர்க்கு நன்மையை விரும்பிச் செய்பவராயும் அமைந்த, தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலையுடையவரது பண்பினை உலகத்தார் பாராட்டுவர்.

995. **நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புள பாடறிவார் மாட்டு.**

நண்பர்களுடன் விளையாட்டாகச் சிரித்துப் பேசுதற்கண்ணும் ஒருவரை இகழ்ச்சிப் படக் கூறிவிடுதல் தீங்காகும். அவரவர் பண்பறிந்து பழகுகின்றவர்களுக்குப் பகைவருடன் பழகுமிடத்தும் பண்பாக நடந்து கொள்ளும் நெறிகளே உளவாகும்.

நண்பர் ஒருவர்க்குத் திக்குவாயாக இருக்கலாம்; கால் சிறிது ஊனமாக இருக்கலாம்; விளையாட்டாய்க் கூட; அதை இகழ்ச்சி தொனிக்கச் சுட்டிச் சொல்லிவிடக் கூடாது. அது வடுப்போல மனத்துள் பதிந்துவிடும்.

996. **பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்.**

பண்புடையவர்கள் பொருந்தி இருத்தலால் இவ்வுலகம் உளதாயிருக்கின்றது. அவர்கள் இல்லையேல் அது மண்ணினுள்ளே புதைந்து மாய்ந்து போகும்.

பண்புடைமை அகல் விளக்குப் போன்றது. ஓர் அகல் விளக்கு ஆயிரம் அகல் விளக்குகளை ஏற்றும். அதுபோல் பண்புடையாராலேதான் பண்பற்றவரையும் தாங்கி இவ்வுலகம் இருக்கிறது.

997. **அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்.**

மக்களுக்கேயுரியதான நற்பண்புகள் இல்லாதவர் அரத்தின் கூர்மை போல அறிவுக் கூர்மையுடையவரேயானாலும் உணர்வற்ற மரத்திற்கு ஒப்பாவர்.

998. **நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்**
**பண்பாற்றார் ஆதல் கடை.**

நட்புடன் கலந்து பழகாதவராய்த் தம்மிடம் நன்மை பயவாதவற்றையே செய்கின்றவர்களித்திலும் பண்புடன் நடந்துகொள்வதுதான் ஒருவருக்குச் சிறப்பு; அங்ஙனம் நடவாவிடின் அது பண்புடைமைக்கு இழுக்காகிவிடும்.

999. **நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன்று இருள்.**

உலகினருடன் சிரித்து மகிழ்ந்து கலந்து பழக மாட்டாதவர்களுக்கு, மிகப் பெரியதாகிய இவ்வுலகம் ஒளி விளங்கும் பகற்பொழுதிலும் இருள்

சூழ்ந்ததாய்க் காணப்படும். பழகும் மனிதப் பண்பாட்டை இங்ஙனம் மனத்தில் பதியும்படி சொல்கிறார். சிரித்துப் பேசிக் கலகலப்பாய் இருப்பவர் உள்ள இடம் ஒளிவீசித் திகழும். அஃதில்லாதவர் 'இருண்ட வீடு' போலிருப்பர்.

1000. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.

பண்பில்லாத ஒருவன் பெருஞ்செல்வம் பெற நேர்ந்தால், அவன் பெற்ற அப்பெருஞ்செல்வம் நல்ல ஆவின்பால் அதனைப் பெய்து வைத்த பாத்திரத்தின் குற்றத்தால் திரிந்து போனாற்போல, யாருக்கும் பயன்படாது கெட்டுப்போகும்.

## 101. நன்றியில் செல்வம்

ஈட்டியவனுக்கும் பிறர்க்கும் பயன்படாத செல்வம் பற்றியும் அத்தகைய செல்வனைப் பற்றியும் விளக்கும் பகுதி.

1001. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல்.

இடம் அகன்ற தன் மனையகம் முழுவதும் பெருஞ்செல்வத்தைத் தேடிக் குவித்து வைத்தவன், கருமித்தனத்தால் அதனை நுகராது செத்துப் போனானாயின், பிறகு அச்செல்வத்தைப் பயன்படுத்தக்கூடிய எச்செயலும் அவனுக்கு இல்லை. எனவே செல்வத்தைப் பெற்ற பொழுதே பயன்படுத்துக என்பதாம். பூதம்போல் காத்திருந்ததன்றி, வேறு எவ்வுரிமையும் அவனுக்கு அதில் இல்லை.

1002. பொருளானாம் எல்லாமென்று ஈயாது இவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு.

பொருட்செல்வம் ஒன்று இருந்தால், எல்லா நலன்களும் அதனால் உண்டாம் என்றெண்ணி, அதனைப் பிறர்க்கு ஈயாமல் அதில் மீளாப் பற்று வைக்கும் மயக்கத்தால் ஒருவனுக்கு மாட்சிமையற்ற பிறப்பே தொடர்ந்துண்டாகும்.

செல்வத்தின் இன்றியமையாமையை உணரும் அதே நேரத்தில், அதில் அளவு கடந்த பற்று வைத்துப் பயன்படுத்தாவிட்டால், அது நன்மையற்ற செல்வமாகிவிடும்.

1003. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

பிறரினும் கூடுதலாகச் செல்வத்தை ஈட்ட வேண்டுமென்று, அதனை ஈட்டுதலிலேயே பற்று வைத்துக் கருமியாய்ப் புகழை விரும்பாத மக்களது பிறப்பு, நிலவுலகிற்குப் பாரமாகுமேயன்றிப் பயனுடையதாகாது.

1004. **எச்சமென்று என்எண்ணும் கொல்லோ ஒருவரால்**
**நச்சப் படாஅ தவன்.**

யாருக்கும் எதையும் ஈந்தறியாததால் ஒருவராலும் விரும்பப்படாதவன் தான் இறந்தபின் இங்கு தன் எச்சமாக நிற்பது இதுவென எதை எண்ணுமோ?

இந்த உலகில் பிறந்தவன் பயனுடைய ஒன்றையேனும் இவ்வுலகிற்கு விட்டுச் செல்ல வேண்டும் என வள்ளுவர் கூறுகிறார். 'அவரவர் எச்சத்தால் காணப்படும்' (114) என்ற குறளை ஒப்புநோக்குக. செல்வமுடையவன் ஆகும் பேறுபெற்றால், எத்தனையோ நன்மைகள் செய்து - நன்மையை, உதவியை, பெயரை, புகழை விட்டுச் செல்ல எத்தனையோ வாய்ப்புண்டு அல்லவா? இருந்தும் பயன்படுத்தாது போகலாமா என்று கேட்கிறார்.

1005. **கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய**
**கோடிஉண் டாயினும் இல்.**

பிறர்க்குக் கொடுப்பதும் தான் நுகர்வதுமாகிய இரண்டும் இல்லாதவர்க்குப் பலவாக அடுக்கிய கோடிச் செல்வங்கள் உளவாயினும், ஒன்றுமே இல்லாத நிலையே உளதாகும். பயன் கொள்ளாமையின் பொருள் இருந்தும் இல்லாத தன்மைத்தேயாம். பயன்படுத்தாத செல்வம் இருந்தாலும் ஒன்றுதான்; இல்லாவிட்டாலும் ஒன்றுதான்.

1006. **ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்குஒன்று**
**ஈதல் இயல்பிலா தான்.**

தானும் நுகரமாட்டான்; தக்கவர்க்கு அவர் வேண்டுவதொன்றைக் கொடுத்துதவும் இயல்புமில்லாதவன். அத்தகையவன் தான் பெற்ற பெருஞ் செல்வத்திற்குத் தானே கேடாவான். அச்செல்வம் பயனின்றியே கழிதலின் நுகராத கனி கெட்டழிவதுபோல் கெடும் என்பதாம்.

1007. **அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்**
**பெற்றாள் தமியள்மூத் தற்று.**

ஒரு பொருளும் இல்லாது வறியவரான ஏழைகளுக்கு, அவர்க்குத் தேவையான ஏதேனும் ஒன்றைக் கூடக் கொடுத்துதவாதவனது செல்வம், மிகுந்த அழகுடையாள் ஒருத்தி திருமணமாகாமல் தனியாளாய்

இருந்தே அகவை முதிர்ந்த தன்மையினையுடையதாகும். அவள் நலம் துய்க்கப்படாது, அவளும் இன்புறாது கழிதல்போல ஈயாதான் செல்வமும் யார்க்கும் பயன்படாது தானும் அழியுமென்பதாம்.

1008. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

யாருக்கும் உதவாமையின் யாராலும் நச்சப்படாதவனது செல்வம் ஊரின் நடுவே நிற்கும் நச்சுமரம் பழுத்ததற்கு ஒப்பாகும். அச்செல்வம் தீங்காகவும் முடியும் என்பதாம்.

1009. அன்பொரீஇத் தற்செற்று அறநோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்.

அன்பைக் கைவிட்டு, உண்ணாமலும் உறங்காமலும் தன்னை அழித்துக்கொண்டு அறநெறிகளையும் எண்ணாமல் ஒருவன் ஈட்டிய ஒளிபொருந்திய பெருஞ்செல்வத்தைப் பிறர் கவர்ந்து கொண்டுபோய்ப் பயன்பெறுவர். அவனும் வழியினரும் பயன்பெறார்.

1010. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து.

சிறப்புடைய செல்வர்களின் சிறிய வறுமைத் துயரம் உலகைக் காக்கும் மேகம் நீரின்றி வறட்சி மிகுந்தது போன்ற தன்மையினை உடையதாகும். சிறந்த பண்புள்ள செல்வராதலின், நல்வழிகளில் செலவழித்துவிடுவர். மேலும் மேலும் அவ்வாறு செய்ய இயலாமையே அவர்க்கு வறுமையாய்த் தோன்றும். அது மேகம் வறட்சியுற்றது போலுமேயல்லாது பிறர் வறுமைபோல் ஆகாது.

## 102. நாணுடைமை

சால்பு மிக்கவர் தமக்கு ஒவ்வாத காரியங்களில் ஈடுபட நாணுதல், நாணமுடையவர் தவறு செய்யக் கூசுவர்; அதனால் தவறு செய்ய மாட்டார்கள். வள்ளலார், காந்தியடிகள் போல்வர் பலர் மிகுந்த நாணமுடையவராக விளங்கியதை அவர்கள் வரலாற்றில் காணலாம்.

1011. கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

இங்குக் கூறப்படுவது தீய செயல்களைச் செய்வதற்கு நன்மக்கள் நாணுகின்ற நாணமாகும். அழகிய நெற்றியுடைய பெண்களுக்கு இயல்பாகப் பொருந்திய நாணமென்பது இதில் வேறுபட்டதாகும். கருமம்

- செயல். செயல்களில் ஈடுபடும்போது, ஏதும் தவறு நேர்ந்துவிடின் வெட்கப்பட நேர்வது இது.

**1012. ஊனுடை எச்சம் உயிர்கெல்லாம் வேறல்ல**
**நாணுடைமை மாந்தர் சிறப்பு.**

உணவும், உடையும் அவையல்லாத பிறவும் மக்களுயிர்க்கெல்லாம் பொதுவான தன்மையுடையனவே. நாணம் உடைமை ஒன்றே நன்மக்களாவார்க்குச் சிறப்பாக உரிமையுடையதாகும். நாணுடைமையே நன்மக்களை வேறுபிரித்துக் காட்டும்.

**1013. ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்**
**நன்மை குறித்தது சால்பு.**

உயிர்கள் எல்லாம் உடம்பையே தமக்கு அடிப்படை நிலைக்களமாகக் கொண்டு அதை விட்டுப் பிரியா. அதுபோலச் சால்புடைமை என்பது நாணம் என்னும் நற்குணத்தை நிலைக்களமாகக் கொண்டு, அதனை விட்டுப் பிரியாது. நாணம் உள்ள இடத்திலேயே சால்புடைமையும் விளங்கும். உடம்புக்கு உயிர் முக்கியம்; சான்றாண்மைக்கு நாணம் முக்கியம்.

**1014. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்**
**பிணியன்றோ பீடு நடை.**

சான்றோர்க்கு நாணுடைமை அழகு தரும் அணிகலன் அல்லவா? அவ்வணிகலன் இல்லையானால், அவர் பெருமித நடை போடுவது ஒரு நோய் என்றல்லவா கருதப்படும்? குற்றமும் செய்துவிட்டு, நாணமே இல்லாமல் நிமிர்ந்து பெருமிதமாய் நடப்பவர்கள் இன்றும் பலர் உளர். அதனை நோய்வாய்ப்பட்ட, வாதம் வந்தவன் நடப்பதுபோன்றது என அருவருக்குமாறு சொல்கின்றார்.

**1015. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு**
**உறைபதி என்னும் உலகு.**

பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு ஏற்படும் பழியையும் ஒப்ப மதித்து வெட்கப்படுபவரை, உலகத்தார் நாணத்திற்கு உறைவிடமென்று கூறிப் போற்றுவர். தன் பழிக்கு நாணுவது போலவே, பிறர்க்கேற்படும் பழிக்கும் தான் நாணுவதென்பது, பண்புடைமையின் உச்சமாகும்.

**1016. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்**
**பேணலர் மேலா யவர்.**

மேலானவர்கள் நாணமாகிய பாதுகாப்பைத் தேடிக் கொள்வரேயல்லாமல், இவ்வகன்ற உலகமே கிடைத்தாலும் நாணத்தை

விட்டுவிட்டு அதனைக் கொள்ள விரும்பமாட்டார்கள். நாணமா, ஞாலமா என்ற கேள்வி வரும்பொழுது சான்றோர் நாணினைக் கொள்வதல்லது ஞாலத்தை விரும்பார். 'மேலாயவர், நாண்வேலி கொள்ளாது, வியன்ஞாலம் பேணலர் மன்னோ' என்று கூட்டிப் பார்க்க வேண்டும்.

**1017. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்**
**நாண்துறவார் நாணாள் பவர்.**

நாணம் என்பதன் சிறப்பறிந்து அதனைக் கைக்கொண்டு ஒழுகுபவர் அந்நாணத்தைக் காப்பதற்காக உயிரை நீப்பினும் நீப்பார்கள்; உயிரைக் காக்கும் பொருட்டாக ஒருபோதும் நாணத்தைக் கைவிட மாட்டார்கள்.

**1018. பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்**
**அறம்நாணத் தக்கது உடைத்து.**

பிறர் கண்டு வெட்கப்படதக்க செயலைச் செய்துவிட்டு அதற்குத் தான் வெட்கப்படானாயின், அது அறவே கண்டு வெட்கப்பட்டு நீங்கும் தன்மையினையுடையதாகும்.

**1019. குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்**
**நாணின்மை நின்றக் கடை.**

சான்றாமை எனத் தான் கொண்ட கொள்கையில் தவறினால் அது குடிப்பிறப்பின் சிறப்பைச் சுட்டுக் கெடுக்கும். நாணமில்லாத தன்மையுடன் ஒருவன் வாழ்வானாயின் அது அவனுக்கு வரும் நலங்களெல்லாவற்றையும் சுட்டெரித்துக் கெடுத்துவிடும். ஒருவன் தவறினால் அவன் மட்டுமல்லாமல், அதன் பிறந்த குடியே அழியும் என்ற கருத்து, குறிப்பிடத்தக்க உண்மையாகும்.

**1020. நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை**
**நாணால் உயிர்மருட்டி அற்று.**

நாணம் எனும் உயிர்ப் பண்பு தம் அகத்தே இல்லாத மக்கள் உயிருடையவர் போல இயங்குகின்ற இயக்கம், மரத்தால் செய்யப்பட்ட பாவை அதிற் கட்டிய கயிற்றினால் இயக்கப்பட்டு உயிருடையதுபோல மயக்கும் தன்மைத்தாகும்.

## 103. குடிசெயல்வகை

தான் பிறந்த குடியைப் பாடுபட்டு உழைத்து உயர்த்துகின்ற திறமே குடிசெயல்வகை எனப்படும். குடிக்கு ஒரு குறைவந்துழி அதை நீக்குவதும் இதிலடங்கும்.

1021. கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்.

தான் பிறந்த குடியை உயர்த்துதற் பொருட்டுக் காரியம் ஆற்றத் தொடங்கிய ஒருவன், அதனை முடிக்கும் வரை முயற்சியைக் கைவிடேன் என்று உழைக்கும் பெருமையைவிட அவனுக்கு மேன்மை தருவது பிறிதொன்றில்லை. கைதூவேன் - கையுதறமாட்டேன்.

1022. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.

ஆட்சி செய்து நிருவகிக்கும் திறமையும் கல்வி கேள்விகளால் நிறைந்த அறிவும் எனும் இரண்டினையுடையவனது இடையறாத முயற்சியால் அவன் பிறந்த குடி மேன்மேல் உயரும்.

1023. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

என் குடியினை உயரச் செய்வேன் எனச் சூள் உரைத்து அதற்கேற்ற முயற்சிகளில் ஈடுபடும் ஒருவனுக்குத் தெய்வம் அவன் ஏவிய வேலையைச் செய்ய ஆயத்தமாய் உடையைத் தாறுபாய்ச்சிக் கட்டிக்கொண்டு முன்னே வந்து நிற்கும்.

காரியத்தை முடிக்க 'வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறான்' என்ற உலக நடையை, ஒட்டியது இது. ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு, வேலை செய்ய ஆயத்தமாக நிற்றல்.

1024. சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு.

தமது குடி தாழ்வடையும் நிலையொன்று ஏற்படுமானால், அவ்வாறு தாழ்வடையாமல், அதை உயர்த்துவதற்காக மிகவும் வருந்தி உழைப்பவர்களுக்கு, அக்காரியத்தை முடிக்கும் திறம்பற்றியெல்லாம் மிகவும் திட்டமிட்டுச் சிந்திக்க வேண்டாமல், அது தானாகவே நிறைவேறும்.

1025. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

தானும் குற்றங்களின் நீங்கினவனாய், தன் குடியினையும் குறை நீக்க உயரச்செய்து வாழ்பவனை உலகத்தார் சுற்றமாகக் கொள்ள விரும்பித் தானே சென்று சூழ்ந்து கொள்வர். குடி செய்தல் - குடிக்குவந்த இடையூற்றைக் களைந்து அதைக் காப்பாற்றல்.

1026. நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

ஒருவனுக்கு நல்ல ஆளுந்தன்மை உளதென்று உயர்த்துச் சொல்லப்படுவதற்கு, அவன் தான் பிறந்த குடியினை ஆளும் தலைமையைத் தனதாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

குடும்பப் பொறுப்பேற்றுக் குடும்பத் தலைமைக்குரியவனாகத் தன்னை ஆக்கிக் கொண்டு, குடும்பத்தை நிருவகிப்பவனே, சிறந்த ஆட்சியாளன் - நிருவாகி எனப் போற்றப்படுவான்.

1027. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

போர்க்களத்தில் பலரும் சென்று போரிட்டாலும் போரைத் தாங்குதல் என்பது வன்கண்ணராம் பெருவீரர்களையே சாரும். அதுபோல ஒரு குடியின்கண் பிறந்தவர் பலராயினும் குடியைச் சுமக்கும் பாரம் எல்லாம் அதனைத் தாங்கவல்லவர்தம் மேலதேயாம். குடும்பப் பொறுப்பை ஏற்பவன் மேலேயே சுமை முழுவதும் விழும், இது நாம் உலகில் கண்கூடாகக் காண்பது.

1028. குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்.

தம் குடியினைக் குறை நீக்கி உயர்த்த முயல்பவர்களுக்கு இது தகுந்த காலம், இது காலமன்று என்பன எதுவுமில்லை. எனவே நல்லகாலம், கெட்டகாலம் என்று காலத்தை நீட்டித்துச் சோம்பலை வளர்த்துக்கொண்டு, தமக்குள் வேண்டாத மானத்தைப்பற்றியும் எண்ணிக்கொண்டு இருப்பாராயின் குடி வளர்ச்சி கெடும். வீரத்தில் மானம் பாராட்டலாம்; குடும்பத்திற்குள் மானம்பற்றிப் பெரிது பண்ணக்கூடாது.

சிலர் தம் மனைவி, அண்ணன் தம்பியரிடம்தான் மானம் பற்றிப் பேசி வீரத்தைக் காட்டுவர். பகைவர்களிடம் காட்டவேண்டிய மானவுணர்வை, வீட்டிற்குள் காட்டலாகாது.

1029. இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பான் உடம்பு.

தன் குடும்பத்தின் குறைகளை நீக்கி அது துன்பமுறாமல் காக்க முயல்பவனது உடம்பு, அதற்காகவே உழைத்து உழைத்துத் தேய்தலால், அத்துன்பத்திற்கே கொள்கலமாய் ஆகிவிடுமோ? அத்தகையவனது தியாகவுணர்வை வியக்கும்விதம் இது. குற்றம் மறைத்தல் - குடும்பத்திற்கு ஏற்படும் அழிவை நீக்கிக் காப்பாற்றுதல்.

1030. **இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்**
**நல்லாள் இலாத குடி.**

துன்பம் வந்த காலத்தில், முட்டுக் கொடுத்துத் தாங்கும் தூண்போலத் தாங்கவல்ல, நல்ல ஆள் ஒருவரின் துணையில்லாத குடி, கடுந்துன்பமாகிய கோடரி புகுந்து அடியை வெட்டிவிடவே, அடியற்ற மரம்போலக் கீழே வீழ்ந்து படும். தாங்கவல்ல ஆள் ஒருவர் இருந்தால் குடி வீழாது. அடுத்தூன்றும் நல்ல ஆள் - தாங்கும் தூண் போலக் குடும்பத்தைத் தாங்கும் நற்பண்பும் ஆற்றலுமுடையவர்.

## 104. உழவு

உழவுத் தொழிலின் தனிச்சிறப்பும் அதைச் செய்யும் நெறிமுறைகளும்.

1031. **சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை.**

உலகில் வெவ்வேறு தொழில்களில் மாறி மாறி ஈடுபட்டு முயன்றாலும் இறுதியில் ஏரால் உழுது பயன் விளைவிக்கும் உழவின் வழிப்பட்டே வாழ்கிறது உலகம். அதனால் உழவில் மெய்வருத்தம் முதலாய பலவகைத் துன்பங்களும் உளவாயினும் உழவே தலையாயதாகும். உலகம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தையே பின்பற்றுவதால், இன்றும் உழவின் தலைமை உணரப்படுகிறது.

1032. **உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து.**

உழவு மெய்வருந்தி உழைக்கும் தொழிலென்பதால் அதனைச் செய்யமாட்டாது பிற தொழில்கள் மேற் செல்வாரையெல்லாம் அவ்வுழவே தாங்குகிறது. அதனால் உழவர்கள் உலகமாகிய தேருக்கு அச்சாணி போன்றவர் ஆவர்.

உழவுத் தொழிலைச் செய்யாத, அதுபற்றி அறியாத, வயலென்றால் இன்னதென்று தெரியாதவர்களையும்கூட, அவ்வுழவே உணவு தந்து காப்பாற்றுகிறது என்ற குறிப்பும் இதிலுளது.

1033. **உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்.**

உழவுத் தொழிலைச் செய்து பிறர்க்கும் உதவித் தாமும் உண்டு வாழ்கின்றவர்களே உரிமையுடன் வாழ்கின்றவர்கள் ஆவார்கள். மற்றவர்கள் அனைவரும் பிறர் ஏவிய வேலைகளைப் பார்த்து, அவரை வணங்கி வாழ்பவர்கள் ஆவார்கள். உழுபவனே நிலவுரிமையுடையவனாக இருந்த காலம் அது.

1034. பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.

உழவுத் தொழிலால் நெற்பயிரை விளைவித்து, உயர்ந்து நிற்கும் கதிர்க்குடையாம் நிழலின்கண்ணே வாழும் உழவர்கள், அரசர்களின் வெண்கொற்றக் குடைகளின் நிழலில் தங்கிய உலகம் முழுவதையும், தமது குடையின்கீழ் வாழக் காண்பவர்கள் ஆவார்கள். அரசாட்சிகளும் இவர்களது துணையால் நடப்பனவேயாம்.

1035. இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

தம் கையால் உழவைச் செய்து, தன் முயற்சியால் உண்டு வாழ்தலை இயல்பாகவுடைய உழவர்கள், பிறரிடம் ஒருநாளும் இரந்து நிற்க மாட்டார்; தம்மிடம் இரப்பவர்க்கு அவர் வேண்டியது ஒன்றினை, இல்லையென மறைக்காமல் கொடுத்துதவுவர். தாமும் இரக்கமாட்டார்; இரப்பவர்க்கு ஈயாமல் மறுக்கவும் மாட்டார்.

1036. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை.

உழவுத்தொழிலைச் செய்பவர்கள் கைகளை மடக்கிக்கொண்டு, தம் தொழிலைச் செய்யாது விடுவார்களாயின், ஆசை முழுவதையும் கைவிட்டேம் என்னும் துறவியரும் நிலையாகத் தமது அறத்தில் நிற்றல் இயலாது.

இல்லறத்தாரே துறவியர்க்கும் துணை என்றார் முன்பு (42). அதன் தொடர்ச்சி இது. ஆசைகளை எல்லாம் கைவிட்டேம் என்பார்க்கும் இவர்களது ஆதரவு தேவை என்று கூறும் குறிப்பு உணரத்தக்கது.

1037. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

உழுகின்ற நிலத்தின் ஒரு பலம் அளவுள்ள புழுதி காற்பலம் ஆகுமாறு அதனைச் சூரிய ஒளியில் காய விடுவார்களாயின், அதன்கண் கைப்பிடியளவு உரமும் இடவேண்டாமல் பயிர் செழித்து வளரும். தொடி

- ஒருபலம், கஃசு - காற்பலம். சூரிய ஒளி ஓர் உரமாகிறது என்ற குறிப்பு கருதத்தக்கது.

**1038. ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு.**

ஒரு நிலத்தில் பயிர் செய்யும்பொழுது உழுதல் நல்லது; உழுதலைக் காட்டிலும் உரமிடுதல் மிக நல்லது. களை பறித்தல் முக்கியம்; அங்ஙனம் களையெடுத்தபிறகு நீர் பாய்ச்சுதல் இன்றியமையாதது. நீர் பாய்ச்சுதலைவிட இறுதியில் பயிர்களைக் காலிகள் மேயாமலும் பிறவாறும் காப்பது மிகவும் நல்லதாகும். உழுதல், உரமிடுதல், களையெடுத்தல், நீர்கால் யாத்தல் (பயிரினடியில் நீர் பாய்ச்சுதல்) வேலியிட்டுக் காத்தல் எனும் இவை ஐந்தும் உழவுத் தொழிலி இன்றியமையாதவை என நடைத்திறத்தால் வற்புறுத்தும் அழகை காணலாம்.

**1039. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும்.**

நிலத்திற்கு உரிமையுடையவன் தானே அடிக்கடி சென்று நிலத்தைப் பார்வையிட்டு, வேண்டுவன செய்யாமல் சோம்பியிருப்பானானால், நிலமகள் அவனொடு புலந்து வெறுத்து, மனைவியொருத்தி ஊடுவது போல ஊடிவிடும். அதாவது மனைவியொருத்தி தன்னைப் பிரிந்து அன்பு செலுத்தாத கணவனுடன் ஊடுவதுபோலப் போகம் தராது ஊடிவிடுவாள்.

**1040. இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலமென்னும் நல்லாள் நகும்.**

யாம் வறியவரானேம்; ஒரு வேலையும் இல்லாதவரானேம் என்று கூறிச் சோம்பி இருப்பவரைக் கண்டால், நிலமகள் என்று உலகோர் புகழ்ந்து கூறும் நல்லவள் தன்னுள்ளே நகையாடிச் சிரிப்பாள். நன்மையே செய்யும் இயல்புடையதாகலின் நிலம் நல்லாள் எனப்பட்டது. வேளாண்மை செய்து உரிமையுடன் உழைத்து வாழ வழியிருந்தாலும் அதுசெய்யாது வருந்துவதால், நிலமகள் கேலி செய்து சிரிக்கின்றாள். பரந்து கிடந்த நிலத்தை உழுது பண்படுத்த, யாருக்கும் வாய்ப்பு இருந்த காலம் அது. இன்றும் அவ்வாய்ப்பு முயன்றால் கிடைக்கக்கூடியதே.

## 105. நல்குரவு

நுகரப்படுவன எதுவுமின்றி வருந்தும் வறுமை.

**1041. இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது.**

பசி வாட்டும் வறுமை போலக் கொடியது யாதென்றால், வறுமையைப் போலக் கொடியது வறுமையேயன்றிப் பிறிதில்லை. வறுமைக் கொடுமைக்கு ஒப்புமை சொல்லப் பிறிதொன்று இல்லை.

**1042. இன்மை எனஒரு பாவி மறுமையும்**
**இம்மையும் இன்றி வரும்.**

நுகரப்படுவன எதுவுமே இல்லாத வறுமை என்னும் ஒப்பில்லாத மிகக்கொடிய பாவி, ஒருவனுக்கு மறுமையிலும் இம்மையிலும் எவ்வித நன்மையும் இல்லாமல் போகுமாறு வந்துசேரும். வறுமையால் தவறுகள் செய்ய நேரும்; அதனால் இருமையும் பாழாகும்.

**1043. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக**
**நல்குரவு என்னும் நசை.**

நல்குரவு (வறுமை) என்று சொல்லப்படும் ஆசை தன்னை அடைந்தாரது தொன்றுதொட்டு வரும் குடிச்சிறப்பினையும் அதற்கேற்ற இனிய விழுமிய மொழி பேசும் பண்பினையும் ஒருங்கே கெடுக்கும். குடிச்சிறப்புக்குப் பொருந்தாத செயல்களும் பேச்சுகளும் உளவாகும். நசை (ஆசை) யுள்ள இடத்தேதான் வறுமையுளதாகலின் நசையையே நல்குரவு என்றார். இது ஆசைகளால் வரும் வறுமை, கூழுக்கு உப்பில்லை என்பது முதல் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பது வரையிலான, ஆசை பற்றிய வறுமைகள்.

**1044. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த**
**சொற்பிறக்கும் சோர்வு தரும்.**

நற்குடியிலே பிறந்தவர்களிடத்திலும் வறுமையானது தமக்கு இழிவுதரும் சொற்களைப் பேசும்படியான மனச்சோர்வை உண்டாக்கும். ஈ என இரந்தும் கடன் கேட்டும் தமக்கு இழிவுதரும் சொற்களைப் பேசுவர். விழுமிய பேச்சைப் பேசவிடாதது மட்டுமன்றி, இழிந்த சொற்களைப் பேசவும் வைக்கும்.

**1045. நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்**
**துன்பங்கள் சென்று படும்.**

வறுமை எனப்படும் கடுந்துன்பம் ஒன்றினுள்ளே, பலவகைப்பட்ட துன்பங்களும் உடன்வந்து குவியும். கடன், நோய், வசை எனப் பல துன்பங்கள் வறுமையுடன் கூடி வரும்.

1046. **நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.**

வறுமை வாய்ப்பட்டவர் நல்ல மெய்ம்மை சார்ந்த பொருள்களை, நன்கு சிந்தித்துப் பேசினாலும், அவரது பொருளுள்ள பேச்சு பொருளற்றதாய் எண்ணப்பட்டுக் கவனிப்பாரற்றுப் போகும். ஏழை சொல் அம்பலம் ஏறாது.

1047. **அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.**

அறநெறியோடு பொருந்தாத வறுமை ஒருவனிடம் ஏற்பட்டால், அவன் யாராலும் மதிக்கப்படமாட்டான்; தன்னை ஈன்ற தாயாலும் அவன் அயலான்போலப் பார்க்கப்படுவான். நல்லவர், கற்றறிந்தார் வறுமை வேறு எனப் பிரிப்பதற்காக, இதனை 'அறம் சாரா நல்குரவு' என்றார். தீயன செய்து வறுமைப்படுபவர் இரக்கத்திற்குரியவர் அல்லர்.

1048. **இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.**

நேற்றும் வந்து என்னைக் கொன்றது போன்று துன்பத்தைச் செய்த நல்குரவு, இன்றும் என்னிடம் வருமோ? வந்தால் என்ன செய்வேன்? வறுமையுற்றவன் கூற்றாகக் கூறப்பட்டுள்ளது. வறுமை ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு யுகமாக்கித் துன்புறுத்தும். ஒன்றுமில்லாததை 'நிரப்பு' என்பது மங்கல மொழியால் கூறுவது.

1049. **நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது.**

மந்திரம், பச்சிலை மருந்துகளைப் பயன்படுத்தி ஒருவன் நெருப்பினுள்ளே கிடந்து உறங்கவும்கூடும். ஆனால் வறுமையுற்ற விடத்துச் சிறிதளவுகூடக் கண்ணை மூடி உறங்குதல் இயலாததாகும். நெருப்பினும் கொடிது வறுமை.

1050. **துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்புக்கும் காடிக்கும் கூற்று.**

நுகரப்படும் பொருள்கள் எதுவுமே இல்லாதவர்கள், முற்றத் துறப்பதே நல்லது. அங்ஙனமாகவும், அவர்கள் முற்றத் துறவாது உயிரோடு இருத்தல் மற்றவர்களது வீட்டில் உள்ள உப்புக்கும் காடித் தண்ணீர்க்கும் கூற்றாக இரந்துண்பதற்காகும்.

மானவுணர்வைத் தூண்டி முயற்சி மேற்கொள்ள வைக்கும் முறை இது. துவரத்துறத்தல் - முற்றும் துறப்பது; உடம்பும் மிகை என்று தீரத் துறப்பது. 'இலம் என்று அசைஇ' (சோம்பி) இருப்பவனைப் பார்த்து, 'போ, அதுதான் ஒன்றுமே இல்லையே; பிறரிடும் உப்புக்கும் காடித் தண்ணீர்க்கும் எமனாக உயிர் வாழவும் வேண்டுமா' எனக் கேட்கிறார். இக்கடைசிக் குறள் முயற்சியின்றி வறுமைப்பட்டவனைக் கடிந்து கூறுவது.

## 106. இரவு

பிறரிடம் இரந்தும் உயிர் வாழும் எல்லைகளைக் காட்டுதல்; மானத்திற்குக் கேடு தராத இரவு (யாசித்தல்). இது உலகில் இரக்கும் சூழலே வராது என்று கூற முடியாது. அது குறிக்கோளாகலாம். நடைமுறை ஆகாது. அந்நிலையில் என்ன செய்யலாம் என விளக்குவது இது.

**1051. இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்**
**அவர்பழி தம்பழி அன்று.**

இரந்து கேட்பதற்குத் தக்க ஈகையாளரைக் கண்டால், அவரிடம் இரந்து கேளுங்கள். ஒருவேளை, அத்தகுதியுடையவர் தாமும் தம்மிடம் இல்லையென்று மறைப்பார்களாயின் அது அவர்க்குப் பழியாகுமேயல்லாமல் இரப்பவர்க்குப் பழியாகாது.

**1052. இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை**
**துன்பம் உறாஅ வரின்.**

ஒருவர் இரந்து கேட்ட பொருள்கள், ஈகின்றவரது நல்லியல்பு காரணமாக முன்னுணர்ந்து தரப்படுதலின் சிறு துன்பமுமின்றி வருமானால் அவ்வாறு இரத்தலும் அவருக்கு இன்பம் தருவதொன்றாகும்.

**1053. கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று**
**இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து.**

மறைத்தலை யறியாத நெஞ்சினையுடைவர்களாய், பொருள் ஈட்டுதல் பிறர்க்கு ஈந்து வாழ்வதற்கே எனும் கடப்பாட்டினையும் அறிந்தவர்களின் முன்னே நின்று ஒன்றை இரத்தலும் ஓர் அழகினையுடையதாகும்.

இருவர் மனமும் மகிழ்தலால் அக்காட்சி அழகுடையதாகிறது. சங்கப் புலவர்கள் வள்ளல்கள் முன்நின்று பாடிய பாக்கள் நினைவு வருகின்றன. அவை அழகுணர்ச்சியைத் தூண்டுவதை, இன்று அப்பாடல்களைப் படித்து உணரலாம்.

**1054. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்**
**கனவிலும் தேற்றாதார் மாட்டு.**

தமக்குள்ளதை மறைப்பதற்குக் கனவிற் கூட அறியாதவர்களிடத்தில் சென்று ஒன்றை இரப்பதும், வறியவர்க்கு ஒன்றை ஈதலே போல மகிழ்ச்சி தருவதாகும். கொடுக்க நினைப்பார்க்கு ஒரு வாய்ப்புத் தருதலின் 'ஈதலே போலும்' என்றார்.

**1055. கரப்பிலார் வையகத்து உண்மையால் கண்ணின்று**
**இரப்பவர் மேற்கொள் வது.**

வறுமையாளர் ஈபவர்தம் முன்னே நேர் நின்று இரத்தலை மேற்கொள்வது, தம்மிடம் உள்ளதை மறைக்காமல் கொடுப்பார் சிலர் உலகத்தில் உள்ளதனாலேதான்!

**1056. கரப்பிடும்பை யில்லாரைக் காணின் நிரப்பிடும்பை**
**எல்லாம் ஒருங்கு கெடும்.**

தம்மிடம் உள்ளதை மறைத்தல் என்பது உளைச்சல் தரும் ஒரு மனநிலை. அத்துன்பம் இல்லாதவரைக் கண்டால், அவ்வாறு கண்டவுடனேயே இரப்பவர்க்கு வறுமையால் வந்த துன்பமனைத்தும் ஒருங்கே கெடும்.

**1057. இகழ்ந்தெள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்**
**உள்ளுள் உவப்பது உடைத்து.**

ஈபவர்கள் இரப்பவரை இகழ்ந்தும் எள்ளி நகைத்தும் பேசிப் பின் கொடுப்பதுண்டு. அவ்வாறு இழிவாக அவமதித்துப் பேசாது ஈபவர்களைக் கண்டால், இரப்பவரது உள்ளம் மகிழ்ந்து, உள்ளுக்குள்ளே உவக்கும் தன்மையுடையதாகும்.

**1058. இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்**
**மரப்பாவை சென்றுவந் தற்று.**

உலகில் வறுமையுற்று இரப்பவர்கள் ஒருவருமே இல்லையானால், குளிர்ந்த இடத்தையுடைய பெரிய ஞாலத்திலுள்ளவர்களின் போக்கு வரவுகள், உயிரில்லாத மரப்பாவைகள் உள்ளே கட்டிய கயிற்றால் இயக்கப்பட்டுச் சென்று வருவதைப் போலாகும்.

**1059. ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்**
**மேவார் இலாஅக் கடை.**

ஒன்றை ஒருவர்பாற் சென்று இரந்து கேட்டுப் பெறுதலை விரும்புவார் இல்லையென்றால், ஒன்றைக் கொடுத்து மகிழ விரும்புவார்க்கு அவ்வாறு

கொடுத்துப் பெருமிதமாக விளங்கித் தோன்ற எண்ணும் தோற்றம் எவ்வாறு உண்டாகும்?

**1060. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை**
**தானேயும் சாலும் கரி.**

கேட்டதை ஒருவன் ஈயாதபொழுது, இரப்பவன் 'இவன் எனக்கு ஈந்திலனே' என்று ஈபவன்மேல் கோபம் கொள்ளுதல் கூடாது. செல்வம் வேண்டிய சமயத்தில் உதவாது என்பதற்குத் தனக்கு ஏற்பட்டுள்ள வறுமைத் துன்பமே சான்றாகும்; வேறு சான்று வேண்டாம். தான் வறுமைப்பட்டுத் துன்புறுவதே, தன் செயலுக்குச் சான்றாகும்போது, மற்றவர் மீது கோபம் வேறு எதற்கு என்பது குறிப்பு.

## 107. இரவச்சம்

மானத்திற்குக் கேடு தரும் இரத்தலுக்கு அஞ்சுதல், வறுமையைப் போக்க வழியறியாதபோது, இரத்தலையும் மானக்கேடின்றிக் கைக்கொள்க என்றவர், இங்கு எவ்வாற்றானும் இரவாமல், முயற்சி செய்து உழைத்தே வாழுமாறு வற்புறுத்துகிறார். இரவு அதிகாரம் மனிதம் நேயம் பற்றியது. இது தன் முயற்சித் தூண்டுதல். தன் முயற்சிக்கு அப்பாற்பட்ட சூழ்நிலை இரவு; எச்சூழலிலும் தன் முயற்சிக்கே முதலிடம் தருக என்பது இது.

**1061. கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்**
**இரவாமை கோடி உறும்.**

தம்மிடமுள்ளதை மறைக்காமல் மனம் மகிழ்ந்து கொடுக்கும் பண்புடைய, கண்போலச் சிறந்தவர்களிடத்திலும் சென்று நின்று ஒருவன் இரவாமல் தான் அடைந்த வறுமையுடன் போராடுதல், அங்ஙனம் இரந்து வாழ்வதைவிடக் கோடி மடங்கு மேன்மையுடையதாகும்.

**1062. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்.**

இவ்வுலகத்தைப் படைத்த இறைவன், இங்கு முயன்று உயிர் வாழவே அனைத்தும் அமைத்துள்ளான். அல்லாமல், இரந்தும் உயிர் வாழ்தலை விதித்துள்ளான் என்பது உண்மையானால், அங்ஙனம் படைத்த அவ்விறைவன் தானும் அவ்விரவலனைப்போல அலமந்து திரிந்து கெடுவானாக. இறைவன் அங்ஙனம் படைக்கவில்லை என்பது கருத்து.

இறைவனே அவ்வாறு படைத்துவிட்டான்; இரப்பவன் தலைவிதி அது என்று கூறுவாரை நோக்கியது இது.

1063. **இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்**
**வன்மையின் வன்பாட்டது இல்.**

வறுமையால் வரும் கடுந்துன்பங்களை முயன்று உழைத்து நீக்கக் கருதாது, இரந்து நீக்க முயல்வேம் என்று கருதும் வன்கண்மை மிக்க மனம் போல, வலிய முரட்டுத்தனம் பிறிதொன்றில்லை. இரந்தே தீர்வதென அடம்பிடிப்பது தவறு.

1064. **இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்**
**காலும் இரவொல்லாச் சால்பு.**

நுகர வேண்டும் பொருள்கள் எதுவுமின்றி வறுமை மிக்க காலத்தும் பிறரிடம் சென்று இரப்பதற்கு உடம்படாத சால்புடைமை இடமகன்ற உலகமெல்லாம் ஒருங்கிணைந்தாலும் அவற்றுள் அடங்காத பெருமையுடையதாகும். வசதியின்மையை 'இடமில்லையே, என் செய்வது' என்பது உலகநடை.

1065. **தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது**
**உண்ணலின் ஊங்கினியது இல்.**

தெளிந்த நீர்போலும் அடப்பட்ட அரிசிக் கஞ்சியேயாயினும், தன் முயற்சியால் தான் பெற்றதை உண்ணுவதே இனியது; அதனிலும் மிக்க இனிமையுடையது பிறிதில்லை. மான உணர்வுடன் வாழ வழிகாட்டுவத இது.

1066. **ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு**
**இரவின் இளிவந்தது இல்.**

தனக்கன்று, பசுவிற்கு நீர்வேண்டும் என்று இரப்பது அறமெனக் கருதி, ஒருவன் இரந்து சொல்லிக் கேட்டாலும் அங்ஙனம் கேட்ட நாவினுக்கு அவ்வாறு இரத்தலைவிட இழிவு தருவது பிறிதொன்றில்லை. சிலசமயம் இரத்தலும் அறத்திற்பாற்படும் என்பவரை நோக்கிய குறள் இது.

1067. **இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்**
**கரப்பார் இரவன்மின் என்று.**

'அன்பர்களே! நீவிர் வறுமையால் இரந்தே தீர வேண்டுமானால், தமக்குள்ளதை ஒளிப்பாரிடம் இரவாதீர்கள் என்று சொல்லி, யான் இரப்பவர்களையெல்லாம் இரந்து கேட்டுக் கொள்வேன். மானம் அழிய இரத்தல் கூடாது என்பதை ஆசான் தன் கூற்றாகக் கூறி வேண்டுகிறார்.

1068. **இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்**
**பார்தாக்கப் பக்கு விடும்.**

வறுமை என்னும் கடலைக் கடக்க, வறியவர்கள் ஏறிய 'இரவு' (யாசித்தல்) என்னும் பாதுகாப்பற்ற தோணி, அக்கடலிடையே ஈயாதவரின் 'உள்ளத்தை ஒளித்தல்' எனும் வலிய பாறையில் மோதி, அதனால் தாக்கப்படுமாயின் உடைந்துபோய்விடும்.

**1069. இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள**
**உள்ளதூஉம் இன்றிக் கெடும்.**

உடையவர்முன் இல்லாதவர் சென்று இரந்து நிற்கும் கொடுமையை நினைத்தால், உள்ளம் கரைந்து உருகும். தம்மிடம் உள்ளதை மறைப்பவர் 'இல்லை' என்று சொல்லும் 'கரவை' நினைத்தால், உருகுமளவு தானுமின்றி அவ்வுள்ளமே அழிந்து போகும்.

**1070. கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்**
**சொல்லாடப் போஒம் உயிர்.**

உள்ளதை ஒளிப்பவர் 'இல்லை' என்று சொல்லியுமே அதைக் கேட்ட இரப்பவர்தம் உயிர் போய்விடுகின்றது. ஆனால் அச்சொல்லைச் சொல்லிய கரப்பவர்தம் உயிரோ போகாமல் நிற்கிறது! எங்கு போய் ஒளிந்து கொள்கிறதோ? தெரியவில்லையே!

'உயிர்போதல்' என்பது செயலற்று நிற்பது. கேட்டாரைக் கொல்லும் ஆற்றலுடைய சொல், சொல்வாரைக் கொல்லாது போவது வியப்பே என்பதாம். இரப்பதைவிடக் கரப்பது (ஒளிப்பது, இல்லையென்பது) கொடிதென்பது கருத்து.

## *108. கயமை*

நற்குணங்கள் எதுவுமிலராய கீழ்மக்களது தன்மை.

**1071. மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
**ஒப்பாரி யாம்கண்டது இல்.**

கயவர்கள் புறவடிவத்தால் முழுவதும் மக்களைப் போலவே காணப்படுவர். அக்கயவர்களும் மக்களும் ஒத்திருக்கும் ஒப்புமையைப் போல உலகத்தில் வேறு இரண்டு பொருள்களிடையே ஒப்புமையுள்ளதை யாம் கண்டதில்லை.

இவர் கயவர், இவர் நல்லவர் என வேறுபாடு வெளிப்படையாகத் தெரியுமாறு, அவர்கள் தோற்றத்தில் ஏதாவது வேற்றுமையிருந்தால், நாம் விழிப்பாயிருக்கப் பேருதவியாகும்.

1072. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர்.

உலகத்தில் நன்மைகள் யாவை என அறிகின்றவர்கள் அவற்றைக் கருத்துடன் பேணும் கவலையுடையவர் ஆவர். அக்கவலையற்ற கயவர் அவரைவிடத் திருவுடையவராவர். எவ்வாறெனில், கயவர்களுக்குக் கருத்துடன் பேணும் கவலையெதுவுமில்லாததால் அவர்கள் தம் நெஞ்சத்தில் எவ்வகைத் துன்பமும் இலராவர். பொறுப்பற்றவருக்குக் கவலை ஏது? அவர்களைத் 'திருவுடையர்' (நல்வினை உடையவர்) என்பது எள்ளல் குறிப்பு.

1073. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

தேவர்களைப் போலவே, தம்மைக் கட்டுப்படுத்துவாரின்றித் தாம் விரும்பிய வண்ணமெல்லாம் மனம்போன போக்கில் நடக்கின்ற காரணத்தினால், கயவர்களும் அத்தேவர்களைப் போன்றவர்களே ஆவார்கள். கண்டபடி அலையும் கயவர்கள் இவர்கள். எள்ளல் சுவைபடக் கூறுகிறார்.

மனம்போன போக்கில் நினைத்தபடியெல்லாம் நடக்கும் கயவர்களுக்குக் கவலையே இல்லை. அவர்களைத் 'திருவுடையர்' தேவர்கள் என்றெல்லாம் எள்ளி நகையாட வைக்கின்றார். புராணங்கள் தேவர்களைப் பற்றிக் கூறும் கற்பனைகளை, நேரில் காணும் கயவர்களுடன் ஒப்பிடுவது சிந்திக்கத்தக்கது'

1074. அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.

தம்மைவிடக் கீழான, அறிவிலாப் பட்டிமாடு போல்வாரைக் கண்டால், கீழ்மக்கள் அவரினும் தாம் மேம்பட்டவரென்று காட்ட முயன்று, தருக்கிப் பேசி இறுமாப்புக் கொள்வர்.

கீழ்மக்களிடையே ஒரு பழக்கம் காணலாம். தங்களுக்குள் தாம்தாம் பெரியவர் என்று போட்டிபோட்டுத் தருக்கிப் பேசி மகிழ்வார்கள். செருக்குக் கொண்டு அலையும் கயவர்கள் இவர்கள்.

1075. அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாஉண்டேல் உண்டாம் சிறிது.

கீழ்மக்களிடம் ஆசாரம் (ஒழுக்கம்) ஏதாவது காணப்படுகிறதென்றால் அதற்குக் காரணம், அவர்கள் உள்ளத்தினுள் உள்ள அச்சமே. அஃதல்லாமல் வேறு காரணமெதுவும் உள்ளதெனில், அது அவர்கள்

ஏதேனும் அடைய வேண்டுமென எண்ணும் ஆசை காரணமாகச் சிறிது உண்டாம்.

மேன்மக்கள் ஒழுக்கமாக நடக்க வேண்டுமெனத் தற்கட்டுப்பாட்டுடன் நடப்பார்கள். கீழ்மக்களோ பெரிதும் அச்சத்தால் அல்லது ஏதாவது ஆசையால் ஒழுக்கமுடையவர் போல் சிலசமயம் நடக்க முயல்வர். ஆசாரம் - புறநடிப்பு என்பதைச் சுட்டுகிறது. ஒழுக்கமுள்ளவர்போல நடிக்கும் கயவர்கள் இவர்கள்.

**1076. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட**
**மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்.**

தாம் கேள்விப்பட்ட மறைபொருள்களால் இரகசியங்களைத் தாங்கமுடியாத சுமைபோலத் தாங்கிக் கொண்டு சென்று, தாமே மற்றவர்களுக்குச் சொல்லுதலால், கயவர்கள் அறையப்படுதலால் தன்னிருப்பை உலகிற்கெல்லாம் அறிய வைக்கும் பறைக்கு ஒப்பாவார்கள்.

உய்த்து உரைத்தல் - தாங்கமுடியாத சுமை போலத் தாமே தூக்கிச் சென்று மற்றவர்களைக் கூப்பிட்டுச் சொல்லுதல். இரகசியங்களைப் பரப்பும் கயவர்கள் இவர்கள்.

**1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்**
**கூன்கையர் அல்லா தவர்க்கு.**

தம் கன்னத்தைத் தாக்கி உடைக்கும்படியான முறுக்கி வளைந்த கையையுடையவர் அல்லாதவர்களுக்குக் கயவர்கள் எச்சிற் கையைக் கூட உதறமாட்டார்கள்.

கூன்கை - மோதி அடிப்பதற்குத் தோதாக முறுக்கி வளைத்த அகங்கை. செல்வமிருந்தும் கருமியாய் வாழும் கயவர்கள் இவர்கள்.

**1078. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ்.**

வறியவர்கள் சென்று தம் குறைகளைச் சொன்ன அளவிலே சான்றோர்கள் இரக்கப்பட்டு உதவுவார்கள். ஆனால் கீழ்மக்களோ கரும்பு நன்கு இறுக்கிப் பிழிந்தவழியே பயன்படுவது போல, தம்மை நையப்புடைத்து நெருக்கிய வழியே பயன்படுவர். இவர்கள் அச்சத்தால் உதவுவார்களேயல்லாமல், ஆர்வத்தால் உதவாத கயவர்கள்.

1079. **உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண வற்றாகும் கீழ்.**

பிறர் உயர்ந்தன உடுத்தலையும் நல்லன உண்டலையும் கண்டவழி, கீழ்மக்கள் அவற்றைப் பொறாமல் அவரிடம் குற்றம் எதுவுமில்லையாகவும், பழி தரும் பொய்யான குற்றத்தைச் சுமத்த முயலும் இயல்புடையவராவர். எடுத்ததற்கெல்லாம் பொறாமைப்பட்டுப் பழிதூற்றும் கயவர்கள் இவர்கள்.

1080. **எற்றிற் குரியர் கயவர்ஒன்று உற்றக்கால்**
**விற்றற்கு உரியர் விரைந்து.**

கயவர்கள் தமக்கு ஒரு துன்பம் வந்தவிடத்து, அதனையே காரணமாகக் காட்டி விரைந்து தம்மையே பிறர்க்கு விற்றற்கு உரியர்; அதுவன்றி அவர்கள் வேறு எதற்குரியர்?

முயற்சியின்றிப் பிறர்க்கு அடிமையாவர். தம்மைவிற்றல் - அடிமையாதல். தன்மானத்தைவிட்டுப் பிழைக்க முயலும் கயவர்கள் இவர்கள்.

# காமத்துப்பால்

ஆணும் பெண்ணுமாய்க் கூடிக் குடும்பமாய் வாழும் இல்லறச் சிறப்பைத் தொடக்கத்தில் கூறிய திருவள்ளுவர், அங்ஙனம் வாழ்தற்கு அடிப்படையான காதல் நிகழ்வுகளை இக்காமத்துப்பாலில் கூறுகின்றார். தலைவனும் தலைவியும் முதன்முதலில் கண்டு காதல் கொள்வது மானுட வாழ்வின் தனி அனுபவமாகும். அதன் தொடர்ச்சியாக உள்ளத்தாலும் உடலாலும் இணைந்து இன்பம் துய்க்கும் நெறிமுறைகளை, அகத்திணை மரபு அடிப்படையில், தலைவன் தலைவி தோழி கூற்றுக்களில் வைத்து, காதல் மாந்தர்க்கு வழிகாட்டுவார் போலக் கூறிச் செல்கிறார். ஒருவகையில் பாலியல் சார்ந்த உளவியற்கல்வி போலப் பயன்படுமாறுளது இது. காம இன்பம் அளவான் அமைந்து, கட்டுக்குட்படுதல் பேரின்ப நெறிக்கும் வழிகாட்டும் என்பதே தமிழர் நெறி. எனவே அதனைச் 'சிற்றின்பம்' எனப் புறந்தள்ளாது, உலக நீட்சிக்கும் மன்பதை வாழ்வுக்கும் அடிப்படை வேர் அதுவென உணர்ந்து பட்டறிவுப் பாங்குடன் சுவை தவழப் பகர்கின்றார். நெறிகளுக்குட்பட்ட புலன் இன்ப நுகர்வுகளைச் சிறுசிறு நாடகங்கள் போல, ஒவ்வொன்றையும் புனைந்து கற்பனை கலந்த இன்பப் பெருமிதத்தோடு கூறியுள்ளார். இம்முறை, உலகக் காதல் இலக்கியத்தில், இதற்கொரு தனியிடம் நல்குவதாகும். ஊடியும் உரையாடியும் பழகியும் உள்ளத்தால் அனுபவிக்கும் இன்பம் ஒருவகை; தழுவியும் கூடியும் உடலால் ஐம்புல இன்பத்தை அழுத்தமுறத் துய்ப்பது ஒருவகை. இவ்விரண்டையும் நாடகக் காட்சிகளாய் விரித்துக் கண்முன்னர் காட்டிக் கருத்தில் ஏற்றுகிறது வள்ளுவம். உண்டது செரித்ததா என அறிந்து, கால இடைவெளிவிட்டு, பிறகு பசித்து வேட்கை மீதூர்த்து, ஆசையால் ஏங்கி நின்று புசித்தால் அவ்வாறு உண்ணுவதில் பெறுமின்பம் ஈடற்றது. உடல்நல வழியுமாகும் அது. அதுபோலக் காம இன்பத்தையும் பிரிந்து நின்று, இடைவெளிவிட்டு, வேட்கை மீதூர்ந்து புலவிவகைகளால் மன உந்துதல்களை வளர்த்து, புணர்ச்சி விதும்பிப் பின் கூடுதல் வேண்டும். தீரப் பசித்தவன் ஆர உண்பதுபோலக் காமஇன்பத்தை முழுமையாய்த் துய்க்கும் நெறியும் முறையும் இதுவென உணர்த்துகிறது காமத்துப்பால். காமம் - காதலால் பெறும் இன்பம்.

# களவியல்

திருமணமாகிப் பல்லாண்டுகளான கணவன் மனைவியர் கூடத் தம் காதல் பார்வைகளை, பேச்சை, நுகர்வைப் பிறர் அறியாதவாறு மேற்கொள்ளுதல் தமிழர் பண்பாடாகும். அதிலும் தொடக்கத்தில் நிகழும் காதல், முன்பின் அறியார் இருவர்பால் நிகழும்போது, மறை பிறர் அறியாவாறு நிகழும். பார்வையால், பேச்சால், உள்ளத்தால் இணையும்போதும் உடலால் கூடும் போதும் அடையும் இன்பங்கள் அவர்கள் தமக்குத் தாமே அனுபவிப்பனவாம். இங்ஙனம் பிறர் அறியா இன்ப நுகர்வுகளாதலின் இவை 'அகம்' எனப்பட்டன. அகம் - மறை, இரகசியம், தம்முள் நுகர்வது. எனவேதான், திருமணத்திற்கு முந்தைய காதலும் 'களவு' எனப்பட்டது. களவியல் நிகழ்வுகள் விறுவிறுப்பான நாடகக் காட்சிகள் போல, விரைந்து ஏழு இயல்களில் கூறி முடிக்கப்படுகின்றன. தலைவன் தலைவியின் அழகைக் கண்டு மயங்குதல், அவள் குறிப்பறிந்து சம்மதத்தை யூகித்தறிதல்; இருவரும் தனித்துக் கூடி ஐம்புல இன்பம் துய்த்தல்; கூடி மகிழ்ந்த தலைவன் அந்நிலையில் தலைவியது அழகைப் பாராட்டுதல்; இத்தகைய இன்பம் தரும் காதலை இருவருமே சிறப்பித்துரைத்தல்; இருவரும் நாணத்தைவிட்டு வருந்துதல்; ஊரார் கூறும் பழிச்சொற்களாம் அலர் மிகுவதை இருவரும் கூறுதல் என்பன அவை. இங்ஙனம் கூறுவன அனைத்தும் திருமணத்தை நோக்கிய களவொழுக்கமே. இறுதியில் திருமணம் நிகழ்வது, இந்நாடகத்தில் கூறப்படவில்லை. அதனை உய்த்துணர வைக்கின்ற முறை, இலக்கியப் படைப்புக் கலைப் பாங்காகும்.

# 109. தகையணங்குறுத்தல்

தலைவியது அழகு, அவளைக் கண்டு காதல் கொண்ட தலைமகனிடம் அவள் குறிப்பறியத் தவிக்கும் வேட்கைத் துன்பத்தை விளைவித்தல். தகை - அழகு. அணங்குறுத்தல் - காதல் துன்பத்தை உண்டாக்குதல். அணங்கு - பெண் தெய்வம். தீண்டி வருத்தும் தெய்வம். அதைப்போல் காதலியது அழகு வருத்துவது, 'அணங்கு உறுத்தல்' எனப்பட்டது.

**1081. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.**

இவள் கண்டாரை வருத்தும் தெய்வமகளோ? சாயலைப் பார்த்தால் ஒருவகை அழகிய மயிலோ? காதில் அணிந்திருக்கும் கனத்த குழையைப் பார்த்தால் மானுடப் பெண்தானோ? துணியமாட்டாது என் மனம் மயங்குகிறது! இளம் வயதில், இளைய உள்ளத்தில், முதற் சந்திப்பில் தோன்றும் காதல் உணர்ச்சி வெளிப்பாடு இது.

**1082. நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு**
**தானைக்கொண் டன்னது உடைத்து.**

இயல்பான பார்வையினாலேயே என்னை வருத்தும் இயல்புடையாள் இவள். இப்போது என் பார்வைக்கு எதிர்ப்பார்வை பார்க்கும் அவள் பார்வை, இயல்பாகவே கண்டாரை வருத்தவல்ல அணங்கு ஒன்று, தாக்குதற்குச் சேனையையும் கூட்டி வந்தது போலாயிற்று. அணங்கு - காதலை விளைவிக்கும் பெண்ணைத் தீண்டி வருத்தும் தெய்வமாகக் குறிக்கும் படிமம்.

**1083. பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்**
**பெண்டகையால் பேரமர்க் கட்டு.**

இதுகாறும் எமன் என ஒன்றிருப்பதாகக் கேள்விப்பட்டுள்ளேனே தவிர, நேரில் பார்த்ததில்லை. இப்போதுதான் அது பெரிதாய்ப் போர் செயும் கண்களையுடைய அழகிய பெண்மை தவழும் வடிவிலுளதென்று தெரிந்துக் கொண்டேன். பேர் அமர்க் கட்டு - பெரிதாய்ப் போரிடும் கண்களையுடையது.

**1084. கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப்**
**பேதைக்கு அமர்த்தன கண்.**

பெண்மை பொலியும் அழகு மிக்க இவ்விளையவளது கண்கள், கண்டாரது உயிரை உண்ணும் தோற்றமுடைமையினால், போரிடுவனபோல் மதர்த்துக் காணப்படுகின்றன.

1085. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.

இவ்விளையவளது கண்பார்வை கொல்வது போல் வருத்துவதால் கூற்றமோ? கருவிழியோடுவதால் கண்தானோ? மருளுவதால் மானோ? இம்மூன்று தன்மைகளையும் இது ஒன்றே உடையதாயிருக்கிறது.

1086. கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்இவள் கண்.

இவளது வளைந்த புருவங்கள், மேலும் வளையாமல் நின்று, கண் பார்வையை என்மீது கூர்மையாய்ப் பாய்ச்சவிடாமல் தடுக்குமாயின், இவள் கண்கள் நடுங்கும்படியான துன்பத்தை எனக்குச் செய்ய மாட்டா. ஆனால் அவை வில்போல் மேலும் வளைந்து கண் பார்வையைக் கூர்மையாய்ப் பாய்ச்சவே உதவுகின்றன.

1087. கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்.

இப்பெண்ணிது சாயாத இளம் மார்பகங்களின் மேலிட்ட முன்தானை, மதயானையின் கண்ணை மறைக்க அதன் மேலிட்ட முகபடாம் போலும். மறைத்தலால் பிழைத்தேன்.

1088. ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு.

போருக்கு வராமல், கேள்விப்பட்டே பகைவர்கள் அஞ்சும்படியான என் பெருமை மிக்க போர் வலிமை, அந்தோ! இவளது ஒள்ளிய நெற்றி ஒன்றினுக்கே தோற்றுப் போனதே. படை 'உடைதல்' - போர்க்களச் சொல். தோற்றப்படை சிதறிப் பின்வாங்குவது அது. அஞ்சாத மனம் அழகுகண்டு அஞ்சி உடைந்து போனது.

1089. பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து.

பெண்மானைப் போல மருளும் இளம்பார்வையும் இயல்பான நாணமும் இவளை அழகு செய்கின்றன. இவை இருக்கவும் பொருத்தமற்ற பிற அணிகளைத் தந்து புறத்தே அழகுபடுத்துவது ஏனோ?

1090. உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று.

காய்ச்சப்பட்ட மது, உண்டவரை மட்டுமே மகிழ்விக்கும். அல்லாமல், காமத்தைப் போலக் கண்ணால் கண்டவரையும் அது மகிழ்விப்பதில்லை.

## 110. குறிப்பறிதல்

ஒருவர் உள்ளக் குறிப்பை ஒருவர் அறிதல். அதையும் வெளிப்படையாக அன்றி, மறைமுகக் குறிப்பால் அறிதல். இருவர் மனமும் ஒன்றுபடுதல் இது.

1091. இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கு ஒன்றந்நோய் மருந்து.

இவளது மையுண்ட கண்களில் இரண்டு பார்வைகள் உள்ளன. ஒரு பார்வை நோயை உண்டாக்குகிறது; மற்றது அந்நோயைத் தீர்க்கும் மருந்தாகிறது. முதலில் அயலவர்போல் பார்க்கும்போது துன்பத்தையும் பிறகு பரிவுடன் பார்க்கும்போது இன்பத்தையும் விளைவித்தலால், பார்வை இருவகை எனப்பட்டது.

1092. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது.

யான் பாராத சமயம் பார்த்து என்னை இவள் பார்க்கும் கள்ளப் பார்வை எனக்குப் புலப்பட்டுவிட்டது. அது காம இன்பத்தில் செம்பாதி மட்டுமன்று; அதைவிடக் கூடுதலாகும். இனிக் கூடுதல் உறுதி என்பான் இவ்வாறு கூறுகிறான்.

1093. நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்.

அவள் என்னைப் பார்த்தாள்; பிறகு எதையோ நினைத்து நாணித் தலைகவிழ்ந்தாள்! இச்செயல், எங்கள் நட்புப் பயிர் வளர, அதனடியில் அவள் வார்த்த நீராயிற்று! அவள் தானும் காதலிப்பதைக் குறிப்பால் உணர்த்தி விட்டதால் அன்புப்பயிர் வளர ஏதுவாயிற்று. யாப்பு - அணை கட்டிய பாத்தி.

1094. யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

யான் அவளைப் பார்க்கும்போது அவள் என்னை எதிர்நோக்காது, நிலத்தைப் பார்க்கின்றாள்; அதையறிந்து நான் பாராதவன்போல நிற்கும் போது, அவள் என்னைப் பார்த்துத் தன்னுள்ளே மெல்லச் சிரித்துக் கொள்கின்றாள். தலைவியின் சம்மதக் குறிப்பைத் தலைவன் அறியும் சிறு நாடகம் இது.

1095. **குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்**
**சிறக்கணித்தாள் போல நகும்.**

தன் கருத்தை வெளிப்படக் காட்டி ஒருபோதும் நேரே பார்க்க மாட்டாள்; ஆனால் உள்ளக் கருத்தைக் குறிப்பால் காட்டி ஒரு கண்ணால் சுருக்கிப் பார்த்துத் தன் மகிழ்ச்சியைப் புலப்படுத்துவாள். சிறக்கணித்தல் - கண்ணைச் சுருக்கிப் பார்க்கும் ஓரப்பார்வை.

1096. **உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்**
**ஒல்லை உணரப் படும்.**

உறவில்லாதவர் போல் வெளியே ஒருவருடன் ஒருவர் பேசுவர் காதலர். அங்ஙனம் பேசினும் அப்பேச்சில் வெறுப்பில்லையென்பது அக்காதலர்களால் விரைந்து உள்ளூற உணர்ந்து கொள்ளப்படும். உடன்பாடில்லாவர் போல் பேசினும் உள்ளத்துள் உடன்பாடுண்டென்பது உடன்பட்டவர்களால் உள்ளத்துள் உணரப்படுமாம். காதல் நாடகக் காட்சிகளில் ஒன்று இது.

1097. **செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்**
**உறாஅர்போன்று உற்றார் குறிப்பு.**

சினமின்றியே சினங்கொண்டவர்போல் பேசிக் கொள்ளும் சிறுசொற்களும் பகையின்றியே பகைவர்கள் போல் பார்த்துக் கொள்ளும் பார்வைகளும் வெளியே உறவில்லாதவர்கள் போன்று காட்டிக்கொண்டு உள்ளே மனமொன்றிவிட்ட காதலர்களின் உட்குறிப்புள்ள செயல்களாகும்.

1098. **அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்**
**பசையினள் பைய நகும்.**

யான் பார்த்ததும் உள்ளம் நெகிழ்ந்து, ஓசைப்படாமல், மெல்லச் சிரித்தாள். அதனால் அசையும் கொடிபோலும் சாயலையுடைய என் காதலிக்கு, அச்சிரிப்பிலும் ஓர் அழகு உளதாயிருந்தது. காமக் குறிப்புத் தோன்றச் சிரித்ததால், அதிலும் ஒரு தனியழகு உளதாயிற்று.

1099. **ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்**
**காதலார் கண்ணே உள.**

தொடர்பில்லாதவர்போல நின்று, எல்லோரையும் பார்ப்பதுபோல் ஒருவரை ஒருவர் பொதுப்படப் பார்த்துக் கொள்ளுதல், உட்குறிப்புள்ள காதலர்களிடமே காணப்படும். பொதுப்படப் பார்த்துக்கொண்டாலும், உள்ளக் குறிப்பு அவ்விருவர்க்கு மட்டுமே புலனாகும்.

**1100. கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல.**

காதலன் கண்களிரண்டினொடும் காதலியின் கண்களிரண்டும் பார்வையால் ஒன்றுபடுமாயின் மேற்கொண்டு வாயினால் பேசிக்கொள்ளும் பேச்சுக்களால் எவ்விதப் பயனும் இல்லை.

## 111. புணர்ச்சி மகிழ்தல்

நம் வாழ்க்கையைப் பல தொகுதிகளாகப் பிரித்துவிடலாம். அதுபோல் காதல் வாழ்வு நாடகத்தையும் சில தொகுதிகளில் அடக்கிக் கூறி, அதன்மூலம் முழுமையை உணர்த்திவிட முயலும் ஆசான் திறம் அளவிடற்கரியது. முதன்முதற் கண்டு காதலில் மயங்கும் திறமெல்லாம் தகையணங்குறுத்தலில் அடங்கும். குறிப்பறிந்து மனம் ஒன்றுபட்டுப் பழகுவன குறிப்பறிதலில் அடங்கும். கூடி மகிழ்ந்து இன்பம் துய்ப்பன இப்புணர்ச்சி மகிழ்தலில் அடங்கும்.

**1101. கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்தொடி கண்ணே உள.**

கண்ணுக்கின்பம் காட்சி; செவிக்கின்பம் இசை; வாய்க்கின்பம் உணவு; மூக்கிற்கின்பம் மணம்; உடலுக்கின்பம் தொடுதலால் ஏற்படும் மென்மை பொருந்திய இனிமை. இவ்வைம்புல இன்பங்களாகிய கண்டு, கேட்டு, உண்டு, முகர்ந்து, தொட்டு அறியும் ஐந்தும் ஒரே சமயத்தில், வளையலணிந்த அவள் ஒருத்தியிடமே உளவாயின. கூடி மகிழ்ந்த மயக்கத்தில் வெளிப்பட்ட உணர்வு இது. ஐம்புல இன்பமும் ஒருசேரத் தருபவள் அவளே என்பதாம்.

**1102. பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**
**தன்நோய்க்குத் தானே மருந்து.**

நோய் தீர்க்கும் மருந்து, அதனிலிருந்து வேறாக இருக்கும்; வேறு எங்கிருந்தோ பெறப்படும். ஆனால் அழகிய அணிகளை அணிந்த இவளோ, என்னிடம் தான் உண்டாக்கிய நோய்க்குத் தானே மருந்தும் ஆயினாள்.

1103. தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.

தாம் விரும்பும் காதலியது மென்மையான தோள்களில் துயிலும் இன்பத்தைவிடத் தாமரை மலரைப் போன்ற கண்களையுடைய திருமாலது உலகந்தானும் இனிதாயிருக்குமோ? துறக்க இன்பமும் இதைவிட இனிதோ என்பது கண்கண்ட இன்பத்தின் சிறப்பை வலியுறுத்துகிறது.

1104. நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.

விலகிச் சென்றால் சுடுகிறாள்; நெருங்கிச் சென்றால் குளிர்கிறாள். இத்தகைய புதுமையான நெருப்பை இவள் எங்கிருந்து பெற்றாளோ?

1105. வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்.

பூச்சரம் சூடிய தழைத்த கூந்தலையுடைய இவளது தோள்கள் நாம் விரும்பியபொழுதில், விரும்பிய பொருள்கள் தாமே வந்து இன்பம் தந்தாற்போல மகிழ்ச்சி தருகின்றன.

ஐம்புல இன்பமும் ஒருங்கே தருபவள் என்றவன், இங்கு எப்பொருளை விழைகிறோமோ, அப்பொருள் போலவே இன்பம் தருபவள் என்று கூறுகின்றான். தோடு ஆர் கதுப்பு - பூச்சரம் சூடிய கூந்தல்.

1106. உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்.

தொட்டுத் தழுவிக்கொள்ளும் ஒவ்வொருமுறையும் உயிரைத் தவிர்க்கச் செய்யுமாறு உடலுடன் பொருந்துதலால், இவ்விளையவளது தோள்கள் அமிழ்தினால் செய்யப்பட்டுள்ளன.

காதல் வழிவரும் இக்காம இன்பம் உயிரைத் தளிர்க்கச் செய்யுமாம். உயிரைத் தளிர்ப்பது, உடல் தளிர்ப்பதில் புலனாகும்.

1107. தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

அழகிய மாந்தளிர் மேனியளாகிய இவளைத் தழுவிக் கொள்ளுதலால் பெறுகின்ற இன்பம் தமது சொந்த வீட்டிலிருந்து, தாமே தேடியதைப் பிறர்க்குப் பகுத்துக் கொடுத்து உண்டு மகிழும் இன்பம் போன்றதாகும். உள்ளத்தால் உணரும் இன்பம் இது.

தானே முயன்று தேடி, தனக்கென்று சொந்தமாய் வீடு கட்டி வாழ்ந்து, தனது செல்வத்தைப் பகிர்ந்துண்டு வாழ்வதன் இன்பம் உவமையாகக் கூறப்பட்டுள்ளமை கருதற்பாலது.

**1108. வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை**
**போழப் படாஅ முயக்கு.**

காற்றும் புக முடியாதபடி இடைவெளியின்றி இறுகத் தழுவிக் கொள்ளுதல் தம்முள் ஒருவரையொருவர் விரும்புகின்ற காதலர் இருவருக்கும் இன்பம் தருவதாகும்.

திருவள்ளுவர் இருவரும் ஒருவரை ஒருவர் விழையும் காதலையே திரும்பத் திரும்பக் கூறுகிற காரணம், காம இன்பத்தின் நிறைவு இதில் நூறு விழுக்காடு மனமொன்றிய காதலர்களிடையேதான் காணப்படும் என்பதாலாகும்.

**1109. ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்**
**கூடியார் பெற்ற பயன்.**

ஏதேனும் காரணம் கற்பித்துக்கொண்டு ஊடுதலும், அவ்வாறு ஊடுங்கால், ஊடல் நீங்குமாறு செய்ய முயலுதலும், ஊடல் நீங்குதலும், பின்னர்க் கூடி மகிழ்தலும் ஆகிய இவையே காம இன்பம் துய்க்குமாறு, காதல் கை கூடியவர் பெறும் பயன்களாகும்.

ஊடலுக்கும் உணர்தலுக்கும் முதலிடம் தருதல் காண்க. புணர்தல் மட்டுமன்று காம இன்பம். இடைவெளிவிட்டு இன்பம் துய்க்கும் நெறியே இவ்வாறு கூறப்படுகிறது. ஊடி உணர்ந்து, பின் கூடிப் பழகும் உள்ளக் கிளர்ச்சிதரும் அறிவுடைக் காதலர் வாழ்வாகும்.

**1110. அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு.**

நாம் ஒன்றை அறியுந்தோறும் அறியுந்தோறும் அதுபற்றி முன்பு நம்மிடமிருந்த அறியாமையே அறிந்து கொள்ளப்படுகிறது. அதுபோல, இவ்விளையாள் தரும் இன்பமும் கூடுந்தோறும் கூடுந்தோறும் புதுப்புதுச் சுவையுடையதாகிறது.

ஒண்தொடி, அணியிழை, கதுப்பினாள், பேதை, அரிவை, சேயிழை என இதுபோல் வருவன, காதலியது இளைமையைச் சுட்டும் தொடர்கள்.

## 112. நலம் புனைந்துரைத்தல்

கூடி மகிழ்ந்த தலைவன் தலைவியின் அழகை வியந்து பேசுதல். காதல் தொடக்கத்தில் களிப்பில் உள்ளம் மிதக்கும்போது கற்பனையுணர்வுகள் பூத்துக் குலுங்கும். தலைவனின் பேச்சுக்கள் இவை; தலைவி தன் மகிழ்வைக் குறிப்பால் காட்டுவாளேயல்லாமல் வாய்விட்டுப் பேச மாட்டாள்.

1111. **நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்**
**மென்னீரள் யாம்வீழ் பவள்.**

அனிச்சமலரே! மலர்களில் நீ மிக நல்ல, மென்மைமிக்க இயல்பினையுடையாய்! நீ வாழ்வாயாக! ஆயினும் எம்மால் விரும்பப்பட்ட இவள் உன்னைவிட மென்மைத் தன்மையுடையவள்!

அனிச்சமலர் முகர்ந்ததுமே வாடும் மென்மையுடையது; தலைவியழகை மிகுத்துக் கூறுமிது, கூடி மகிழ்ந்ததும் கூறியது. அந்தச் சமயம் யாருக்கும் அவ்வாறுதான் பாராட்டத் தோன்றும். கண்ணகியைக் கோவலன் பாராட்டுவதைச் சிலப்பதிகாரத்தில் காண்க. 'மோப்பக் குழையும் அனிச்சம்' (குறள் 90) மென்மைக்கு எடுத்துக்காட்டு.

1112. **மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்**
**பலர்காணும் பூவொக்கும் என்று.**

தாமரை, குவளை, நீலம் போலும் மலர்களைக் கண்டால், மனமே! நீ இவள் கண்கள், பலரும் பார்த்து மகிழும் அப்பூக்களைப் போலுள்ளனவே என்று வருந்துகிறாய்! எனக்கு மட்டும் உரியவளல்லவா இவள்?

காதலர் ஒருவருக்கொருவர் தனியுரிமை கொண்டாடுவதே உளவியலாகும். இவள் கண்கள் பலரும் பார்க்கும் பூக்களைப் போல இருப்பதைக்கூடப் பொறுத்துக் கொள்ள இயலவில்லையாம்.

1113. **முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்**
**வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.**

மூங்கில் போலத் திரண்ட தோளினையுடைய இவளுக்கு மேனி இளந்தளிர் நிறம்; முறுவலிக்கும் புன்னகையோ முத்துக்கள்; உடல் நறுமணம்; மைதீட்டிய கண்களோ வேல்கள்.

தளிர் தொடுதல்; முத்தம் சுவைத்தல்; மணம் முகர்தல்; கண்காட்சி - இவற்றுடன் செவியின்பமும் சேர ஐம்புல இன்பமாகும். 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல இன்பம்' (1101) என்றாள், அவை இவை என்பது இது.

**1114. காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்**
**மாணிழை கண்ணொவ்வேம் என்று.**

குவளை மலர்களுக்குக் கண் போன்றிருந்தாலும் காணும் ஆற்றலில்லை. காணும் ஆற்றலிருக்குமாயின், இவளது கண்களுக்குத் தாம் ஒப்பாக மாட்டோம் என்பதைக் கண்டு நாணித் தலைகவிழ்ந்து நிலத்தைப் பார்க்கும். பார்க்கமாட்டாமையால் செம்மாந்து வானை நோக்குகின்றன! மாணிழை, ஆயிழை, சேயிழை - என இளம் மகளிரைக் குறிப்பிடுவது இலக்கிய மரபு. இழை - இழைத்துச் செய்யும் பொன் அணிகள்.

**1115. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு**
**நல்ல படாஅ பறை.**

இவள் அனிச்சப்பூவை அதன் காம்புகளை அகற்றாமல் சூடிக் கொண்டுவிட்டாளே! அடடா! இனி இவள் இடைக்கு மங்கல வாத்தியங்கள் முழங்கா! இடை ஒடியப் போகிறது! இடை சிறுத்து ஒல்லியாக இருப்பதே அழகு என்பது குறிப்பு.

**1116. மதியும் மடந்தை முகனும் அறியா**
**பதியிற் கலங்கிய மீன்.**

இவள் முகம் முழுமதி போலவே இருத்தலால், விண்மீன்கள் வானிலுள்ள மதிக்கும் பூமியிலுள்ள இவளுடைய முகத்திற்கும் வேறுபாடு அறியமாட்டாமல் அங்கும் இங்குமாய் விழித்துப் பார்க்கின்றன! மீன்கள் (நட்சத்திரங்கள்) விட்டுவிட்டு மின்னுவதற்குக் காரணம் கூறுவதுபோல் வருமிது, தன் குறிப்பு ஒன்றைப் பார்ப்பதில் ஏற்றிச் சொல்வது.

**1117. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல**
**மறுவுண்டோ மாதர் முகத்து.**

மதி குறைக்கப்பட்ட பிறையாய் இருந்து, பிறகு அக்குறைப்பகுதி சிறிது சிறிதாய் நிறைந்து, முழுமதியாகி விளங்கும். அத்தகைய களங்கத்தையுடைய மதியைப்போல, இவள் முகத்தில், ஏதேனும் களங்கமுண்டோ? அம்மதியுமே இவள் முகத்திற்கு ஒப்பாகாது. விண்மீன்கள் தடுமாற வேண்டியதில்லை என்பதுபோல், முன்னைய குறளுக்கான விடை கிடைக்கிறது.

**1118. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்**
**காதலை வாழி மதி.**

ஓ மதியே! இவளுடைய முகத்தைப்போல மறு நீங்கி, ஒளிவீச முடியுமானால், நீயும் என் காதலுக்கு உரியை ஆவாய்! வாழிய!

மதி தன்னிடமுள்ள மறு நீங்கப்பெறுதல் இயலாதாகையால், காதலிக்கப் படுவதற்கும் உரியதாகாது.

1119. மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.

ஓ மதியே! மலர்போலும் கண்ணையுடைய என் காதலியின் முகத்தை ஒத்திருப்பது உண்மையாயின், தயவு செய்து பலரும் காணுமாறு வானத்தில் தோன்றாதே!

தனக்குரிமையுடைய காதலிபோலாதல் வேண்டுமாயின், இயல்பும் ஒத்திருக்க வேண்டுமென்பது தலைவன் கருத்து.

1120. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

மிக மென்மையுடைய எனப்படும் அனிச்சப்பூவும் அன்னப் பறவையின் உட்சிறகும்கூட என் காதலியின் பாதங்களிற் பட்டால் நெருஞ்சிமுள்போலத் துன்புறுத்தும்!

முற்றிய நெருஞ்சி, முள்ளாகும். அனிச்சமலர்,.அன்னத்தின் உட்சிறகாம் தூவி - இரண்டும் மென்மைக்கு எடுத்துக்காட்டாவன. இவள் பாதம் அவற்றினும் மென்மையுடையதாம்.

## 113. காதற் சிறப்புரைத்தல்

தலைவனும் தலைவியும் தாம் தாம் ஒருவர்மீது ஒருவர் கொண்ட காதலின் மிகுதியை எடுத்துரைப்பது. முதல் ஐந்து குறளும் தலைவன் கூறுவன; பின் ஐந்தும் தலைவி கூறுவன.

1121. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்.

மென்மைமிகு சொற்களைப் பேசும் என் காதலியின் வெள்ளிய பற்களிடையே ஊறிய நீர், பாலுடன் தேனைக் கலந்தாற் போன்ற சுவையுடையதாகும். முத்தம் பெற்ற களிப்பின் வெளிப்பாடு.

1122. உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.

உடம்பிற்கும் உயிருக்குமிடையேயுள்ள நட்புறவு எத்தகையதோ, அத்தகையதே, இவ்விளையாளொடு எமக்குளதாய நட்புறவுகள்.

ஒன்றின்றி ஒன்றில்லை. அதாவது உடலின்றி உயிருக்குத் தோற்றமில்லை; உயிரின்றி உடலுக்கு வாழ்வில்லை.

1123. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம்.

எம் கண்ணுள்ளிருக்கும் கருமணியில் ஆடும் பாவையே! நீ அங்கிருந்து வெளியே வருவாயாக! எதற்கெனின் எம்மால் விரும்பப்படும் அழகிய நெற்றியினளாம் எம் காதலியை வைத்துப் போற்றத்தக்க இடம், அதுபோல் வேறொன்றும் எம்மிடம் இல்லை!

மனைவியைச் சிவன் தன் இடப்பாகத்தும் திருமால் மார்பகத்தும் பிரமன் நாவகத்தும் கொண்டு போற்றுவதாக வரும் புராண மரபுக் கூறுகளை ஒப்புநோக்கின், இதன் சிறப்பும் நுட்பமும் புலப்படும்.

1124. வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து.

என் காதலி கூடுமிடத்து உயிருக்கு உடம்பொடு கூடி வாழ்தல் போலாகின்றாள்; பிரியுமிடத்து அவ்வுயிருக்கு உடம்பைவிட்டு நீங்கிப்போவது போலாகின்றாள். பிரிவரிய காதலை, இதைவிட வேறு விதமாகக் கூற முடியாது.

1125. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.

யான் ஒளி பொருந்தியவாய்ப் போர் செய்வன போன்ற கண்களையுடையாளது குணங்களை ஒருவேளை மறக்க நேர்ந்தால் அல்லவோ மீண்டும் நினைப்பேன் எனலாம்; ஆனால் ஒருபொழுதும் மறத்தலையே அறியாத யான், திரும்ப நினைத்தலென்பதற்கு இடம் ஏது?

1126. கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எம் காத லவர்.

எம் காதலர் எம் கண்ணுள்ளிருந்து போகார்; கண்ணுள் இருந்தாலும் இமைக்கும்போது பருப்பொருளாய் உறுத்தவும் செய்யார். அத்தகைய நுண்ணியவர் அவர்!

கண்ணுக்குள் சிறு தூசி விழுந்தாலும் உறுத்தும். ஆனால் கண்ணுக்குள்ளேயே இருக்கும் காதலரோ, பருப்பொருள்போல் உறுத்தவே மாட்டாராம்; அவ்வளவு நுண்ணியவராம்.

1127. **கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்**
**எழுதேம் கரப்பாக்கு அறிந்து.**

காதலர் எப்பொழுதும் எம் கண்ணுள்ளிருப்பதனால், கண்ணுக்கு மை எழுதினாலும் அந்நேரத்தில் அவர் கண்ணைவிட்டு மறைய நேருமே என அஞ்சி யாம் மை தீட்டுறுவதையே விட்டுவிட்டோம். இமைப்பொழுதும் பிரியவொண்ணா மனம் இது.

1128. **நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்**
**அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.**

காதலர் எப்பொழுதும் என் நெஞ்சகத்தே உள்ளாராதலின், உண்ணுங்கால், அவரைச் சுட்டுவிடுமோ எனக் கருதி, சூடான பொருள்களை உண்பதற்கும் அஞ்சுகின்றேன். நுண்ணிய உணர்வு நிலைகள் இவை.

1129. **இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே**
**ஏதிலர் என்னும்இவ் வூர்.**

கண்ணுள்ளிருக்கும் காதலர், இமைத்தால் மறைய நேருமே என்பதை அறிவேனாதலின், சிறிதும் இமையாமல் இருக்கின்றேன். அவ்வாறாக இருக்கவும் இவ்வூர் அவரை 'அன்பில்லாதவர்; தூங்கா நோயைச் செய்தவர்' எனத் தூற்றுகிறது.

சிறு பிரிவையும் தாங்காதவளாதலின், தூக்கமேயில்லாமல் இமையாதிருப்பவள் அதற்கு இப்படி ஒரு காரணத்தைச் சொல்கிறாள். இதன்மூலம் அவன்பால் கொண்ட அன்பையே வெளிப்படுத்துகிறாள்.

1130. **உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்**
**ஏதிலர் என்னும்இவ் வூர்.**

என் காதலர் என்றும் என் உள்ளத்தினுள்ளே மகிழ்ந்துரைக்கின்றார். அவ்வாறிருக்கவும் 'இவர் பிரிந்து வருத்துகின்றார்; அன்பில்லாதவர்; என்று இவ்வூர் தூற்றுகின்றது. பிரிந்தாலும் உள்ளத்துள்ளே இருக்கத்தானே செய்கிறார்' என்னுமிது, தலைவியின் அளவு கடந்த அன்பைக் காட்டுகிறது.

உள்ளத்தில் இருக்கின்றார் என்றால் வெளியே பிரிந்து போயுள்ளார் என்பதுதான் பொருள். இறுதி இரு குறள்களும் தலைவன் தரும் துன்பத்தையும் இன்பமாகவே எடுத்துக்கொள்ளும் தலைவியின் மாறுபடாப் பேரன்பை உணர்த்துகின்றன.

## 114. நாணுத் துறவுரைத்தல்

திருமணம் செய்துகொள்ளத் தடை ஏற்படுமாயின், தலைவன் நாடறியத் தன் காதலை வெளிப்படுத்தி மடலேறத் துணிவான்; தலைவி தன் காதல் நோய் உலகறிய வெளிப்பட்டதையறிந்து வருந்துவாள். இருவரும் வெட்கத்தை விட நேர்ந்தைக் கூறி வருந்துகின்றனர்.

**1131. காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்**
**மடலல்லது இல்லை வலி.**

காதலித்துக் காம இன்பத்தைத் துய்த்துப் பின்பு அதனை நிலையாகப் பெறமாட்டாமல் வருந்துகின்றவர்கட்கு, மடலேறுவதைத் தவிர பிற உற்றுழி உதவும் துணை எதுவுமில்லை.

மடலேறுதல்: காதல் நிறைவேறா இடத்தும் திருமணத்திற்குப் பெற்றோர் இசையாதவிடத்தும் தலைவன் மடலேறத் துணிவான். மடல் - பனங் கருக்காற் செய்த குதிரை. தலைவி படமெழுதிக் கையில் வைத்துக்கொண்டு, மடலேறி ஊர் மன்றத்தில் இழுக்கச்செய்து உயிரைவிடத் துணிதலிது. இதனைக் கண்டு அஞ்சிப் பெண் வீட்டார் இசைதலுமுண்டு. உண்மையில் மடலேறுவது நடந்திருக்கலாம். பாடல்களில் மடலேறுவேன் என மிரட்டுவதாகத்தான் கூறுவர்.

**1132. நோனா உடம்பும் உயிரும் மடலேறும்**
**நாணினை நீக்கி நிறுத்து.**

காம உணர்வால் வருந்தும்பொழுது, அத்துன்பத்தைத் தாங்க முடியாத என் உடம்பும் உயிரும், தடுக்கின்ற வெட்கத்தையும் ஒரு புறத்தே தள்ளி ஒதுக்கிவிட்டு, மடலேற ஆயத்தமாகின்றன. ஊரறிய மடலேற, வெட்கத்தை விட்டுத்தான் துணிய வேண்டும். அது ஒரு கேவலமில்லையா?

**1133. நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்**
**காமுற்றார் ஏறும் மடல்.**

யான் முன்பு வெட்கப்படுமியல்பும் நல்ல ஆண் தன்மையும் உடையவனாய் இருந்தேன் என்பதுண்மைதான். ஆனால் இன்றோ காமம் மிக்கார் ஏறும் மடலொன்றையே உடையவன் ஆயினேன். வெட்கவுணர்வும் மனம் தளராத ஆண்மையும் காம மிகுதியால் நீங்கிப் போயினவாம். மடலேறுவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது.

1134. காமக் கடும்புனல் உய்க்கும் நாணொடு
நல்லாண்மை என்னும் புணை.

இழிவாயின செய்ய வெட்கப்படும் நாணத்துடன் கூடிய, எதற்கும் தளராது நிற்கும் எனது நல்ல ஆண்மையாகிய தெப்பத்தை, யான் அடைந்த காமத் துன்பமாகிய வேகம்மிக்க பெருவெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. உய்த்தல் - தன் வழியில் இழுத்துக்கொண்டு போதல். வெட்கத்தையும் ஆண்மையையும் காமவெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது.

1135. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர்.

மலர்ச்சரம்போல் கையைச் சுற்றிக் கிடக்கும் சிறிய வளையல்களை அடுக்காக அணிந்த இவ்விளைய மகள்தான், மடலேறும் சிந்தனையோடு மாலைப்பொழுது கண்டு வருந்தும் காமத்துயரத்தையும் எனக்குத் தந்தவள்.

1136. மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்கென் கண்.

இப்பேதைப் பெண்ணின் பொருட்டு என் கண்கள் இரவு முழுவதும் பொருந்தாவாயின. அதனால் நள்ளிரவு நேரத்தும் யான் மடலூர்தலையே முழுவதும் நினைத்துக் கொண்டிருந்தேன். தூக்கமும் போனது; வேறு நினைப்பும் இல்லை.

1137. கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல்.

தலைவியும் என்னைப்போல் காமத்துயரில் அகப்பட்டுத் தவிக்கவில்லை என்று கருதற்க. கடல் போலக் கரைகாணாக் காமத்துன்பத்தில் அகப்பட்டு வருந்தினாலும், மடலேறுதலைக் கருதாது ஆற்றியிருக்கவல்ல பொறுமையுடைய பெண்ணைக் காட்டிலும் பெருந்தன்மையுடையது பிறிதில்லை.

மகளிர் பொறுத்துப் பொறுத்து மாய்ந்தாலும் மாய்வரேயன்றி, ஒருபோதும் வெட்கத்தைவிட்டு மடலேறத் துணியார் என்று தலைவன் தலைவியது பெருமையைப் பேசுகின்றான்.

1138. நிறையரியர் மன்அளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும்.

மனத்தை ஒரு நிலையில் நிறுத்துதலே நிறை. இப்போது அந்நிறையைக் காப்பாற்ற முடியாத அரியர் ஆயினர் என்று இரங்காமலும் மிகவும் இரங்கத்தக்க மகளிர் என்று கருதாமலும் இக்காமம், யாம் மறைக்க முயலவும் அதைக் கடந்து, அம்பலத்திலே பலருமறிய வெளிப்படுகின்றது.

இது தலைவி கூறுவது. தன் காமவுணர்வு, தன் மெலிவால், பலருமறிய வெளிப்படுவதற்கே கூசுகிறாள்.

1139. அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு.

என் காமவுணர்வு தன்னை உலகோர் அனைவரும் இதுவரை அறிந்திலர் என்று கருதி, அவர்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று, நாற்சந்தி கூடும் தெருவிற்கு வந்து மயங்கிச் சுழல்கின்றது. எல்லோரும் அறியும்படி ஆனது என்பதாம்.

நீர் ஆவி வெளிப்படத் துடிப்பதுபோல், மனவுணர்வுகள் வெளிப்படவே துடிதுடிக்கும். காமவுணர்வும் அத்தகையதே. அதாவது காமவுணர்வு அவளையும் மீறி வெளிப்படத் துடிக்கின்றது.

1140. யாம்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

யாம் காமத்தால் பட்ட துயரினை, இவர்கள் தாமும் பட்டிருந்தால் உண்மை தெரியும். ஆனால் தாம் அதை அனுபவிக்காததால், யாம் கண்ணால் காணுமாறு எம் எதிரிலேயே எம்மைப் பார்த்துச் சிரித்து நகையாடுகிறார்கள்.

காமத்துயர்ப்பட்ட மகளிரை அத்துயருக்கு இன்னும் ஆட்படாத மகளிர் சிரித்துப் பேசி நகையாடுகிறார்கள். அதைக்கண்டு வருந்தும் தலைவி கூறுவது இது.

## 115. அலரறிவுறுத்தல்

களவொழுக்கம் இரண்டு திங்களுக்குமேல் நீட்டித்தல் அரிது. திருமணத்தில் முடிய வேண்டிய நிலையில், காலத்தாழ்வு ஏற்பட ஏற்பட, தலைவன் நாணத்தைவிட்டு, மடலேறவும் தலைவியின் காமத்துயரம் அவள் நலிவுறுவதால் ஊரார் அறியவுமான நிலைமைகளேற்படும். இதனால் இவர்களின் காதல் ஊராரால் அறியப்பட்டு, இவர்கள் மீது பலவாறு பழிச்சொல்

பேசுவர். இதுவே 'அலர்' எனப்படும். இந்த அலரால் காதலர்தம் உறவு வலுப்படுமே தவிர குறைபடாது. இதனைத் தலைவன், தலைவி, தோழி கூற்றுகளால் அறிகிறோம். முதல் ஐந்தும் தலைவன் கூறுவன: பின் ஐந்தும் தலைவி கூறுவன.

**1141. அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்**
**பலரறியார் பாக்கியத் தால்.**

அலர் தூற்றுவதால் எங்கள் உறவு ஊரார் பலராலும் அறியப்பட்டு, 'இனி நாமிருவரும் இணைவது உறுதி' என எண்ணி எங்கள் அரியவுயிர்கள் நிலைபெறும். இங்ஙனம் இது எமக்குத் துணையாதலை, அலர் கூறுகின்றவர்களுள் பலர், எமது நல்வினைப் பயனால் அறிந்திலர். அறிந்து அலரை நிறுத்திவிட்டால், காதலுறவு வலுப்பெறாது போக, எமது உயிரும் நிலைபெறாது போகும். ஊரார் அலர் கூறுவதும் தங்கள் நன்மைக்கே என்று கூறுகின்றான், தலைவன்.

**1142. மலரன்ன கண்ணாள் அருமை அறியாது**
**அலரெமக்கு ஈந்ததிவ் வூர்.**

மலர்போலும் கண்ணையுடைய எம் காதலியின் உயர்குடிப் பிறப்பின் அருமையை அறியாது, இவ்வூர் அவளை எளியவளாக்கி, எம்மொடு சேர்க்குமாறு, இவ் அலர் கூறலை எமக்கு உதவியது.

'ஈந்தது' என்பதால், அரியவளை எளிதாயடைய உதவியது ஊர் என்பதாம். தான் எளிய குடியில் பிறந்தவனாயினும் இவ்வுயர் குடியிற் பிறந்தவளை அடைய, ஊரார் கூறிய அலரே தலைவனுக்கு உதவியானதாம்.

**1143. உறாஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்**
**பெறாஅது பெற்றன்ன நீர்த்து.**

எமது காதலை ஊரார் அறிந்து தூற்றிய பழிச்சொல், எனக்குப் பொருந்தாதது ஆகுமோ? ஆகாது. எனக்கு ஏற்புடையதேயாகும். ஏனெனில், யான் பெற நினைத்த அவளுடனாய எனது உறவைப் பெறாமலே பெற்றாலொத்த தன்மையை அது தருகிறது.

சமூகவியல், பாலியல்சார் உளவியல் இது. சோடி சேர்த்துப் பழிதூற்றிப் பேசப்பேச இருவரும் இணைந்தது போன்ற மனநிலை ஏற்படும். ஊரிலும் இருவரையும் சேர்த்துப் பேசப்பேச, பிரிக்கவொண்ணாத உறவுதான் இறுக்கமாய் அமையும். அது அவளைப் பெறாமலே, பெற்றதுபோன்ற நிலையை உண்டாக்கிவிடுகிறதாம்.

1144. கவ்வையால் கவ்விது காமம் அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து.

ஊரார் எடுக்கும் அலரால் எனது காமவுணர்வு மேன்மேல் இன்பக்கிளர்ச்சி பெறுகிறது. அவ் அலர் மட்டும் இல்லையாயின், இன்பம் பயக்கும் தன் தன்மையை இழந்து காமம் சுவையற்றதாகிவிடும். அலரால்தான் இன்பக் கிளர்ச்சியும் கவர்ச்சியும் வளர்ச்சி பெறுகின்றன.

1145. களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படும் தோறும் இனிது.

கள் குடிப்பவர்க்கு அதனால் களிப்பு ஏற்படுந்தோறும், இன்னும் வேண்டும் வேண்டும் எனும்படியான வேட்கையே தோன்றும். அதுபோலக் காதலும் அலராகி ஊராரால் பேசப்பட்டு வெளிப்படுந்தோறும் மேன்மேலும் இனிதாகவே உணரப்படும்.

1146. கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று.

யான் ஓரே ஒருநாள்தான் அவரைக் கண்டு அளவளாவப் பெற்றேன்; ஆனால் அதனாலாய அலரோ, வானில் திங்களைப் பாம்பு தீண்டுவதை உலகெலாம் அறிவதுபோல், ஊர் முழுவதும் பரவிவிட்டது.

அனுபவித்த இன்பம் மிகக் குறைவாயிருக்கும். அலரோ மிகப் பெரியதாய்ப் பரவும். இஃதோர் உலக இயல்பு. தலைவி அதைச் சுட்டிக்கூறி வருந்துகின்றாள்.

1147. ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்.

இக்காம நோயாகிய பயிர், ஊரார் கூறும் பழிச்சொற்களை உரமாக, அதுகேட்டு அன்னை கூறும் கடுஞ்சொற்களே நீராக வளர்கின்றது. காம நோயை இவை இரண்டும் தணிக்காமல் மேலும் மேலும் வளர்க்கவே செய்யும்.

1148. நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்.

பழிச்சொற்களாம் அலரால் காமத்தை அடக்கிவிடலாம் என நினைப்பது, எரிகின்ற நெருப்பை நெய்யூற்றி அணைத்துவிடலாம் என எண்ணுவதற்கு ஒப்பாகும். அலர் காமவுணர்வை வளர்க்குமே தவிர, அடக்காது. அடக்க அடக்கக் கூடுதலாகப் பெருகும் என்ற கருத்தும் உளது.

1149. **அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம்பு என்றார்**
**பலர்நாண நீத்தக் கடை.**

முன்பு கூடியபொழுது, 'அஞ்சாதே! என்னை நம்பு' என்று சொன்னவர், இன்று நம்மைக் கண்டார் பலரும் நாணும்படி, நம்மைப் பிரிந்தபின்பு, ஊரார் கூறும் அலருக்கு நாம் நாணுதல் கூடுமோ? கண்டாரும் வெட்கப்படும் நிலையடைந்த நாம் இனி வெட்கப்படுதலால் பயன் என்ன? என்று கூறித் தலைவி வருந்துகிறாள்.

1150. **தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்**
**கெளவை எடுக்கும்இவ் வூர்.**

திருமணத்திற்குத் தூண்டுமென்று யாம் முன்பே விரும்பி எதிர்பார்த்த அலரை இவ்வூர் தூற்றுகின்றது. இனி நம் காதலர்தாமும் அதை விரும்பி எதிர்பார்ப்பவராதலின் விரைவில் நம்மை மணம் முடித்தற்கானவற்றைச் செய்துதவுவார்.

# கற்பியல்

கற்பியல் திருமணத்திற்குப் பிந்தைய வாழ்வைப் பேசுகிறது. இக் கற்பியல் பிரிவில் தொடங்குகிறது. பொருள் சேர்த்துப் பிறர்க்குதவி வாழ்தல் போன்றவற்றிற்காகப் பிரிதல் இன்றியமையாதது. பிரிவில் அன்பின் வெளிப்பாடு கூடுதலாகும். உடலின்பம் என்பது உள்ளத்தின் மகிழ்ச்சி வெளிப்பாடாக வேண்டும். அதனால், கற்பியல், ஊடல் பற்றியும் மிகுதியாகப் பேசுகிறது. பிரிவும் ஊடலும் கூடலுமான வாழ்வே இனிமை தரும். இவ்வகையில் பிரிவிலேற்படும் பரிவும் பாசமுமே இவ்வியலில் மிகுதியாகப் பேசப்படுகின்றன.

## 116. பிரிவாற்றாமை

தலைவன் பொருள், கல்வி, போர், அரசுக்கு உதவி எனும் பல காரணங்களால் தலைவியைப் பிரிய நேரும். தலைவன் பிரிவைத் தலைவி முன்கூட்டி அறிதல், பிரிந்துழித்தோழி தலைவியை ஆற்றுவித்தல், தலைவி ஆற்றாமை கூறுதல் எனப் பிரிவு நிமித்தங்கள் பல இதில் கூறப்படுகின்றன.

1151. **செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை.**

என்னைப் பிரிவதில்லை என்று எண்ணமிருந்தால், அதனை என்னிடம் கூறுக; அல்லாது 'யான் பிரிந்து சென்று, பொருளீட்டி விரைந்து வருவேன்' என்பதைச் சொல்வதாயின், நீர் திரும்பி வரும்வரை உயிருடன் வாழ்பவரிடம் கூறிச்செல்க!

1152. **இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்**
**புன்கண் உடைத்தால் புணர்வு.**

பிரிவில் அவரை எதிர்பார்த்திருப்பது இன்பமுடையதாய் இருக்கிறது. அவருடன் கூடியிருக்கும்போது 'எப்பொழுது பிரிவாரோ' என அஞ்சிக் கொண்டிருப்பதால் அக்கூட்டம் துன்பம் தருவதாய் இருக்கிறது.

பிரிவைவிடக் கூடியிருப்பதே அச்சந்தருவதாய் இருக்கிறது. 'எப்பொழுது பிரிவாரோ' என்ற நினைவால். பார்வல் - எதிர்பார்த்திருத்தல். இன்கண், புன்கண் - இன்பவுணர்வும் துன்பவுணர்வும்.

1153. **அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்**
**பிரிவோ ரிடத்துண்மை யான்.**

இல்லற வாழ்வில் பிரிவு என்பது, ஏதேனும் ஒரு காரணத்தால் ஏற்படவே செய்கிறது. எனவே, மிகுந்த அறிவுடையவர்களேயாயினும், அவர்கள் கூறும் 'பிரியேன்; பிரியின் உயிர்தரியேன்' என்பதுபோன்ற உறுதிமொழிகளை நம்புவது அரிதாகும்.

1154. **அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்**
**தேறியார்க்கு உண்டோ தவறு.**

முதன்முதல் சந்தித்தபொழுது, அன்புகாட்டி 'அஞ்சாதே, பிரியமாட்டேன்' என்றெல்லாம் உறுதி கூறி நம்ப வைத்தவர் இப்பொழுது அதை மறந்து பிரிகின்றார். அங்ஙனம் தெளிவித்தவர் பிரிவதால் அது அவர்

குற்றமாகுமேயல்லாமல், அவரது பேச்சை நம்பினவர்களுக்குத் தவறுண்டோ?

**1155. ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்**
**நீங்கின் அரிதால் புணர்வு.**

தோழி! நீ என்னைக் காப்பது உண்மையாயின், என் உயிரைக் காத்தற்கு அமைந்தவராம் காதலரது பிரிவைத் தடுத்துக் காப்பாயாக. அவ்வாறன்றி, அவர் பிரிவாராயின் மீண்டும் இருவருங் கூடுதலென்பது அரிது. இறந்துபடுதலும் கூடுமென்பதால் இவ்வாறு கூறினாள்.

**1156. பிரிவுரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதவர்**
**நல்குவர் என்னும் நசை.**

முன்பு அன்பு காட்டிவிட்டு, இன்று 'பிரிவேன்' எனக் கூறக்கூடிய அளவு வன்கண்மையாம் கல் மனக் கொடுமையுடையவராயின், அத்தலைவர் பின்பு வந்து, நம் ஆற்றாமை நீக்கி அன்பு செய்வார் எனும் ஆசை சிறிதும் நிறைவேறாது.

**1157. துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை**
**இறைஇறவா நின்ற வளை.**

என் முன்கையில் மணிக்கட்டைக்கடந்து, கழன்று விழும் வளையல்களே, தலைவர் பிரியப் புறப்பட்டுவிட்டார் என்பதை முன்கூட்டி விளம்பரப்படுத்தவில்லையா? யாரும் சொல்ல வேண்டியதில்லாமலே உடல் தானே மெலிந்து, வளையல்கள் கழன்று விழத்தொடங்கி விட்டனவாம்.

**1158. இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்**
**இன்னாது இனியார்ப் பிரிவு.**

தமக்கு வேண்டியவர் என ஒருவருமில்லா ஊரில் ஒருவர் வாழ்தல் துன்பமுடையதாகும். அதைவிடத் துன்பம் தருவது தமக்கு இனியராயிருந்தாரைப் பிரிந்து வாழ்வது. இருவகைத் துன்பங்களும் தனக்கு இருப்பதாகத் தலைவி வருந்திக் கூறுகிறாள். தோழி தனக்குத் துணையாக இல்லை என்பது குறிப்பு.

**1159. தொடிற்சுடின் அல்லது காமநோய் போல**
**விடிற்சுடல் ஆற்றுமோ தீ.**

தீயைவிடக் கொடியது காதலர்ப் பிரிவு. தீ தொட்டால்தான் சுடுமேயல்லாமல், காதல் துன்பம்போல் விட்டு நீங்கினவரைச் சுடும் ஆற்றலுடையதன்று.

1160. **அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்.**

தலைவன் பிரிவுணர்த்தியபோது பொறுத்தற்கரிய அதைப் பொறுத்துக்கொண்டு, பிரிகின்ற காலத்து நிகழும் துன்பங்களையும் துன்பமெனக் கருதாது நீக்கிவிட்டு, பிரிந்து சென்றபிறகு, அப்பிரிவுத் துயரையும் தாங்கிக்கொண்டு, பின்னுமிருந்து உயிர் வாழும் மகளிர் உலகத்தில் பலராவர். யான் அங்ஙனம் வாழும் ஆற்றலுடையேனல்லேன் என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

## 117. படர்மெலிந்திரங்கல்

பிரிவுத் துன்பத்தால் உடல் மெலிந்து வருந்துதல் தலைவன் செயல் நோக்கம் கருதிப் பிரிதலால் காதலைவிட அந்நினைவே மேலோங்கி நிற்கும். இல்லத்திலிருந்து தலைவனையே எண்ணிக் கொண்டிருப்பதால், தலைவி படரால் உடல் மெலிந்து இரங்குகிறாள்.

1161. **மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும்.**

பிரிவால் ஏற்பட்ட காமநோயை யான் மறைக்கவே முயல்கின்றேன். ஆனால் இக்காம நோயோ, மறைக்க மறைக்க ஊற்றுநீரை இறைப்பவர்க்கு அது மேலும் மேலும் ஊறி மிகுவதுபோலக் கூடிக்கொண்டே போகின்றது.

மறைக்க முயல்வதனாலேயே கூடுகிற நோயை என்ன செய்வது?

1162. **கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும்.**

இத்துன்பத்தை என்னால் மறைக்கவும் இயலவில்லை. இதனை நமக்குச் செய்த தலைவர்க்கு வாய்விட்டுச் சொல்லவும் வெட்கமாக இருக்கின்றது. ஒரு வழியும் தெரியவில்லை; என் செய்வேன்?

1163. **காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பின் அகத்து.**

பிரிவுத் துன்பத்தைத் தாங்கமாட்டாது வாடி மெலியும் என் உடம்பின்கண், ஒரு பக்கம் காதல் வேட்கையும் மறுபக்கம் அதனை வெளிப்படுத்தத் தயங்கும் வெட்கமும், என் உயிரையே காவடித் தண்டாகக் கொண்டு தொங்குகின்றன. ஒரு பக்கத்தில் காமவுணர்வு இழுக்க, மறுதிசையில் வெட்கவுணர்வு இழுக்க உயிர் ஊசலாடுகிறது.

1164. காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்.

தோழியும் தனக்கு உதவவில்லை என்ற வருத்தத்தில் தலைவி கூறுகிறாள்; காமம் என்னும் கடல் கரை காணாது நிலையாக இருக்கின்றது. ஆனால் அதனை நீந்திக் கடக்க உதவும் பாதுகாப்பான தெப்பம்தான் எனக்குக் கிடைத்திலது! என் செய்வேன்?

1165. துப்பின் எவனாவர் மன்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்.

நட்புள்ள இடத்திலேயே துன்பத்தை வரவழைத்து உண்டாக்குகின்றவர், வலிமையைச் சோதிக்கும் பகையுள்ள இடத்தில் எத்தகையவராய் நடந்து கொள்வாரோ? யாம் அறியோம்!

ஏதோ, பொது அறம் கூறுவதுபோல் உளது. தன் கணவன் உறவுடைய தனக்கே துயரந்தருவதை உணர்ந்து வருந்திக் கூறுகிறாள். அன்புள்ள இடத்திலேயே துன்பம் செய்பவர், பகையுள்ள இடத்தில் என்ன செய்வாரோ?

1166. இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது.

காமத்தால் கூடுங்காலத்துப் பெறுமின்பம் கடல் போன்றது; ஆனால் அதே காமமானது பிரிவால் வருந்துங்காலத்து, அத்துன்பம் அவ்வளவிற்றாகாமல் அக்கடலினும் கூடுதலாகிறது.

1167. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்.

தோழியும் துணைசெய்யவில்லை என்ற குறிப்புடன் தலைவி கூறுகிறாள்; காமமாகிய பெருகிவரும் வெள்ளத்தினை நீந்தியும் கரை காணாது தவிக்கின்றேன், எல்லோரும் உறங்கும் இந்த நள்ளிரவிலும் யான் ஒருத்தியே தன்னந்தனியளாக உறங்காதிருக்கின்றேன்.

1168. மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்லது இல்லை துணை.

இந்த இரவுப்பொழுது மிகவும் இரங்கத்தக்கதாயிருக்கிறது! இவ்வுலகிலுள்ள எல்லா உயிர்களையும் தூங்கச் செய்துவிட்ட இதற்கு நலிவுற்றுப் போன என்னையல்லாது வேறு துணையில்லை!

ஒரு புதுக்கவிதை போன்ற கருத்து வீச்சு, கற்பனை நயம் காட்டுகிறது.

1169. **கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்**
**நெடிய கழியும் இரா.**

முன்பு கூடியிருந்த காலத்து, விரைந்து கழிந்த அந்த இரவுப் பொழுதுகள், இப்பொழுது பிரிவால் வருந்தும் நிலையில் மிக நெடியவாய் நீண்டு கொண்டே போகின்றன. நம்மைப் பிரிந்து வருத்துகின்ற கொடியவர் செய்த கொடுமைக்கு மேற்பட்ட கொடுமையை உடையனவாயுள்ளன இவைகள்!

1170. **உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்**
**நீந்தல மன்னோஎன் கண்.**

காதலர் இருக்கும் இடத்திற்கு என் உள்ளம் செல்வதுபோல் தாமும் விரைந்து செல்ல வல்லனவாயின், என் கண்கள் இங்ஙனம் வெள்ளம்போல் கண்ணீரைக் கொட்டி, அதில் நீந்தமாட்டா!

## 118. கண்விதுப்பழிதல்

பிரிந்தவரைக் காண வேண்டுமென்று கண்கள் விதுவிதுக்கும்; துடிதுடிக்கும். அவ்விரைவால் மனமழிந்து வருந்துவது இது. விதுப்பு - காண விழையும் துடிப்பு.

1171. **கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்**
**தாம்காட்ட யாம்கண் டது.**

இத் தணியாத நோயை நாமடையுமாறு, நம் காதலரை இக்கண்கள் நமக்குக் காட்டியதனாலேதான் நாம் காண நேர்ந்தது. அங்ஙனம் காட்டிய கண்கள், தாம்செய்த வினையைப் பொறுமையாய் அனுபவியாமல், அழுவது என்ன பயன் கருதி?

1172. **தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்**
**பைதல் உழப்பது எவன்?**

பின்விளைவை ஆராய்ந்தறியாது முன்பு அவரைக் காதல் பார்வை பார்த்து நல்லவரென அன்பு செய்தன இக்கண்கள். இப்போது, 'இது நம்மால்தானே வந்தது?' எனப் பரிவுடன் எண்ணிப் பொறுமை கொள்ளாமல் துன்பத்தில் உழல்வது ஏனோ?

1173. **கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்**
**இதுநகத் தக்க துடைத்து.**

முன்பும், இக்கண்கள் என்னையும் மீறித் தாமே விரைந்து அவரைப் பார்த்தன; இன்றும் துன்பத்தைப் பொறுக்க மாட்டாமல் தாமே

தனித்திருந்து அழுகின்றன. இது மிகவும் சிரிக்கத்தக்க செயலாய் இருக்கிறது. என்னைக் கேட்டா இவை நடந்து கொண்டன? தாமே பார்த்துக் கொண்டன; இப்போதும் தாமே அழுகின்றன. வேடிக்கைதான் இது!

**1174. பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா**
**உய்வில்நோய் என்கண் நிறுத்து.**

மை எழுதிய என் கண்கள் யாம் உயிர் பிழைக்கமாட்டாத தப்பமுடியாத துன்பத்தை என்னிடம் நிலைபெறச் செய்தன. அப்படிச் செய்து விட்டது தாமும் இனிக் கொட்டுவதற்கு இயலாதெனும்படி, கண்ணின் நீர் முழுவதையும் கொட்டிக்கொட்டி. வற்றிப்போயின.

**1175. படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றாக்**
**காமநோய் செய்தஎன் கண்.**

கடலினும் பெரிதாய காமநோயை என்னிடம் செய்த என் கண்கள், தாமும் தூக்கமின்றி இமைபொருந்த இயலாவாய்த் துன்பத்தில் உழல்கின்றன.

**1176. ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்**
**தாஅம் இதற்பட் டது.**

எமக்கு இக்காம நோயினைச் செய்த கண்கள், தாமும் இன்று பிரிவால் தூக்கமின்றி வருந்தி அழுவது, ஓ! நமக்கு மிகவும் இனிதாயுளது!

தமக்குத் துன்பம் தந்தவர்க்கு ஒரு துன்பம் வந்ததென்றால் மகிழ்ச்சிதானோ! கண்களே தன் துன்பத்திற்குக் காரணமென்று ஏதோ அயலவர்மீது வருத்தப்படுவது போல் பேசுகிறாள். கண்களால் கண்டதனால் வந்த நோயாதலால், அவர்மீது காட்ட முடியாத சினத்தைக் கண்கள் மீது கொட்டுகிறாள்.

**1177. உழந்துழந்து உள்நீர் அறுக விழைந்திழைந்து**
**வேண்டி யவர்க்கண்ட கண்.**

விழைந்து விழைந்து உள்நெகிழ்ந்து விரும்பி இடைவிடாது அவரைப் பார்த்துக்கொண்டே. இருந்த இக்கண்கள், இன்று பிரிவால் வருந்தி உழந்து உழந்து அழுது தம்முள்ளிருக்கும் நீரெல்லாம் வற்றுமாக! எவ்வளவு ஆத்திரம்! அப்படி மனம் உருகப் பார்த்த கண்கள், இன்று உருகி அழ நேரிட்டுவிட்ட வருத்தமிகுதி இது.

**1178. பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்**
**காணாது அமைவில கண்.**

அவர் நம்மைக் காணும் விருப்பமின்றி இருக்கவும் இக்கண்கள் அவரைக் காணாதிருக்கப் பொறுத்திலவாய்க் காண விரும்புகின்றன. தம்மை ஒருவர் விரும்பாதிருக்கவும் தாம் அவரை விரும்புவார் யாரும் உலகத்து உளரோ?

1179. வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்.

காதலர் வராதபொழுது அவர் வரவு பார்த்துத் தூங்காவாயின; வந்தபொழுது 'எப்பொழுது பிரிவாரோ' என்ற அச்சத்தில் துயிலாவாயின. இவ்வாறு அவ்விரண்டு நிலைமையிலும் என் கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்திற்களாயின.

1180. மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணார் அகத்து.

எம்மைப் போல் பறை அறைந்து பகர்வது போலும் கண்களையுடையவர்களின் மறையை - இரகசியத்தைத் தெரிந்து கொள்ளுதல் இவ்வூரார்க்கு அரிய காரியமன்று. மிக எளிது. தாமே நீரைப் பொழிந்து பலரும் அறியுமாறு துன்பத்தை வெளிப் படுத்திவிடுவதால், கண்களை, 'அறைந்து (அடித்து) ஊரார்க்குத் தன்னைத்தானே அறிவிக்கும் பறை' போன்றவை என்று கூறுகிறாள்.

## 119. பசப்புறு பருவரல்

பசப்பு எனப்படும் நிற மாற்றத்தைத் தந்து, மேனி அழகைக் குறைத்தற்குக் காரணமான பிரிவுத்துன்பம். பொன்னிறமான மேனி, நிறம் மங்கிக் கருத்துக் காணப்படுவதே பசப்பு, பசலைநோய் எனப்படும்.

1181. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க்கு உரைக்கோ பிற.

நம்மால் காதலிக்கப்பட்டவர்க்கு, அவர் நம்பால் அருளின்றிப் பிரிவதாகச் சொன்னபோது அதற்கு உடம்பட்டேன். இப்பொழுது அதனைப் பொறுத்துக் கொள்ளாமல் பசந்த என் இயல்பினை வேறு யாரிடம் சொல்வேன்? உடம்பட்டது தானேயாதலால் வேறு யாரிடம் சொல்லி என்ன பயன் என்று தன்னையே நொந்துகொள்கிறாள்.

1182. அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு.

இந்தப் 'பசப்பிற்கு' என்ன செருக்கு? எனக்குத் தன்னை உண்டாக்கியர் அவர் என்னும் உரிமைப் பெருமிதத்தால், என் மேனிமேல் ஏறிப்படர்ந்து

பரவுகின்றது! இவர் தந்து ஊர்தல் - போர்க்களச்சொல்; அடக்கி ஏறிச் செலுத்துதல். தன் கணவனுக்குள்ள உரிமையை, அவன் தந்த நோயும் எடுத்துக்கொள்கிறதே என ஏங்குகிறாள்.

**1183. சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா**
**நோயும் பசலையும் தந்து.**

பிரிந்து சென்ற என் காதலர், மென்மைமிக்க என் சாயலழகையும் நாணத்தையும் தாம் எடுத்துக்கொண்ட அவற்றிற்குக் கைம்மாறாக எனக்குக் காம நோயையும் பசலையையும் தந்துள்ளார். ஒன்றும் அநியாயமாகச் செய்யவில்லை. இரண்டை எடுத்துக்கொண்டு, அவற்றுக்குக் கைம்மாறாக இரண்டு தந்து நிறைவு செய்துள்ளார் என்பதில் எள்ளற்சுவை இழையோடுகிறது.

**1184. உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமால்**
**கள்ளம் பிறவோ பசப்பு.**

யான் அவரையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கின்றேன்; அவரது நற்பண்புகளையே வாயால் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இருந்தும் இப்பசப்பு என்னிடம் பரவுகின்றது. இது அதன் கள்ளத்தனமா? வேறா? அறிகிலேன்.

**1185. உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்**
**மேனி பசப்பூர் வது.**

அதோ பார்! மிகமிக அருகில்தான் எம் காதலர் பிரிந்து போகின்றார்! இதோ பார்! இங்கே என் மேனியில் பசலை நிறம் படர்கின்றது! பிரிவும் துன்பமும் அத்துணை விரைந்து ஒருசேர நிகழ்கின்றன என்பது நொடிப் பொழுதும் பிரிதலாற்றாமையைத் தெரிவிக்கின்றது.

**1186. விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்**
**முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.**

விளக்கொளி எப்பொழுது மறையுமென்று பார்த்து அப்பொழுதே பரவக் காத்திருக்கும் இருளைப்போல, கணவன் என்னைத் தழுவிக்கொள்வதைச் சற்றே தளர்த்தும் சமயம் பார்த்து, இப்பசலை நிறம் என் உடம்பில் படரக் காத்திருக்கின்றது!

**1187. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்**
**அள்ளிக்கொள் வற்றே பசப்பு.**

என் கணவரைத் தழுவிக்கொண்டு கிடந்த யான், என்னையறியாது சற்றுத் தள்ளிப் படுத்தேன். அந்தக் கணமே இப்பசலைநிறம் என்னை அள்ளிக் கொள்வதுபோல், என் மேனி முழுவதும் படர்ந்தது.

**1188. பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்**
**துறந்தார் அவர்என்பார் இல்.**

இவ்வாறு பசலையடையலாமா என்ற தோழியிடம் தலைவி வருந்திக் கூறுகிறாள்; பிரிவை ஆற்றியிராமல் இவள் பசலையடைந்தாள் என என்னைப் பழிப்பதல்லாமல், இவளைத் துறந்து பிரிந்து போயினார் என அவரைக் குறை கூறுவார் ஒருவரும் இலர்!

கணப்பொழுதும் பிரிய நினையாத காதலுணர்வுகள் இவை. ஊரார் 'இப்படி மெலிந்து கறுத்துச் சிறுத்துப் போய்விட்டாளே' என்று கூறுகின்றனர். அவன் பிரிந்து போனதை யாரும் குறைசொல்வதில்லை. இவ்வுலகியல்பை நினைந்து வருந்திப் பேசுகிறாள்.

**1189. பசக்கமன் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்**
**நன்னிலையர் ஆவர் எனின்.**

நயமாகச் சொல்லிப் பிரிவிற்கு என்னை உடம்படுவித்துப் பிரிந்தவர், சொன்ன சொல் தவறினாலும் நல்ல நிலைமையை அடைவாரெனின், என் மேனி உள்ளபடி இயல்பாகப் பசந்து அழகு கெடுவதாக! அவர்க்கிது நன்மை தருமென்றால், எனக்கிது கேடானாலும் ஆகட்டும் என்று கூறுகின்றாள்.

**1190. பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்**
**நல்காமை தூற்றார் எனின்.**

நயமாகப் பேசிப் பிரிவிற்கு உடம்படுவித்துப் போனவர், நமக்கு உரிய காலத்து வந்து அருளாமையை ஊரார் பழிதூற்றார் என்றால் 'இவள் பசப்பாயினாள்' எனப் பசலை நோயுடன் என்னை ஒன்றாக இணைத்துப் பேசும் பெயரைப் பெறுதலும் எனக்கு நல்லதேயாம். அவர் பழியையும் தான் ஏற்றுக்கொள்ளத் துடிக்கும் காதல் உள்ளம் இது. ஊரார் 'பிரிந்தார் அவரென' அவர்மீது குற்றம் சுமத்தவில்லையே என்பது ஒரு மனநிலை. 'ஊரார் அவரைத் தூற்றும்படி, இப்பசப்பு என்னிடம் பரவுகிறதே' என அதற்கும் வருந்துவது உயர்ந்த மனநிலை.

## 120. தனிப்படர் மிகுதி

பிரிவால் தலைவிக்குத் தனிமையில் ஏற்படும் துன்பமிகுதி. தலைவன் ஏதேனும் ஒரு செயல்நோக்கம் கருதிப் பிரிதலின் இப்பிரிவுத்துயர் அவனை வாட்டுவதில்லை. அங்ஙனம் புனைதல் அவன் ஆண்மைக்கும் இழுக்காகும். அதனால் இப்பிரிவுத் துன்பங்களனைத்தும் பெரிதும் தலைவியைச் சார்த்தியே புனையப்படுகின்றன.

இருவரும் ஒருவர்மீது ஒருவர் ஒத்த காதலுடையவராதலே இனிது எனவும், ஒருவர் காதலிக்க மற்றவர் விருப்பமின்றியிருந்தால் காமப்பயன் இன்றெனவும் கூறி, அதன்வழி தனிமைப்படுத்தப்படுதலால் ஏற்படும் துன்பமிகுதியைக் கூறுவதாகவும் இவ்வதிகாரம் காணப்படுகிறது.

இவை சில தலைவி கூறுவன: சில தோழிகூற்றாகக் கொள்ளத்தக்கன. தோழி கூறுவனவற்றை, ஆசிரியர் கூற்றாகவும் கருதுமாறு அமைந்துள்ளன.

**1191. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி.**

தாம் விழைந்து காதலித்துக் கைப்பிடித்த கணவரால் தாமும் விழைந்து காதலிக்கப்பெற்ற மகளிரே, காம நுகர்ச்சி என்னும் விதையற்ற கனியைப் பெற்றவர் ஆவர்.

இணைவிழைச்சு, விழைவு, வீழ்தல் என்பன பாலுறவும் உள்ளம் ஒன்றும் காதலும் பற்றிய கலைச்சொற்கள். இருவரும் சமமாக ஒருவரை ஒருவர் காதலிக்கும் மனஒருமை வேண்டும். காழ்-விதை, விதையற்ற கனி முழுவதும் சுவைக்கப்படுவது போல, முழுமையான இன்பத்தைப் பெறுவர்.

**1192. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.**

தம்மால் விழைந்து காதலிக்கப்பட்ட மகளிர்க்கு, அவரால் காதலிக்கப்படும் துணைவர் காலமும் இடமும் அறிந்து செய்யும் தண்ணளி, உலகின்கண் தன்னையே நோக்கி உயிர் வாழ்வார்க்குக் காலமும் இடமும் பார்த்து வானம் மழை பெய்து காப்பது போலும். தண்ணளி, தலையளி என்பன குளிர்ந்த கருணை காட்டி ஒருவர் மீது அன்பு செய்தல்.

**1193. வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு.**

தாம் விழையும் காதலராம் தாமும் விழையப்படுகின்ற மகளிர்க்கே, நாம் இன்புற்று வாழ்கின்றோம் என்னும் பெருமிதவுணர்வு இயல்பாக அமையும். காதலிக்கப்படுதலால், பிரிந்தாலும், விரைவில் திரும்புவார் எனும் நம்பிக்கையுளதாகும். கணவனால் அன்பு செலுத்தப்படுகிற பெண்ணே, செருக்குமிக்க பெருமித வாழ்வு பெறுவாள்.

**1194. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.**

தாம் விரும்பும் கணவரால் விரும்பப்படாராயின், அக்கணவருடன் விருப்பங்கொண்டு வாழநேரிட்ட மகளிர், உலகில் மற்றவர் எவராலும் மதிக்கப்படாத நிலையை அடைவர்.

மனம் பொருந்திய வாழ்வின்றேல், நன்மதிப்பு அமையாது. மகளிர் நன்கு மனமொத்த கணவரைத் தேர்ந்து கொள்ளுதல் வேண்டுமென்ற குறிப்புமுளது.

**1195. நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ**
**தாம்காதல் கொள்ளாக் கடை.**

நாம் காதல் கொண்டவர், நாம் அவரைக் காதலிப்பதுபோலவே அவரும் நம்மிடம் காதல் கொள்ளாதவிடத்து, நமக்கு என்ன இன்பத்தைச் செய்யப் போகிறார்? அக்காதலால் துன்பமேயன்றி இன்பமில்லை.

**1196. ஒருதலையான் இன்னாது காமம்காப் போல**
**இருதலை யானும் இனிது.**

மகளிர் ஆடவர் என்னும் இருபக்கத்தும் சமமாக இல்லாது, ஒருபக்கம் மட்டுமே காம வேட்கையுளதாயின் அது துன்பமாகும். காவடித் தண்டில் இருபக்கத்தும் சமமான சுமை அமைவது இனிதாவது போல, இரு பாலாரிடத்தும் காதல் விழைவு சமமாக அமைவதே இனிது. கா-காவடி, இணை விழைச்சாம் காம உணர்விலும் ஒத்திருக்க வேண்டும்.

**1197. பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்**
**ஒருவர்கண் நின்றொழுகு வான்.**

நுகர்ச்சிக்குரிய இருவரிடத்திலும் ஒப்பி நில்லாமல், ஒருவரிடத்தே நின்று காமவேட்கையை விளைவிப்பானாயின், அக்காமம் அவரிடத்தே ஏற்படும் மனத்துயரையும் உடல் நலிவிக்கும் பசலை நோயையும் அறியானோ? இருவரிடத்தும் காமவேட்கையை ஒப்ப நிகழ்த்தலே நன்றென்று காமன்மேலிட்டுக் கூறுகின்றார். இவை அனைத்தும் காமவுணர்வுநிலை பற்றிய உளவியலாகவும் உள்ளன.

**1198. வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து**
**வாழ்வாரின் வன்கணார் இல்.**

தம்மால் விரும்பப்படும் காதலரிடத்திலிருந்து ஓர் இன்சொல்லாவது பெறாது உயிர் வாழ்கின்ற மகளிர்போல, இவ்வுலகத்தின்கண் வன்னெஞ்சுடையார் வேறு எவருமிலர். பொறுத்தற்கு வலிய நெஞ்சு வேண்டும். கணவன், தன் மனைவியுடன் இனிய சொற்களைப் பேசி மகிழ்விப்பவனாக இருக்க வேண்டும்.

1199. நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு.

என்னால் நச்சப்பட்ட என் கணவர் என்னிடத்து அன்பு செய்து இன்பம் தாராரெனினும் அவரைப் பற்றிய புகழ்ச் சொற்கள் எவையேனும் பேசப்படுமானால், அவை எனது செவிக்கு இன்பம் தருவனவாம். தான் துன்புற நேர்ந்தாலும், கணவனைப் பெருவீரன் எனவோ, திறமைமிக்கவன் எனவோ புகழ்ந்து பேசுதலைக் கேட்டாலே, அத்துன்பமெலாம் மறந்து இன்பவுணர்வு அரும்புகிறதாம்.

1200. உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.

உன்னை உறவுகொண்டு காதலியாதார்க்கு, நின் காதலால் உற்ற நோயை உரைக்க எண்ணுகின்ற மனமே! வாழிய! அதைவிட உனது காமக் கடலைத் தூர்க்க முயல்வாயாக! அஃது அதனினும் எளிது. விரும்பாதார் பின் போகின்ற மனத்தை வெறுத்துச் சொல்வதிது.

## 121. நினைந்தவர் புலம்பல்

முன்பு கூடிய காலத்து இன்பத்தினைப் பிரிவின்போது நினைவுக்குக் கொண்டுவந்து வாய்விட்டுச் சொல்லிப் புலம்புதல். இஃது இருவரும் புலம்புவதைக் கூறுகிறது.

1201. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.

காதல் வாழ்வில் முன்பு கூடிய காலத்து இன்பத்தைப் பிரிந்த காலத்தில் நினைத்துப் பார்த்தாலும் முடிவற்ற பெருமகிழ்ச்சியைத் தருகிறது. கள்ளோ உண்டாலல்லது இன்பம் தராது. காம இன்பமோ இவ்வாறு நினைத்தாலே இன்பம் தருகிறது. எனவே கள்ளைவிடக் காமமே இனிதாகும். நினைத்துமட்டுமே இன்பமடைய வேண்டிய நிலைமையை உணர்ந்து, பிரிந்திருந்தபோது தலைவன் கூறுவது.

1202. எனைத்தொன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன்று இல்.

தம்மால் விரும்பப்படுவாரை நினைத்த அளவில், பிரிவால் வருவதொரு துன்பம் இல்லாது மறைகிறது. எனவே காமம் யாதொரு வகையினாலும் இனியதேயாம். பிரிவானும் நினைத்து மகிழ முடிகிறதே எனுமிது ஆற்றாமையின் வெளிப்பாடு.

1203. **நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.**

யாராலும் நினைக்கப்பட்டால், புரைஏறி, செருமல் தோன்றும் என்பது உலகியல். எனக்குத் தும்மல் (செருமல்) வருவதுபோன்று தோன்றிக் கெடுகின்றது. என் காதலர் என்னை நினைப்பவர் போன்று தொடங்கி, நினையார் போலும்! பிரிவில் தலைவன் தன்னை நினைப்பானோ, மறந்திருப்பானோ என மன ஊசலாட்டத்தின் விளைவு இது.

1204. **யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்து எம்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர்.**

ஓ! எம்முடைய நெஞ்சத்தில் அவர் எப்பொழுதும் நன்றாக இருக்கின்றாரே! அவ்வாறெனில் அதைப்போல அவர் நெஞ்சத்தில் யான் இருக்க வேண்டுமே; இருக்கின்றேனா? இருப்பேனா? ஆர்வ நெஞ்சத்தின் அவல வெளிப்பாடு.

1205. **தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எம்நெஞ்சத்து ஓவா வரல்.**

தம்முடைய நெஞ்சத்தில் யாம் ஒருபோதும் இடம்பெறாது காத்துக் கொள்கின்றாரே இந்தக் காதலர். அப்படிப்பட்டவர் எம்முடைய நெஞ்சத்தில் இடையறாது வருவதற்கு வெட்கப்பட மாட்டார் போலும்!

1206. **மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன்.**

எதற்காக நான் உயிர் வாழ்கின்றேன்? ஏன் உயிர் வாழ வேண்டும்? நான் அவரோடு கூடி வாழ்ந்த காலத்து இன்பத்தை நினைப்பதற்கு மட்டுமே, இப்போது இத்துன்பம் மிக்க காலத்தும் உயிர் வாழ்கின்றேன்.

1207. **மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும்.**

அவருடன் கூடி வாழந்த காலத்து இன்பத்தை மறக்காமல், நினைத்துப் பார்த்தாலும் தாங்க முடியாத துன்பத்தால் பிரிவு என் உள்ளத்தைச் சுடுகின்றது. அங்ஙனமாகவும் முழுவதும் மறந்தேனாயின் என்ன ஆவேனோ?

சிலபோது நினைவிலேயே உயிர் வாழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது. நினைவு வருத்தினாலும் அதனால் உயிர் காப்பாற்றப்படுகிறது. அதையும் இழந்துவிட்டால், பிறகு உயிருடன் இருப்பதே இயலாததாகிவிடும்.

1208. எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு.

தம்மை யான் எத்தனை முறை எவ்வளவு காலம் நினைத்துக் கொண்டேயிருந்தாலும் அதற்காக அவர் சிறிதும் கோபப்படமாட்டார். அந்த அளவு சிறப்பையல்லவா, என் காதலர் எனக்குச் செய்கின்றார்? 'நினைவில் வாழும் வாழ்க்கை' என்றே தலைப்பிடலாம். காதல் வாழ்க்கையில் இவ்வாறு அமைவது பெரிதும் காணப்படும். இஃதோர் உளவியல்.

1209. விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து.

முன்பு 'நாமிருவரும் வேறுவேறு அல்லம்; ஓருயிரானோம் என்று கூறினார். அத்தகைய பேச்சுப் பேசியவரது கருணையின்மையை மிகவும் நினைத்து நினைத்து, எனது இனிய உயிர் என்னை விட்டு நீங்குகின்றது.

1210. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி.

வானத்து மதியே! வாழிய! என் நெஞ்சத்திலிருந்து நீங்காதே, பிரிந்து போயினவரை யான் என் கண்ணினால் உன் வழியாகக் காணுமாறு, நீ மறைந்து விடாதிருப்பாயாக!

வேறுவேறு இடத்திலிருந்தாலும் மதியை இருவரும் நோக்குதலால், இருவர் கண்களும் அதன்கண்ணே சந்திக்கும் என்று இங்ஙனம் கூறினாள். விடுதல் - பிரிதல். விடாஅது - நெஞ்சைவிட்டு அகலாது. படுதல் - மறைதல். படாஅதி - மறையாதே.

## 122. கனவு நிலை உரைத்தல்

தலைவி தலைமகனைப் பற்றித் தனக்குத் தோன்றிய கனவுகளைத் தோழிக்குக் கூறுதல். சிறிதும் உறக்கமில்லாமல் காதலையே நினைத்துக்கொண்டிருப்பவள். சிறிது கண்ணயர்ந்தால் கனவிலும் அவனே தோன்றும் நிலை இது.

1211. காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து.

யான் வருந்துகின்றதை அறிந்து காதலர் விடுத்த தூதுபோல எனக்கொரு கனவு தோன்றியது. அத்தூதாக வந்த கனவுக்கு, யான் எத்தகைய

விருந்தைச் செய்வேன்? தூது வந்தவர்க்கு விருந்தளிப்பது ஒரு மரியாதை அல்லவா?

1212. **கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்கு**
**உயலுண்மை சாற்றுவேன் மன்.**

கயல்மீன்போல் பிறழும் மையெழுதிய என் கண்கள் யான் கெஞ்சிக் கேட்கச் சற்றே உறங்காதா? உறங்கினால் கனவு வரும். கனவிலாவது அவர் வருவார். அங்ஙனம் கனவில் வந்து நம்முடன் கலந்துறவாடும் காதலரிடம் யான் சாகாமல் உயிர் பிழைத்திருப்பதற்கான காரணங்களை விவரித்துச் சொல்வேன். ஆனால் இக் கண்கள் உறங்குவதே இல்லையே; என் செய்வேன்!

1213. **நனவினால் நல்கா தவரைக் கனவினால்**
**காண்டலின் உண்டென் உயிர்.**

'நனவின்கண்' வந்து உயிர் செய்யாத காதலரைக் கனவின்கண் காணப்பெற்றமையால் என் உயிர் உளதாகின்றது.

காதல் வாழ்வில் நினைவிலும் கனவிலும் வாழவேண்டிய சூழல்கள் பெரிதும் ஏற்படுதல் இயல்பென்பதால் இவ்வாறு கூறுகிறாள்.

1214. **கனவினான் உண்டாகும் காமம் நனவினான்**
**நல்காரை நாடித் தரற்கு.**

நனவுக் காலத்தே இன்பம் நல்காத காதலரை அவருள்ள இடத்தே தேடிச் சென்று நம்மிடம் கொண்டு வந்து சேர்க்க உதவுகிறது கனவு. எனவே அக்கனவினால்தான் காம இன்ப உணர்வுகள், உளவாகின்றன. கனவு மட்டும் இல்லையானால் காம உணர்வுகளே அற்றுப் போகும்.

1215. **நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்**
**கண்ட பொழுதே இனிது.**

முன்பு நனவில் கண்டு நுகர்ந்த இன்பமும் இப்பொழுது மட்டுமே இனிதாயிருந்தது. இன்று கனவில் கண்டு நுகரும் இன்பமும் கண்ட அப்பொழுது மட்டுமே இனிதாயிருக்கிறது. அதனால் எனக்கு இவை இரண்டும் ஒரு தன்மையினவேயாம். நனவும் கனவுபோல ஓடி விடுவதனால், இவற்றிலொன்றும் வேறுபாடில்லை என்று தலைவி கூறுகிறாள்.

1216. **நனவென ஒன்றில்லை ஆயின் கனவினால்**
**காதலர் நீங்கலர் மன்.**

நனவு என்று சொல்லப்படுகின்ற ஒன்றுமட்டும் இல்லாதிருக்குமானால், கனவின்கண் வந்து கூடிய என் காதலர் என்னை எப்பொழுதும் பிரியவே மாட்டார்.

கனவு தன் கைவசம் இருப்பதனால் இவ்வாறு கூறுகிறாள். அவள் மனம் நனவென்ற ஒன்றே இல்லாதுபோகட்டுமே என ஏங்குகிறது. காதல் உளவியலில் உச்சத்தைத் தொடுகிறது வள்ளுவம்.

1217. **நனவினால் நல்காக் கொடியார் கனவனால்**
**என்எம்மைப் பீழிப் பது.**

ஒருபொழுதும் நனவில் வந்து இன்பம் நல்காத கொடியவர், கனவிலும் வந்து என்னை அலக்கழித்துத் துன்புறுத்துவது எதற்காக? கனவிலே வந்து தழுவியவன், கூடுவதன் முன் விழிப்பேற்படவே மறைந்துவிட நேர்கிறது. அதனால் துன்புற்று, கனவிலும் அலக்கழிப்பதேன் எனச் சொல்லி அழுகின்றாள்.

1218. **துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்**
**நெஞ்சத்தர் ஆவர் விரைந்து.**

என் காதலர் யான் உறங்கும்பொழுது என் கனவிலே வந்து, என் தோள் மேலராய்க் கூடி இருந்து, விழிக்கும்பொழுது விரைந்து மறைந்து என் நெஞ்சத்திலுள்ளவர் ஆகிவிடுகின்றார். பிரிவிலேற்படும் நெஞ்ச ஊசலாட்டம் இது.

1219. **நனவினால் நல்காரை நோவர் கனவினால்**
**காதலர்க் காணா தவர்.**

என்னைப் போலத் தம் காதலரைக் கனவில் கண்டு மகிழாத மகளிர், தாம் பார்க்க நனவில் வந்து இன்பம் நல்காத நம் காதலரை அன்பில்லாதவர் என்று நோகின்றார்கள். பழக்கமின்மையின் காதலர் கனவில் வந்து இன்பம் நல்குதலை அவர்கள் அறியாராயினர்.

1220. **நனவினால் நம்நீத்தார் என்பர் கனவினால்**
**காணார்கொல் இவ்வூ ரவர்.**

இவ்வூர் மகளிர் நனவொன்றையே கருதி நம் காதலர் நம்மைப் பிரிந்து விட்டாரென்று அவரது கொடுமை கூறுகின்றனர். அவரோ நம் கனவில்

நீங்காது வருகின்றார். இதனை என்னைப்போலத் தாமும் கண்டறியார் போலும். கனவில் வருவதை அவர்கள் அறிந்திருந்தால், அவரைப் பழிக்கமாட்டார்கள்.

முன்பு 'நினைவில் வாழும் வாழ்வு' என்றதுபோல, இவை 'கனவில் வாழும் வாழ்வு' எனலாம். காதல் வாழ்வில் பெரிதும் இதுவே இயல்பாகும்.

## 123. பொழுது கண்டு இரங்கல்

பிரிவுக் காலத்தில் தனித்திருக்கும் தலைவிக்கு மாலை நேரமும் அச்சூழலும், முன்னைய இன்ப நினைவை எழுப்பித் துன்பப்பட வைக்கும். அதனால் மாலைப்பொழுது கண்டு தலைவி வருந்துவாள்.

1221. **மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்**
**வேலைநீ வாழி பொழுது.**

பொழுதே! நீ வாழி! நீ 'மாலை' என்னும் பெயருடையாய் ஆயினும் மாலைப்பொழுது அல்லை; மணம் செய்து கூடி வாழ்ந்த மகளிர், தம் கணவரைப் பிரிய நேரும்போது, அவர்களின் உயிரை உண்ணும் ஒரு வேலாக ஆகின்றாய்.

1222. **புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்**
**வன்கண்ண தோநின் துணை.**

ஒளிமங்கி, மயங்கிய நிலையிலுள்ள மாலைப்பொழுதே! நீ வாழ்வாயாக! நீயும் எம்மைப்போலத் துன்பமுடையையாய்க் காணப்படுகிறாய்! எம் துணைவனைப் போல, உன் துணையும் வன்னெஞ்சம் உடையதோ? கூறுவாயாக!

ஒளிகுன்றி, இருள் சூழ்ந்து மறையப் போகிற மாலைப்பொழுதைப் பார்த்தால், அதுவும் துணையைப் பிரிந்து வாடி வருந்துவது போலத் தோன்றுகிறது.

1223. **பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்**
**துன்பம் வளர வரும்.**

பனி பெய்து நடுக்கமுற்றுப் பசலை நிறமடைந்து குளிரால் தானும் துன்புறு மாலைப்பொழுது. எனக்கும் வாழ்க்கையில் வெறுப்புத் தோன்றி இனி வரப்போகும் இரவில் மேன்மேலும் துன்பம் வளருமாறு என்னிடம் வருகின்றது. எவ்வாறு பொறுத்திருப்பேன்?

1224. காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்.

காதல் துணைவர் உடனிருந்தபொழுதெல்லாம் என் உயிர் தளிர்க்க வந்த இம்மாலைப்பொழுது, அவர் இல்லாத இப்பொழுது, கொலைக் களத்தில் பகைவர் வருமாறு போல என் உயிரைக் கொல்லுதற்கு வருகின்றது.

1225. காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை?

என் துணைவர் பிரிந்துபோன காலத்தில், துன்பம் தருகின்ற இரவுப் பொழுதுக்கு ஒரு முடிவாய் வந்து, அதைத் தவிர்க்க உதவுகின்ற காலைப் பொழுதுக்கு யான் செய்த நன்மை என்ன? அவர் உடனிருந்த காலமெல்லாம் இன்பம் தந்த மாலைப்பொழுது, பிரிந்த இப்பொழுது அளவற்ற துன்பம் தருவதற்கு, அதற்கு நான் செய்த பகை என்ன?

1226. மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன்.

கூடியிருந்த காலத்து இன்பம் தந்த மாலைப்பொழுது பிரிவில் இத்துணைத் துன்பம் தருமென்பதை, என்னை மணந்த துணைவர் பிரியாத காலத்தில் அறிந்தேனில்லை. அறிந்திருந்தால் பிரிவிற்கு உடம்பட்டிருக்க மாட்டேன்.

1227. காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்.

இக்காமநோயாகிய பூ காலைப்பொழுதில் அரும்பி, பகற்பொழுதில் முதிர்ந்த மொட்டாகி, மாலைப்பொழுதில் மலரும். பூ காலத்தோடு பொருந்தி வளர்வதுபோலக் காமவுணர்வும் காலத்தோடு பொருந்தி வளர்வதாகும்.

1228. அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.

முன்பெல்லாம் இனிதாய் ஒளித்த இடையனின் புல்லாங்குழல், இப்போது பிரிவின்கண் நெருப்பைப்போலச் சுடுகின்ற மாலைப்பொழுதின் வரவை முன்னுணர்த்தும் தூதாகி, என்னைக் கொல்லும் படைக் கருவி போலவும் ஆயிற்று.

1229. பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

துன்பப்படுபவர் தம்மைப்போல் ஊரெலாம் வருந்துவதாக நினைப்பது உளவியல். கண்டாரனைவரும் அறிவு மயங்குமாறு பகைகொண்டு படையெடுப்பது போல ஒளிமங்கி மாலைநேரம் வருகிறது. அதனால் இவ்வூர் முழுவதுமே என்னைப்போல் மயங்கித் துன்பத்தில் உழல்கின்றது. படர்தருதல் - பகைகொண்ட படைபோல மேலெழுந்து வருதல்.

1230. **பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை**
**மாயும்என் மாயா உயிர்.**

இதுகாறும் பிரிவைப் பொறுத்து இறவாதிருந்த எனது உயிர், ஒளிமங்கி மயங்கும் இம்மாலைப்பொழுதில், பொருள் தேடும் இயல்பினராகிய என் கணவரை நினைத்து இறந்துபடுகின்றது. உயிர் போவதுபோன்ற துன்பம் அது.

## 124. உறுப்பு நலன் அழிதல்

பிரிவுத் துன்பத்தால் தலைவியின்கண் தோள் நுதல் முதலிய உறுப்புக்கள் தம் அழகு கெட்டு நலிதல்.

1231. **சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி**
**நறுமலர் நாணின கண்.**

நம்மிடத்திலே பிரிவுத் துன்பம் என்ற சிறுமையைத் தங்குமாறு செய்துவிட்டுத் தொலைநாடு சென்றார் நம் காதலர். அவரை நினைத்து அழுதலால் உன் கண்கள் ஒளியிழந்தன. அதனால் முன்பு உன் கண்களுக்கு நாணிய நறுமணமிக்க மலர்களைக் கண்டு, இப்போது உன் கண்கள்தாம் நாணின. கண்கள் ஒளியிழத்தலால், மலர்களுக்கு ஒப்பாகாமல், வெட்கப்படலாயின என்று தோழி கூறுகிறாள்.

1232. **நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்**
**பசந்து பனிவாரும் கண்.**

நிறம் பசந்து, நீர் கொட்டுகின்ற நின் கண்கள், நம்மை விரும்பி மணந்தவர் இப்போது அன்பு செய்யாமையை ஊரறியச் சொல்லுவனபோல் உள்ளன. ஆகவே நீ ஆற்றியிருப்பதே நல்லது என்று தோழி கூறுகின்றாள்.

1233. **தணந்தமை சால அறிவிப்ப போலும்**
**மணந்தநாள் வீங்கிய தோள்.**

காதலர் மணந்தபொழுது இன்பமிகுதியால் பூரித்திருந்த நின் தோள்கள், இன்று அவர் பிரிந்தமையை விளக்கமாக எல்லோர்க்கும் அறிவிப்பனபோல் மெலிகின்றன. இது தகாது என்று தோழி ஆறுதல் கூறுகிறாள்.

**1234. பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்**
**தொல்கவின் வாடிய தோள்.**

காதல் துணைவர் பிரிதலால், அவரால் அண்மையில் பெற்ற அழகுடன் முந்தைய இயற்கையழகையும் இழந்த உன் தோள்கள் இன்று மேலும் மெலிந்து போயின; தம் பருமனை இழந்து, பசும்பொன் வளையல்கள் கழன்று விழலாயின என்று தோழி தலைவிக்காகத் தானும் வருந்துகிறாள்.

**1235. கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு**
**தொல்கவின் வாடிய தோள்.**

வளைகள் கழன்றுவிழப் பழைய இயற்கையழகையும் இழந்த நின் தோள்கள், பிரிந்து குறித்த காலத்துத் திரும்பாத கொடியவரது கொடுமையைத் தாமே யாவருமறியச் சொல்கின்றன. பழைய அழகு கெட்டதனால், இம்மாறுதல் ஊராரால் அறியப்பட்டு கணவனைக் கொடியவன் என்று சொல்ல வைக்கின்றது. தோழி ஆற்றியிரு என வற்புறுத்துகிறாள்.

**1236. தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்**
**கொடியர் எனக்கூறல் நொந்து.**

யான் ஆற்றியிருக்கவும் என்னையுமறியாது வளையல்கள் கழன்று விழுமாறு என் தோள்கள் தாமே மெலிவதைக் கண்டு நோகின்றேன். அதைக் கண்டு, அவரைக் கொடியர் எனக் கூறுதலைக் கேட்டு, என் மனம் மேலும் நோகின்றது. காதலர் பிரிந்தமையைவிட, அவரைக் கொடியவர் எனப் பிறர் கூறுவதற்கே மனம் நோகின்றேன் என்று தலைவி வருந்துகிறாள். என்னையுமறியாது, என் தோள் மெலிகிறதே, யான் என் செய்வேன் எனத் தன்னை ஆற்றிய தோழியிடம் அழுது கூறுகின்றாள்.

**1237. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்குஎன்**
**வாடுதோள் பூசல் உரைத்து.**

நெஞ்சே! கொடியவர் என்று கூறப்படுகிற என் தலைவரிடம் சென்று, மேன்மேலும் மெலிகின்ற என் தோளினால் ஊரில் எழுகின்ற பழிப்பேச்சைச் சொல்லி, அதனாலாம் பெருமையை அடைவாயோ? தலைவரை விரைந்து திரும்புமாறு செய்தலால், துன்பம் நீங்கும். அதனால் நெஞ்சிற்குப் பெருமை உண்டாகும். நெஞ்சத்தைத் தூதுவிட முயல்வது இது.

1238. முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

இறுகத் தழுவிய என் கைகளை யான் தலைவிக்கு நோகுமோ எனக் கருதிச் சிறிது தளர்த்தினேனாக. அவ்வளவில் இப்பசும்பொன் வளையணிந்த இவ்விளையாளது நெற்றி பசலையுற்றது. உடனே நெற்றி நிறம் மங்கியது தலைவியின் மென்மையைக் காட்டுகிறது.

1239. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

அங்ஙனம் யான் கைகளைத் தளர்த்தியபோது, நாங்கள் இருவரும் தழுவியிருந்த நிலையில் சிறு இடைவெளி தோன்ற, அதனூடே குளிர்ந்த காற்று உள் நுழைந்து சென்றது. அவ்வளவில் இவ்விளையாளது பெரிதாய குளிர்ச்சிமிக்க கண்கள் பசலையுற்றன. கண்கள் பசந்து நிறம் மாறியமை அடுத்து நிகழ்ந்ததாம். போழ - பிளக்க. ஒட்டிய உடல்களைப் பிளந்து செல்வதுபோல் காற்று உள்நுழைந்து சென்றதாம். ஈருடல் ஓருடலாய் ஆனதுபோல் தழுவியதைப் 'போழ' என்ற சொல் குறிக்கிறது.

1240. கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.

பிரிவால் கண் பசலையுற்றது பின்பு நிகழ. ஒளிபொருந்திய நெற்றி அதற்கு முன்னதாகவே பசலையடைந்ததல்லவா? ஒள்ளிய நெற்றி தனக்கு முந்திக்கொண்டதைப் பார்த்து, கண்ணிலேற்பட்ட பசலை நிறம் துன்பமுற்றதாம். மென்மைத் தன்மையிலேற்பட்ட போட்டியில் நெற்றி முந்திக்கொண்டது; கண் பிறப்பட்டுவிட்டது. அதனால் கண்ணிலேறிய பசலை நிறம் தான் முந்த முடியவில்லையே என வருந்தியதாம்.

இறுதி மூன்று குறள்களும் (1238, 1239, 1240) வரிசை மாற்ற முடியாதபடி, ஓர் இயைபுபடத் தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளன. இதுபோல் மூன்று மூன்று அல்லது இரண்டு இரண்டு எனத் தொடர்புபடுத்தக்கூடிய குறள்கள் சில இடங்களில் காணப்படுகின்றன. எனினும், இங்கு வரிசை ஓர் இயைபு பொருந்த இருக்கிறது.

## 125. நெஞ்சொடு கிளத்தல்

ஆற்றாமை மிகவே, தலைவி தன் நெஞ்சை முன்னிலைப்படுத்தித் தன் துன்பங்களை வெளியிடுதல். பிறர்க்குச் சொல்வதற்கு வெட்கப்பட்டுத் தன் நெஞ்சோடு கூறி ஆறுதலைடைதல், அளவு கடந்த துன்பத்தில்தான். இவ்வாறு தனக்குத்தானே பேசிக்கொள்வர்.

1241. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே! எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து.

நெஞ்சே! எனக்கேற்பட்ட இக்காமநோயாகிய, தீராத துன்பத்தைத் தீர்க்கும் மருந்தொன்றை, அது எத்தகையதாயினும் யாதொன்றாயினும் நன்கு எண்ணிப் பார்த்து எனக்குச் சொல்லமாட்டாயா?

1242. காதல் அவரிலர் ஆகநீ நோவது
பேதைமை வாழியென் நெஞ்சு.

என் நெஞ்சே! வாழ்க! உன்னால் காதலிக்கப்பட்டவர் உன்னிடம் காதல் இல்லாதவராக இருக்கவும், நீ அவர் பொருட்டு வருந்துவது, உன் அறிவின்மையேயாகும்.

1243. இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல்.

நெஞ்சே! நீ காதலர் இருக்குமிடந் தேடிச் செல்லாமலும் இறந்துபடாமலும் இருந்து, அவர் எப்போது திரும்புவார் என நினைந்து வருந்துவதால் பயன் என்ன? இப்பிரிவுத் துன்பத்தைச் செய்து போனவரிடத்தில், நம்மிடம் இரக்கம் காட்டித் திரும்பி வரக் காணும் எண்ணம் இல்லையே!

1244. கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று.

நெஞ்சே! நீ அவர் இருக்குமிடத்திற்குச் செல்ல நினைத்தாயின், இக்கண்களையும் உடன்கொண்டு செல்வாயாக! இல்லாவிட்டால், இவை, அவரைக் காணும் ஆசையினால், 'நீ காட்டு' என்று என்னைத் தின்று தீர்க்கும்.

நெஞ்சினால் அவர் இருக்குமிடம் தேடிப் போக முடியும். நினைவினால், கண்களால் அஃது இயலாதன்றோ?

1245. செற்றார் எனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர்.

நெஞ்சே! யாம் தம்பால் அன்பு செய்யவும் தாம் எம்மிடம் அன்பு செய்யாத காதலரை, இவர் நம்மை வெறுத்தார் என்று சொல்லிக் கைவிடும் மனவலிமை நமக்குண்டோ?

அவர் விலகி விலகிப் போனாலும் அவரைப் பொறுமையால் ஈர்க்க முயல்வதே பெண்ணின் கடமையாகும்.

1246. **கலந்துணர்த்தும் காதலர்க் கண்டாற் புலந்துணராய்**
**பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு.**

என் நெஞ்சமே! நாம் ஊடினால், அதைக் கூடலின்ப ஆசை காட்டி நீக்கவல்ல நம் காதலரைக் கண்டால், சிறிது நேரமேனும் ஊடிப் பிறகு கூட மாட்டாய். அத்தகைய நீ அவரிடம் சினங்கொண்டதுபோல் பொய்யாக நடிக்கின்றாய்! அது ஏன்? கண்டபோது மறுக்க இயலாத நீ காணாதபோது வெறுக்க முயல்வது ஏன்?

1247. **காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே!**
**யானோ பொறேன்இவ் விரண்டு.**

என் நல்ல நெஞ்சமே! காமம் நாணம் எனும் இரண்டுள், நீ ஒன்று காமத்தைக் கைவிடு; அல்லது நாணத்தை விட்டுவிடு. இவை இரண்டையும் நீ ஒருசேர வைத்துக்கொள்ள விரும்பினால், ஒன்றுக்கொன்று மாறுபட்ட அவ்விரண்டையும் தாங்கும் ஆற்றல் எனக்கில்லை.

1248. **பரிந்தவர் நல்காரென்று ஏங்கிப் பிரிந்தவர்**
**பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு.**

என் நெஞ்சே! அவர் நம்பால் இரக்கப்பட்டு வந்து இன்பம் நல்கமாட்டார் என்பது தெரிந்தும் ஏங்கி, நம்மைப் பிரிந்து போனவர் பின் நீ செல்கின்றாய்! மிகவும் பேதையாய் இருக்கின்றாய்!

1249. **உள்ளத்தார் காத லவரால் உள்ளிநீ**
**யாருழைச் சேறியென் நெஞ்சு.**

என் நெஞ்சே! காதலர் உன் உள்ளத்தினுள்ளே உள்ளாராக, நீ மிகவும் ஆராய்ந்து தேடி, புறத்தே யாரிடத்துச் செல்கின்றாய்?

1250. **துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா**
**இன்னும் இழத்தும் கவின்.**

நம்மை நெருங்காது நீங்கிப்போன காதலரை நம் மனத்தகத்தே விடாது கொண்டுள்ளதால், மேலும் மேலும் நாம்தான் நம் அழகை இழக்கப்போகின்றோம்.

## 126. நிறையழிதல்

மறை (இரகசியம்) பிறர் அறியாது காப்பதும், மனத்தை ஒருவழி நிலைநிறுத்துவதுமே 'நிறை' எனப்படும். தலைவி காமமிகுதியால், தன்

மனத்தை அடக்க இயலாத நிலையில், வாய்விட்டு வெளிப்படுத்திப் பேசுதல் நிறை அழிதலாகும்.

**1251. காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்**
**நாணுத்தாழ் வீழ்த்த கதவு.**

நாணம் என்னும் தாழ்ப்பாளிட்டுப் பூட்டப்பட்ட நிறை என்னும் கதவைக் காமம் என்னும் குந்தாலி முறித்து உடைக்கும். யான் அதைத் தடுக்க இயலாதவளாய் உள்ளேன்.

இதுவரை நிறை என்னும் கதவு பூட்டப்பட்டிருந்தது. நாணம் என்ற தாழ்ப்பாளுடன் கூடிய அக்கதவு, இப்போது காமம் என்ற கோடரியால் உடைக்கப்படுகிறது.

**1252. காமம் எனவொன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை**
**யாமத்தும் ஆளும் தொழில்.**

காமம் என்று சொல்லப்பட்ட ஒன்றுக்குக் கண்ணோட்டமில்லை. அது என் நெஞ்சத்தை, எல்லோரும் செயலற்று உறங்கும் நள்ளிரவிலும், ஆட்டிப் படைக்கின்றது. அதனால் நான் படும் துன்பத்திற்கு அளவில்லை.

**1253. மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்**
**தும்மல்போல் தோன்றி விடும்.**

நாகரிகங்கருதி யான் என் காமத்தை என்னுள்ளே மறைக்கவே முயல்கின்றேன். ஆனால் அது என் வசமின்றி, தும்மல் திடீரெனத் தோன்றி விடுதல்போல, வெளிப்பட்டு விடுகின்றது.

தும்மலை யாரும் மறைக்கவோ, அடக்கவோ இயல்வதில்லை. அதுபோல் காமமும், தானே வெளிப்பட்டுவிடும் தன்மையதாகும்.

**1254. நிறையுடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்**
**மறையிறந்து மன்று படும்.**

இன்று வரைக்கும் யான் என்னை மனத்தை அடக்கி ஒருவழி நிறுத்தும் நிறையுடையேன் என்று கருதிக் கொண்டிருந்தேன். அது தவறாயது. இன்று என் காமம் யான் மறைத்தலையும் கடந்து பலருமறிய அம்பலமாகிவிட்டது

**1255. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்**
**உற்றார் அறிவதொன்று அன்று.**

தம்மை வெறுத்துச் சென்று வருத்தியவரின் பின் செல்லாத மானவுணர்ச்சியாகிய பெருமிதப் பண்பு, காமநோய் அடைந்தவர் அறிவதொன்று அன்று.

தம்மை இகழ்ந்து போனவர்பின் தாம் தாழ்ந்து மனத்தைச் செலுத்துதல் மானமுடையார்க்கு அழகன்று. ஆனால் காமநோயுற்றார் அதனைக் கருதார்.

**1256. செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ**
**எற்றென்னை உற்ற துயர்.**

நம்மைப் பிரிந்து சென்று வருத்தியவரின் பின்னே யான் ஏக்கமுற்றுச் செல்லுதலை வேண்டுதலால், என்னை அடைந்த இக்காமநோய் எத்தகையதாய் இருக்கிறது? ஐயோ, மிகவும் இரங்கத்தக்கதாயிருக்கிறது!

உதைத்த காலை முத்தமிடச் செய்வது போன்றதிது. முறைதானா?

**1257. நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்**
**பேணியார் பெட்ப செயின்.**

நம்மால் விரும்பப்பட்டவர் வந்து காமத்தால் நாம் விழையும் கலவியின்பங்களைச் செய்வாராயின், நாணம் எனும் ஒன்றையும் நாம் அறியாதவராவோம். நிறை அழிந்து காதலரைக் கூட நேருமாம். முன்பிருந்த கோபமெல்லாம் ஒன்றுக்கும் உதவாமல் போய்விடும்.

**1258. பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்**
**பெண்மை உடைக்கும் படை.**

பலவித மாயங்களைச் செய்து மயக்கும் காதலனது தாழ்ந்த, மென்மையான இனிய சொற்களல்லவா, நம் நிறை என்னும் பெண்மைப் பண்பாகிய கோட்டையை அழிக்கும் படையாகும். பிரிந்து துன்பம் தந்த அவன் திரும்பிவந்து, பலவாறு பணிவும் அன்பும் கலந்த சொற்களைப் பேசி ஒரு நொடியில் அவள் மனத்தை மாற்றிவிடுகின்றான். அதனால்தான் 'பலமாயம் செய்யும் கள்வன்' என்கிறாள்.

**1259. புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்**
**கலத்தல் உறுவது கண்டு.**

பிரிந்த காலம் திரும்பி வந்தபொழுது, அவருடன் ஊடல் கொள்வோம் என நினைத்துக்கொண்டு சென்ற யான், அவரைக் கண்டதும் என் நெஞ்சம் நிலையில் நில்லாது என்னை முந்திக்கொண்டு அவரைச் சென்று சேர்வதைக் கண்டு, இனிப்புலத்தல் இயலாதென்று, உடனே அவரைத் தழுவிக்கொண்டேன். சீற்றமெல்லாம் உடனே பறந்துவிடும். இதுவே காமத்தின் இயல்பு.

1260. நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல்.

கொழுப்பினைத் தீயிலிட்டால் எங்ஙனம் உருகுமோ, அதுபோலத் தம் காதலரைக் கண்டால் உருகும் நெஞ்சினையுடைய மகளிர்க்கு, அக்காதலர் அருகில் வந்து கூடுங்கால், ஊடி எதிர்த்து நிற்போம் எனக் கருதுதல் இயலுமோ? காமத்தின் இயல்பாகிய இது, பாலியல் உளவியல்.

## 127. அவர்வயின் விதும்பல்

காதலர் எப்பொழுது வருவாரென எண்ணி, அவரைக் காணும் ஆசையினால் தலைவி ஏங்கித் துடித்தல். விசும்பல் - ஆசை மிகுதியால் நேரில் கண்டு கூடத் துடித்தல். பசி எடுப்பதுபோல், கற்பியலில் தொடக்கம் முதல் தலைவன் தலைவியரிடம் காமவுணர்வு தோன்றி, வளர்ந்து, உச்சநிலையடைதலை விளக்கப்படுதல் காணலாம்.

1261. வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.

அவர் பிரிந்துபோன நாள்களைச் சுவரில் கோடிட்டு வைத்து, அக்கோடுகளைத் தொட்டுத்தொட்டு எண்ணியதால் என் விரல்களும் தேய்ந்து போயின. அது மட்டுமன்றி அவர் வரும் வழியைப் பார்த்துப் பார்த்து என் கண்களும் ஒளி இழந்து பூத்துப் போயின.

அக்காலத்தில் நாட்காட்டி இல்லை. எனவே பொதுவாக மகளிர் வீட்டுச் சுவரில் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு கோடிட்டு, எண்ணிப் பிரிந்த காலத்தைக் கணக்கிட்டனர்.

1262. இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து.

விளங்கும் அணிகளையணிந்த தோழியே! எக்காலத்தும் என் காதலரை மறவேன். அவ்வாறன்றி, இன்று மறந்தேனாயின், அக்கணமே என் தோள் அழகை இழந்து கை வளையல்கள் முதலாய அணிகள் கழன்றுவிழுமாறு மெலிந்து போவேன்.

1263. உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன்.

என் கணவர் இன்பத்தை நச்சாது, பகைவரை வெல்லுதற்குரிய வலிமை ஒன்றையே விரும்பித் தம் ஊக்கமே தமக்குத் துணையாக நம்மைப்

பிரிந்து சென்றார். அவர் உறுதியாகத் திரும்பி வருவார் என அதையே நச்சி, அவ்வாசையினால்தான் இன்னும் உயிருடன் இருக்கின்றேன்.

**1264. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் நெஞ்சு.**

காம இன்பத்தைக் கருதாது நம்மைப் பிரிந்து சென்றவர், வினை முடிதலின் இப்போது அக்காமவுணர்வு கூடப் பெற்றவராய்த் திரும்பி வரப்போகிறார் என்பதை நினைத்து என் மனம் கிளைதோறும் பற்றித் தாவித்தாவி ஏறுகின்றது. அதாவது காணும் ஆசையால், மேலும் மேலும் பூரித்து எழுகின்றது!

'கோடுகொ(ண்)டு ஏறுதல்' ஒரு மரபுத்தொடர். மரக்கிளைகளை ஒன்றன்மேல் ஒன்றாகப் பற்றி ஏறி ஒருவர் அதன் உச்சிக்கே போவதுபோல, மனம் கிளர்ந்து மேன்மேல் பூரித்து உணர்ச்சியின் உச்சத்தை அடைதல்.

**1265. காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்கும்என் மென்தோள் பசப்பு.**

என் கண்கள் நிறையும் வகை என் கணவனை யான் நன்றா காண்பேனாக. அங்ஙனம் கண்ணாரக் கண்டவுடன் என் மெல்லிய தோளின் பசலை நோய் தானே நீங்கும்,

கண்ணாரக் காணல், மனம் நிறையும்படி ஒரே ஆர்வமாய்ப் பருகுவதுபோல் பார்த்தல். அவ்வாறு கண்ணாரப் பார்த்தாலே பசலை நோய் நீங்கிவிடுமாம்.

**1266. வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட.**

பல நாட்களாக வருவார் வருவாரென எதிர்பார்க்கப்பட்ட என் கணவர் ஒருநாள் என்னிடம் வருவாராக. அங்ஙனம் வரின், மேனியை வாட்டும் இப்பசலை நோய் முழுவதும் கெடுமாறு, அவ்வின்பத்தை ஆசைதீரப் பருகுவேன்! ஒரு நாளேனும் வாரா என ஆசை துரப்பக் கூறியது. பருகுவன் என்பது, இணைவிழைச்சின் உச்சம்.

**1267. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்அன்ன கேளிர் வரின்.**

கண்போல் சிறந்த என் கணவர் எதிர்பாராது வருவாராயின், காலம் நீட்டித்து வந்ததற்காக ஊடுவேனா? ஆற்றாமை காரணமாக ஓடித் தழுவிக்கொள்வேனா? என்னை மறந்து ஆசைத்தீரக் கூடி மகிழ்வேனா? எவ்வாறு நடந்துகொள்வேனோ? இதுதான் விதும்புதல்; வேட்கையால் ஏற்படும் வேகம்.

1268. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து.

வேந்தன் போரில் ஈடுபட்டு அதனை வென்று திரும்புவானாக! அங்ஙனம் வென்றால் என் கணவர் உடனே வீடு திரும்புவராகலின், வீட்டில் அவருடன் கூடியிருந்து, அன்றைய மாலைப்பொழுதில் விருந்து படைத்துக் கொண்டாடுவோம். அப்படி ஒரு மாலைப்பொழுது வந்தால், அதைக் கொண்டாட நினைக்கிறது ஆசை நெஞ்சம்.

1269. ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு.

தொலைதூரம் சென்ற என் கணவர், வருவதாகச் சொன்ன நாளை மனத்தில் குறித்து வைத்துக்கொண்டு, அந்நாள் எப்பொழுது வருமென ஏங்கி இருக்கும் மகளிர்க்கு, ஒருநாள் ஏழு நாள்களைப்போல நீண்டு செல்லும். கூடியிருக்கும்போது பலநாள் ஒருநாள்போல் ஓடிவிடும்; பிரிந்திருக்கும்போது ஒரு நாள் பல நாள்போல் நீண்டு கொண்டேயிருக்கும். இது ஒரு மனநிலை.

1270. பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம் உறினென்னாம்
உள்ளம் உடைந்துக்கக் கால்.

பிரிவினால் வருந்தி உள்ளம் உடைந்து சுக்கு நூறாகிவிட்ட பிற்பாடு, அவர் நிச்சயம் வருவார் என்ற உறுதியைப் பெற்றுப் பயன் என்ன? அவர் வந்து விட்டாரென்றாலும் அதனால் பயனென்ன? அதுமட்டுமன்றி வந்தவர் மெய்யுறத் தழுவிக்கொண்டாலும் பயன் என்ன? இறந்துபடும் நிலை வந்துவிட்டபின், இவற்றால் பயனில்லை. கண் கெட்டபிறகு சூரிய வழிபாடு ஏன் என்பதே தலைவியின் கேள்வி.

## 128. குறிப்பறிவுறுத்தல்

காதலர்கள் தம் மனக் குறிப்பைப் புறத்தே உடம்பில் தோன்றும் மெய்ப்பாடுகளால், ஒருவருக்கொருவர் அறியுமாறு செய்தல், பிரிந்து வந்த தலைமகன், தலைவி தன்னிடம் மிகுந்த காதல் விழைவுடன் இருந்ததை அவள் குறிப்புக்களால் அறிவுறுத்த, அறிகின்றான்; அதுபோலத் தலைவி, தலைவன் வந்து கூடியிருந்தபொழுதும், மீண்டும் பிரிவான் என்ற அச்சமே தன்னிடம் மேலோங்கி நிற்பதை வெளிப்படுத்த அதை அவன் அறிகின்றான். குறிப்பு அறிதல்தான் அறிதல்; அறிவுறுத்தல் தன் குறிப்பைப் பிறர்க்கு அறிவுறுத்தல்.

1271. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன் றுண்டு.

நீ நாணத்தால் மறைக்க முயன்றாலும், உன் கட்டுப்பாட்டைக் கடந்து, அங்ஙனம் மறைக்கவியலாத உன் மையெழுதிய அழகிய கண்கள், எனக்குச் சொல்ல முயல்வதொரு செய்தி உண்டு. அவள் அடக்க முயன்றாலும் அழகிய அக்கண்கள் இணைவிழைச்சை கூடி மகிழ விரும்புவதைக் கைகடந்து தலைவனுக்குச் சொல்லி விடுகின்றனவாம்.

1272. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது.

என் கண் நிறைந்த அழகும் மூங்கில்போல் திரண்ட தோளுமுடைய இவ்விளையவளுக்குப் பெண்மை நிறைந்த தன்மை பெருமை தருகிறது. தன் காமவுணர்வைக் குறிப்பாலன்றி வெளிப்படுத்தாத பெண்மையின் பெருமையைத் தலைவன் வியக்கின்றான். அவள் தன் குறிப்பினால், இணைவிழைச்சை அறிவுறுத்திய திறத்தைத் தலைவன் வியந்து கூறுவது இது.

1273. மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன்று உண்டு.

கோக்கப்பட்ட பளிங்கு மணிகளின் உள்ளே கிடந்து, வெளியே நுண்ணியதாய்ப் புலப்படும் நூல்போல, இவ்விளையவளது அழகின்கண்ணே, காமத்தால் திகழ்வதொரு குறிப்பு உளது. பிரிந்து வந்த தலைமகன், தலைவியின் அழகில் தன்னை ஈர்ப்பதொரு காமக் குறிப்புத் திகழ்வதைக் காண்கின்றான்.

1274. முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு.

அரும்பு முதிர்ந்து முகிழ்க்கும் நிலையில் அதனுள்ளிருந்து புறத்தே வெளிப்பட முயலும் நறுமணம்போல, இவ்விளையவளது மலரும் நிலையிலுள்ள புன்னகையாகிய மொட்டுக்குள் புணர்ச்சியின்பத்தை வேண்டும் குறிப்பொன்று உளது. தலைவி தன் மெய்ப்பாடுகளால் இங்ஙனம் தன் மனக்குறிப்பை அறிவுறுத்துவதைத் தலைவன் நுட்பமாய் அறிந்து கொள்கின்றான். அவள் குறிப்பால் அறிவுறுத்துவதை அவன் அறிகின்றான்.

1275. செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கும் மருந்தொன்று உடைத்து.

என் வரவால் பூரித்துச் செறிவாய்ப் பொருந்திய வளையல்களையுடைய என் மனைவி, மறைமுகமாக ஒரு கள்ளக் குறிப்பைக் காட்டிச் சென்றாள். அக்குறிப்பு யான் அடைந்த காதல் துன்பமான, ஆசை நோயைத் தீர்க்கும் ஒரு மருந்தையுடைதாகும். அவளும் புணர்ச்சி விருப்பைக் காட்டியது தலைவன் ஆசை நோய்க்கு மருந்தாகியது.

1276. பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வ துடைத்து.

யான் ஊடினதற்கு மிகவும் பரிந்து அவ்வூடலைத் தீர்த்து, யான் விரும்பும் கலவியின்பங்களைத் தந்து தலைவர் என்னைக் கூடுகின்றார். இவ்வாறு அவர் பொழியும் அன்பு, யான் மீண்டும் அரிதாக ஆற்றியிருக்குமாறு, என்னைப் பிரியக் கருதி அவர் திட்டமிடும் அன்பின்மையையே குறிப்பாய் உணர்த்துகிறது. தலைவன் பொழியும் அன்பு, பிரியக் கருதும் அவனது அன்பின்மையின் வெளிப்பாடே என்று தலைவி நுட்பமாய்க் கண்டு கொண்டு தோழியிடம் வருந்துகிறாள்.

1277. தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை.

தோழி தலைவன் பிரியக் கருதுவதைத் தலைவிக்குக் கூறத் தொடங்கவே, தலைவன் நீ கூறுவதற்கு முன்பே என் வளையல்களே எனக்குணர்த்திவிட்டன எனக் கூறுகிறாள். குளிர்ந்த துறையையுடைய தலைமகன், நம்முடன் உடம்பால் கூடியிருக்கும்பொழுதே, உள்ளத்தால் பிரிய முடிவு செய்துவிட்டமையை நம்மைவிட என் கைவளையல்கள் முன்னதாக உணர்ந்து கொண்டுவிட்டன. இனி நீ வேறு அறிவிக்க வேண்டுமா? பிரிவுக் குறிப்பை உள்ளம் உணர, உடல் வாட, தோள் மெலிய, கைவளை சோர்ந்து கழன்று விழலாயின. அனிச்சைச் செயல்போல், குறிப்பிற் குறிப்புணரும் நுட்பம் இது.

1278. நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து.

தோழி! எம் காதலர் எம்மைப் பிரிந்து சென்றது நேற்றுத்தான் என்றாலும் என் மேனி பசலையுற்று, ஒளி மயங்கி ஏழு நாள்களாகிவிட்டன!

மேனி பசந்து பல நாட்களாகிவிட்டன என்பாள் 'ஏழுநாளாயின' என்றாள். மிக விரைந்து நடப்பதைக் கூறும் முறை இது. வளையல்கள் கழலுமாறும் உடல் பசலையுறுமாறும் தலைவியின் உடல், அதுவாகவே குறிப்புணர்ந்து

மெலிகிறது. அந்த அளவு குறிப்பை அறிவுறுத்தலையும் அறிதலையும் இயல்பூக்கமாகக் காட்டுகிறார் திருவள்ளுவர்.

1279. **தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி**
**அஃதாண்டு அவள்செய் தது.**

என் காதலி, பிரியும் என் குறிப்பை அறிந்ததும், தன் கை வளையல்களைப் பார்த்தாள், அவை இனிக் கழன்றுவிழும் என்று; அடுத்து தன் மெல்லிய தோள்களையும் பார்த்தாள், அதற்கு ஏதுவாக அவை மெலியும் என்று; பின்பு என்னையும் அழைத்துச் செல்லுங்கள் என்பாள் போலத் தன் பாதங்களைப் பார்த்தாள். அப்பொழுது, அவள் செய்த குறிப்பு அவ்வளவே! ஒன்று என்னையும் உடனழைத்துச் செல்லுங்கள் அல்லது செல்லுவதைத் தவிருங்கள் எனத் தலைவி பேசாமல் பேசிக் குறிப்பால் அறிவித்த திறம் இது.

1280. **பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்**
**காமநோய் சொல்லி இரவு.**

தலைவி வாய்விட்டுப் பேசாமல், தன் கண்களாலேயே தனது காமநோயைச் சொல்லி, அதைத் தீர்க்குமாறு இரந்து வேண்டிக்கொள்ளும் பண்பாடுமிக்க முறை, பெண்மைப் பண்பில் சிறந்த பெண்மையையுடையதென்று பெரியோர் சொல்லுவர். மகளிரின் பெண்மைப் பண்பைத் தலைவன் வாயிலாக வியக்க வைக்கின்றார்.

## 129. புணர்ச்சி விதும்பல்

பிரிந்து கூடிய காலத்தில் தலைவியும் தலைவனும் கலவி இன்பம் துய்க்க ஒருவர் ஒருவரின் முந்தி விரைதல். கற்பியல் எனும் குடும்ப வாழ்க்கைப் பகுதி தொடங்கியதும் காதலை மிகுவிப்பது. பிரிவுகளேயாதலின் அதில் தொடங்கினார். அதுமுதல் பிரிவினால் ஏற்படும் வருத்தம், கொஞ்சம் கொஞ்சமாகக் கூடி வருதலையும் இருவரும் ஒருவரை ஒருவர் கூடி மகிழத் துடித்தலையும் (விதும்புதல்), குறிப்பால் கூட்டம் வேண்டுமென அறிவுறுத்தலையும் கூடி மகிழ்தலையும் பதின்மூன்று அதிகாரங்களில் நிரல்படப் படிப்படியாக வளர்த்துக் கூறி முடிக்கின்றார். உண்டது செரித்தபின்பு, 'துய்க்க துவரப் பசித்து' (944) என்பதுபோல, காம இன்பம் கூடி மகிழ்வதும் இடைவெளி விட்டு, நன்கு பசித்தபின் நுகர வேண்டும் என உணர்த்தும் திறம் இது.

1281. **உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்கில் காமத்திற் குண்டு.**

உண்டால் மட்டுமே களித்தலும் மகிழ்தலும் கள்ளுக்கு உண்டு. நினைத்த அளவில் களிப்பெய்துதலும் கண்ட அளவில் மகிழ்ச்சி அடைதலும் கள்ளுக்கு இல்லை; காமத்திற்கு உண்டு. காம இன்பத்தின் தொடக்கம் கண்டு மகிழ்தல்.

1282. **தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்**
**காமம் நிறைய வரின்.**

காம உணர்வு பனையளவினதாக மிகுந்து தோன்றுமாயின் அச்சூழலில் தம் காதலருடன் தினையளவுகூட ஊடாமை வேண்டும். அத்தகைய சூழல்களில் ஊடுதல் வருத்தத்தையும் வெறுப்பையும் உண்டாக்கக் கூடும். காம உளவியல் இது.

1283. **பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்**
**காணா தமையல கண்.**

நம்மைப் புறக்கணித்து, தான் விரும்புவனவற்றையே செய்தாலும் - அப்படிப்பட்ட கணவனாயினும் அவனைக் காணாமலிருக்க எம் கண்களால் இயல்வதில்லை. காரணம் அவனைக் காணுதலாலும் தன் துன்பம் நீங்கப்பெறும் என்ற நம்பிக்கையே.

1284. **ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து**
**கூடற்கண் சென்றதுஎன் னெஞ்சு.**

தோழி! தலைவர் பிரிந்து வந்தவிடத்து, அவரொடு ஊடவேண்டுமென்று எண்ணிக் கொண்டு சென்றேன்; சென்று கண்டதும் அதனை மறந்து என் நெஞ்சம் கூடுதற்கண் சென்றது. நேரில் கண்டதும், புணர்ச்சி விருப்பம், பழையதை மறக்கச் செய்யும்.

1285. **எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்**
**பழிகாணேன் கண்ட இடத்து.**

கண்ணுக்கு மை எழுதும்போது, எழுதுங்கோல் கண்ணின் இமையருகே செல்லுதலால், அக்கோல் கண்ணுக்குத் தெரியாது. அதுபோலக் கணவனைக் காணாதபொழுது அவரது குறைகளையே எண்ணும்நான், அவன் அருகில் வரக் கண்டதும் அக்குறைகளைக் கண்டிலேன். இதுவும் உளவியலே. பாராதபோது ஆயிரம் பேசியவள், பார்த்ததும் எல்லாவற்றையும் மறந்துவிடுவாள்.

1286. காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை.

கணவனைக் காணும்போது, அவளது தவறுகள் எவற்றையும் காணேன்; காணாதபொழுது தவறாயவை தவிர வேறு எவற்றையும் காணேன். அதாவது பார்க்காதபோது, அவன் செய்த துன்பங்கள் அனைத்தும் நினைவுக்கு வரும்; பார்த்ததும் அவை அத்துணை வன்மையாய் நினைவில் வராது மறந்துபோகும்.

1287. உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து.

தம்மை வெள்ளம் இழுத்துக்கொண்டு போய்விடும் என்பதை அறிந்து வைத்தும் ஓடுகிற நீரில் குதிப்பவர்களைப்போல, தலைவனுடன் ஊடினால் அது கடைசிவரை நீடிக்காது; நெஞ்சம் கைவிட்டுவிடும் என்பதை அறிந்து வைத்தும் தலைவனொடு ஊடிப் பயன் என்ன? பொய்த்தல் - தொடங்கிய ஊடல், நீடிக்காமல் கூடலாகிப் பொய்ப்படுதல்.

1288. இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.

தலைவனிடம் ஓடும் தன் மனநிலைமையைத் தலைவி கூறுதல். கள்வனே! தன்னை உண்டவர்க்கு இளிவரலைத் தரத்தக்க இன்னாதவற்றையே செய்யுமாயினும் கள்ளுண்டு களித்தவர்க்கு அதன்மீதே மேலும் மேலும் விருப்பம் ஏற்படுவதுபோல, உன் மார்பும் நீ எத்துணை இன்னாதவற்றைச் செய்தாலும் எங்களால் மேன்மேல் விரும்பப்படுவதாய் இருக்கிறது.

1289. மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

மென்மையுடைய மலரைக் காட்டிலும் மென்மையுடையது காமம்; அதன் செவ்வியறிந்து அனுபவிப்பவர் உலகத்தில் சிலரேயாவர். செவ்வி தப்பினால் இன்பம் குறைபடும். பக்குவமறிந்து இன்பம் துய்க்கவேண்டும் என்று தலைவன் கூறுவதிது. ஆசான் கூற்றுப் போலவும் உளது. காம இன்பத்தை, காலம் இடம் யாவுமறிந்து, செவ்வி தவறாமல் துய்க்க வேண்டும். இன்றேல் விலங்குகளின் நடத்தை போல ஆகிவிடும்.

1290. கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று.

என்னைவிடத் தன் மனம் கூடுவதற்குத் துடி துடித்து மிக விரைதலாலே, கண்ணால் சிவந்துகாட்டி ஊடிக் கலங்கினாள் என் காதலி. பெண்மை நிறைந்தாளின் கண்கள் சொன்ன குறிப்பு இது.

## 130. நெஞ்சொடு புலத்தல்

தலைவனொடு புலத்தற்கான காரணமிருந்தும், அவனைக் கூடுதற்கு விரைகின்ற நெஞ்சைப் பார்த்துத் தலைவி புலந்து பேசுதல்.

**1291. அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே**
**நீஎமக்கு ஆகா தது.**

அவர் நெஞ்சம் அவர் பக்கமே நின்று நம்மை நினையாதிருப்பதைப் பார்த்தும், என் நெஞ்சமே! நீ எம்பக்கம் நில்லாது அவரை நினைத்து ஏங்குதல் ஏன்?

**1292. உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்**
**செறாஅரெனச் சேறியென் நெஞ்சு.**

என் நெஞ்சமே! நம்முடன் உறவுகொள்ள விரும்பாதவரென்பதை உள்ளவாறு கண்டுவைத்தும், அவர் முன்புகாட்டிய அன்பால் இப்போதும் நம்மை வெறுக்கமாட்டாரென எண்ணி அவரிடம் செல்கின்றாய்! இது தகுமா?

**1293. கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ**
**பெட்டாங்கு அவர்பின் செலல்.**

நெஞ்சே! என்னைக்கேளாது, நீ விரும்பியவாறே அவரிடம் செல்கின்றாய்! இதற்குக் காரணம், உலகத்தார் பழமொழி சொல்வதுபோல், 'கெட்டுப்போனவர்க்கு நட்பாய் உதவுபவர் ஒருவருமில்லை' என்பதாலோ?

**1294. இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே**
**துனிசெய்து துவ்வாய்காண் மற்று.**

நெஞ்சே! தலைவரைக் கண்டதும் இன்பம் நுகரக் கருதுகிறாயே அல்லாமல் முதலில் சற்றே ஊடுவோம், பிறகு கூடுவோம் எனப் பொறுத்திருந்து இன்பம் அனுபவிக்கக் கருதமாட்டாய்! இனித் தலைவனோடு ஊடுவோம் என்பது போன்ற சிந்தனைகளை உன்னோடு எண்ணுவார் யார்? இனி யான் உன்னை நம்பி அது செய்ய மாட்டேன். நெஞ்சம் அவரைக் கண்டதும் அவளைக் கைவிட்டு விடுகிறதாம்.

1295. **பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்**
**அறாஅ இடும்பைத்துஎன் நெஞ்சு.**

காதலர் வரப்பெறாத பொழுது அவரைப் பொறாமைக்காக அஞ்சும்; பெற்றபொழுது பிரிவு வரக்கூடுமென அதற்கு அஞ்சும். இவ்வாறு என் நெஞ்சம் அஞ்சி அஞ்சியே நோவதால், எப்பொழுதும் இடையறாத இடும்பையே உடையதாயுளது.

1296. **தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்**
**தினிய இருந்ததுஎன் நெஞ்சு.**

தலைவனால் நேர்ந்த பிரிவுத் துன்பங்களைத் தனியே இருந்து சிந்திக்கத் தொடங்கினால், என் நெஞ்சம் என்னைத் தின்று தொலைக்கவே உடன் இருந்தது; அவனொடு புலத்தற்கோ, சினத்தற்கோ நினையாது.

1297. **நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்**
**மாணா மடநெஞ்சிற் பட்டு.**

தன்னை மறந்த காதலரைத் தான் மறக்க மாட்டாத என் மாண்பற்ற மடமைமிக்க நெஞ்சின் வயப்பட்டுச் சேர்ந்து, நான் உன் உயிரனைய நாணத்தையும் மறந்துவிட்டேன். இந்த நெஞ்சத்தால் எவ்வளவு தொல்லை? என் வெட்கத்தையும் மறக்கடித்துவிட்டது.

1298. **எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்**
**உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.**

காதலர்போல் உயிரனைய காதல்கொண்ட என் நெஞ்சம் நம்மை இகழ்ந்து போயினாரை நாமும் இகழ்ந்தால் அது நமக்கே இளிவாம் என்று கருதி, அவர் பக்கம் சேர்தற்கான நெறிகளையே நினைக்கும். உயிர்க் காதல் நெஞ்சல்லவா? உலகியலை நினைத்துப் பொறுமையைப் போதிக்கிறது.

1299. **துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய**
**நெஞ்சம் துணையல் வழி.**

ஒருவருக்குத் துன்பம் வந்தவிடத்து, அவர் தமக்கே உரித்தான அவருடைய நெஞ்சமே அவருக்குத் துணையாகாவிட்டால் வேறு துணையாவார் யார்?

1300. **தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய**
**நெஞ்சம் தமரல் வழி.**

தமக்கே உரித்தாகவுடைய தமது நெஞ்சம் தமக்கு உறவாய்நின்று உதவாத இடத்து, அயலார் உதவும் மனமுடைய உறவினராகாமை சொல்ல

வேண்டுமோ? பிறர் யாரும் உதவாமையைச் சொல்லவும் வேண்டுமோ? அது எளிதில் நடக்கக்கூடியதே. தஞ்சம் - எளிது, மிக இயல்பானது.

## 131. புலவி

தலைவன் தலைவியரிடையே நிகழும் சிறுசிறு ஊடல்கள் இவை; கூடலின்பத்தை மிகுவிப்பன; கலவிகளுக்கிடையேயான இடைவெளியைக் கூட்டி, தீரப் பசித்தவன் ஆரப் புசிப்பது போல, பக்குவப்பட்ட காதலின்பத்திற்கு வழிவகுப்பன. திருவள்ளுவர் கலவியைவிடப் புலவியையே மிக வற்புறுத்துகிறார். அவர் கூறும் புலவி, ஊடல் என்பன கணவன் மனைவியரின் இனிய நட்பு, மகிழ்வு தரும் உரையாடல்கள், செல்லக் கோபங்கள், சிரிப்பு விளையாட்டுக்கள், இன்பப் பொழுதுபோக்குகள் என இவை யாவும் அடங்கியவையாகும்.

**1301. புல்லா திராஅப் புலத்தை அவர் உறும்**
**அல்லல்நோய் காண்கம் சிறிது.**

இன்றைய இராப் பொழுதில் காதலரைத் தழுவாது விலகி நின்று ஊடுவாயாக! அங்ஙனம் ஊடி அவர் அடையும் துன்பத்தையும் நாம் சிறிது காண்போமாக!

காரணம் ஒன்றால் புலப்பதும் உண்டு; காரணமின்றியும் புலப்பதுண்டு. இது காரணமின்றியே புலந்து, காதலனைச் சிறிது காலம் ஏங்க வைத்து, இது பின்னைய இன்பத்தை மிகுவிப்பதாகலின், காதலனுக்குச் சிறிதளவு அல்லவை உண்டாக்கி வேடிக்கை பார்ப்போம் என்று தோழி சொல்கிறாள்.

**1302. உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது**
**மிக்கற்றால் நீள விடல்.**

உண்பவற்றைச் சுவையுடையனவாய் ஆக்குதற்கு வேண்டிய அளவினதாக உப்பு அமைவதுபோல, கலவியை இன்பச் சுவையுடையதாக்குவதற்கு வேண்டிய அளவினதாகப் புலவி (ஊடல்) அமைதல் வேண்டும். அவ்வாறன்றி ஊடலை நீட்டித்தல் அவ்வுப்பைச் சிறிது கூடுதலாக இட்டுச் சுவையைக் கெடுப்பது போலாகும். தோழி தலைவிக்குக் கூறும் அறிவுரை இது.

**1303. அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்**
**புலந்தாரைப் புல்லா விடல்.**

தம்பால் ஊடல்கொண்டு புலந்த மகளிரை, அவ்வூடல் தீர்த்துத் தழுவிக் கொள்ளாமல் ஆடவர்கள் கைவிடுதல். முன்பே துன்பமுற்று வருத்தத்தில் ஆழ்ந்து கிடப்பவரை அதன்மேலும் மிக்க துன்பத்தைச் செய்து வாட்டுவது போலாகும். ஊடுவது மகளிர் இயல்பென்றால் ஊடல் தீர்ப்பது ஆடவர் கடமையாகும். தோழி தலைமகனுக்குக் கூறும் அறிவுரை இது.

1304. **ஊடி யவரை உணராமை வாடிய**
**வள்ளி முதலரிந் தற்று.**

தம்மொடு ஊடிய மகளிரை அவ்வூடல் தீர்த்துக் கூடாது நீங்குதல், ஏற்கெனவே நீரின்றி வாடிய கொடியை அடியில் அறுத்துவிடுவதுபோலாகும். ஊடல் உணர்த்தும் உடலைத் தீர்த்தல். வள்ளி-கொடி. தோழி தலைமகனுக்குக் கூறுவதிது.

1305. **நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை**
**பூஅன்ன கண்ணார் அகத்து.**

மலர் போன்ற கண்களையுடைய மகளிரிடம் வெளிப்படும் புலவியழகே, நற்பண்புகள் நிறைந்த நல்லவர்களாம் ஆடவர்களுக்கும் எழுச்சிதரும் இன்பமாகும்.

மகளிரால் புலக்கப்படுதலிலும், அதாவது சிறிது சிறிது ஊடி ஏதாவது சண்டையிடுவாள்போலப் பேசப்படுதலிலும் ஆடவர்க்கு ஓர் அழகிய இன்பப் பெருமிதமுண்டு. தலைமகன் தன்னுள்ளே கூறிக் கொள்வதிது.

1306. **துனியும் புலவியும் இல்லாயின் காமம்**
**கனியும் கருக்காயும் அற்று.**

துனி எனப்படும் பெரும்பிணக்கு இல்லையானால் காமம் பக்குவப்பட்ட கனிபோலச் சுவை தரும் (துனி ஏற்படின் அழுகியதாகிவிடும்). புலவி இல்லாவிட்டால் காமம் கருக்காய் (இளங்காய்) போல் துவர்ப்புடையாதாய்ச் சுவைபடாது (புலவி அமையின் முதிர்ந்த காய் பழமாதல் போலச் சுவை தரும்). காமம் எவ்வித ஊடலுமின்றிக் கருக்காய் போலாகாமல், முதிர்ந்த காய் பழமாதல்போல, புலவியால் நன்கு பழுத்த கனியாகி இன்பந்தர வேண்டுமென்றும் புலவியை நீட்டித்து அதைத் துனி (பெரும்பிணக்கு) ஆகும்படி விட்டுவிட்டால் கனி பதங்கெட்டது போலாகிச் சுவையின்பம் பயவாதென்றும் கூறுவதால் துனி கூடாதென்றும் புலவி வேண்டுமென்றும் விளக்கமாகிறது. புலவியும் ஊடலும் ஒன்றே; துனி முதிர்ந்த காலம் எனப்படும் பெரும்பிணக்கு. இதுவும் தன் தன்னுள் கூறிக்கொள்வது.

1307. **ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது**
**நீடுவ தன்றுகொல் என்று.**

ஊடலிலும் ஒரு துன்பம் உண்டு. அது யாதென்றால் ஊடல் நீட்டிக்கவே புணருமின்பம் காலம் நீட்டித்துப் போய்விடுமோ; அல்லது விரைந்து ஊடல் தீர்ந்து கூடுதல் வாய்க்குமோ என்னும் ஐயம் காரணமாக மனத்திலேற்படும் அச்சம். ஒருவேளை ஊடல் தீர்க்கப்படாமல், புணர்ச்சியின்பமே கைகூடாமல் போனால் என்செய்வதென்ற அச்சம் ஊடுபவர் நெஞ்சில் கிடந்து துன்புறுத்துமாம். 'புணர்வது நீடுவது கொல், அன்றுகொல்' என்று கூட்டிப் பார்த்தால் பொருள் புலப்படும். இதுவும் தலைவன் கூற்று.

1308. **நோதல் எவன்மற்று நொந்தாரென்று அஃதறியும்**
**காதலர் இல்லா வழி.**

நம்முடன் கூடி மகிழ்வதற்கே இவள் ஊடல் கொண்டு துன்புற்றாள் என, அவளது நோவினை அறியும் அன்புடைய காதலர் இல்லாதபோது, மனம் நொந்து ஊடுவதால் பயன் என்ன?

1309. **நீரும் நிழலது இனிதே புலவியும்**
**வீழுநர் கண்ணே இனிது.**

நீரும் நிழலின் கண்ணிருந்தால்தான் பருகுவதற்கு இனிதாகும்; அதுபோலக் கலவிக்கு இன்பச் சுவை தரும் புலவியும் அதை உணரும் அன்புடையாரிடமே இனிதாகும்.

1310. **ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம்**
**கூடுவோம் என்பது அவா.**

என் ஊடலைத் தீர்க்காமல், அது தானே வாடி உலர்ந்து ஒழியுமாறு விட்டுவிடும் வன்னெஞ்சரோடு கூடுவோம் என என் நெஞ்சம் ஏங்குவதற்குக் காரணம் அதனது ஆசையேயாம்.

கூடி மகிழ எண்ணும், தன் மனைவியின் உள்ளன்பை உணர்ந்து ஊடலை நீக்காத கணவனுடன் ஊடிப் பயன் இல்லை என்பதே இக்குறள்களின் கருத்து.

## 132. புலவி நுணுக்கம்

தலைவி புலத்தற்குக் காரணமில்லாதபோதும், நுண்ணிய கற்பனையான காரணங்களைப் படைத்துக்கொண்டு, தலைமகனுடன் ஊடிப்

பேசிச் சிரித்துத் தானும் மகிழ்ந்து தலைவனையும் மகிழ்விப்பது. மிக நுட்பமான காரணங்களைக் காட்டிப் புலத்தலால் புலவிநுணுக்கம் எனப்பட்டது.

**1311. பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்**
**நண்ணேன் பரத்தநின் மார்பு.**

உன் மார்பை பெண்மைத் தன்மையுடையார் எல்லாரும் தமக்குப் பொதுவென்று எண்ணித் தம் கண்களினாலே அதன் அழகைப் பருகுவர். அத்தகைய பரத்தமையையுடையாய்! நின் மார்பை யான் தீண்ட மாட்டேன். தனக்கேயுரிய கணவனது அழகைப் பிறரும் பார்த்து மகிழ்கின்றார்களே என்று பெண் மனம் சீறுகின்றது.

தலைவனின் அழகில் ஈடுபட்டதால்தான் இப்பொய்க்கோபம் வருகிறது. பரத்தமைக்கு ஆண்பால் பரத்தன் எனக்கொண்டு திருவள்ளுவர் புதுச்சொல் ஒன்றை ஆள்கின்றார்.

**1312. ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை**
**நீடுவாழ்க என்பாக்கு அறிந்து.**

பக்கத்திலிருந்தபோது ஊடல்கொண்டு அவருடன் பேசாதிருந்தோம். அப்போது அவர் திடீரென்று தும்மினார். தும்முகின்றவர்களை வாழ்த்துவது மரபாதலின், நாமும் தம்மை 'நீடுவாழ்க' என வாழ்த்திப் பேசத் தொடங்குவோம் என்பதைக் கருதி இன்றும் ஒருவர் தும்மும் போது 'நூறு, நூற்றி ஒன்று' என ஆயுளை நீட்டிக்க வாழ்த்துவதைக் காணலாம்.

**1313. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்**
**காட்டிய சூடினீர் என்று.**

யான் பக்கத்து நிலத்திலுள்ள மரக்கிளைப் பூ ஒன்றைச் சூடிக் கொண்டு வந்தேன். உடனே அவள், மற்ற நிலத்துப் பெண் ஒருத்திக்கு அடையாளம் காட்டுவதற்குத் தானே இப் புதுப்பூவைச் சூடி வந்துள்ளீர் என்று என்மீது சினந்து ஊடுகின்றாள். கோட்டுப் பூ - மரக்கிளையில் பூக்கும் பூ.

**1314. யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்**
**யாரினும் யாரினும் என்று.**

நம்மைப்போல் காதலுடைய இணைகள் பலர் இருந்தாலும், அவர்கள் யாவரினும் நாம் மிக்க காதலுடையவர்கள் என்ற கருத்தில், 'யாரையும் விட நாம் காதலம்' என்று கூறினேன். அவ்வளவுதான். எனக்குப் பல

காதலியர் இருப்பதாகவும் 'அவர்கள் அனைவருள்ளும் உன்னையே மிகுதியாகக் காதலிக்கின்றேன்' என நான் கூறியதாகவும் எடுத்துக்கொண்டு, 'யாரைக் காட்டிலும் யாரைக் காட்டிலும்' என்று ஊடத் தொடங்கிவிட்டாள்.

**1315. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள்.**

காதல் மிகுதியால் 'அன்பே! உன்னை இப்பிறவியில் பிரியமாட்டேன்' என்று கூறினேன். அவ்வளவுதான்! 'அவ்வாறானால் அடுத்த பிறப்பில் பிரிவீராக்கும்' என்பாள்போலக் கண்கள் நிறைய நீர் தளும்பலானாள்!

**1316. உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.**

'பிரிந்த காலத்தில் உன்னை நினைத்தேன்' என்று அவள் நினைவாக இருந்ததைச் சொல்லத் தொடங்கினேன். அவ்வளவுதான்! 'அவ்வாறானால் என்னை மறந்திருந்தீர் என்று சொல்லும்; மறந்தால்லலவா நினைப்பதற்கு' என்று சொல்லி, என்னைத் தழுவிக் கொள்ளாது, விலகிச் சென்று ஊடல் கொள்ளத் தொடங்கினாள்!

**1317. வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று.**

தும்மினால் - இன்று உண்ணும்போது புரைபோய்ச் செருமினால் யாரோ நினைப்பதால்தான், அது தோன்றுகிறதென்பது ஒரு சமுதாய மரபாகக் காணப்படுகின்றது. முன்பு தும்மினால் வாழ்த்துவதும் யாரோ நினைப்பதால்தான் தும்மல் வந்ததென்பதும் வழக்கமாக இருந்துளது. யான் தும்மியதும் உடனிருந்த தலைவி உடனே வாழ்த்தினாள். அடுத்த கணமே அதை மாற்றி, 'யார் நினைத்ததால் தும்மினீர்; அவள் யார்?' எனக் கேட்டு அழத் தொடங்கிவிட்டாள்!

**1318. தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.**

எனக்குத் தும்மல் வந்தது; தும்மினால் 'யார் உம்மை நினைத்தது' எனக் கேட்டு ஊடுவாள் என்பதால், நான் அத்தும்மலை அடக்க முயன்றேன். உடனே அவள், 'உமக்கு வேண்டியவர்கள் உம்மை நினைக்கின்றமையை எமக்கு மறைப்பதற்காகத்தானே தும்மலை அடக்குகின்றீர்!' எனச் சொல்லி அழத் தொடங்கினாள்.

**1319. தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று.**

அவள் ஊடும்போது மென்மையான இனிய சொற்களைப் பேசி அவ்வூடலைத் தவிர்க்க முயன்றாலும் 'நீ பிற மகளிரையும் இவ்வாறு தானே அன்புடன் இனிதாகப் பேசி ஊடல் தீர்ப்பீர்' என்று கூறி, அதற்காகச் சினந்து ஊடுகின்றாள். என்னதான் செய்வதென்று தெரியவில்லை.

**1320. நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்**
**யாருள்ளி நோக்கினீர் என்று.**

பேச்சும் செயலும் அவளுக்குக் கோபத்தை விளைவிப்பதால், அமைதியாய்ப் பேசாதிருந்து அவளது உறுப்புகளின் ஒப்பற்ற அழகை எண்ணி அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். 'உம்மால் காதலிக்கப்பட்டவர்களில் யாருடைய அழகுக்கு எனது அழகனைத்தும் ஒப்பாகுமென்று அப்படிப் பார்க்கின்றீர்' என அதற்கும் கோபப்படுகின்றாள். வாய் பேசாது பார்ப்பதும் குற்றமென்றால் என் செய்வது?

பெரும்பான்மையானவை பொய்க்கோபங்கள். காதல் வாழ்வில் அதனால் ஏற்படும் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. மேலும் இதனால் மனத்துக்கு ஒரு வெளிப்பாடு கிடைக்கிறது. மகிழ்வான சூழல் ஒன்றும் உருவாகிறது. வாழ்க்கை இதனால் இன்பமாகிறது.

## 133. ஊடலுவகை

ஊடல் காதலின்பத்தை மிகுவிப்பதால், அதனைத் தலைவனும் தலைவியும் உவந்து சிறப்பித்துப் பேசுதல்.

**1321. இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்**
**வல்லது அவர்அளிக்கு மாறு.**

அவரிடம் தவறொன்றுமில்லையானாலும் அவரொடு ஊடல்கொள்ளுதல் அவரை நம்மிடம் அன்பு காட்டிப் பரிவு கொள்ள வைத்து மகிழச் செய்ய வல்லாதாகும்.

தவறில்லாதபோதும், பொய்யாக ஊடினால் அவரைப் பரிவு கொள்ளச் செய்து, அன்புப் பயிரை அது வளர்க்கிறது.

**1322. ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்லளி**
**வாடினும் பாடு பெறும்.**

அவருடன் ஊடுதலின்போது தோன்றும் சிறு பிணக்கால் அவர் நமக்குச் செய்யும் நல்ல காதலின்பமானது சிறிது வாடும். அங்ஙனம் அது வாடினாலும் பின்பு காம இன்பம் பெரிதாய்த் தழைக்கும். ஊடலால் சிறிது நேரம் முகத்தை மாற வைக்கத்தான் நேரும். ஆனால் பிறகு அது பலமடங்கு இன்பமாய்த் தழைக்க உதவும்.

**1323. புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து.**

நிலத்துடன் நீர் சேர்ந்ததுபோல ஒன்றுபட்ட மனமுடைய காதலர்களிடையே ஒருவருக்கொருவர் புலத்தலைக் காட்டிலும் இன்பம் தரக்கூடியதொரு தேவருலகமும் உளதோ? முதலில் தனக்கென நிறமோ சுவையோ இல்லாதிருந்த நீர், நிலத்தொடு சேர்ந்தபின் அதன் நிறமும் சுவையுமுடையதாய் மாறி, இரண்டறக் கலந்துவிடுவது போலத் தலைவியும் தலைவனும் இரண்டறக் கலந்து விடுவர். அத்தகைய காதலுடன் புலத்தலைக் காட்டிலும் மிக்க இன்பம் தருவதொரு புத்தேளுலகம் பிறிதில்லை என்கிறாள், தலைவி. மனம் ஒன்றிய காதலர்களாயின், புலத்தல் பேரின்பம் தருமென்பது கருத்து.

**1324. புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை.**

தலைவரைத் தழுவுதலைக் கைவிடாதிருந்தே புலக்கின்ற ஊடலின்போது, என் உள்ளத்தை உடைத்து அவரிடம் சேர்க்கும் படைக்கலங்களாகிய வணக்கம் பணிந்த சொற்களும் அவர்பால் தோன்றும்! தலைவனின் அன்புச் செயல்கள் தலைவியது ஊடலைத் தகர்த்துவிடும்.

புல்லி விடாஅப் புலவி - பிணங்கி விலகிப் போகாமல், அருகிருந்தே பிணங்குவது. உடனே அவன் பலவாறு சமாதானம் செய்து கெஞ்சுவான். அதனால் அவள் மனவுறுதி குலைந்து தழுவ நேரும்.

**1325. தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலின் ஆங்கொன்று உடைத்து.**

ஆடவர்கள் தவறில்லாதவர்களேயாயினும் தாம் விரும்பிய காதலியர்களால் ஊடப்பெற்று, அவர்களின் மெல்லிய தோள்களைக் கூடப்பெறாது நீங்கும்பொழுது, அதில் அவர்களுக்கு ஒருவிதமான இன்பமுளது. கூடப்பெறுவதைவிட, ஊடப்பெறுவதிலும் ஒருவித இன்பம் உளதென்று தலைவன் கருதுகின்றான்.

1326. **உணலினும் உண்டது அறல்இனிது காமம்**
**புணர்தலின் ஊடல் இனிது.**

மேலும் மேலும் உண்பதைவிட, முன்பு உண்டது செரித்தல் இனிதாகும். அதுபோலக் காமமும் மேலும் மேலும் புணர்தலைக் காட்டிலும் இடையிடையே ஊடுதல் இன்பம் தருவதாகும். உண்டது செரித்தலால் பசி தோன்றும்; பசியுடன் உண்ணும்போது இன்சுவை மிகும். அதுபோல் ஊடுதலால் ஆர்வம் மிகும். ஆர்வ மிகுதியுடன் கூடலால் இன்பம் மிகும். முழுமையான காம இன்பத்தை நுகர்தற்கு, ஊடுதலாகிய இடைவெளி மிகவும் தேவை. இஃதொரு பாலியல் கல்வியாதல் காண்க.

1327. **ஊடலின் தோற்றவர் வென்றார் அதுமன்னும்**
**கூடலிற் காணப் படும்.**

காதலர் இருவருள்ளும் ஊடலில் தோற்றவரே, காமத்தில் வென்றவராவார். அது தொடர்ந்து வரும் கூடலின்போது அறியப்படும். ஊடலில் எதிர்த்தலாற்றாது சாய்ந்து விட்டுக் கொடுக்க நேர்ந்தவர், மிகுந்த ஆர்வமுடையவராயிருப்பதால், கலவியின்போது பேரின்பம் காண்பராதலின் வென்றவர் ஆகின்றார்.

1328. **ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்**
**கூடலில் தோன்றிய உப்பு.**

நெற்றியில் விபர்வை தோன்றும்படி ஆர்வத்துடன் கூடியபொழுது உண்டாகிய இன்பத்தை, இன்னும் ஒரு முறை ஊடி, அதனால் பெறுவோமோ? மீண்டும் அது வாய்க்குமா? ஊடிப் பின் கூடுதலே மிகுந்த இன்பமாதலால் அவ்வூடலையே மீண்டும் மீண்டும் பெறத் தலைவன் ஆசைப்படுகின்றான்.

1329. **ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப**
**நீடுக மன்னோ இரா.**

இரவெல்லாம் கூடி மகிழ வேண்டும் என்ற கருத்திற்கு மாறாக, ஊடி மகிழ வேண்டுமென்றது வள்ளுவம். ஒளி வீசும் அணிகளை அணிந்த எம் காதலி இன்னும் எம்மொடு ஊடுவாளாக! அவள் ஊடவும் அவ்வூடலைத் தவிர்க்க யாம் அவளிடம் இரந்து நிற்கவும் மிகுந்த நேரம் கிடைக்கும்படி, இவ் இரவுப்பொழுது நீடிக்குமாக! ஊடி மகிழும் இன்ப விளையாட்டிற்கு உள்ள இரவு போதாதாம்; அது இன்னும் நீட்டிக்க வேண்டுமாம்.

1330. ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

காமநுகர்ச்சிக்கு இன்பம் தருவது, அங்ஙனம் நுகர்வார் தமக்குள் ஒருவருக்கொருவர் ஊடுதலேயாகும். அவ்வூடுதலுக்கு இன்பம் தருவது அவ்வூடல் நீக்கப்பெற்றுப் பின் கூடிக் கலவி பெறுவார்களாயின், அக்கலவியேயாகும். ஊடுதல்தான் இன்பம், அது கூடுதலின் முடியுமாயின் என்பது இதன் கருத்து.

கூடுதலின் முடியாத ஊடுதல் கூடாது; மனம் முறிவதாகிவிடும். கூடுதலைவிட, ஊடுவதற்குத் திருவள்ளுவர் மிகுந்த இடம் தந்திருப்பது, சிறந்த பாலியற் கல்வியாகும்.

இடைவெளிவிட்டு, உண்டது செரித்ததா என்று பார்த்து, நன்கு பசியுண்டான பிறகு, மீண்டும் உண்ணுவதுபோலக் காதல் வாழ்வும் அமையவேண்டும். அதற்காகவே, காதலர்கள் கூடுதலே இன்பமென அதில் மூழ்கி உடல்நலனை இழக்காமல், அன்பாய்ப் பழகுதலையே காதலின்பமெனக் கருதி, இவ்வாறு ஊடிச் சிரித்து மகிழ்ந்து உரையாடி வாழப் பல குறள்களில் பாடம் சொல்கிறார். காமத்துப்பால், ஒரு பாலியற் பள்ளிக்கூடம் என்பது, இவ்வியலிலுள்ள ஒவ்வொரு குறளாலும் விளங்குவது ஆழ்ந்து கற்பதற்குரியதாகும்.

●●

# திருக்குறள் அதிகார நிரல்

## (அதிகாரம் அதிகார எண்)


| | |
|---|---|
| அடக்கம் உடைமை | 13 |
| அமைச்சு | 64 |
| அரண் | 75 |
| அருள் உடைமை | 25 |
| அலர் அறிவுறுத்தல் | 115 |
| அவர்வயின் விதும்பல் | 127 |
| அவா அறுத்தல் | 37 |
| அவை அஞ்சாமை | 73 |
| அவை அறிதல் | 72 |
| அழுக்காறாமை | 17 |
| அறன் வலியுறுத்தல் | 4 |
| அறிவு உடைமை | 43 |
| அன்பு உடைமை | 8 |
| ஆள்வினை உடைமை | 62 |
| இகல் | 86 |
| இடன் அறிதல் | 50 |
| இடுக்கண் அழியாமை | 63 |
| இரவு | 106 |
| இரவு அச்சம் | 107 |
| இல்வாழ்க்கை | 5 |
| இறைமாட்சி | 39 |
| இனியவை கூறல் | 10 |
| இன்னா செய்யாமை | 32 |
| ஈகை | 23 |
| உட்பகை | 89 |
| உழவு | 104 |
| உறுப்பு நலன் அழிதல் | 124 |
| ஊக்கம் உடைமை | 60 |
| ஊடல் உவகை | 133 |
| ஊழ் | 38 |
| ஒப்புரவு அறிதல் | 22 |
| ஒழுக்கம் உடைமை | 14 |
| ஒற்றாடல் | 59 |
| கடவுள் வாழ்த்து | 1 |
| கண்டோட்டம் | 58 |
| கண்விதுப்பு அழிதல் | 118 |
| கயமை | 108 |
| கல்லாமை | 41 |
| கல்வி | 40 |
| கள் உண்ணாமை | 93 |
| கள்ளாமை | 29 |
| கனவுநிலை உரைத்தல் | 122 |
| காதற்சிறப்பு உரைத்தல் | 113 |
| காலம் அறிதல் | 49 |
| குடிசெயல் வகை | 103 |
| குடிமை | 96 |
| குறிப்பு அறிதல் (இன்பம்) | 110 |
| குறிப்பு அறிதல்(பொருள்) | 71 |
| குறிப்பு அறிவுறுத்தல் | 128 |
| குற்றம் கடிதல் | 44 |
| கூடா ஒழுக்கம் | 28 |
| கூடா நட்பு | 83 |
| கேள்வி | 42 |
| கொடுங்கோன்மை | 56 |
| கொல்லாமை | 33 |
| சான்றாண்மை | 99 |
| சிற்றினம் சேராமை | 46 |
| சுற்றம் தழால் | 53 |
| சூது | 94 |
| செங்கோன்மை | 55 |
| செய்ந்நன்றி அறிதல் | 11 |
| சொல்வன்மை | 65 |
| தகை அணங்குஉறுத்தல் | 109 |
| தவம் | 27 |

தனிப்படர் மிகுதி 120
தீ நட்பு 82
தீவினை அச்சம் 21
துறவு 35
தூது 69
தெரிந்து செயல் வகை 47
தெரிந்து தெளிதல் 51
தெரிந்து வினையாடல் 52
நடுவு நிலைமை 12
நட்பு 79
நட்பு ஆராய்தல் 80
நலம்புனைந்து உரைத்தல் 112
நல்குரவு 105
நன்றியில் செல்வம் 101
நாடு 74
நாணுத்துறவு உரைத்தல் 114
நாண் உடைமை 102
நிலையாமை 34
நிறை அழிதல் 126
நினைந்தவர் புலம்பல் 121
நீத்தார் பெருமை 3
நெஞ்சொடு கிளத்தல் 125
நெஞ்சொடு புலத்தல் 130
பகைத்திறம் தெரிதல் 88
பகைமாட்சி 87
பசப்பு உறுபருவரல் 119
படர்மெலிந்து இரங்கல் 117
படைச்செருக்கு 78
படைமாட்சி 77
பண்பு உடைமை 100
பயன்இல சொல்லாமை 20
பழைமை 81
பிரிவு ஆற்றாமை 116
பிறன்இல் விழையாமை 15
புகழ் 24
புணர்ச்சி மகிழ்தல் 111
புணர்ச்சி விதும்பல் 129
புலவி 131
புலவி நுணுக்கம் 132
புலால் மறுத்தல் 26
புல்லறிவாண்மை 85
புறம் கூறாமை 19
பெண்வழிச் சேரல் 91
பெரியாரைத் துணைக்கோடல் 45
பெரியாரைப் பிழையாமை 90
பெருமை 98
பேதைமை 84
பொச்சாமை 54
பொருள் செயல்வகை 76
பொழுதுகண்டு இரங்கல் 123
பொறை உடைமை 16
மக்கட்பேறு 7
மடி இன்மை 61
மருந்து 95
மன்னரைச் சேர்ந்து ஒழுகல் 70
மானம் 97
மெய் உணர்தல் 36
வரைவு இல் மகளிர் 92
வலி அறிதல் 48
வாய்மை 30
வாழ்க்கைத் துணைநலம் 6
வான்சிறப்பு 2
விருந்து ஓம்பல் 9
வினை செயல்வகை 68
வினைத்திட்பம் 67
வினைத்தூய்மை 66
வெகுளாமை 31
வெஃகாமை 18
வெருவந்த செய்யாமை 57

# குறள் முதற்குறிப்பு நிரல்
## (குறள் முதற்குறிப்பு குறள் எண்)


| | | | |
|---|---|---|---|
| அஃகாமை | 178 | அரிது ஆற்றி | 1160 |
| அஃகி அகன்ற | 175 | அரிய என்று | 537 |
| அகடு ஆரார் | 936 | அரிய கற்று | 503 |
| அகப்பட்டி | 1074 | அரியவற்றுள் | 443 |
| அகர முதல | 1 | அருங்கேடன் | 210 |
| அகலாது | 691 | அருஞ்செவ்வி | 565 |
| அகழ்வாரை | 151 | அருட்செல்வம் | 241 |
| அகன் அமர்ந்து ஈதலின் | 92 | அருமறை | 847 |
| அகன் அமர்ந்து செய்யாள் | 84 | அருமை | 611 |
| அங்கணத்துள் | 720 | அரும்பயன் | 198 |
| அசையியற்கு | 1098 | அருவினை | 483 |
| அச்சமே | 1075 | அருள் அல்லது | 254 |
| அச்சம் | 534 | அருள் இல்லார்க்கு | 247 |
| அஞ்சாமை அல்லால் | 497 | அருள் என்னும் | 757 |
| அஞ்சாமை ஈகை | 382 | அருளொடும் | 755 |
| அஞ்சும் | 863 | அருள் கருதி | 285 |
| அஞ்சுவது அஞ்சாமை | 428 | அருள் சேர்ந்த | 243 |
| அஞ்சுவது ஒரும் | 366 | அருள் வெஃகி | 176 |
| அடக்கம் | 121 | அலந்தாரை | 1303 |
| அடல் தகையும் | 768 | அலர் எழ | 1141 |
| அடல் வேண்டும் | 343 | அலர் நாண | 1149 |
| அடுக்கிய கோடி | 954 | அல்லல் அருள் | 245 |
| அடுக்கி வரினும் | 625 | அல்லற்பட்டு | 555 |
| அடுத்தது காட்டும் | 706 | அல்லவை | 96 |
| அணங்கு கொல் | 1081 | அவர் தந்தார் | 1182 |
| அணியன்றோ | 1014 | அவர் நெஞ்சு | 1291 |
| அந்தணர் என்போர் | 30 | அவா இல்லார்க்கு | 368 |
| அந்தணர் நூற்கும் | 543 | அவா என்ப | 361 |
| அமரகத்து ஆற்று | 814 | அவா வினை | 367 |
| அமரகத்து வன்கண் | 1027 | அவி சொறிந்து | 259 |
| அமிழ்தினும் | 64 | அவை அறிந்து | 711 |
| அமைந்து ஆங்கு | 474 | அவை அறியார் | 713 |
| அரங்கு இன்றி | 701 | அவ்வித்து அழுக்காறு | 167 |
| அரம் பொருத | 888 | அவ்விய நெஞ்சத்தான் | 169 |
| அரம் போலும் | 997 | அழக்கொண்ட | 659 |
| அரிதரோ | 1153 | அழச்சொல்லி | 795 |

அழல் போலும் 1228
அழிவதூஉம் 461
அழிவந்த 807
அழிவினவை 787
அழிவு இன்றி 764
அழுக்கற்று 170
அழுக்காறு அவா 35
அழுக்காறு உடையார் 165
அழுக்காறு உடையான் 135
அழுக்காறு என 168
அழுக்காற்றின் 164
அளவளாவு 523
அளவு அல்ல 289
அளவு அறிந்தார் 288
அளவு அறிந்து 479
அளவின் கண் 286
அளித்து அஞ்சல் 1154
அற ஆழி 8
அறத்து ஆறு 37
அறத்தாற்றின் 46
அறத்தான் 39
அறத்திற்கே 76
அறத்தின் ஊஉங்கு 32
அறம் கூறான் 181
அறம் சாரா 1047
அறம் சொல்லும் 185
அறம் பொருள் 501
அறவினை யாது 321
அறவினையும் 909
அறன் அழீஇ 182
அறன் அறிந்து ஆன்ற 635
அறன் அறிந்து மூத்த 441
அறன் அறிந்து வெஃகா 179
அறன் ஆக்கம் 163
அறன் இயலான் 147
அறன் இழுக்காது 384
அறன் ஈனும் 754
அறன் என 49
அறன் கடை 142
அறன் நோக்கி 189
அறன் வரையான் 150
அறிகிலார் 1139
அறிகொன்று 638
அறிதோறு 1110
அறிந்து ஆற்றி 515
அறிவினான் 315
அறிவினுள் 203
அறிவு அற்றம் 421
அறிவு இலார் 843
அறிவு இல்லான் 842
அறிவு இன்மை 841
அறிவுடையார் ஆவது 427
அறிவுடையார் எல்லாம் 430
அறிவு உரு 684
அறுவாய் 1117
அறைபறை 1076
அற்கா 333
அற்றது 944
அற்றம் மறைக்கும் 980
அற்றம் மறைத்தலோ 846
அற்றவர் 365
அற்றார் அழிபசி 226
அற்றாரை 506
அற்றார்க்கு 1007
அற்றால் 943
அற்றேம் 626
அனிச்சம்பூ 1115
அனிச்சமும் 1120
அன்பிற்கும் 71
அன்பின் வழியது 80
அன்பின் விழையார் 911
அன்பு அகத்து 78
அன்பு அறிவு ஆராய்ந்த 682
அன்பு அறிவு தேற்றம் 513
அன்பு இலன் 862
அன்பு இலார் 72
அன்பு ஈனும் 74
அன்பு ஒரீஇ 1009
அன்புடைமை... இவ் 992
அன்புடைமை... வேந்து 681
அன்பு நாண் 983
அன்பும் அறனும் 45
அன்புற்று அமர்ந்த 75
அன்போடு இயைந்த 73

| | | | |
|---|---|---|---|
| அன்று அறிவாம் | 36 | இடும்பைக்கே | 1029 |
| ஆகு ஆறு | 478 | இடைதெரிந்து | ·712 |
| ஆகு ஊழ் | 371 | இணர்ஊழ்த்தும் | 650 |
| ஆக்கம் அதர் | 594 | இணர் எரி | 308 |
| ஆக்கம் இழந்தேம் | 593 | இதனை இதனால் | 517 |
| ஆக்கம் கருதி | 463 | இமைப்பின் | 1129 |
| ஆக்கமும் கேடும் | 642 | இமையாரின் | 906 |
| ஆங்கு அமைவு | 740 | இம்மைப் பிறப்பில் | 1315 |
| ஆபயன் | 560 | இயல்பினான் | 47 |
| ஆயும் அறிவினர் | 918 | இயல்பு ஆகும் | 344 |
| ஆய்ந்து ஆய்ந்து | 792 | இயல்பு உளி | 545 |
| ஆரா இயற்கை | 370 | இயற்றலும் | 385 |
| ஆவிற்கு நீர் | 1066 | இரக்க | 1051 |
| ஆள்வினையும் | 1022 | இரத்தலின் | 229 |
| ஆற்றாரும் | 493 | இரத்தலும் | 1054 |
| ஆற்றின் அளவறிந்து ஈக | 477 | இரந்தும் | 1062 |
| ஆற்றின் அளவறிந்து கற்க | 725 | இரப்பன் | 1067 |
| ஆற்றின் ஒழுக்கி | 48 | இரப்பாரை | 1058 |
| ஆற்றின் நிலை தளர் | 716 | இரப்பான் | 106[illegible] |
| ஆற்றின் வருந்தா | 468 | இரவார் | 103[illegible] |
| ஆற்றுபவர்க்கும் | 741 | இரவு உள்ள | 1069 |
| ஆற்றுவார் ஆற்றல்... இகழ் | 891 | இரவு என்னும் | 1068 |
| ஆற்றுவார் ஆற்றல்... பசி | 225 | இரு நோக்கு | 1091 |
| ஆற்றுவார் ஆற்றல்... பணிதல் | 985 | இருந்து உள்ளி | 1243 |
| இகலான் | 860 | இருந்து ஓம்பி | 81 |
| இகலிற்கு | 858 | இருபுனலும் | 737 |
| இகலின் மிகல் | 856 | இருமனப் பெண்டிரும் | 920 |
| இகல் எதிர் | 855 | இருமைவகை | 23 |
| இகல் என்ப | 851 | இருவேறு | 374 |
| இகல் என்னும் | 853 | இருள்சேர் | 5 |
| இகல் காணான் | 859 | இருள் நீங்கி | 352 |
| இகழ்ச்சியின் | 539 | இலக்கம் | 627 |
| இகழ்ந்து எள்ளாது | 1057 | இலங்கு இழாய் | 1262 |
| இடமெல்லாம் | 1064 | இலர் பலர் | 270 |
| இடன் இல் | 218 | இலம் என்று அசைஇ | 1040 |
| இடிக்கும் | 447 | இலம் என்று வெஃகி | 174 |
| இடிபுரிந்து | 607 | இலன் என்று | 205 |
| இடிப்பாரை | 448 | இலன் என்னும் | 223 |
| இடுக்கண் கால் | 1030 | இல்லது என் | 53 |
| இடுக்கண் படினும் | 654 | இல்லாரை | 752 |
| இடுக்கண் வருங்கால் | 621 | இல்லாளை | 905 |
| இடும்பைக்கு | 623 | இல்லாள்கண் | 903 |

இல்லை தவறு 1321
இல்வாழ்வான் 41
இவறலும் 432
இழத்தொறூஉம் 940
இழிவு அறிந்து 946
இழுக்கல் 415
இழுக்காமை 536
இழைத்தது 779
இளித்தக்க 1288
இளிவரின் 970
இளைதாக 879
இளையர் 698
இறந்த வெகுளியின் 531
இறந்தார் 310
இறந்து அமைந்த 900
இறப்பே புரிந்த 977
இறல் ஈனும் 180
இறுதி பயப்பினும் 690
இறை கடியன் 564
இறைகாக்கும் 547
இற்பிறந்... கண் அல்லது 951
இற்பிறந்... கண்ணேயும் 1044
இனத்து ஆற்றி 568
இனம் போன்று 822
இனி அன்ன 1294
இனிய உளவாக 100
இனைத்துணைத்து 87
இனையர் இவர் 790
இன்கண் உடைத்து 1152
இன்சொலால் ஈத்து 387
இன்சொலால் ஈரம் 91
இன்சொல் இனிது 99
இன்பத்துள்... பயக்கும் 854
இன்பத்துள்... விழையாதான் 629
இன்பம் இடை 369
இன்பம் ஒருவற்கு 1052
இன்பம் கடல் 1166
இன்பம்... இடும்பை 628
இன்பம்... விழை 615
இன்மை இடும்பை 1063
இன்மை என 1042
இன்மை ஒருவற்கு 988
இன்மையின் இன்னாதது 1041
இன்மையின் இன்னாது 558
இன்மையுள் இன்மை 153
இன்றியமையா 961
இன்றும் வருவது 1048
இன்னா எனத்தான் 316
இன்னா செய்தாரை 314
இன்னா செய்தார்க்கும் 987
இன்னாது இரக்க 224
இன்னாது இனன்இல் 1158
இன்னாமை இன்பம் 630
ஈட்டம் இவறி 1003
ஈதல் இசைபட 231
ஈத்து உவக்கும் 228
ஈர்ங்கை 1077
ஈவார்கண் 1059
ஈன்ற பொழுதின் 69
ஈன்றாள் பசி 656
ஈன்றாள் முகத்தேயும் 923
உடம்பாடு 890
உடம்பொடு 1122
உடுக்கை 788
உடுப்பதூஉம் 1079
உடை செல்வம் 939
உடைத்தம் 473
உடைமையுள் 89
உடையர் என 591
உடையார் முன் 395
உட்கப்படாஅர் 921
உட்பகை 883
உணர்வது 718
உணலினும் 1326
உண்டார்கண் 1090
உண்ணற்க 922
உண்ணாது 160
உண்ணாமை உள்ளது 255
உண்ணாமை வேண்டும் 257
உதவி 105
உப்பு 1302
உயர்வு 743
உயிர் உடம்பின் 330
உயிர்ப்ப 880

உய்த்தல் 1287
உரம் 600
உரன் என்னும் 24
உரன் நசைஇ 1263
உருவுகண்டு 667
உருள் ஆயம் 933
உரைப்பார் 232
உலகத்தார் 850
உலகத்தோடு 140
உலகம் தழீஇயது 425
உலைவு இடத்து 762
உவக்காண் 1185
உவந்து உறைவர் 1130
உவப்பத் தலைக்கூடி 394
உழந்து உழந்து 1177
உழவினார் 1036
உழுது உண்டு 1033
உழுவார் 1032
உழைப்பிரிந்து 530
உளபோல் 574
உளர் எனினும் 730
உளர் என்னும் 406
உளவரை 480
உள்ஒற்றி 927
உள்ளக் களித்தலும் 1281
உள்ளத்தார் 1249
உள்ளத்தால்... பொய் 294
உள்ளத்தால்... உள் 282
உள்ளம் இலாதவர் 598
உள்ளம் உடைமை 592
உள்ளம் போன்று 1170
உள்ளற்க 798
உள்ளிய எல்லாம் 309
உள்ளியது 540
உள்ளினும் 1201
உள்ளினேன் 1316
உள்ளுவது 596
உள்ளுவன்... உரைப்பது 1184
உள்ளுவன்... மறப்பின் 1125
உறங்குவது 339
உறல் முறை 885
உறாஅதவர்க்கண்ட 1292
உறாஅதவர்போல் 1096
உறா அதோ 1143
உறாஅர்க்கு 1200
உறின் உயிர் 778
உறின்நட்டு 812
உறுதோறு 1106
உறுபசியும் 734
உறுபொருளும் 756
உறுப்பு அமைந்து 761
உறுப்பு ஒத்தல் 993
உறுவது 813
உறைசிறியார் 680
உற்ற நோய் நீக்கி 442
உற்ற நோய் நோன்றல் 261
உற்றவன் 950
உற்றான் 949
ஊக்கம் 486
ஊடலின் உண்டு 1307
ஊடலில் தோற்றவர் 1327
ஊடலில் தோன்றும் 1322
ஊடல் உணங்க 1310
ஊடல் உணர்தல் 110
ஊடற்கண் 1284
ஊடி இருந்தேமா 1312
ஊடிப் பெறுகுவம் 1328
ஊடியவரை 1304
ஊடுக 1329
ஊடுதல் 1330
ஊன்உடை 1012
ஊதியம் 797
ஊரவர் 1147
ஊருணிநீர் 215
ஊழிபெயரினும் 989
ஊழிற் பெருவலி 380
ஊழையும் 620
ஊறுஒரால் 662
ஊனைக்குறித்த 1013
எச்சம் என்று 1004
எண் என்ப 392
எண் சேர்ந்த 910
எண்ணித்துணிக 467
எண்ணிய 666

எண்ணியார் 494
எண்பதத்தால் எய்தல் 991
எண்பதத்தான் ஓரா 548
எண்பொருள் 424
எதிரதாக் காக்கும் 429
எந்நன்றி 110
எப்பொருளும் 695
எப்பொருள் எத்தன்மை 355
எப்பொருள் யார் 423
எய்தற்கு 489
எரியால் 896
எல்லாப் பொருளும் 746
எல்லார்க்கும் எல்லாம் 582
எல்லார்க்கும் நன்றாம் 125
எல்லா விளக்கும் 299
எல்லைக் கண் 806
எவ்வது 426
எழுதுங்கால் 1285
எழுபிறப்பும் 62
எழுமை 107
எளிது என 145
எள்பகவு அன்ன 889
எள்ளாத எண்ணி 470
எள்ளாமை 281
எள்ளின் 1298
எற்றிற்கு 1080
எற்று என்று 655
எனைத்தானும் எஞ் 317
எனைத்தானும் நல் 416
எனைத்திட்பம் 670
எனைத்து ஒன்று 1202
எனைத்துணைவர் 144
எனைத்து நினைப்பினும் 1208
எனைத்தும் குறுகுதல் 820
எனைப்பகை 207
எனை மாட்சித்து 750
எனைவகையான் 514
என்ஐமுன் 771
என்பு இலதனை 77
என்றும் ஒருவுதல் 652
ஏதம் 1006
ஏதிலார் ஆர 837
ஏதிலார் குற்றம் 190
ஏதிலார் போல 1099
ஏந்திய கொள்கை 899
ஏமுற்றவரினும் 873
ஏரினும் நன்றால் 1038
ஏரின் உழாஅர் 14
ஏவவும் 848
ஐஉணர்வு 354
ஐந்து அவித்தான் 25
ஐயத்தின் 353
ஐயப்படாஅது 702
ஒட்டார்பின் 967
ஒண்பொருள் 760
ஒள்நுதற்கு 1088
ஒத்தது 214
ஒப்புரவினால் 220
ஒரு தலையான் 1196
ஒருநாள் 1269
ஒரு பொழுதும் 337
ஒருமைக்கண் 398
ஒருமைச்செயல் 835
ஒருமை மகளிரே 974
ஒருமையுள் 126
ஒலித்தக்கால் 763
ஒல்லும் கருமம் 818
ஒல்லும் வகை 33
ஒல்லும் வாய் 673
ஒல்வது அறிவது 472
ஒழுக்கத்தின் எய்துவர் 137
ஒழுக்கத்தின் ஒல்கார் 136
ஒழுக்கத்து நீத்தார் 21
ஒழுக்கமும் 952
ஒழுக்கம் உடைமை 133
ஒழுக்கம் உடையவர் 139
ஒழுக்கம் விழுப்பம் 131
ஒழுக்காறாக் கொள்க 161
ஒளி ஒருவற்கு 971
ஒளியார் முன் 714
ஒறுத்தாரை 155
ஒறுத்தார்க்கு 156
ஒறுத்து ஆற்றும் 579
ஒற்றினான் ஒற்றி 583

ஒற்றும் உரை 581
ஒற்று ஒற்றி 588
ஒற்று ஒற்று 589
ஒன்றா உலகத்து 233
ஒன்றாக நல்லது 323
ஒன்றாமை 886
ஒன்றானும் 128
ஒன்று எய்தி 932
ஒன்னாத் தெறலும் 264
ஓஒஇனிதே 1176
ஓஒதல் வேண்டும் 653
ஓதி உணர்ந்தும் 834
ஓம்பின் 1155
ஓர்த்து உள்ளம் 357
ஓர்ந்து கண் 541
கடல் அன்ன 1137
கடல் ஓடா 496
கடன் அறிந்து 687
கடன் என்ப 981
கடாஅ உருவொடு 585
கடாஅக் களிற்றின் 1087
கடிது ஓச்சி 562
கடிந்த கடிந்து 658
கடுஞ்சொல்லன் 566
கடுமொழியும் 567
கடைக்கு ஒட்க 663
கணைகொடிது 279
கண் உடையார் 393
கண்உள்ளார் 1127
கண்உள்ளின் 1126
கண்களவு 1092
கண்டது மன்னும் 1146
கண்டார் உயிர் 1084
கண்டு கேட்டு 1101
கண்ணிற்கு அணி 575
கண்ணின் துனி 1290
கண்ணின் பசப்போ 1240
கண்நின்று 184
கண்ணும் கொள 1244
கண்ணொடு கண் 1100
கண்ணோட்டத்து 572
கண்ணோட்டம் இல்லவர் 577
கண்ணோட்டம் என்னும் 571
கண்தாம் 1171
கண் நிறைந்த 1272
கதம் காத்து 130
கதுமென 1173
கயல்உண்கண் 1212
கரத்தலும் 1162
கரப்பவர்க்கு 1070
கரப்பினும் 1271
கரப்புஇடும்பை 1056
கரப்பு இலா நெஞ்சின் 1053
கரப்பு இலார் 1055
கரவாது உவந்து 1061
கருமணியிற் பாவாய் 1123
கருமத்தான் 1011
கருமம் சிதையாமல் 578
கருமம் செய 1021
கருவியும் காலமும் 631
கலங்காது கண்ட 668
கலந்து உணர்த்தும் 1246
கல்லா ஒருவன் 405
கல்லாத மேற்கொண்டு 845
கல்லாதவரின் 729
கல்லாதவரும் 403
கல்லாதான் ஒட்பம் 404
கல்லாதான் சொல் 402
கல்லார்ப் பிணிக்கும் 570
கல்லான் வெகுளும் 870
கவறும் கழகமும் 935
கவ்வையால் 1144
கழாஅக்கால் 840
களவினால் ஆகிய 283
களவின்கண் 284
களவு என்னும் 287
களித்தானை 929
களித்து அறியேன் 928
களித்தொறும் 1145
கள்உண்ணா 930
கள்வார்க்கு 290
கறுத்து இன்னா 312
கற்கக் கசடு அற 391
கற்றதனால் ஆய 2

| | | | |
|---|---|---|---|
| கற்றாருள் கற்றார் | 722 | குடிபுறங்காத்து | 549 |
| கற்றார்முன் | 724 | குடிப்பிறந்தார் | 957 |
| கற்றிலன் | 414 | குடிப்பிறந்து குற்றத்தின் | 502 |
| கற்று அறிந்தார் | 717 | குடிப்பிறந்து தன் | 794 |
| கற்று ஈண்டு | 356 | குடிமடிந்து | 604 |
| கற்றுக் கண் | 686 | குணநலம் | 982 |
| கனவினால் | 1214 | குணம் என்னும் | 29 |
| கனவினும் | 819 | குணம் நாடி | 504 |
| காக்க | 122 | குணனும் குடிமையும் | 793 |
| காக்கை | 527 | குணன் இலனாய் | 868 |
| காட்சிக்கு | 386 | குலம் சுடும் | 1019 |
| காணாச்சினத்தான் | 866 | குழல் இனிது | 66 |
| காணாதான் | 849 | குறிக்கொண்டு | 1095 |
| காணின் குவளை | 1114 | குறித்தது கூறாமை | 704 |
| காணுங்கால் | 1286 | குறிப்பின்... உணரா | 705 |
| காண்கமன் | 1265 | குறிப்பின்... உணர்வாரை | 703 |
| காதல் காதல் | 440 | குறிப்பு அறிந்து | 696 |
| காதலர் இல்வழி | 1224 | குற்றம் இலனாய் | 1025 |
| காதலர் தூதொடு | 1211 | குற்றமே காக்க | 434 |
| காதல் அவர் இலர் | 1242 | குன்றின் அனையாரும் | 965 |
| காதன்மை | 507 | குன்று அன்னார் | 898 |
| காமக் கடல் | 1164 | குன்று ஏறி | 758 |
| காமக் கடும்புனல் உய் | 1134 | கூடிய காமம் | 1264 |
| காமக்கடும்புனல் நீந்தி | 1167 | கூத்தாட்டு | 332 |
| காமக்கணிச்சி | 1251 | கூழும் குடியும் | 554 |
| காமமும் நாணும் | 1163 | கூறாமை நோக்கி | 701 |
| காமம் உழந்து | 1131 | கூற்றத்தை | 894 |
| காமம் என | 1252 | கூற்றம் குதித்தலும் | 269 |
| காமம்விடு | 1247 | கூற்றமோ | 1085 |
| காமம் வெகுளி | 360 | கூற்று உடன்று | 765 |
| காலத்தினால் | 102 | கெடல் வேண்டின் | 893 |
| காலம் கருதி | 485 | கெடாஅ வழிவந்த | 809 |
| காலை அரும்பி | 1227 | கெடுங்காலை | 799 |
| காலைக்குச் செய்த | 1225 | கெடுப்பதூஉம் | 15 |
| கால் ஆழ்களரின் | 500 | கெடுவல்யான் | 116 |
| கான முயல் | 772 | கெடுவாக | 117 |
| குடம்பை | 338 | கெட்டார்க்கு | 1293 |
| குடி ஆண்மை | 609 | கேடு அறியா | 736 |
| குடி என்னும் | 601 | கேடுஇல் | 400 |
| குடி செய்வல் | 1023 | கேடும் பெருக்கமும் | 115 |
| குடி செய்வார் | 1028 | கேட்டார்ப் பிணிக்கும் | 643 |
| குடிதழீஇ | 544 | கேட்டினும் உண்டு | 796 |

| | |
|---|---|
| கேட்பினும் | 418 |
| கேள் இழுக்கம் | 808 |
| கை அறியாமை | 925 |
| கைம்மாறு | 211 |
| கைவேல் | 774 |
| கொக்கு ஒக்க | 490 |
| கொடியார்... கொடுமை | 1235 |
| கொடியார்... கொடுமையின் | 1169 |
| கொடுத்தலும் | 525 |
| கொடுத்தும் | 867 |
| கொடுப்பது அழுக்கு | 166 |
| கொடுப்பதூஉம் | 1005 |
| கொடும்புருவம் | 1086 |
| கொடைஅளி | 390 |
| கொலை மேற்கொண்டார் | 551 |
| கொலையிற் கொடியாரை | 550 |
| கொலைவினையர் | 329 |
| கொல்லாநலத்தது | 984 |
| கொல்லாமை | 326 |
| கொல்லான் | 260 |
| கொளப்பட்டேம் | 699 |
| கொளற்கு அரிதாய் | 745 |
| கொன்ற அன்ன | 109 |
| கோட்டுப் பூ | 1313 |
| கோள்இல் பொறி | 9 |
| சமன் செய்து | 118 |
| சலத்தால் | 660 |
| சலம்பற்றி | 956 |
| சாதலின் | 230 |
| சாயலும் | 1183 |
| சார்பு உணர்ந்து | 359 |
| சால்பிற்கு | 986 |
| சான்றவர் | 990 |
| சிதைவு இடத்து | 597 |
| சிறப்பு அறிய | 590 |
| சிறப்பு ஈனும் செல்வமும் | 31 |
| சிறப்பு ஈனும் செல்வம் | 311 |
| சிறப்பொடு பூசனை | 18 |
| சிறியார் உணர்ச்சி | 976 |
| சிறுகாப்பின் | 744 |
| சிறுபடையான் | 498 |
| சிறுமைநமக்கு | 1231 |
| சிறுமை பல | 934 |
| சிறுமையும் | 769 |
| சிறுமையுள் | 98 |
| சிறைகாக்கும் | 57 |
| சிறை நலனும் | 499 |
| சிற்றினம் | 451 |
| சிற்றின்பம் | 173 |
| சினத்தை | 307 |
| சினம் என்னும் | 306 |
| சீரினும் | 962 |
| சீருடைச் செல்வர் | 1010 |
| சீர்இடம் | 821 |
| சீர்மை சிறப்பொடு | 195 |
| சுடச் சுடரும் | 267 |
| சுவை ஒளி | 27 |
| சுழலும் இசை | 777 |
| சுழன்றும் | 1031 |
| சுற்றத்தால் | 524 |
| சூழாமல் | 1024 |
| சூழ்ச்சி | 671 |
| சூழ்வார் | 445 |
| செப்பம் | 112 |
| செப்பின் | 887 |
| செயற்கு அரிய செய் | 26 |
| செயற்கு அரிய யா | 781 |
| செயற்கை | 637 |
| செயற்பால செய்யாது | 437 |
| செயற்பாலது ஒரும் | 40 |
| செயிரின் | 258 |
| செய்க பொருளை | 759 |
| செய்தக்க அல்ல | 466 |
| செய்து ஏமம் | 815 |
| செய்யாமல் செய்த | 101 |
| செய்யாமல் செற்றார் | 313 |
| செய்வானை நாடி | 516 |
| செய்வினை | 677 |
| செருக்கும் | 431 |
| செருவந்த | 569 |
| செல்இடத்து | 301 |
| செல்லா இடத்து | 302 |
| செல்லாமை | 1151 |
| செல்லான் | 1039 |

செல்வத்துள் 411
செல்விருந்து 86
செவி உணவின் 413
செவி கைப்ப 389
செவிக்கு உணவு 412
செவிச் சொல்லும் 694
செவியிற் சுவை 420
செறாஅச் சிறு 1097
செறிதொடி 1275
செறிவு அறிந்து 123
செறுநரை 488
செறுவார்க்கு 869
செற்றவர் பின் 1256
செற்றார் என 1245
செற்றார் பின் 1255
சென்ற இடத்தால் 422
சொலல் வல்லன் 647
சொல் கோட்டம் 119
சொல்லப் பயன் 1078
சொல்லுக சொல்லின் 200
சொல்லுக சொல்லை 645
சொல்லுதல் 664
சொல் வணக்கம் 827
ஞாலம் 484
தகுதி என 111
தக்காங்கு 561
தக்கார் இனத்தனாய் 446
தக்கார் தகவுஇலர் 114
தஞ்சம் தமர் 1300
தணந்தமை 1233
தன்னம் 1277
தந்தை 67
தந்நலம் 916
தமர் ஆகி 529
தம்இல் இருந்து 1107
தம் நெஞ்சத்து 1205
தம் பொருள் 63
தம்மிற் பெரியார் 444
தம்மின் தம்மக்கள் 68
தலைப்பட்டார் 348
தலையின் இழிந்த 964
தவமும் தவம் 262
தவம் செய்வார் 266
தவம் மறைந்து 274
தவறு இலர் 1325
தள்ளா 731
தற்காத்து 56
தனக்கு 7
தனியே 1296
தன் உயிர்க்கு 318
தன் உயிர்தான் அற 268
தன் உயிர்நீப்பினும் 327
தன் ஊன் 251
தன் குற்றம் 436
தன் துணை 875
தன் நெஞ்சு 293
தன்னை உணர்த்தினும் 1319
தன்னைத்தான் காக்கின் 305
தன்னைத்தான் காதலன் 209
தாம் இன்புறுவது 399
தாம் வீழ்வார்தாம் 1191
தாம் வீழ்வார்மென் 1103
தாம் வேண்டின் 1150
தார் தாங்கி 767
தாளாண்மை இல் 614
தாளாண்மை என்னும் 613
தாள் ஆற்றி 212
தானம் தவம் 19
திறன் அல்ல 157
திறன் அறிந்து 644
தினற் பொருட்டால் 256
தினைத்துணை நன்றி 104
தினைத்துணையாம் 433
தினைத்துணையும் 1282
தீ அளவு 947
தீப்பால 206
தீயவே தீய 202
தீயவை செய்தார் 208
தீயினால் 129
தீவினையால் 201
துஞ்சினார் 126
துஞ்சுங்கால் 1218
துணைநலம் 651
துப்பார்க்கு 12

| | | | |
|---|---|---|---|
| துப்பின் | 1165 | தொட்டனைத்து | 396 |
| துப்புரவு | 1050 | தொல்வரவும் | 1043 |
| தும்முச் செறுப்ப | 1318 | தொழுதகை | 828 |
| துளிஇன்மை | 557 | தோன்றின் | 236 |
| துறந்தாரின் | 159 | நகல் வல்லர் | 999 |
| துறந்தார்க்கு | 263 | நகுதற்பொருட்டு | 784 |
| துறந்தார்க்கும் | 42 | நகைஈகை | 953 |
| துறந்தார் படிவத்தர் | 586 | நகையும் | 304 |
| துறந்தார் பெருமை | 22 | நகையுள்ளும் | 995 |
| துறப்பார் | 378 | நகை வகையர் | 817 |
| துறைவன் | 1157 | நசைஇயார் | 1199 |
| துனியும் | 1306 | நச்சப்படா அதவன் | 1008 |
| துன்பத்திற்கு | 1299 | நடுவுஇன்றி | 171 |
| துன்பம் உற | 669 | நட்டார்குறை | 908 |
| துன்புறூஉம் | 94 | நட்டார்க்கு | 679 |
| துன்னாத் துறந்தாரை | 1250 | நட்டார்போல் | 826 |
| துன்னியார் | 188 | நட்பிற்கு உறுப்பு | 802 |
| தூஉய்மை | 364 | நட்பிற்கு வீற்றிருக்கை | 789 |
| தூங்காமை | 383 | நண்பு ஆற்றாராகி | 998 |
| தூங்குக | 672 | நத்தம் போல் | 235 |
| தூய்மை துணைமை | 688 | நயந்தவர்க்கு | 1181 |
| தெண்ணீர் | 1065 | நயந்தவர் நல்காமை | 1232 |
| தெய்வத்தான் | 619 | நயனொடு நன்றி | 994 |
| தெய்வம் தொழாஅள் | 55 | நயன்இல சொல்லினும் | 197 |
| தெரிதலும் | 634 | நயன் இலன் | 193 |
| தெரிந்த இனத்தொடு | 462 | நயன் ஈன்று | 97 |
| தெரிந்து உணரா | 1172 | நயன் உடையான் | 219 |
| தெருளாதான் | 249 | நயன் சாரா | 194 |
| தெளிவு இலதனை | 464 | நலக்கு உரியார் | 149 |
| தென்புலத்தார் | 43 | நலத்தகை | 1305 |
| தேரான் தெளிவும் | 510 | நலத்தின்கண் | 958 |
| தேரான் பிறனை | 508 | நலம் வேண்டின் | 960 |
| தேவர் அனையர் | 1073 | நல் ஆண்மை | 1026 |
| தேறற்க யாரையும் | 509 | நல் ஆறு என | 324 |
| தேறினும் | 876 | நல்ஆறு எனினும் | 222 |
| தொகச்சொல்லி | 685 | நல் ஆற்றான் | 242 |
| தொடங்கற்க | 491 | நல் இனத்தின் | 460 |
| தொடலை | 1135 | நல்குரவு | 1045 |
| தொடிநோக்கி | 1279 | நல்நீரை | 1111 |
| தொடிப்புழுதி | 1037 | நல்லவை | 375 |
| தொடியொடு | 1236 | நல்லார்கண் | 408 |
| தொடிற்சுடின் | 1159 | நவில்தொறும் | 783 |

| | | | |
|---|---|---|---|
| நற்பொருள் | 1046 | நிறையுடைமை | 154 |
| நனவினால் கண்ட | 1215 | நிறையுடையேன் | 1254 |
| நனவினால் நம் | 1220 | நிறைநீர | 782 |
| நனவினால் நல்கா | 1217 | நிறைநெஞ்சம் | 917 |
| நனவினால் நல்காத | 1213 | நிறைமொழி | 28 |
| நனவினால் நல்காரை | 1219 | நினைத்து இருந்து | 1320 |
| நனவு என | 1216 | நினைத்து ஒன்று | 1241 |
| நன்மையும் | 511 | நினைப்பவர் | 1203 |
| நன்றிக்கு | 138 | நீங்கான் | 864 |
| நன்றி மறப்பது | 108 | நீங்கின் | 1104 |
| நன்று அறிவாரின் | 1072 | நீரும் நிழலது | 1309 |
| நன்று ஆகும் | 328 | நீர் இன்று அமையாது | 20 |
| நன்று ஆம் கால் | 379 | நுணங்கிய | 419 |
| நன்று ஆற்றல் | 469 | நுண்ணிய நூல் | 373 |
| நன்று என்ற | 715 | நுண்ணியம் | 710 |
| நன்றே தரினும் | 113 | நுண்மாண் | 407 |
| நாச் செற்று | 335 | நுனிக் கொம்பர் | 476 |
| நாடாது | 791 | நூலாருள் | 683 |
| நாடு என்ப | 739 | நெஞ்சத்தார் | 1128 |
| நாம் காதல் | 1195 | நெஞ்சில் துறவார் | 276 |
| நாள் என | 334 | நெடுங்கடலும் | 17 |
| நாள்தொறும் நாடி | 553 | நெடுநீர் | 605 |
| நாள்தொறும் நாடுக | 520 | நெடும்புனலுள் | 495 |
| நாணாமை | 833 | நெய்யால் | 1148 |
| நாணால் உயிரை | 1017 | நெருநல் | 336 |
| நாணும் மறந்தேன் | 1297 | நெருநற்று | 1278 |
| நாணொடு | 1133 | நெருப்பினுள் | 1049 |
| நாண் அகத்து | 1020 | நோக்கினாள் நோக்கி | 1093 |
| நாண் என | 1257 | நோக்கினாள் நோக்கு | 1082 |
| நாண் என்னும் | 924 | நோதல் | 1308 |
| நாண் வேலி | 1016 | நோய் எல்லாம் | 320 |
| நாநலம் | 641 | நோய்நாடி | 948 |
| நிணம் தீயில் | 1260 | நோவற்க | 877 |
| நிலத்து இயல்பால் | 452 | நோனா உடம்பும் | 1132 |
| நிலத்தில் கிடந்தமை | 959 | பகச் சொல்லி | 187 |
| நிலவரை | 234 | பகல் கருதி | 852 |
| நிலை அஞ்சி | 325 | பகல் வெல்லும் | 481 |
| நிலை மக்கள் | 770 | பகுத்து உண்டு | 322 |
| நிலையில் | 124 | பகை அகத்துச் சாவார் | 723 |
| நில்லாதவற்றை | 331 | பகை அகத்துப் பேடி | 727 |
| நிழல்நீரும் | 881 | பகை என்னும் | 871 |
| நிறைஅரியர் | 1138 | பகை நட்பாக் கொண்டு | 874 |

பகை நட்பு ஆம் 830
பகை பாவம் 146
பகைமையும் 709
பசக்கமன் 1189
பசந்தாள் 1188
பசப்பு என 1190
படல் ஆற்றா 1175
படிஉடையார் 606
படுபயன் 172
படைகுடி 381
படைகொண்டார் 253
பணியுமாம் 978
பணிவுடையன் 95
பணை நீங்கி 1234
பண் என் ஆம் 573
பண்பு அறியேன் 1083
பண்பிலான் 1000
பண்புடையார் 996
பதிமருண்டு 1229
பய்ன்இல் பல்லார் 192
பயன்இல் சொல் 196
பயன் தூக்கார் 803
பயன் தூக்கி 912
பயன் மரம் 216
பரிந்தவர் 1248
பரிந்து ஓம்பிக் காக்க 132
பரிந்து ஓம்பிப் பற்று 88
பரியது 599
பரியினும் 376
பருகுவார் 811
பருவத்தோடு 482
பருவரலும் 1197
பலகுடை 1034
பலசொல்ல 649
பலநல்ல 823
பல்குழுவும் 735
பல்லவை 728
பல்லார் பகை 450
பல்லார் முனிய 191
பழகிய செல்வமும் 937
பழகிய நட்பு 803
பழி அஞ்சி 44
பழிமலைந்து 657
பழுது எண்ணும் 639
பழைமை என 801
பழையம் 700
பற்று அற்ற கண்ணும் 521
பற்று அற்ற கண்ணே 349
பற்று அற்றேம் 275
பற்றி விடாஅ 347
பற்றுக 350
பற்றுள்ளம் 438
பனி அரும்பி 1223
பன்மாயக் கள்வன் 1258
பாடு பெறுதியோ 1237
பாத்து ஊண் 227
பாலொடு 1121
பிணி இன்மை 738
பிணிக்கு 1102
பிணை ஏர் 1089
பிரித்தலும் 633
பிரிவு உரைக்கும் 1156
பிழைத்து 417
பிறப்பு என்னும் 358
பிறப்பு ஒக்கும் 972
பிறர்க்கும் இன்னா 319
பிறர் நாண 1018
பிறர் பழியும் 1015
பிறவிப் பெருங்கடல் 10
பிறன் பழி 186
பிறன் பொருளாள் 141
பிறன் மனை 148
பீலிபெய் 475
புகழ் இன்றால் 966
புகழ்ந்தவை 538
புகழ்பட 237
புகழ் புரிந்த 59
புக்கு இல் 340
புணர்ச்சி 785
புத்தேள் 213
புரந்தார் 780
புலத்தலின் 1323
புலப்பல் 1259
புலப்பேன் 1267

| | |
|---|---|
| புல் அவை | 719 |
| புல்லாது | 1301 |
| புல்லிக்கிடந்தேன் | 1187 |
| புல்லி விடாஅ | 1324 |
| புறத்து உறுப்பு | 79 |
| புறம் குன்றி | 277 |
| புறம் கூறி | 183 |
| புறம் தூய்மை | 298 |
| புன்கண்ணை | 1222 |
| பெண் இயலார் | 1311 |
| பெண் ஏவல் | 907 |
| பெண்ணிற்பெருந்தக்க | 54 |
| பெண்ணினால் | 1280 |
| பெயக்கண்டும் | 580 |
| பெயல் ஆற்றா | 1174 |
| பெரிது ஆற்றி | 1276 |
| பெரிது இனிது | 839 |
| பெரியாரை | 892 |
| பெருக்கத்து | 963 |
| பெருங்கொடை | 526 |
| பெருமை உடையவர் | 975 |
| பெருமைக்கும் | 505 |
| பெருமை பெருமிதம் | 979 |
| பெரும்பொருளால் | 732 |
| பெறாஅமை | 1295 |
| பெறின் என்ஆம் | 1270 |
| பெறுமவற்றுள் | 61 |
| பெற்றான் பெறின் | 58 |
| பேணாது பெட்டார் | 1178 |
| பேணாது பெட்பவே | 1283 |
| பேணாது பெண் | 902 |
| பேதைபெருங்கெழீஇ | 816 |
| பேதைப்படுக்கும் | 372 |
| பேதைமை என்பது | 831 |
| பேதைமை ஒன்றோ | 805 |
| பேதைமையுள் | 832 |
| பேராண்மை | 773 |
| பொச்சாப்பார்க்கு | 533 |
| பொச்சாப்பு | 532 |
| பொதுநலத்தார் | 915 |
| பொது நோக்கான் | 528 |
| பொய்படும் | 836 |
| பொய்ம்மையும் | 292 |
| பொய்யாமை அன்ன | 296 |
| பொய்யாமை பொய் | 297 |
| பொருட் பெண்டிர் | 913 |
| பொருட் பொருளார் | 914 |
| பொருளான் ஆம் | 1002 |
| பொருள் அல்லவரை | 751 |
| பொருள் அல்லவற்றை | 351 |
| பொருள் அற்றார் | 248 |
| பொருள் ஆட்சி | 252 |
| பொருள் என்னும் | 753 |
| பொருள் கருவி | 675 |
| பொருள் கெடுத்து | 938 |
| பொருள் தீர்ந்த | 199 |
| பொருள் நீங்கி | 246 |
| பொருள்மாலை | 1230 |
| பொள் என | 487 |
| பொறி இன்மை | 618 |
| பொறிவாயில் | 6 |
| பொறுத்தல் | 152 |
| பொறை ஒருங்கு | 733 |
| போற்றின் | 693 |
| மகன் | 70 |
| மக்கள் மெய் | 65 |
| மக்களே | 1071 |
| மங்கலம் | 60 |
| மடல் ஊர்தல் | 1136 |
| மடி இலா | 610 |
| மடி உளாள் | 617 |
| மடிமடி | 603 |
| மடிமை | 608 |
| மடியை மடியா | 602 |
| மடுத்தவாய் | 624 |
| மணிநீரும் | 742 |
| மணியில் திகழ் | 1273 |
| மண்ணொடு | 576 |
| மதிநுட்பம் | 636 |
| மதியும் மடந்தை | 1116 |
| மயிர் நீப்பின் | 969 |
| மருந்து ஆகி | 217 |
| மருந்து என | 942 |
| மருந்தோமற்று | 968 |

மருவுக மாசற்றார் 800
மலர் அன்ன அருமை 1142
மலர் அன்ன முகம் 1119
மலரினும் மெல்லிது 1289
மலர்காணின் 1112
மலர்மிசை 3
மழித்தலும் 280
மறத்தல் 303
மறந்தும் 204
மறப்பினும் ஒத்து 134
மறப்பின் எவன் 1207
மறம்மானம் 766
மறவற்க 106
மறைந்தவை 587
மறைபெறல் 1180
மறைப்பேன்மன் காமத்தை 1253
மறைப்பேன்மன் யான் 1161
மற்றுயான் 1206
மற்றும் தொடர்ப்பாடு 345
மனத்தது 278
மனத்தான்ஆம் 453
மனத்தின்அமை 825
மனத்துஉளது 454
மனத்துக்கண் 34
மனத்தொடு 295
மனநலத்தின் 459
மனநலம் நன்கு 458
மனநலம் மன் 457
மனம் தூயார்க்கு 456
மனம் தூய்மை 455
மனம் மாணா 884
மனைத்தக்க 51
மனைமாட்சி 52
மனையாளை 904
மனைவிழைவார் 901
மன்னர்க்கு 556
மன்னர் விழைப 692
மன்உயிர் எல்லாம் 1168
மன்உயிர் ஓம்பி 244
மாதர் முகம் 1118
மாலை நோய் 1226
மாலையோ 1221
மாறுபாடு 945
மிகச்செய்து 829
மிகல்மேவல் 857
மிகினும் குறையினும் 941
மிகுதியான் 158
முகத்தான் 93
முகத்தின் இனிய 824
முகத்தின் முதுக்குறை 707
முகம்நக நட்பது 786
முகம் நோக்கி 708
முகைமொக்குள் 1274
முடிவும் 676
முதல் இலார்க்கு 449
முயக்கு இடை 1239
முயங்கிய 1238
முயற்சி 616
முரண்சேர்ந்த 492
முறிமேனி 1113
முறைகோடி 559
முறைசெய்து 388
முறைப்பட 640
முற்றியும் 747
முற்று ஆற்றி 748
முனைமுகத்து 749
முன் உறக்காவா 535
மேல் இருந்தும் 973
மேற்பிறந்தார் 409
மையல் 838
மோப்பக்குழையும் 90
யாகாவார் 12
யாண்டுச் சென்று 89
யாதனின் 741
யாதானும் 397
யாமும் உளேம் 1204
யாம் கண்ணிற் காண 1140
யாம் மெய்யா 300
யாரினும் 1314
யான் எனது 346
யான் நோக்கும் 1094
வகுத்தான் 377
வகை அற 465
வகை அறிந்து தற்செய்து 878

| | | | |
|---|---|---|---|
| வகை அறிந்து வல்லவை | 721 | விழித்த கண் | 775 |
| வகை. மாண்ட | 897 | விழுப்புண் | 776 |
| வசை இலா | 239 | விழுப்பேற்றின் | 162 |
| வசை என்ப | 238 | விழைதகை | 804 |
| வசை ஒழிய | 240 | விழையார் | 810 |
| வஞ்ச மனத்தான் | 271 | விளக்கு அற்றம் | 1186 |
| வருகமன் | 1266 | விளிந்தாரின் | 143 |
| வருமுன்னர் | 435 | விளியும் என் | 1209 |
| வருவிருந்து | 83 | வினை கலந்து | 1268 |
| வரைவு இலா | 919 | வினைக்கண் வினைகெடல் | 612 |
| வலி இல் நிலைமை | 273 | வினைக்கண் வினை உடை.. | 519 |
| வலியார்க்கு | 861 | வினைக்கு உரிமை | 518 |
| வலியார் முன் | 250 | வினை செய்வார் | 584 |
| வழங்குவது | 955 | வினைத்திட்பம் | 661 |
| வழிநோக்கான் | 865 | வினைபகை | 674 |
| வழுத்தினாள் | 1317 | வினையால் வினை | 678 |
| வறியார்க்கு | 221 | வினைவலியும் | 471 |
| வன்கண் | 632 | வீழப்படுவார் | 1194 |
| வாணிகம் | 120 | விழுநர் வீழ | 1193 |
| வாய்மை | 291 | வீழும் இருவர்க்கு | 1108 |
| வாராக்கால் | 1179 | வீழ்நாள் | 38 |
| வாரிபெருக்கி | 512 | வீழ்வாரின் | 1198 |
| வாழ்தல் | 1124 | வீறுஎய்தி | 665 |
| வாழ்வார்க்கு | 1192 | வெண்மை | 844 |
| வாளொடு | 726 | வெருவந்த | 563 |
| வாள் அற்று | 1261 | வெள்ளத்து... இடும்பை | 622 |
| வாள்போல் | 882 | வெள்ளத்து... மயா் | 595 |
| வான் உயர் தோற்றம் | 272 | வேட்ட பொழுதின் | 1105 |
| வான் நின்று | 11 | வேட்பத் தாம் | 646 |
| வான் நோக்கி | 542 | வேட்பன | 697 |
| விசும்பின் | 16 | வேண்டற்க வெஃகி | 177 |
| விடாஅது | 1210 | வேண்டற்க வென்றிடினும் | 931 |
| விடுமாற்றம் | 689 | வேண்டாமை | 363 |
| விண்இன்று | 13 | வேண்டிய | 262 |
| வித்தும் இடல் | 85 | வேண்டின் | 342 |
| வியவற்க | 439 | வேண்டுங்கால் | 362 |
| விருந்து | 82 | வேண்டுதல் | 4 |
| விருப்பு அறா | 522 | வேலொடு | 552 |
| விரைந்து | 648 | வேல் அன்று | 546 |
| விலங்கொடு | 410 | வைத்தான் | 1001 |
| வில்ஏர் உழவர் | 872 | வையத்துள் | 500 |

●●



'தமிழண்ணல்' (இராம.பெரியகருப்பன்)

சிவகங்கை மாவட்டம் நெற்குப்பையில் 12.8.1928இல் பிறந்தவர் இவர். பொருளியல் இளங்கலை, தமிழ் முதுகலை முனைவர் பட்டங்கள் பெற்றவர். உயர்நிலைப் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம், பல்கலைக்கழக நல்கைக் குழு சிறப்புப் பேராசிரியர் எனத் தமிழ் கற்பித்தல் பணியில் 43 ஆண்டுகள்.

தமிழக அரசின் பொற்கிழிப் பரிசு (மீனாட்சி என்ற கவிதைக்கு) (1973), நல்லாசிரியர் விருது (1983), திரு.வி.க.விருது (1989), சிறந்த நூற்பரிசுகள் (1982), குன்றக்குடி ஆதீனக் 'கணக்காயர்' மெய்க்கீர்த்தி (1972), மதுரைத் திருவள்ளுவர் கழகத் தொல்காப்பியச் செம்மல் (1994), மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்ச் செம்மல் (1997), திருவாவடுதுறை ஆதீன 'மகா வித்துவான்' மீனாட்சிசுந்தரம் பிள்ளை நினைவுப் பரிசு (1995), திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம் அளித்த திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை நூற்றாண்டு நினைவுப் பரிசு (1997), சென்னைக் கம்பன் கழகம் தந்த பாராட்டு (1998), தமிழக அரசின் சங்கப் பலகைத் துணைத்தலைவர் (2000) போல்வன பெற்ற சிறப்புகளில் குறிப்பிடற்பாலன.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மன்ற உறுப்பினர்; இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவர் என்னும் பதவிகளை அணி செய்தவர்.

திரை கடலோடித் திரவியம் தேடிய பரம்பரையைச் சேர்ந்த இவரை, அமெரிக்கத் தமிழ்ச் சங்கக் கூட்டமைப்பு (FETNA), 1996இல் அங்கு அழைத்துச் சிறப்புச் செய்தது. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், மொரீசியஸ் எனக் கடல் கடந்த பல நாடுகளிலும் தேமதுரத் தமிழ் கூறும் வாய்ப்பும் பெற்றவர்.

'தமிழ் நலம் பாதி; தன்னலம் பாதி' என்ற எல்லையையும் தாண்டித் தமிழ் நலமே தந்நலமாகக் கொண்டு வாழ்பவர். மழலையர் கல்வி முதல் உயர் கல்வி வரை, தமிழ் வழிக் கல்வியை வேண்டித் தம் வாழ்வைத் தமிழுக்குக் காணிக்கையாக்கிக் கொண்டவர். பெரியகருப்பன் எனப் பெயர்கொண்ட, பெரும்பெயர்த் தமிழண்ணல் இவர்.

அன்னைமுத்தமிழ் பதிப்பகம்